உயிர் நிலம்

மேலாண்மை பொன்னுச்சாமி

உயிர் நிலம்

மேலாண்மை பொன்னுச்சாமி

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41–B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை– 600 098.
☎: 26258410, 26251968, 26359906

Language : Tamil

UYIR NILAM

Author : **Melanmai Ponnusaami**
First Edition : July, 2011

Copyright : Author

No. of pages : x + 530 = 540
Typesetting : Guru Raghavendra
Publisher :
New Century Book House Pvt. Ltd.
Chennai - 600 098.
Tamilnadu State, India.

Email : ncbhbook@yahoo.co.in

ISBN: 978 - 81 - 234 - 1933 - 6
Code No.A 2303

Rs. 270/-

Branches

Ambattur 044-26359906, 26258410, 26251968 Ashok Nagar 044-24899351 Thiruvanmiyur 044-24404873 Trichy 0431-2700885 Tanjore 04362-231371 Pondicherry 0413-2213111 Tirunelveli 0462-2323990 Madurai 0452-2344106, 2350271 Dindigul 0451-2432172 Coimbatore 0422-2380554 Salem 0427-2450817 Hosur 04344-245726 Ooty 0423-2441743 Vellore 0416-2234495.

உயிர் நிலம்

ஆசிரியர் : **மேலாண்மை பொன்னுச்சாமி**
முதல் பதிப்பு : ஜூலை, 2011

Printed at **Pavai Printers (P) Ltd.,**
16 142), J.J.Khan Road, Ch - 14
Ph : 044-28482441,28482973

பதிப்புரை

நம் தமிழகத்திலும் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சி அதிகரித்துக்கொண்டே வருகிறது. இன்றைய நிலையில் செல்வாக்கு மிக்க ஓர் இலக்கிய வகையாக நாவல் ஆட்சிசெய்கிறது. 'புதினங்கள் பொதுமக்களுக்கு வெறும் கதை; அறிஞர்களுக்குக் கருத்து விளக்கம்; கற்று வல்லார்க்கு அனுபவப்பிழிவு' என்கிறார் மேனாட்டு அறிஞர் மார்ரே. நாவல்கள் உள்ளிட்ட பல இலக்கியங்களை வெளியிட்டு அறிஞர்களின் பாராட்டுகளைப் பெற்ற உயர்திரு **மேலாண்மை பொன்னுச்சாமி** அவர்கள் உழவின் மேன்மையைப் போற்றும் **'உயிர்நிலம்'** என்னும் சிறந்த நாவலைப் படைத்துள்ளார்.

பாரம்பரியமாக உழுதொழில் செய்துவரும் குடும்பத்தில் பிறந்த பரமசிவம் தனது முதுமையிலும் தனது விளைநிலங்களைத் தானே ஏர்பூட்டி உழுது நீர் பாய்ச்சி நடவு நட்டு, களை பறித்து இயற்கை உரங்களையே போட்டு விளைச்சலை மிகுதியாகப் பெற்று 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற குறள் நெறிப்படி நிம்மதியாக வாழ்ந்து வருபவர். ஊரில் பெரும்பாலானோர் நவீன எந்திரங்கள், செயற்கை உரங்கள், பூச்சி மருந்துகள், பயன்படுத்தி, கடன்சுமை ஏற்று நிம்மதியற்றவாழ்க்கை வாழ்ந்து வந்தனர் என்று பரமசிவத்தின் உழவுக்கொள்கை யைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறார் நாவலாசிரியர்.

பரமசிவம் காமாட்சி திருமணம் குறித்தும் அவர்களின் இல்லறத் தொடக்கத்தையும் இயல்பாகப் பதிவு செய்துள்ளார். இல்லறவாழ்வில் இன்பம் மிகுந்தது போல அவர்தம் அரிய உழைப்பால் விளைச்சலும் அதிகரித்து வந்தது.

உண்மையும் நேர்மையும் கொண்டு 'நிலமே உயிர்' என்ற கொள்கையுடையோராய் அவர்கள் வாழ்ந்ததை,

'ஒளிவு மறைவில்லாத வெள்ளைப் பேச்சு
உலகத்தையே ஜெயித்து விடலாம் என்ற
நம்பிக்கை வீச்சு'

என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டு வேலைகளைத் திறம்படச் செய்வதோடு வயல் வேலைகளிலும் கணவனுக்கு ஈடுகொடுத்து வேலை செய்வதில் வல்லவள் காமாட்சி. உரலில் கம்புபோட்டு உலக்கையால் குத்தும் நேர்த்தியை ஆசிரியர் படம்பிடித் தாற்போல வருணித்து வாசகரை வியக்க வைத்துள்ளார்.

மூத்தமகன் அழகேசன் தந்தை சொற்படி நடந்து உழுதொழிலுக்கு உதவியாயிருக்க, இளையவன் முருகேசன் ஓரளவு படித்திருந்ததால் அவன் நடை உடை பாவனைகளில் நாகரிகத்தை விரும்பியவனாகவும் பெற்றோர் சொல்லை மீறுபவனாகவும் படைக்கப்பட்டுள்ளான். தந்தையைப் பற்றி,

'அய்யா கொடுமை பழங்கொடுமை, பெருங்
கொடுமை,
வைராக்கியப் பிற்போக்கு, பழம் பஞ்சாங்கம்'

என்பது இளையவனின் மதிப்பீடு.

சமீபத்தில் தான் வாங்கிய நிலத்தைத் தனக்குப் பாகமாகத் தருமாறு முருகேசன் ஊர்ப்பெரியவர்களிடம் சிபாரிசு கேட்க வணிகர் அருஞ்சுனையின் ஆலோசனையின் பேரில்

தானே முன்வந்து அந்நிலத்தை அவனுக்கு உரிமையாக்கினார் பரமசிவம்.

நவீன விவசாயமுறையில் பயிர்செய்து அமோக விளைச்சல் காணவேண்டும், தந்தையின் உழவு முறைக்குச் சவால்விடும் வண்ணம் செல்வம் குவிக்க வேண்டும் என்ற நோக்கில் முருகேசன் எந்திரங்களைப் பயன்படுத்தி உழுதல், விதைத்தல், நீர் பாய்ச்சுதல், அறுவடைசெய்தல் மூலம் மகசூல் குவியும் என்று துணிந்தவன் அவற்றிற்கு ஆகும் செலவினங்களை எவ்வாறு சமாளிப்பது என்ற வகையறியான் என்பதை ஆசிரியர் திறம்பட விளக்கியுள்ளார்.

பரமசிவம் நாற்றுக் கூளக்கட்டுகளைத் தன் தலை மீது சுமந்து திணறித் தவித்துக் கொண்டுவந்து சேர்க்க, இளையவனோ தந்தை மாட்டு வண்டியில் கொண்டு வரச்சொன்ன கட்டுகளைக் கூலி பேசி டிராக்டரில் கொண்டு வந்ததைக் குறிப்பிட்டு மகனின் பணத்தின் அருமை புரியாத தன்மையை நயமாகச் சுட்டிக் காட்டியுள்ளார் நாவலாசிரியர்.

இளையமகன் சோளச்சோறு உண்ண விரும்பாமையை அறிந்து தந்தை பரமசிவம், தன் மகன் பெற்றோர் சொல் கேளாதவனாக இருந்தாலும் பெற்ற பாசம் விடாது என்பதை வெளிப்படுத்த அரிசி வாங்கி மூட்டையைச் சுமந்துகொண்டு வீடு அடையக் கண்ட காமாட்சி மகன்மேல் தந்தைக்குள்ள அக்கறையை அறிந்து மெய்சிலிர்த்துக் கண்ணீர் விட்டதைப் படக்காட்சிபோல் மனதில் பதியச் செய்துள்ளார் நாவலாசிரியர்.

கிராம மக்களாக இருந்தாலும் உடலுழைப் பையே ஆதாரமாகக் கருதி வாழ்பவர்கள். ஊர்மக்களிடம் உறவு, நட்பு கொண்டு வாழ்பவர்கள், ஆனால் மானக்கேடு வருமானால் மிகவும் வருந்தி ஒரு கடினமான முடிவெடுப்பர்

என்பதை நாவலாசிரியர், தந்தை வாங்கிய நிலத்தைத் தனக்குத் தரவேண்டுமென்று ஊர் துணை நாடியது தனது மனத்தை வருத்த அவனது திருமணத்தில் தான் பங்குகொள்ளப் போவதில்லை என்ற முடிவை அறிவிக்கும் நிகழ்ச்சியால் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தி யுள்ளார்.

கரண்ட் மூலம் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சினால் பயிர்களின் வேர்கள் பாதிக்கப் படுமே என்ற கருத்துடைய பெண்களின் அறியாமையைச் சுட்டி நாவலுக்குச் சுவை கூட்டியுள்ளார்.

முருகேசன் தான் சொந்தமாகப் பயிர்செய்து கிடைத்த விளைச்சலை விற்றுக் கிடைத்த பணம், செய்ய வேண்டியுள்ள செலவினங்களுக்குப் போதாது என்பதால், உரக்கடைக்காரரிடம் உரம் கடன் கேட்க மோட்டார் சைக்கிளில் போனபோது அவனுக்கு ஏற்பட்ட விபத்துக்குக் கடன் சுமையே காரணம் என்பதை ஆசிரியர் குறிப்பால் உணர்த்தியுள்ளார். மருத்துவ மனையில் தன் தந்தையார், தான் செய்த பொருந்தாச் செயல்களையெல்லாம் மறந்து தன்னைப் பார்க்க வந்ததைப் பெரும் பேறாகக் கருதி மனம் நெகிழ்ந்த நிகழ்ச்சியால் வாசகர் உள்ளங்களிலும் இரக்கத்தை வெளிப்படுத்திகிறார்.

முருகேசன் பல நிதி நிறுவனங்களில் கடன் வாங்கியதோடு தனியாரிடமும் அதிக வட்டிக்குக் கடன் வாங்கியிருந்தான். அடுத்து பயிர் செய்வதற்கு பல இனங்களில் ஏராளமான தொகை சமாளிக்க வேண்டும். மாதாமாதம் அசலும் வட்டியும் வசூலித்துச் செல்லும் பழநிமலை திடீரென ஒரு நாள் வந்து ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்நாளில் தனக்கு ரூ 1 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் கொடுக்கத் தவறினால் அவன் மனைவியைத்

தூக்கிக் கொண்டு சென்று விடுவதாகவும் அச்சுறுத்திவிட்டுச் சென்றான். இத்தகைய வார்த்தைகளைக் கேட்ட முருகேசன் செய்வதறியாது வெறிபிடித்தவன் போல் வேகநடை நடந்த நேரத்தில் ஆசிரியர், முருகேசனுக்கு வீரவுணர்ச்சி மேலிடாமல் மூர்க்கம் எழாமல் கோழைத்தனம்தான் மிகுந்திருந்ததாக வருந்திக் கூறுகிறார். தன் ஐயாவிடம் புகலிடம் அடையவும் அவனுக்குத் துணிவில்லை. பழநிமலைக்குத் தன் எதிர்ப்பைக் காட்டவும் வீரமில்லை. முடிவாகத் தன் உயிரைப் போக்கிக்கொள்வதுதான் தீர்வு என்ற முடிவோடு பூச்சி மருந்தைக் குடித்து தன் வாழ்வை முடித்துக் கொண்டான் என்று துன்பியல் நிலையில் ஆசிரியர் இந்நாவலை நிறைவு செய்கின்றார்.

இயற்கை வேளாண்மையைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாவலில் தந்தை, தாய், பிள்ளைகள் எனச் சில முழுநிலைப் பாத்திரங்களைப் படைத்து அவர்தம் இயல்புகளை நிகழ்ச்சிகளூடே இணைத்து நாவலின் உச்சகட்டமாக விஞ்ஞானத் தொழில் நுட்ப விவசாயம் எளிய விவசாயிகளுக்கு இயலாத நிலையை விளக்கி 'முதலிலார்க்கு ஊதியமில்லை' என்ற கருத்தை ஆசிரியர் நாவலின் முடிபாக அறிவுறுத்தியுள்ளார். எளிய விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர மேற்கொள்ள வேண்டிய திட்டங்களைக் குறித்து ஆவன செய்யத் தூண்டும் இந்நாவல் வாசகரைப் பெரிதும் கவரும் என்ற நோக்கில் எமது நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இந்நூலை வெளியிட்டு எல்லோர் ஆதரவினையும் விழைகின்றது.

- பதிப்பகத்தார்

சமர்ப்பணம்.....

மரபு சார்ந்த இயற்கை விவசாய முறைமைக்காக வாதாடி, போராடி, இயக்கம் நடத்தி, பன்னாட்டு ஏக போகத்துக்கு எதிரான செயல் செய்து வருகிற இயற்கை விஞ்ஞானி திருமிகு நம்மாழ்வார் அவர்களுக்கும்,

எம்.பி.ஏ.முடித்தபிறகு ஏர்க்கலப்பையுடன் இயற்கை விவசாயம் செய்கிற களப்போராளி ஏங்கல்ஸ் ராஜா அவர்களுக்கும்—

1

உயிர் நிலம்

மேலான்மை. பொன்னுச்சாமி

எக்ஸ்.எல்.வண்டியில் ஒரு சீராகப் போய்க்கொண்டிருந்தான் முருகேசன். வலது கை ஆக்ஸிலேட்டரை அதிகமாகத் திருகமாட்டான். இடதுகை பிரேக்குக்கும் வேலை வைக்கமாட்டான்.

காலை வெயில் கடுப்புடன் நோக்குகிறது. ஏறு வெயில். திருவேங்கடம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறான். சத்திரப்பட்டி சாலையில் ஏறிவிட்டால்... புதிதாக போட்ட சாலை, தீட்டி வைத்த வீச்சரிவாள் மாதிரி, வழுவழுப்பாக இருக்கும்.சின்னஞ்சிறு குழி கூடக் கிடையாது. கோவில்பட்டி வரைக்கும் இப்படித்தான்.

தலைவாழையிலையை விரித்த மாதிரி, கறுப்புக் கண்ணாடி யெனப் புத்தம் புதியசாலை. யாருக்குமே ஆசைவரும், வண்டியை வேகமாக ஓட்டிப் பார்க்க. அப்படியொரு தார்ச்சாலை. அலுங்காத-குலங்காத அந்தப் பூந்தார்ச் சாலையிலும் வேகம் கூட்டாமல் ஒரே சீராகப் போகிற முருகேசன்.

அவனுக்குள் ஒரே யோசனை. சின்னஞ்சிறு அறையில் சுற்றிச்சுற்றி வருகிற ஊதுபத்திப் புகையென... அவனுள் ஒரே நினைவு. "உரக்கடைக்கார முதலாளி இருப்பாரா ?"

கடைதேடிப் போகிற போதெல்லாம் கணக்குப்பிள்ளைதான் இருப்பார். ரொக்கம் கொண்டு வருகிறவருக்கெல்லாம் அட்டியில்லாமல் சரக்கு தருவார். கசறுகிறவர்களிடம் நாலு, அஞ்சு ரூபாய் குறைப்பதானாலும் அவராகவே முடிவெடுப்பார். சாதுர்யமும் சாமர்த்தியமும் ஜாஸ்தி. முழுக்க வியாபாரக் குணம்.

கடன் கேட்டால் மட்டும், முகச்சிரிப்பு மாறாமல் பூப்போல வார்த்தைகளை உதிர்ப்பார். "முதலாளியைப் பாத்துக்கேட்டு வாங்கிக்கோங்க_"

"எனக்கும் அவருக்கும் ரொம்பப் பழக்கம். ஏற்கனவே ஆயிரக்கணக்குலே குடுக்கல் வாங்கல் உண்டு."

"இல்லேன்னு சொல்லலை.வேண்டாம்னும் தடுக்கல்லே. முதலாளிகிட்டே பேசி வாங்கிட்டுப் போங்க, தாராளமாக. எனக்கு கடன் குடுக்குற அதிகாரம் இல்லே"

"பேரேடைப் பாருங்க_ முருகேசன்னு எம்பேர்லே பற்று வரவு இருக்கும்"

" நா இல்லேன்னு சொன்னாத்தானே, பேரேட்டை பெரட்டிப் பாத்து சந்தேகத்தைப் போக்கணும்?"

"அப்பா_ நா வாங்குற கடனை அதுலே குறிச்சுக்கோங்க"

"நா கணக்குப்பிள்ளே. கைகட்டி மாச சம்பளம் வாங்குறவன். வித்தசரக்குக்கு மொத்தப் பணத்தையும் காட்டிட்டுத்தான், கல்லாப் பெட்டியை விட்டு எந்திரிக்க முடியும். எங்கிட்டே அதிகாரம் இருந்துச்சுன்னா... இம்புட்டுப்பழகுன ஒங்களுக்கு இல்லேன்னு சொல்வேனா?"

சிரிப்பு மாறாமல், குரலின் குளிர்ச்சி மாறாமல் முகமலர்ச்சி வாடாமல் கழுத்தறுப்பதில் மகா கில்லாடி அவர்.

அலுங்காமல் குலுங்காமல் பேசி... ஆளைக் காலி பண்ணி விடுவார். சக்கரைக்கட்டியாகப் பேசிப்பேசியே கசப்பானமுறையில் மறுத்துவிடுவார். கடன் கேட்டுப் போன ஆளைத் துரத்திவிடுவார்.

முதலாளி இருப்பாரா? இருந்தால்... போற காரியம், பழம்.இல்லேன்னா.. கதை, கந்தல்தான். வெட்டி அலைச்சலும் பெட்ரோல் செலவும் தான் மிச்சம்.

எக்ஸ்.எல்.வண்டி கரும்பச்சையில் மினுமினுக்கிறது. வாங்கி, ரெண்டு வருஷமாயிற்று. தார்ச்சாலை மாதிரி இருக்கிறது. புதுசு

மங்காமல், வாங்குகிறபோது எப்படி இருந்ததோ.. அதே மினுமினுப்பில்... பளிச்சென்று.. வெயிலில் டாலடித்துக் கொண்டிருக்கிறது. வண்டியை பொன்னோ பூவோ என்று பத்திரமாக பாதுகாப்பான். வெயிலில் போடமாட்டான். காட்டுப் பாதையில் போக மாட்டான். அடுத்தவன் கையில் தரமாட்டான். தூசிபடிந்தால், உடனுக்கு உடன்துடைத்து விடுவான். சிறுநட்டு போயிருந்தாலும், உடனுக்குடன் போட்டுவிடுவான். பெட்ரோல் போடுகிறதில்கூட எச்சரிக்கைதான். மண்ணெண்ணெய் கலப்படம் செய்யாமல், ஒரிஜினல் பெட்ரோலை சுத்தமாக எந்தப் "பங்கில்" தருவார்களோ.. அங்கு தான் பெட்ரோல் போடுவான்.

கலப்படம் பண்ணுகிற பங்க் இருக்கும் திசைப்பக்கம் கூட தலை வைத்துப் படுக்கமாட்டான்.

பெட்ரோல் போடுகிற போதெல்லாம் ஆயில் போடவும் தவற மாட்டான்.

பங்க்கில் பணிசெய்கிற யூனிபார்ம் பையன் ஒவ்வொருநாளும் கேட்காமல் இருக்கமாட்டான்.

"ஒண்ணுக்கு ஒண்ணா ?"

"ஒண்ணுக்கு ரெண்டு"

"எத்தனை லிட்டர்"

"ரெண்டு"

ரிசர்வ் ஆனவுடனேயே பெட்ரோல் போட்டுவிடுவான். அதனால் என்ஜின், அப்படியே புதுசு மங்காமல், இரைச்சல் சத்தம் கூடாமல்.. இன்றைக்கு "இறக்கிய" வண்டிபோலப் பளபளப்பாக இருக்கிறது.ராஜபாளையம் போகிற பஸ், லாரிகள், வேன்கள் எதிரில் வருகின்றன.கௌரவம் பார்க்காமல் தார்ச் சாலையை விட்டு வண்டியை இறக்கி ஒதுங்கிக் கொள்வான்.

விபத்தாகிவிடக்கூடாது. வண்டியில் கீறல் பட்டுவிடக்கூடாது என்று அத்தனை எச்சரிக்கை

"முதலாளி இருப்பாரா..? இன்னைக்கும் கணக்குப்பிள்ளை மூஞ்சியில் தான் முழிச்சிட்டுத் திரும்பணுமா?" சத்தமாகவே முணுமுணுத்துக்கொண்ட முருகேசன்.

அப்போது

சாயமே இல்லாமல் கலைந்துபோன சிவப்புச் சாம்புவண்டி. அருதப்பழசான வண்டி. ஓடுகிற ஓட்டத்தில் புகைக்குழாய் தனியாக ஆடுகிறது. சீட்டில் குஷன், நாய் கடித்துக்குதறிய மாதிரி பங்கப்பட்டிருக்கிறது.

அந்த வண்டியை ஓட்டுகிற ஒரு விடலைப் பையன். விருட்டென்று கடந்து முந்திப் போகிறான்.

போனால் போய்த் தொலைகிறான். நமக்கென்ன... என்று சொந்த மனக்குடைச்சலுக்குள் நுழைந்துகொண்டிருந்தான்.

வம்புக்கு இழுக்கிற அந்த விடலைப் பையன்.

திரும்பி, ஒரு பார்வை. எகத்தாளமும், ஏளனமுமாக ஒரு கெக்கலிப்பான பார்வை. பரிசாகச் சிரிப்பு வேறு. கர்வமாக காலரை தூக்கிவிட்டுக்கொள்கிற ஸ்டைல்.

அருதப்பழசாகி பேரீச்சம்பழத்துக்கு எடைக்கு எடை போடவேண்டிய அந்த வண்டி என்ஜினின் கர்ணகடூரமான பேயிரைச்சல், போய்த் தொலைந்தால் போதுமென்று... முருகேசன் ஆக்ஸிலேட்டரை மேலும் லூசில் விட்டான்.

வண்டி தெற்காமல் திரும்பிவிட்டது. பார்த்தால் பேயிரைச்சல் போடுகிற அந்த சாம்புவின் காட்டுக் கூச்சல். ரெண்டு பக்கமும் காலை ஊன்றி நின்று கொண்டு செல்போனில் பேசுகிற அந்தப் பையன்.

அவனைக் கடந்து நகர்கிறது இவனது வண்டி. சற்றுத்தூரம் போவதற்குள் துரத்திவருகிற காட்டுக் கூச்சல். விருட்டென்று விலகிப்போகிற சாம்பு. அதன் வேகக்காற்று இவன் மீது படுகிறது. கடந்து, முந்திப் போகிற பேயிரைச்சல்.

அதே பார்வை. கழுத்தைத் திருப்பிப் பார்க்கிற எகத்தாளம். ஏளனச்சிரிப்பு. சட்டைக்காலரை தூக்கி விட்டுக்கொள்கிற விடலைத் தனமான ஸ்டைல்.

முருகேசனுக்கு சண்டாளமாகப் பொங்கிச் சீறிய கோபக்கற்றை. ஆத்திர ஜ்வாலை.

"சல்லிப் பயல். சீண்டிப் பாக்குறான்." என்ற முணுமுணுப்பில் தெறிக்கிற கோபக்கனல்.

மறுபடியும் சின்னஞ்சிறு பாலச் சுவரில் இடது காலை ஊன்றி நிற்கிறான். இவன் கடந்து, சிவனே என்று முந்தியவுடன்... ஆக்ஸிலேட்டரை முறுக்கி.. மூர்க்கப் பேயிரைச்சலாக வந்து, சீற்றத்துடன் கடந்து, முந்திப் போய்..

அதே ஏளனப்பார்வை. எகத்தாளச் சிரிப்பு. கெக்கலிப்பு.

அதே ஸ்டைல்.

முருகேசனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இன்னும் ஒதுங்கிப் போனால்... கேவலமாகிப் போய்விடும். அவன் ஏளனச் சிரிப்பு சிரிப்பது நியாயமென்றாகிப் போகும்.

"ஏலமாட்டாத பயல். ரோஷங்கெட்ட மோளை மாடு (கொம்பில்லாத காளை)" என்று அந்த விடலைப்பயல் அவன் ஊரில் போய்.. இளவட்டப் பயல்களைக் கூட்டி வைத்துக்கொண்டு சொல்லிச் சொல்லிச் சிரிப்பான். பரிகாசமும் கெக்கெலிப்புமாக கைகொட்டிச் சிரிப்பான்.

"புதூ.. வண்டி வைச்சிருந்து என்ன செய்ய? நாக்கு வழிக்கவா? நாயைக் கண்டு பம்முற பூனமாதிரி, சிணுங்கிச் சிணுங்கி அழுகிறதா?" என்றெல்லாம் சொல்லிச் சொல்லி நகையாடுவான்.

சின்னப்பயல் சிரிப்புக்காளாவதா? விடலைப்பயல் வீரப்பிரதாப வெற்றுக்கெக்கலிப்புக்கு இடம் தருவதா?

பரம்பரைச் சம்சாரிக்குரிய ரோஷம், வீராப்பு, மன விடைப்பு. சிறுமைகண்டு சீறுகிற மனித இயல்பு.

வலதுகை ஆக்ஸிலேட்டரை ஒரு முறுக்கு முறுக்கினான். சீறிப்பாய்ந்த எக்ஸ்.எல்.காற்றைக் கிழித்துப் பாய்கிற அம்பென விரைகிற வேகம். ஒருமின்னல் பாய்ச்சல்.

குலசேகரங்கோட்டை விளக்கு வருவதற்குள் முந்திவிட்ட முருகேசன் வேகம் குறையாமல், திருப்பத்தில் சீறுகிற வண்டி, காட்டுக் கூச்சலும், பேயிரைச்சலும் தொலைதூரத்துச் சத்தமாக மெலிந்து தேய.. பின்னால் தேங்கிப் பிந்திப்போக..

நிஷேபநதியின் பாலத்தை ஒரு மாயத்தில் கடந்தான். தொட்டில்பாலம். தலைகீழாக இறங்கி, நட்டுக்குத்தலாக மேலேறுகிற கணத்திலேயே கிழக்காமல் திரும்புகிறசாலை.

சாலையோரத்தில் பெருஞ்சுவரான சீமைக்கருவேல மரங்களின் அடர்த்தி. கிழக்கிலிருந்து வருகிற வண்டிகள் தெரியாது.

மின்னல் வேகத்தில் மேடேறி... இவன் வண்டி வேகச் சீற்றம் குறையாத காற்றின் சாடலாக கிழக்காமல் திரும்ப.. கிழக்கிலிருந்து அதேமாதிரி வேகக் காற்றாக வந்துவிட்ட ஒருமுரட்டு சுஷிகி வண்டி...

ரெண்டும் மோத வேண்டிய மின்னல்கணம்.

சட்டென சுதாரித்து இடதுகையை வளைக்க.. வேகத்தில் வளைத்ததால்..தடுமாறி..கீழே விழுந்து.. வேகச்சீற்றமாக இழுபட்டு, தரையில் உரசிக்கொண்டே சீமைக்கருவேலமுள் புதருக்குள் விழுந்துகிடக்க... இவன் இடதுகால் உள் மாட்டிக்கொள்ள, சாய்ந்து கிடந்த இவன்மேல் வண்டி கிடக்க..

சுஷிகி வண்டிக்காரனோ... சாலையோரக்கல்லில்மோதி.. வண்டியே உள்வளைவாக நெளிந்துகிடக்க... அவனோ ரத்தவெள்ளத்தில் .. செத்திருப்பானோ..

முருகேசனுக்கு கண்ணைக்கட்டிக்கொண்டு வந்தது. அவனைச்சுற்றிலும் இருட்டு முற்றுகையிட்டுவிட்டது.

அவனுள் கடைசியாக வந்த நினைவு.

"நாமளும் செத்தோம்.. ரக்ஸ்.எல்லும் போச்சு..."

2

சாயங்கால வெயிலின் தகிப்பு குறையாமலிருந்தது. வெயிலின் காந்தல், கன்னமிருதுகள் நடுக்கைச் சதைகள் போன்ற இடங்களில் சுரீரிடுகிறது. விறகுக் கட்டு தலையை விடவும் கழுத்தை மிகவும் அழுத்துகிறது. மஞ்சணத்திக்கட்டை, வேப்பமரத்துக் கிளைக் குச்சிகள், வெட்டிப் போடப்பட்டு காய்ந்து கிடந்த சீமைக் கருவேல மரக்கட்டைகள் என்று பலவகையான விறகுகள். இவற்றையெல்லாம் கயிறால் அழுந்தக்கட்டப்பட்டிருந்தது.மூன்று இடத்தில் கயிறுகட்டு. தலையில் விறகுக்கட்டு உட்கார்கிற இடத்தில் ஆத்திச்செடிகளும், ஆமணக்கு இலைகளும் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது.

நீளமாகக் கிடந்த விறகுக் கட்டு. விறகுக்கட்டின் நுனியைத் தூக்கி நட்டுக்க நிறுத்தி, நீளக்கட்டின் நடுப்பகுதியில் தலையை வைத்தாள், ஈஸ்வரி. கட்டின் அடிநுனியை மூச்சுப்பிடித்து "தம்ப்" பண்ணி வாரிவிட்டாள்.

மொத்த விறகுக் கட்டின் கனம், தலையை அழுத்தியது. கழுத்து நரம்புகள் புடைத்து விம்மியது.நடக்கத் துவங்கினால் கனம் குறைந்துவிடும் என்று நம்பினாள்.

ஆனால்... நடக்க நடக்க.. விறகுக் கட்டின்கனம் கூடுதலாகிறது. அழுத்துகிறது... கனத்தின் அழுத்தத்தால் நெஞ்சு திணறுகிறது. மூச்சுவிடவே சிரமமாக இருக்கிறது.

புஞ்சைப்பொழியில் நடந்தாள். ஓடையில் இறங்குகிறபோது.. தொடைகள் நடுக்கமெடுக்கின்றன. தள்ளாடித் தடுமாறிவிடுவோமோ

என்ற அச்சம். மனசும் உடலும் தினறித்தவிக்க.. வியர்த்துக் கொட்டியது. எப்படியாவது வீட்டைப் பார்த்துப் போய்விட முடியுமா ?

ஓடைப்பள்ளத்தில் இறங்கிவிட்டு மேட்டில் ஏறுகிறபோது மூச்சுமுட்டல். முழங்காலில் ஒரு தளர்ச்சி. குதிகாலில் குத்திப் பிடுங்குகிற வலி.

சாயங்கால வெயில் கண்ணில் குத்துகிறது. கண்கூசுகிறது. நெற்றி வியர்வைச் சரம், புருவத்தில் விழுந்து திசைமாறி. கண்ணுக்குள் விழுகிறது. வியர்வையின் உப்புக்காந்தல்.

நடையை எட்டிப் போட்டாள். வீட்டு முன்னால் விறகுக் கட்டை கீழே போட்டாள். விழுந்த கட்டு, காலில் விழுந்து விடக்கூடாதே என்று, போட்ட வேகத்தில் ஒரு துள்ளுதுள்ளி, பின்னாடிவந்தாள்.

அமுங்கிப் போயிருந்த கழுத்து நிமிர மறுக்கிறது. பின் கழுத்தை வலது கையால் அழுத்தி நீவிவிட்டாள். பின்கழுத்து எலும்பு முழுக்க ரணமெடுக்கிற வலியின் துடிப்பு. பிடரி அப்படியே அமுங்கிய நிலையில் அழுத்தப்பட்டு ... உறைந்துபோன மாதிரி யிருந்தது. தன்னிலைக்கு வரமுடியாமல் தத்தளிக்கிற ஈஸ்வரி. மூச்சுத்திணற நடந்து வந்த சிரமத்திலிருந்து விடுபட்ட ஆசுவாசத்தில் .. "தஸ்ஸ்...புஸ்ஸ்" என்று மூச்சிரைத்தது. நெஞ்சு விம்மித் தணிந்தது.

அப்போது

சைக்கிளில் வந்திறங்கிய இளவட்டம்.

"யக்கா_"

"என்னய்யா ?"

"மாமா ஆஸ்பத்திரியிலே யிருக்காரு_"

ஈஸ்வரிக்குள் மின்னலாய்ப் பாய்ந்து பரவுகிற அதிர்வலைகள். பயத்தில் பறவையாடுகிற கண்கள். பதற்றத்தில் துடிக்கிற மனசு.

"என்னத்துக்கு ?"

"வண்டியிலே தடுமாறிட்டாரு போலிருக்கு. காட்டுலே கெடந்துருக்காரு. குலசேகரங்கோட்டை ஊராளுக பாத்து, தூக்கிட்டுப் போய், ஆசுபத்திரியிலே சேர்த்துருக்காக."

"எந்த ஆசுபத்திரியிலே"

"ராஜேந்திரன் ஆசுபத்திரியிலே"

"ஐயய்யோ_ இப்ப நா என்ன செய்யட்டும்? ஏதுசெய்யட்டும்? கண்ணவிஞ்சு போன பாதகத்தி நா. எங்குட்டுப் போவேன்? எப்படி நா திருவேங்கடம்போக?"

"யக்கா_ வாங்க..சைக்கிளிலே நா கொண்டுபோறேன்"

பதற்றத்தில் செய்வதறியாது தவித்தாள். தலையிலும், நெஞ்சிலும் அடித்துக்கொண்டு கதறித்துடித்தாள்.

"யக்கா, தூக்குச்சட்டி, ரெண்டுகிளாஸ், ஒரு போர்வை எடுத்துக்கிட்டு.. பெறப்படுங்க. சீக்கிரம்"

வீட்டுக்குள் ஓடினாள். பரிதவித்தாள். அவசரத்தில் கையை விட்டால், அண்டாவுக்குள் கூட கை நுழையாது. அங்கும் இங்கும் ஓடினாள். எந்தப் பொருளையும் எடுக்கிற நிதானம் இல்லை. பரபரப்பு. பதற்றம்.

எப்படியோ..கொஞ்சநேரத்தில் தயாரானாள். அதற்குள் ஈஸ்வரியின்ஒன்றுவிட்ட அண்ணன் ஈஸ்வரராசன் டி.வி.எஸ் 50 வண்டியில் வந்து சேர்ந்தான்.

"ஏறு...வண்டியிலே ஏறு_"

"எங்கிட்டே ரூபாயில்லே"

"நா_ ஏற்பாடு பண்ணியிருக்கேன். நீ வண்டியிலே உக்காரு."

அவள் பிளாஸ்டிக் பைக்குள் போர்வையும் தூக்குச் சட்டியும் கிளாஸும் திணித்து, மடியில் வைத்துக்கொண்டாள். வண்டியில் ஏறினாள்.

மறுநாள் தான்...

முருகேசன் கண்ணைத் திறந்து பார்த்தான்.அலங்க மலங்க விழித்தான். ஈஸ்வரி முகத்தைப் பார்த்தான்.

வெயிலில் அறுத்துப்போட்டபசுங்கொடியாக முகவாட்டம். காய்ந்து கனல் பறந்த தலைமுடி. கலங்கிச்சிவந்த கண்ணீர்க் கண்கள். பச்சைத் தண்ணீர் பல்லில்படாமல் நேற்றிலிருந்து கிடக்கிறாள். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, கதிகலங்கி திகிலடித்துக் கிடக்கிறாள்.

"எப்ப வந்தே ?"

என்று கேட்க நினைத்தான். முட்கள் குத்திக்கிழிந்து தடித்துப் போன உதடுகள், கன்னமெல்லாம் வீக்கம். பேசமுடியாமல் தவிக்கிற முருகேசன். உதடெல்லாம் குத்திக் குடைகிற ரணம்.

இடதுகை, இடதுகால் முழுவதும் கட்டுகள். தலையிலும் கட்டு, வலது கையில் குளுகோஸ் ஏறிக் கொண்டிருக்கிறது.

ஸ்டாண்டின் உச்சியில் தலைகீழாக தொங்குகிற குளுக்கோஸ் பாட்டில். ஒற்றை நுரைமுட்டை தோன்றித் தோன்றி மறைகிறது.

டாக்டர் வருகிறார். கழுத்தில் தொங்குகிற ஸ்டெதாஸ்கோப். இளநீலநிற முழுக்கைச்சட்டை. அடர்சிமெண்ட் நிறபேண்ட். சிவந்த நிறம். நட்பார்ந்த ஜாலியான சிரிப்பு தவழ்கிறமுகம்.

"என்ன_ முழிச்சிட்டாரா ?"

"ம்_ இப்பத்தான் முழிச்சிப் பார்த்தாரு_"

"குளுக்கோஸ் ஏறஏற தெம்பு வரும்."

"பேசமுடியாம தவிக்காரு. உதடெல்லாம் வலி"

"இந்த வெள்ளை மாத்திரையை குடுங்க வலி குறையும்"

"இப்பவே குடுக்கட்டா"

"நீங்க சாப்ட்டுட்டீங்களாம்மா ?"

"இல்லே.நேத்துலேயிருந்து பச்சைத்தண்ணி பல்லுலே படலே"

"இதுலே பொம்பளையாளுகளுக்கு ஒரு பெருமை.நம்ம பட்டிக்காட்டுப் பொண்ணுகளுக்குப் பட்டினிகிடந்து தான் பதிபக்தியை காட்டுவாக. ஏம்மா,நீங்க சாப்புட்டு தெம்பா இருந்தாத்தான்,அவரைக் கவனிச்சுப் பராமரிக்க முடியும்? அப்படித்தானே...ஒடம்பு சீராகும்? காலா காலத்துலே ஊர் போய்ச்சேரலாம்?"

பிரசன்னமாகிவிட்ட தெய்வத்தையே பார்க்கிற பிரமிப்பு. ஈஸ்வரிக்குப் பயமும் பவ்யமும் கண்ணில் தெரிய, மலைப்புடன் தலையசைக்கிறாள். கண்ணில் நீர் துளிர்க்கிறது. அடி இமையில் திரள்கிற மனத்துளி. கையெடுத்துக் கும்பிடுகிறாள். குரலில் நடுக்கம். உலர்ந்த நாவின் பிசுபிசுப்பு.

"ஐயா_ இவுரு_ பொழைச்சுக்குவாரா?"

உயிரையே நாவில் நிறுத்திக் கேட்கிற அவளது மனப் பரிதவிப்பு.

கண்டனத் தொனியுடன் பார்க்கிற டாக்டர். அவரின் அடிஉதட்டின் சிரிப்பில் ஏளனத்தொனி.

"என்னம்மா_ இப்படிக்கேக்கீக_? அவருக்கு ஒண்ணுமில்லே. நாளைக்கே நீங்க வீட்டுக்குப்போயிரலாம். நாலைஞ்சு நாளைக்கு காயம் இருக்கும். அப்புறம்,வேலைக்குப் போயிரலாம். மாத்திரைகளை மட்டும் கரெக்டா சாப்ட்டு வந்தா_ போதும். பயப்படாதீங்கம்மா"

"நீங்க தான் தெய்வம்யா_"

"நா மனுசன் தான்.. ஊசியும் மருந்தும் தான் உங்க வீட்டுக்காரரைக் காப்பாத்தியிருக்கு"

"நாளைக்குப் போயிரலாமய்யா?"

"போயிரலாம்"

டாக்டர் அடுத்த அறைக்குப் புறப்படுகிறார்.

ஈஸ்வரி முருகேசனைப் பார்க்கிறாள். கண்ணுக்குக் கண்ணாக நோக்குகிறாள். கலங்குகிற அவனது கண்கள். திரள்கிற நீர்க்கோர்வை.

"அழாதீங்க. படவேண்டிய நேரத்துக்குப் பட்டுத்தானே ஆகணும்?"

மாத்திரையை எடுத்து உதடுகளை விலக்கி வாயில் போடுகிறாள். தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றுகிறாள். நாலுமடக்குகளில் மாத்திரையை விழுங்குகிற முருகேசன்.

"நீ சாப்புடு..."

"பாப்போம்"

"டாக்டர் சொன்னதைக் கேட்டே இல்லே?"

ஈஸ்வராஜன் கேரி பேக் பார்சலுடன் வந்தான். இட்லி,சட்னி, சாம்பார்.

"யம்மா.. ஈஸ்வரி... சாப்புடு..."

"வேண்டாம்ண்ணே"

"ராத்திரியும் நீ சாப்புடலே"

"இருக்கட்டும்"

"மொதல்லே நீ சாப்பிடு"

"நீ சாப்புடாம கெடந்தா சரியாப் போயிருமா?"

முருகேசனின் தடித்த உதடுகள் மெல்லஅசைகின்றன.

கண்ணில் இறைஞ்சுகிறவேண்டுதல். கெஞ்சகிற முகம்.

ஆஸ்பத்திரிக்கேயுரிய நெடி. ஆஸ்பத்திரி முழுக்க காற்றென நிரம்பிருக்கிற நோய் நாற்றம். பரிவும் வலியுமான குரல் அலைவுகள். பதற்றமும், சோக வாட்டமுமான முகங்களுடன் தூக்குச்சட்டியும் கேரிபேக் பார்சலுமாக வந்துபோகிற மனித நிழல்கள்.

இந்தச் சூழலில் நெடியும் சோகமும் நோயுமான நாற்றச் சூழ்நிலையில் சாப்பிடவே அசூயையாக இருக்கிறது. ஒவ்வமறுக்கிறது. குமட்டலும் குடல் புரட்டலுமாக இருக்கிறது.

சாப்பிடவே வெறுப்பாக இருக்கிறது.

"சாப்புடு ஈஸ்வரி"

ஈஸ்வரராசனின் வற்புறுத்தல். அவள் கையைத் தடவுதல் மூலம் கெஞ்சுகிற முருகேசன்.

பார்சலை பிரித்துக் காட்டுகிற ஈஸ்வரராசன். தண்ணீர் பாட்டிலை முன்வைக்கிறான். வேறு வழியில்லாமல் ரெண்டு துண்டை பிய்த்து வாயில் வைக்கிறாள்.

"வண்டி என்னாச்சு?"

முருகேசன் ஆவலாகக் கேட்டான்.

"ஒர்க்ஷாப்லே போட்டுருக்கு"

"ரொம்பச் சேதாரமா?"

"இல்லே. மைனர் ஃவொர்க் தான்"

முருகேசனுக்கு வண்டியை நினைத்துக் கவலைப்பட்டான். கண்ணுக்குக் கண்ணாகப் பாதுகாத்து வைத்திருந்த வண்டி. பொன்னோ பூவோ என்று பொத்திப்பொத்திப் பாதுகாத்து வைத்திருந்தது.

சொந்தமச்சான் ஈஸ்வரராசன். ஓர் அவசரத்துக்கு வண்டிகேட்டான். தரமுடியாது என்று மறுத்துவிட்ட பிடிவாதம். ·

அடுத்த பத்தாவதுநாள் ஈஸ்வரராசன் வீட்டுமுன், ஒரு டி.விஎஸ் 50 வண்டி நின்றது. பழைய வண்டி,

ரோஷத்தில் வந்து சேர்ந்த வண்டி.

முருகேசனுக்குள் அவமானமாக இருந்தது. தனது அற்பத்தனத்தை நினைத்து வெட்கப்பட்டான்.

உறவைவிட.. இரும்பு வண்டி, மேல் என்று எண்ணிய தனது அற்பப்புத்தி.

ரோஷத்தில் வந்த மச்சானின் வண்டிதான், ஈஸ்வரியைக் கொண்டுவந்தது. இந்த மச்சான்தான் உடைந்து சப்பளிந்த தன் வண்டியைத்தூக்கி...இழுத்து.. உருட்ட முடியாமல் உருட்டி.. நடந்தே வந்து.. ஒர்க்ஷாப்பில் சேர்ப்பித்திருக்கிறான்.

இன்னா செய்தாரை ஒறுத்த-அவன் நாணநன்னயம் செய்கிற மச்சான்.

மச்சானை நிமிர்ந்து பார்த்தான். அவன் கைவிரலைப் பற்றினான். மிருதுவாக அழுத்தினான். மன்னிப்புகோருகிற வார்த்தைகளைப் பேசுகிற வருடல்.

"சரிசரி... இருக்கட்டும்...ஒடம்புசீராகி...வீட்டுக்குப் போறதைப் பத்தி யோசிப்போம்"

ஊரிலிருந்து பார்க்க வருகிற உறவினர்கள். விபத்து பற்றி திரும்பத் திரும்ப விசாரிக்கிற அவர்களுக்கு... ஒரே மாதிரியாக விவரிக்கிற ஈஸ்வரி. அவர்களுக்கு டீ வாங்கி வந்து உபசரிக்கிற ஈஸ்வரராசன்.

முருகேசனின் அண்ணன் அழகேசனும் வந்தான். அப்பாவை யும் அழைத்து வந்திருந்தான். இன்னும் உறவுக்காரர்கள், உள்ளூர் நண்பர்கள், எல்லோரும் தனித்தனியாக வந்து, குசலம் விசாரித்த வாறு இருந்தனர்.

முருகேசனுக்கு அடிக்கடி ஞாபகத்தில் உரசுகிற புஞ்சைகள், மிளகாய்ச் செடி வாடிக்கிடந்த தோற்றம். உரஉப்புபோட்டுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசரம்.

உரக்கடைக்கு வண்டியில் வந்தவன், ஆஸ்பத்திரியில் விழுந்து கிடக்கிறான். வண்டி, ஓர்க் ஷாப்பில்.

"எல்லாம் -விதிக்கொடுமை-"

அப்பாவிடம் நிலத்தைப் பிரித்து வாங்குவதற்காகப் போட்ட சண்டைகள்- விவசாயம் பண்ணி ஜெயித்துக்காட்டுவதாகச் செய்த சவால்கள்- வருகிற சோதனைகள்-

கவலைகள், புண்ணைச்சுற்றி மொய்க்கிற ஈக்களாக மனசுக்குள் சுற்றுகின்றன.

3

பரமசிவத்துக்கு வயது அறுபதுக்கும்மேல், எந்த நோய் நொடியும் அண்டியதேயில்லை. பல்வரிசைகூட சிந்தாமல் சிதறாமலிருக்கிறது. கறுத்த திரேகம். வாழ்ந்து கடந்த நாட்கள் தேகச் சுருக்கங்களாக விழுந்திருந்தாலும், தேகம் தளரவில்லை. எலும்பு விட்டுச் சற்றுவிலகியிருந்தாலும் சதைக்கோளத்திலிருந்து விலகி விடாத விறைப்பானதோல். கறுப்புச்சருமத்திற்கு அழகுசேர்க்கிற மாதிரி வெண்ணிறச்சுருள் ரோமங்கள்.

கடும் உழைப்பாளி. பதின்மூன்றுவயசில் பிடித்த கலப்பை. இன்றைக்கும் இடதுகையால் மேழியைப் பிடித்து அழுத்தினால், மாடுகள் திணறும். திமிறி இழுத்துநடந்துவிட்டால், நிலத்தின் இதயம் கிழிபடும். உள்ளிருக்கும் ஈரத்துடன் மண்இளகி, பொங்கி... பிளந்து,அகலமாக இருபக்கமும் சரியும். ஈரல் கறி மாதிரி நிலத்துமண் மின்னும். ஈரமின்னல்.

மாடுகளும் அவருக்கேற்றவை. அவரைப்போலவே வலுவானவை. வாலைச்சுழற்றுகிறநிதானத்தைப் பார்த்தால்,சோம்பல்மாடுகளைப்போலத் தோன்றும். முக்கித்திணறி இழுத்தால், அதன் மிருகவலிமை பிரமிக்கவைக்கும்.

ரெண்டுமே மயிலைக் காளைகள். வெள்ளை நிறத்தில் அடர்சிமெண்டுத் தூசியை தூவினமாதிரி ஒருநிறம். கொம்புகள் ரொம்ப அழகு. பிறை நிலாவை நட்டுக்க ஊன்றிவைத்தது போன்ற வசீகரம். கழுத்து மணிகள் "கணீர், கணீ"ரென்று ஒலிக்கும்.

"மாட்டை வுத்துட்டா என்ன ? " காமாட்சிபயந்து பயந்து தயங்கிக் கேட்டாள்.

"என்னத்துக்கு ?" கனல் தெறிக்க மனைவியைப் பார்த்தார்.

"வயசாகுதுலே ?"

"மாட்டுக்கா ?"

"நமக்கு"

"வயசாகுதுன்னா... சாப்புடறதை நிறுத்திருவமா ?"

"அதெப்படி ?"

"சாப்புடுற வரைக்கும் பாடுபடணும்லே ?"

"சாப்புடுற சின்னப்பிள்ளைக பாடுபடுதா ?"

"வாயில்லேன்னா...நீ ஒரு உப்புக் கல்லுக்கும் பெறமாட்டே..."

வாதத்தில் தோல்வியை ஒப்புக்கெள்ளாமல், பதிலில் பெயில் மார்க் போட்டுவிடுவார்.

அவருக்கு மிகவும் பிடித்தவார்த்தை, "உப்புக்கல்லுக்கும் பெற மாட்டாய்" என்ற வசவுதான். அடிக்கடி அப்படித்தான் வைவார்.

உலகத்திலேயே மலிவானது, உப்புதான். கடைகளில் கூட உப்புமூடை வெளியேதான் திறந்தவாக்கில் கிடக்கும். கடையை ராத்திரி சொருகு பலகைபோட்டு சாத்துகிற போதுகூட, உப்புமூடை அப்படியேயிருக்கும். அதை யாரும் அள்ளமாட்டார்கள்.

அத்தனை மலிவு.

மலிவானது உப்பு. அதில் ஒரு உப்புக்கல் என்பது ஒரு மதிப்பும் இல்லாதது. அந்த ஒரு உப்புக்கல்லுக்கும் பெறமாட்டாய் என்றால்... நீ எதற்கும் லாயக்கில்லை. உன்னைவிற்றால் ஒரு உப்புக்கல் கூடப் பெறமுடியாது என்று அர்த்தம்.

பரமசிவம் மாடுகளைவிற்பதாக இல்லை. இப்போது இந்தஊரில் மாடுகளும், ஏர்க்கலப்பையும் இவரிடம் தான் இருக்கின்றன. தொண்ணூற்றைந்து ஜோடி மாடுகள் இருந்த ஊரில்,

இப்போது "ஒன்றே ஒன்று, கண்ணே கண்ணு" என்று ஒற்றை ஜோடி தான்.

அதுகூட பரமசிவத்தின் பிடிவாதத்தால் தான்.

மாட்டுக்கலப்பை உழவின்மீது அவருக்கு அப்படியொரு நம்பிக்கை.

கறுத்த உடம்பில் வெள்ளை வேட்டி, தார்ப்பாய்ச்சியிருந்தார். தலையில் உச்சி வழுக்கை. சுற்றியிருக்கிற வெள்ளைரோமங்களும் பூனை ரோமம் போல "பொசு, பொசு"வென இருந்தது. வெள்ளைத் துண்டை வட்டக் கட்டாகக் கட்டியிருப்பார்.

கூளப்படப்பின் முன் நின்றிருந்தார். குனிந்து கூளத்தை கையால் பற்றியிழுத்தார். கொஞ்சம் கொஞ்சமாக இழுத்து நாற்றுக்கூளம். குருவிநிறத்தில் கருந் தவிடு மாதிரியிருக்கும்.

கறுப்புச்சோளத்தை கரிசல் காட்டில் உழுதுவிதைப்பார். நெருக்கமான விதைப்பு. ஒன்றின் மீதாக ஒன்றாக விதைவிழுந்து கிடக்கும்.

முளைத்தால்..நெருக்கமாக இருக்கும். கட்டெறும்பு நுழையக்கூட முடியாத நெருக்கம். பச்சைப் பசேலென நிலம் தெரியாமல் வளரும். கதிர்ஆகும் பருவத்தில்_ கதிர் ஆக விடாமல்_ அறுத்து, உலரப்போட்டு, கட்டு கட்டாகக் கட்டி, வண்டியில் பாரமேற்றி_கூரைவேய்கிற மாதிரி படப்பு அடுக்கி_

மாட்டு இரைக்காகவே விதைத்து வளர்த்து அறுத்து பதப்படுத்தி, படப்புஅடுக்கி, மழைவெயிலுக்குப் பாதுகாத்து_

சம்சாரித்தனத்தை நேசிக்கிற சம்சாரி, மாடுகளையும் பிள்ளைகளைப்போல நேசிப்பார். அதற்கான இரையையும் கண்ணும் கருத்துமான அக்கறையாக உழைத்து உருவாக்குவார்.

ஈர்க்குச்சி மாதிரியிருக்கிற நாற்றுக் கூளத்தைக் கற்றை கற்றையாக இழுத்துப் போட்டு...அதன் தூர்களில்சலங்கைமணி களாகத் தொங்குகிற கரிசல்மண் கட்டிகளை ஒரு கட்டைக்குச்சியால் அடிக்கிறார். உதறி உதறி அள்ளுகிறார். கொஞ்சம் வைக்கோலையும்

அள்ளுகிறார். (உள் முழங்கை) குடங்கை நிறைய கூளத்தை அள்ளுகிறார். தோள்பட்டைக்கும் மேலாக உயர்ந்து நிற்கிற கூளக்கட்டு.

தொழுவத்திற்குள் நுழைகிறார். இவரது காலடிச்சத்தம் கேட்டவுடன் நுட்பமான நட்புணர்வோடு தடபுடவென்று எழுகின்ற காளைகள். காதுகளை விடைத்து ஆட்டுகின்றன. நீர் மினுமினுப்பான கரிய வாய்களை திருப்பி..கனைக்கின்றன. கூளத்தைக் காடியில் போட்டு... ரெண்டு மாட்டுக்கும் எட்டும் தூரத்துக்கு இழுத்துவிடுகிறார்.

மாடுகள் போட்டு வைத்திருந்த சாணத்தைக் காலாலேயே கூட்டித் தள்ளி ஓரங்கட்டுகிறார். மாடுகளின் முதுகுகளில் வலதுகையால் தட்டி_ தன் பாசத்தைக் காட்டுகிறார். தட்டிய கையால் வருடி விடுகிறார். இவரது வருடலில் மாடுகளின் திரேகம் சிலிர்த்து_ அலையாக ஓடுகிறது.

"தின்னுங்கடா_ கண்ணுகளா_ " என்கிறார்.

"நாளைக்கு இறவைப்புஞ்சைக்கு உழவுக்குப்போகணும்" என்கிறார்.

"தெக்காட்டுப் புஞ்சையிலே உழவு. நாளைக்கு புஞ்சையை பொளந்து தள்ளிரணும்" என்கிறார்.

"தெக்காடும் கருசக்காடும் தான் கைவசம், மிச்சமாயிருக்கு. எல்லாத்தையும் புள்ளைகளுக்கு பிரிச்சுக்குடுத்தாச்சு" என்கிறார்.

மனப்பாரத்தை யாரிடம் இறக்குவார்கள் ?மனசுக்கு நெருக்கமான ஆத்ம பங்காளியிடம் தான் பகிர்வார்கள். மாடுகளும் பரமசிவத்துக்கு அப்படித்தான்.

தெக்காடு... என்றால், ஊருக்குத்தெற்கிலுள்ள காடு. இறவைத் தோட்டம்.முக்கால் குறுக்கம். இதுதான் பூர்வீகச் சொத்து. பரமசிவத்தின் ஐயா பகிர்ந்து தந்தது. கரிசல்காடு இவர் பாடுபட்டு சம்பாதித்து வாங்கியது. பிள்ளைகளுக்குப் பகிர்ந்து தந்த இறவைத் தோட்டங்களும், கரிசல்காடுகளும், கடலை விதைக்கிற செவல்காடு என்கிற மண(ல்) க்காடுகளும் எல்லாமே..இவரது சம்பாத்தியம்.

பரமசிவம் ஐயா பெயர் அழகேசன்.

பரமசிவம் இளவட்டத்திலேயே கருக்கடையாக (அக்கறை) இருப்பார். காடுகரையே கதியென்று கிடப்பார். ராத்திரியில்கூட ஒருநேரம் உறக்கம் வரவில்லையென்றால்..புஞ்சையைப்பார்த்து நடையைப் போடுவார். புஞ்சைப் பக்கம் போய் ஒரு சுற்றுசுற்றிவிட்டு வந்து, மறுபடியும் குறட்டைவிடுவார்.

யார்புஞ்சையில் எது களவு போனாலும், பரமசிவம்புஞ்சையில் மட்டும் ஒரு புல் கூடக் களவு போகாது. களவாடுகிறவர்கள் நடுக்கமாகப் பேசுவார்கள்.

"பரமசிவம் பேய் மாதிரி. நடுச்சாமத்திலே கூடப் புஞ்சையிலே நிப்பான்_ காவல் தெய்வம் மாதிரி_"

அழகேசன் வருத்தத்துடன் சொன்னார்.

"ஏலேய் பரமு, தெக்காடு புஞ்சை மட்டுந் தான் என்னாலே தர முடியும்_"

"ம்_"

"நீ அருமையான வேர்வைக்காரன். பாட்டாளி.மண்ணை புள்ளை மாதிரி மதிக்கிறவன். தெக்காடு புஞ்சை ஒனக்கு ஒரு விதை முதல் மாதிரி. நிறைய காடுகரைகளை_ தோட்டங்களை இதைவைச்சு வெளைய வைச்சுக்குருவே டா_"

அவர் வாய் வார்த்தை, பொய் வார்த்தையாகவில்லை.அப்படியே பலித்தது. இருபது ஏக்கர் கரிசல்காடு, ஆறுஏக்கர் செவல்காடு, பன்னிரண்டு ஏக்கர் இறவைக்காடுகளைப் பாடுபட்டுப் பாடுபட்டு சம்பாதித்து, பிள்ளைகளுக்குப் பகிர்ந்துதந்துவிட்டார்.

ஐயா தந்த பரம்பரைச் சம்பாத்தியத்தை மட்டும் இவர் வைத்துக் கொண்டார். வயசானகிழடு என்று பெயர் வந்த பிறகு ரெண்டு ஏக்கர் கரிசல்காடு கிரையம் பண்ணினார்.

அப்பவும், காமாட்சி "கட்டையை" கொடுத்தாள்.

"சுடுகாட்டுக்குப் போறவயசுலே கருசக்காடு என்ன செய்ய? நம்மளைப் பொதைக்கவா?"

"நம்மளைப் பொதைக்கறதுக்கு உள்ள மயானக்க்ரைபோதும். காளை மாட்டுக்கு எரைவேணும்லே? நாத்துக்கூளம் விதைக்குறதுக்காச்சும் காடுவேணும்லே?"

அந்தப்புஞ்சையில் விளைந்த நாற்றுக்கூளம் தான், இந்தப் படப்பு. வீடுமாதிரி, நாலு மூலைமடிப்புகளோடு நீள வாக்கில் இருக்கிறது. உச்சியில் கூரைமாதிரியே கோபுரம் குத்தியாக இருக்கிறது. படப்பு வேய்வது ஒரு கலை. எல்லாராலும் முடியாது.

இந்த ஊரிலேயே அருணாசலம் தான் கூரைவேய்வதிலும் படப்பு வேய்வதிலும் கைதேர்ந்த ஆள். தேர்ச்சியானஅனுபவம். நாற்பது வருஷத்தேர்ச்சி.

பருவட்டான மணலாக நாலுவண்டி குவித்து, அதைச் சமமாகப் பரப்பி, வரிசையாகக் கருங்கல்லை அடுக்கி.. அதன்மேல் படப்பு அடுக்குவதே... தனிக்கலை. உழுது விதைத்து விளையவைப்பது போலவே... காலநேரம் பார்த்துக் கண்ணும் கருத்துமாகப் படப்பு அடுக்குவார்கள்.

மழைத் தண்ணீர் வராத பருவம் பார்த்துத்தான் படப்புவேலை நடக்கும்.

பரமசிவத்துக்கு யாரோ கூப்பிடுகிற மாதிரி ஓர்அரவம். தொழுவத்தைவிட்டு வெளியே வந்தார். தலைப்பாகையை அவிழ்த்து, துண்டை உதறித்தோளில் போட்டுக்கொண்டே முற்றத்தில் நின்றார்.

"யாரப்பா... அது?"

"நாந்தான்... உங்க இளையமகன் முருகேசன் ஆசுபத்திரியிலே இருக்காராம்..."

"என்னவாம்"

"ஏதோ ஒரு வண்டியோட மோதிட்டாராம்"

பரமசிவத்தின் கரியமுகத்தில் வருத்தநிழல்.

4

சரக்குலையை உருவிப்போட்ட மாதிரியிருந்தது. பரமசிவத்துக்கு. "என்னசெய்வது, ஏது செய்வது" என்றறியாத திகைப்பு. மனசு முழுக்க நிலைகுலைந்துபோன ஸ்தம்பிப்பு.

நினைவுகளுக்கே கண்ணைக்கட்டிக்கொண்டு வருகிற மாதிரி யான மயக்கநிலை. இலேசாக தள்ளாடுகிற உடம்பு. தொழுவத்தின் சுவரைப்பற்றுகிற உயிரின் அனிச்சைச் செயல்.

"நம்ம பயலுக்கா_இந்தக்கதி ?"

சுழற்றியடிக்கிற சூறாவளியாக உணர்ச்சிப்பெருவெள்ளம். நெஞ்சுமுட்டிக்கொண்டு வருகிறது. வெடித்தழவேண்டும்போல ஓர் உணர்வுந்துதல். அழத்தோன்றவில்லை. அடி உதட்டைக் கடித்துக் கொண்டார். கடைவாய்ப் பற்கள் ஒன்றுடன் ஒன்றாக இறுகிமோதி.. நெறுநெறுத்தன. கண்ணுக்குள் நீர்முள்ளின் குத்தலெடுப்பு.

வீட்டுக்குள் பாய்ந்தார். கையில் கிடைத்த ரூபாய்ச்சுருட்டை மடியில் வைத்துக்கொண்டார். காமாட்சியைக் கூப்பிட்டார்.

"ஏய்.. காமாட்சி"

குரலின் கலக்கத்தை உணர்ந்து நடுங்கிப்போனாள்.

"என்ன..ஆச்சு"

"நம்ம எளைய பயலுக்கு கொஞ்சம் ஒடம்புக்கு சேட்டமல்லாம (சிரேஷ்டமில்லாமல்) ஆசுபத்திரியிலே இருக்கானாம். தாக்கலு வந்துருக்கு."

"ஐயோ...ஐயய்யோ.... என் வவுத்துத் தங்கப்பெட்டியே.. என்னைப் பெத்த ராசாவே_ எங்கேயா இருக்கே ?"

"திருவேங்கடம் ராசேந்திரன் ஆசுபத்திரியிலே"

ஒப்பாரிவைத்துக் கதறுகிற காமாட்சி. ஒங்காரமாக அலறி அழுகிற அவள். தலையிலும் மார்பிலும் ரெண்டு கையாலும் மாறிமாறி அடித்துக்கொண்டு கதறுகிற காமாட்சி.

ரூபாயை எடுக்க உள்ளே போகிற பரமசிவம்.

"ஐயோ_ பாவி"! நீயெல்லாம் ஒரு தகப்பனா ? வாய்க்கு வாய் வெளங்காமப் போயிருவான், வெளங்காமப் போயிருவான்னு பெத்த புள்ளையை சபிச்சீகளே... கரிச்சுக்கொட்டுனீகளே... உங்கநாக்கு வாக்கு பலிச்சிருச்சா ? இப்ப உங்களுக்குத் திருப்தியா ?"

கண்ணீரும் கம்பலையுமாகக் கைகளை அவரைநோக்கி ஆட்டியஆவேசம். பரிதவிப்பு. குலை கொதிப்புமாகக் கொந்தளிக்கிற பாச நெஞ்சு.

"ஏம்புள்ளையை வெறுத்து வெறுத்து ஒதுக்குனீகளே... "உருப்படமாட்டான்..உருப்படமாட்டான்"னு கரிச்சுக் கொட்டுனீகளே... அடப்பாவி... பெத்தபுள்ளையை வாய்லே போட்டு மென்னு துப்புனீயே..நீயெல்லாம் ஒருமனுசனா_ ?"

கதறிக் கூவல்காடு போடுகிற அவளது அங்கலாய்ப்பு. ஆங்காரமுமாய் அனலாய் வார்த்தையைக் கொட்டுகிற பாசக் கொந்தளிப்பு.

பரமசிவத்துக்குள் குற்ற உணர்ச்சியை ஏற்படுத்துகிறது. அவளது ஒவ்வொரு சொற்கங்குகளும் அவரது உயிரைச்சுட்டுப் பொசுக்குகிறது. பழைய சம்பவங்களின் துண்டு துக்காணிகளை கிளறிவிடுகிறது.

அதையெல்லாம் நினைத்துக்கொண்டிருக்க இதுநேரமில்லை. அவன் செய்த சேட்டைகள்.. அப்பனை அப்பனாக மதிக்காமல் எதிர்த்துப் பேசிய பேச்சுக்கள்..ஊரைக்கூட்டி வீட்டு முன்னால் நிறுத்தி இவரைத் தலைகுனிய வைத்த செயல்_

இதையெல்லாம் இப்ப யோசித்துக்கொண்டிருக்க முடியுமா? மூனேகால் வருஷமாக பேச்சு வார்த்தையில்லாமல் ஒதுங்கிப் போனதையும் நினைத்துக்கொண்டிருக்க முடியுமா?

பகையையும் வெறுப்பையும் பொட்டலம் கட்டிப் பத்திரப் படுத்துவதா? கழுவித்துடைக்க வேண்டிய மன அழுக்குகளல்லவா?

பழையதை நினைத்து இப்போதும் முறுக்கிக் கொண்டிருக்கலாமா? அதற்கு இதுவா நேரம்? தானாடாவிட்டாலும், உதிரம் தந்து வளர்த்த சதையாடுமே...

காமாட்சியைப் பார்த்துக் கலங்கிய குரலில் கூறுகிற பரமசிவம். "இங்கபாரு... நீ சொல்றது பூராவும் சத்தியம்தான். ஞாயந்தான்.ஆனா.. என்னைமட்டும் வையாதே. எளையவனும் எம்புட்டு வம்பு பண்ணுனான்ங்குறதையும் யோசி.. உன்னையும் என்னையும் எம்புட்டு எடுத்தெறிஞ்சுபேசுனான்ங்குறதையும் நெனைச்சுப்பாரு"

"புள்ளை சின்னவன்.வயசுலே பிஞ்சு.பச்சை மண்ணு. அறிஞ்சும் பேசுவான். அறியாமலும் பேசுவான். நாம தான் பூமிமாதா மாதிரி பொறுத்துப் போகணும். சரிமல்லுக்கு நிக்கலாமா? சபிக்கலாமா? "வெளங்காமப் போயிருவே, தொலங்காமப் போயிருவே"ன்னு வெறுத்தொதுக்கிட்டு.. நாம, இருந்து எந்தப் பட்டத்தை ஆளப்போறோம்?"

பரமசிவத்துக்குக் கடுப்பாக இருந்தது. காமாட்சியைப் பார்த்து கடுமையாக நாலு வார்த்தைகளை எறிந்துவிடலாமா என்று கோபம் கோபமாக வந்தது. உள்ளங்கையும் நடுநெஞ்சும் குறுகுறுத்தது.

பல்லைக் கடித்துக்கொண்டார். மனசையும் உணர்வையும் உள்ளுக்குள் அழுத்தி அமுக்கிக் கொண்டார். காமாட்சியைப் பார்த்தார். அழுகையும் ஆவேசமுமாய்... சோகமும் கோபமுமாய் குமுறிக்குமைகிறாள். பெற்றவள். பத்துமாசம் வயிற்றில் உயிர் சுமந்தவள். ரத்தமும் சதையும் கரைத்து கர்ப்பப் பைக்குள்ளிருந்த உயிருக்கு ஊட்டியவள். உயிரையும் உணர்வையும் பகிர்ந்து தந்தவள்.

கிறுகிறுப்புகளையும், குமட்டல்களையும் வாந்திகளையும் உணவு உண்ண முடியாத பசிகளையும் மகிழ்வுடன் ஏந்திக்கொண்டவள். பிள்ளைக்குச்சொந்தக்காரி. பிள்ளையைப் பெற்றவள். சுமந்து படைத்துத் தந்தவள்.

அவளது வசவுகள், வசவுகளேயல்ல. தகப்பனையும் பிள்ளையையும் எதிரும் புதிருமாக நிறுத்தி வேடிக்கை பார்த்த காலக்கொடுமையின் விதிக்கு அவள் என்ன செய்வாள்?

பெற்ற வயிற்றின் மனக்கொதிப்புக்கு நியாயம் இருக்கிறது. அவளது ஆங்காரத்திற்கு அர்த்தம் இருக்கிறது.

பொறுமை காத்தார். அவளைப் பரிவுடன் பார்த்தார். அனுதாபத்துடன் பார்த்தார்.

"காமு, ஆத்திரப்படாதேம்மா. அழாதேம்மா. நானும் மூத்தவனும் ஒரு எட்டு போய்ப் பார்த்துட்டு வந்துருதோம்"

"நானும் வரட்டா? என்னையும் கூட்டிட்டுப்போங்களேன்.."

"நீ இரு. நானும் மூத்தவனும் ஒரு சைக்கிள்லே போறோம்"

"பெத்ததாயி—நா. புள்ளையை பாக்கவேண்டாமா?"

"ஊருக்கு வந்த பெறவு— நீ போய்ப் பாரு"

அழகேசன் வீட்டைநோக்கி நடந்துபோகிற பரமசிவம். சட்டையில்லாத உடம்பு. அதே வேட்டி. தார்ப்பாய்ச்சியிருந்ததை மட்டும் எடுத்துவிட்டு... மடித்துக்கட்டியிருக்கிறார்.

பரமசிவத்தின் அகலமான முதுகு. நடுவில் முதுகுத்தண்டின் ஓடைப்பள்ளம். உயர்ந்த தாட்டியமான திரேகம். தெரு நிறைய "தக், தக்" கென்று நடந்து போகிறார்.

சந்துக்குள் நுழைந்து திரும்புகிறார்.

அழகேசன் வீட்டுமுன்பு, தெருப்பாதையில் கருப்பண்ணசாமி மாதிரி கம்பீரமாய் நிற்கிறார்.

"ஏலேய்ய்—அழகு— அழகு"

அதிர்ந்தொலிக்கிற பலத்த சத்த அலைகள்.

கையிலும் மேல்துண்டுமாகப் பதறியடித்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுகிற அழகேசன்.

"என்னய்யா ?"

"சைக்கிள் இருக்குல்லே ? எடுரா"

"என்னத்துக்கு ?"

"எளையவன் ஆசுபத்திரியிலே கெடக்கானாம். போய் பாத்துட்டு வந்துருவோம்."

"நீங்களா-அய்யா ?"

"நாமதான்"

"நீங்களுமாய்யா ?"

புதிரும் குழப்பமுமாக அய்யாவைப் பார்க்கிற அழகேசன்.பகையும், கோபக்கொதிப்புமாக இருந்த அய்யா. சாபம் விட்டு மனாக்னியைவெளிப்படுத்திய அய்யா.

"நா...ஞ்செத்தாக்கூட எம்மூஞ்சியிலே வந்து அவன் பாக்கக்கூடாது. எனக்கு கொள்ளிக்கொடமும் அவன் ஒடைக்கக்கூடாது. எனக்குப் பெறந்தவன்ங்குறதுக்கான அடையாளமா சொத்தோட ஒதுங்கிப் போயிரட்டும்" என்று வைரக்குரலில் கனல்கக்கிய அய்யாவா, இது ?

"என்னய்யா.. அவனை மூஞ்சியிலே முழிக்கக்கூடாதுன்னு வெரட்டுனது நீங்கடய்யா"

"பணத்தையும், பரம்பரை மானத்தையும் பாதுகாக்கணும்டா. பகையையும் வெறுப்பையும் பத்திரப்படுத்திவைக்கக்கூடாதுடா... ஆசுபத்திரியிலே புள்ளை கெடக்குறப்பவும் பகையைக் காட்டுன பாவத்தை ஏம் பரம்பரையிலே யாரும் செய்யக்கூடாதுடா... எடுரா சைக்கிளை"

வீட்டுக்குள் போனவன் வெள்ளை வேட்டியும் சட்டையுமாக வெளிவந்தான். சைக்கிளை எடுத்தான். சுவரில் சாய்ந்து கிடந்த

சைக்கிளின் சீட்டில் ஒருதட்டு தட்டி, தூசியை நீக்கினான். சைக்கிளை உருட்டினான்.

அழகேசன் சைக்கிள் பெடலில் கால் வைத்து மிதித்து ஏறினான். அகலக்கேரியலில் ஏறி உட்கார்கிற பரமசிவம்.

சைக்கிள் திருவேங்கடம் நோக்கி நகர்கிறது.

இவர்களுக்கும் முன்பாகப் புறப்பட்டுவிட்ட காமாட்சி, குறுக்குப்பாதையான கரிசல் காட்டு வழியாக ஓட்டமும் நடையுமாக நடந்துகொண்டிருக்கிறாள்.

அவள் உயிர் முழுவதும் மகனிடம்.

5

உதடுகளின் வீக்கமெல்லாம் வற்றிவிட்டது. காயம், ஆறத்துவங்கிவிட்டது. கட்டுகளைக் காலையும், மாலையும் அவிழ்க்கிறார்கள். மாற்றிக் கட்டுகிறார்கள். மஞ்சள் நிற மருந்து அப்பிய பேண்டேஜ் துணியை இழுக்கிறபோது, சுரீரென்று வலிக்கும்.

ஊசிபோட டாக்டர் வருகிற போதெல்லாம் இங்கிதமாகப் பேசுகிறார். "டிரெஸ்ஸிங் பண்ணியாச்சா" என்று நர்ஸிடம் விசாரித்துக் கொள்வார்.

குளுக்கோஸ் ஸ்டாண்டை அப்புறப்படுத்திவிட்டார்கள். வாங்கிவந்த இட்லியைப் பிய்த்துப் பிய்த்து சட்னியில் தொட்டு வாயில் ஊட்டுகிற ஈஸ்வரி. நாலு இட்லிக்குமேல் சாப்பிட முடியவில்லை. மூன்றுவகை மாத்திரைகளை விழுங்கியாக வேண்டும்.

"நீயும் சாப்புட்டுக்கோ ஈஸ்வரி"

"நீங்க எந்திரிங்க. கட்டிலையும் மெத்தையையும் சுத்தம்பண்ணிட்டு, நல்லா விரிச்சுவிடுதேன்"

மெல்ல இறங்கினான். ஈஸ்வரி கைகொடுக்கவேண்டியிருந்தது. இடது காலை முழுசாக மடக்க முடியவில்லை. நம்பி தரையில் ஊன்றவும் முடியவில்லை.

அவனுக்குத் தோள் தந்து, அவன் பாரம் பூராவையும் தாங்கிக் கொள்கிற ஈஸ்வரி. கீழே இறங்கியவுடன் கட்டிலின் தலைப்பகுதி விளிம்பைப் பற்றிக்கொண்டு நிற்க...

ஈஸ்வரி மெத்தையை உதறினாள். விரிப்பை உதறினாள். தூசியையும் காகிதச் சிதறல்களையும் துடைத்துத் தள்ளினாள். நன்றாக விரித்து.. சுருக்கங்களை எடுத்து நீவிவிட்டாள்.

படுப்பதற்கும் ஒத்துழைக்கிற ஈஸ்வரி.அவனைத் தோளில் தாங்கி, படுக்கையில் உட்கார வைத்து, மெல்லத் தலையணையில் சாய்த்தாள். இடதுகாலைப் பதனமாகத் தொட்டு, உரிய இடத்தில் வைத்தாள்.

விழுங்கிய மாத்திரைகள் கரையாமல் நெஞ்சுக்குள் கட்டையாக நிற்கின்றன. "இன்னும் கொஞ்சம் தண்ணிகுடு_"

ஈஸ்வரி பாட்டில் தண்ணீரை வாயில் சாய்த்தாள். குடித்து முடித்த பிறகு...நாடியிலும், நெஞ்சிலும் கோடு கிழித்திருந்த நீர்க்கோடுகளைத் துடைத்தாள்.

"நீயும் சாப்புடு_ ஈஸ்வரி"

"ஆட்டும்"

"இந்த ஆசுபத்திரி வாடை ஒத்துக்கலியா, ஒனக்கு ?"

"ஒத்துக்காமலிருக்கிறது நல்லது தான். காலம் பூராவும் குடியிருக்கவா போறோம் ?"

மிச்சமிருந்த மூன்று இட்லிகளை அவள் சாப்பிடலாமென்று கட்டிலுக்கருகில் தரையில் உட்கார்ந்தாள்.

"தண்ணி எடுத்து வைச்சுக்கோ"

"நீங்க சித்தே கண்ணை மூடி ஒறங்குங்க"

வலதுகையில் குளுக்கோஸ் ஏறியதால், உள்மணிக்கட்டில் வீக்கமும் வலியும். அதை மடித்துத் தலைக்கு மேலாக வைத்துக் கொண்டான்.

கண்ணை மூடியவுடன்_

கம்பீரமாகத் தெரிகிற அய்யா. அவர் வருவார் என்று எதிர்பார்க்கவில்லை, இவன்.

அண்ணன் வந்தது ஆச்சரியமில்லை. அய்யா வந்தது தான் ஆச்சரியம்.

அவருடன் முகம் பார்த்துப் பேசி, முப்பத்தொன்பது மாதங்களாகிவிட்டன. மூஞ்சியிலே முழிக்காதே என்று உத்தரவிட்டுவிட்டார்.

அண்ணன் அழகேசன் வந்தான். அவன் பின்னால், அய்யாவின் தலைதெரிகிறது.

அழகேசன் வந்து கட்டில் பக்கத்தில் நின்றான். ஒரே ஒரு ஸ்டூல் கிடந்தது.

"மாமா .. இதுலே உக்காருங்க" என்று ஸ்டூலை தூக்கி நகர்த்திய ஈஸ்வரி. அவளையும் ஒருபரிவுப் பார்வை பார்த்தார்.

ஸ்டூலில் உட்கார்ந்த பரமசிவம், வேறு எதையும் பார்க்காமல், முருகேசன் முகத்திலேயே நங்கூரமிட்டிருந்த அவரது கண்கள்.

கண்ணில் கோர்த்திருக்கிற நீரின் மின்னல்.

அழகேசன், "என்னாச்சு எப்படியாச்சு" என்று பலவாறாக விசாரிக்கிறான். விபத்து எப்படி நடந்தது, யார் பார்த்தது, எப்படி மருத்துவமனைக்கு வந்தது, மருத்துவம் எப்படி நடக்கிறது என்று அக்கறையும் ஈடுபாடுமாக விசாரித்துக் கொண்டிருக்கிற அழகேசன்.

எதுவும் விசாரிக்காமல், மௌனத்தில் சமைந்து உட்கார்ந்திருக்கிற பரமசிவம். கொந்தளிக்கிற மனச்சஞ்சலம் கண்ணிலும், முகத்தோளின் சலனத்திலும் தெரிகிறது.

ஒருமணிநேரம் உட்கார்ந்திருந்தான்,அழகேசன் ஈஸ்வரியிடம் பேச்சு கொடுக்கிறான். முருகேசனிடம் பேசுகிறான்.

முருகேசனின் கவனம் முழுவதும், மௌனமாக உட்கார்ந்திருக்கிற அய்யாவின் மீதுமட்டும். அய்யாவின் வைராக்கிய மானமௌனம், முருகேசனை மிகவும் உறுத்துகிறது.

"என்னடா... எப்படியிருக்கே?" என்று அய்யா ஒருவரிகேட்க மாட்டாரா என்று அடிமனசு ஏங்கியது. அழகேசனின் பேச்சில் பாதி

கவனம் உட்கார்ந்திருக்க..முழுக் கவனமும் அய்யாவின் உதட்டில் ஓடியது.

அந்த உதடுகள் அசையாதா, ஆடாதா,தன்னுடன் பேசாதா என்று துடித்தலறுகிற முருகேசனின் உயிர்.

"அய்யா_பேசுங்கய்யா..இப்பவாச்சும் எங்கிட்டே பேசுங்கய்யா_ "ஏலேய் எளையவனே" என்று கூப்புடுங்கய்யா. "ஏண்டா.. இப்படி வுழுந்து, இம்புட்டு காயத்தோட இங்ககெடக்கீயே" என்று கேளுங்கய்யா_"

என்று வெடித்தலறுகிற உள்மனப்பாசம். இதயமே வெடித்து விடும்போல ஒரு மூச்சுத்திணறல். விம்மி விம்மித் தணிகிற நெஞ்சு.

ஆனால், உதடசையாத அய்யா. இறுகலான முகம். முட்டிக் கொண்டு வருகிற அழுகையை அடக்க யத்தனிக்கிற முகபாவம்.

இறுகி விறைக்கிற முகம். கன்ன எலும்புகள் புடைக்கின்றன. பற்களின் இறுகலான கவ்வல்.கண்விழிகள் மட்டுமே அலைகின்றன. முருகேசனின் தலை, நெற்றி, உதட்டு வீக்கம், கால்கட்டு, கைகட்டு, குளுக்கோஸ் பாட்டில் என்று மட்டுமே பார்க்கிற விழிகள்.இந்த எல்லைவிட்டகலாத பார்வை.

ஆனால், பேசமறுக்கிறார்.பேசும் சக்தியை இழந்துவிட்டது போலத் தோன்றுகிறார். பாசக் கொந்தளிப்பான இதயத்தின் மௌனம். அன்பின் உச்சபட்ச அளவை உணர்த்துகிற மௌனம்.

ஈஸ்வரி ரெண்டுபேருக்கும் டீ வாங்கிவந்தாள். மச்சானிடம் ஒருகிளாஸை நீட்டினாள். மாமாவிடம் ஒருகிளாஸை நீட்டினாள்.

வேண்டாமென்று சொல்லிவிடுவாரோ...வாங்க மறுத்து விடுவாரோ என்று துடிக்கிற முருகேசனின் உயிர்நுனி.

நல்ல வேளை_

இறுகலான மௌனத்தோடு வாங்கிக் கொண்டார். ஆவலோ தேட்டமோயில்லாமல் யந்திரத்தனமாகக் குடித்தார்.

டீயின் ருசி கூட அவரிடம் தோற்றுவிட்டது.

அய்யாவையே பார்க்கிற முருகேசன்.

"சரி... ஒடம்பைப்பாத்துக்க.. நல்லபடியா ஒடம்பைத் தேத்திட்டு வா.."

"ம்"

"இந்தா.. இதுலே ஐநூறுரூவா இருக்கு. செலவுக்கு வைச்சுக்கோ.."

"வேண்டாம்ணே"

"வேண்டாம் மச்சான்" என்று கூட்டாக மறுக்கிற ஈஸ்வரி.

"அடுத்த ஆள்கிட்டே பேசுகிற மாதிரி அந்நியமா நடந்துக்காதே. பேசாம...வாங்கிக்க.. நாவேற யாரோ இல்லேடா. கூடப்பொறந்த அண்ணன்டா.."

"சரி... கொண்டா. ஈஸ்வரி, வாங்கிக்க."

ஈஸ்வரியிடம் தருகிற அழகேசன் முருகேசனின் நெற்றியில் வலது உள்ளங்கையை வைத்து வருடினான்.

அந்த வருடலில் மயிலிறகின் மென்மையான ஸ்பரிசம். சகோதர இதயத்தின் மொழி. பாசத்தின் தொடுகை.

"சரி... பாத்துக்கோ ஈசுவரி"

புறப்படுகிற யத்தனிப்பில் அழகேசன். ஸ்டூலை விட்டெழுகிற பரமசிவம். அவர் மகனைத்தொடவில்லை. மகனிடம் பேசவில்லை. மருமகளிடம் கூட ஒரு வார்த்தை பேசவில்லை. மருமகளிடமும்கூட ஒரு வார்த்தை பேசவில்லை. முழுமையான மௌனத்தை வைராக்யமாக கடைப்பிடித்துவிட்டு வெளியேறுகிற பரமசிவம். அவரது நடுமுதுகின் ஓடை. அகலமுதுகின் கரிய மினுமினுப்பு. முதுகில் அடர்த்தியாக முளைத்திருக்கிற சுருள் வெள்ளைமுடி.

அவர் போகிறபோது... அவரது இருதயத்தைப் பிளந்து கொண்டு நிதான வேகத்துடன் சத்தமாக வெளிப்பட்ட பெருமூச்சு, அந்த அறை முழுக்க நிரம்பியது.

புறப்படும்போது, அவன் முகத்தைப் பார்த்த பார்வை. அழுந்தப் பதிந்த பார்வை. மனசைக் குத்திக் குடைகிற கூர்மையான பார்வை.

அய்யா போனபிறகும் அறைமுழுக்க அய்யாவே நிரம்பியிருக்கிற மாதிரியான பிரமை. அவரது பாசச் சுவடுகள் அறைமுழுக்க பிரமாண்டமாக நிரம்பித் ததும்பியிருந்தன.

அய்யாவும் அண்ணனும் போன கொஞ்சநேரத்திற்கு-

அலறலும் கதறலுமாக ஓடிவருகிற அம்மா. நடந்தே வந்த அந்த வைராக்கிய மனுசியின் பாசப் பிரம்மாண்டம்.

6

பரமசிவத்துக்கு அப்பத்தான் கல்யாணம் நடந்திருந்தது. காமாட்சி, நல்ல கறுப்பு. கண்ணுக்குக் குளிர்ச்சியான கறுப்பு. லட்சணமான முகம். கச்சிதமாக அமைந்த உதடுகளே தனியழகு. முதுகு முழுக்க பரவி பிருஷ்டம் வரைக்கும் நீண்ட கூந்தலடர்த்தி.

பெரியசம்சாரி வீட்டுப்பெண். காடுகரைகளில் பாடுபட்டுப் பழகியவள். வெயிலுக்குள் நிலா வெளிச்சம் போலத் திரிகிறவள். காய்ப்பேறிப்போன உள்ளங்கைகளுடன் வந்தவள்.

துணிமணியை ஈயவாளியில் நனைய வைத்தாள். அரைவாளியில் தண்ணீர். துணிகளை அமுக்கி வைத்தாள். மேலும் தண்ணீர் ஊற்றினாள். குடத்தை இறக்கிவைத்துவிட்டுத் திரும்ப எண்ணியவளை-

திரும்பவிடாமல் ஓர் இரும்புக்கை. பின்பக்கமாகக் கட்டித்தழுவி, அடிவயிற்றின் குறுக்காக இறுகுகிற கை. சாயங்கால வெயிலில் அவள் முகக்கனிவு.

"என்ன..இது ? ச்சீய்.. வுடுங்க"

"வுட மாட்டேன்.."

"யாரும் பாத்தா.. அசிங்கம். பகல்லேயா ?"

"என்ன அசிங்கம் ? புதுசா கல்யாணம் பண்ணுனசோடி. பகலென்ன..ராத்திரியெல்லாம் ஒண்ணுதான்"

"ராத்திரி எங்கே போறீக ?"

"எங்கேயும் போகலே. இந்தச்சக்கரைக்கட்டியை வுட்டுட்டு நா எங்க போவேன் ?"

"பெறவு ? இப்ப என்ன ?"

"எனக்கு வேணும்"

திரும்புகிற வலதுகன்னத்தை உதடுகளால் கவ்வினான். திமிறிக்கொண்டு, உதறிக்கொண்டு உள்ளே ஓடினாள்.

நாணத்தில் துள்ளியோடுகிற காமாட்சி. வாசலைத்தாண்டி உள்நுழைகிறபோது, மின்னல்பார்வை இவனை வெட்டியது.

நாணத்தின் ஒட்டம் தப்பித்தலா ? மின்னல்வெட்டுப்பார்வை யின் புன்னகை ஓர் அழைப்பா ? வீட்டுக்குள் ஓடுவது, மனச் சம்மதத்தின் அடையாளமா ?

பின்தொடர்ந்து ஓடுகிற பரமசிவம். கதவைச்சாத்தி தாழ்போட்டுவிட்டுப் போகிற மனத்தினவு. உள்ளறைக்குள் தப்பித்தோடிய அவளை இரண்டு கையாலும் கோதி அள்ளினான்.

கோதியள்ளிய வேகத்தில் அவளைத் தன் உடம்போடு இறுகத் தழுவிச் சுழற்றினான். அவளது சிரிப்பின் சலங்கைச் சத்தம். சுழற்றிவிட்டு நட்டுக்க நிறுத்தினான். அப்படியே முகத்தைக்கவ்விய முகம். முகம் முழுக்க அவனது எச்சில்.

கள்ளமில்லாமல் சிரிக்கிற மோகனப் புன்னகை. உதடுகளைக் கவ்வுகிற போது... உடன்படுகிற அவளது குழைவு. சேலையை விலக்குகிற அவன். அவளைத் தனியாக விலக்கி, நிறுத்தி காமாட்சியை ரசிக்கிற அவன்.

கூச்சம் தாளாமல் முகம் அசைத்து, திமிறிக்கொண்டு அவனுடன் ஒட்டிக்கொள்கிற காமாட்சி. காமாட்சியின் மிருதுவான தேகக் குழைவு, கனிவடைந்து தளர்கிறது.

உன்மத்தம் அடைகிற இளவட்டம். அப்படியேகீழே சாய்த்து, அவசரமாகப் படர்கிற பரமசிவம்.

உணர்ச்சிகளின் படையெடுப்பு.குதிரையின் கனைப்புச் சத்தங்கள். யானைகளின் பிளிறல்கள். ஈட்டியின் பாய்ச்சல். அம்பின் சீறல். கவசங்கள் உடைகிற சத்தம்.

ஓர் யுத்தம். அந்திமாலை இருட்டில் நடக்கிற காமன் பண்டிகை. உயிர் உற்பத்திக்கான சகல உயிரினத்தின் யுத்தம்.

வியர்த்து விறுவிறுத்து அவன் விலகியபோது, விலகவிடாமல் பற்றுகிற அவள். அவனும் தேனில் சிக்கிய எறும்பாக விலக விரும்பாமல் துவண்டநிலையில் அவளுள் சரிந்து கிடந்தான். அவனதுசூடான மூச்சிரைப்பு அவளது வெற்றுமார்பில் தகிக்கிறது.

"ராசா... ராசா.. என்னோட ராசா" என்று மிழற்றுகிற இன்பத்திளைப்பு. சுகத்தத்தளிப்பு.

இது ஒரு வினோதம். கொடுப்பவர் பெறுகிறவராகவும் பெறுகிறபோதே கொடுப்பவராகவுமான வினோத உறவு. இன்பமே வேதனையாகவும், வேதனையே இன்பமாகவும் வித்தியாசமான பரிவர்த்தனை. வியர்வையே மோகரசமாக சுவையாகிற மாறுதலான தருணம்.

அவனது காதோரத்துக்கு வருகிற அவளது உதடுகள். காதோர ரோமத்தையும் வியர்வையையும் வாயால் ஊதுகிற அவளது உதடுகள்."ஏங்க_"

"ம்"

"நம்ம வூட்டுல ஒரு பசு மாடு நின்னா நல்லாயிருக்கும்லே ?"

தருணத்துக்கு முரணான அந்தக் கெஞ்சல் வார்த்தைகள், கொஞ்சல் தொனியாக கிசுகிசுத்தது.

அவனுக்கு வித்தியாசமாகப்பட்டாலும், வித்தியாசம் படாமல், அதே உணர்வுத்திளைப்பில் கிறங்கிய நிலையிலேயே_

"நாளைக்கே நிப்பாட்டிருவம்"

"பசு இருந்தா_ பாலு பீய்ச்சலாம். விக்கலாம். போடுகிற சாணி குப்பைக்காகும். வீட்டுலே லட்சுமி பொங்கும்."

"ம்"

"அத்தோட ஒரு வெள்ளாடும் புடிக்கணும்"

"இதெல்லாம்...பேசுறதுக்கு இதுதான் நேரமா? இதுதான் தலைவாணி மந்திரமா?"

"நேரம்_ என்ன நேரம்? எல்லாம் எல்லாத்துக்கும் நல்ல நேரம் தான். நாம இப்படி இருக்குறதுக்கு, இதுவா நேரம்? நாம இருக்கலியா?"

"என்னை வைச்சு என்னையே மடக்குறீயா?"

"யாரு யாரை மடக்குறது? நாம ரெண்டுபேரும் சேர்ந்துதான் வாழ்க்கையை மடக்கணும்"

"அடியேன் ராசாத்தீ..." முதுகில் கைபோட்டு இறுக்கமாகத் தழுவி, தனது அதீத பாராட்டைச் சொல்கிற பரமசிவம்.

"மாடு, ஆடுபிடிக்க... கம்மல் மூக்குத்திவேணுமா?"

"அதெல்லாம் வேண்டாம். ரூவாயை பெரட்டிக்கிடலாம்"

பசு வந்து நின்றது. சினைப்பசு. ரெண்டு சிறுகுட்டிகளுடன் ஆடுவந்தது.

அந்த வருஷம் பங்குனி மாசம்.

"கொழை அறுத்துப் பழக்கம் இருக்கா?"

ராத்திரி ஒன்பதுமணி இருக்கும். மாடுகளுக்குக் கூளம் அள்ளிப் போட்டுவிட்டு, விடியற்காலம் ஆட்டுவதற்குப் பருத்தி விதையை நனையவைத்துவிட்டு... உடம்பைக் கைத்தண்ணீரால் அலசி, துண்டால் துடைத்துவிட்டு.. காமாட்சி பக்கத்தில் வந்தான்.

ஒருக்களித்துப் படுத்திருந்த அவள் பின்னால் படுத்து.. நெருக்கமாகி.. அவள் மேல் குறுக்காக காலைப்போட்டு கிறக்கத்துடன் செவி ரோமத்தில் சுவாசப்பட்டை படரவிட்ட தருணத்தில் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

"எனக்குத் தெரியாத விவசாய வேலையா?"

"கொழை அறுக்கப் போவமா ?"

"என்னத்துக்கு ? என்ன கொழை"

"ஆவாரங்கொழை, ஆதாளை, ஆத்திச்செடி, கொளுஞ்சிக் கொழை"

"என்னத்துக்கு ?"

"குப்பையிலே பத்துப்பதினைஞ்சு கட்டுவிரிச்சுவிட்டு, கண்மாய்க்கரம்பை மண்ணுஇருவது வண்டியடிச்சுட்டா... நல்ல குப்பையாகிப் போகும். அதோட... பசுஞ்சாணி மூத்திரமும் சேர்ந்துட்டா...குப்பை ..நல்லா செமிச்சுரும்"

"ம்"

"அப்படிப்பட்ட குப்பையை உரமா போட்டா... புஞ்சை மண்ணு நம்மை ஏறிட்டுப்பாக்கும். ஏறி வெளையும். கொழை அறுக்கப் போவமா ?"

"ம்"

அவனது மனச்சம்மதம் அந்த "ம்" மில் இருந்தது. காமாட்சிக்கு பூரிப்பாக இருந்தது. தனது யோசனையை மதித்து ஒத்துழைக்கிற துணை. உயிரில் கலக்கும் உறவாகக்கூடிய பண்பு.

உடம்பைத் திருப்பினாள். அவன் பக்கமாகத் திரும்பினாள். இரண்டு இளமை மனசும் காமவாசம் நுகர்ந்தன.

"நீ ... மதி சொல்லுற மந்திரியா ? ஆக்கி அவிச்சுப்போட்டு பெத்துப்போடுற பொஞ்சாதியா ?"

கரிய முகத்தில் மஞ்சள் திட்டு. கண்ணுக்குள் உயிரைச் சுண்டுகிற புன்னகை மின்னல். உதடுகளின் ஈர ஒளி. அவன்முதுகில் வலதுகையைப் போட்டு- இறுக்கமாக நெருக்கி-அவனது உதடுகளை இவள் உதடுகள் கவ்வி.... ஒரு அழுத்து அழுத்தி..விலகிவிட்டு கண்சிமிட்டினாள்.

"நா மந்திரியா- பெஞ்சாதியா ? நீங்க சொல்லுங்க"

அவனும் அவள் உதடுகளைக் கவ்விக்கொண்டே சொன்னான்.

"சொல்லுற நேரமா, இது?"

அந்த வருசம் தெக்காடு, வீர விளைச்சல் விளைந்தது. இருபத்தேழு பொதி மிளகாய் வத்தல்.

ஊரே பேச்சாகக் கிடந்தது.

"காமாட்சி வந்த நேரமப்பா. பரமசிவத்துக்கு யோகம் அடிக்குது"

களம் முழுவதும் இவனது மிளகாய்ப் பழம். மூட்டை மூட்டைகளாகப் பழம். விரித்துக்காயப் போட்டிருந்ததால்... களம் முழுக்க ரத்தம் பூசின மாதிரியிருந்தது.

அந்த வருஷம் தான் பத்து ஏக்கர் கரிசல் காட்டை கிரையம் முடித்தான்.

7

தெக்காடு கிணற்றுமேட்டில் நிற்கிற பரமசிவம். கமலை நேற்று சீர்கெட்டு ஆடியது. கமலை வண்டியை கமலையின் உச்சந்தலையில் போட்டு, வடம்போட்டு,கூனையை கிணற்றுக்குள் விட்டு, தண்ணீரைக் கோதியபிறகு மாட்டைப்பத்தினால்_ மாடு முக்கித்தக்கி முன்னேறும். வடத்தின் கழுத்தடியில் பரமசிவம்ஏறி உட்கார்ந்து, மாட்டைப் பத்தினால்_ கூனைத் தண்ணீரின் பாரம் குறையும்.

மாடு சுதாரிப்பாக கனம் குறைந்த மகிழ்வில் எட்டி நடைபோடும். மேலேறி வருகிற கூனைத் தண்ணீர். அடி வடத்தைத் தொட்டு மேலே தூக்கினால் கூனைவால் சரியாக வாய்க்காலில் தண்ணீரை "சொளோப்" பென்று பெருஞ்சத்தமாய் ஊற்றும்.

அதற்கு கமலை,ஆடாமல் அசையாமல் இருக்க வேண்டும். ஆடுகிறது. அசைகிறது. கிடுக், கிடுக்கென்று ஆடுகிறது.

வடத்தை இழுத்துப்போட்டுவிட்டு_ இறவையை நிறுத்திவிட்டு, மாடுகளை அவிழ்த்து தரிசுப்புல்லில் மேயவிட்டான்.

ஊரைப்பார்த்து ஒரே ஓட்டம்.வியர்வையும் வெயிலும் கருந்திரேகத்தில் மின்னியது. தச்சாசாரியைக் கூட்டி வந்தான்.

கொட்டாப்புளியும்,பெரிய உளி, சின்ன உளி என்று அவரது கைச்சாமான்களை சாக்கில் வைத்துச் சுருட்டிக்கொண்டு தோளில் வைத்துக்கொண்டு கூடவே வருகிற தச்சாசாரி.

வருவதற்கு ரொம்பக் கிராக்கி பண்ணினார், ஆசாரி

" இங்க பாரு_ கலப்பை செதுக்க வேண்டியிருக்கு. மூணுபேரு கலப்பை. இன்னிக்கே வேணும்னு உத்தரவு. அந்த வேலையே நாறிப்போகும்"

பரமசிவம் போகிறபோது சீனிக்கல்புழுதியைக் கட்டையில் போட்டு, உளியைத் தீட்டிக்கொண்டிருந்த ஆசாரி.

"சர்ர்ரட்_ சர்ர்ரட்_ சர்ர்ர்ர்ரட்_."

"ஆசாரி_ வாரும். புஞ்சைக்கு"

"என்ன பரமு... திடுதிப்னு புஞ்சைக்கு கூப்ட்டா..எப்படி ?"

"கமலை வம்பு பண்ணுது. இறவை பாதியிலே நிக்குது. கமலை "கிணுக் கிணுக்" னு ஆடுது_"

"சரி_அதுக்கு நா என்ன செய்ய ?"

"கமலை வம்பு பண்ணுச்சுன்னா..ஆசாரி கிட்டே வராம... வேறயாரு கிட்டே வர்றது ?"

"ஆசாரியாலே வரமுடியணும்லே ?"

"வரலேன்னா_ எறவை பாதியிலே நிக்குமே"

"எனக்கு வேலை கெடக்கு. இந்தா.. பாரு, கந்தசாமி நாயக்கரோட ஏர்க்கால், முச்சாமித் தேவரோட கலப்பை, வேலயா நாடாரோட கலப்பை.. போதாதுக்கு ராமசாமிகோனாரோட ஜன்னல்கதவு இம்புட்டு வேலைகளும் காத்துக்கிடக்கு.. இதை முடிக்கலேன்னா.... இவுககிட்டே, நா போய் வருசக் கூலி வாங்க முடியுமா ?"

உளியைத் தீட்டிக்கொண்டே பேசுகிற ஆசாரியை முறைத்தான். சண்டித்தனம் பண்ணுகிற நோக்கம் என்ன.. கிராக்கி பண்ணுவதற்கான "உன்மர்மம்" என்ன என்று யோசிக்கிற பரமசிவம்.

"வருசக்கூலி வாங்க முடியுமா" என்ற கேள்வியை அவர்நீட்டி முழக்கி, ஆலாபனையோடு சொன்னவிதம்.

அதுதான் மர்மமா ? "சோற்றுக்குள் இருக்கான், சொக்கப்பன்" என்று சொல்கிற சொலவடை மாதிரி... "ஒங்கூட வந்தா... எனக்கு

என்ன ஆதாயம்?" என்ற அர்த்தம் ஒளிந்திருக்கிறதா, அவரது கிராக்கிக்குள்.(பிகுபண்ணுதல்)

பரமசிவத்துக்கு அவரது மனச்சிக்கலின் நூல் பிடிபட்டது. நூல் நுனி கிடைத்துவிட்டால், சிக்கல் ஒரு பெரிய விஷயமா?

வீட்டுக்குள் தலையை எட்டிப் பார்த்தான் பரமசிவம். ஆசாரி மனைவி சுளகில் போட்டுச் சோளத்தைப் புடைத்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பரமு.. காட்லே நிக்க வேண்டிய பொழுதுலே இங்க வந்து நிக்கே? என்ன வெஷயம்?"

"புஞ்சையிலே மூணுசுரைக்காயும், நாலைஞ்சு பீர்க்கங்காயும் கெடக்குது. கொழம்புக்காகும். ஆசாரி வந்தாருன்னா.. குடுத்துவுடலாம்னு பாத்தா..அவரு வரமாட்டேன்னு சண்டித்தனம் பண்ணுறாரு"

"அது ஒரு கிருசை கெட்ட கிறுக்குமனுசன். அப்படித்தான் கூறுகெட்டுப் போய் கோணக்கால் சாத்தும். இந்தா.. நா வாரேன்"

அவள் வெளியே வந்தாள். வந்த வேகத்தில், ஒரு சூறாவளி தெரிந்தது. ஆசாரியை சுழற்றியடிக்கிற சூறாவளி.

"யோவ்.. கிறுக்கு மனுசா, "என்று ஓங்கிக்கத்தினாள்.

"ஏய்.. என்னாளா?அரட்டுதே..?"

"அறிவு இருக்கா இல்லியா? ரவைக்கு கொழம்பு ஊத்திச் சோறு திங்கணுமா..வழிச்சுநக்க ஒண்ணுமில்லாம குப்புறப் படுக்கணுமா?"

சண்டைக்காரி மாதிரி சத்தத்தை உயர்த்தினாள். ஆங்காரமும் ஆவேசமுமான பேயாட்டம்.

"என்ன-இந்த ஆட்டம் போடுதே? இப்ப என்ன செய்யணும்?"

" பரமு கூடப்போரும். கமலையைச் சரி பண்ணும். காய்கனி தருவான். வாங்கிட்டு வாரும். அதுதான்... ரவைக்கு கொழம்பு. வாய்க்கு ருசியா வக்கணையா வழிச்சுத்திங்கணும்னா..இப்பவே இவன் கூடப் போரும்"

"வெயில் சுள்ளுன்னு அடிக்குளா_"

"ராத்திரி காயணுமா ?" அவள் கேள்வி,சிலேடையில் ஒலிப்பதுபோல ஆசாரிக்குப்பட்டது.

"வெயில் பாராம பெறப்புட்டா_ ராத்திரி மணக்குமா ?"

உத்தரவாதம் எதிர்பார்க்கிற தொனியில் ஆசாரி.

"கொழம்பு வாசம் மணக்கும்யா, கூறு கெட்ட மனுசா"

ஆச்சி உத்தரவிட்டபின்புதான் அக்கணமே சாக்குப்பையில் கொட்டாப்புளியை உளிகளை... செதுக்கு கட்டைகளை எடுத்து வைத்துச் சுருட்டினார். செருப்பில்லாத காலுடன் தெருப்புழுதியில் இறங்கினார்.

அவன் காலிலும் செருப்பில்லை. மானாவாரிச் சம்சாரிகளுக்கு வெயில், நிலாவெளிச்சம் மாதிரி. உறைத்தாலும் ஒத்துக்கொள்ளும். சுளீர் என்று சுட்டாலும்..சுடுசோறாக மனசுக்குத் தோன்றும். வெயிலில் பாடுபட்டால் தான், நிழலில் உட்கார்ந்து கஞ்சிகுடிக்க முடியும் என்ற வாழ்வின் சூட்சுமம் மனசுக்கு அத்துப்படி.

பரமசிவம் வேகத்துக்கு ஆசாரி ஈடுகொடுக்க முடியவில்லை. குட்டோட்டமாக ஓடிவந்தார். "தஸ்ஸு, புஸ்ஸ்" ளென்று இளைத்தது மூச்சிரைப்பு.

"ஏய்ய்_ பரமு, மெல்லப் போப்பா, தொடுத்து வரமுடியலே"

"இந்த லட்சணத்துலே... ராத்திரி மணக்குமான்னு கேக்கிறே_அந்த மணம், இந்த லட்சணத்துலே தானிருக்குமா ?"

"அது வேற..அப்ப ஆளே வேற தினுசாயிரும். சாமியருள் எறங்குன மாதிரி_"

சின்ன ஊருணியைக் கடந்து, கிழக்காமல் ஒடுகிற ஓடைக்குள் விழுந்து எழுந்து, கரையேறி_பெரிய ஊருணியின் கரையோர புளிய மரநிழலில் இருவரும் "வேகு, வேகு" என்று நடந்தனர்.

ஊருணிக்கரையை விட்டு இறங்கினால், வண்டிப்பாதை. பைதாத்தடம்பதிகிற புழுதிப் பாதைகளுக்கு நடுவில் மாட்டுக்கால்

படாத இடம். பசும்புற்கள். அறுகம்புல். புற்கரடு. நெருஞ்சிப் பூக்களின் மஞ்சள் வெளிச்சம்.

"ஏய் பரமு.. ஒனக்கு வெஷயம் தெரியுமா ?"

"என்ன வெஷயம்"

ரகசியம் என்ற தொனியில் குரலை லெகுவாக தாழ்த்திய ஆசாரி. அவனும் அப்படியே மெதுவான குரலுக்கு இறங்கினான்.

"பாலையா நாயக்கரு புஞ்சை ஆறுகுறுக்கம். ஒரே சதுரம். வத்தாத தண்ணி. தேங்காய்ப்பால் போல தித்திப்பு."வைச்ச வெள்ளாம எதுவானாலும்,வந்து குமியும்,நெனைச்சதுக்கும் மேலே நூறுபங்கு."

"அதுக்கென்ன_ ?"

"வெலையாடுது.நீ வாங்கிப் போடலாம்லே ?"

"வக்குவேணும்லே ? கையிலே "பசை"யில்லாம, எதுவந்து ஒட்டும்"

"காமாட்சி ஒனக்கு ஒரு மகாலட்சுமியப்பா. ஒன்னை மாதிரியே ஒய்ஞ்சறியாத பாட்டாளி. பாடுபடறதுலே சொகம் பாக்குற சீதேவி."

முன்னால் நடந்த பரமசிவத்துக்குள் கூடுகட்டுகிற மௌனம். நெஞ்சுக்கூடுதாளாமல் ததும்பி வழிகிற பெருமிதம் மனசுக்குள் காமாட்சியின் சுவாச வாசம். கையால் அள்ளி அணைத்தால், சர்க்கரைப் பாகுவின் பக்குவக்குழைவோடு இழைகிற அந்த மனசின் வாசம்.

"அவா யோகத்துக்கு..ஒனக்கு ஏறுகால் தான். சுக்கிரதிசை உச்சத்துல நடக்கும். வந்தது பூராத்தையும் வாங்கிப் போடலாம். வழி தானா தெறக்கும்"

"எனக்கு அந்தப் புஞ்சை வேண்டாம்"

"என்னத்துக்கு"

"வேண்டவே வேண்டாம். அது வேண்டாம்"

"அதான் கேக்கேன்.. என்ன காரணம் ?"

"கரண்டு மோட்டாரு மாட்டுனகெணறுதானே ?"

"ஆமா. அதுக்கென்ன"

"கரண்டுலே ஓடுற தண்ணி "வெள்ளாமைக்கு வெளங்குமா ? வெதையை வெதைச்சுட்டு- வெண்ணியை பாய்ச்சுனா-வெள்ளாமை நிமிருமா ?"

"நீ ஒரு சரியான அரைக்கிறுக்குப்பய"

8

"முற்றத்தில் மொடாப் பானையை வைத்து, மூன்றுகுடம் தண்ணீர் ஊற்றினாள், காமாட்சி. அதில் ஒரு குடம், கொதி வெந்நீர்.ஆவி வந்தது. மேலாக உயர்ந்துநெளிகிற புகைக்கோடுகள்."

புஞ்சையின் உழவுப்புழுதியும் வியர்வை ஈரமும் ஈரக் குழைவான கறையாகப் படிந்திருந்த வேட்டியை உருவி, தாழ்வாரக் கூரையில் போட்டான். கோவணம் கட்டியிருந்தான். கட்டியிருக்கிற கோவணம் முழுவதும் ஈரமண் கரைசல்.

மேல் துண்டை உதறியடித்து, இடுப்பில் கட்டிக்கொண்டு கோவணத்தையும் உருவி கூரையில் போட்டான்.

காமாட்சி தகரக் குவளையுடன் வந்தாள்.

"மேலுக்கு தண்ணியை ஊத்தி விடட்டுமா ?"

"நா என்ன ..பச்சப்புள்ளையா ?"

"தண்ணி சுடுதா..? வெதுவெதுப்பா இருக்கா ?"

தொட்டுப் பார்க்கிற பரமசிவம். தலையைச் சம்மதமாக ஆட்டுகிறான்.

"தண்ணி..சரியாயிருக்கு"

தங்கவெயில் கண்ணுக்குக் குளிர்ச்சியாக மின்னுகிற அந்தி வெயில். அந்திம வெயில். மேற்கு மலையடிவாரத்தில் கனத்த கரிய மேகங்கள். மேக விளிம்புகள் முழுவதும் சூரிய ஒளித்தகதகப்பு.

தங்கச்சாந்து அள்ளிப் பூசின மாதிரியான மின்னல். சுற்றியுள்ள மேகங்கள் முழுவதும் மஞ்சள் நீருக்குள் முக்கியெடுத்த பஞ்சுப்பொதியாகக் கனிந்த தங்கம் போல.. குழைந்திருக்கின்றன. அந்த மேகத்து தேகத்து வண்ணமே மஞ்சள் வெயிலாக மண்ணில் விழுகிறது. மரங்கள், கட்டிடங்களின் நீளநீளமான நிழல்களே வெயிலைத்தின்றுவிழுங்குகின்றன. ஆயினும் அந்த நிழல்களே வெயிலின் அழகைக் கோடு கிழித்துக் காட்டுகின்றன."

பரமசிவம் நிற்கிற வீட்டுமுற்றத்தில் ஒரு வெயில் கீற்று விழுகிறது. மற்ற இடமெல்லாம் நிழல். மேகநிழல்.

தகரக்குவளையால் தண்ணீரை அள்ளிக்கொண்டே தள்ளிப்போகிறான். மேலுக்கு ஊற்றுகிறான். வந்து தண்ணீரை யள்ளி, இன்னொரு இடத்தில் நின்று ஊற்றுகிறான். வீட்டுமுற்றமெல்லாம் நடந்துகொண்டே நீரை அள்ளி அள்ளி ஊற்றுகிற பரமசிவம்.

தேகக் குளிப்பும் முற்றத்தெளிப்புமாக இரட்டைச்செயல்கள். ஆடுமேய்த்த மாதிரியும் ஆயிற்று. அண்ணனுக்குப் பொண்ணு பார்த்த மாதிரியும் ஆயிற்று" என்ற கதையாக, அவன் குளிப்பு.

"முதுகைத் தேய்க்கட்டா ?"

"என் கை நடுமுதுகு வரைக்கும் எட்டும். நானே எனக்குப் பாத்துக்கிடுதேன்.."

காமாட்சி அவனையே நிலைகுத்திப் பார்க்கிறாள். கருமின்னலாக ஈரரோமங்கள். இறுகலான கரும்பாறைத்திரட்சியாக திரேகச்சதை. மூட்டுப் பெருத்த கால் கை. பீமன் மாதிரி தேகக்கட்டு. எலும்பு தெரியாத தோள் பட்டைசதைமினுமினுப்பு மறைக்கிற கரிய ரோமக்கட்டு. உடுக்கின் இடுப்புபோல வளைந்து, உள் குழிந்து, விரிகிற திரேக அமைப்பு. உயரமும் கருப்பண்ண சாமிமாதிரி. அகலமும் கச்சிதம்.

சொல்லிஅடித்த வீச்சரிவாள் மாதிரியோர் அழகு.

காமாட்சி ஆசை பொங்கப் பார்க்கிறாள். தன் புருஷனாக வந்து வாய்த்த மகராசன்.அழகுக்கு அழகு. வலிமைக்கு வலிமை. பண்புக்குப் பண்பு.

அவளுக்குள் பீறிட்டுப்பொங்கி வழிகிற பெருமிதத்தும்மல்.

"நான் குடுத்துவைச்சவதான்.இப்புடி குணமும் மனமுமா மாப்புள்ளை, எந்தச் சிறுக்கிக்கு வாய்க்கும்? எனக்கு வாய்ச்சவ... எல்லாத்துலேயும் ராசாதான்"

பெண்கேட்டு வந்திருந்த அந்த நாள்.

"தெக்காடு முக்காக் குறுக்கம் தான், இருப்பு. கைக்குள்ளே இருக்குற உழைப்பு, இதுதான் என்னோட ஐவேசு. குடுக்கச் சம்மதம்னா..பொண்ணு குடுங்க"

"எங்ககிட்டே ஏகப்பட்ட காடுகரைக.ஏகப்பட்ட சொத்து. நாங்க கொஞ்சம் வசதியானவுக."

"அதை அறிஞ்சுதான் என்சொத்து என்னன்னு சொல்லுதேன். உங்க மகளும் என்னோட சேர்ந்து ஒழைச்சாள்னா... இதுக்கும் மேலே சம்பாதிச்சிருவோம்.."

ஒளிவு மறைவில்லாத வெள்ளைப்பேச்சு. உலகத்தையே ஜெயித்து விடலாம் என்கிற நம்பிக்கை வீச்சு. அப்பவே சொக்கிப் போனாள், வீட்டுக்குள்அலங்காரப்பேரழகாக அமர்ந்திருந்த காமாட்சி. சற்றே நகர்ந்து வந்து ஜன்னல் வழியாக நெருக்கமாகப் பார்த்தாள்.

அந்த உடல் கட்டு. எண்ணெய் மின்னலான ரோமம். விரிந்த தோள்பட்டை.உட்கார்ந்திருந்த கம்பீரம்.

"இந்த மகராசன் கூட சேர்ந்து வாழ்ற யோகத்தை சாமி தரட்டும்" என்று மனசுக்குள் கண்மூடி யோசிக்கிற காமாட்சி.

"வீட்டுல வேற மாதிரி யோசிச்சுட்டா? வேண்டாம்னு சொல்லிட்டா? இந்தச் சம்பந்தம் ஒத்து வராதுன்னு அத்துவுட்டுட்டா?"

காமாட்சிக்குள் பின்னிப் பிசைகிற திகிலும்,கவலையும், மனசுக்குள் அகப்பட்ட சாமிகளிடமெல்லாம் மண்டியிட்டாள்.

"ஊர்உலகத்துலே உள்ள தெய்வங்களே... என் நெனைப்பை நிறைவேத்தி வையுங்களேன்" மனசுக்குள் உச்சரித்து மருகித்தவித்த காமாட்சி:

அவன் காலடியில் தலைவைத்து படுத்துவிட்ட இவளது மனக்காதல்.

ஜன்னல் கதவிடுக்கில் தெரிகிற காமாட்சியின் கண்கள். கரியமுகமின்னல். கச்சிதமான உதட்டமைவின் ஈரக்குழைவு. கன்னக்கதுப்பு. பூவைத்த தலைமுடியின் அடர்த்தி.

சில நிமிஷங்களுக்கு முன்புதான்-

இங்கு வந்து.. முழுசாக நின்று.. எல்லாப் பெரியவர்களையும் கையெடுத்துக்கும்பிட்டுவணங்கிய பேரழகு. ஒவ்வொருத்தர் முன்பும் நின்று வணங்கிக் குனிகிற அழகு. முழங்கைச்சதையின் உருத்திரட்சி. வெயிலில் பட்டுத்தேறிய கருமை.கும்பிட்டிருக்கிற குவிந்த கைகள். உள்ளங்கையைப் பார்க்க ஆசைப்பட்டான். குவிந்திருக்கிற கைகளில் தெரிகிற உள்ளங்கை விளிம்புகள். கட்டைவிரல் பக்கத்து உள்ளங் கைச்சதை. சிவந்த கனிவில்லாமல் வெளுத்திருக்கிற நிறம். காய்ப்பேறிய கை என்பதை யூகிக்க வைக்கிறது.

அதுபோதும்-

காய்ப்பேறியிருந்ததால் உள்ளங்கை பேரழகு. உழைத்தால் மனிதன் பேரழகு. வெயில்பட்ட கரியகை பேரழகு.

வெயில்தான் எல்லா ஜீவன்களையும் உருவாக்கும். உருவான ஜீவன்களுக்கு உரமும் வெயில்தான். சூரியனே அனைத்து ஜீவராசிக்கும் உயிர் வெப்பம் தருகிறது. சூரியனைப் போன்றது உழைப்பு.

ஆதியிலும் ஆதியானது. அனைத்துக்கும் கர்த்தாவானது.

உழைப்பு தான் மனிதனைப்படைத்தது.மனிதனுக்குப் பேரழகு படைத்தது. உலகத்தின் செழிப்பையெல்லாம் படைத்தது. உலகத்தின்

அழகையும், ஆலயங்களின் உன்னதத்தையும் வேதங்களின் உயர்வையும் படைத்தது.

உழைப்பாளி,இவள் பெரிய பணக்காரவீட்டுக்காரி என்ற மமதையில் வீட்டு நிழல் செடியாகாதவள். காட்டுவெயிலில் பச்சயம் உண்டு வளர்ந்தவள். உழைப்பால் பொருளையும் அழகையும் படைத்தவள்.

வாழ்ந்தால்.. இவளுடன் வாழவேண்டும். செத்தால் கூட,, இவளுடன் வாழ்ந்துவிட்டுச்சாகணும். வாழ்ந்தாலும் இவளுடனேயே வாழணும்.

மனசுக்குள் சரணடைந்துவிட்ட பரமசிவம். காமாட்சி என்னை ஆள வாயேன்_ என்று துடிதுடிப்புடன் உயிர் அழைக்கிறது.

பெரியவர்களைப் பார்க்கிறான்.

"சொத்துப்பத்து பத்தலே... அதனாலே பொண்ணு இல்லே." என்று சொல்லிவிடுவார்களோ_?

அவனுக்குள் அவனைப் பின்னியெடுக்கிற கிலியும், திகிலும் .மனசுக்குள் அச்சவியர்வை. "திக், திக்" கென்று அடித்துக்கொள்கிற இருதயத்தின் கூவல்காடு இவன் காதுக்குக் கேட்கிறது.

"நெலத்துமேலே கடன்கிடன் இருக்கா?" ஒருபெரியவரின் கேள்வி.

"குடுக்குறவனாயிருக்குறவன் தான், சம்சாரி. கையேந்தி வாங்குறதுக்கு உலகத் தான், அவன் காலடியிலே சுத்திவரணும். கடன் வாங்க கையேந்துறவன் சம்சாரிக்குப் பெறந்த சுத்தமான சம்சாரியாயிருக்க மாட்டான்"

அந்த அரை இருட்டில் உட்கார்ந்து அவன் பேசிய பேச்சிலிருந்த உழைப்பு மனசின் ஒளி, எல்லாரையும் அசத்திவிட்டது.

"நம்ம காமாட்சிக்கு இவன் தான் சரிஜோடி" என்ற எண்ணம், அந்த வீடு முழுக்க ஓர் ஒளிப் பேரலையாக எழுந்தது_

குளித்துக்கொண்டே முற்றம் முழுவதையும் தெளித்துவிட்ட பரமசிவம். அவன் குளிக்கும் அழகையே பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிற காமாட்சி.

"தலைதொவட்ட துண்டு கொண்டாரட்டா ?"

"கொண்ணாந்து குடுத்துட்டு... சோத்தை வை"

"சோத்தை வைச்சா போதுமா ?கொழம்பு ஊத்த வேண்டாமா"

"ஒன்னையும் சேர்த்து ஊத்து"

9

நாலு அகப்பை கம்பஞ்சோறை சுடச்சுட வெங்கல வட்டிலில் போட்டாள். நாட்டுக்கம்பு. தூசி துப்பட்டை, ஒரு கொம்மை இல்லாமல் புடைத்து, குத்துரலில் போட்டு பருவட்டாகக் குத்தினாள். நாட்டுக்கம்பில் ஒட்டியிருக்கிற சொச்சமிச்ச கொம்மை இணுக்குகள் வெளியேறிவிடும். மறுபடியும் சுளகில் அள்ளிப்போட்டு, புடைத்து எடுப்பாள். சுத்தமாகப் புடைத்தபிறகு கம்பின் நிறமே மாறிவிடும். பரிசுத்தமான கம்பு. மறுபடியும் குத்துரலில் போட்டு, லேசாக தண்ணீர்விட்டு உலக்கைபோடுவாள். கைமாற்றி உலக்கை போடுவதில் காமாட்சி கெட்டிக்காரி. இடக்கையால் உயர்த்திக் கீழே விட்ட வேகத்தில் வலது கைபற்றும். உலக்கையைப் பற்றிய வேகத்தில் உயர்த்திக் கீழே "ணக்" கென்று இறக்குவாள். கம்புகள் குலுங்கும். குலுங்குகிற கம்பு உரலைவிட்டு வெளியே துள்ளாமலிருக்க.. வட்டமான உறைப்பெட்டியை வைத்திருப்பாள். அது குத்துரலுக்கு தொப்பி வைத்த மாதிரி இருக்கும்.

உலக்கை மேலும் கீழுமாக இறங்க இறங்க, நொறுங்க ஆரம்பிக்கும். சலங்கை சலங்கையாக மணிமணியாக உடைசலாகிற கம்பு, மெல்ல மாவு நொறுங்கலாக மாறும்.

ஓங்கி ஓங்கி உலக்கை போடவேண்டும். தோள்பட்டை ரெண்டும் கடுகடுக்கும். ஒரு காலைப் பின்வைத்து, மறுகாலை முன்வைத்து சற்றே குனிந்த நிலையில் கனத்த உலக்கையை உயர்த்தி உயர்த்தி..அழுத்தமாகத் தாழ்த்தவேண்டும்.

உயர்த்திய உலக்கையைத் தாழ்த்தி உரலில் போடுகிறபோதெல்லாம் "ஸ்ஸோய்... ஸ்ஸோய்..." என்று குனிந்து நிமிர்கிற அசைவுக்குரிய ரிதத்துடன் சத்தம் கொடுப்பாள்.

அதுவெறும் சத்தமல்ல. மூச்சிரைப்பும், நெஞ்சு மூச்சுத்திணறலும் நேராமலிருப்பதற்காக... வாய்வழியாக வெளிவிடுகிற பெருமூச்சுகள்.

குத்தக்குத்த... மாவு நொறுங்க நொறுங்க ... ஒரு சிரங்கை தண்ணீர்விட மாவு அடைஅடையாகக் குழுறும்.

நெறுநெறுப்பேயில்லாமல் மைமாதிரி மாவு மாறிவிடும். ஓங்கி ஓங்கி உலக்கையைக்கை மாற்றி கைமாற்றிப்போடப் போட வியர்வை ஊற்றும். செவியோர மயிர்க்கற்றையெல்லாம் வியர்வையில் "தொப்,தொப்" பென்று நனையும். ஜாக்கட்டெல்லாம் நீர்க்காடு. முழங்கை மடிப்புகளில் வியர்வைக்காடு.

அப்படிக்குத்தியெடுத்த கம்புமாவை ஏற்கனவே கொதித்துக் கிடக்கிற உலைப்பானையில் அள்ளிப்போட்டு உப்பையும், அளவுப்படிபோட்டு உலையை மூடினால்..

தளதளவென்று கொதிக்கிற சத்தம். நீரும் மாவும் சேர்ந்து பிசின்போல மாறும். சோறுவெந்து தணிகிற போது.. "டுப், டுப், டுப்"பென்று குமிழ்கள் தெரிந்து, வெடிக்கும்.

கம்மஞ்சோறு வாசம் மணக்கும். பானையிலிருந்து வருகிற ஆவியும் வாசமும் பசியை உருவாக்கும். அடிவயிறும், உள் மனசும் "கொண்டா, கொண்டா" என்று கூப்பாடுபோடும்.

வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு, அர்ணாக்கயிறை தூக்கி மேலேவிட்டான். துவட்டிய ஈரத்தலையில் நீர்ச்சிதறல்.

"கம்மஞ்சோறா... சோளச்சோறா ?"

என்று கேட்கிற பரமசிவம். சோளச் சோறு என்றால், சுமார் ரகம். கம்பை இடிப்பதைவிட சோளம் இடிப்பது சுலபம். சோளச்சோறு இற்ற உடம்புகளுக்கு வாயாலே வயித்தாலே போகவைத்துவிடும். கம்பஞ்சோறு என்றால் உசத்தி. உடம்புக்குக் குளிர்ச்சி. உடல் சூட்டைத் தணிக்கும்.

அதிலும்..குள்ளங்கம்பை விட, நாட்டுக்கம்பு உசத்தி. சோறும் வெள்ளை வெளேரென்று பாலாடைக்கட்டி மாதிரி இருக்கும்.

"கேட்டேன்லே... ?"

"கம்பஞ்சோறு தான்.அதிலும் நாட்டுக்கம்பு"

கம்பஞ்சோறு நாலு அகப்பையைப் போட்டு, வெங்கல வட்டிலை அவன்முன் வைத்தாள். கொதிசோறு. ஆவி தகதக வென்று வந்தது.

அந்தக் கொதிசோற்றில் விரல்களைப் பதித்து ஒரு குழியை உருவாக்குகிற காமாட்சி. சுரீரென்று சுடுபட்ட விரலை உதறி உதறியாற்றிக் கொண்டே.. உரியில் தொங்கிய சிறிய மண்சட்டியி லிருந்து ஏற்கனவே காய்ச்சி உறைய வைத்திருந்த கிடாய் கொழுப்பில் ஓர் உருண்டை திரட்டி, அந்தக் குழிக்குள் வைத்தாள். கொழுப்பு,சோற்றுக்கொதி நிலையில் உருகியது. குழிக்குள் நெய்யாகத் ததும்பியது.

ஓரம்சாரம் ஆறியிருந்த சோற்றை வழித்து, அந்த நெய்யில் தொட்டு வாயில் வைத்தான். கொழுப்பு வாசமும், வெண்குழைவான கம்பஞ்சோற்றின் மணமும் மனசுக்குள் ஒரு ருசியாக இறங்கியது.

பரமசிவம்,உள்நாக்கையும் மேலண்ணத்தையும் இணைத்து ருசிதாளாத உச்சபட்ச களிவெறியில் ஒரு "லொட்டை" போடுகிறான். கண்கள் சொருக.. ருசியை ரசிக்கிறான். உள்ளிருந்து காமாட்சிகுரல்.

"என்ன.. "லொட்டை" போடுகிற சத்தம் கேக்குது."

"காமாட்சி கைமணம். ஆளைத் தூக்குது - கொழுப்பு வாசமும் கம்பஞ்சோறும் கொண்டா கொண்டாங்குற அளவுக்கு ருசியாயிருக்கு"

"சோறு சூட்டுப்பதம் இருக்கா ?"

"இல்லே.. பதமான இதமான சூடாஇருக்கு"

உள்ளிருந்து குழம்புச்சட்டியும், கரண்டியுமாக வெளிவருகிற காமாட்சி..

பரமசிவத்துக்கு இன்னும் ஆச்சரியம். முகமலர்ச்சி.

"இன்னும் என்னது ?"

"வாளைக் கருவாட்டுக் கொழம்பு"

அதில் ரெண்டு கரண்டி ஊற்றினாள். நாலுதுண்டுகளை எடுத்துப் போட்டாள்.

"காமாட்சிக்கு கைநிறைய தங்கக் காப்பு செய்ஞ்சுபோடலாம். அம்புட்டு அசத்துது"

காமாட்சியை நிமிர்ந்து பார்த்தான். கரிய முகமெல்லாம் வியர்வை முத்துகளின் பளீர்சிரிப்பு.முகத்தில் பெருமிதப்பூரிப்பின் மலர்வு.

மனசுக்கு மன்னனான மணாளனுக்கு மனசுலயிக்கும்படி ஆக்கி அவிச்சுப்போட்டு, தங்கக் காப்பு பாராட்டு வாங்குகிற பெருமிதம். பட்ட பாடெல்லாம் பாய்சுகமாயிற்று. உலக்கைபோட்ட உடல்வலியும், அடுப்புவெக்கையில் வெந்த சூடும் புருஷனின் முகமலர்ச்சியில்_ ராத்திரியின் சுகவேதனை மாதிரியாகிவிட்டது.

"நீயும் உக்காந்து சாப்புடு_"

"கட்டுனவரு வட்டிலுக்கு எதிர்வட்டில் போடக்கூடாது"

"சைடுலே உக்காந்து சாப்புடு"

"சாப்புடுற புருசன் முகம் பாக்குறதும்..சோறு, கொழம்பு ருசியை சொல்லுற கண்ணைப்பாக்குறதும்_ புருசனுக்கு சோறு கொழம்போட சேர்த்து, முகச்சிரிப்பையும் பரிமாறுறதும் தான் ஒரு பொண்ணுக்கு திருப்தி."

கொழம்புச்சட்டியுடன் எதிரில் உட்கார்கிற காமாட்சி.

"மொகத்துக்கு மொகமா உக்காந்து பரிமாறுறவதான் பொஞ்சாதி"

குனிந்து உட்கார்ந்தாள். சம்மணக்கால் போடாமல், பெண்ணுக்கேயுரிய விதத்தில்.. இடதுகாலை சம்மணமிட்டு, வலது காலைப் பின்பக்கமாக மடித்துப்போட்டு அமர்கிறாள்.

"பாடுசோலி பாக்குறவன் "மர்மம்" ஆடைவெலகித் தான்" என்கிற கிராமத்துச் சொலவடை நிஜம் தான்.

வேலை மும்முரத்தில் ஒதுங்கி விலகிக் கிடந்த மாராப்பு. சூரிய ஒளி பார்த்தறியாத வலது பக்க மார்பகச்சதை. அதன் மாம்பழநிறத் தகதகப்பும் குழைவும்.

நிலைகுத்தி நிற்கிற பரமசிவப் பார்வை. அந்தப் பார்வையைப் பார்த்த அவள். அவள் உதட்டில் கண்டனத்தொனியும் குறும்பும் கலந்த கலவைச்சிரிப்பின் மொட்டு. குறுநகை.

"எம்புட்டு எரைபோட்டாலும் கள்ள ஆட்டுக்கு களவுப்புத்தி போகாது..."என்று நாணஒளித்தெறிப்பான சிரிப்போடு அவனது சிறுவாயில் ஒரு மென்குத்துபோட்டுவிட்டு ... ஆற அமர மெதுவாக மாராப்பை சரிப்படுத்தினாள்.

"களவுக்கடிக்கு ஒரு ருசி இருக்குல்லே ?"

என்கிற பரமசிவத்து முகத்தில் ஓர் அசட்டுக்களை.

"பச்சைத்தண்ணியிலே குளிச்சா தடுமன் புடிச்சாலும் புடிக்கும். சளிபிடிச்சாலும் புடிக்கும். வெண்ணியிலே குளிச்சா.. சூடுபுடிக்குமா ?" சுவாரஸ்யம் விலகாமல் தொடுத்துக் கேட்கிற காமாட்சி.

"அதெப்படி புடிக்கும் ? வெண்ணியிலே குளிச்சாலும், உடல் சூடுதணிஞ்சு..குளிர்ச்சிதான்.." அதே சுவாரஸ்ய ருசியில் அவன்.

"கொதிக்கக் கொதிக்கக் கம்பஞ்சோறு சாப்புட்டா.. உஷ்ணக்கடுப்பு வருமா ?"

"அதெப்படி வரும் ? நாட்டுக் கம்பஞ்சோறு தேகத்துக்கு குளிர்ச்சி தானே"

"பெறவு எப்படி... கரண்டுத்தண்ணி மட்டும் பயிரைக் கருக்கும் ?"

அப்புராணித் தோற்றத்தில் முகத்தை வைத்துக்கொண்டு இடதுகையைத் தரையில் விறைப்பாக ஊன்றி.. புருஷன் முகத்துக்கு நெருக்கமாக குரல் நிறுத்திக்கேட்ட அவள் தோரணை..

பரமசிவத்துக்குள் கரண்டு பாய்ந்த மாதிரியான அதிர்வலைகள். அந்நேரம்-

"ஏளா... காமாட்சி, இங்க வாயேன்"வெளியிலிருந்து ஓர் அழைப்புக்குரல். அந்தக்கிழவியின் குரலைக்கேட்டதும் விருட்டென எழுந்தோடுகிற காமாட்சியை விரட்டுகிற பரமசிவம் பார்வை.

10

தொழுவத்தில் இப்போது ரெண்டு பசுவும்,ஒரு கன்றும். பசுவில் ஒன்று சினை. ஒன்று, பால். ரெண்டே கால்படி விடியற்காலம். சாயங்காலத்துக்கு ஒன்றரைப்படிபால்.

அதற்குப் புல் பார்ப்பதும், கொழை ஒடிப்பதுவும் பெரும்பாடாக இருக்கிறது.

தெக்காடு புஞ்சைக்கு உழவு போடணும். மேக்காலை (முகக் கால்-நுகத்தடி) எடுத்து ஏர்க்காலில் கட்டி, பட்டறைவார்களை போட்டு, கடையாணிக்குச்சிகளை மாட்டி.. மேழியையும் கலப்பையையும் கொச்சைக் கயிறால் கட்டி_ தயார் பண்ணினான், பரமசிவம்.

இனி மாடுகளை மாட்ட வேண்டியதுதான்பாக்கி_

சுவர்மண்ணில் சுட்டுவிரலை வைத்து, ஒட்டியமண்ணில் பல்லைத் தேய்த்தான்.வாயைக் கொப்பளித்தான்.

"காமாட்சி_ கஞ்சியை ஊத்து"

"ஒழவுக்கா_ ? நானும் வரட்டா ?"

"என்னத்துக்கு ?"

"அங்க தரிசுலே புல்லுசெழிப்பா கெடக்கு,புல்லறுக்கணும்"

"வர்றதுன்னா.. மதியக்கஞ்சியும் கொண்ணாந்துரு"

சோளக்கஞ்சியும் பசுந்தயிரும் பிசையப் பிசைய நெறுநெறுக்கிறது. கையெல்லாம் வெண்ணெய்ப்பிசுக்கு.

கரைத்துக் கரைத்து... ஒரு கை அள்ளிக்குடித்தான்.அவித்து, காயப்போட்டு, உப்புபோட்டு எண்ணெய்ச்சட்டியில் வறுத்த சீனியவரைக்காய் கருஞ்சுருள் மின்னலாய்க் கிடக்கிறது. எடுத்துக் கடித்தால்..வறுப்புவாசமும்,உப்புருசியும் உள்ளுக்குள் ருசியாக பரவுகிறது. "கஞ்சியைக் கொண்டா, கஞ்சியைக் கொண்டா" என்று அழைக்கிறது.

சீனியவரைக்காய் வறுத்த பிறகு, தனிவாசம் வந்து விடும். எடுத்துக் கடித்தால் .."நறுக், நறுக்" கென்று ஒரு சத்தம் வரும். அது மனசுக்குப் பிடித்த சத்தம்.

கஞ்சியும் சீனியவரைக்காயும் ஒன்றையொன்று அழைத்துக் கொண்டு, உள்ளே போயிற்று. வயிறு நிறைந்த திருப்தியின் மனத்ததும்பல்.

ஏப்பத்துடன் கைகழுவி எந்திருக்கிற பரமசிவம்.

"காமாட்சி, நான் மாட்டைப் பத்துறேன். நீ பெறப்புடு" உள்நெஞ்சை உரசிக்கொண்டு மேலெழும்பி வருகிற எதிர்க் கழிப்பில் சோளக்கஞ்சியின் தயிர்வாசம்.

மாடுகளை முதுகில் தட்டினான்,பரமசிவம்.நூல்கயிறை அவிழ்த்தான். மாடுகள் வெளியே வந்தன. பின் முதுகில் தென்பட்ட இரண்டு உண்ணிகளைப் பிடித்து நசுக்கிக்கொண்டான்.

மேக்காலை எடுத்து மாடுகளின் கழுத்தில் மாட்டி, ஏர்க்காலுடன் இருக்கிற கலப்பைக்குத்தியை அதில் மாட்டினான். ஏர்க்காலின் நுனி, தரையில் கோடுபோட்டுக் கொண்டே மாடுகளுடன் சேர்ந்து நகர்கிறது. சாட்டைக்குச்சியுடன் பின்னால் நடக்கிற பரமசிவம்.

"காமாட்சி... நீ வெருசா புறப்புட்டு வா. நா மாட்டைப் பத்திட்டேன்."

"போங்க... பின்னாடியே வாரேன்"

புஞ்சைக்குள் இறங்கியவுடன் தரையில் இழுபட்டு வந்த ஏர்க்கால் நுனியை மேக்கால் மையத்தில் போட்டு, கொச்சைக் கயிற்றால் இழுத்து அழுத்திக் கட்டினான்.

புஞ்சை மண்ணில் நிற்கிற கலப்பையும், கொழுவும் மேழியைப் பிடித்து நேராக நிறுத்தி, இடதுகையால் அமுக்கிய நிலையில் மாடுகளைப் பத்தி... மாடுகள் நகர... நகர மண்ணைப் பிளந்து உழுதுதள்ளுகிற கொழு.

எற்கனவே இருந்த பாத்தி வரப்புகளை... வாய்க்கால் வரப்புகளை உழுது பிளக்கிற கலப்பை. இருபக்கமும் வழிந்து பொங்குகிற ஈரமண்.. உழுத இடங்களில் வெளிப்படுகிற புழு பூச்சிகளைப் பொறுக்கித்திங்க வந்து உட்கார்கிற மைனாக்கள். காகங்கள், கொக்குகள்.

ஈரமண் கறுப்பு மினுமினுப்பில் வெள்ளைக்கொக்குகள் வந்துநிற்பது.. வெண்பூமொட்டுகளாக நிற்கின்றன.

புஞ்சைக்கு வடக்கில் வெறும் தரிசு. தேங்காய்ப்புல்லும், அறுகம்புல்லும் செழித்துமோதிக்கிடந்தன. கமலைக்குழி சுற்றிலும் வேப்பமரங்கள் புளியமரங்கள். மரஇடைவெளிகளிலும் மஞ்சணத்திக் கொழைகள். கமலைக்குழி, ஒரு மறைப்பான வீடுபோல இருந்தது. நிழல், எல்லா நேரமும் நிழல்.

அங்கேதான்...சோளக்கஞ்சி இருக்கிற பெரிய வெங்கலத் தூக்குச்சட்டியைத் தொங்கவிட்டிருக்கிறாள் காமாட்சி. பிடித்து பத்திக்கொண்டு வந்திருந்த செவலை நிறத்துச் சினைப்பசுவை நீளக்கயிறில் கட்டி தரிசில் கட்டிப்போட்டிருந்தாள். காலாற சுற்றி நடந்து மேய்கிறது.

பண்ணரிவாளும் கையுமாகக் குனிந்து புல்லையறுத்தாள். அறுத்துப் போட்ட புல் குவிந்தது. காலடிச் சீலையைத் தூக்கி இடுப்பில் சொருகியிருந்தாள். முழங்காலுக்கு மேலான தொடைச் சதை தெரிகிறது.

மாடுகள் கழுத்துமணி குலுங்க தலையை ஆட்டிஆட்டி முன்னிழுத்துச் செல்ல. மேழியில் கைவைத்து அழுத்துகிற பரமசிவம். அவன் பார்வை அவ்வப்போது, பொழிக்கு வடக்கில் புல்அறுக்கிற

காமாட்சி மேல் பாய்கிறது. சிதறியோடுகிற நினைவு களையெல்லாம் ஓரிடத்தில் குவித்து, மின்சாரம் பரப்புகிற மனத்துடிதுடிப்பு.

கடைசித்தண்ணீர் பாய்ந்திருந்த நிலம். நிலம், மிருதுவாக இருக்கிறது. உழவுக்குப்பக்குவமாக இருக்கிறது.

மதியத்துக்குள் ரெண்டு முறுசல் உழுதுமுடித்துவிட்டான். வெயில், நிலாவெளிச்சம் போல அடிக்கிறது. மேகமில்லாத ஆகாயம், கழுவிப்போட்ட தாம்பாளமாகக் கிடக்கிறது. இலேசான காற்று. வியர்வைத் துளிகளை முத்தமிட்டுப் புல்லரிப்பை ஏற்படுத்துகிறது.

காமாட்சியும் அறுத்துப்போட்ட புல்லையெல்லாம் அள்ளிக் குவித்து பெருங்கட்டாகக் கட்டினாள்.

ஒடித்துவைத்திருந்த அகத்திக் கொழையும்,ஆமணக்கங் கொழையும் கடாப்பெட்டிக்குள் திணித்திருந்தாள். ஆடுகளுக்கு வேணுமே..

வேலை முடிந்தது. பரமசிவம் உழுதுபோட்ட இடத்தில்.. பொழியோரத்து அறுகம்புல்லை வேருடன் "பர்ருச், பர்ர்ருச்" சென்று பறித்தெறிந்தாள்.

"கஞ்சியை குடிச்சிருவமா.. ?"

"ம்"

"எப்ப.. எப்ப.." என்று ஆலாய்ப் பறக்கிற அவன் பட்டரை வாரை உருவிவிட்டு, மேக்காலை நட்டுவசத்துக்கு திருப்பி ஊன்றினான். மாடுகளை தரிசில் மேயவிட்டான்.

கமலைக் குழிக்குப் போய்விட்டான். முன்னுக்கும் பின்னுக்குமாய் மாடுகள் நடந்த புழுதி. போட்ட சாணமெல்லாம் காய்ந்து உலர்ந்து நொறுங்கிப் புழுதியோடு கலந்துவிட்டதால்.. மண்நிறம் மாறியிருந்தது. ஆயினும் குளிர்ச்சியாக இருந்தது. மரங்களின் நிழல் அடர்த்திவேறு.

காமாட்சி வந்தாள். கஞ்சி இருக்கிற தூக்குச்சட்டியை எடுக்கப் போனாள்.

"சித்தே இரு_"

திரும்பிப் பார்த்தாள். ஆடுகளுக்குள் அலைகிற காயடிக்காத கிடாயின் பார்வையைப்போல ஒரு வித்தியாசமான அசட்டுப்பார்வை.

"என்ன நோக்காடு?"

"நோக்காடு இல்லே_ நோக்கம்"

"என்ன நோக்கம்?"

"கஞ்சினைக் குடிக்கிறதுக்கு முந்தி_ ஒன்னைக் குடிக்கணும்"

"என்ன இது_ புதுசு? காட்டுவாசல்லே. கள்ளக்கழுதைக தான் காட்ல இப்புடி அலையும்." அவளது இறுகலான கண்டனக்குரல்.

"காட்டுக்கஞ்சிக்கு, தனி ருசி "கெஞ்சலாக மன்றாடுகிற மணாளன்.

சுற்றும் முற்றும் பார்க்கிற காமாட்சி. தூரத்தில் தான் காட்டுவாசல்களில் மனிதப்புள்ளிகள். சுற்றிலும் மரங்கள்.செடிகொடி களின் தழைமறைவு.

அதற்குள் பாய்ந்து அவளை அள்ளுகிற பரமசிவம்.கீழே புழுதியில் சாய்க்கிற வேகம். வெயிலில் உலர்ந்த திரேகச்சூடு. மோகவெறியைக் கொளுந்து விட்டெரிய வைக்கிற வியர்வைவாசம்.

அவளது முழங்காலை ஒட்டிய தொடைச்சதையில்தான் முதல் முத்தம் தந்தான். வாயால் கவ்வினான். அவனைக் கண்சிமிட்டி வெறிமூட்டியது, அந்தச் சதையின் வெயில் படாத மின்னல்தான்.

உழவில் முழுக்குறிவைக்காமல் அலைபாய்ந்த பரமசிவம், இந்த உழவில் முழுக்கவனமும் செலுத்தினான்.

அவளது வியர்வைக்கன்னம் _வியர்வைக்கழுத்து, வியர்வைக் கைகள்_ வியர்வை உப்புபடிந்த உதடுகள்_ பரம்பரைச் சம்சாரிகளின் உயிர்ச் சம்சாரித்தனம். வியர்வையை மோக மூட்டுகிற வாசமாக நினைக்கிற உழைப்பு மனசுகளின் உயிர்க்கலவை.ஆசைப்பட்ட உடம்பின் மூர்க்கவேட்கை.

விலக மனமில்லாமல் சர்க்கரைப்பாகில் கிடக்கிற எறும்பாக கிறுகிறுத்துக்கிடக்கிற பரமசிவத்தைப்பார்த்தாள். இவளது நெஞ்சுக்கூட்டில் முகம்புதைத்து வேரடித்திருக்கிற அவன், கிறங்கிப்போன போதையில் துவண்டு கிடக்கிறான்.

அவளது மேல் குறுக்காகக் கிடக்கிற அவனது கால். அவள் முதுகில் அவனது கால். அவள் முதுகில் பரவி அழுந்தி, அழுத்துகிற அவது வலதுகை.

அரை மறுப்பும் அரைச்சம்மதமுமாக இடம் கொடுத்த காமாட்சியோ— ஈரமண் உழவுக்காளான நிலம்போல— மயங்கிச்சரிந்து கனிந்துவிட்டாள்.

ஆனாலும் ..பெண்.மானமுள்ள மனுசி. சாதிமான் கன்று. காட்டுவாசல். யாரும் பார்த்தால் கேவலமே என்ற மனப்பதைப்பு.

சுதாரித்து-சர்க்கரைப்பாகு உணர்விலிருந்து மீண்டுவிட்டாள்.

"பாலையா நாயக்கர்புஞ்சையை வாங்கிவரலாமா ?"

"கரண்டு போட்ட கெணறு—"

"அதனாலேதான் வாங்கணும் ஆசைப்படுதேன்"

"தச்சாசாரி வந்து காதைக்கடிச்சாரா ?"

"ம்"

"ராணி உத்தரவு ராசா மீறமுடியுமா ?"

11

பரமசிவத்துக்குள் இனம் புரியாத குழப்பம். "இங்குட்டா, அங்குட்டா" என்று ஒரே ஊசலாட்டம். ரெண்டு மூன்று கவலைகள் அவனைத் தின்று கொண்டிருக்கின்றன.

ஆகாயம் பார்த்துக்கொண்டிருக்க உடற்சங்கமமும், உயிர்க்கலவையும் நிகழ்த்திய நிமிஷமயக்கத்தில்,காமாட்சி சொல்லுக்குத் தலையை யாட்டிவிட்டான். சர்க்ரைப்பாகில் விழுந்து கிடந்த சிற்றெறும்பாகக் கிறுகிறுத்து மனம் மயங்கிய பொழுதில் "ராணிசொல்லை ராசா தட்டமுடியுமா" என்று கித்தாய்ப்பாக வாயைவிட்டுத் தொலைத்துவிட்டான்.

கரண்டுத்தண்ணீரைநினைத்து ஒரேபயம்.

தொட்டாலே ஆளைச்சுட்டுக்கருக்குகிற கரண்டை வெயிலுக்கே வாடுற பயிர்பச்சையோட வேர்லே வுடுறதா? பாவமில்லையா? பச்சைப்புள்ளையை அடுப்புலே வைக்குறமாதிரி பாதகமில்லையா? என்று ஒரே கவலை. கவலையென்றால் சாதாரண கவலையில்லை. மனசையும் உறக்கத்தையும் வதைத்தெடுக்கிற கவலை.

சாயங்காலம் படப்பிலிருந்து கூளத்தை உருவி அள்ளிக்கொண்டுவந்து மாட்டுக்குப்போட்டான். வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்த அவன் முகத்தில் வருத்த நிழல். கண்ணெல்லாம் ரத்தரேகை ஓடியிருக்கின்றன.

"என்ன... ஒரே குழப்பத்துலே இருக்கீகளா ?"

ஆவி பறக்கிற கடுங்காப்பியை கொண்டு வந்து பக்கத்தில் வைத்தாள், காமாட்சி. வெல்லக்கட்டியும், தேயிலைத்தூளும் போட்டு கொதிக்க வைத்த டீத்தண்ணீர்.

"பயமாயிருக்குது ?"

"என்னத்துக்கு ?"

"பச்சைப்பயிரோட வேர்லே கொண்டு போய்... கரண்டுத்தண்ணியை வுடுறதான்னு ஒரே நடுக்கமாயிருக்கு"

"கரண்டை வுடலேல்லே ? தண்ணியைத்தானே வுடுறோம் ?"

"கரண்டு கொண்ணாந்து ஊத்துற தண்ணியும் கரண்டு மாதிரி தானே ?"

"நம்ம ஊர்லே அறுவதுபேருக்கு மேலே கரண்டுமோட்டாரு போட்டுருக்காக. அவுக வெள்ளாமை எடுக்கலியா ? அவுக புஞ்சைப்பயிருக வாடுதா, வாடாம வளருதா ?"

"வளருது"

"பெறகென்ன ?"

"எனக்கு மனசு கேக்கலே"

"நல்லா யோசிச்சுப்பாருங்க. உங்கதாத்தா கோமணம் கட்டியிருந்தாரு... உங்க அய்யா லங்கோடு கட்டியிருந்தாரு. நீங்க டவுசரு போடலியா ? மனசு கேட்டுக்கிடுச்சு இல்லே ? பொட்டு பொட்டா போட்ட சொங்குடிச்சீலை கட்டிக்கிட்டிருந்த நம்ம ஊருப்பொண்ணுக.. பூப்போட்ட வாயல் சீலை கட்டப்பழகிறலியா ?"

"பசினி (பதநீர்) நீச்சுத்தண்ணி, பானக்காரம் குடிச்சிக் கிட்டிருந்த நாம... இந்தா.. இந்தக் கடுங்காப்பியை குடிக்கப் பழகிட்டோம். இது நல்லதுக்கா ? பித்தம் தானே, முத்தும் ?"

"இப்ப இப்ப..நீங்களும் நல்லாத்தான் பேசுறீக..."

அப்போது, முற்றத்தில் வந்து நிற்கிற நிழல். நிமிர்ந்து பார்த்தனர்.பாலையா நாயக்கர்தான்.

ஒல்லியான கறுத்த ஆள். வாளைக் கருவாடு மாதிரி வளர்த்தி. கதர்வேட்டி, கதர்ச்சட்டை

"ஐயா, வாங்க.. ஐயா வாங்க.. வராதஆளு, தெய்வம் போல வந்து நிக்கீங்க. வாங்க ஐயா.. வந்து உக்காருங்க"

"என்ன.. காப்பி போடச் சொல்லட்டா? நீங்க நம்ம வூட்டுலே சாப்புடமாட்டீக.. ஏய் காமாட்சி, கடையிலே ஒருகலரு வாங்கிட்டு, ஓட்டமாய் ஓடிவா"

காமாட்சி விறுவிறுவென்று கடையை நோக்கிப் பறந்தாள்.

இவன் மரியாதையும் பவ்யமுமாக படியிலிருந்து இறங்கி, முற்றத்து மண்ணில் நின்றுகொண்டான். மேல்துண்டைத் தோளிலிருந்து எடுத்து, குடங்கையில் போட்டுக் கொண்டான்.

பதற்றமும் பரபரப்புமாய் கலர் பாட்டிலுடன் வந்த காமாட்சி, சாவி வாங்கி உடைத்து.. ரொம்பப் பணிவாகத் தலைதாழ்ந்து கைதாழ்த்தி..ஏந்துதலாக நீட்டினான். சாவிசெய்த திறப்பின் சத்தம். "டிஃப்" ஆரஞ்சுக்கலரில் வெள்ளைநுரை பொங்கிச் சீறித் ததும்புகிறது.

வாங்கிக் குடித்த பாலையா நாயக்கர், நாலு மடக்கு குடித்துவிட்டு அரைபாட்டில் கலரோடு திண்ணையில் வைத்தார்.

"பரமு... நம்ம நெலத்தை நாலைஞ்சு பேரு கேக்காக. நானும் வித்துட்டு தேனிப் பக்கம் போறேன்.. யாருக்கு குடுத்தாலும் எனக்கு ஒண்ணுதான்.கையிலே துட்டுதான்"

"ஆமய்யா-நீங்க சொல்றது சரிதான்"

மனசுக்குச் சம்பந்தமில்லாத பரவச ஒப்புதல் மகிழ்ச்சியில் போடுகிற "ஆமாம்".

"நிலத்தை குடுக்குறதுன்னு முடிவாகிப் போச்சு. மண்ணைப்புள்ளைபோல நெனைக்குறவன் கிட்டே குடுத்தோம்ன்னா- அது அந்த நெலத்துக்கு மரியாதை"

"ஆமாய்யா_"

"நீ மண்ணை மதிக்கிறவன். வேர்வை சிந்த தயங்காதவன். ஆம்பளைக்கும் மேலே பாடுபடுற பாட்டாளி. ஒம் பொஞ்சாதி "

"எல்லாம். உங்க ஆசீர்வாதந்தானய்யா"

"இப்படிப்பட்ட குடும்பத்துக்கு நிலத்தை குடுத்தோம்னா.. நெலமும் மகிமைப்படும். நெலத்தை வாங்குற குடும்பமும் வளப்படும்..என்ன சொல்லுதே ?"

"சொல்லுதுக்கு என்ன ஐயா இருக்கு ? தெய்வம் போல வந்து உக்காந்து சொல்லுதீக. வாசல்லே வந்து தெய்வம் பேசுகிற பேச்சுக்கு, மறுபேச்சு இருக்குமா அய்யா ? ரூவா எப்பவேணும்யா ?"

"எப்ப வேணும்னா ?"

"பசுமாடுகளை வெலை சொல்லி வித்துப்பணமாக்கணும். ஆடுகுட்டிகளுக்கு ஏவாரியை தேடணும். எப்படியும் ஏழெட்டு நாளாயிருக்குமேய்யா ?"

"பத்துநாள் டயம் தாரேன். அதுக்குள்ளே பணத்தைப்பொரட்டி தயார் பண்ணி வைங்க. கீழராஜகுலராமன் பத்திரப்பதிவாபீஸ்லே போய் கிரையம் பண்ணிக்கிருவோம்"

"ஆட்டும்யா.. அதுக்குள்ளே ஏற்பாடு பண்ணிரலாம்யா"

பாலையா நாயக்கர் எழுந்து போய்விட்டார். கரண்டுத் தண்ணீர் என்று மிரண்டு போயிருந்த பரமசிவத்துக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. நரம்பெல்லாம் மகிழ்ச்சி நதிப்பிரவாகம். உடம்பெல்லாம் மனத்துள்ளல்.

உயர்சாதியைச்சேர்ந்த பணக்காரர்ஒருவர் தன்வீடு தேடிவந்து தன்னையும்தன் மனைவியையும் பாராட்டிப் புகழ்ந்து விட்டுப் போகிற பரவசம். யாருக்குக் கிடைக்கும் இந்த யோகம் ?

அவரே வந்து... "என்னோட நெலத்தை கட்டியாளுகிறதகுதி ஒனக்குத்தான் இருக்கு" என்கிறாரென்றால், அது சாதாரண யோகமா ?

அவன் முகமெல்லாம் மலர்ச்சி. மனசெல்லாம் இன்பத் தத்தளிப்பு. காமாட்சி முகத்தைப் பார்த்தான். அவளுக்குள்ளும் பூரிப்பு. பொங்கித்ததும்புகிற பெருமிதம். உதட்டுப் புன்னகையும், கண்களின் மின்னலும் மனத்ததும்பலை வெளிப்படுத்துகின்றன.

மாடுகளை அவிழ்த்து, திண்ணையின் விளிம்பில் இருக்கிற குளுதாடியில் நிறுத்தினான். கழிவுத் தண்ணீரும், பழைய சோற்றுத் துண்டுகளும், நீச்சுத் தண்ணீருமாக நிறைந்திருந்தது. மோரைக் கலக்கிய மாதிரி பழுப்புநிறவெள்ளையாக இருந்தது.

மாடு வந்து வாய் வைத்து, அதற்குள் மாட்டின் சுவாசம் பட்டு எழுந்த சிற்றலைகள். வாய் வைத்துஉறிஞ்சத்தொடங்கியவுடன், காதுகளை ஆட்டியது. அதற்கு அர்த்தம், ரொம்ப ருசியாயிருக்கு.

"இன்னிக்கு என்ன சோலி?"

"நேத்துஉழுத நெலத்துக்கு குப்பையடிக்கணும்லே?"

"கூடைகளை மம்மட்டியை வண்டியிலே எடுத்துப்போடவா?"

"ஆமாம்.. நா காடிகளைக்கொண்டுபோய்க் கட்டுதேன்"

மாடுகளைத் தொழுவத்தில் கட்டிவிட்டு.. தொழுவத் திற்குள்ளேயே சுவரில் அறைந்திருந்த முழக்குச்சிகளில் படுத்திருந்த காடிகளை இறக்கினான்.

சின்னப்பருத்திச்செடி நெத்தி மட்டத்துக்கு வளரும். பருத்தி வெடித்து எடுத்து முடித்தபிறகு ஆள் உயரத்துக்கு ஆலவிழுதுகளைப் போல நீண்டு நெடுநெடு வென்று வளர்ந்திருக்கிற பருத்தி மார்களை பிடுங்கி.. அந்தப் பருத்தி மார்களாலேயே பின்னியதுதான் இந்தக் காடிகள். முழக்கம்புகளை வண்டியில் ஊன்றி, அதில் காடிகளை வைத்துக் கட்டினான்.

கூலியாள் வைத்துக்கொள்வதில்லை. பரமசிவமும், காமாட்சியும் தான் கூட்டுழைப்பு.

ஆண்களைப் போல... சீலை அடிநுனியை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டு, மம்மட்டியைப் பிடிப்பாள். கூடையைப்

பாதத்தோடுச் சாய்த்துக்கொண்டு மம்மட்டியை ஓங்கிப் போடுவாள். குப்பை, அல்வா மாதிரி இருக்கும்.மம்மட்டியில் கொத்தியள்ளப்பட்ட குப்பை கூடையில் விழும். நிறையும். தூக்கித் தலையில் வைத்து வண்டிக்குள் தூக்கி வீசுவாள். சந்தனக்குழைவான குப்பைமட்டும் வண்டிக்குள் விழும். கூடை கையிலிருக்கும்.

வண்டிப்பாரம் ஏறியவுடன்... காடிக்கும் மேலாகக் குப்பை, கோபுரம் குத்தியாக நிற்கும். வண்டியில் ஏறி உட்கார்ந்தவுடன் பரமசிவம் மாட்டைப் பத்துவான். புஞ்சைக்குள் வண்டிபோகும். பட்டரைவாரைக் கழற்றிவிட்டு வண்டியைத் தூக்கி வாரிவிடுவான். மேக்கால் உச்சிக்குப் போகிற போது, இவனும் கூடவே தொங்கிக் கொண்டே உயரேபோன பிறகு குதிப்பான்.

இவனது பாரத்தில், வண்டி நிதானமாக வாரும். எதுவும் உடையாது. வண்டியின்பின்பக்கம் தரையூன்ற.. மேக்கால் ஆகாய உச்சியில் நிற்கும். குப்பை பொதுபொதுவென்று சரியும்.

பாதிசரிந்த நிலையில் திகைக்கிற குப்பையை மம்மட்டியால் கொத்தி இழுப்பான். மம்மட்டியை போட்டு குப்பையைக் கீழ்நோக்கிச் சரிப்பான். காடிகளில் ஒட்டியிருக்கிற குப்பைத் தூசிகளைக் கையால் தட்டித்தட்டி உதிரவைப்பான்.

உச்சியில் நிற்கிற மேக்கால். அதில் தொங்குகிற பட்டரை வார்தான் எட்டும். அதைப்பற்றி இழுத்தால்... மேக்கால் கீழ்நோக்கி வரவர- வண்டியின் பின்பக்கம் மேலுயர்ந்து, தன்னிலைக்கு வரும்.

மூணாவது நடை. இருவருக்குள்ளும் மௌனமாக ஒருபோட்டி துவங்கிவிட்டது.

கூடையில் குப்பையை அள்ளி வைக்கிறவரை, பரமசிவம் காத்திருப்பதா ? பரமசிவம் தூக்க முடியாத அளவுக்கு இவள் அள்ளி வைத்த குப்பையைக்கூடை காத்திருப்பதா ?

மூனாவது நடையில் துவங்கியபோட்டி ஐந்தாவது நடையில் உச்சத்தில் நின்றது. காமாட்சியும் "பொதுக், பொதுக்"கென்று குப்பையைச் செதுக்கி வெட்டி கூடைகளை நிரப்ப.. அவனும் "விருட், விருட்" டென்று தூக்கி.. மூச்சு பிடித்து... நெஞ்சுக்குநேராக நிறுத்தி..

வண்டிவரை நடந்து.. உயிரெல்லாம் திரட்டி மார்புக்குக் கொண்டு வந்து... குப்பையை மட்டும் தூரப்போய் விழுகிற மாதிரி தூக்கிவீசணும்.

தூக்கி வீசித் திரும்பினால்... காமாட்சி ரெண்டு கூடைகளை அள்ளி நிரப்பிவிட்டுக் காத்திருப்பாள்.

"என்ன.. இம்புட்டுத்தானா இளவட்டவீரம்?"

ஆறாவது நடையில்... சுறுசுறுப்பு காட்டினான். போட்டியில் ஜெயித்தாக வேண்டுமென்று வேகம் காட்டினான். விசையைக் கூட்டினான். கூடையைத் தூக்கிய வேகத்தில் "தம்ம்ப்" பிடித்து வண்டிக்குள் எறிந்தான்.

பாதத்தில் சாய்த்திய கூடையில் மம்மட்டிக்குப்பையை போட்டுக் கொண்டிருக்கும் போதே, வெறும் கூடையை எறிந்து விட்டு காத்து நிற்கிற பரமசிவத்துக்கு "தஸ்ஸு.. புஸ்ஸு" வென்று மூச்சிரைத்தது.

"ஆம்பளை வீரம் போதுமா?" என்கிற கித்தாப்பு. பெருமிதத் ததும்பல்.

"போதுமான்னு பாப்போம்..அடுத்த நடையிலே"

அதேமாதிரி அடுத்த நடையில் அவள் ஜெயித்துவிட்டாள். கூடையைத் தூக்கி வண்டியில் தட்டிவிட்டுத் திரும்ப வரும்போது, அள்ளி முடித்துவிட்டு, மம்மட்டியை ஊன்றி நின்றாள். வியர்வைக்கசிவு முழுவதும் குப்பையின் கரும்குழைவு. மூச்சிரைப்போடு வெற்றிப் புன்னகை செய்கிற காமாட்சி.

"பொம்பளை வீரம் போதுமா?"

மறுநாளும் குப்பையடிப்பு நடந்தது. ஒரு பைசா செலவில்லாமல்,சுய உழைப்பில் நிகழ்ந்தேறிய வேலை.

கரிசல் காட்டில் மதிய வரைக்கும் வேலை நடந்தது. பொழியோரத்தில் மம்மட்டியால் கொத்திக் கொத்தி..மண்ணை உதறி, பரசி, அறுகுவேர்களைப் பொறுக்கினர். காய்ந்த அறுகுவேர்களை அள்ளி அள்ளித் தூரத்தில் தொலைவான இடத்தில் போட்டனர்.

"சாயங்காலம் குப்பையை நிரத்திருவோமா ?" என்பாள். காமாட்சி.

"நிரத்திரலாம். ஆனா, ஒனக்கு கம்பு குத்த வேண்டியிருக்குல்லே ?"

"குத்தணும்,சோறு கவுத்தணும். கொழம்பு வைக்கணும்.அடுப்பு வேலை கெடக்கத்தான் செய்யுது."

"பெறகென்ன செய்ய ?"

"போவோம் ரெண்டுபேரும்.ஒண்ணாச்சேர்ந்து குப்பைய நிரத்திட்டா..வெருசா வூட்டுக்கு வந்துரலாம்.

மதியத்துக்கும் மேலாகிவிட்டது. மதியவெயில் சரியத் துவங்கி விட்டது.

காமாட்சி புறப்பட்டுவிட்டாள்.

"எந்திங்க... போய்ட்டு வந்துருவோம்"

"இப்பவே வா ?"

"இப்பப் போனாத்தான்..வெள்ளனத்துலே வீடுவந்து சேரலாம்."

துரிதப்படுத்துகிற காமாட்சி. தரையில் துண்டு விரித்துப் படுத்திருக்கிற பரமசிவம் "சித்தப்பொறு". மனச்சோம்பலில் நெளிந்துநெளிந்து வளைகிறான்.

"பகல்தூக்கம் பாட்டாளிக்காகாது. எந்திச்சு மூஞ்சியை கழுவுங்க"

கொஞ்சநேரத்தில் ரெண்டுபேரும் புஞ்சையில் நின்றனர். நேற்று வண்டி வண்டியாகக் குவித்திருந்த சாணிக்குப்பைக் குவியல். சிறிய சிறிய குன்றுகள். வரிசைவரிசையான குப்பைக்குமி.

காமாட்சி தான் முதலில் மம்மட்டியை ஓங்கினாள். மம்மட்டியால் ஓங்கிக் கொத்தி இழுத்து எட்டுகிறவரை வீசிச்சிதற வேண்டும். அப்படியே ஒவ்வொரு மம்மட்டியையும் குவியல் குறைந்து

கொண்டேவரும். கொத்தி வீசிச் சிதறிய குப்பை, உழவுபோட்ட நிலம் முழுவதும் பரந்துகிடக்கும்.

பரமசிவமும் மம்மட்டிபோட்டுகுப்பையை இழுத்து எறிந்தான். வட்டச்சுற்றாக நாலாப்பக்கமும் பரசிச் சிதறுகின்றான்.

பாலையா நாயக்கர் நிலம் என்று கிரையம் முடிப்பது ?

நாயக்கர் நல்ல நாள் பார்த்து, முடிவு செய்த நாளில் புறப்பட்டனர். சாட்சிகளுக்கு ஆள்வேண்டும். எழுதித்தருகிற பாலையா நாயக்கரின் வாரிசுகள் வரவேண்டும்.

குப்பையடித்த வண்டியைச் சுத்தமாக்கினான். காடிகளைத் தட்டி உதறி, மறுபடியும் கட்டினான். வண்டிக்குள் வைக்கோலைப் பரப்பினான். வளர்த்தியான நாலுகம்புகளை விரித்துப் பரத்தி,கயிறு போட்டுக் கட்டினான்.

பாலையா நாயக்கர் தனது ஒற்றை மாட்டுக்கூட்டுவண்டியில் வந்துவிடுவதாகச் சொல்லிவிட்டார். மற்றவர்கள்அனைவரும் மாட்டுவண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டனர். மேலே தென்னங் கிடுகுகள் விரித்திருப்பதால், வண்டிமுழுக்க நிழல். மாட்டைப் பத்துகிற பரமசிவம் மட்டும் வெயிலில் காய்ந்தான்.

கீழராசகுலராமன் இங்கிருந்து ஏழுமைல்.வண்டிப்பாதை உருண்டது. மாடுகளின் கழுத்துமணியோசை,ஒருவெற்றிக்கீதமாக முழங்கியது. வண்டிக்குள் உட்கார்ந்திருந்த ஆட்களின் சந்தோஷப் பேச்சுகள். ஊராரின்புரணிகள், ஊர்மேய்கிற கிடாய்களின் கதைகள், சோரம் போகிற ஆடுகளின் கள்ளத்தனம் போன்றவற்றை யெல்லாம் சுவாரஸ்யமாக பேசிச்சிரித்துக் கொண்டிருந்தனர். ஒரே சிரிப்பாணி.

ஊர்ப்பாயாசத்தை ருசித்து ரசித்து குடிக்கின்றனர்.

"எப்பா... இன்னிக்கு எல்லாத்துக்கும் "கிளப்" கடைச் சாப்பாடப்பா.."

"நெல்லுச்சோறா ?"ஆச்சரியம் தாளாத கிராமத்தானின் அப்பாவிக்கேள்வி.

"நெல்லுச்சோறுதான்"

"அதுமட்டுமில்லே... சாம்பாரு...கூட்டு.. ரசம்.. மோரு எல்லாந்தான். ஊறுகாய் கூட அயத்துராமவைப்பாக"

"பாரப்பா_ நாம பாத்ததெல்லாம் கம்பஞ்சோறு, சோளச்சோறு குருதைவாலிச்சோறுதான். இங்க நெல்லுச்சோறாம்லே ?"

"இன்னிக்கு மட்டுமில்லே,நெதம்,கிளப் கடைகள்லே நெல்லுச் சோறுதான்"

நெல்லுச்சோறு என்றவுடன் எச்சில் ஊறுகிறது. சாப்பிடவேண்டும் என்கிற ஏக்கமும் பசியும் இப்பவே வந்துவிட்டது. நெல்லுச்சோறு மல்லிகை மொட்டுகளாகப் பூத்திருக்கும். அதன் வெள்ளை நிறப்பளீர் எல்லோரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டது.

"இம்புட்டுப்பேருக்கும் கிளப் கடைச்சோறு போடவா ? நம்ம செலவிலா ?"

மடியைத் தடவுகிற பரமசிவம் அடிவயிறு எரிகிறது. இருந்தும் என்னசெய்ய ? வழிமுறை என்று ஒன்றிருக்கிறதே...

கிரையம் எழுதி வாங்குறவன் தான் அந்த மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிற மாதிரி அனைவருக்கும் செலவு செய்ய வேண்டியமரபு. மீறமுடியாத மரபு.

"சரி .. பார்ப்போம்..இன்னிக்கு ஒருநாள் செலவுதானே ? பொறுத்துக்கிடுவோம்"

வண்டிப்பைதா தடதடத்துச் சுழன்றது. மாடுகளின் அடிவயிற்றில் காலைக் கொடுத்து, செல்ல உதை உதைத்து மாடுகளைப் பத்தினான்.

சுதாரித்துக்கொண்டு, சுண்டிப்பாய்கிற மாடுகள். வாலையாட்டிக் கொண்டு துள்ளித்துள்ளி நடக்கிற ஓடை

உள்ளிருந்து துரிதப்படுத்துகிற குரல்.

"வெருசா மாட்டைப்பத்து."

"ஏன், என்ன அவசரம் ?"

"எல்லாம் கிளப் கடைச்சோத்துக்குத்தான்"

"நெல்லுச்சோறுன்னா... சும்மாவா ?"

"சாம்பார் வாசம்.. கம்முன்னு மணக்கும்"

"ரசத்தைச் சொல்லு.. நாமளும் வீட்லே ரசம் வைச்சுச் சாப்பிடத்தான். செய்றோம். வெறும் புளித்தண்ணியிலே தாளிச்சக்கடுகு."

"கிளப் கடை ரசத்துக்கு தனிவாசம் வரும்ப்பா.. வெறும் ரசத்தையே வவுறுமுட்டக் குடிச்சிரலாம்னுதோணும்.அம்புட்டு வாசம்."

கிரையம் முடித்து.. பாலையா நாயக்கரிடமிருந்து கரண்டு மோட்டார் இருக்கிற பம்ப்ஷெட் ரூமின் சாவியை வாங்குகிறபோது, பரமசிவத்துக்குள் பரவசப்பதற்றம்.

ஒருதடவைக்கு மூன்று தடவை குலதெய்வத்தை நினைத்துக் கொண்டான்.

"புஞ்சைக்குள் முதல்காலடி காமாட்சியின் பாதமாகத்தான் இருக்கவேண்டும்" என்று நினைத்துக்கொள்கிற பரமசிவம்.

அவள்தான், இந்த நிலத்தை வாங்கும்படி தூண்டிக் கொண்டேயிருந்தவள். மகராசி. உழைப்பாளி. மதிசொல்லி வழி நடத்துகிற அம்மன்..

"நம்ம வீட்லே இருக்குற காமாட்சி,வெறும் பெருஞ்சாதியில்லே. குலசாமி"

இது ஒருவகையான - உன்னதமான காதல்.

12

முருகேசனுக்குக் காயமெல்லாம் ஆறிவிட்டது. மனக்காயம்தான் ஆறமாட்டேன் என்கிறது. ஆறுநாள் ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறான். ரொம்பப் பழக்கம்..ஏகப்பட்ட சிநேகிதம் என்று நினைத்திருந்த உரக்கடைக்காரர். ஒரு சம்பிரதாயத்துக்காகக் கூட எட்டிப்பார்க்கவில்லை.

"என்னப்பா... இப்படியாச்சாக்கும்? எச்சரிக்கையா வரக்கூடாது?" என்று பாவனையாகவாவது வருத்தப்படவில்லை. பொய்ச்சோகம் கூடப் பேசவில்லை.

என்ன மனுசர்?

அன்றைக்கு வந்ததே.. உரக்கடைக்காரரைப் பார்க்கத்தான். உரக்கடைக்காரர் தவிர எல்லாரும் வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

உரக்கடைக்காரரை "நண்பர்" என்று நினைத்தது நமது முட்டாள்தனம். அவர் வெறும் கடைக்காரர்தான்.

வாடிக்கையாளரிடம் காட்டுகிற வழக்கமான சிரிப்புதான். உங்களுக்காகத்தான் இந்த விலை என்று எல்லாரிடமும் சொல்கிற அதே பாவனைப் பழக்க வழக்கம் தான், இவனிடமும். இவன்தான் விசேஷமான நெருக்கம் என்று அசட்டுத்தனமாக நினைத்துக் கொண்டான்.

இல்லாத உறவு இருப்பதாக நினைத்துக்கொண்டான். ஆகாயம் போல, நீலப்படுதாவாகத் தோற்றம் காட்டுகிற வெற்றுவெளி. வெறுமையே ஒரு நிறமாகத் தெரிகிற பொய்மைமாதிரி.. உரக் கடைக்காரர் உறவு.

ஈஸ்வரி கேட்டாள்.

"அவருக்குத் தெரிஞ்சுருக்குமா ? நீங்க இப்படி விழுந்ததும், இங்க கிடப்பதுவும் தெரியாம இருந்துருந்தா ?"

"தெரியாம இருக்காது. தெரிஞ்சிருக்கு. நிச்சயமா தெரிஞ்சிருக்கு. அன்னைக்கு என்னைப் பாக்க வந்தானே நம்மூரு காளியப்பன்_"

"ஆமா"

"அவன் ஓரக்கடையிலே எண்டோசல்பான் வாங்கிட்டுத் தான் இங்க வந்துருக்கான். ஓரக்கடைக்காரர்கிட்டே நேராகச் சொல்லி யிருக்கான், "உங்களைப் பாக்க வந்த முருகேசன், ஆக்ஸிடெண்டாகி ஆஸ்பத்திரியிலே கெடக்கான். அவனைப் பாத்துட்டுப்போகணும்"னு

வீட்டு வாசலில் நிற்கிற எக்ஸ்எல்.வண்டி புத்தம்புதுசாக பாதுகாத்து வைத்திருந்தவண்டி. பொன்னோ பூவோ என்று பொத்திப் பொத்தி பத்திரப்படுத்தியிருந்த வண்டி. விபத்துக்குப் பிறகு ஒர்க்ஷாப்பிலிருந்து திரும்பிய வண்டி.களையிழந்து போனவண்டி. ஒளியிழந்து போன வண்டி. ஒன்றிரண்டு புதிதாக மாட்டிய சாமான்கள் பழையதை ரொம்பப் பழையதாக மங்கலானதாகக் காட்டியது.

வண்டியைப் பார்க்கப் பார்க்க மனசு கிடந்து கொதித்தது. ஒருவிடலைப் பயலின் சேட்டைக்கும் சீண்டலுக்கும் பலியாகி காட்டிய ஒருசிறிய வீராப்பு. எத்தனை பெரியசேதாரமாகிவிட்டது. நினைக்க நினைக்க மனசு கனக்கிறது.

சேதாரமல்ல. சேதாரங்கள். உடம்பு சேதாரம். வண்டிசேதாரம். பணச்சேதாரம். சேதாரங்களுக்கு மத்தியில் ஒரே ஒரு சின்ன ஆதாயம். அய்யா ப்ரமசிவம் வந்து பார்த்தது.

"மூஞ்சியிலே முழிக்காதே" என்றிருந்தவர்."செத்தாலும் எம்மூஞ்சியை இவன் வந்து பாத்துரக்கூடாது" என்று சீறியிருந்தவர். இவன் விளங்கமாட்டான்..." என்று கொதித்த மனசோடு சபித்திருந்தவர்.

ஆஸ்பத்திரிக்கே வந்து முகம் பார்த்தார். கண்கலங்கினார். என்னடா என்று விசாரிக்காவிட்டாலும், எப்படியிருக்கு என்று பேசாவிட்டாலும். தன்னைத்தேடி வந்தாரே. அதுவே ஒருபெரிய ஆதாயம் தான்.

"ஈஸ்வரி, கொஞ்சம் தண்ணி கொண்டா"

செம்புநிறைய தண்ணீர் தந்தாள். வாங்கிக் குடித்தான். இன்னும் சாப்புடவேண்டிய மாத்திரைக இருக்கா ?"

"இல்லே.எல்லாம் முடிஞ்சது"

"வலிக்குதா"

"இடதுகால்லே நிமிர்ந்து நடக்குறப்ப லேசா வலிக்குது. மற்றபடி ஆயாசம் தான். சோர்ந்துவருது"

"ஹார்லிக்ஸ் ஏதாச்சும் கலக்கித்தரட்டா ?"

"வேண்டாம். புஞ்சைக் காட்டுப்பக்கம் தலையைக் காட்டி ஒம்பதுநாளாச்சு"

பருத்தி போட்டிருந்த புஞ்சையில் உழுது போடணும். கம்புபோடணும். மக்காச் சோளம் போட்டிருந்த இடத்தில் சூரியகாந்தி போடணும்.அதுக்கும் உழவு போடணும்.

டக்கர்காரர்கள் ஏகக் கிராக்கி பண்ணுகிறார்கள். இப்ப பெறகு என்று இழுத்தடிக்கிறார்கள்.

புஞ்சையை நினைத்துப் பார்த்தான். மக்காச் சோளப் பயிரெல்லாம் ஒடிந்தும், சாய்ந்தும் முறிந்தும் கிடக்கும். கதிரறுத்துவிட்டு வந்தபிறகு, போகவேயில்லை.காய்ந்த சோளத்தட்டையைக் காலி பண்ணுவதே ஒரு பெரிய வேலை.

மக்காச்சோளம் அரைக்கிற டக்கர் மெஷின் வந்தது. நல்லதாகப் போயிற்று. உள்ளூரிலேயே செல்வக்குமார் வீட்டில் டக்கர் மெஷின் இருக்கிறது. கொண்டு வந்து நிறுத்தி... மோட்டாரை ஒட்டுவார்கள். ஊரேகிடந்து அலறும். காய்ந்த சோளக் கதிர்களை பெரிய கூடைகளில் அள்ளி அள்ளி.. மெஷின் மேல் இருக்கிற சதுரமான மரக்காலில் கொட்டுவார்கள். மெஷின் ஊரே அதிர்ந்து நடுங்குகிற இரைச்சல் போடும். மேலே கொட்டப்பட்ட சோளக் கதிர்கள் அரைபட்டு... குலுங்கி, கலங்கி, தனிச்சோளமாக ஒரு வழியிலும், சக்கைத் தூசிகள் ஒருவழியிலுமாக வழிந்து வரும். சோளத்துக்கு ஒரு சாக்கை ஏந்துவார்கள்.

முருகேசன் அரைக்கைச்சட்டையும் வெள்ளை வேட்டியுமாக நின்று பார்த்துக்கொண்டிருக்கிறான். கண்காணித்துக் கொண்டிருந்தான். கவனமாக சோளத்தைச் சாக்கு ஏந்திப் பிடிக்கிறவனுக்கு எண்பதுரூபாய் சம்பளம். பெரிய பெரிய கூடைகளில் கதிர்களை அள்ளிப் போடுகிற பெண்களுக்கு அறுபது ரூபாய் சம்பளம். மெஷின் வாடகை தனி. மணிக்கு இம்புட்டு என்று ஒருதொகை.

சோளம் வாங்குகிற வியாபாரி சுஷிகிவண்டியில் களத்துக்கே வந்துவிட்டார்.

"வெலையைச் சொல்லுங்க.. அண்ணாச்சி" என்று துரிதப் படுத்தினார். கொஞ்சநேரம் வாக்குவாதம். முருகேசன் ஒருவிலை சொல்ல.. வியாபாரி பஞ்சப்பாட்டுபாட....

"அருணாசலபுரத்துலே வாங்குனலோடுலே பன்னெண்டாயிரம் நட்டம். வலையபட்டி சரக்குலோடு ஏத்துனதுலே ஆறாயிரம் நட்டம்"

"பொறு.. பொறு.. புளுகதுக்கும் அளவுல்லே? நட்டம் நட்டம்குறீயே..அப்புறம் என்னத்துக்கு சோளம் வாங்குறதுக்கு பறக்கே?"

"உங்கசோளத்துலேயாச்சும் ரெண்டு சில்லறை பாத்துரலாம்னு தான்"

ஏகப்பட்ட சத்தம். வாக்குவாதம். தரகன்வேற குறுக்கிட்டு கூவல்காடுபோட.. நூறுரூபாய்த்தாளை முருகேசன் கைக்குள் திணிக்க மல்லுக்கட்டுகிற வியாபாரி.

"அந்த வெலைக்கு சம்மதிக்கவே முடியாது" என்று திமிறி மறுக்கிற முருகேசன். தள்ளுமுல்லு. தகராறுமாதிரி ஒரே சத்தக்காடு.

ரொம்ப நேரமாயிற்று. ஒருவிலை முடிவாக.

அந்தக்கணமே எடை சாக்குக்கட்டு வந்து உருண்டது. மூன்று அகத்திக்குச்சிகளைக் கோபுரம் மாதிரி நிறுத்தி.. உச்சியில் கட்டி, அதிலேயே தராசுவிட்டத்தை தொங்கவிட்டு..

எடைபோட்டு முடித்து.. அங்கேயே ரொக்கமாகப் பணம்.

மெஷின்காரர் சாக்குபிடித்தவனிடம் கிசுகிசுத்தார்.

"மக்காச்சோளம் மார்க்கட்லே ஏறுகால் போலிருக்கு"

"அதான் ... எடை, பணம் எல்லாம் நிமிஷத்துலே நடக்குது. கோழியை ஈரச்சாக்கைப் போட்டு அமுக்குகிறமாதிரி கொள்ளை யடிக்காக_"

"ஏவாரி இப்படி கொள்ளையடிக்குறதாலே தான்.. முன்னேற்றத்துலே இருக்காக?"

"சம்சாரி ஏமாந்து ஏமாந்து போறதாலேதான்சரிஞ்சுக்கிட்டே போறான்"

மக்காச்சோளம் விற்றுவந்த பணம். கூட்டுறவு சொஸைட்டியில் அடகுகிடக்கிற நகைக்கடனை அடைத்து மீட்கலாமா? திருவேங்கடம் பேங்க் கடனை அடைக்கலாமா?

எந்தக் கடனை அடைக்கலாம் என்ற யோசனைக்குழப்பம்

வீடு வந்து சேர்ந்தான், முருகேகன்.

வந்து நாற்காலியில் உட்கார்ந்தான். சமையல்கட்டிலிருந்து எட்டிப்பார்த்தாள், ஈஸ்வரி.

"என்ன.. களத்துலே சோளிக நடக்குதா? ஆளுகள் வேலை பாத்துக்கிட்டிருக்கிறப்ப.. நீங்க இங்க வந்துட்டா.. எப்படி? அங்க வேலை பாக்குறவுக.. நிமிர்த்திர மாட்டாக?"

"வேலை முடிஞ்சு..எடையும் முடிஞ்சு...மடிக்குப் பணமும் வந்தாச்சு"

"அப்படியா...? " ஆச்சரியத்தில் முகம் மலர்கிற ஈஸ்வரி.திறந்த வாய்மூடாத ஆச்சரிய நிலை. விரிந்த கண்மூடாத வியப்புநிலை.

"ஏதாச்சும் கடனை அடைக்கலாம். என்ன கடனை அடைக்கலாம்னு ஒரே யோசனையாயிருக்கு"

"ஏகப்பட்ட பிக்கல் பிடுங்கல் கிடக்கு. இதுலே எதை அடைக்க? எதை நிப்பாட்ட?"

"ஆனா.. எல்லாக் கடன்காரங்களும் வந்து மொய்ப்பாக. "வுடாதே,வுடாதே" ன்னு விரட்டி நச்சரிப்பாக..."

"கோடையிலே உழவு போடணும்.உரம் வாங்கிப் போடணும். வெதைவித்து வாங்கணும். அதுக்கும் துட்டு வேணும்லே?"

சம்சாரிப்பொழைப்பே, இப்படியாகிப் போச்சு.எல்லா வாசலும் அடைபட்டுப்போக... இருட்டு நெருக்கடியிலே மாட்டிக்கிட்டு மூச்சுத்திணறுறமாதிரி இருக்கு.."

இவர்கள் மருகி மருகி யோசித்தார்கள். பலதையும் நினைத்தார்கள். எந்தக் கடனை அடைக்கலாம் என்ன மாதிரி பதில் சொல்லலாம் என்று இவர்கள் மருகி மருகி கவலைப்பட்டு நொந்து நூலாக.இவர்களது யோசனைக்கே பிடிபடாத ஒருவிஷயம் செலவாக வந்து, சகலத்தையும் விழுங்கித் தீர்த்தது.

அதுதான் மருத்துவமனைச் செலவு.

இனி.. கோடை வேளாண்மைக்கு என்ன செய்ய? எப்படிச் செய்ய? கவலை கனக்கும் நெஞ்சிலிருந்து பீறிடுகிற பெருமூச்சுகள்.

13

ஒருகாலத்தில் பாலையா நாயக்கர் புஞ்சை என்றழைக்கப்பட்டது. அப்புறம் பரமுபுஞ்சை என்று எல்லோராலும் உச்சரிக்கப்பட்டது. இப்போது முருகேசன் கையில். ஆனால், முருகேசன் புஞ்சை என்று யாரும் சொல்வதில்லை.

இன்னும் அது, பரமுபுஞ்சையாகவே பேசப்படுகிறது.

"களை வெட்ட வா ? எங்க ?"

"பரமுபுஞ்சைக்கு"

"முளகாய்ப்பழம் பொறக்கபோறோம்-ஆறுபேரு"

எந்தக்காட்டுக்கு ?

"பரமுபுஞ்சைக்கு"

புஞ்சைக்குள் நுழைகிறான் முருகேசன்.இடது காலை லேசாக கெந்தி கெந்தி நடக்கிறான், பொழியில் நடந்தான். பொழிமுழுக்க அறுகம்புல் தாறுமாறாக வளர்ந்து கிடந்தது. பம்ப் ஷெட் ரூம்பக்கம் போனான். பக்கத்தில் ஒரு வாகைமரம். வாகை மரத்தைப் பிடித்துக் கொண்டு- கிணற்றை எட்டிப்பார்த்தான். கோடைக் காலமானாலும், மேல்படி வரைக்கும் தண்ணீர்கிடந்தது. கிணற்றின் உட்சுவருக்குள் மஞ்சணத்திச்செடி வளர்ந்திருந்தது. செடியின் கிளையில் ஒரு கரட்டாண்டி (ஓணான்) நின்றுகொண்டு, தலையைத் தலையை ஆட்டுகிறது.

வாகைமரத்தில் இடதுகையை ஊன்றிக்கொண்டு நிமிர்ந்து, வட்டப்பார்வை பார்த்தான். ஆறுஏக்கர் புஞ்சையும் பரந்து கிடந்தது. எல்லாமே.. கால வெள்ளாமை முடிந்து, வெறுமையாக நிற்கிறது. கோடை வெள்ளாமைக்கான உழவுக்குக் காத்துக்கிடக்கிற நிலம்.

காய்ந்த பருத்திக்குச்சிகளும், பருத்திக்கூடுகளுமாய் கிடந்தன. மக்காச் சோளத்தட்டைகள் காய்ந்துபோய்... வெளிர்த்தங்கநிறத்தில் ஒடிந்தும் சாய்ந்தும் கிடக்கின்றன.

எல்லாவற்றையும் காலிபண்ணி, நிலத்தைச்சுத்தப்படுத்தவே ரொம்பச் செலவாகும் என்ற மலைப்பில் முருகேசன்.உழவுக்கு வேறுசெலவு. பாத்திகட்டுக்கு செலவு.டி.ஏ.பி.உரஉப்பு மூடைகள் வாங்கிப் போடுவதில் செலவு. காத்துக் கிடக்கிற செலவுகளை..கனத்துக் கிடக்கிற கடன்சுமைகளை நினைக்க நினைக்க மலைப்பாக இருக்கிறது.

உள்ளுக்குள் கலங்குகிற முருகேசன். தோற்று வருகிறோமோ என்ற உள் நடுக்கம்.

அய்யா பரமசிவத்தை நினைத்துப் பார்க்கிறான். வயது முதிர்ந்தாலும், உடம்பு தளராத அய்யா. கறுப்புத்திரேகத்துடன் இன்றைக்கும் மேழியைப் பிடித்து அழுத்தி.. உழுது, நிலத்தை மிருதுவாக்குகிற அய்யா. தெக்காடு ஒரு புஞ்சையை மட்டும் வைத்துக்கொண்டு..பாடுபடுகிற அய்யா.அவரது வைராக்கியம். அயராத உழைப்பு.

இவனோ ?

இவனுள்ளிருந்து வெளிப்படுகிற பெருமூச்சுகளில் மனக்கவலைகளின் பாரம் கண்ணில் நீர்கோர்க்கிறது. தனிமைதந்த சுதந்திரத்தில் பாவனையற்று அழமுடிகிறது. அடக்காமல், மறைக்காமல் விசும்பமுடிகிறது.

சிலநிமிடங்கள் கோடை வெயிலின் உக்கிரத்தை வெறிக்கிறான். காட்டுச் சீமைக் கருவேல மரங்களில் கானல் அலைகள் மிதப்பதைக் காண்கிறான். தூரத்தில் மேய்கிற ஆடுகள். பசுமாடுகள். அதுகள் பின்னால் திரிகிற சிறுவர்கள், சிறுமிகள்.

காடுகளில் உழுகிற டிராக்டர்கள். இன்னும் விளைந்து நிற்கிற அறுபடாத.. மக்காச்சோளப்புஞ்சைகள்.

வீட்டுக்கு வந்தான். வண்டிப்பாதைப் புழுதி சுடுகிறது.

வீட்டில் ஈஸ்வரி தவித்துப் போயிருந்தாள். துடிப்பும் பதைப்புமாகக் கேட்டாள்.

"எங்க போயிருந்தீக ?"

அவள் குரலின் பதற்றம். பயப்பரபரப்பு.

"ஏன் ? புஞ்சைக்குத்தான்..."

"சொல்லிட்டுப் போகக்கூடாது ?"

"ஏன் ?"

"நா பதறிப்போய்ட்டேன்.தவியாய்த் தவிச்சுட்டேன்"

"என்னத்துக்கு ?"

"உடம்புக்குச் சுகமில்லாத ஆளு. கால்லே வேற வலிக்குது. கெந்தி கெந்தி நடக்கீக. இந்த நிலைமையிலே உள்ள நீங்க_காணோம்னா தவிக்க மாட்டோமா ?"

"நா எங்க போயிருவேன் ? எனக்கு என்ன ஆயிரும் ? என்னத்துக்கு இப்புடி கற்பனை பண்றே ஈஸ்வரி ?"

அதற்குள் அழுகை பீறிடுகிற அவள். நெளிந்து கோணுகிற உதடுகள்.பொங்கித் ததும்பி வழிகிற கண்ணீர்க்கோடுகள்.

"போன எடத்துலே எங்காச்சும் கண்ணைக் கட்டிக்கிட்டு வந்துட்டா ? இளமதியத்துக்கு வண்டியிலே மோதி முள் புதருக்குள்ளே வுழுந்த ஆளு, சாயங்காலம் வரைக்கும் கெறங்கி, நாதியத்துப் போய் கெடந்தீகளே... நெனைச்சா, இப்பவும் மனசுகிடந்து பகீர் பகீரென்குது"

ஈஸ்வரியின் கண்ணீரை விரல்நீட்டித் துடைத்தான். குலுங்கியதிர்கிற தோள்பட்டையில் கைவைத்து_ ஆறுதல் படுத்தும் வகையில் மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். ஈஸ்வரியின் விசும்பல் சத்தம். விம்மித் தணிகிறநெஞ்சு.

"என்னத்துக்கு அழுகிற ஈஸ்வரி அதான் வந்துட்டேன்ல?

தோள்பட்டையின் மீது வருடுகிறான். தடவியழுத்துகிறான். அழுத்திய நிலையில் அருகில் இழுக்கிறான். தன்னோடு அவளை ஆதரவாக அணைத்துக் கொள்கிறான். தன்னோடு ஒட்டி உரசி நிற்கிற ஈஸ்வரியின் தேகநடுக்கத்தில் மனப்பயம் உணரமுடிகிறது.

"சரி_ சரி... வா. வந்து சோறு வை. சாப்புடுவோம்"

வேலையில்இறங்கினால் மனச் சோகம் சிதறும். குவிந்து மையம் கொண்டிருந்த கவலை நினைவுகள் கல்லெறிபட்ட தேன்கூடாகக் கலையும். சிதறும். நாலாப் பக்கமும் திசைநழுவும். மனப்பாரம் திசைமாறும்.

அவளாகவே கண்ணீரைத் துடைத்துக்கொண்ட வேகம். முந்திச் சேலையால் முழுமுகத்தையும் அழுத்தமாகத் துடைத்துக் கொள்கிற துரிதம். சிரிக்கமுயல்கிற செயற்கையான யத்தனிப்பு.

"சோறு வைக்கட்டா_?"

சந்தோஷமாக முயல்கிற முயற்சி. உணர்வுகளைக் கடத்திவிட்டு, புதிய உணர்வுகளைப் போர்த்துகிற ஈடுபாடு.

"நா_ காலை கையை கழுவிவிட்டு வாரேன்.."

அரைக்கைச்சட்டையைக் கழற்றி அவள் கையில் கொடுத்துவிட்டு ஒருதுண்டை மட்டும் எடுத்துக்கொண்டு குளியல் அறைக்குள் போனான்.

ஏறக்குறைய குளித்தான். வேட்டியை அவிழ்த்துவிட்டு, துண்டைக் கட்டிக்கொண்டு தண்ணீரை அள்ளி உடம்பில் ஊற்றினான். வெயில்பட்ட தேகச்சூடு, கதகதப்பான உணர்வோடு வெளியேறுகிறதை உணர்ந்தான். சோப்பு போட்டுக் குளித்தான். துவட்டி விட்டு, அதே வேட்டியைக் கட்டிக்கொண்டு.. வாசல்படியில் கிடந்த காலடிச் சாக்கில் ஈரக்கால் மண்ணைத் தட்டி உதறிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

குளிப்பில் உடம்பும் மனசும் கழுவப்பட்டிருந்தன. தேகச் சூட்டையும், வியர்வைக் கசகசப்பையும் தண்ணீர் கழுவி

விட்டிருந்தது. மனக்கவலையையும் சோர்வையும் கூடக் கழுவித் துடைத்திருந்தது.

முகத்தில் உற்சாகத்தின் துள்ளல். கண்ணில் ஒரு களிமின்னல். ஈரத்தில் நனைத்த திரேகக்குளிர்ச்சி தருகிற மனச்சந்தோஷம்.

மடக்கிப் போட்ட பாயை விரித்திருந்தாள் ஈஸ்வரி. அதில் போய் உட்கார்ந்தான். வட்டிலில் சோறு மட்டுமே ஆவிபறந்து கொண்டிருந்தது. பொன்னியரிசி. பக்கத்தில்,சாம்பார், ரசம், தயிர் வெண்டைக்காய் பொரியல் தனித்தனிப்பாத்திரத்தில் வட்டிலைச் சுற்றிக் கும்மியடித்தன. அதற்குத் தனித்தனிகரண்டிகள்.

முருசேகன் சாம்பாரை அளவாக ஊற்றினான். பிசைந்து சாப்பிட்டான். ஈஸ்வரி முகத்தைக்கழுவி அழுந்தத் துடைத்திருந்தாள். அழுகையையும் கவலையையும் சேர்த்தே துடைத்திருக்கிறாள். முகம், பளிச்சென்று இருந்தது.

ரசத்துடன் சாம்பாரும் சற்றே கலந்து பிசைகிறான்.

ஈஸ்வரி குறித்த பெருமிதம் எப்போதும் உண்டு. ரசனையுடன் ஏறிட்டுப் பார்த்தான். இனிமையான புன்சிரிப்பு, உதடுகளில் பூத்திருக்கிறது. அழகான ஒளி.

முருகேசனுக்கும் ஈஸ்வரிக்கும் கல்யாணம் முடிந்து நாலு வருஷமாகிவிட்டது. ஈஸ்வரியின் நிறம்,அழகு, குறித்து கிராமமே வியந்து பேசியது.

"ஈஸ்வரி... பரமசிவம் வீட்டுக்கு வரவேண்டியவளா? கவர்மெண்டு உத்தியோகம் பாக்குறவன் வீட்டுக்குப்போற தகுதியுள்ளவள். படிச்சவா. ரொம்ப லட்சணமானவள். செகப்புன்னா அப்படியொரு செகப்பு"

முருகேசன் எட்டாப்பு பெயில். அத்துடன் மம்மட்டி பிடித்தவன். விவசாயத்துக்குத்தான் லாயக்கு என்று அவனே அவனுக்கு முத்திரை குத்திக் கொண்டான். அவனது ஆழ்மனசில் அந்த நினைவு அழுத்தமாகப் பதிந்துவிட்டது.

அதனால் தான் எட்டாப்பு பெயில் என்று தகவல் அறிந்த கணத்தில், ஒரு சிறிது கூட அலட்டிக் கொள்ளவில்லை. அது தானே நிகழ்ந்திருக்க முடியும் என்று மிகுந்த இயல்பாக ஏற்றுக் கொண்டான். தெக்காடு கிணற்றில் கமலை இறைத்துக்கொண்டிருந்த பரமசிவம்.மாடுகளின் மூக்கணாங்கயிறைப் பின்னுக்கு இழுத்து வருகிற நிதானம். பின்னுக்கு வரவர.. உருளை வண்டியில் படிந்திருக்கிற ஈரத்தில் நனைந்த கொச்சக்கயிறு கிணற்றுக்குள் இறங்க இறங்க- நீரில்லாத வெறும்கூனை நீர்நோக்கி இறங்குகிறது. நீரைத் தொட்டுவிட்ட கூனை. கொச்சக்கயிறு துவள்கிறது. மாடுகளை "ட்ர்ர்ர், ள்ட்ட்ர்ர்ர்ர்" ரென்று வாயால் குரல் கொடுத்து நிறுத்தி- அடிக்கயிற்றை இடதுகையால் தூக்கி உயர்த்த- கூனை வால் முழுவதும் நீர்நிரம்பியவுடன் மாடுகளை"ஆய்ய்க்... ஹாய்ய்க்" கென்று சுண்டிப்பத்த நீர்நிறைந்த கூனையும் வாலும் நீர்நிரம்பிய புடைப்புடன் மேல்வருகிறது. கமலைக்கு கூனை வந்தவுடள் அடிக்கயிறை ஓர் அமுக்கு அமுக்க.. கூனை, வால் தண்ணீர் முழுவதும் வாய்க்காலில் துப்புகிறது. சொளோரென்று... சளப்பென்று.. பெரும்சத்தம். நீர் முழுவதும் வாய்க்கால் வழியாக ஊர்கிறது. இப்படியே முன்னுக்கும் பின்னுக்குமாக மாடுகள் போய்வர கமலை இறைக்கிற பரமசிவம். வாய்க்காலில் வருகிற தண்ணீரை .. புஞ்சை வாய்க்காலில் நின்றுகொண்டு ஒவ்வொரு பாத்தி வரப்புகளாகக் கொத்தி நீர் பாய்ச்சுகிற முருகேசன். அப்போதுதான் அந்தச் செய்தி.

"எட்டாப்பில் நீ பெயில்"

"போனா போவட்டும். மம்மட்டிதான் எனக்குக் கைத்துணை"

அப்படிப்பட்ட முருகேசனுக்கு பன்னிரண்டாம் வகுப்பு பாஸான படித்த பெண் ஈஸ்வரி கிடைத்தாள்.

கிராமத்துநிழல் படியாத பழக்கவழக்கம். நகர வாசனை, முகச்சுபாவத்தில் நளினம், அழகு, செயல்களில் ஒரு நுட்பம், வீட்டைப் பெருக்குகிற அழகு எல்லாவற்றிலும் நகரப்பழக்க வழக்கத்தின் நாசூக்கு.

நல்லசிவப்பு.சிற்றுடம்பு. புதுமைப்பெண் ரேவதி மாதிரியான இளமைத் தோற்றம். அழகுக்கோலம்.

கிராமத்துச் சாயலே இல்லாத படித்த பேரழகி ஈஸ்வரி.

"இவனுக்கு இப்படிப்பட்ட பொண்ணா? முருகேசன் அதிருஷ்டக்காரன் தான்...

"இல்லே.. ஈஸ்வரி தான் துரதிருஷ்டம் பிடிச்சவள். இவன் கிட்டே வந்து மாட்டிக்கொண்டாள்"

ஊரில் இப்படித்தான் பேசினார்கள்.

சாப்பிட்டு முடித்தான்.முருகேசன். துடைப்பதற்கு ஒரு துண்டை எடுத்து நீட்டினாள்.

"நீயும் சாப்புட்டுட்டு உள்ளே வந்துரு"

"ம்"

"சாம்பாரும் வெண்டைக்காய் பொரியலும் ரொம்ப ருசியாயிருந்துச்சு. நிஜமாகவே சூப்பராயிருந்துச்சு."

அந்தப்பாராட்டுச் சொற்கள் அவளது வியர்வைக்குக் கிடைத்த மகுடம். அடுப்பங்கரைப்புகை வட்டத்துக்குள் தீக்காந்தலுக்குள்.. தகித்து வெந்தபிறகு கிடைத்த கிரீடம்.

வந்து கட்டிலில் உட்கார்ந்தவளை மெதுவாக அணைத்தான். மெல்லச் சாய்த்தான். அவனது வசீகரப்புன்னகை.

"உங்க ஒடம்பு இன்னும் கொஞ்சம் சீராகட்டும்" அரைமனப் புன்னகை. ஜாக்கட் ஊக்கைக் கழற்றினான்.

மெல்லப்படர்ந்தான். அவள் இதழ்வெடித்து மலர்ந்தாள். படர்ந்து ஆக்கிரமித்து... இயங்குகிறபோது...

ஏதோ தடை ஏதோ ஒரு சுருக்கிடுகிற வலி.

தோல்வியில் துவண்டு அவமானப்பட்ட மனசோடு பாதியில் ஒதுங்குகிற முருகேசன்.

14

வீட்டுமுற்றத்தில் அக்னிமூலையில் தண்ணீர்த்தொட்டி, குடங்களில் தண்ணீர். பெரியசிமிண்ட்தொட்டி, பதினாலு குடம் தண்ணீர் கேட்கும்.

காமாட்சி ஓடிஓடித் தண்ணீர் சுமந்தாள். விடியற்காலம் தண்ணீர் பிடிக்க வேண்டியிருக்கிறது. அடுப்பங்கரை வேலைபார்க்க விடாத இடைஞ்சல். ஆனால் தண்ணீர் வீட்டுப்புழக்கத்திற்கு வேண்டும்.

தொட்டிக்கு இன்னும் நாலுகுடம் செல்லும். அப்புறம் வீட்டுக்குள் நாலுகுடம் இறக்க வேண்டும்.

தொட்டியில் குடத்தைச் சாய்த்தாள். இடுப்புப்பகுதிபூராவும் தொப், தொப்பென்று நனைந்து விட்டது. காலோடு ஒட்டுகிற ஈரச்சீலை. காலைவீசி நடக்க முடியாமல், ஈரச்சேலை "தடக், தடக்" கென்று தடுக்கிறது. காலை உதறி நடந்துதான்போக வேண்டும்.

குழாயில் போய்க் காத்துநின்றாள். இன்னும் ரெண்டுபேர் குழாயில் நீர் பிடித்துக்கொண்டிருக்கின்றனர். அதுவரைக்கும் நிற்கவேண்டும்.

சும்மாயிருப்பது கிராமத்து இயல்பல்ல. முகம் கொடுத்துப் பேசுவார்கள். உறவைப்பேணுவதற்கும், தொடர்பைக் காப்பதற்கும் பேச்சு ஓர் ஆயுதம். குளித்துவிட்டு ஈரத்துணியோடு எதிரில் வருகிற "ஆளிடம் குளிக்கப் போயிருந்தீங்களா?" என்று கேட்பது கிராமத்துப்பழக்கம்.

"எந்தக்கிணத்துலே?" அடுத்தவிசாரிப்பு.

"மோட்டார் ஒடுச்சா?" அதுவும் அறிந்த விடியம்தான்.

ஆயினும் கேட்பது பழக்கம். ஈரத்துணியோடு வருவது குளித்ததைக்காட்டுகிறது. மோட்டார் ஓடாமல் குளித்திருக்க முடியாது. இந்தத் திசையில் பம்ப் ஷெட் மோட்டாரில் குளிக்கிற வசதி ஒரே ஒரு கிணற்றில் தான். அது பழநிச்சாமி கிணறுதான்.

இதெல்லாம் தெரிந்ததுதானே என்பதால், எதிரில் குளித்துவருகிறவரிடம் ஒன்றும் கேட்காமல் ஒதுங்கிப் போனால் குளித்துவிட்டு வருகிறவர் கட்டாயமாகக் கோபித்துக் கொள்வார்.

"நேருக்கு நேரா பாத்துட்டு.. ஒண்ணும் கேக்காம ஒதுங்கிப் போயிட்டானப்பா" என்று வருத்தப்படுவார். அவனுக்கு நம்ம மேலே ஏதோ கோபம் போலிருக்கு" என்று நினைப்பார். இப்ப இப்ப...அவனுக்கு துட்டு ஏறிருச்சுல்லே, மப்பும் திமிரும் சேர்ந்து ஏறிருச்சு"என்று ஆத்திரப்படுவார்.

அவர்களிடையே இருந்த உறவில் ஒருவிரிசல் விழுந்து விடும். மனமாச்சரியம் வந்துவிடும். பரஸ்பரம் முறைப்பான விறைப்பான உணர்வுடன் உறவுக்குள் சிக்கல் நிகழ்ந்துவிடும்.

காமாட்சிநின்று கொண்டிருக்கிறாள். குழாய்த் தண்ணீர் ஒரு சீரான சீற்றல் சத்தமாக விழுகிறது. நிறைந்து கொண்டிருக்கிற குடத்துக்காரி பழநியம்மாள்.

"என்ன ஆச்சி.. இன்னும் தண்ணி எடுத்து முடியலியா?"என்று காமாட்சியும் விசாரிக்கிறாள்.

"இன்னும் நாலைஞ்சுகுடம் எடுக்கணும். வீட்டுப்பாட்டுக்கு தண்ணீர் வேண்டியிருக்குல்லே?"

"வயசான காலத்துலே நீங்க தண்ணி சுமந்து சங்கடப்படுதீக... உள்ளூர்லே தானே, ரெண்டு மருமக்கமார்க இருக்காக. அவுகளை எடுக்கச் சொல்லலாம்லே?

"எடுக்கணும்லே? அவுக அவுக சோலிகளே அவுகஅவுக தோள்நிறைய குமிஞ்சுகெடக்கு. இதுலே நம்ம சோலிகளை நாமதான் பாக்கணும்."

கேட்டவளுக்கு முகம் இருண்டுவிட்டது. பொதுவாக, இப்படிக் கேள்வி கேட்டால்... மருமகள்களை மானாங்காணியாக திட்டிக் குமிப்பார்கள்.அதை ஒன்றுக்குப்பத்தாக மருமகள்களிடம் கொண்டு போய் ஊதலாம். மாமியார் - மருமகள் சண்டைகள் தெருப்பூராவும் தூள் பறக்கும். ஊரே கூடி ரசிக்கும்.

ஆனால், காமாட்சியின் பதில், முகத்திலடிக்கிற மாதிரி யிருக்கிறது. சண்டை மூட்டி விட சரக்கு தரவில்லை. கேட்டவள் முகத்தை ஏறிட்டுப்பார்க்கிற காமாட்சி. காமாட்சியின் பார்வையின் உக்கிரம். நிலைத்த நங்கூரப் பார்வை.

"இப்புடியா.... அலையுதீக? யார் வீட்டுக் கூரையிலே தீயை மூட்டலாம்னு வாயைக் கிளறுறீகளா?" என்று கேட்காமல் கேட்கிற காமாட்சியின் கண்டனப்பார்வை.

குடத்தில் தண்ணீரைப் பிடித்தாள். தூக்கி இடுப்பில் வைத்தாள். "தக் தக்" கென்று நடந்தாள்.குடம் இடுப்பில் பாரமாக இருப்பதால் வலது பக்கமாக உடம்பையும், இடுப்புப் பாரமாக இருப்பதால் வலது பக்கமாக உடம்பு சாய்ந்தநிலையில் நடக்கிற காமாட்சி. சாய்ந்த உடம்பையும் இடுப்புப் பாரத்தையும் சமனப்படுத்துவதற்காக வலது கையை ஏந்தி நீட்டி நடக்கிறாள்.

தண்ணீரை எடுத்து முடித்தாள், காமாட்சி. சட்டி பானைகளை எடுத்து வெளிப்பானைப்பக்கம் பேரட்டிருந்தாள். சாம்பலை அள்ளிக் கொண்டுவந்து பக்கத்தில் போட்டு, குனிந்து உட்கார்ந்தாள்.

சட்டி பானைகளை சாம்பல் போட்டு தேய்த்து... அலசியெடுக்க வேண்டும். காலைமடக்கி உட்கார்ந்தாள். இடது முழங்கால் கடுமையாக வலிக்கிறது. மடக்கி உட்கார்கிறபோதும் மடக்கி முழங்காலை நிமிர்த்தி எழுகிறபோதும்..முழங்காலில் ஆணி குத்துகிற மாதிரி ஒருவலி. குத்திச்சுண்டியிழுக்கிற மாதிரி ஒருவலி. தாள முடியாத வலி. முதுமையை உணர்த்துகிறது.

"நமக்கும் வயசாயிருச்சு. கெழடான ஒடம்பு,அதோட கொணத்தைக்காட்டுது" என்று முதுமையைப் பற்றிய ஒரு முணுமுணுப்புடன் பாத்திரங்களை அலசி முடித்தாள்.

விரலுக்கு இரண்டாக கவ்விக்கொண்டு எல்லாப் பாத்திரங்களுடன் வீட்டுக்குள் வருகிற காமாட்சி.

அடுப்பை மூட்டினாள். பருத்திமாரை எடுத்து உள்ளே திணித்தாள். அரிசியை நீரில்போட்டு அலசிக்கழுவி யெடுத்து கொதித்துக் கொண்டிருந்த உலைப்பானைக்குள் தட்டினாள். ரசம் வைத்தாள். துவையல் அரைத்துவிட்டாள்.

போனவருஷம் வரைக்கும் இந்த வீட்டில் மட்டும் குத்துரலில் கம்போ சோளமோ இடிக்கிற சத்தம் வந்து கொண்டிருந்தது. உலக்கை போடுகிற சத்தம். அநேகமாக – இந்த ஊரிலேயே உலக்கையும் உரலும் உள்ள ஒரே வீடு பரமசிவம் வீடுதான்.

சோளச் சோற்றுருண்டை மூன்றை எடுத்து, வெங்கலக் கும்பாவில் வைத்தாள். தயிரையும் பக்கத்தில் வைத்தாள்.உரித்த வெங்காயமும், வறுத்த கத்தரிக்காய் வத்தலும் எடுத்து வைத்தாள்.

பரமசிவம் தார்ப்பாய்ச்சியிருந்த வேட்டியை ஒழுங்கு படுத்தினார். பின்பக்கச் சொருகலை உருவிவிட்டு- கணுக்கால் வரை வேட்டியைத் தொங்கவிட்டார்.

கும்பா முன்னால் உட்கார்ந்தார். வயதானாலும் தாட்டியம் குறையவில்லை.குத்துக்கால் வைத்து உட்கார்ந்தார். அதுதான் அவர் பழக்கம். சம்மணக்கால் போடுவதேயில்லை. கல்யாணப் பந்திகளிலும் குத்துக்கால் வைத்துத்தான் உட்கார்வார்.

சோளச்சோற்றுருண்டைகளை வலது உள்ளங்கையால் நெறித்தார். தயிரை ஊற்றினார். கொஞ்சம் பச்சைத்தண்ணீரை ஊற்றினார். நெறித்துப்பிசைந்தார். பிசைய பிசைய விரல்களின் இடுக்குகள் வழியே பிதுங்கியது.

தயிருக்கும் சோளச் சோற்றுக்கும் கொண்டாட்டமாக இருந்தது. பரமசிவத்தின் முகமெல்லாம் மலர்ச்சி. புருவ ரோமங்களின் நரைகூட சந்தோஷப்பட்ட மாதிரி... ஒருதுடிப்பு.

பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற காமாட்சி. பரமசிவத்தை கண்ணிமைக்காமல் பார்க்கிறாள். அவரது கருந்தேகமும், திரேக முடிகளின் நரையும்... உட்கார்ந்திருந்தாலும் யானை மட்டம் என்பது மாதிரியான தாட்டியமும், குனிந்து குனிந்து அவர் சாப்பிடுகிற அழகும், கைநிறையவெளிர்நிறக் கூழும், அள்ளி அள்ளி "பர்ருட், பர்ருட்" டென்று குடிக்கிற ஆர்வமும்..

கண்நிறைந்தது. ரசனையும் மயக்கமுமாய்ப் பார்க்கிற அவள். கண்ணில் ஒரு கனவு. ஒரு குழைவான மின்னல்.

அன்றைக்கு ஜன்னல் வழியாகப் பார்த்த அதே மனநிலை. பெண் பார்க்க வந்திருந்த அன்றைக்கு ... அண்ணலை நோக்கிய அவள். அதே நோக்கு, இப்போதும்.

"மனுஷரு.. வயசானாலும் தேக்கங்கட்டை மாதிரியிருக்காரு. வஞ்சகமில்லாம பாடுபடுறமனுசரு.."

குடித்து முடித்துக் கையைக் கழுவினார். மீசையிலும், தாடியிலும் ஒட்டியிருந்த கூழைக் கழுவித் துடைத்தார். திருப்தியில் வயிறு நிறைந்து... மனமும் நிறைந்த அடையாளமாக வந்த ஏப்பம்.

"சோளச்சோத்துக்கும் தயிருக்கும் ஏகப்பொருத்தம். கஞ்சி குடிக்க குடிக்க சொகமாயிருக்கு.. "கொண்டா, கொண்டா" என்குது. ஓங்கைப் பக்குவம் அப்படி"

அவரது புகழ்ச்சி அவளுக்குள் புல்லரிப்பை நிகழ்த்துகிறது. மனசெல்லாம் பரவிநிரம்புகிற பூரிப்பு.முகத்திலும் அதன் மலர்ச்சி.

அந்த மலர்ச்சியிலும் ஒரு வருத்த நிழல். வருத்தத்தில் இருக்கிறவள் சிரித்த மாதிரி...

"என்ன காமாட்சி... நீ கஞ்சிகுடிச்சுட்டீயா ?"

அவருக்குள் பரிவும் பதற்றமுமான உணர்வலைகள். காமாட்சியிடம் காணப்பட்ட அந்தச் சோர்வுச்சிரிப்பு... அவருக்குள் பகீரென்ற அதிர்வலைகளை ஏற்படுத்துகிறது.

"இனிமேத்தான்"

"ஏன்_ ஒருமாதிரியிருக்கே_?

ஒண்ணுமில்லே, சோகத்தை மறைக்கிறாள். புருஷன் மனசு கலங்குமே என்று தனக்குள் தன்னைப் புதைக்கிறாள்.

"இம்புட்டு வருஷமா ஒங்கூட வாழ்ந்துருக்கேன்.இதுகூடத் தெரியாதா_ எனக்கு? என்னத்தையோ மறைக்குற?"

"ஒண்ணுமில்லே _"

"சொல்லு_ சும்மா சொல்லு.. காமாட்சி."

"ஒலக்கை போடுறப்ப_ தோள்பட்டையிலே சுளுக்கிருச்சி. வலி கடுகடுன்னு இருக்கு_"

பரமசிவம் விருட்டென்று எழுந்தார்.

"நீ மொதல்லே சாப்புட்டு படுத்துரு"

"எங்க_ தூரவா போறீக?"

"ஒரு திக்குமில்லே. சும்மா தான். இப்ப வந்துருவேன்"

அவர்வீடு திரும்புகிறபோது அவருடன் ரங்கநாயகி. சுளுக்கு எடுப்பதில் மகாகில்லாடி. நரம்பு, எலும்பு, தசைப்பிடிப்பு சம்பந்தமான எல்லா நோய்க்கும் வைத்தியம் பார்ப்பாள்.

"வெளக்கெண்ணெய் மட்டும் இருந்தா குடுங்க_" என்றாள். படுத்துக்கிடந்த காமாட்சியை

"எந்திங்கம்மா" என்று எழுப்பினாள்.

"ரெண்டு காலை முன் வைச்சு மடக்கி_ நேரா நிமிந்து உக்காருங்க அம்மா"

வலது தோள் பட்டையில் கட்டை விரலால் நீவிவிட்டாள். விளக்கெண்ணெய் தடவி விட்டாள். வலதுபுறங்கையை ஒவ்வொரு இடமாக வைத்துப் பார்த்தாள். எந்த இடத்தில் வித்தியாசமான சூடு வருகிறது என்று பார்த்தாள். கட்டைவிரலால் ஒவ்வொரு இடமாக அழுத்தி வந்தாள்.

"வலிச்சதுன்னா, சொல்லுங்கம்மா-"

"ம்"

"இங்கனே ?"

"இல்லே"

"இங்கனே ?"

"இல்லே"

"இங்கனே ?"

"ஆங்- அங்கனே தான். இன்னும் கொஞ்சம் மேலேதள்ளியும் வலிக்குது-"

அது எந்த எலும்பு... அங்குளந்த நரம்பு ஒடுகிறது.. அதுவும் என்னென்ன வாகில் ஒடுகிறது என்பதையெல்லாம் நுண்ணியமாக யோசித்தாள். நிர்ணயமான திசையைக் கண்டுபிடிப்பதற்காக எண்ணெய்போட்ட எல்லா இடத்தையும் கரகரகரவென்று தேய்த்தவள். அந்தக் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் கட்டைவிரலை நட்டு வசத்தில் வைத்து அழுத்தினாள்.

பதற்றமும் பதைப்புமாக உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கிற பரமசிவம். ரங்கநாயகி தேய்க்க தேய்க்க.. காமாட்சியின் முகமாற்றம். வலி தாளாமல் அடிஉதட்டைக் கடிக்கிறாள். முகக் கோணல். வலியின் அதிர்வுக் கேற்ப முகச்சுளிப்பு.

அதையே கூர்மையாகப் பார்த்துக்கொண்டிருக்கிற பரமசிவம். பரிவும் பரிதவிப்புமாக அவர் மனத்துடிப்பு. "ஐயோ, ஐயோ" என்று பதைக்கிற அவர் மனம்.

"ரங்கநாயகி... பாத்தும்மா.. மெதுவாம்மா.. கோளாறாக செய்யும்மா- ரொம்ப வலிக்காம...! சீராப்போயிரும்லே ?"

அவர் பதறுவதும், பதைத்துத் துடிப்பதுவும் ரங்கநாயகிக்கு வேடிக்கையாக இருக்கிறது. "களுக்" கென்று சிரித்துவிட்டாள்.

"வலிக்குறது அம்மாவுக்கு. அவுக பல்லைக்கடிச்சிக்கிட்டு கம்முன்னு இருக்காங்க... நீங்க என்ன இம்புட்டு துடிப்பு துடிக்குறீக- ?

கட்டை விரலால் குத்தியும் அழுத்தித்தடவியும்... ரெண்டு தோள்பட்டையையும் ரெண்டு கையால் பற்றி உலுக்கியதுவும், குலுக்கியதுவும்...

"எல்லாம்ஞ் சரியாப்போச்சு. இனுமே வலியேயிருக்காதும்மா"

"சரியாயிருச்சு ?இல்லே...முகவூர் வைத்தியருகிட்டே கூட்டிட்டுப் போவணுமா ?"

"சரியாப்போயிருச்சு.. ஒலக்கையை ஒங்கி ஒசத்துறப்போ எலும்பு சுளுக்கியிருக்கு. மத்தபடி ஒண்ணுமில்லே. அதை எடுத்துவுட்டாச்சு அப்ப, வரட்டா ?"

"இரு ரங்கநாயகி..." என்று உள்ளே போன பரமசிவம்.

ஒருசிறிய குத்துப்பெட்டியில் மூன்றுபடி நாட்டுச்சோளம் அள்ளிப்போட்டுக் கொண்டுவந்தார். ரங்கநாயகியிடம் தந்தார்.

"இந்தா..இதைவைச்சுக்கோ. என்னாலே ஏண்டது (இயன்றது) இம்புட்டுத்தான். கொண்டுபோ. வீட்லேபோய் தட்டிட்டு பெட்டியை யார்கிட்டேயாச்சும் குடுத்தனுப்பு.."

"இதெல்லாம்... எதுக்கு சாமி, எங்க அம்மா பெத்த கிழவி சொல்லிக்குடுத்த வைத்தியம்.அவளுக்கு அனுபவத்துலே வந்தது... தெரிஞ்ச வைத்தியத்தை செய்ஞ்சதுக்கெல்லாம் கூலியா தருவாக ?"

"கூலி குடுக்க முடியாது. குடுக்கவும்கூடாது. ஆனால் சொன்னவுடனே மறுபேச்சு பேசாம வந்து... இருந்து... வலியை நிறுத்திட்டுப் போற ஒனக்கு. எங்க விசுவாசத்தை வேற எப்படிக்காட்டுறது ? கொண்டுட்டுப்போம்மா..."

நெகிழ்ந்து போயிருக்கிற பரமசிவத்தின் குரலே மிருதுவாகியிருந்தது.பேசமுடியாமல் தடுமாறித்தத்தளித்தார்.

ரங்கநாயகி " பெட்டியிலிருந்த தவசத்தை மண்ணுலே போட்டு ஓராயிரம் தவசத்தைப் படைச்சிருவீக. அந்தத்தவசத்தை (தான்யம்)தாரீகன்னா... இது நீங்க செய்ற பெரிய மரியாதை. எங்க அம்மாவைப் பெத்த கிழடிக்குத்தான் இந்த மரியாதை போய்ச் சேரணும். வாரேன் சாமி"

அவளுடனேயே வெளியேறுகிற பரமசிவம்.

"எங்க – தூரவா போறீக?"

"ஒரு திக்குமில்லே– இந்தா வந்துருதேன்"

போனமாயத்தில் திரும்பி வந்துவிட்டார். அவரது தோள் பட்டையில் ஒருசிறிய மூடை இருந்தது. தோளில் பாரம் இருப்பதால், கழுத்தும் தலையும் சாய்ந்திருந்தது. தலைக்குமேலாக நீண்டு போயிருந்த இடதுகை,மூடையின் உச்சியைப் பற்றியிருந்தது.

"என்ன இது?" காமாட்சி வியப்பும், குழப்பமுமாகக் கேட்டாள்.

"அரிசி"

"அரிசியா? அது என்னத்துக்கு? எங்க வாங்குனீக?"

காமாட்சியின் உள் மனசு முழுக்க நெகிழ்ந்து, நெக்குருகி, அவர் காலடியில் வழிகிறது. அடப்பாவிமனுசா, இந்தச்சிறுக்கி மேலே இம்புட்டு உசுராவா இருக்கீக? இம்புட்டுப்பாசமாவா இருக்கீக? ஐயோ... எம்புட்டு ஜென்மம் எடுத்து, என் உடம்பை செருப்பாக்கி உங்க காலுக்கு மாட்டுனாலும்... ஏங்கடன் கழியாது போலிருக்கே..."

அவளுள் ஓடுகிற நினைவுகள். கசிந்துருகி வழிகிற அவளது உயிரான்மா.

"இனிமே.. நம்ம வூட்லே அரிசிச்சோறுதான். கம்பு, சோளம்னு தின்னுமாய்ஞ்சதெல்லாம் போதும்"

காமாட்சியின் ஈரஉதட்டில் மின்னல் புன்னகை. கண்ணீர் வழிகிற கண்ணில் மெல்லியகுறும்பு.

"தின்னு மாய்ஞ்சீகளா? ஒட்டுக்கம்புகூட ஆகாதுன்னு... நாட்டுக்கம்பு, நாட்டுச் சோளம்னு வெள்ளாமை வச்சு, விதை முதல் காப்பாத்தி வச்சு வந்த நீங்களா.. இப்புடிச்சொல்றீக...? ஒட்டுக்கம்பு, ஒட்டுச்சோளம், ஒட்டுவீர்யமான... ஐய்ட்டமே நம்ம வீட்டுக்கு ஆகாது, அது ஊர்லே அகப்பட்ட எல்லா நோக்காடுகளையும் கூட்லே இழுத்து வுட்ரும்னு சொல்லுவீகளே... நீங்களா... ஐ.ஆர்.20 அரிசியை வாங்கிட்டு வந்துருக்கீக..."

அசட்டுச்சிரிப்போடு தலைகுனிந்து,மூடையை இறக்கிவைத்த பரமசிவம்.

"வேறவழி ? ஒலக்கை போட்டா, எலும்பு புடிக்குதுன்னு ஆகிப்போச்சு. வயசாகிப் போச்சு... இனி நோக்காட்டுக்கும் சாக்காட்டுக்கும் பயந்து என்ன செய்ய ? எனக்கு எல்லாத்தையும் விட நீ முக்கியம். நீதான் என்னோட மூச்சு ?.."

கிட்டத்தில் வந்த பரமசிவம். அவரது குரல் தளுதளுத்தது. உடைந்து கலங்குகிற குரலில் மனநெகிழ்வு.

அப்படியே குப்புறச்சரிகிற காமாட்சி. மனசு, உடம்பு எல்லாம் நெகிழ்ந்து போய்விட்ட அவள். அவரது பாதங்களை ரெண்டு கையாலும் கட்டிப்பிடித்துக் கொள்கிற அவளது முதுகு,விம்மித் தணிகிறது.

பாதங்களில் அவளது ஈரமுகம். அவளைத் தோளைத்தொட்டு பூப்போலத் தூக்கி... தன் மடியில் போடுகிறார். பாசநெகிழ்ச்சியில் உடைந்து அழுகிற அவள் முகமெல்லாம் கண்ணீரும் வியர்வைக் கசிவும்.

மடியில் பிள்ளைபோலப் போட்டுக் கொள்கிற அவர். இடது குடங்கையில் அவளது தலை. வலது கையில் துவண்டு குழைகிற அவள் உடம்பு. விசும்பி விசும்பி அழுகிற அவள் முகத்தில்- அவர்முகம் வைக்கிறார். அவரது நாவால் அவளது கண்ணீரை வழிக்கிறார். உதடுகளில் உதடுகள் வைக்கிறார். அவளது நெற்றியில் நாவால் வருடுகிறார்.

"தெக்காடு தவிர... வேறு எக்கதியுமில்லாமலிருந்த என்னை, நீ தானே வந்து ஆளாக்குனே ?ஏஞ்சக்கரைக்கட்டி, நாஆம் பளைன்னு எனக்கு நீதானே நம்ப வைச்சே ? ஆடு வளர்த்து- கோழி வளர்த்து...மாடு வளர்த்து...காடு கரைகளை ... வீடுகளை வாங்கவைச்சது நீதானே, தேன்கட்டி ! இந்த வீட்டு மகராசி நீ. ஒனக்காக... நா எதை வேணும்னாலும் செய்யத் தயாராக இருக்குறப்ப... இந்த அரிசிக்கழுதையை முழுங்குறதா... பெரிய விஷயம் ? வுடுடி...செல்லம்...இனிமே நீ... ஒலக்கையைத் தூக்க வேண்டாம்- அரிசியை ஆக்கு... நெல்லுச்சோறுதிம்போம்-"

அப்படியே ஓர் எவ்வு எவ்வி... வலது கையை அவர் முதுகில் போட்டு இறுக்கினாள். அவரது நெஞ்சுச்சதையை வாயால் பூப்போல கவ்வினாள்.

"நாட்டுக்கம்பு...நாட்டுச்சோளம் இல்லாம உங்களாலே எப்புடிச்சாப்புடமுடியும்? நோக்காடு வராதுன்னு மட்டுமில்லே... உங்களுக்கே அந்தச் சோறுகதானே புடிக்கும்?"

"அதைவுட நீ எனக்கு ரொம்பப் பிடிக்கும் டி"

இயலாமையும் முதுமையும் பலவீனமும் வந்துவிட்ட பிறகு... வேண்டாத பொருளாக... விரும்பாத உணவாக... உள்ளே வந்தது ஒரு நிர்ப்பந்தமாக.

அன்றைக்கு... அரிசிச்சோற்றில் முதன்முதலாக கைவைக்கிற போது... ஏதோ புழுபூச்சிநெளிகிற ஜெயில் சோற்றைச் சாப்பிடுகிற மாதிரி அவர் மனசுக்குள் வெறுப்பும் அசூயையும் ஏற்பட்டது. குமட்டல் வருகிற மாதிரியோர் உணர்வு.

ஆனாலும் தனது உணர்வுகள் முகத்தில் கசியவிடாமல், மறைத்துக் கொள்வதற்கு முழுமையாக யத்தனிக்கிறார்...

"பாவம், காமாட்சி ஒடைஞ்சிருவா..."

அவருக்குள் வருகிற முணுமுணுப்பு.

நெல்லுச்சோற்றில் கைவைத்தது... தலை கவிழ்கிற சாக்கில் முகத்தை மறைத்துக் கொள்கிறஅவரது யத்தனிப்பின் உள் நோக்கத்தை உணர்ந்து...

நோயுற்ற பிள்ளையை நோக்குகிற தாயாக மனம் உடைகிற காமாட்சி. அவளது கண்ணோரங்களிவ் வெப்பத்துளி. மனஉயிரின் கண்ணீர்த்துளிகள்.

15

அழகேசன் முற்றத்துக்கும் வெளியில் செருப்பைக் கழற்றிவிட்டு...முற்றத்தில் வெறும் பாதங்களுடன் நடந்துவந்தான். ஒரு கோயிலுக்குள் நுழைகிற பக்தனின் மனோபாவத்துடன் வந்தான். அவனும் கறுப்புதான்: பரமசிவத்தின் கறுப்பு.மினுமினுப்பான கறுப்பு. நிற்ம் தான் அய்யாவைப்போல. உருவம், அம்மாவைப்போல, சிற்றுடம்பு.

ஆனால், வலுவான உடம்பு. காட்டுழைப்பில் வைரம் பாய்ந்த திரேகம். காடுகரைகளில் வியர்வைசிந்த, களைப்பறியாத உழைப்பில் இறுகிப்போன தசைகள். கிண்ணென்றிருக்கும்.

சாயங்கால வெயில் மஞ்சள் கீற்றுகளாக முற்றத்தில் விழுந்திருக்கின்றன. கோடைக்காலம் போல இல்லாமல் கார்மேகங்கள் மேலடி வானம் நிறைந்திருந்தன. அந்திச் சூரியக் கனிவான ஒளியில், மேகங்கள் ஒளிதகதகப்பாகத் தெரிந்தன. அந்த மேகங்களின் வெளிச்சமும் நிழல்களின் முகங்களை வெளுக்க வைத்திருக்கின்றன.

திண்ணையின் வலது மூலையில் குளுதாடி. மாட்டுக்கு கழிவுதண்ணி ஊற்றிக்குடிக்கவைக்கிற மண்கூடைமாதிரியிருக்கும். அதற்குப் பக்கத்திலேயே பெரிய உயரமான ஆட்டுரல். மாட்டுக்குப் பருத்திவிதைப்பால் விடுவதற்கு அதில்தான் ஆட்டுகிறார். மதியமே நனையப்போட்டிருந்த பருத்தி விதை ஊறி நனைந்து ஊதிக்கிடந்தது. அந்த விதையைத்தான் ஆட்டுரலில் போட்டு ஆட்டுகிறார், பரமசிவம்.

இன்றைக்குப் பகல்பூராவும் காமாட்சியும் பரமசிவமும் ஆவாரங்கொழை அறுக்க வெள்ளோடை ஆத்துப் பக்கம் போயிருந்தார்கள். மஞ்சள் பூ பூத்திருக்கும். காய்கள் காய்ந்து சீயக்காய் மாதிரி நெற்றுகளாகத் தொங்கும். கொளுஞ்சிக்கொழை, ஆத்திச்செடி, ஆதாளஞ் செடிகளை யெல்லாம் அறுத்தனர். ஆதாளஞ்செடியில் அறுத்தால், பிசின் மாதிரி பால்வடியும். வேட்டி சீலையில் விழுந்தால்... கறையே போகவே போகாது.

முதுமையாகிப் போன உடம்பு யதார்த்தத்தை மனவலிமை செயித்திருந்தது. வயசையும் தளர்ச்சியையும் பொருட்படுத்தாமல் வேகமாக அறுத்துக்குவித்திருந்தனர்.

"என்ன காமாட்சி... நின்னுநின்னு தேடிக்கிட்டே பொழுதைக் கழிக்குறே?"

"நானும் அறுத்துப் போட்டுருக்கேன்லே?"

"நா அறுத்ததுலே, நால்லே ஒருபங்கு கூட இருக்காது..."

பரமசிவத்தின் ஏளனச் சிரிப்பில் செவி மடல் நரை ரோமங்கள் சேர்ந்து மின்னியது. சிரித்த சிரிப்பில் வெண்பற்களும், நெற்றி வியர்வைத் துளிகளும் மின்னியது.

எகத்தாளமும் நையாண்டியுமான அவரது குரலில் சீண்டப்பட்டு, வெறித்துப் பார்க்கிற காமாட்சி. சுற்றிலும் சீமைக்கருவேல மரங்கள்.ஆங்காங்கே நடமாடுகிற ஆண் மயில்கள், நீளத்தோகை தரையில் இழுபடாமல் போகின்றன. பெண்மயில்கள் லட்சணமற்றுத் திரிகின்றன.அதன் பின்னால், குயில் குஞ்சுகள்.

வேலித்தூர்களிலிருந்து விருட்டென்று பாய்ந்து, குடுகுடுவென ஓடுகிற த்விட்டுநிற கௌதாரிகள்.

"என்ன மொறைக்கே? மொறைச்சுப்பாத்து பிரயோசனமில்லே. வேலையிலே காட்டணும். மொறைப்பை."

"நீங்க ... இங்குட்டு கூடிப்போங்க..." கோபத்திலும் ரோஷத்திலும் இறுகிப்போன அவளது குரல்.

"நீ ?"

"என்பாதையிலே நா போறேன்"

வீம்பும் வீராப்பும் ரெண்டு பேர் மனசுகளிலும். ஜெயித்துக்காட்டணும் என்கிற ரோஷமும் தீவிரமும்.

"மதியம் திரும்புகிற பெறவு_ நாம பாப்போம்" என்று ஒருநேர நிர்ணயத்தைச் சொல்கிற காமாட்சி. ரோஷமும் வேகமுமாக அறுப்பில் இறங்கினாள். தேடித்தேடி ஓடி ஓடி அறுத்துப் போட்டாள். முழங்கால் கடுப்பைப் பொருட்படுத்தாமல் ஓடிஓடி அறுத்தாள். முந்திச்சீலையை முதுகில் பரத்தி, நுனியைத் தலையில் கட்டியிருந்தாள்.

மார்ப்பில்லாத நிலை. தொளதொளத்த ஜாக்கட்டின் வியர்வை ஈரமும், உப்பு வெள்ளைக்கோடுகளும்.

பரமசிவமும் தலையில் துண்டும், இடுப்பில் தார்ப்பாய்ச்சிய வேட்டியும் கட்டிக்கொண்டு பாய்ந்து பாய்ந்து அறுத்தார். ஆவாரம் அருகி வருகிறது. ஆற்று மணல் இல்லாததால் கொளுஞ்சியும் காணாமல் போய் வருகிறது.

தேடித் தேடித்தான் அறுக்க வேண்டியிருக்கிறது. ஆவாரஞ்செடிக்குள் கைவிடத்தான் யோசிக்கவேண்டும். பாம்பு கீம்பு படுத்துக்கிடந்தாலும் கிடக்கும்.

மதியம் திரும்பிவிட்டது. காலடிநிழல் கிழக்கில் நீளத்தொடங்கியது. அரித்துச்சேர்த்தார். ஆங்காங்கே அறுத்துப் போட்டிருந்த தழைகளை யெல்லாம் பரசிக்கூட்டியள்ளி... ஓரிடத்தில் குவித்தார். கயிறுபோட்டு கட்டினார்...

நீளமாக கொழையை பரத்தி... மூன்று கயிறு கட்டு போட்டிருந்தார். நீளமான உருண்ட கட்டு. ரெண்டுகட்டுகள்.

காமாட்சியைத் தேடிப்போனார்.

"என்னத்தை அறுத்துப்போட்டுருக்கப் போறாள் ? ஒருகட்டு அறுத்துருந்தா... பெரியவிஷயம்." என்று முணுமுணுத்துக் கொள்கிற பரமசிவம்.அரிவாள் முழுக்க ஆதாளையின் பிசின்.

"ஏய்ய்_ காமாச்சி_ காமாச்சி.. எங்கேயிருக்கே ?"

"இந்தா_ இங்க இருக்கேன்"

குரலின் திசை உணர்ந்து பாதங்கள் நடந்தன. மணலையெல்லாம் பறிகொடுத்துவிட்டு,கிழட்டு விதவையாக லட்சணமற்று.. பாறைமுடிச்சுகளும் செம்மண்கண்டமாகவும் இருக்கிற ஆற்றுக்குள் நடக்கிற பரமசிவம்.

இவருக்குள் பத்துவருஷத்துக்கு முந்தைய ஆறு. மணல் நிரம்பிக்கிடந்த ஆறு. வண்டி மாடு பத்திக்கொண்டு வந்தால்... மணலுக்குள் வண்டிப்பைதா பதியும், புதையும். மாட்டுக்கும் கால்கள் புதையும். ஊன்றி அழுத்தி இழுக்க முடியாமல் திண்டாடும்.

இதற்காகவே ஆற்றைக்கடக்கவரும் போதெல்லாம் ஒருகட்டு பருத்திமாரோ... கம்பந்தட்டையோ வண்டியில் போட்டுவருவார். ஆற்றுமணலில்பைதாத் தடத்தில் பருத்தி மாரை பரத்தி வைத்து.. அதன்மேல் வண்டியை விடுவார். பதிவதும் புதைவதும் கொஞ்சம் குறையும்.

அப்படி வண்டிபோகமுடியாமல் மணல் கிடந்த ஆறு. இப்போது_ நொடித்துப்போன குடும்பம் போலக் கிடக்கிறது. வெறும் பாறை முடிச்சுகளும், மண்திட்டுமாக இருக்கின்றன.

காமாட்சியைத்தேடிவந்தார். மதியவெயில் தீயாய் காந்துகிறது. வரிவரியாய் வளைந்திறங்குகிற வியர்வைக்கோடுகள். புருவ ரோமங்களில் கூட வியர்வைத்துளிகள்.

குனிந்து குனிந்து அறுத்தது. குறுக்கெலும்பு பூராவும் கடுகடுக்கிறது. தோள்பட்டை இரண்டிலும், ஓடி ஓடிஅறுத்த ரணம்.

மஞ்சணத்தி மரத்துக்கடியில் அதன் சிறிய நிழலில். கொழையை கட்டாக உருட்டி... சிலுப்புகிற கொழைக்குச்சிகளை ஒடித்து உள்ளே திணித்து.. உருண்டைக் கட்டின் மீது முழங்காலை மடித்துப்போட்டு கயிறை இறுக்கினாள். முக்கி முக்கி... கட்டை அமுக்கி கயிறை இறுக்கினாள்.

"எத்தனை கட்டு?" பரமசிவம் குரலில் அதே எகத்தாளம். குத்தலான நையாண்டி.

"வந்துதான் பாருங்களேன்_" அவளது குரலில் ஒரு மகிழ்ச்சி. வெற்றி பெற்றுவிட்ட எக்காளத்தொனி.

கிட்டவந்து பார்க்கிற பரமசிவம். மூன்று கட்டுகள் முரட்டுக்கட்டுகள்.

"ஏய்_ என்ன _?"

"ஏதோ ... நம்மாலே ... ஏண்டது" போலியான பவ்யம். பொய்யான தன்னடக்கம்.

"அங்க_ ஆம்பளைச்சிங்கம் எத்தனைகட்டு?"

"ஏய்.. என்ன இது ஏமாத்து? மூணுகட்டா? இன்னிக்கு அறுத்ததுதானா? நீமட்டுந் தானா?"

"நா மட்டுமில்லே. நானும் கள்ளப்புருஷனும் சேர்ந்து அறுத்தது_" அவள் சொன்னதைக்கேட்டு சிரிக்கிற அவர்.

" நீங்க எத்தனை கட்டு?" வினயமான குரலில் கேள்வி.

"எனக்கு கள்ளப் பொண்டாட்டி வரலே. ரெண்டு கட்டுகதான்" என்று அசட்டுக்குரலில் கூறுகிற பரமசிவம்.

" இம்புட்டுத்தானா ஆம்பிளை ராஜ்யம்?"

"பொம்பளைகிட்டே ஆம்பளை ஜெயிக்க முடியுமா? மனபலத்துலேயும் ஓடல் பலத்துலேயும் ஆம்பளை பொம்பளையை மிஞ்சிரமுடியாது"

கேலி கிண்டல், நக்கல் நையாண்டியை யெல்லாம் விட்டு விலகிய தீவிர அறிவுக்குரல்.

"ஓடல் பலத்துலேயுமா?"

"ஆமா... மாதவெலக்கு... பிள்ளைப் பேறு... கர்ப்பசுமை இதெல்லாம் இருந்துமே இம்புட்டு பலம் இருக்குன்னா_ இதெல்லாம்

இல்லாட்டா... ஆம்பளைகளை பொம்பளைக பலத்துல தூக்கிச் சாப்புட்டுட்டுப் போயிருவாக..."

காமாட்சியின் முகமெல்லாம் வியர்வைக் கசிவுகள். இறைத்த கிணறுகளின் உட்சுவர்கள் மாதிரி சொட்டடித்து வழிகிற நீர்க் கசிவு. எண்ணெய்த் தலைமுடி யெல்லாம் வேலி இலைகள் பொட்டு பொட்டாக ஒட்டியிருக்கின்றன.

அரிவாளை ஒருகட்டுக்குள் சொருகிவைத்தாள்.

"அப்பன்னா... பொம்பளை வலுவானவள்ங்குறீகளா?"

"என்னைக்கேட்டா... ஆதிகாலத்துலே பொம்பளையே எல்லாஎடத்துலேயும் வலுவானவளா அதிகாரம் பண்ணியிருக்கணும். குடும்பத்துலே... ஊர்லே... மனுசமக்க மத்தியிலே பொமபளை ராஜ்யந்தான நடந்துருக்கணும்"

"எதை வைச்சு சொல்லுதீக?"

"பொம்பளையை "சக்தி"ங்குறாங்க. அம்மன்தெய்வங்களை பக்தியோட கும்புட்டு வணங்குறாங்க. பொம்பளைராஜ்யம் இருந்து, மங்கிப்போய்த்தான்... அம்மன் சாமி கும்புடறதா வந்துநிக்குது"

"மூணு கொழைக்கட்டுக்கு இம்புட்டுக் கதையா? சரி, இதை எப்புடி குப்பைமேட்டுக்குக் கொண்டுபோறது? சோலியைப் பாப்போம்."

"நீ... இங்கேயே இரு... வண்டியிலே மாட்டைப்பூட்டிக்கிட்டு... நா வாரேன்"

"நா என்னத்துக்கு இங்க கொடுக்கணும்?"

"வண்டியிலே கொழைக்கட்டு ஏறணும்லே? எனக்கு ஒத்தாசைக்கு ஒரு கை புடிச்சு தூக்கிவிட ஆளு வேணும்லே?"

"வண்டி வர்ற வரைக்கும் நா வெயில்லே காயவா?"

"நா என்ன, நெலா வெளிச்சத்துலேயா நடந்து போகப் போறேன்...? நீயாச்சும், மஞ்சணத்திமரத்து நெழல்லே உக்காந்துருப்பே..."

"சரி சரி_ வெருசா போயிட்டு வெருசாவாங்க"

"வெக்,வெக்" கென்று நடையை எட்டிப்போட்டார். வளர்த்தியான ஆள். கறுத்த உடம்பு. வியர்வைக்கசிவில் வெயில்பட்டுத் தெறிக்கிறது. முதுகெல்லாம் நரைத்த ரோமங்கள் வியர்வைக்குப்படிந்து சருமத்துடன் ஒட்டிக்கிடக்கின்றன.

வெள்ளோடையைக் கடந்து, சாமி நாயக்கர் ஒத்தைக் குறுக்கம், புஞ்சையை கடந்து_ ஆட்டக்காரன் கிணற்றைத் தாண்டி_ ஊருக்குள் நுழைகிற பரமசிவம்.

தாழ்வாரத்தில் கிடக்கிற பட்டரைவார்கள், கடையாணிக் குச்சிகள், சாட்டைக்கம்பை எடுக்கிறார். கழுத்து மணிகள் கோத்திருக்கிற பட்டரைவார்கள், அவரது தோளில் துண்டுமாதிரி கிடக்கின்றன.

தொழுவத்தில் கிடந்த மாடுகளை அவிழ்த்துவிட்டு.. கடையாணிக்குச்சிகளை மேக்காலில் மாட்டி, பட்டரை வார்களை அதில் கோத்து...

வண்டியின்முன் பாகத்தைத் தூக்கியவுடன்.. தானாக வந்து தலையைக் கொடுக்கிற மாடுகள்.மூக்கணாங்கயிறுகளைப் பிடித்து, தலையை நீட்டுகிறமாடுகளை இழுத்து, வசமாக நிறுத்தி, பட்டரை வார்களை மாடுகளின் அடிக்கழுத்து வழியாகச் சுற்றி... கடையாணியில் போட்டு_

எல்லாம் துரிதகதி. அவசரம். பரபரப்பு. வண்டிப்பைதா தெருப்புழுதியில் உருண்டு தடம்பதிக்கிறது. மாடுகள் சுதாரிப்பாக தலையைத் தலையை ஆட்டிக்கொண்டு ... வாலைச்சுழற்றியவாறு துள்ளல்நடைபோடுகிறது.

நிழல் வாட்டத்தில் இரைதின்று, ஆசைதீர அசை போட்டுக் கொண்டு படுத்திருந்த மாடுகள். புத்துணர்ச்சியோடு நடைபோடுகின்றன.

பரமசிவம் வந்தது குறுக்குப் பாதை. மனிதர்கள் மட்டுமே நடந்து வரக்கூடிய ஒற்றையடிப்பாதை. இப்போது மாடுகள் ஊருக்கு

மேற்காகச் சென்று... அருணாசலபுரத்துப்பாதையில் நடக்கின்றன. மாட்டுக் குளம்படிகள் புழுதியில் பதிகின்றன.

வண்டிச்சட்டத்தில் உட்கார்ந்திருக்கிற பரமசிவம். மாடுகளின் முதுகில் கையைப் பதித்து, இலேசாக சிமிட்டுகிறார். தொங்குகிற கால்களின் பாதங்களினால் மாடுகளின் அடிவயிற்றில் வருடுகிறார். மாடுகள், மேலும் சுதாரிக்கின்றன. சுறுசுறுப்பெடுத்து, நடையை எட்டிப் போடுகின்றன. வேகமாகக் குளம்புகளைப் பதித்தெடுக்கின்றன.

"அறுத்துக்களைச்சவ, காமாட்சி. காட்டுவாசல்லே காத்துக்கிடப்பா... பாவம்" என்று முணுமுணுக்கிறார். பரிவுடன் முணுமுணுப்பது, மாடுகளிடம் உங்களைத் துரிதப்படுத்துவதற்கு இதுதான் காரணம் என்று பாசத்துக்குரிய தோழர்களிடம் தன்னிலை விளக்கம் தருகிற உயிரன்பு.

"காமாட்சி, பாடுபடுறதுலே ராட்சஸிதான். மூணுகட்டுக்கு ஒரு மூச்சுலே"அறுத்துக் குமிச்சுட்டாளே! அதுவும் எம்புட்டுப் பெரிய முரட்டுக்கட்டு. நம்மாலே உருட்டக்கூடமுடியாது. அம்புட்டு முரடு. ச்சேய்! அவா.. நமக்கு வாய்ச்சது பெரிய யோகம் தான். முன்னவங்கள் செய்ஞ்சபுண்ணியம். பாடுபடுறதுலே ராட்சஸின்னா... பாசம் காட்டுறதுலே ராசாத்தி..."

அவருக்குள் வருகிற நெகிழ்ச்சியான நினைவோட்டங்கள் மனசுகனிந்து... உணர்வுகள் குழைந்து...

ராத்திரி படுக்குறப்ப... அவா இவரை ஒட்டித்தான்படுப்பாள். தேகச்சூடு தேகச்சூட்டைச் சுவாசிக்கிற மாதிரியான ஸ்பரிசத்துடன் படுப்பாள். ஒட்டி உரசிக்கொண்டு படுத்திருப்பாள்.

அவளுக்கு அது அவ்வளவாகப் பிடிக்காது. வயசான கெழட்டுச்சிறுக்கி. அடைகோழிமாதிரி தனிச்சு படுக்குறதுதான் கண்ணியம். என்ன செய்ய? கெழடனுக்கு புள்ளை மனசு. தாயைக்கட்டிக்கிட்டு தூங்குறதுக்கு ஆசைப்படுகிற மழலைமாதிரி.

அவரு ஆசைக்காக, கண்ணியமில்லாத காரியம் என்று நினைத்தாலும்... ஒட்டி உரசிப்படுப்பது.

"அரை மனசோட கொறை மனசோட கிட்டத்துலே படுக்க வேண்டாம்_" என்று செல்லக்கோபமாக பிகு பண்ணுவார்.

"கெழடனுக்கு அறிவில்லாமப் போச்சுன்னா..கெழட்டுச் சிறுக்கி வெக்கமில்லாம இருந்தாகணும்லே ?"

தாய்மைப் பாசமும் மனைவி மனமும் கலந்த ஒரு பேருணர்ச்சியில் அவள் பிதற்றுகிற நேர்த்தி_

வண்டியில் உட்கார்ந்திருக்கிற பரமசிவம் குறுஞ்சிரிப்பாக சிரித்துக்கொள்கிறார்.மதியவெயில்.கொதிவெயிலில் குறுஞ்சிரிப்பும் கிளுகிளு நினைப்பும்...

அங்கொன்றும் இங்கொன்றுமாக மேகங்கள் வெயிலில் காய்ந்து தகதகக்கின்றன. பொழுதுக்கால், மறைப்பாரின்றி தானடித்த மூப்பாக தகிக்கிறது.

வண்டியின் வேக ஓட்டம். ஓட்டமாய் விரைகின்ற மாடுகளின் கழுத்து மணிகள் "ஜலஜல், ஜலஜல், ஜலஜல், " லென்று கலகலக்கின்றன. வெள்ளோடைக்கு வந்துவிட்டது. வண்டி, சுற்றுப்பாதையில் வந்தாலும்... தாமதமாகிவிடவில்லை.

"வந்துட்டிகளா..."என்று வியக்கிற காமாட்சியை ஒரு பரிவுணர்வுடன் நோக்கினார். "நீ ஒத்தையிலே தனிச்சிருப்பியேன்னு மாட்டை... கொஞ்சம் சுண்டிப்பத்துனேன்."

கொழைக்கட்டை ரெண்டுபேரும் சேர்ந்து தூக்கினர். தலையைக் கொடுத்து, பாரத்தை முட்டிய பரமசிவம். அஞ்சுகொழைக்கட்டுகள்.

தலையில் வாங்கியவுடன் கழுத்து நடுங்குகிறது. நெஞ்சுத் திணறல். வண்டியில் போட்டார். அஞ்சுக்கட்டுகளையும் பாரமேற்றிவிட்டு_"நீயம் மேலே ஏறி உக்காந்துக்கோ_" என்றார்.

வண்டிப்பைதா (சக்கரம்) வில் ஆரக்காலில் கால்வைத்து, பைதாவின் உச்சத்தைப் பிடித்து தவ்விஏறுகிறாள். ஆண்களைப் போல.

மாட்டைப் பத்தினார். வண்டி ஊர்கிறது. வரிசையாக அடுக்கிய ஐந்து கொழைக்கட்டுகளின் மேல் ராணி மாதிரி உட்கார்ந்திருக்கிற அவள். பரமசிவத்தின் வழுக்கைத்தலையில் கட்டிய தலைப்பாகை, அவரை ராசாமாதிரி காட்டுகிறது.

"குருசாமிக் கோனாரு நேத்து வீட்டுக்குவந்திருந்தாரு. ஒங்களைத் தேடிக்கிட்டு_"

"அதை_ இப்பச் சொல்லுதே_."

"அயத்துப்போச்சு. மறந்துவிட்டது_"

"நேத்தே வந்து என்னைப்பாத்தாரு_"

"என்னவாம்"

"கிடை இப்பப் போட்டா... நல்லதாம். அவருக்கும் கிடையை கொண்ணாந்து அமர்த்துறதுலே சிக்கல், சிரமம், போட்டி, புகைச்சலு இருக்காதாம்_"

"நமக்குத்தான் மாட்டுழவு உழுதுகிடக்கு... கிடையைப் போட்டுர வேண்டியது தான். கிடைபோட்டா_ வெள்ளாமையே தனிக் கொணத்தைக்காட்டும். சாணிக்குச்சாணி...மூத்திரத்துக்கு மூத்திரம்.... செம்மறியாட்டு திரேகவெக்கை வேற... புஞ்சை மண்ணுக்கு உசுர் வெக்கையைத்தரும். ஒரத்துக்கு ஓரம். மண்ணோட உசுருக்கும் பலம்_."

"மதி சொல்கிற மந்திரி மாதிரிநீ இப்பமட்டுமா. ஆதிநாள்லே யிருந்து நீ இப்புடித்தானே இருக்கே?_."

"ரொம்பவும் தாளிக்காதீக. அப்ப ...கெடை என்னிக்கு?"

"ஒங்கிட்டே கேட்டுடச்சொல்றதாக குருசாமி கோனார் கிட்டே சொல்லியிருந்தேன். உத்தரவு குடுத்துட்டே. நாளைக்கே கெடை போட்டுர வேண்டியது தான்"

வண்டி உருள உருள_ பைதாவின் மையக்குடம் அச்சில் மோதி உரசுகிற "கடக், புடக், கடக் புடக்"கென்று ஒரே விதமான சத்தலயம்.

கழுத்து மணியோசையின் சங்கீதம். மாட்டுக்குளம்புகளின் "பொக், பொக்,பொக்" கென்ற சத்தலயம்.

அவர்களது மௌனத்தின் பின்னணி இசையாக கோடை வெயிலின் கணகணப்பு. மனசுக்குள் நினைவுகளின் தனிச்சுழல் பயணம்.

கிடைகாவலுக்கு எப்படிப் போக... என்ன செய்ய... சக்கரைதேயிலை வாங்கணுமா..." என்று அவருள் நீள்கிற நினைவுத்தடங்கள்.

முருகேசனுக்கு ஒன்று என்றவுடன், தசையாடி ஆஸ்பத்திரி போயிருந்த இந்த ஆள். ஒன்றும் பேசாமல் பார்வையில் பாசத்தையும் கண்ணீர்த் துளியையும் காட்டி வந்த ஆள்_

மறுபடியும் எளைய பயலை அப்பனோட எப்படிச் சேக்குறது? என்ன சொல்லி இணைப்பது? எதை எப்படிச் சொன்னால்_ இந்த மனுசனோட பிடிவாதம் தகரும்? என்ற நினைவின் விரல் பிடித்து பின் செல்லுகிற தாய் மனசு.

"மதி சொல்லுற மந்திரி... மதி சொல்லுற மந்திரி"ன்னு கொண்டாடி கூத்தாடுற இந்த மனுசரு_ எளையவன் விஷயத்துலே மட்டும் எடங்குடுக்கமாட்டேங்குறாரே_ அந்தப்பயலும் ரொம்பத் தப்பு பண்ணிட்டான். இப்பேர்ப்பட்ட உழைப்பாளித் தகப்பனுக்கு இந்தப்பய செய்ஞ்சது ரொம்ப அநியாயம். அதனாலேதான் _ நம்ம வாய்ப்பூட்டை தொறக்க முடியலே_"

நினைவின் தடத்திலேயே மனசு ஆடி ஆடிப் பின் செல்ல... வண்டியின் ஆட்டத்திற்கேற்ப அவளும் ஆட__

வண்டியின் பைதாக்கள்... வண்டிப்பாதை மண்ணுக்குள் நெறுநெறுவென்று சத்தரிதமாக உருண்டு கொண்டிருந்தன_

பருத்திவிதை அரைபட்டுக்கொண்டிருந்தது. இடதுகை, குழவியின் தலையைப் பிடித்துச் சுழற்றி ஆட்ட_ வலது கை, அரைபட்டு வருகிற பருத்தி விதையின் கொதுக்குகளை அள்ளி அள்ளி குழவியின் இடுக்குக்குள் தள்ளிக்கொண்டே இருக்கிறது.

தள்ளப்பட்ட கொதுக்குகளைக் குழவி அரைக்கிறது. விதைப்பால் மெல்ல மெல்ல நுரைக்கிறது.

மஞ்சள் வெயிலில் நீளமாக விழுகிற மகனின் நிழல் அழகேசனின் தலை நிழல், அவரது காலடியில்.

"என்னடா_ மூத்தவனே__"

"என்னய்யா_ இந்நேரம் பருத்தி விதை ஆட்டுதீக?"

"விடியுறதுக்குமுந்தியே நானும் உங்கம்மாவும் கொழை யறுக்கப்போய்ட்டோம். அதனாலே இப்ப ஆட்டவேண்டியதாகிப் போச்சு...! நீ என்ன_ காடுகரைக்குப் போகலியா?"

"டக்கர்வுட்டு கீழக்காட்டுலே உழவடிச்சேன். நா மம்மட்டியை வைச்சுகிட்டு ஓரஞ்சாரம் கொத்துனேன்_"

"இப்ப என்ன சோலியா_ இங்கனே வந்தே?"

"எளையவன் முருகேசன் வெஷயமா_."

உரலையாட்டிய கை மட்டுமல்ல; சர்வமும் நின்று போயிற்று. ஆவேசமாகத் திரும்பிய முகத்தின் வேகத்தில் மனசின் கனல் தெறிக்கிறது. பார்வையில் அப்படியொரு ருத்ரம்.

"அதைவுட்டுட்டு வேறபேச்சு பேசறுதுன்னா.. இங்கனே நில்லு..." என்று அவர் கத்திய கத்தலில் அழகேசன் அரண்டு போனான்.

16

காமாட்சி திடுக்கென்று பதறிப்போய்விட்டாள். அவள் உடம்பே கரண்டு தொட்டமாதிரி ஒரு துடிப்பு துடிக்கத்தொடங்கியது. பரமசிவத்தின் திடுமெனக் கூப்பாடு. அவர் கத்திய கத்தல்.

"அதை வுட்டுட்டு வேறபேச்சு பேசுறதுன்னா... இங்கனே நில்லு..." என்று அவர் போட்ட உச்சஸ்தாயிலான கோபக்கத்தல் இன்னும் சத்தஅலைகளாக உருள்வதாக.... ஒடுவதாக... அதிர்வு களாக இந்த முற்றம் முழுவதும் அலைகிறது.

பெற்ற தாயான காமாட்சி மனசுக்குள், ஆழத்தின் மடியிலும் அதே கூச்சலலைகள்.சத்த அதிர்வுகள்.

"இந்த மனுசரோட மனசைக் கரைக்கவே முடியாதா? எளையவன் முருகேசனை மன்னிக்கவே மாட்டாரா?"

அவளுக்குள் அச்ச நிழலிருட்டு. கற்றை கற்றையான பழைய நினைவுகள் அவர் போட்ட சத்தக்காட்டில் அரண்டு போன காமாட்சி இன்னும் மீள முடியாமல் தத்தளிக்கிறாள். அதே மிரட்சி. மருட்சி. அதே வெலவெலப்பு. வாயடைத்துப்போன அவளுக்குள் வார்த்தைகளே செத்த மாதிரியிருக்கிறது.

" பத்தாப்பு பெயிலாயிட்டனாம்லே ஒன்னோட மவன்?"

தெற்குத் தெரு வடிவக்கா துக்கமாக விசாரித்தாள். காமாட்சி நெசமா?" என்று கேட்டாள். எனக்குத் தெரியாதே"

"ஒம்மவன் வந்து சொல்லலியா ?"

"இல்லியே_ அவனுக்கே தெரியுமோ_ தெரியாதோ"

"வேற யாரும் ஒனக்குச் சொல்லலியா ?"

"சொன்னா... நா என்னத்துக்கு நெசமான்னுக் கேக்கப் போறேன்"

காமாட்சி கலங்கினாள். பெயிலான துக்கச் செய்தியை மகனிடம் எப்படிச் சொல்வது ? வாடிப்போவானே... வெக்கப்பட்டு, விசாரப்பட்டு முகம் இருண்டு போவானே...

மருகினாள். தெம்பும் தெளிவும் துடிப்புமாக நடந்துவந்து கொண்டிருந்தவள், இந்தச்செய்தியின் உலுக்கலில் துவண்டு சரிந்துவிட்டாள். மனசளவில் உடைந்து நொறுங்கிப்போனாள்.

படிப்பில் பாதிப்பு வந்ததே என்பதைவிட.. இதைச்சொல்லி புள்ளை மொகம் வாடுற பாதரவை எப்படிக் கண்கொண்டு பார்க்கிறது ?

தெருவில் எதிர்ப்படுகிற பெண்கள் ஏதோ கேட்கிறார்கள். என்னவோ விசாரிக்கிறார்கள். உயிரில்லாத மனசோடு உலர்ந்த உயிரோடு எதையோ முணுமுணுத்துவிட்டு வீடுவந்து சேர்ந்தாள்.

பொழுதடைந்துவிட்டது. மஞ்சள் வெயிலும் கண்ணை மூடிக் கொண்டது. மேகத்துவெளிச்சம் தவிட்டுநிறத்தில் மிச்சமாக இருந்தது. இருளோடு வெயிலின் எச்சம் போடுகிற மல்லுக்கட்டின் கடைசிச்சுற்று.

வாசல்படியில் கவலை இருள்படிந்த முகத்தை உள்ளங்கையால் தாங்கி குத்துக்கால் வைத்திருந்த முழங்காலில் முழங்கையை ஊன்றி உட்கார்ந்திருக்கிற காமாட்சி. அப்போது தண்ணீரில் கழுவி யெடுத்த மம்மட்டியைத் தோளில் வைத்துக்கொண்டு டவுசரும் சட்டையுமாக வருகிற முருகேசன், முகத்தில் பருக்கள். வாலிப மினுமினுப்பின் அரும்புநிலை.

தண்ணீர் பாய்ச்சி விட்டு... ஒரு விவசாய வேலையை செய்துமுடித்துவிட்டு வருகிற விவசாயப் பெருமிதத்துடன் வருகிற அவன். பெரியாள் வேலையைச் செய்து முடித்த உற்சாக களிவெறி முகத்தில் தெரிகிறது.

"என்னய்யா ஒளையவனே அய்யாவை எங்கே?"

"கமலைவண்டி, உருளை வண்டி, கூனை வடத்தோட வண்டி யிலே அய்யா வர்றார்"

"நீயும் வண்டியிலே வரலாம்லே?"

"சாமான் செட்டுகளைச் சுருட்டித் தூக்கி வண்டியிலே போட்டுட்டு வர்றதுக்கு நேரமாகும்னு நாமுந்தி வந்துட்டேன்"

"ஒனக்கு தாக்கல் தெரியுமா? " என்று தயங்கித் தயங்கி வாடிப்போன குரலில் கேட்கிற காமாட்சி. ஒரு வருத்தத்தைச்சொல்ல முனைகிற மனப்பதற்றம். ஒருகுரல் நடுக்கம்.

அலட்சியமான குரலில் விளையாட்டுத் தனத்தோடு சர்வசாதாரணமாகக் கேட்டான்.

"என்னது? ரிசல்ட் தானே"

"ம். ம். ம்"

"தெரியும்"

காமாட்சிக்குள் ஆறுதலும் ஆச்சரியமுமான முரண்மனநிலை

"தெரியுமா?" என்று வியந்து கேட்டாள்.

"என்ன தெரியும்யா?"

"பெயில் னு தெரியும்"

"தெரியுமா..." என்று பலத்த சத்தத்தில் எதிரொலிக்கிறாள். அப்பாடா என்றொரு உணர்வு. ஆசுவாசம். மகன் வெட்கப்படவில்லை. வேதனைப்படவில்லை, முகம் கறுத்து வாடித் தொங்கவில்லை.

"ஒனக்கு வருத்தமாயில்லியா ?"

"வருத்தப்பட்டு என்னசெய்ய ? படிச்ச லட்சணத்துக்கும் எழுதுன லட்சணத்துக்கும் என்ன ரிசல்ட் வரும்னு எனக்குத் தெரியாதா ?"

மம்முட்டியை திண்ணையை ஒட்டி ஓரமாக நிறுத்தினான். அம்மா முகத்தைப் பார்த்து ஒரு நகைப்புடன் சிரித்தான்.

"அய்யா இம்புட்டு நாள் படிக்கவிட்டதே... அதிசயம். எப்படியும் மம்மட்டியை புடிடான்னு சொல்லத்தான் போறாரு... அதுக்கு நாரெடியாயிட்டேன்"

அவனது சிரிப்புக்குள்ளே ஓர் அழுகை பதுங்கியிருக்கிறது. ஒருமனத்தாங்கல். சோகத்தின் கனம், கண்ணின் வாட்டத்தில் தெரிகிறது.

அவன் உதடுகளில் சிரிப்பு உட்கார்ந்திருந்தாலும் உள்ளத்தில் அழுகையே ஆரவாரிக்கிறது என்பதை தாய்மனசுக்குச்சொல்கிற அவனது நெற்றிச் சுருக்கங்கள்.

"என்னய்யா_ படிக்கணும்னு ஆசையா ?"

"படிக்கவுடமாட்டாருன்னு தெரிஞ்சுகிட்டு அந்த ஆசையை முளைக்கவுடாம... வெந்நியை ஊத்திக்கிட்டேன்."

அவனது குரல் கரகரப்பு. சொல்லும் போது முகம் பார்க்காமல் நிலைமாறி, அலைபாய்கிறகண்கள். நீர்பாய்ந்த வாய்க்காலுக்குள்ளேயே நின்று நின்று வெளுத்துப்போன கெண்டைக்கால்சதையை பார்க்கிறாள். பாதத்தின் சருமமெல்லாம் நீரில் நனைந்து நனைந்து வரிகளாக ஓடியிருந்தது.

அவளுக்கு வந்திருந்த ஆசுவாசமும் ஆறுதலும் அற்பாயுளில் முடிந்தன. மகனின் குரல்கரகரப்பையும், அலைபாய்கிற கண்ணையும் பார்த்து.. குலை பதறி வந்தது. ஈரக்குலை கொதிக்கிறது. "ஐயோ... பாதரவே" என்று துக்கத்தில் துடித்தலறுகிற மனத்தாய்மை.

"ஏம்யா.. ஐயாவைக் கொடுமைக்காரன் மாதிரி நெனைச்சுக்குறே? அவரு ஒங்கமேலே எம்புட்டுப்பாசமா இருக்காரு? உங்களுக்கு ஒரு தடுமன்.. ஒருவயித்து வலின்னா அவரு பதறித்துடிக்குறதைப் பாத்துருக்கியா?"

"பெத்த புள்ளை மேலே பாசமா யிருப்பாரும்மா. இல்லேங்கல்லே. புள்ளைகளுக்கு சமமா மாடுகளையும் மண்ணையும் பாசமா நெனைப்பாரும்மா. அதுவும் நெசந்தான். ஆனா_ காடுகரைக வேலை பாதிக்கும்னா படிப்பை முக்கியமா நெனைக்க மாட்டாரும்மா"

"காடுகரைக இல்லாமலா நாம முன்னேறினோம்? மண்ணுதானே நம்மளை பொன்னாக்கிச்சு?"

"அதையும் இல்லேன்னு சொல்லலைம்மா"

"படிக்குற ஆசை இருந்து_ அதைப்பக்குவமாசொல்லி யிருந்தா மாட்டேன்னு மறிச்சுரவா செய்வாரு?"

"அண்ணனை மறிக்கலியா?"

மெதுவான குரலில் பேசுகிற மகன். நிதானம் சிதறாமல், அளந்து அளந்து வார்த்தைகளைப் பேசுகிற அவன். விவரமாகவும் விவகாரமாகவும் பேசுகிற முருகேசன்.

அவன் பேச்சில் நியாயம் இருப்பதைத் தட்ட முடியவில்லை.

அண்ணன் அழகேசன் எட்டு படித்துக் கொண்டிருந்தான். முழுப்பரீட்சைக்கு படிப்பில் தீவிரமான சமயம்.

"அழகு என்னடா செய்யறே?"

"பாடம் படிச்சுக்கிட்டிருக்கேன்"

"மழைவர்ற மாதிரி இருக்கு... களத்துலே காய்ஞ்சுக்கிட்டிருக்கிற மொளகா வத்தலைக் கூட்டி வைடா_"

"படிக்கணும்யா"

"வகுப்புலே படிக்காததையா இப்ப படிச்சுருவே? மழை வந்துச்சுன்னா பணம்பெணத்த வத்தல், பாழாய்ப்போயிரும்டா"

பயமும் தயக்கமும் சரிவிகிதமாக முகத்தில் கலவையாகி... குழப்பமும் திகைப்புமாக மருளுகிற கண்கள். கெஞ்சுகிற கண்கள்.

"ஐயா_ பரிச்சை நெருங்கியிருச்சுய்யா"

பயந்து நடுங்கி மிரள்கிற கெஞ்சல்குரல்.

"கோடை மழைடா. திடுதிப்னு வந்து தலையிலே வுழும்டா. மொளகா வத்தலை மழைக்கு நனைய வுடுற சம்சாரியை, ஊரு காறித்துப்பிரும்டா"

"இல்லேய்யா_ வந்துய்யா_ பரிச்சையய்யா"

பரமசிவத்துக்கு பொசுக்கென்று வந்துவிட்ட கோபம். மட்டியை கடித்துக்கொண்டு கண்ணை உருட்டிக் கொண்டு_

"இல்லேய்யா... லொல்லையய்யாவா? போடா எந்திச்சு. போய் வத்தலைக்கூட்டு. கூட்டலே ராஸ்கல், தொலியை உரிச்சுடுவேன்_"

கண்ணீரும் அழுகையில் பிதுங்குகிற உதடுகளுமாய் கண்ணைக் கசக்கிக் கொண்டே எழுந்த அழகேசனைப் பரிதாபமாக பார்க்கிற சின்னவன் முருகேசன்.

பைக்கட்டையும் புத்தகங்களையும் அப்படியே போட்டு விட்டு ஓடுகிற அண்ணனைத் தொடர்ந்து ஓடலாமா என்று நினைத்த முருகேசன் _ அம்மா குரல்கேட்டு நின்றான்.

"பாவம் சின்னப்பய.. அவன்தான் பரீட்சைங்குறான்... படிக்கட்டுமே_ என்னத்துக்கு இம்புட்டு அதட்டி வெரட்டணும்?"

"வம்பாடுபட்டு வெளைய வைச்ச வெள்ளாமை, மொளகா வத்தல். மழையிலே பறிகுடுத்துட்டு, எந்தச்சோத்தை திங்க?"

"புள்ளைக படிக்க வேண்டாமா? நம்மளை மாதிரியே கண்ணவிஞ்சு போகணுமா? புள்ளைபடிக்குறதுனாலே புஞ்சை வேலை பாதிச்சா நாமதான் பார்க்கணும்?"

முருகேசனுக்கு அம்மா அம்மாவாகத் தோன்றினாள். பாசமான அம்மா. பரிவான அம்மா. அறிவால் கனிந்த அம்மா.

கடுசான அய்யா. கடுவன் பூனை அய்யா. பிள்ளைகளை மண்ணில்போட்டுவசக்கி படிப்பிலிருந்து பிரிக்க நினைக்கிற அய்யா. புத்தகத்தைப்பிடுங்கி, வாயில் போட்டு மெல்லுகிற-சிலேட்டையும் நொறுக்கி வாய்க்குள் மொக்குகின்ற ராட்சஸ அய்யா.

அய்யா அம்மா பக்கம் திரும்புகிறார். கோபமில்லாத முகம். நிதானப்பட்டிருந்த கண்கள். பரிவாக நிறம் மாறியிருந்த பார்வை.

"காமாட்சி... இங்க பாரு. தெக்காடு மட்டும் தான் எங்க ஐயா தந்தாரு. ஒழைச்சு ஒழைச்சு சம்பாதிச்சிருக்கோம். சம்பாதிப்போம். யாருக்கு? நம்ம பயலுகளுக்குத்தானே? நிலமும், வீடும் கொஞ்சம் படிப்பும் நம்ம புள்ளைகளுக்கு நாம தருவோம். நம்ம புள்ளைக அவுக புள்ளைகளை பெரிய படிப்பு படிக்கவைக்கணும். அதான் ஞாயம். அதான் நடக்கக் கூடியது. தெரியுதா?"

கையைக் கையை நீட்டிப்பேசுகிற அய்யா. தெரியுதா என்ற கேள்வியோடு வலது உள்ளங்கையை நிமிர்ந்து விறைப்பாக நீட்டிய அய்யா. தனது பக்க நியாயத்தைச் சத்தமாக உயர்த்துகிற மனஆவேசம்.

"எங்க அய்யா சீமான் இல்லே. எனக்குக் கண்ணும் தரலே. எண்ணும் தரலே. அதனாலே நா அழிஞ்சு போகலே. கடவுள் மாதிரி நீ வந்து வாய்ச்ச புண்ணியத்துலே... நா ஒண்ணுலேயும் கொறைஞ்சபோகலே. காமாட்சி ஒண்ணு தெரிஞ்சுக்கோ. உழைப்புங்குறது சூரியனை மாதிரி. ஆதியிலும் ஆதியானது. படிப்புங்குறது நெலாமாதிரி. உழைப்புதான் படிப்புக்கு வெளிச்சம் தரணும். நெலா இல்லாம வாழ்ந்துரலாம். சூரியன் இல்லாம ஒத்த உசுருகூட இருக்க முடியாது... புரியுதா?"

அவரது ஆவேசத்தில் அவர் திரேகம் நடுங்குகிறது. நீண்டு வளைந்து அசைகிற கைகளில் ஒருவைராக்கியம். சுய தெளிவின்

தன்னம்பிக்கையோடு முகம் சினக்காமல் வார்த்தைகளை தெறித்தோடவைக்கிற நிதானம் நிறைகுடத்து நிதானம்.

பாட்டாளியாக... தன்னைப் புரட்டி எடுக்கிற மன்மதக் கூட்டாளியாக மட்டுமே பார்த்திருந்த காமாட்சி, தன் புருஷன் இம்புட்டு வெவரமா பேசுற பேச்சாளியா என்று ஒரேயடியாக அசந்து போய் உறைந்துபோய்நிற்கிறாள்.

கன்னத்தில் வளைந்த சுட்டுவிரல் நிற்க_ பிளந்த வாய்மூடாத ஆச்சரியத் திணறலில் நிற்கிற அம்மா.

குற்றம் சாட்டப்பட்ட பொறுப்புணர்ச்சியின் குமுறல் உணர்ச்சி, அய்யாவிடம் தந்தை என்னும் பாசமும் பொறுப்புமிக்க சிம்மாசனத்தை அபகரித்த அநியாயத்துக்கெதிரான போர்க்குரல்.

தன்னை_ தந்தையாக நிரூபிக்கிற தன்மானத்தீவிரம்.

முருகேசனுக்கு அய்யாவைப் பார்க்க பயமாக வந்தது. சாமி அருள்வந்து ஆடுகிறவரைப்போல அய்யாவின் பேச்சும், கைவீச்சும்.

அவர் சொல்வது ஒன்றும் சின்னவனுக்குப் புரியவில்லை. ஆனால் அய்யா கொடுமைக்காரரில்லை. அண்ணனைக்கொத்தி விரட்டிய கொடும் பருந்தல்ல. அவரிடம் ஏதோ ஒருநியாயம் இருக்கிறது. இப்போது அய்யா...

கடுவன் பூனையாக ... கடுசானவராக... தோன்றவில்லை. அம்மா, அம்மாவாகவும் அய்யா அய்யாவாகவும் தோன்றுகின்றனர்.

முருகேசனுக்கு சுவாரஸ்யம் வடிந்துவிட்டது. இனி, பார்ப்பதற்கு நாடகம் இல்லை. நாடகம் முடிந்துவிட்டது.

ஓட்டமெடுத்தான்_ அண்ணனைத்தேடி.

முருகேசன் மம்பட்டியை நகர்த்திவிட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான்.

"எட்டாப்புலே அண்ணன் பெயில். பத்தாப்புலே நாபெயில்.

சொன்ன சொற்களில் சோகம் கனத்த சுமையாக இருந்தது.

பெயிலாக வில்லை. அய்யாவால் பெயிலாக்கப்பட்டோம் என்ற குமைச்சலும் வலியும் அலறுகிறது.

காமாட்சிக்குள் ஒருவலி. மின்னலைப்போல வெட்டி, அதிர்ந்து பரவுகிறது. பிள்ளையின் குமைச்சலில் தாயின் மனசு, கிடந்து துடிக்கிறது. குத்துண்ட பறவையின் உடல் போல, வலிக்கிற அம்மா மனசு.

அவர் பக்கமும் நியாயம் இருக்கிறது. தலைமுறைக் கடமைகளைத் தவறாமல் நிறைவேற்றுவதாக அடித்துச் சொல்கிற அந்த ஆள்.

"எங்க அய்யா ஒரு புஞ்சையும் கல்லாமையும் தந்தாரு. நாம புள்ளைகளுக்குக் கூடுதலாக புஞ்சைகளும், கொஞ்சம் கல்வியும் தருவோம். புள்ளைக. அவுக புள்ளைகளுக்குப் பெரிய படிப்பு தரட்டும். கோட்டு, சூட்டு போட வைக்கட்டும்.

இந்த நியாயத்தை இளையவன் புரிந்துகொள்ள மறுக்கிறானே! ஏதோ அய்யா அநீதி இழைத்துவிட்டமாதிரி ஊமைக்கொந்தளிப்பாக_ உணர்வுக்குமைச்சல் காட்டுகிறானே_

அழகேசனிடம் இந்தக்குமைச்சல் இல்லை. எட்டாப்பில் பெயிலானாலும், அதை ஒரு பெரிய அவமானமாகக் கருதுகிறவயது வரவில்லை. அது ஒரு சம்பவம். அவ்வளவுதான். விளையாட்டும் வேடிக்கையுமான விவசாயப்பணிகளின் மும்முரங்களில், எந்தக் குமுறலும், நிற்கவில்லை. குமைச்சலும் நிலைக்கவில்லை.

"இது இயல்புதானே" என்று ஏற்றுக்கொள்கிற பக்குவம் வந்துவிட்டது. காட்டுவேலைகளிலும் மாட்டு வேலைகளிலும் பிஞ்சு வயசான பதினாலுவயதிலேயே இறக்கிவிட்டதில், ஈடுபட வைத்ததில் அதில் மனசுலயிக்க ஆரம்பித்துவிட்டது. மண்ணோடு கட்டிப் புரள்வதும் மாட்டோடு மாடாகப் புரண்டு உருள்வதும் மனசுக்குப் பிடித்துப்போயிற்று.

எப்பவாவது .தன்னுடன் படித்தவன் வாத்தியாராகி நிற்கிறபோது ஓர் இழப்புணர்ச்சி மெல்லத் தலைகாட்டும்.அதுவும் நீரில் வந்த நுரை முட்டைபோல, மாயமாகிவிடும்.

வாத்தியார் சம்பளம் வக்கறவனின் கையறுகதியாயிருந்தது. வாழவைக்கிற தருமபுரபுபோல,சம்சாரி கை உயர்ந்திருந்தது. வாத்தியார்கூட.. படிப்பை பாதியில் விட்ட இவனிடம் வந்து சுரைக்காயுக்கும், ஓசிப்பீர்க்கங்காய்க்கும் தான்ய இரவலுக்கும் கையேந்தி நிற்கிற யதார்த்தத்தில். படிக்காத இழப்புணர்வு மறைந்து மாயமாகிவிடும்.

முருகேசன் பத்தாப்பு பெயிலாகிறபோது, வயது பதினைந்து, தோல்வியின் வலியை உணரமுடிகிற வயது. கூடப்படித்த பெண் பிள்ளைகள் யாவரும் பாஸாகிவிட— இவன் தோற்றுச் சரிகிறான்.

இது அவமானம், தலைக்குனிவு.

நாளைக்கு- அந்தப்பெண்பிள்ளைகள் முகங்களை எவ்வாறு ஏறிட்டுப் பார்ப்பது? அவமானத்தீயின் தகிப்பை எவ்வாறு தாங்கிக்கொள்வது?

லட்சுமியின் (கூடப்படித்தவள்) பெரிய கண்களை எப்படி நோக்குவது? இம்புட்டுதானா நீ? என்று கேட்காமல் கேட்கிற விழியசைவை எப்படி எதிர்நோக்குவது? எப்படிப் பொறுத்துக் கொள்வது? அய்யா, நம்மை அம்மணமாக்கி, தெருவில் நிறுத்தி விட்டார்— நிறைசபையில் இடைத்துணி உருவப்பட்ட பாஞ்சாலி போல, குமுறுகிற முருகேசன் அவமானத்தில், அடிபட்ட புலியென உறுமுகிற மனசின் கோபம், முழுமையாக அய்யாமீது பாய்கிறது.

அய்யாவை மன்னிக்க மறுக்கிறது அவன் இளமனசு.

அழகேசனுக்கு அநீதிஇழைக்கப்பட்டபோது, அய்யாவை நியாயப்படுத்தி நினைக்க முடியவில்லை.

தனக்கு வந்த தலைவலி. தானே துடிக்கிற வலி. தனக்கு வந்த காய்ச்சல். எனது நாசிதான் காந்துகிறது. எனது கண்கள் தான் காந்தும். எனது உடம்புதான் கொதிக்கும்.

அய்யாவை மகனே விரோதியாக நினைக்கிற இந்தக்கொடுமையை எங்குபோய்ச் சொல்லியழுவது என்று நினைத்து நினைத்து அழுகிற காமாட்சியின் தாய் மனசு.

தவிப்பும் அழுகையுமாகக் காமாட்சி. மகனை விளக்கித் தெளிவு பண்ணி வைக்கவும் தெரியவில்லை. புருஷனை விட்டுக் கொடுத்துவிட்டு, விலகி நிற்கவும் முடியவில்லை.

தவிக்கிற தாயாக... தாரமாக... காமாட்சி.

17

"தைமாசம் தடவு பழம்" என்பது சொலவடை. மிளகாய் வெள்ளாமைக்கு மட்டுமே உருவான சொலவடை. ஐப்பசி கார்த்திகையில் நடுவை நடந்தால்.. மார்கழியில் பூ. காய் தெரிந்து, தைமாசத்தில் புஞ்சை பூராவும் அங்கொன்றும் இங்கொன்றும் குட்டி ரத்தமின்னல்களாகத் தொங்குகிற மிளகாய்ப் பழங்களைத் தடவித்தடவி பறிப்பதாக அர்த்தம்.

சொலவடை தான் அப்படி. தைமாசம் பார்த்தால், மிளகாய்ச் செடி கொழை மோதி அடர்த்தியாக இருக்கும். மூக்குத்திகளை அள்ளி இறைத்த மாதிரியான பூக்களின் சிரிப்பு. பச்சைநிற மிளகாய்களின் தொங்கல்கள். வாய்க்கால் வரப்புத்தவிர, வேறு புஞ்சை மண் எதுவும் தெரியாத அளவுக்குக் கரும்பச்சை நிறத்துச் சமுத்திரமாக மிளகாய்ச் செடிகள். பூவும், காயுமாக நிறைமாசக் கர்ப்பிணியாகக் கனிந்து மின்னும் மிளகாய்ச்செடிகள்.

மாசிமுதலில் தான் முதல் பறி வரும். ரத்தப்பொட்டாக மின்னுகிற மிளகாய்ப்பழங்கள். பங்குனியில் மூன்றாவது பறி வரும். அந்த மூன்றாவது பறியில் வருகிறமிளகாய்ப் பழங்களிலிருந்து தான் விதைக்கான பழங்களைப் பொறுக்குவது பரமசிவம் பழக்கம்.

பழம், நீளமாக இருக்கும்.விதை நெருக்கமாக அடர்த்தியாக இருக்கும். இருக்கும் விதைகளும் முற்றி முழுமைபெற்று, நூறாயிரம் பழங்களை உள்ளடக்கியிருக்கிற முக மினுமினுப்போடு இருக்கும்.

"மூன்றாம் பறியில் விதைவத்தல் பெறக்கணும்" என்று பரமசிவம் குறி வைத்திருந்தான்.

காமாட்சியுடன் பத்து பெண்கள். கூலிப்பெண்கள். மிளகாய்ப்பழம் பொறுக்கினார்கள். ஆளுக்கொரு சாக்கு. பத்து சாக்குப் பழங்கள் புஞ்சையில் கிடக்கிறது. குலுக்கிக் குலுக்கி நிறைத்தசாக்கு. காட்டுக்கொடிகளைப் பிடுங்கி அதனால் மிளகாய்ப்பழச்சாக்குகளின் கழுத்துகளைக் கூட்டிப்பிடித்து கட்டிப்போட்டு.. பத்துச்சாக்குகளையும் பாதையோரத்துப்பொழியில் கொண்டு வந்து அடுக்கி வைத்துவிட்டனர்.

பரமசிவம் பண்ணரிவாளோடு எங்கோபுறப்பட்டுக் கொண்டிருந்தார்.

" காமாட்சி நா நாத்துக்கூளம் அறுக்கப் போறேன்."

அடுப்பங்கரைக்குள்ளிருந்து அசரீரியாகக் கேட்கிற காமாட்சி குரல்.

"மௌகாப்பழச்சாக்கைத் தூக்கிட்டு வரவேண்டாமா ?"

"ஏலேய்.. எளையவனே."

என்று சவுண்டுவிட்டார். பெரிய அதார்ட்டியான குரல்.

முருகேசன் வெளியே வந்தான். முழுத்த இளவட்டம்.

கைலியும் பனியனுமாக நின்றான் வந்து.

"என்ன அய்யா"

கரிய மினுமினுப்பான மீசையை ஒதுக்கியிருக்கிறான். முகமெல்லாம் முகப்பரு. மாறிமாறி சோப்புப்போட்டுக் கழுவித்துடைத்த முகப்பளபளப்பு. படிப்பின்வாசம் நடை உடை பாவனையில்.

கைலியை கட்டியிருப்பதில் கூட அந்தத் தனித்துவம். கைலியை வட்டத்தையல் போட்டு.. இடுப்பில் கட்டியிருந்தான். இடதுபக்க வலதுபக்க மடிப்புக்குள் இரண்டும் சமவிகிதமாக இருப்பதாலேயே ஓர்அழகு வந்திருந்தது. பனியன் பளீர் நீலவெண்மையில்.

ஆபீஸர் மாதிரி வந்து நிற்கிற தோரணையில் தோற்றமளிக்கிற மகனை வெறுப்பும், சிடுசிடுப்புமாகப் பார்க்கிறார்.

"எளையவனே.. புஞ்சையிலே பதினோரு பழச்சாக்கு கெடக்கு. அம்மா அடுக்கி வைச்சிருக்கா. போய்த்தூக்கிட்டு வந்துரு.."

"ஆட்டும்ய்யா.."

"அயத்துராதேடா.."

"இல்லேயா.."

பரமசிவம் அரிவாளோடு கரிசல் காட்டுக்குப் போனார்.

அவர் போட்ட உத்தரவிற்குள், சொல்லாமல் விடுபட்டுப் போன விஷயம்," வண்டிமாட்டைப் பூட்டிக்கிட்டுப்போய் பழச்சாக்குகளைத் தூக்கிட்டு வா" என்பதுதான்.

ஏன் சொல்லவில்லை? மாற்றுவழி இருப்பதாக பரமசிவத்துக்குத் தெரியாது. பழச்சாக்கைத் தூக்குவதென்றால் வண்டிமாடு பூட்டித்தான் என்பது பழகிப் போன விஷயம்.

அரைக்கைச்சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியேறுகிற முருகேசனின் கால்களில் நீலக்கலர் செருப்பு.

அவன் நடக்க நடக்க .. "சடக், சடக்" கென்று லயப்பட்ட சத்தம் வருகிறது. சாயங்காலவெயில் தரையில் விழுகிறது. கன்னமேடு களில் விழுகிற வெயிலுக்கு கண்ணைச்சுருக்குகிறான்.

சுப்புராஜைத் தேடினான். டீக்கடைப்பக்கத்தில் நிற்கிற சுப்புராஜ். "டிராக்டர் வருமா?" என்று விசாரிக்கிற முருகேசன்.

"எங்க?.."

"மொளகாப்பழச்சாக்கு தூக்கணும்"

"எம்புட்டு?"

"பதினொன்று"

"எங்கே ? பாதை மேலேயா, முள்ளு மொடல் கெடக்குற தரிசுலே உள்ளே போகணுமா?"

"பாதைமேல தான்"

"சரி போவோம்"

"லோடு ஏத்துறது ?"

"டிரைவரோட ஓர் ஆளைக் கூப்பிட்டுக்குவோம். வண்டிக்கு நூறுரூபாய்.தூக்குக்கூலி நாப்பதுரூபாய். சம்மதமா ?"

"ம்"

"ரூவா இப்ப இருந்தா... நல்லது. டீசல் வாங்கிக்கலாம்."

"நாளைக்குத்தாரேன், ஐயாகிட்டே வாங்கி..."

வண்டி மாடு அலுங்காமலிருக்க... பதினோரு மூடை பழங்களும் களம் வந்து இறங்கிவிட்டன. முருகேசனுக்குள் மகிழ்ச்சி. நவீன முறை விவசாயம் என்பது இதுதான் என்பதை அய்யாவுக்கு உணர்த்த வேண்டும்.

பொழுதடைய பச்சை நாற்றுக் கூளக்கட்டுடன் தினறித் தவித்து வருகிற பரமசிவம். கழுத்தொருகிறகனத்த கட்டு. மூச்சுத் தினறுகிறது. நெஞ்சுக்கூடு நெரிகிறது. ஆனாலும் மனம் தளராத பரமசிவம். கட்டைஒரு கையால் பற்றிக்கொண்டு வலதுகையை வீசி வீசி.. நடையைத் துரிதப்படுத்துகிற பரமசிவம்.

வியர்த்துக் கொட்டுகிறது. உடம்பெல்லாம் வியர்வைக்கசிவில் ஒட்டியிருக்கிற உலர்ந்த தூசிகள். வேகம் வேகமாக நடக்கிற துரிதம். பாரம் தாளாமல் வளைகிறகால்கள். மனோபலத்தில் நடக்கிறது.

வீட்டு முற்றத்தில் வந்தவுடன் தின்ணையில் கொண்டுவந்து "பொத்த்" தென்று போடுகிறார். இறுகிக் குறுகிய கழுத்து நிமிர மறுக்கிறது. பின் கழுத்து எலும்பு குரங்கு வலிப்பாக வலித்துக் கொண்டுபோகிறது.

வலதுகையால் பின் கழுத்து எலும்பை அழுத்தி அழுத்தி நீவி விடுகிறார். நேர்நிலைக்குக் கொண்டு வருகிறார். ரோமச்சுருள் அடர்த்தியாக உள்ள ரெண்டு கைகளையும் வீசி வீசி உதறுகிறார். விறைத்து விம்மிப்புடைத்து ரத்த ஓட்டமே திகைத்துப்போய் நிற்கிற

அளவுக்கு விடைத்திருந்த ரத்த நாளங்களெல்லாம் ஓங்கி உதறஉதற உயிர்ப்புற்று இயங்குகின்றன. ரத்த ஓட்டம் நிகழநிகழ வலியும் கடுப்பும் குறைகிறது.

"பொத்" தென்ற சத்தம் கேட்டவுடன் செம்புத்தண்ணீருடன் வெளியே வருகிற காமாட்சி.

"அதுக்குள்ளே வந்துட்டீங்களே?"

"பச்சை பசப்பு தின்னா—பசு மாடுக, செழிச்சுப் பாலுதரும்னு சொன்னது நீதானே?"

"ஆமா-ஆமா"

"எளையவன் எங்க? வண்டி மாட்டை மாட்டுனானா?"

" மாட்டுன மாதிரி தெரியலே.. மாடுக தொழுவுலேதான் கெடக்கு" பரமசிவம் குரலில் கோபச் சூடு உயர்ந்தது.சத்தம் அலைஅலையாக அதிர்ந்து உயர்கிறது.

"அப்ப- மொளகாப்பழச்சாக்குகளைத் தூக்கிட்டு வரலையா?"

"என்னமோ தெரியலை. உங்ககிட்டே நூத்திநாப்பது ரூவா வாங்கிவைக்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தான்."

"நூத்திநாப்பது ரூவாயா? என்னத்துக்காம்?"

"என்ன கூத்தோ- என்ன பாட்டோ?" எனக்குத்தெரியலே"

பரமசிவத்துக்குக் கோபம் கோபமாக வந்தது. நெஞ்செல்லாம் கிடந்து காந்தியது. வந்த கோபத்துக்கு அந்தச்சின்னநாயை நாலு சாத்தணும் போலிருந்தது. மனசு கிடந்து,"திகுதிகு"வென எரிகிறது.

கோப வேகத்தில் நினைவுகள் சகலமும் எரிந்து சாம்பலாயிற்று. நாற்றுக்கட்டு சுமந்துவந்த அலுப்பு. எலும்பு வலி, தோள்பட்டை ரணம், முழங்கால் கடுகடுப்பு எல்லாமே அயத்துப்போயிற்று(மறந்துவிட்டது). ஒரே நினைவுமட்டுமே பெருந்தீக்கற்றையாக ஜ்வாலையாக விட்டெரிகிறது.

"அந்தச்சின்னநாயை நாலுமிதி மிதிச்சாகணும்"

தண்ணீர் குடித்த செம்பை திண்ணையில் வீசிஎறிந்தார். நாடியிலும் நெஞ்சு ரோமங்களிலும் வழிந்த நீர்க்கோடுகளைக்கூட துடைத்துக்கொள்ள மதியுமில்லை. நிதானமுமில்லை.

விறுவிறுவென்று வெளியேறினார். ஒருபுயல்,கைவீசி நடக்கிற மாதிரி இருந்தது. காமாட்சிக்கு மனசெல்லாம் கிடந்து பயத்தில் அடித்துக்கொண்டது.

"இம்புட்டுக் கோபப்பட்டு இந்த மனுசரை என்னிக்கும் பாத்ததில்லையே... இப்படி சண்டாளக் கோபத்தோட சுடுப்போட மனுசரு... என்னென்ன கூத்துகட்டப்போறாரோ? என்னென்ன கொடுமையெல்லாம் வந்து விடியப்போகுதோ?"

என்று வாய்விட்டு அரற்றுகிற காமாட்சியின் பயமுகம். மனசெல்லாம் அச்சவியர்வை.

பரமசிவத்தின் ருத்ரக்கால்கள் தெருவில் வேகம் வேகமாக எட்டுப் போடுகின்றன. அகலஅகலமான எட்டுகள். கோபமூச்சின் சத்தத்தில் மனவெக்கை.

களத்துக்குப் போகிறார். பழச்சாக்குகள் இல்லாத களமாக இருக்குமோ என்ற யூகிப்பு. களத்தின் மையத்தில் பதினோரு மூடைகள் அடுக்கப்பட்டிருக்கின்றன.

கீழே மூன்றுமூடைகள். மேலே மூன்று மூட்டைகள். மூன்றாவது அடுக்கிலும் மூன்று மூட்டைகள். உச்சியில் இரண்டு மூட்டைகள். பழச்சாக்குகள் உலுக்கி உலுக்கி குலுக்கி குலுக்கி மிளகாய்ப்பழங்களைத் திணித்திருப்பதால் புடைத்திருக்கின்றன. திமிறி, வெடிக்கிற அளவுக்குப் புடைப்பு. சின்னச்சின்னக் கிழிசல்களில் தெரிகிற மிளகாய்ப்பழத்தின் ரத்த மின்னல்.

அவர் யூகிப்பு தவறிவிட்டது.

பயல், சொன்ன சொல்லை நிறைவேத்தியிருக்கான். அப்பன்பேச்சைத்தட்டலை. அலட்சியம் பண்ணலை.

வந்த திருப்தியில் கால்வெப்பம் தணிவதற்குள், அவர் கண்ணில்பட்ட காட்சி. பழச்சாக்கு அடுக்குவரை வந்து

திரும்பியிருந்த டக்கர் சக்கரத்தடங்கள். சாணிப்பாலும் தண்ணீரும் தெளித்து தெளித்து.. களமாக்கியிருந்த இடத்தில் புழுதிக்காட்டை எழுப்பிவிட்டுப்போயிருக்கிற ராட்சஸச் சக்கரத்தடங்கள்.

"என்னமோ தெரியலை.. உங்ககிட்டே நூத்திநாப்பதுரூவா வாங்கி வைக்கணும்னு சொன்னான்" காமாட்சியின் குரல், உள்ளுக்குள் ஒன்றாக பத்தாக_ நூறாக எதிரொலிக்கிறது.

இறுகிக்கிடந்த களத்தைப் புழுதிக் காடாக்கிவிட்டுப் போயிருக்கிற டக்கர் டயர்கள். நூத்திநாப்பது ரூபாய்.

அப்ப... அப்ப_ அப்ப... எளையவன் கை பழச்சாக்கை தொடலை. வெரல் நகத்துலே சாக்குத்தூசி கூட ஒட்டலை. முக்கித் தக்கி பழச்சாக்கை தூக்கலே. தலையிலே முட்டலை. சுமக்கலை. வண்டியிலே பாரமேத்தலை. போட்ட சட்டை கழத்தலை. வண்டியிலே பாரமேத்தலை. மாட்டுன செருப்பை எடுக்கலை. சோப்புப்போட்டு சோப்புப் போட்டு கழுவிக் கழுவித் துடைத்த முகத்துலே வியர்வை வழியலை.

டக்கர்லே வாடகை குடுத்து, தூக்கிச்சுமக்கிறவனுக்கு கூலிகுடுத்து.. பழச்சாக்குக வந்துருக்கு.

அப்ப... அப்ப... அப்ப... இவன் என்ன பண்ணையார் பரம்பரையிலே வந்தவனா? கதர்ச்சட்டையோட தேய்ப்பு கலையாம_ ஆளுகளை ஏவி வேலை வாங்குகிற பண்ணையார் பரம்பரையிலேயா... இந்தச்சின்ன நாய் வந்துச்சு?

உழுது உழுது உழுது.. காய்ப்பேறிய கையோட... உழைச்சு உழைச்சு காய்ப்பேறிய காமாட்சி கைகோர்த்து.. வம்பாடு பட்டு வேர்வை வடிக்கிற சம்சாரிக்குப்பொறந்தவன் தானா இவன்?

எங்கவம்சத்துலேயே, இந்தக்குணம் தலைகாட்டுனதுல்லேயே.. ஒழைப்பை மதிக்குற வம்சமாச்சே...! ஒழைச்சு ஒழைச்சு உலகத்தையே அழகாக்கலாம்னு நம்புறவம்சமாச்சே! ஒழைக்காம இருக்குறதை ஒசத்தியாகவும், ஒழைக்குறவனை அடிமையாகவும் நெனைக்குற இழிவுபுத்தி.. எங்க வம்சத்துலேயே கெடையாதே...

இந்த நாய், எங்க வம்சப் பாதை தானா? வம்சத்துலே-தப்பிப் பொறந்த தப்பிலிப் பயலா?

பரமசிவத்துக்குள் முடிவில்லாமல் நீண்டு, வளைந்து நெடிது பரந்து போகிற கொதிநினைவுகள். நினைக்க நினைக்கத் தீட்டப்பட்ட கத்தியாகத் தீப்பொறி பறக்கிற நினைவுகள்.

கும்பிட்ட கையின் உள்ளங்கைச் சதையில் காய்ப் பேறிய தடிப்பைப்பார்த்த கணத்தில், காலடியில் மனசைச் சரணடைய வைத்த என் மனக்காதலில் உள்ள உழைப்பு நேயம்.

தான் உழைப்பதை இழிவென நினைத்து. கூலி உழைப்பை அடிமைப்படுத்தி- பழச்சாக்குகளை இடம்மாற்றியிருக்கிற முருகேசன். அப்பனுக்குப்பாடம் சொன்ன சுப்பையாவின் பெயர் தான் முருகேசன். இவன் எனக்கு, என்ன பாடம் சொல்கிறான்?

கொதிக்கிற மனஉணர்வலைகள், கவலையின் காலடியில் மண்டி மண்டிச்சுழல்கிற கோப அலைகள்.

கவலையுடன் கைகோர்க்கிற கோப அலைகள். கவலைக்கரையில் மோதிமோதித்திரும்புகிற அலைநுரைகள்.

நம்மவம்சத்திலே ஒரு கள்ள ஆடு. மந்தையை விட்டுத் தப்பிப்போகிற ஆடு. பொழியில் கிடக்கிற புல்லைவிட்டுவிட்டு, புஞ்சைப்பயிரில் வாய்வைத்து, அத்து மீறுகிற ஆடு.

கள்ளஆடு, கல்லெறி வாங்குமே! கள்ள மேய்ச்சல் மேய்கிற ஆடு, ஆட்டுக்காரனிடம் கம்படி வாங்குமே..

நம்மபய.. தெசை தவறிப் பயணப்படுறானோ..

அவருள் அலைஅலையாக நினைவுகள். மகனின் வருங்காலம் குறித்து நினைத்து நினைத்துச் சோர்வும் அயற்சியும் அடைகிற மனசு. தகப்ப மனசு.

-மார்கழி மாசம். மிளகாய்ச்செடியில் சுருட்டை விழுந்திருந்தது.

"காமாட்சி நீ பெறக்கி பெறக்கி சேத்து வைச்சீயே... வேப்பமுத்து எங்க இருக்கு?"

"தொழுவுலே.. மேலமுலையிலே. ஆகாதுன்னு ஒதுக்கிப் போட்ட பழைய கூனையை வைச்சிருக்கோம்லே? அங்கனதான்"

"எம்புட்டு இருக்கும்?"

"பத்துப் பானைஞ்சு நாழி இருக்கும்"

"எடுத்து இடிச்சுஊறப்போடுவோமா?"

"மொளகாய்ச்செடியிலே பூராவும் கொழுந்துச்சுருட்டை நோய் இருக்கு"

"ஆமா..முந்தா நா நானும் பாத்தேன். சுருட்டை அடிச்சிருந்துச்சு"

"வேப்பமுத்தை நொறுக்கி.. ஊறப்போட்டு... ஆட்டுரல்லே போட்டு ஆட்டி, பாலெடுத்து-தண்ணியிலே கலந்து தெளிச்சோம்னா- சுருட்டைநோயைக் கொண்ணாந்த பூச்சி செத்துப் போயிரும்."

"மொதல்லே..அடுப்புச்சாம்பலை அள்ளிட்டுப்போய்... பனிப்பதத்துலே வெதைச்சுப் பாக்கலாமே?"

"அதுவும் சரிதான். நீ சொல்றதும் நல்லவழிதான்"

குத்துக்கால் வைத்து கம்பஞ்சோற்றைப் பிய்த்துப் பிய்த்து கத்திரிக்காய் குழம்பில் தொட்டுத்தொட்டு விழுங்குகிற பரமசிவம்.

"கொழம்புக்கு உப்பு போதுமா?" ஆவல் ஆவலாக விடை எதிர்பார்க்கிற பள்ளிச் சிறுமியைப்போல், விசாரிக்கிற காமாட்சியின் ஆர்வம்."

"ஓங்கைபட்டா...கத்தரிக்காய் கொழம்புக்கே புது ருசிவந்துராதா? வாசமும் ருசியும் சூறையாடுது"

"அப்ப இன்னும் ஒரு அகப்பை கம்பஞ்சோறு வைக்கட்டா..?"

"வை- வை- வை- வாங்கல்லேன்னா, மனசுக்குள்ளே என்னை வைவே?"

"வைய எனக்கு உரிமையில்லையா?"

அந்நேரம் வந்தான் முருகேசன்.

"என்னடா..சாப்புடுதீயா ?" வெறுப்பும் அழுகையுமாகக் கேட்கிற முருகேசன்.

"கம்மஞ்சோறுதானா ?"

"ஏன்.ராசாவுக்கு கம்மஞ்சோறு தொண்டைக்குழியிலே எறங்காதோ ? கசக்குமோ_ ?"

"ஊர் உலகம் பூராவும் காலம் மாறுனாலும் நம்ம வீட்டுக்கோலம் மட்டும் மாறவே மாறாது"

கடுப்பும் எகத்தாளமுமாகப் பேசுகிற முருகேசனின் குரலில் _ தலைமுறை இடைவெளியின் தூரக்காரம்.

என்னத்துக்குடா_மாறணும் ? அத்தை அம்மாஆகிவிடமாட்டா. அப்பன் மாமாவாகிவிட மாட்டான். எந்தக்காலத்துலேயும் நல்லது மாறணும்னு அவசியமில்லேடா. நல்லதுக்கு இடைஞ்சலா இருக்கிற தடைகள் தான் மாறணும்"

"கம்மஞ்சோறு நல்லதா, நெல்லுச்சோறு கெட்டதா ?"

ஆமடா.... சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கம்மஞ் சோறு நல்லதுதாண்டா. ஐ.ஆர்.எட்டு நெல்லுச்சோறு கெட்டதுதாண்டா"

"என்ன கெட்டது ?"

"கம்மஞ்சோறு அதுலேயும் நாட்டுக் கம்மஞ்சோறாதின்னு வர்றனுக்கு சக்கரை நோயே வராதுரா. ஐ.ஆர்.எட்டு நெல்லு மாதிரி ஒட்டுவீர்யத்தான்யச் சோறு தின்னுக்கிட்டே வந்தா.. சின்னப் புள்ளைக்குக் கூட சக்கரைநோய் வந்துரும்டா_"

புருஷனையும் பிள்ளையையும் மாறி மாறிப்பார்க்கிற காமாட்சி. காரசாரமாக விவாதிக்கிற மகன். தகப்பனிடம் எதிர்வாதம் பண்ணுகிற தன் வயிற்று உயிர்.

தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டமகனை சமதையாக எண்ணி_ சாக்குச்சரியாகப் பிள்ளையிடம் வாதாடுகிற பண்பு_

"நிறுத்துரா... முருகேசா.. ஒனக்குமட்டும் ஒழக்கு அரிசியைப் போட்டு ஆக்கி வைச்சிருக்கேண்டா. சாப்புடு_"

"நெசம்மா ?"

"ஆமாடா"

"அய்யா எப்புடி விட்டாரு (அனுமதித்தார்) ?"

"ஒங்க அய்யாவைப்பத்தி நீயறிஞ்சது அம்புட்டுத்தான். ஒன்னோட நெனைப்பறிஞ்சு அவருதான்டா ஒழக்கு அரிசியை உலையிலே போடச் சொன்னது..."

"அப்படியாய்யா ?"

முருகேசன் முகத்தில் பூ மலர்ச்சி. கண்ணில் ஒரு களி துள்ளல். மனசின் சந்தோஷ மின்னல்.

அய்யாவை மதிப்புடன் மரியாதையுடன் பார்க்கிறான். பாசத்தில் வந்து பக்கத்தில் சம்மணக்கால் போட்டு உட்காருகிற முருகேசனின் தலையை வருடுகிற அவரது இடதுகை.

"ஏய்யா.. இந்தக்காலத்துலேயும் வேப்பமுத்து வேணுமாய்யா ?"

"ஏண்டா ?"

"மோனா கிராப்ட்ஸ்னு ஒரு மருந்து வந்திருக்கு. ஸ்பிரேயர் வைச்சு நா அடிச்சுரட்டா..?"

"வேண்டாம்டா.. அது அடிச்சா துட்டுக்குப் புடிச்சசனியன். அதுமட்டுமில்லே. அந்த மருந்தடிச்சா.. சுருட்டைநோய் மாறிரும். ஆனா, தேன்நோய் வந்து அப்பிக்குடும்டா.."

"அப்ப வேண்டாமா ?"

"நீ நெல்லுச்சோறு சாப்புடுடா. வெவசாயத்தை நா பாத்துக்கிடுதேன்."

முகம் வெளுத்துவிட்டது முருகேசனுக்கு. அதிர்ந்து போனான்.

சரிசமதையாக மதித்துப் பேச்சு கொடுக்கிற அய்யா. அடி மனஉணர்வறிந்து அவருக்குப் பிடிக்காத ஐ.ஆர். 20 அரிசிச்சோறு ஆக்க அவரே அனுமதித்த அய்யா.

அய்யாவுக்காக அம்மா வக்காலத்து வாங்கி வாதாடுகிற போதெல்லாம்.. எதிர்வாதம் பண்ணி "அய்யாவைக் குறைசொன்னது தப்போ" என்று உள்மனக்குறுகுறுப்புக்காளான முருகேசன் குற்ற உணர்ச்சியில் மனம் குழம்பிய இளையவன்.

அதிர்ச்சிலிருந்து மீளமுடியாமல் வெல வெலத்துக் கிடக்கிறான். அய்யாவையே வெறிக்கிறான். மின்னலடித்த மேகம், தன்போக்கில் போவதைப்போல... அய்யா, எதுவும் நடக்காதது போன்று கம்மங்கழியைச் சுட்டுவிரலால் பிய்த்து, குழம்பில் தொட்டு, ஒரு புரட்டு புரட்டி உருட்டி வாயில் போடுகிறார்.

தொண்டைக் குழிக்குள் விழுங்குகிற இயக்கம்.

"கொஞ்சம் கொழம்பு ஊத்து" என்கிறார்.அம்மா எழுந்து அடுப்பங்கரைக்குள் நுழைகிறாள்.

"நீ நெல்லுச்சோறு சாப்புடுடா. வெவசாயத்தை நா பாத்துக்கிடுதேன்" என்று அலட்சியமாக எடுத்தெறிந்து பேசுகிற அய்யா.

"சொல்ற வேலையைச் செய். சோத்தைத்தின்னு. யோசனை எதுவும் சொல்ல வேண்டாம். அந்தத்தகுதி ஒனக்கு இல்லை" என்ற அர்த்தத்தில் ஒலிக்கிற அய்யாவின் அலட்சியம்.

நெல்லுச்சோறு வட்டிலில் ஆவிபறக்கிறது. வெள்ளை வெளேரென்று மல்லிகைப்பூவாகக்கிடக்கிற சோறு.

ஊற்றிய குழம்பு. பிசைகிறான். பிசைந்துகொண்டே யிருக்கிறான். சோற்றுக்குள் வெறுமனேஅலைகிற விரல்கள்.

"என்னடா.. சாப்புடாம, என்னையே பாக்குறே?" கோபத்திலும் அவமானத்திலும் துடிப்பதை உணராமல் சர்வசகஜமான குரலில் கேட்கிற அய்யா.

புண்பட்ட மனசின் வலியதிர்வோடு "ஒண்ணுமில்லே" என்கிற முருகேசன். அவனது கண்ணோரங்களில் மனவேதனையின் வெப்பநீர்க்கசிவு. அதை அய்யா பார்த்துவிடாமலிருக்க, சோற்றைப் பார்த்து ரொம்பக்குனிகிறான். நீர்த்துளி சுமந்த கண்ணிமை ரோமங்கள், வெட்டுப்பட்ட பல்லிவாலாகத் துடிக்கிறது.

அய்யாவின் மீது அரும்பி வளர்ந்து வந்த கோபம். பத்தாப்பு பெயிலானதிலிருந்து அய்யாமீதுள்ள வன்மம். அவருக்குப் பிடிக்காததையே செய்யவேண்டும் என்கிற மனவேட்கை.

அவருக்குப் பிடிக்காதது என்று தெரிந்திருந்தும், அதையே தைர்யமாக வெளிப்படையாகச் செய்வது. செய்துவிட்டு அய்யா, முகத்தைப் பார்ப்பது. அவர் முகமாற்றத்தை ரசிப்பது.

தனது எதிர்ப்பை... தனது விமர்சனத்தை... தனது அலட்சியத்தை அய்யா எப்படிப்புரிந்து கொள்கிறார் என்பதைக் கண்காணிக்கிற தைர்யம். அவர் வேதனைப்பட்டால்.. சோகப் பெருமூச்சுவிட்டால்... உள் மனப்பூரிப்போடு மகிழ்வது...

இதெல்லாமே சரிதான் என்று மீண்டும் உறுதி செய்து கொள்கிற முருகேசன்.. தனது சுபாவத்தை நியாயப்படுத்தி, தன்னைத்தானே உறுதி செய்து கொள்கிற அவன்.

அய்யாகிட்டே பேசித் திருத்த முடியாது. அவரு, அவருபாதையிலே பிடிவாதமா இருக்காரு..." என்று நினைத்துக் கொள்கிற முருகேசன்.

அரைக்கைச் சட்டையை எந்நேரமும் போடத்துவங்கியது அய்யாவுக்குப் பிடிக்காது என்பதால் தான்.

அய்யாவுக்கு வியர்வைக் கசிவெடுக்கிற மூஞ்சிதான் பிடிக்கும. சோப்பு போட்டு முகம் கழுவினால் பிடிக்காது. வெறுப்பின் சுளிப்போடு கண்களை இடுக்கிக் கொண்டு பார்ப்பார்.

அதற்காகவே – அடிக்கடி சோப்புபோட்டு முகத்தைக்கழுவுகிற முருகேசன். ஸ்லிப்பர் செருப்பு போடத்துவங்கியதும் அய்யாவுக்கு ஆத்திரம் வரட்டும் என்பதற்காகத்தான்.

அழகேசன்– அய்யா மாதிரி கைலியும் முண்டாசுப்பனியனும் போட்டுக்கொண்டு மாடே கதி என்று கிடப்பான்.

"அருஞ்சுனை கடைக்குப் போய்.. மஞ்சக்கெழங்கும் நெத்திலிக் கருவாடும், புளியும், சன்லைட் சோப்புக்கட்டியும் வாங்கிட்டுவாடா.." என்றாள் காமாட்சி.

"யார்கிட்டே சொல்றே ம்மா ?"

அழகேசன் புளிச்சிச்செடியை மரக்கட்டையால் அறைந்து நாராக்கிக்கொண்டிருந்தான். முருகேசன் சாண்டில்யன் நாவல் படித்துக் கொண்டிருந்தான்.

"யாராச்சும் போய்ட்டு வாங்கடா"

"யம்மா.. புளிச்சநாரை அடிச்சுக்கிட்டிருக்கேம்மா"

"அப்பன்னா..எளையவன் போய்ட்டு வரட்டும்"

பெருமூச்சுடன் புத்தகத்திற்குள் ஒருகுச்சியை வைத்து மூடிவிட்டு எழுந்தான். கைலியும் பனியனுமாக இருந்த முருகேசன், முகத்தை சோப்புப்போட்டு கழுவினான்.

பிடிக்காமல் வெறித்த அழகேசன். முகச்சுளிப்பில், அசூயை. முருகேசன் முகம் துடைத்த துண்டைக் கட்டிலில் போட்டுவிட்டு சுவரில் ஆணியில் மாட்டியிருந்த சட்டையை எடுத்து மாட்டினான். அழகேசன் கண்ணில் வெறுப்புடன் கோப்மும்.

"ஏலேய்...க்" என்று இறுகலான குரலில் கத்துகிற மூத்தவன். கண்டனத்தொனி.

"என்ன ?" எடுத்தெறிகிற அலட்சிய பாவனை.

"இந்தா... இருக்குற கடைக்குப்போய்ட்டுவர்றதுக்கு... சட்டை போடணுமா ?"

"ஏன்... ? ஒனக்கு வவுறு எரியுதா ?"

"நாலு வீடு தள்ளியிருக்கிற கடைக்குப் போறதுக்கு இம்புட்டு அலங்காரமா ? வவுறு எரியலே. மனசு எரியுதடா. வெளங்குற வழியைப்பாருடா...."

"ஏய்_ இங்கபாரு. சட்டை இருக்கு. போடுறேன். மூஞ்சி இருக்கு. சோப்பு போடுறேன். இதுலே வெளங்காமப்போக என்ன இருக்கு ?"

அழகேசன் எரிக்கும் கண்களால் பார்க்கிறான். கடுப்பும் கொதிப்புமாகக் குமுறுகிறான்.

"அய்யா... சட்டையே போடுறதுல்லேடா"

"அது அவரது காலம்"

"நானும் அடிக்கடி போடுறதில்லே"

" நீசுயபுத்திஇல்லாதவன். சுயசிந்தனை இல்லாதவன். செம்மறியாடு. அய்யா பின்னாலேயே போவே. நானும் அப்படியே இருந்தாகணும்னு சட்டம் இருக்கா ?"

காமாட்சியின் குரல் அசரீரியாக வருகிறது. பொறுமை சிதைந்த சிடுசிடுப்புடன் குரல்.

"ஏலேய்... வளவளா.. வைக்கப்படப்புன்னு பேசிக்கிட்டிரக்காமே அருஞ்சுனைத்தம்பி கடைக்குப் போய்ட்டு வாங்கடா"

"நா போறேம்மா..."

"எளையவனா ? வெருசா போய்ட்டு வாங்கிட்டுவா"

"மஞ்சக்கெழங்கு, நெத்திலிப் புளி வேற என்னம்மா ?"

"சன்லைட் சோப்புக்கட்டி"

"சரி சரி_ வாங்கிட்டு வாரேம்மா_"

ஸ்லிப்பர் செருப்புகளில் பாதங்களை நுழைக்கிற முருகேசனை. எகத்தாளமாக அழகேசனைப் பார்க்க.. அவன் உதடுகளை நெளித்து. பழிப்பு காட்டி..." உருப்பட்டாப்புலே தான்" என்று நக்கலாகச் சொன்னான்.

அவனது கோபத்திலும் சாபத்திலும் அய்யாவின் சாயல் தெரிந்தது. அதனாலேயே அதை ரசித்தான். "அண்ணனை கோபப்படுத்திவிட முடிந்து விட்டதே" என்ற மகிழ்ச்சி. அவனுக்கு.

சீண்டப்பட்ட அண்ணணின் கோபம் இவனுக்கு ரசனைக்குரியதாக இருந்தது.

அருஞ்சுனையை மாமா என்பான் இவன். அவர் அய்யாவை மச்சான் என்பார். அம்மாவை அக்கா என்பார்.

அருஞ்சுனை கடை வடக்குத்தெருவின் மையத்திலிருந்தது. கூரைவீடுதான். ஆனால், பெரியவீடு, கடையும் பெரியகடை தான்.

இந்த ஊரில் ஒன்பது கடைகள். அதில் உருப்படியான கடைகள் ரெண்டு. அந்த ரெண்டில் பெரியது, அருஞ்சுனை கடை.

அரிசி பருப்பு பருத்திவிதையிலிருந்து_ ஆஸ்ப்ரோ, அனாசின் வரைக்கும் சகல சரக்குகளும் இருக்கும். ஆத்திர அவசரத்துக்கு ஆர்.எஸ்.பதி. மருந்து கூடத் தயாராக இருக்கும். பிரசவம் ஆகிற பெண்களுக்கான கடைமருந்து எந்தநாளிலும் வாங்கலாம். இஞ்சி திப்பிலி,கருஞ்சீரகம் போன்ற சித்தவைத்தியத்துக்கான மருந்துகள் கிடைக்கும். வெட்டிவேர் மிளாச்சிகாய்கூட இருக்கும்.

அருஞ்சுனைக்கு பரமசிவம் மேல் ரொம்ப மரியாதை.

இப்பேர்ப்பட்ட பாட்டாளியை இலேசுலே பார்க்க முடியாது. எங்கேயும் கைசுத்தம், வாய்சுத்தம், நாணயத்துலே சத்யவந்தன். இவரோட பழக்கம் வைச்சிருக்குறதுக்கு குடுத்து வைச்சிருக்கணும்" என்று அடிக்கடி பெருமை பொங்கப் பேசுவான்.

செவ்வாய்க்கிழமை வந்துவிட்டால் போதும். வீட்டுவாசலில் வந்து நிற்பான். அருஞ்சுனை. "மச்சான்..."

"என் மாப்புளே ?" என்பார் பரமசிவம்.எதிர்த்திண்ணையைக் காட்டி, "இதுலே உக்காருன்னா..."

மச்சினன்மார்களை அழைக்கிற போது "வான்னா, போன்னா" என்பது பழக்கம்.

"ஏய் மாப்புள்ளே, என்னன்னா...நீ ரொம்பசேட்டை பண்ணுதீயாமே ?" என்பார்கள். சர்வசாதாரணமாக.

"ஏய்.. இங்க வான்னா.." என்பார்கள்.

அண்ணா அல்ல. அண்ணன் என்ற அர்த்தத்திலுமல்ல.

அருஞ்சுனை முகம் பார்க்கிறார். நல்ல சிவப்பு. பாதி நரை கண்ட தலைமுடி. வியாபாரிக்குரிய சுறுசுறுப்பு. நயப்பாங்கு. மென்மையான வார்த்தைகள்.

"என்ன மாப்புளே சொல்லுன்னா"

"வேழக்கெழமை ராசபாளையம் சந்தை. சரக்குப் போடுறதுக்குப் போகணும். கொஞ்சம் கைமாத்துவேணும்."

"எம்புட்டு ?"

"ஐநூறுரூவா இருந்தா.. போதும்"

"எப்ப வரும் ?"

"சனிக்கெழமை கையிலே வாங்கிக்கோங்க..."

"ஒஞ்சொல்லுலே சத்தியம் இருக்கும். வந்து வாங்கிட்டுப்போ.." எனபார்.

இவரும் ஏதாச்சும் காடுகரை, மாடுகன்னு வாங்குவ தென்றால்... அருஞ்சுனை ஆயிரம், ரெண்டாயிரம் இவருக்குக் கொடுத்து உதவுவான். அச்சமில்லாத பெருந்தன்மை. பரஸ்பரபக்கபலம்.

மச்சான்-மாப்பிள்ளை உறவுதாண்டிய ஒருநட்பு. இருவருடைய நாணயத்தின் வேரிலிருந்து எழுகிற நட்பு மரம். பரஸ்பரம் பண்புகளின் மீதான மரியாதையிலிருந்து காலுன்றி நிற்கிற அன்பு.

கடைக்கு முருகேசன் வருகிறபோது... கடைவாசலில் ரெண்டு மூன்று பெண்கள் குத்துப்பெட்டிகளுடன் நின்றனர்.

"எனக்கு முந்தி, ஒனக்கு முந்தி" என்று சரக்கு வாங்குவதற்கு முந்திக்கொண்டும் முண்டிக்கொண்டுமிருக்கின்றனர்.

"எனக்கு அடுப்புலே ஒலை கொதிக்குது. வெருசா சரக்கு தாரும்".

"எம்புள்ளை அழுதுகிட்டிருக்கு. அடிச்சி வீட்லே உக்காரவைச்சுட்டு வந்தேன். நா வெருசா_வீடு போகணும்"

அந்நேரம் வந்து கண்ணியமாக ஒதுங்கிநிற்கிற முருகேசன். அவனைப் பார்த்ததும்... அவசரப்பரபரப்பிலிருந்த அருஞ்சுனை முகத்தில் சட்டென்று மலர்ச்சி. முகத்தில் பூக்காடு.

"என்ன மருமகனே... என்னவேணும் ?"

சொன்னான்.

தராசில் நெத்திலிக் கருவாட்டை எடைபோட்ட வேகம். தூசி துப்பட்டையைப் பொறுக்கிச் சுத்தம் பண்ணிய அக்கறை. தாள் எடுத்து கணத்தில் சுருட்டி, ஒற்றைப்பிரி சணலால் சுற்றிய விறுவிறுப்பு. புளியை எடுத்து உருட்டி, பந்தாக்கி கையாலேயே எடையை நிதானித்து பேப்பரை ஒட்ட வைத்த லாகவம். ஆறேழு மஞ்சளையும் சன்லைட் சோப்பையும் ஒரே சீரில் தந்த சுறுசுறுப்பு.

"நீங்க போங்க மருமகனே... மாமா கணக்குலே எழுதிக்கிடுதேன்"

சொல் வாயிலிருந்து வரும்போதே_ சொக்கலால்பீடி இல்லாத வெற்றுக் கவரில் எல்லாச் சாமான்களையும் போட்டு, சுருட்டி நீட்டிய மின்னல்துரிதம்.

கடைவாசலில் காத்திருக்கிற பெண்கள் இருவரும் கடுப்புடன் இவனைப்பார்க்கின்றனர். பார்வையில் சற்றே வியப்பு.

அருஞ்சுனையைப் பார்த்து, கோபமாகக் கேட்கிற அவர்கள்.

" ஓலை கொதிக்குது, புள்ளை அழுகுதுன்னு .. நாங்க கூவல் காடு போட்டுக்கிட்டிருக்கோம். நீரு என்னடான்னா... ஒம்ம மருமகனுக்கு ராச உபச்சாரம் பண்றீர் ?"

"அவரு யாருன்னு பாத்தே ?"

"யாரு ?"

"பாலையநாயக்கரு புஞ்சைகளை வாங்குனாரே_"

"ஆமா... பரமசிவம்."

"அவரு மகன் தான்"

முருகேசனுக்குள் மனக்கசப்பு. தனக்குக் கிடைத்த தனித்துவ உபச்சாரமும், சிறப்புமரியாதையும் முருகேசனுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. பெருமிதம் தரவில்லை. பெருமை வரவில்லை.

மாறாக... ஒரு கசப்பே வந்தது. வெறுப்பும், சிடுகிடுப்புமாக மனசுகிடந்து கனன்றது.

ஏனென்றால்_ இந்த உபச்சாரமும் மரியாதையும் இவனுக்குக் கிடைக்கவில்லை. இவனுக்காகக் கிடைக்கவில்லை. பரமசிவத்தின் நட்புக்குக்கிடைத்தவை.

பரமசிவத்தின் மகன் என்பதால், கிடைத்த சலுகை.

அய்யாவோட பிச்சை. அய்யாவின் வாழ்க்கை பெற்ற மரியாதையின் தானம். அய்யாவின் உழைப்பும்,முன்னேற்றமும், பெருந்தன்மையும் பெற்றிருக்கிற புகழின் நிழல் போட்ட பிச்சை.

இவனுக்குப் பிடிக்காத அய்யாவுக்குரிய சலுகைளைப் பெறுவதில் இவனுக்கொரு கூச்சம். எரிச்சல். ச்சேய்... எங்க போனாலும் இதே தொல்லைதான் துரத்தித்துரத்தி வருகிற அய்யாநிழல். விரட்டிவிரட்டி வந்து படிகிற அய்யாவின் வாழ்க்கை.

வீடுவந்து சேர்கிற முருகேசனின் முகத்தில் வருத்தநிழல். வாசலில் நின்று எதிர்பார்த்து நிற்கிற காமாட்சி.

வாடித்துவண்டுவருகிற இளையவன் முகத்தில் வெட்டி வெயிலில் காய்கிற கொடி போன்ற வாட்டம்.

"என்னடா... எளையவனே"

"என்னம்மா"

"கடையிலே யாரும் என்னமும் சொன்னாங்களா ?"

"என்னமும்னா ?"

"ஒன்னைப் புண்படுத்துற மாதிரி யாரும் எதாச்சும் சொன்னாங்களா ? முகம் வாடிப்போய் வந்து நிக்குறீயே ?"

"யாரும் என்னை ஒண்ணும் சொல்லல்லே"

"பெறவு ?"

"இருந்த ஆளுகளை நிப்பாட்டிட்டு, எனக்கு அவசரமாக போட்டு சரக்குதந்தாரு, மாமா"

"சந்தோசப்படவேண்டிய வெஷயம் தானே ? என்னத்துக்கு கொறாவிப்போய் வந்து நிக்கே ?"

அழகேசன் குறுக்கிட்டு கோபத்தெறிப்ப கூறினான்.

"அது தானே அவனோட சிக்கல்"

அண்ணனை ஆத்திரமாகப் பார்க்கிற முருகேசன். சீற்றமும் சினமுமாகத் தெறிக்கிற இளையவன்.

"இந்தச் சோலியை யெல்லாம் வேற எங்குட்டும் வைச்சுக்கோ. ஏங்கிட்டே வைச்சுக்காதே."

"எந்தச் சோலி ?"

"என்னைப்பத்தி எந்த நாயும் கமெண்ட் அடிக்க வேண்டியதில்லே"

"நாய் கீய்னு சொன்னே... செருப்பு பிய்ஞ்சிரும்"

அழகேசனும் ஆத்திரமும் ஆவேசமுமாக விருட்டென்று எழுந்தான். வலது கையில் புளிச்ச நாரைத் தட்டிக்கொண்டிருந்த கனத்த மரக்கட்டை.

இறுகிப்போன கோபமுகத்துடன் முருகேசன். முகம் விறைத்து, சைடுபார்வை பார்க்கிற அவன்.

"என்னை அடிக்கப் போறீயா ?"

"பொடிப்பயலையெல்லாம் அடிச்சா... எனக்குத்தான் கேவலம்"

"நானா... பொடிப்பயல் ?"

"ஆமாடா. அய்யாவைப்பாத்து பெருமைப்படத்தெரியாத அற்பப் பயல். அய்யாவோட அருமையை உணரத் தெரியாத பொடிப்பயல்"

ஆவேசமும் ஆங்காரமுமாய்ச் சீறுகிற அழகேசன்.

"ஒழைக்குறதை பெருமையா நினைக்குறவரு, அய்யா. வேர்வையை அழகுன்னு மதிக்குறவரு. வேர்வையாலே ஒண்ணைப் பத்தாபெருக்கியிருக்கிறாரு. ஒனக்கும் எனக்கும் சொத்து சேர்த்து வைச்சிருக்காரு. வீடு, காடுன்னு ஆக்கி வைச்சிருக்காரு. அவரை மதிக்கத் தெரியாத பொடிப்பயல் நீ. சூரியனைப்பார்த்து குரைக்கிற நாயாலே... நாய்க்குத் தான் நட்டம்..."

அளவு மீறுகிற அண்ணன். அத்துமீறுகிற அண்ணன். அய்யாவைப் புகழ்கிறான்.

எதிர்த்துப் பதிலடி கொடுக்க... இவனுக்குள் வார்த்தைகள் இருக்கின்றன. உணர்வுகள் இருக்கின்றன. கோப நினைவுகள் இருக்கின்றன. கொந்தளிக்கிற உணர்ச்சிகள் இருக்கின்றன.

அத்தனையையும் இறுகி, முறைக்கிற பார்வையில் மட்டுமே கொட்டுகிற பார்வைவெக்கை.

மௌனம். சத்தமில்லாத மௌனம். ஆத்திரவார்த்தைகளும், ஆவேசக்குரல்களும் கொந்தளித்து, கூப்பாடு போடுகிற மௌனம்.

பேசமுடியாது. பேச வேண்டாம்.

பேசினால் பிரச்சினையாகும். பிரச்சினை பெரிதாகும். அம்மா ஓடிவருவாள். அய்யாவுக்காக வாதாடுவாள். அழுது ஆர்ப்பரிப்பாள்.

அய்யாவின் விவசாய முறைமைதான் பிடிக்காது. அந்த முறைமையைக் கடைப்பிடிக்கிற தீவிரமும், பிடிவாதமும் பிடிக்காது. ஆனால்...

அதற்காக அய்யாவையே ஒதுக்கிவிட முடியுமா? அவரது ரத்தமல்லவா நான்! அவரது முகமும், அகமும், குணமும் எனக்குள் இருக்கின்றனவே...

19

முற்றத்தில் வேப்பமரம். வேப்பமரத்தின் அடர்த்தியான நிழல். சாணிப்பால் விழுந்து விழுந்து இறுகிப்போன முற்றத்துத்தரையில் சாக்குகளை விரித்து அதன்மேல் விதைவத்தலைக் குவித்திருக்கிறாள், காமாட்சி.

மூன்றாவது பறியில் பிடுங்கிய மிளகாய்ப் பழங்களிலிருந்து, குத்தலோ, வெள்ளைப்புள்ளியோ அணில் கடியோ படாமல் முழுநிறைவளர்ச்சி பெற்ற தெறித்த பழங்களைத் தேடித் தேடித் தேர்வு செய்து.... வெயில் முகம் படாத நிழலிலேயே உலரப்போட்டு காயப்போட்டு..கூட்டிப்பெருக்கி குமித்த வத்தல்தான் விதை வத்தல்.

ரத்தமின்னலான சிவப்பு. பளீரிடாத கனிந்த சிவப்பு. நீளம் நீளமானவத்தல். நன்றாகக் காய்ந்த பின்னும் சுருக்கம் விழாத வத்தல். அந்தளவுக்கு அடர்த்தியான விதைகள்.

மூன்றாவது பறிப்பழம்தான் முழுமையைப்பெற்ற வளர்ச்சி இருக்கும். விதைகள் மணிமணியாக இருக்கும். பொக்கோ.. பழுதோ ஒன்றுகூட இருக்காது.

அந்த விதை வத்தல் குமிதான் சாக்குகள் விரிப்பின் மேல் கிடந்தது. காமாட்சி அவற்றிக்கு முன்னால் உட்கார்ந்து ஒவ்வொன்றாக எடுத்து, காம்பைப் பிய்த்து எறிகிறாள்.

வாலைப்பறித்த மயிலைப்போல அம்மண அவலட்சணமாகிற மிளகாய் வத்தல்.

மொத்தத்தில் பார்த்தால்... சட்டென்று கண்ணையும் மனசையும் பறிப்பது வத்தலின் சிவப்பு மினுமினுப்புதான். காய்ந்து உலர்ந்து வளைந்து போயிருக்கிற காம்பு. கண்ணில் படாது. பட்டாலும் உறுத்தாது.

காம்பு பிய்க்கப்பட்ட வத்தலைப் பார்த்தால் ரோமம் பறிக்கப்பட்ட கோழி மாதிரி இருக்கிறது. கண்ணில் படாமல் உறுத்தாமலிருந்த காம்பு, வத்தலின் அழகாக-அழகுக்குக் காரணமாக இருந்திருக்கிறது.

கோபுரத்தை அண்ணாந்துபார்த்து, பிரமிப்போடு கும்பிடுபோடுகிற யாருக்கும், கோபுரத்தைக்கட்டிய கொத்தனார் நினைவுக்கு வருவதில்லை. காம்பும், கொத்தனார் மாதிரிதான்.

காம்புகளைப் பிய்த்துப் போட்டாலும், அதிலும் ஒரு பக்குவம். நுட்பம். காம்பை மட்டும்தான் காமாட்சி துல்லியமாகப் பிய்ப்பாள். பிய்த்த இடத்தில் ஓட்டை வராத மாதிரித்தான் பிய்ப்பாள்.

காம்பு இழந்த பழங்களை ரெண்டாக முறித்து, முறிபட்ட இரண்டுவாய்களையும் குப்புறக்கவிழ்த்து, ரெண்டு முறி துண்டுகளையும் ஓர் உரசு உரசினால்... உள்ளிருந்த விதைகள் யாவும் ஒன்று விடாமல் உதிர்ந்து விடும். வெறும் கூடை தள்ளிப்போடுவாள்.

பிய்த்துப் போட்ட காம்புகள் ஒருபக்கம் ஒருகுமியாக... முறித்து உதிர்ந்து கூடாகிப்போன வத்தல் தொலிகள் ஒரு குமி. பெரிய கமி. உதிர்க்கப்பட்ட வத்தல் விதை, ஒருகுமி.

நேரம் ஆக ஆக... ஏறு பொழுது உச்சிக்கு வரவர... மரத்து நிழல் சுருங்குகிறது. நிழல்அளவுக்குக் கீழே விரித்துக்கிடக்கும் சாக்குகளை இழுத்துவிட்டுக் கொள்கிறாள்.

திண்ணையில் சாண்டில்யனின் "கடல்புறா" நாவலை வாசித்துக்கொண்டிருக்கிற முருகேசன். திண்ணைமேல் போடப்பட்டிருந்த கட்டில். அதில் தலையணை, காலைநீட்டிப்படுத்துக் கொண்டு, தலையணையில் இடதுமுழங்கையை ஊன்றி, ஸ்ரீரெங்கநாதர் சயன நிலையில் வாசிக்கிற இளையவன்.

"ஏலேய்... எளையவனே"

"என்னம்மா"

"கொஞ்சம் தண்ணிகொண்டாடா."

எரிச்சலுடன் அம்மாவை ஒருமுறை முறைத்துவிட்டு, "ச்சேய்_நிம்மதியா ஒருநிமிஷம் படிக்கவிடமாட்டீகளே"

புத்தகத்தை வைத்துவிட்டு வீட்டுக்குள் சலிப்பும் சள்ளையுமாகப் போகிற மகன்.

இதுவே... பரமசிவமாக இருந்தால்_?

தன்னை வேலைபார்க்கவிட்டுவிட்டு, நிழலில் கட்டில்போட்டு படுத்திருப்பாரா ? பார்த்துக்கொண்டு எனக்கென்ன என்று புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பாரா ?

தனக்குச்சமதையாக வந்து பக்கத்தில் உட்கார்ந்து... அவரும் சம்மணக்கால் போட்டுக்கொண்டு காம்பைக்கிள்ள... வத்தலைமுறிக்க.. விதையை உதறித்தட்ட.. என்று வேலையில் பங்கெடுத்துக் கொள்வாரே...

"இதென்ன கூத்து ? எந்திங்க ? இது பொம்பளை வேலை. இதுலே வந்து நீங்களும் உக்காந்துகிட்டு, யாரும் பாத்தா.. என்ன நினைப்பாக ? சிரிச்சிச்சிரிச்சி சீரழிச்சுருவாக"

என்று கோபமாகப் பேசி நாம் கண்டித்தாலும் தனித்தொதுங்கமாட்டார்.

"சிரிக்கிறவன் சிரிச்சா எனக்கென்ன வந்துச்சு ? சிரிக்கிற வனுக்குத்தான் வாய் கிழிஞ்சுபோகும். நமம வூட்டு வேலையை நாம பாக்காம... யாரு பாக்குறது ? " என்று வாதாடுவார். அத்துடன் நிறுத்தாமல் தொடர்வார்.

"பொம்பளை வேலை ஆம்பளை வேலைன்னு தனித்தனியா நம்ம வூட்லே இல்லே. எல்லா வேலையும எல்லாருக்கும் தான்நீ பாத்தி கட்டனதுல்லே ? நா வெளக்கமாறு புடிச்சு வீட்லே குப்பை கூட்டல்லே ?

என்று சரிமல்லுக்கு நிற்பார். வேலைக்குப் போட்டிபோடுவார். "வந்துபார்," என்று சவால் விடுவார். சளைக்காமல் வேலைபார்ப்பார்.

அவருக்குப் பொறந்தவன்தான்... இந்த நாய்.

பெரிய பண்ணையார் வூட்டுலே பொறந்த மைனர்மாப்பிள்ளை மாதிரி... சீவுறதும், சிணுங்குறதும் சோப்பும் பவுடருமாய் மணக்குறதும்.. பெத்த தாய் சீரழிவதைப் பார்த்துக்கொண்டே நிழல் வாட்டத்தில் கால்நீட்டிப் படுத்துக்கொண்டு புத்தகம் படிப்பதுவும்..

ஈரமில்லாத பயலாயிருக்கானே. அம்மா மேலே எரக்க மில்லாம இருக்கானே... ஒசத்தியான நெனைப்பும், மண்டைவீங்கிய புத்தியுமாக இருக்கானே...

இது நல்லதுக்கா? இவன் எதிர்காலத்துலே என்ன ஆவானோ?

பெற்றதாயின் ஈரநெஞ்சம். வெறுப்பான எண்ணத்தின் நீட்சி கூட... கவலையும் கனிவுமாக முடிகிறது.

அப்ப.. அழகேசன் வயது நான்கு. வயிற்றில் முருகேசன். தெக்காடு உழுது முடித்துவிட்டுவர, இருட்டிவிட்டது, பரமசிவத்துக்கு பொழுதடையப் பார்த்தால் முக்கால் வாசிக்கும் மேலாக உழுதுமுடித்தாகிவிட்டது.இன்னும் ரெண்டே ரெண்டு நிரைகள் தாம்.

"இதை ஒரு குறையாகப் போட்டுவிட்டுப் போகவா? இதுக்காக மறுபடியும் நாளைக்கு வரவா? ரெண்டு நிரைதானே? இழுத்துப்புடிச்சு இன்னிக்கே முடிச்சிட்டுப்போயிருவம் என்று நினைத்த பரமசிவம். மாடுகளைச் சுண்டிப்பத்துகிற துரிதம். மேழியை அழுந்தப் பிடிக்கிற வேகம். பொதுபொதுவென்று மண்ணைக் கிழித்து இருபுறமும் பொங்கி வழிய விட்டுக்கொண்டே முன்னேறுகிற கொழு.

மழைக்கோப்பாக இருக்கிறது. அடர்கருமையும் வெளிர் வெண்மையுமாகப் பந்து பந்தாக மேகங்கள்.சினந்து அடிக்கிற மழைவெயில். தட்டான்கள் பந்தல்போட்ட மாதிரி பறக்கிறது. ராத்திரியே மழை வந்துவிட்டால்?

நாத்தாங்காலில் மிளகாய்நாத்து பக்குவமாக வளர்ந்திருக்கிறது. தூர்க்கனமான துடியான நாத்து.மயில் குஞ்சுக்கள் மாதிரி.

உழவும் பாத்திகட்டும் முடிந்திருந்தால்... மழைவந்தவுடன் நாத்தைப்பிடுங்கி... நடுவையை ஆரம்பித்து விடலாம்.

மாடுகளுக்கும் முன்பாக ஓடுகிற எண்ணங்கள். கழுத்து மணியின் சலங்கைச் சங்கீதமாக எழுந்து உயர்ந்து, அதிர்ந்து காற்றில் பரவிப்படர்கிற நினைவுகள்.

பொழுதுக்கால்.மேற்குமலைத் தொடரை நீலநிறநிழல் தோற்றமளிக்கிறது. மேலடி வானம் முழுமையும் மஞ்சள் தகிப்பு.

"ஆய்ய்க்... ஆய்ய்க்... ட்ட்ர்ர்ரூ..ட்ட்ர்ர்ரூ..."

மாடுகளைச் சுண்டிப்பத்த களைப்பறியாத மாடுகள் கழுத்தைக் கழுத்தை ஆட்ட ... மணியோசை அதிர்ந்து பரவ... உழவு நடந்தது. கொழு முனையின் கிழிசலில் பூமிருதுவாகிற மண்.

பொழியோரம்.அறுகின் வேர்கள் கொழு முனையை வந்து பார் என்கிறது. மாடுகளின் முறைப்பான இழுப்பில் அறுகின் வேர்கள் படீர், பட்டீரெனத் தெறிக்கிற சத்தம்.

பொழியோரம் என்பதால் மேழியைக் கூடுதலாக அழுத்துகிற பரமசிவம். ரெண்டு கையாலும் மேழியை அமுக்குகிற அக்கறை.

பொழுது, மலைமுகட்டுக்குள் மறைந்து, மேகத்து வெளிச்ச மிச்சமும் தின்னப்பட்டு, கருகருவென இருட்டுகிறபோது தான், உழவு முடிந்து நிறுத்துகிற பரமசிவம்.

உழப்போன ஆளைக் காணோமே என்று வழியை வழியைப் பார்க்கிற காமாட்சி. "பொழுதடைஞ்சி... மயங்கிருச்சு. இன்னும் வரல்லியே" என்று முணுமுணுக்கிற அவள்.

வந்துவிட்டது மாடுகள். கண்ணில் படவில்லை. கழுத்து மணியோசையைக் கேட்ட கணத்தில், அடிமனசில் ஒரு துல்லியம் பிறக்கும் "இது நம்ம மாடுக"

அதேமாதிரி தூரத்தில் நிழலிருட்டாகத் தெரிகிற பரமசிவம். வருகிற மாடுகள். தரையில் இழுபடுகிற ஏர்க்காலின் நுனி.

"என்ன..இன்னிக்கு இம்புட்டு நேரம்? இருட்டிருச்சு"

"மாடுவுடுற நேரத்துக்கு பாத்தா... ரெண்டு நிரைக கெடந்தது. அதையும் உழுது முடிச்சுட்டு வர்றதுக்கு, இம்புட்டு நேரமாச்சு"

"சரி...சரி வாங்க... சாப்புடலாம்"

"இந்தா... மாடுகளைத் தொழுவுலே கட்டி, கூளத்தைப் போட்டுட்டு வாரேன்..."

ஏர்க்காலைக் கழற்றி சுவரோடு சாத்திவிட்டு, மேக்காலை தொழுவத்திற்குள் மூலையில் நிறுத்திவிட்டு, காடி நிறைய கூளத்தை உருவிப்போட்டு... மாடுகளை முதுகில் தட்டி..." தின்னுங்க... பகல் பூரா உழுதுருக்கீக.. அடிச்சி எரையை இழுத்து வாங்குங்க" என்று உற்சாகப்படுத்திப் பாராட்டிவிட்டு...

வெளிப்பானைக்கு வந்தார். வெதுவெதுப்பான வெந்நீரும், தகரக்குவளையும் தயாராக இருந்தது. முற்றம் பூராவும் உலாவிக் கொண்டு குளித்து முடித்து, தலையைத் துவட்டி... மாற்று வேட்டி, மாற்றுக் கோவணத்தை உடுத்திக் கொண்டு வருகிற பரமசிவம்.

"என்ன... ஒழவுக்குப் பக்குவம் இருந்துச்சா?"

"மூணாம் உழவுதானே? புழுதி உழவு. பொது, பொதுன்னு பருவமாயிருந்துச்சு... என்ன- ஒரு கொறை"

"என்னது?"

"பாத்திகட்ட முடியலே. அதான் -- கொறை"

"நாளைக்குக்கட்டலாம்லே?"

"ராத்திரியே மழைபேய்ஞ்சுட்டா? நாத்தாங்கால்லே நாத்து ரெடியாயிருக்கு. நடுவையை முடிச்சுரலாம். இல்லேன்னா, மழை பேய்ஞ்சுட்டா... இன்னும் ஒரு ஒழவு போட்டுட்டுத்தான் பாத்திகட்டணும். நாளும், பிந்திப்போகும்"

"ம்ம்ம் அப்படியா ? சரி... சாப்புட வாங்க..."

அழகேசன் ரெண்டுபிஞ்சுக் கால்களையும் அகல விரித்துக் கொண்டு, நடுவிலிருந்த வட்டிலிலுள்ள கம்மஞ்சோற்றை விரல்களால் கிண்டிக் கொண்டிருக்கிறான். எடுத்து வாய்க்குக் கொண்டு போகிறான். பாதி வாயிலும், மீதி தரையிலுமாக விழுகிறது.

பரமசிவத்துக்கு கம்மஞ்சோற்றை நாலு அகப்பைபோட்டு, புளிக்குழம்பை ஊற்றுகிறாள். வறுத்த கத்தரி வத்தலையும் முன்னால் வைக்கிறாள்

"அய்யா... ராசா... அழகேசா... வாய்யா... வாய்யா" என்று பாடலாக ராகமிசைத்துக் கொஞ்சிக் கொண்டே பிள்ளையைத் தூக்கி இடுப்பில் வைத்து... நாலு கை ஊட்டுகிறாள்.

அவனும் அடம்பிடிக்காமல், அழுது சிணுங்காமல் "கபக், கபக்"கென்று வாங்கி முழுங்குகிறான்.

காமாட்சியும் அவசர அவசரமாகச் சாப்பிடுகிறாள். சாப்பிட உட்கார்வதற்கு முன்பாக... பரமசிவத்துக்கு ரெண்டு அகப்பை சோறும், ரெண்டு கரண்டி குழம்பும் பரிமாறுகிற துரிதம்.

முற்றத்தில் நிலாவெளிச்சம். இன்னும் ரெண்டு நாள் இருக்கின்றன, பௌர்ணமிக்கு. தேங்காய்ப்பால் போல நிலா வெளிச்சம். குளுமையும் இனிமையாகவும் இருக்கிற வெளிச்சம்.

இவள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே, அழகேசன் பாயில் உறங்கிவிட்டான்.

"என்ன... போவமா ?" என்கிறாள்.

"எங்க ?"

"அலுப்பா இருக்கா ? உழுதுட்டு வந்திருக்கீக"

"என்ன அலுப்பு"! இன்னிக்குத்தான் உழுதுட்டு வந்துருக்கேனா ? என்னிக்கும் பாக்குற பாடுதானே ? நீ எங்க போவமா ங்கே ?"

"பாத்தி கட்ட" சர்வசாதாரண குரலில் காமாட்சி.

"நீயுமா ?" அதிர்வும் ஆச்சரியமுமாக அவன்.

"ஏன்_ வந்தா என்ன ?"

"நீ பொம்பளை"

"அழகேசனை சொமந்து முக்கிப்பெத்தவ_ பொம்பளை தான்."

ஆச்சரியம் தாளாமல் மலைத்துப் போயிருக்கிற பரமசிவம்.

"பாத்திகட்டுங்குறது, லேசா ? மொளகாப்பழம் புடுங்குற மாதிரியா ? மொரட்டு ஆம்பளைகளையே, "வந்துபாரு"ன்னு சவால் வுடுற கடுமையான வேலை..."

"பட்டிக்காட்டுச் சம்சாரி வீட்டுப்பொம்பளைக்குப் பாத்தி கட்டுன்னா என்னன்னு சொல்லித்தரணுமாக்கும் ?"

"வவுத்துலே புள்ளையிருக்கு_"

கனிவும் குழைவுமாக பரிவாக உணர்த்துகிற பரமசிவம்.

"நீங்க வாரீகளா_ வரல்லியா ? நா_ போறேன், மம்மட்டியோட"

"ஒன்னாலே முடியுமா ?"

"போட்டியிலே ஏங்கூட ரெண்டுமூணுதடவை தோத்தது, அயத்துப்போச்சா ?"

அன்றைக்கு நிலாவெளிச்சத்தில் பாத்தி கட்டு நடந்தது. ரெண்டு ஜீவன்கள் மண்ணில் மல்லுக்கட்டி_ ஒழுங்குபண்ணினர்.

"நீங்க வாய்க்கால் வரப்பை இழுத்து வுட்டுக்கிட்டே போங்க_ நா_ குறுக்கு வரப்புகளைப் போட்டுக்கிட்டு வாரேன்"

அவள் போட்டுத் தந்த திட்டப்படி... பரமசிவம் வாய்க்கால்களையும், ஊடுவரப்புகளையும் மம்பட்டியால் தட்டியடித்து_ செதுக்கி_ உருவாக்கிக்கொண்டேபோக_

காமாட்சி... மம்மட்டியால் தட்டித்தட்டி மண்ணைப்பரசி... உழவுத்தடத்தை அழித்து சமன் செய்துகொண்டே... குறுக்குவரப்புகளையும் போட்டுக்கொண்டே வந்தாள்.

..முருகேசன் பிறந்திருந்த சமயம். வீட்டுவேலை பூராவும் பரமசிவம் தான். கம்புகுத்த... பானை சட்டி கழுவ ...வீடு பெருக்க... மாட்டுச்சாணியள்ள.. பசுமாடுகளை ஆடுகளைப் பராமரிக்க.. எல்லா வேலைகளையும் கூச்சமில்லாமல் புலம்பாமல் செய்த பரமசிவம்.

முழுத்த ஆம்பளையை இந்த வேலை பாக்கவுட்டுட்டு... நா இப்புடி படுத்துருக்கேனே... என்று காமாட்சி மருகிமருகிப் புலம்புவாள்.

"ஆம்பளையும் பொம்பளையும் வேற வேற இல்லே. எல்லாம், ஒண்ணுதான். மனசுலே ஒண்ணாயிருந்து, அன்பாயிருந்துட்டா... எந்தப்பேதமுமில்லை.."என்பார் அந்த மனிதர்.

"அப்பேற்பட்ட மனுசரோட வவுத்துல பெறந்த பய இவன், ஏன் இப்படி இருக்கான் ?"

செம்புத்தண்ணீரைத் தந்தவன்... கட்டிலில் போய்ப்படுத்துக் கொண்டே படிக்கிறான். செம்பைக்கூட எடுத்துக் கொண்டுபோய் உள்ளே வைக்கவில்லை.

எல்லாவத்தல்களையும் முறித்துவிட்டாள். வத்தல்விதை ஒரு சிறு குமியாக இருந்தது. அதை அப்படியே சிந்தாமல் சிதறாமல் ஒரு குத்துப்பெட்டியில் அள்ளி வைத்தாள். ஒற்றைஒற்றை விதையைக்கூட விரல் நகத்தால் கோதி எடுத்து.. நுணுக்கமாகப் பத்திரப்படுத்தினாள்.

ஒருவிதை என்றால்... உழவனுக்கு ஒற்றை விதையல்ல, ஒரு கடாப்பெட்டி மிளகாய்ப்பழம்.அது ஒருபெரிய பணம்.

சேலையில்... முந்தானையில் ஒட்டியிருந்த விதைகளை யெல்லாம் உதறி உதறி சேகரித்த காமாட்சி. காம்புகளைத் தனியாக குப்பைக்கு ஒதுக்கினாள். விதை இழந்த.. முறிபட்ட வத்தல் தொலிகளை யெல்லாம் ஒரு சாக்கில் அள்ளினாள்.

மசாலா அரைக்க.. குழம்புக்கு ஆகும்... இந்த வத்தல் தொலி. அம்மாவையே உற்றுப்பார்க்கிற முருகேசன்.

"ஏண்டா... எளையவனே, இப்படிப்பாக்கே ?"

"சும்மாதான்"

"சும்மான்னா ?"

"ஏம்மா..ஓரக்கடையிலே முன்னூத்தி ரூபா குடுத்தா ஒரு நிமிஷத்துலே "பை விதை" வாங்கிட்டு வந்துரலாம். அம்புட்டு லேசா முடியுற வேலைக்கு... ஏம்மா இம்புட்டுப்பாடுகள் படணும் ? பழத்தைப்பொறுக்கி .. நிழல்லே காயப்போட்டு.. ஏழெட்டு நாள் காவல் காத்து.. அள்ளிப்போட்டு முழங்கால் மூட்டும் இடுப்பும் வலியெடுக்க இம்புட்டு நேரம் வத்தல்ஒடைச்சு.. இதெல்லாம் தேவையாம்மா ?"

முருகேசனைப் பார்த்தாள். அவன் குரலில் கருணை இல்லை. பாசம் இல்லை. அக்கறை இல்லை. ஏளனக்குரல். அலட்சியக்குரல். எள்ளி நகையாடுகிற ஒருதொனி.

மகன்... மகனாகத் தெரிய்வில்லை. மனசுக்குள் ஓர் அந்நியனாகத் தெரிகிறான்.

"முன்னூத்தி நாப்பது ரூவாய்ன்னா ... அம்புட்டு லேசா ? ஒருமூடைக்கம்பு. ஒருகுவிண்டால் முளகாய்ப் பழம்டா... அதை வெளையவைக்க எம்புட்டுப் பாடுபடணும் தெரியுமாடா ?"முருகேசன் ஆயாசப் பெருமூச்சு விடுகிறான். தோற்று,பின்வாங்குகிற அயற்சி.

"என்னமோ போங்க. நீயும் அய்யாவும் எப்பவும் இதே பிடிவாதம் தான். பழைய பாணி வெவசாயத்தையே கட்டிமாரடிக்கீக. விடவே மாட்டீக..."

"வுடணும்ங்குறீயா ?"

"மாறணும்"

"எப்படிய்யா... ?"

"குப்பைக்குப்பதிலா... டி.ஏ.பி.மூடை. கொழைக்குப்பதிலா காம்ப்ளெக்ஸ், மூடை. வேப்பமுத்துக்குப்பதிலா மோனோகிராப்ட்ஸ் மருந்து. விதை வத்தலுக்குப்பதிலா.. பைவிதை"

"விரல் நகத்துலே அழுக்கு படாம... நிழல் வாட்டத்துலே உக்காந்துகிட்டு.. பண்ணையாருக பண்ணுற வெவசாயம் மாதிரி... நாமளும் பாக்கணுமாக்கும் ?"

"பண்ணையாருக கொம்பு மொளைச்சவங்களா ? நாம என்ன மட்டமா ? நாமளும் அவங்கமாதிரி செய்ஞ்சா.. என்ன ? "

"அழிஞ்சுருவோம்டா... அழிஞ்சுருவோம்"

"என்னத்துக்கு ?"

"பண்ணையாருக பாதியிலேயே வந்து பாதியிலேயே அழிஞ்சிருவாக. வெயிலை வெயிலுன்னு நெனைக்காம பாடுபடுற சம்சாரிதான்..ஆதியிலே வந்தவன். பாடுபடுற சம்சாரிதான் அழியாம.. கடைசி வரைக்கும் இருந்து... பூமிக்குச் சோறு போடுவாண்டா..."

காமாட்சியின் தெளிவானகுரல். ஒளிமயமான ஆன்மாவின் தடுமாற்றகுரல். முருகேசனுக்கு அதுபிடிபடவில்லை.

"போங்கம்மா... நீயும் அய்யாவும் பழம்பஞ்சாங்கம்ங்க"

அலட்சியமாக உதட்டைப் பிதுக்குகிற முருகேசன்.

20

ஊர் நாட்டாமை தான் கூட்டுறவு சொஸைட்டியின் தலைவர். உள்ளூர்க்காரர் ராஜசேகரன் தான் செயலாளர். செயலாளர் என்று யாரும் சொல்லமாட்டார்கள். "கிளார்க்" என்றுதான் கூப்பிட ஆரம்பித்தார்கள். போகப்போக.. செயலாளர் ராஜசேகரன் எல்லாம் மங்கிமறைந்து போய்விட்டது. "கிளார்க்" தான் நிலைத்தது. பதவி, பெயர் எல்லாமே அதுவாயிற்று.

"கிளார்க் வரச் சொன்னாரு..."இதுவா ? கிளார்க்கோட சம்சாரம்"... இந்தப்பொடுசு, கிளார்க்கோட பையன் இது கிளார்க் புஞ்சை.." அவரது அடையாளமே "கிளார்க்"என்றாகிவிட்டது.

ஒருநாள்.. வெளியூர்க்காரர் சைக்கிளில் வந்து நின்று கொண்டு, இளவட்டங்களாக இருந்த மடத்துவாசல் கூட்டத்தில் வந்து விசாரித்தார்.

"ஏய்யா.. ராஜசேகரன் எங்க இருக்காரு ?"

"எந்தராஜசேகரன் ? ராஜசேகரனா... ? அப்படி ஒரு பேர்லே எங்கஊர்லே ஆளா ? தெரியலியே"

உள்ளூர் பையன்களிடமே உள்ளூர்ப் பையன் சந்தேக நிவர்த்திக்காக விசாரிக்கிறான். அவனுக்குக் குழப்பம்.

"நம்ம ஊர்லே ராஜசேகரன்னு ஓர் ஆள் உண்டா ? கேள்விப்பட்ட மாதிரி தெரியலியே.."

இப்ப, எல்லாருக்கும் குழப்பம். திகைப்பு. கசாமுசா வென்று வாக்குவாதம். சத்தக்காடு.

"ராஜேந்திரனாயிருக்குமா ?"

"தனசேகரனாயிருக்குமா ?" உள்ளூர்ப் பையன்களின் திகைப்பிலும் குழப்பத்திலும் வந்த வெளியூர்க்காரர் அரண்டுபோனார். அவருக்குள்ளும் குழப்பம். திகைப்பு.

"ஒருவேளை .. நாம... ஊரு தெரியாம... வேற ஊர்லே வந்து விசாரிச்சுக்கிட்டிருக்கோமா ?" என்று அவர் சுய குழப்பத்துக் குள்ளாகி விட்டார். அப்புறமும்... சோர்விலிருந்து மீண்டெழுந்து... இறுதி முயற்சியாக ஒரு கேள்வி கேட்கிற வெளியூர்க்காரர்.

"இந்த ஊர்லே... விவசாயக் கூட்டுறவு சொஸைட்டியிலே, அவரு செக்ரட்டரியாக இருக்காரு.. அவருபெயர்என்னது ?"

ஒட்டுமொத்தபையன்களும் ஒரே கூவல்காடாக கோரஸ் பாடினர். "ஏய்ய்.. இவரு கேக்குறது, நம்மகிளார்க்"

"ஆமப் போய்...! கிளார்க்னு சொல்லாம, இவரு என்னவோ பேரைச்சொல்லி, நம்மளை கிறுக்குபிடிக்கவுட்டுட்டாரு..."

"நல்ல ஆளப்பா இவரு..! நம்மளை கூத்தாடவுட்டுட்டாரு"

கிளார்க்கின் வீட்டை அடையாளம் காட்டினர்.அப்புறம்.அந்த அளவுக்கு அவர் பெயரும், சகலமும் கிளார்க் என்றே அடையாள மாயிற்று.

கிளார்க்கின் இன்னொரு அடையாளம்.வலது கையில் ஒரு பெரிய பேரேடு. சட்டைப்பையில் ரெண்டு பேனா. இவை இல்லாமல் கிளார்க்கைப் பார்த்தவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். சிவப்புப்பேனா, நீலமைப்பேனா.

இதில் உறுப்பினராக ஒண்ணே கால் ரூபாய். ஊரிலுள்ள சகல சம்சாரிகளும் இதில் உறுப்பினர்கள். பரமசிவம்மட்டும் தான் உறுப்பினராகவில்லை.

கிளார்க் வந்து முற்றத்தில் நின்றார்.

"மச்சான், நீரு இதுலே மெம்பரு ஆகணும்"

"மெம்பரும் வேண்டாம், நம்பரும் வேண்டாம்னா"

"ஊர்லே எல்லாரும் சேர்ந்துட்டாக... மச்சான்"

"அதான்... ஊர்பூராவும் சேர்ந்தாச்சுல்லே? நா சேரலேன்னா. கொறைஞ்சு போயிராதுலே?"

"ஒண்ணேகால் ரூவா தான்... மச்சான்"

"ஒசின்னாலும் உங்க சங்காத்தம் வேண்டாம்னா."

"ஏன்?"

"ஏன்னா...? அது அப்படித்தான்"

பரமசிவம் பிடிவாதமாக மறுத்தான். எம்புட்டோ எடுத்துச் சொல்லியும் தளராத பரமசிவம். இது "ஏதோ ஒரு சதி" என்று அவனது உள்ளுணர்வு சொன்னது.

பரமசிவம் மாட்டின் முதுகையே வருடிக்கொண்டிருந்தான். மாடு, குளுதாடியிலிருக்கிற கஞ்சியையும் பருத்திவிதைப்பாலையும் மண்டிக் கொண்டிருக்கிறது. இவன் வருட வருட... அதன் திரேகம் பூராவும் ஓடிப்பரவுகிற புல்லரிப்பு அலைகள். பாசத்துடன் தலையாட்டுகிறது. பரமசிவத்தை ஓரக்கண்ணால் பார்த்துக் கொள்கிறது.

"மச்சான்..." கெஞ்சுகிற கிளார்க்.

"இல்லேன்னா மாப்ளே... சர்க்கார்க்காரியம். நமக்கு வேண்டாம்"

"ஒண்ணே கால் ரூவாய் தான் மச்சான்."

"துட்டைப்பத்தி பெரிசில்லே. இதுலே மெம்பராகுறதும், வலைக்குள்ளே மீன்சிக்குறதும் ஒண்ணுதான். மண்ணுதான்"

கிளார்க் சடைந்துபோய்விட்டான். எம்புட்டோ வாதாடியும் ஒருதுளி கூடப் பயன் இல்லை. என்ன செய்ய!

"ச்சேய்... கரும்பாறை. வேட்டு வைச்சாலும் தகராது" என்று சளிப்பும் சோர்வுமாக, பேரேடும் பேனாவுமாக திரும்புகிற கிளார்க்.

ரெண்டாவது மாட்டுக்கு குளுதாடியில் தண்ணி காட்டிக் கொண்டிருந்தபோது.. வடக்குத்தெருச் சிறுவன் வந்து நின்றான்.

"என்னப்பா.. ?"

"நாட்டாமைத்தாத்தா உங்களை வரச்சொன்னாரு"

"எங்க ?"

"அவரு வூட்டுக்குத்தான்."

மாடுகளைத் தண்ணீர் குடிக்கவைத்து, தொழுவத்தில் கட்டிவிட்டு காடிநிறைய கூளத்தை அள்ளிப்போட்டு விட்டு.. நாட்டாமை வீட்டுப்பக்கம் வந்தான்.

அவர் தங்கமானவர். தாட்டியமானவர். அதிகாரமாகப் பேசினாலும் அன்பு இருக்கும். அச்சுறுத்தலாக மிரட்டினாலும், அக்கறை இருக்கும். சொன்ன பேச்சைக் காப்பாற்றுவார். உள்ளூர்க்காரர்களுக்கு நல்லதே செய்வார்.

"என்ன சின்னையா கூப்புட்டீகளாமே ?"

"ஆமா சொஸைட்டியிலே மெம்பராக்க வந்தா..ஆகிக்கோ"

"இல்லே சின்னையா.. வேண்டாம்"

"லோன் வாங்குனா... கெடுபிடி வசூல்பண்ணுவாக. ஜப்தி பண்ணி கேவலப்படுத்துவாக.. அதானே. ஒண்ணோட பயம் ?"

"ஆமா. சின்னையா"

"லோனை வாங்காம இருந்துக்கிட்டா ?"

அவரின் கேள்வி, இவனை யோசிக்க வைக்கிறது.

"மெம்பராக்கிக்கோ... லோன் கீன் போடாம ஒதுங்கி இருந்துக்கோ.. சரிதானே ?"

"அப்ப சரி, சின்னையா"

இந்நேரவரை மேல்துண்டு தோளிலிருக்கவில்லை. கையில் பற்றப்பட்டு தொங்கியது. ஊர்நாட்டாமை என்றொரு மரியாதை. மதிப்பு. இயல்பாக வந்த பவ்யம்.

வெளியே வந்தவுடன் தோளுக்கு வந்தது துண்டு. தெருவில் நடக்கிற போது.. யோசனை. தயக்கமும் மயக்கமுமாய் இயங்குகிற யோசனை.

சர்க்கார் சம்பந்தப்பட்ட சனியங்களோட சங்கார்த்தமே வேண்டாம்னு ஒதுங்கி யிருக்கிறது தான் உத்தமம். நாளைப்பின்னே என்னென்ன சிக்கல்லே மாட்டிவிட்டுத் தொலைச்சிருமோ ? யாரு கண்டது ?வேண்டாம்னு ஒதுங்கியிருந்தாலும் விடமாட்டேங்குது, சனியன். நாட்டாமைச் சின்னையா சொல்றப்ப.. எப்படி மீறமுடியும்"

இதெல்லாம் நடந்தது, பரமசிவம் கல்யாணத்துக்கு முன்பு. கூட்டுறவு சொஸைட்டிப் பக்கமே இவன் போனதேயில்லை. காசு பணம் தேவை என்றால்... மனுசமக்களை நம்பிக்கேட்பது. நம்பிக்கையின் பேரில் தருகிற உதவிகளைப் பயன்படுத்திக் கொள்வது.

இப்போதெல்லாம் அந்தப் பிரச்னையுமில்லை.பேங்க் மாதிரி அருஞ்சுனை. மிச்சமிருக்கிற ரூபாயைக் கொடுத்துவைத்துக் கொள்ளலாம். தேவைப்படுகிறபோது... வாங்கிக் கொள்ளலாம்.

அருஞ்சுனையை நினைத்தவுடன் மனசுக்குள் சுனையின் குளிர்ச்சி. அருமையான மனிதர். வியாபாரிதான். வியாபாரிப்புத்தியை இவரிடம் காட்டியதேயில்லை.

சின்னராஜ் நாயக்கர் வந்தார். மரியாதைக்குரியவர். பெரியவர். ஆள், செக்கச் செவேலென்று இருப்பார்.பழுத்த பூசணிப்பழம் மாதிரி நிறம். பொன்னிறம். வெள்ளைவேட்டி, வெள்ளைச்சட்டை. எல்லாநேரத்திலும் தேய்ப்பு மடிப்பு குலையாமல் போட்டிருப்பார். வெள்ளை என்றால் சாமான்ய வெள்ளையல்ல. கண்ணைப்பறிக்கிற தும்பைப்பூ வெள்ளை.

பரமசிவம் தடபுடவென்று எழுந்தார்.

"ஐயா.. வாங்கஐயா... வாங்க ... இப்புடி உக்காருங்க.."

பரமசிவம் முகமெல்லாம் பூக்காட்டுச் சிரிப்பு. மரியாதை உணர்வு.

"ஏய் காமாட்சி,பாயை எடுத்துட்டுவா. ஐயா வந்துருக்காக, நம்மவீடுதேடி..."

மடித்துப்போட்ட பாயில் உட்கார்ந்த சின்னராஜ் நாயக்கர். இந்தத் தடபுடலையும் ஆரவாரமரியாதையளிப்புகளையெல்லாம் பிடித்திருக்கிறது. ஆனால், ரசிக்கிற மனநிலையில்லை. முகத்தில் ஓர் இறுக்கம். கவலையின் நிழல்.

"ஐயாவுக்கு.. அருங்சுனை கடையிலே நல்ல கலர் வாங்கிட்டுவா..."

"ஐயா .. நீங்க வந்தது,எங்களுக்கு ரொம்பப் பெருமைய்யா. தெய்வமே வந்தது மாதிரியிருக்கு"

உயிரில்லாது, உலர்ந்து போய் "இருக்கட்டும், இருக்கட்டும்" என்ற அவரின் குரலில் வருத்த ரேகைகள்.

"பரமு,ஓங்கிட்டே ரொம்ப முக்கியமான வெஷயமா வந்துருக்கேன்"

"முக்கியமில்லாத வெஷயத்துக்கு நீங்கவரமாட்டீகன்னு எனக்குத் தெரியும்ய்யா"

"நம்ம பய... திருப்பூர்லே ஏதோ பிசினஸ் பண்ணணும்னு ஏற்பாடு பண்றான்...அங்க அவனுக்கு ஆள்க இருக்கு. அவன் பெண்ணெடுத்த வகையிலான உறவாள்க."

"அப்படியாய்யா ? இருக்கட்டும். தாராளமாய்த் தொழில் செய்யட்டும் யா ? அதுக்கு நா என்ன செய்யணும்ய்யா ?"

"கொஞ்சம் பணம் வேணும் பரமு"

"எம்புட்டுயா ?" பரமசிவத்துக்குள் குப்பென்று பரவுகிற பயப் படபடப்பு. கையில் பணமில்லாத நிலவரம்.

"ரொம்ப வேணும். லம்பா வேணும்"

பரமசிவத்தின் முகக்கருப்பு. மேலும் அடர்த்தியாகிறது. பயந்தமனசின் வியர்வைக்கசிவுக் கண்கள் பறவையாடுகின்றன. உள்ளங்காலில் வியர்வை. பதற்றமனசின் அடையாளங்கள்.

"ஏங்கிட்டேயும் தொகை எதுவுமில்லேய்யா.கைக்கும் மெய்க்கும் இல்லாம.. கண்ணுமுழி பிதுங்கிப்போய்நிக்கேன்"

"நீ - நெனைச்சா- பெரட்டிருவே ?"

"எனக்கு ஏண்ட(இயன்ற) ளவுக்குத்தான் பெரட்டலாம். தொகை பெருசுன்னா- தெகைப்புதான்யா"

"பனந்தோப்புக்கு வடக்கே கடலைபோட்டெடுக்கிற மணக்காடு நமக்குப் பதினாறு குறுக்கம் கெடக்கு. அம்புட்டையும் எடுத்துக்கிட்டு எட்டாயிரம் குடு"

பரமசிவத்துக்குள் ஊற்றெடுக்கிற ஆசைச்சுனை.ஜில்லென்று மனசெல்லாம் பரவசப்பட்டு குளிர்கிற உணர்வு.

அருமையான செவல்தரை,மணல்காடு, கடலைபோட்டால்.. சொல்லிவைச்ச வெள்ளாமை எடுக்கலாம். அப்படி விளையும்.

பரமசிவம் பனந்தோப்புபோகிற போதெல்லாம்நினைப்பார். இப்படி சமுத்திரம் மாதிரி.. விரிஞ்சு பரந்த நெலம். நம்மகிட்டேயிருந்தா. அதோட மதிப்பே. தனி.

வெறும் மண்ணாக... கரட்டுத்தரிசாகக் கிடக்கிற இந்த சமுத்திர நிலப்பரப்பு, நம் கையில் இருந்தால்..விளைநிலமாகும். பொன்விளையும் பூமியாகும். போட்டதுக்கு நூறு மடங்கு கூடு தலான விளைச்சலைக் காட்டலாம்.

இதெல்லாம் ஆசைக்கோளாறு. மத்தியானக்கனா. வெயில்கனா. நடக்குமா ? இயலுமா ? சாத்தியப்படுமா ? கிட்டத்துலேயா இருக்கு ? உச்சிமலைப்பொருள். நானோ காலில்லா முடவன். கைவந்து சேருகிற கனவா ?

ஆசைப்பட்ட மனசு. ஆயாசத்தில் வந்து முடிகிறது.

இதோ..வீட்டுத்திண்ணையில் மடக்கி விரித்தபாயில் வந்து உட்கார்ந்திருக்கிறது. இவனது வெயில் கனவு. மத்தியானக் கனவு.

இப்பவும்.. உச்சிமலைப்பொருள்தாம். நான், காலில்லா முடவன்தான்.

முடவன் என்பதைத் தண்டோராபோட ஆசையில்லை. மண்ணைப் பிள்ளையைப் போல நினைக்கிற விவசாய மனசு.

"என்ன பரமு"

அவரது கண்ணின் ஆசை மின்னல்கள். அலைபாய்கிற விழிகள்.

"ஐயா.. எட்டாயிரம் பெரிய தொகையய்யா. என்னாலே அம்புட்டுப் பெரட்ட முடியாது. முடிஞ்சா- இழுத்துப்புடிச்சு, ஏழாயிரம் ரெடிபண்ணிப் பாத்துரலாம்.

"சரி... அதையாச்சும்.. நாளைக்கே முடிக்கணும். முடியுமா ?

"முடியுமா, முடியாதான்னு சாயங்காலம் வந்து சொல்லுதேன்ய்யா"

"அப்ப.. நா பெறப்படுதேன் பரமு"

"ஆட்டும்யா"

சின்னராஜ் நாயக்கர் போனபிறகு-

இவன் மனசுக்குள் வருகிற அந்தப் பதினாறு ஏக்கர் செவல்காடு. மணல்தரை, கால் வைத்து மிதித்தாலே, கடலைத்தூரைப் பிடுங்கிவிடலாம். அத்தனை மிருதுவான மண்கண்டம். சம்சாரி. நிலம் என்றால் ஆவல் படுகிற பரம்பரைச் சம்சாரி.

அருஞ்சுனை கடை வாசலில், அடுத்த நிமிஷத்தில் நிற்கிற பரமசிவம்.

"என்ன மச்சான்... கடைவாசலுக்கே வந்துருக்கீரே, என்ன விஷயம் ?"

"கொஞ்சம் ரூபாய் தேவைப்படுது"

கொடுக்கத்தயாரான தாராளக் குரலில்

"எம்புட்டு?" என்று கேட்கிற அருஞ்சுனை.

"எட்டாயிரம்"

"எட்டாயிரமா?" இழுத்துநீட்டி எதிரொலிக்கிற குரலிலேயே இயலாமையும் மலைப்பும் தெரிகிறது.

"என்ன மச்சான், அம்புட்டுப் பெரிய தொகை?"

இயலாமையையும் மறுப்பையும் எப்படிச்சொல்வது என்ற யோசனையில் அருஞ்சுனையின் உள் மனசு. அவர் மனசு கோபிக்காத மாதிரி... காயப்பட்டு விடாத மாதிரி... எப்படி இங்கிதமாக மறுப்பைச் சொல்வது?

"மாப்புளே... நா ரொம்ப நாள் ஆசைப்பட்ட நிலம், நம்மளைத் தேடி வருது. மணல்காடு. ஒரே எடத்துலே நாற்சதுரத்துலே, பதினாறு குறுக்கம். கடலை போடலாம். துவரைபோடலாம். நா ரொம்பக்காலம் குறிவைச்சிருந்த மண்ணு. வுடக்கூடாதுன்னு மனக்குறி சொல்லுது"

ஒருசிறுவனின் குரல்போலத் தின்பண்ட ஆசையை வெளிப்படுத்துகிற சிறுவனின் மனம்போல... வெள்ளையான பேச்சு. ஆவலையும் ஆர்வத்தையும் மறைக்கிற பாவனை எதுவுமில்லாமல் குதூகலக் கூத்தாட்டமாகக் கூறுகிற வெளிப்படை

மழலையின் ஆசையை மறுக்க மனசுவருமா?

வீட்டுக்குள் போன அருஞ்சுனை. உள்ளங்கை முழுவதும் தங்கநகை. ஒருநெக்லஸ். ஒரு ரெட்டைச்சரம். ஒருமுறுக்கு வடச்சங்கிலி.

"என்ன மாப்புளே...?" அதிர்ச்சியில் வெலவெலத்துப்போன பரமசிவம்.

"இது வெறும் தங்கம். வீட்லே இருந்தா... வெறும் பொருள். நீங்க வாங்கிட்டுப்போய்..அடகு வைச்சு... ஆசைப்பட்ட நிலத்தை வாங்கிருங்க"

பரமசிவம் முகமெல்லாம் ஒருவித விறைப்பு. உச்சபட்ச மறுப்பின் ரேகைகள்.

"இது வேண்டாம்.அருஞ்சுனை. இந்த விளையாட்டு வேண்டாம். தங்கச்சி.. நாளைக்கு கல்யாணம் காட்சிக்குப் போகணும்னா... எப்படிப் போவா ? வெறும் கழுத்தோடயா ?"

"மச்சான்... கழுத்துலே தொங்குகிற நகையைவிட ஒதட்டுலே பூக்குற நகை, நெசம். மனசைக்காட்டும். பண்பைக்காட்டும். அதுபோதும்..."

"இல்லே மாப்புளே... எனக்கு சுத்தமா புடிக்கலே"

"இன்னொரு விஷயம் மச்சான். இந்த இருபது பவுன் நகை. வீட்லே இருந்தா.. எப்பவும் இருபது பவுன் தான். உங்க கைக்குப் போய்... அடகுவைச்சு நிலம் வாங்குனீகன்னா.. ஒண்ணுக்கு நூறாவெளையும். எங்கிட்டே வளராம சும்மா கிடக்கும். உங்க கையிலே வந்தா.. ஏகமா வளரும். வாங்கிட்டுப்போங்க மச்சான். வெள்ளாமையிலே திருப்பித்தாங்க..."

பரமசிவம் மறுத்து மறுத்து அடம் பண்ண.. அவரிடம் வற்புறுத்திக் கையில் திணித்த அருஞ்சுனை.

அருஞ்சுனை மாதிரி மனிதத் தன்மையுள்ள பெரிய பேங்க் இருக்கிறபோது சொஸைட்டிபக்கம் பரமசிவம் என்னத்துக்கு தலைவைத்துப்படுக்க வேண்டும் ?

நகை வைத்து நிலம் வாங்கியதும், மூன்றாவது மாதமே பருத்தி போட்டு வந்த வருமானத்தில் நகையை திருப்பித்தந்ததும் பரஸ்பர நாணயம், பாசம். மரியாதை.

அருஞ்சுனை இருக்கும்போது என்னத்துக்கு சொசைட்டியும், உறுப்பினர் ரசீதும். ஆனால்,

அதற்கெல்லாம் சேர்த்து... கடன் சுமைகளில் மாட்டியிருக்கிறான்... முருகேசன். கடன் வந்த கதை... பெருங்கதை..

21

அழகேசன் மரக்கட்டையால் அடித்து அடித்து நச்சி வைத்திருந்த புளிச்சநார், வெளிப்பானைக்கு அடியில் நீரில் ஊறிக்கிடக்கிறது. அதை எடுத்து.. உதறி உதறி... ஒன்று சேர்க்கிற பரமசிவம். அதை ஒன்று சேர்த்து.. கோதி, சிக்கெடுத்து ஒருசீரான நாராக்கி_ அப்புறம் திரித்தால், கயிறு, புளிச்சநார்க்கயிறு,நூல்கயிறை விடவும் வலுவானது. நாரை_மூன்று பிரியாக_ பிரித்து.. தொடையில் வைத்து உருட்டி உருட்டி கயிறு திரிக்கிற பரமசிவம்.

இந்தப்புளிச்சநார்ச் செடி புஞ்சையின் பொழியோரங்களில் பயிரிடுவது. பொழியோரங்களில் புஞ்சையின் எல்லாப் பக்கங்களிலும் விதைஊன்ற வேண்டும். ஒற்றைச்செடியாக வளர்ந்து போகும். கரிய பசிய இலைகள், கண்ணுக்குக்குளிர்ச்சியாக இருக்கும்.வெளிர் மஞ்சள்நிறப்பூ மைக்செட் குழாய் வடிவில் சிறிதாக பூக்கும். பார்க்க லட்சணமாக இருக்கும்.

அது,புஞ்சைக்கு வேலி. ஆடுகுட்டிகள், மாடுகன்றுகள் புஞ்சைக்குள் வாய்நீட்டவிடாமல் தடுக்கிற வேலி. அதன் தண்டு, இலைக்காம்புகள் முழுக்க முள் முள்ளாக இருக்கும்.

ஆடுகுட்டிகள் கழுத்தை நீட்ட முனைந்தால்,அந்த முட்கள் நாசி நுனிச்சதையில் குத்திவிடும்.

வெள்ளாமை முடிந்தவுடன் புளிச்சநார் செடியையும் பிடுங்கி விடலாம். அதைச் சும்மா விடுவதில்லை. சம்சாரிகள் அதையும் தட்டி, நசுக்கி, ஊறவைத்து, உலர வைத்து, கயிறாக்கிவிடுவார்கள்.

புளிச்சக்கயிறு நன்றாகத்துவழும். முடிச்சுப்போட்டால், நன்றாக இறுகும். பாரக்கயிறுக்கு ரொம்பத்தோது.

புளிச்ச நார்க்கயிறு வைத்திருக்கிற சம்சாரியை உழைப்பாளி என்று நினைத்துக்கொள்ளலாம். சுயஉழைப்பிலேயே கூலியாட்களை ரொம்ப எதிர்பார்க்காமல்_ குடும்ப உறுப்பினர்கள் வியர்வையிலேயே விளைச்சல் எடுக்கிற சம்சாரிகள் என்று அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

காலைவெயில் காந்தலில்லாமல் மென்மையாக வருடுகிறது. தொடையில் வைத்து திரிக்கத் திரிக்க.. நீள்கிற சடையைப் போல சுருண்டு வளைந்து குமிகிற முப்பிரிக் கயிறு.

முருகேசன் அய்யாவையே பார்த்துக் கொண்டிருக்கிறான். இளவட்ட முருகேசன். நாரை உதறுவது, சிக்கெடுப்பது... கருக்கு இருந்தால் அதைக்காலிபண்ணுவது என்று வேலை செய்கிறான். கைவேலைக்குக் கைகொடுக்கிற முருகேசனைப் பார்த்துப் பார்த்து பெருமிதப்படுகிற பரமசிவம்.

"எளையவனே, வேலை பார்க்கப் பயப்படுதே. மனசுவைச்சு வேலை பார்த்தா.. தெளிவா, சுத்தமா பாக்கேடா.."

அய்யாவின் பாராட்டுச் சொற்கள் அசலான சந்தோஷ மனசின் குதூகல முகம். ஒளி பொருந்திய சொற்கள். ஆனால், அந்தப் பாராட்டு, முருகேசனைப் பெரிதாகக் குளிர வைத்துவிடவில்லை. பரவசப்படுத்திவிடவில்லை. சர்வ சாதாரணமாக அதை எதிர்கொண்டு இலேசாக சிரிக்கிற முருகேசன்.

"ஏய்யா_ அஞ்சுரூவா குடுத்தா_ கொச்சக்கயிறு, அம்பது ரூவா குடுத்தா... வடக்கயிறே வாங்கிரலாம். இதுக்குப் போய் இம்புட்டு வேலைகளை மெனக்கிட்டுச் செய்யணுமாய்யா ?"

கேள்வியைவிட கேள்வி வெளிவந்த குரலுக்குள் தொனித்த ஏளனமும், அலட்சியமும் தான்_ பரமசிவத்தை மிகவும் சீண்டிவிட்டது. சண்டாளமாகக் கோபம் வந்தது. கொந்தளித்துச் சீறிப்பொங்கிவந்த நெருப்பு உணர்ச்சியைத் தொண்டைக்குள்ளேயே நிறுத்திக் கொண்டார். அடக்கிக் கொள்ள மிகவும் சிரமப்பட்டார்.

பல்லைக்கடித்தார். கன்ன எலும்புகள் புடைக்கின்றன. கைநரம்புகள் விடைக்கின்றன. "சப்ப்" பென்று அறைந்து விட, துறுதுறுக்கிற மனக்கை.

உணர்ச்சிகளை உள்ளடக்க மிகவும் சிரமப்பட்டார். சிரமப்படுகிற யத்தனிப்பு. பகீரதயத்தனிப்பு.

"அஞ்சுரூவாவுக்கு வக்கத்துப்போய்.. இம்புட்டு வேலைக செய்யலைடா. நாம, நமக்கானதை உருவாக்கிக் கிடணும்ங்குற துதான் ரொம்பமுக்கியம்.அதைவிட முக்கியமானது, புளிச்சச் செடிகளை வீணாக்கிரக்கூடாதுங்குதுதான்டா."

புளிச்ச செடியைப் போட்டது, வெள்ளாமைக்கு வேலியாகத் தான். வேலி வேலை முடிஞ்சது. தூக்கி தூர எறிஞ்சர வேண்டியது தானே ?

அது, சம்சாரி கொணமில்லேடா. குப்பையைக்கூட மண்ணோட உயிர்ச்சத்தை வளர்க்குறதுக்கு உரமாகப் பயன்படுத்துறவன், சம்சாரி. ஆடிமாச வெயிலுக்கு காய்ஞ்சுபோக வேண்டிய ஆதாளை, ஆத்திச்செடி,ஆவாரங்கொழையைக்கூட குப்பைக்கு உரமாக்குறதுதான் சம்சாரிகொணம். வெளைஞ்சு முடிஞ்சு,காய்ஞ்சுபோன பருத்திமாரைக் கூட, "காடி"பின்னுறதுக்கு பயன்படுத்துறது தான் சம்சாரி கொணம். எல்லாத்தையும் உருவாக்குறவன்தான் சம்சாரி. எதையும் வீணாக்குறவன் கிடையாது."

கோபத்தையும் எரிச்சலையும் உள்ளடக்கிக் கொண்டு நிதானமாகப் பொறுமையாகப் பதில் சொல்கிற பரமசிவம்.

அப்போதுதான்-

கீதாரிவந்தார். கிடைக்குகோன். "கிடைக்கோன்" என்றும் சொல்வார்கள். நாற்பதுக்குக் குறையாத செம்மறியாடுகள் ஒருமந்தை. பலமந்தைகள் சேர்ந்தது தான் கிடை. அந்தக்கிடையின் சகல நடைமுறைகளையும் பரிபாலிக்கிறவர்தான் கீதாரி அல்லது கிடைக்கோன்.

யார் யாருக்கு எந்தத் தேதியில் கிடை, எவ்வளவு வருமானம், வந்த வருமானத்தை எந்தெந்த மந்தைக்குப் பகிர்ந்து தருவது எல்லாம் கீதாரி தான்.

அந்தக்கீதாரி வந்து நின்றார். பரமசிவம்,

வாரும் கோனாரய்யா... என்ன வெஷயமா வந்தீரு? மொதல்லே திண்ணையிலே உக்காரும்."

" கருசக்காட்லே கிடை போடணும்னு சொன்னே இல்லே?"

"ஆமா, உழுதுபோட்டுக்கிடக்கு"

"இன்னிக்கே போட்டுரலாமா?"

"போட்டுரலாம்யா...."

"எத்தனை கிடை போடணும்?"

"ஆறுநாளைக்குப் போட்டுரலாம்"

"முன்னந்திநேரத்து கிடை காவலுக்கு யாரு வர்றது?"

"என்னோட மக_ எளையவன் வருவான்"

"அப்ப_ நா வரட்டுமா பரமு?"

"இரும் கோனாரய்யா_ மோரு சாப்புட்டுப்போரும்"

"நீ சொன்னதே போதும். மோரு குடிச்சமாதிரி வவுறும் மனசும் குளுந்து போச்சு... பரமு. சரி... பரமு, கிடைக்கு ரூவா எப்ப கிடைக்கும்?"

"சங்கரன் கோவில் கமிஷன் கடைக்கு அடுத்தமாசம் வத்தல் கொண்டுபோறேன். வுத்துட்டு வந்தவுடனே தர்ரேன்"

"பரமு ரூவா... ஏங்கையிலே இருக்குற மாதிரி. எப்ப வேணும்னாலும் குடு_"

"கோனார் புறப்பட்டுவிட்டார். உள்ளன் சால்வையின் நீலநிறம்,அவரது கறுப்பு நிறத்துக்கு அவ்வளவாக பொருந்திவரவில்லை. ஆனால் அவர் குணத்து வெள்ளை இவனுக்குப் பிடித்திருந்தது.

"அய்யா_"

"என்னடா ?"

"நா ஒண்ணும் கெடை காவலுக்குப்போகப்போறதில்லே"

"ஏண்டா_ ?"

"மூணுமூடை காம்ப்ளெக்ஸ் தூக்கி விதைச்சா_முடிஞ்சு போற வெஷயத்துக்கு... ஆறுநா ராத்திரிக்கு காட்லே கெடந்து சீரழியணுமா ?"

தொடையில் வைத்துத் திரித்துக்கொண்டே பரமசிவம், முருகேசன் முகத்தை வெறுப்பும் எரிச்சலுமாகப் பார்த்தார். ஆனாலும் நிதானப்பட்டார். தம்மைத்தாமே சமனப்படுத்திக் கொள்கிற பொறுமை. ஆத்திரத்தை அடக்குகிற யத்தனிப்பு.

"ஏலேய் முருகேசா... மண்ணுக்குன்னு உயிர்ச்சத்து இருக்குதுடா. மண்ணை புள்ளை மாதிரி நெனைக்கணும். வசக்கி வேலையும் வாங்கணும். செழிப்பா வளக்கவும் செய்யணும். காம்ப்ளக்ஸும் டி.ஏ.பியும் மண்ணோட உயிர்ச்த்தை சுரண்டிச் சூறையாடும். கொழையும் குப்பையும் கம்மாய் மண்ணும் கெடையும் போட்டோம்னா... வெள்ளாமை வெளைஞ்சு ஒண்ணுக்கு நூறா பெருக்கிக் குடுத்தாலும் மண்ணோட உயிர்ச்சத்து பெருகியிருக்கும்டா."

மண்ணைப்பத்தி என்னத்துக்கு இம்புட்டு அக்கறைப்படணும் ?"

"ஏன்னா... நிரந்தரமா சம்சாரித்தனம் செய்யுறவன் மண்ணைப்பத்தி அக்கறைப்படணும். மண்ணு நமக்கு பெத்த புள்ளை மாதிரி. அதுக்கு சோறும்போட்டு வளரவைக்கணும். அதை ஒழைக்கவும் வைக்கணும்"

முருகேசனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் வெறுப்பாக இருக்கிறது. அய்யா, ஒருபழம் பஞ்சாங்கம் பழைய பாணியிலேயே விவசாயம் செய்கிறார். பிடிவாதமாக அதில் உறுதியாக இருக்கிறார். வறட்டுப் பிடிவாதம். முட்டாள்தனமான வைராக்கியம்.

"கரண்டுகிணறு" என்பதாலேயே பாலையா நாயக்கர் புஞ்சையை வாங்க மறுத்து அடம்பிடித்த அய்யாவின் பழைய அறியாமை, ஆபத்தானது.

அவரது அறியாமையிலிருந்து வருகிற பிடிவாதம். அறியாமையிலிருந்து எழுகிற வைராக்கியம். மூர்க்கம் முரட்டுத்தனம். கோபக் குமுறல்.

அவரது அறியாமைக்கு எங்க அண்ணன், என்னோட கல்வி, பலியிடப்பட்டது. எங்களது எதிர்காலமும் பலியாகணுமா? வாழ்க்கையும் தொழிலும் பலியாகணுமா?

கிடை காவலுக்குப் போய்க் கொண்டு, வண்டி மாட்டைப் பத்திக் கொண்டு, ஆவாரங்கொழையை அறுத்துக் கொண்டு, கமலையை இறைத்துக்கொண்டு ஆயுள் முழுவதையும் கழித்து விடவா?

இதேபாணியில் பழம்பஞ்சாங்கத்தனமாக ஹைதர் அலிகாலத்துத்தனமாக விவசாயம் பண்ணிக் கொண்டிருந்தால்... முதலில் யாராச்சும் பெண்கொடுப்பார்களா? அப்படியே பெண் கொடுத்தாலும் வருகிற பெண்.. தன்னை ஒரு மனுசனாக காலத்துக்குப் பொருத்தமானவளாக மதிப்பாளா? பொருட்படுத்துவாளா? அய்யாவின் பிடிவாதத்தால் கல்வி பலியானது போலவே ஒட்டுமொத்த எதிர்காலமும் நாசமாகணுமா? வாழ்க்கையும் பலியாகணுமா?

அய்யா.. நல்லவர். அசுர உழைப்பாளி. பாசம் உள்ளவர். மனைவியை நேசிக்கிறவர். மண்ணை நேசிக்கிறவர். மாட்டைக் கூட தோழனாக நினைக்கிறவர். சம்பாதித்திருக்கிறார். உழைப்பின் மூலமாக விவசாயத்தை மதிப்புக்குரியதாக்கியிருக்கிறார்.

விவசாயம் செய்தும் வீடும், காடுகரையும் வாங்கலாம் என்று நிரூபிக்கிறவர். நிரூபித்திருக்கிறவர்.ஆனால், அறியாமை மிக்கவர். பழைமையைப் போற்றுகிற பிற்போக்காளர். பழைமைச் சிந்தனையில் வைராக்கியமாக இருக்கிறவர்.

அய்யா... போற்றுதலுக்குரியவர்.பின்பற்றுவதற்குரியவரல்லர். பாராட்டுக்கும் வணக்கத்துக்கும் உரியவர். வழிகாட்டியாக ஒப்புக் கொள்ளத்தக்கவரல்லர்.

அய்யா... வெற்றிகரமான விவசாயி. ஆபத்தான விவசாயக் கொள்கை உள்ளவர். வழிபடத்தக்கவர். வழிநடத்தத் தக்கவரல்லர்.

மரியாதை காட்டவேண்டும்.பாசம் காட்ட வேண்டும். மதிப்பு காட்ட வேண்டும். ஆனால், அவர் பாதையில் போய்விடக்கூடாது. அவரது சொற்களை வேதம் என ஒப்புக்கொள்ளக்கூடாது.

மீறவேண்டும். என் பயணம் எனக்கான திசையில் செல்ல வேண்டும். அய்யாவின் திசையில் கால்கள் சென்றுவிடக்கூடாது.

முருகேசனுக்குள் நெளிந்தும் வளைந்தும் பெருகுகிற ஊதுபத்தியின் புகையைப் போல...கூர்மையான நினைவுகள். தெளிந்த புத்தியோடு நிதானமாகச் சிந்திக்கிற முருகேசன்.

புஞ்சை மண்ணின் உயிர்ச்சத்தைப்பற்றிக் கவலைப்படுகிற அளவுக்குப் பெற்ற பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் கவலைப்படுகிறார்.

அறியாமையின் கவலை, ஆபத்தான கவலை. ஆரோக்கியமற்ற கவலை. தனது அச்சாகவே பிள்ளைகளையும் வார்க்க விரும்புகிற முரட்டுக்கவலை. கால மாறுதலுக்கேற்ப கோலமாறுதல் வேண்டும் என்பதறியாதவரின் கவலை.

நம்மைப்பற்றி நாமே கவலைப்பட்டாக வேண்டும்.

முருகேசன் மனசுக்குள் நீள்கிற சிந்தனைகள்.புளிச்சநாரைக் கோதுகிறான். சட் சட் டென்று அடித்து உதறி, தூசிதுப்பட்டையை நீக்குகிறான். கயிறாகத் திரிப்பதற்கான சுத்தத்தை உருவாக்குகிறான்.

தான் சொன்னதைக் கவனிக்காமல் இளையவன் நினைவு எங்கோ போய்விட்டதை உணர்ந்து ... பேச்சைநிறுத்திக் கொண்ட பரமசிவம் கயிறை மட்டும் திரிக்கிறார். தொடைவலியெடுக்கிறது. தொடையை மாற்றிக் கொள்கிறார்.

"அப்ப.. கிடைகாவலுக்குப் போகமாட்டே?" என்று கோபமில்லாத குழுறலாகக் கேட்கிறார்.

"ம்ஹூம்... என்னாலே போகமுடியாதுய்யா..."

தண்ணீர்ச்செம்பும் தேயிலைத்தண்ணீர் கிளாஸுமாக வாசலுக்குவந்த காமாட்சி... பரமசிவத்தை அன்புடன் கண்டித்தாள்.

"வுடுங்க... நீங்க நல்லதை நெனைக்கீக. புள்ளைகளுக்கு அது புரியமாட்டேங்குது... அவுக இஷ்டம் போலவுட்டுருங்க..."

காமாட்சியின் முகத்தை ஏறிட்டுப்பார்க்கிற பரமசிவத்தின் கண்ணில் ருத்ரம். மனஇறுக்கத்தின்அழுத்த அடர்த்தி.

"சரி... நா இன்னிக்குக் கிடை காவலுக்குப்போறேன். வேணும்ங்குறதை எடுத்துவை"

"ஆட்டும்...! நாம நம்ம பாதையிலே போவோம். அவுக, அவுக தெசையிலே போவட்டும்..."

"அது படுகுழியிலே போய் முடிஞ்சிட்டா?"

"தலையெழுத்துப்படி நடக்கும். குழின்னு அறிஞ்சா... வழிமாத்திக்கிடுற அறிவுள்ள புள்ளைக தான்."

அம்மாவை மதிப்புடன் பார்க்கிற முருகேசன். அம்மாவும் அய்யாவைப் போலப் பழைமையானவள்தான். பழையபாணி விவசாயத்தைப் போற்றுகிறவள்தான். அய்யாவைப்போல முரடு அல்ல. பிள்ளைகளின் உணர்வறிந்தவள். பிள்ளை காலம் வேறு என்பதை அறிந்திருக்கிறவள்.

விட்டுப்பிடிப்போமே என்று புதுவழிக்குத் தடம் விடுகிறாள். பிள்ளைகளின் போக்குப்படியும் நடந்துபார்க்கட்டுமே என்று வழிவிடுகிறாள்.

தாய்மை என்பதே நெகிழ்வானதோ! ஜனநாயகத்தன்மை கொண்டதோ...! அய்யாவைப்போலத் தன் கருத்தையும் தன் திசையை- தன் பாணியை- திணிக்கிற முரட்டுத்தனமும் மூர்க்கமும் அம்மாவிடம் இல்லை.

அம்மா தந்த டீக்கிளாஸை வாங்கினான். இவனுக்கு மட்டும் பால் கலந்த டீ.

வடக்கில் ஊர் இருக்கிறது. இந்தஊர் சற்றே வித்தியாசமானது. பெயரே கூடவித்தியாசம்.

புதுப்பட்டி, கரிசல்குளம் என்ற பெயரில் பல நூறுஊர்கள் இருக்கும். மதுரை என்ற பெயரில் கூட மற்றொரு ஊர் உண்டு. இந்தக் கிராமத்தின் பெயர், தனித்துவமானது. இந்தப்பெயரில் உலகில் வேறு எந்த ஊருமே இல்லை.

ஊருக்குத் தெற்கில் முழுக்க கரிசல் காடுகள். வடக்கில் முழுக்க செவல்காடுகள்.

கரிசல் காட்டில் கிடை கிடக்கிறது. ஆட்டுக்காரர்கள் ஆடுகளைக் கொண்டுவந்து "பொழுது மசங்க" அமர்த்தி விட்டார்கள். காடு முழுக்க சுற்றி மேய்ந்து, வயிறெடுத்த ஆடுகள் ஒவ்வொரு மந்தையாக வந்து சேர்ந்தன. குட்டிகளை மட்டும் தனிப்பிரித்து, ஆட்டுக்கூட்டுக்குள் அடைத்தனர். குப்புறக் கவிழ்க்கப்பட்டிருக்கிற கூட்டுக்குள் கொழை கட்டப்பட்டிருக்கும்.

செம்மறிக்குட்டி என்றால், நரிக்கு ரொம்பப்பிரியம். எச்சிலைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்துவிடும். நரிகளிடமிருந்து பாதுகாப்பதற்குத்தான்... இந்தக்கூடு. செம்மறியாடுகளைப் பாதுகாப்பதுதான் கிடை காவல்காரரின் கடமை, பொறுப்பு.

கோனார் ஒன்றுக்கு மூன்று சாக்குகளைவிரித்து, அதற்குமேல் சமுக்காளத்தை விரித்துப் படுத்துவிட்டார். பகல் பூராவும் வெயில் பட்ட இடம். அந்தப் பூமிவெக்கையில் இருந்து பாதுகாக்கத் தான் கோனாருக்கு இத்தனை ஏற்பாடுகளும்.

பரமசிவம் சமுக்காளத்தை மடித்து தோளில் போட்டிருக்கிறார். தலையில் வட்டக்கட்டாகத் துண்டு. கையில், கோனாரின் ஆட்டுக்கம்பு. ஆடுகளை தப்பிப்போகவிடாமல் சுற்றிச்சுற்றி வருகிறார்.

ஆடுகள் கனைக்கின்றன. செருமுகின்றன. அங்கும் இங்குமாக உலாவுகிறது. அங்குட்டு இங்குட்டு என்று நழுவப் பார்க்கிறது. பரமசிவம் நழுவவிடாமல் எச்சரிக்கையுடன் சுற்றி வருகிறார். மண்கட்டிகளை "விர்ர்,விர்ர்" ரென்று வீசுகிறார்.

தப்பிக்க வழியில்லை என்றறிந்த ஆடுகள்,வேறு வழியில்லாமல் பெருமூச்சுடன் படுக்கின்றன. ஒவ்வொன்றாகப் படுத்து,அசை போட ஆரம்பிக்கின்றன.

பிறை நிலா வெளிச்சம். பிரிவு கேட்டுப் போய்விட்டது. கற்றை இருள் சுற்றிக்கொண்டது. நட்சத்திரங்கள் வஞ்சகமில்லாமல் பூத்துக்கிடக்கின்றன. கரும்போர்வை விரிப்பில் சிதறிய பருக்கைகளைப்போல.

கையில் கம்புடனும் மண்கட்டியுடனும் ஒரே சீரான நடையில் நிதானமாக உலாவுகிற பரமசிவம். வெள்ளி வெளிச்சம் ரொம்ப மங்கலாக. பாம்பு போன்ற நச்சுப்பிராணிகளின் முதுகில் மிதித்து விடக்கூடாதே என்கிற பயம். அசந்தநேரத்தில் ஆடுகள் தப்பிப்போய்.. வெள்ளாமைகளில் வாய்வைத்துவிடக் கூடாதே என்கிற எச்சரிக்கை.

எல்லா ஆடுகளும் படுத்துவிட்டன. அதுகள் போடுகிற சாணி.அதுகள் மூத்திரம் பெய்கிற இரைச்சல்.

"அப்பப்ப பேர்வை (பெயர்வு) அடிச்சுக்கிரணும், பரமு" என்று கூறியிருக்கிற கோனார்.

படுத்திருக்கிற ஆடுமாடுகளையெல்லாம் உசுப்பி எழுப்பி, வேறுஇடத்துக்கு நகர்த்தி... வட்டம் வட்டமாகச் சுற்றிவந்து, அந்த இடத்தில் படுக்கவைப்பது தான் "பேர்வை".(பெயர்வு ?)

சாணம், மூத்திரம் தான் மண்ணுக்கு உரம். ஆடுகளின் திரேக வெக்கையும் மண்ணுக்கு உயிர்ச்சக்தியாக மாறும்.

சுற்றிலும் இருள். பக்கத்தில் ஆந்தையின் அலறல். பனந்தோப்பில் மயில்களின் வீறிடல். கதறல்கள். சங்கரன்கோவில் ராஜபாளையம் தார்ரோட்டில் லோடு ஏற்றிய லாரிகள் போகிற உறுமல் சத்தம். அதிலும்,சோழபுரம் பாலத்தில் மேட்டை நோக்கி ஏறமுடியாமல் சிரமப்பட்டு ஏறுகிற லாரிகளின் உறுமல்கள். முரட்டு உறுமல்கள்.

அவ்வப்பொழுது... ஆலங்குளம் சிமெண்டாலையின் சங்கு சத்தம்.

இரவின் சத்தம். இருளின் ரகசிய மொழி.கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளின் ரீங்கரிப்புகள். தனிமையின் தகிப்பு.

பரமசிவம். இளையவனைப்பற்றி யோசிக்கிறார்.

ரெண்டாவது பேர்வை அடித்தபிறகு... சாணவீச்சம் அடிக்கிறது.

முருகேசனைப் பற்றிய கவலைபடிந்த எண்ணங்கள்.

மூத்தவன்... நம்ம வழிக்கு வந்துட்டான். இளையவன் நம்ம வழிக்கு வரவேமாட்டானோ? ரொம்ப எதிர்வாதம் செய்கிறானே... வெறும் வாதமாகவே இருக்குமா? எதிர்ச் செயலாகவும் இருக்கிறதே...

"கிடைக்காவலுக்கு நா போகமாட்டேன்" என்று தாட்சண்யமே யில்லாமல் "டப்" பென்று அவன் சொன்ன விதம். அவன் எதிர்ச்செயலுக்கு முழுமையாகத் தயாராகி வருகிறானோ...

எதிர்ச்செயல் என்றால்... என்ன?

"பாகத்தைப் பிரிச்சுக்குடு. நா எனக்குத்தெரிஞ்ச தெசையிலே வெவசாயம் பாத்துக்கிடுதேன்."என்பானா? அவ்வளவு தூரத்துக்குத் துணிவானா?

துணிந்து விட்டால்...?

அவருக்குள் பரவுகிற நடுக்கம். அச்சஅதிர்வலைகள்.பயத்தில் நா உலர்கிறது.

அவரது பயம், பொய்யாகிவிடவில்லை.. அதுநிஜமாகி விட்டது. அந்த நிஜம். எத்தனை கொடிய நிஜம்! பரமசிவத்தையே நொறுக்கி உடைய வைத்துவிட்ட நிஜம்.

22

குடிமகனைத் (நாவிதர்) தேடி, இச்சி மரப்பக்கம் போனான், முருகேசன். நல்ல வேளை ...! ஆதி இருந்தான். வளர்த்தியான ஆள். வாளைக் கருவாட்டை நட்டுக்க நிமிர்த்தின மாதிரி, ஒல்லியான வளர்த்தி. மல்துணியில் தைத்த கைவைத்த பனியன். சைடு பாக்கெட்டில் பீடிக்கட்டும் தீப்பெட்டியும். புதுநிறமான ஆளு. இச்சி மரத்து நிழலில் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்கிற ஆதி. முன்னால் முகமேந்தி உட்கார்ந்திருக்கிறவருக்கு "முகம் வழிப்பு" செய்கிறான். வலது கை விரல்களுக்குள் சவரக்கத்தி இடதுகை முகத்தில் உள்ள சுருக்கங்கள் பள்ளங்களை நீவி இழுத்து நேர் செய்கிறது. ரெண்டு கடைவாய்ப் பற்களும் விழுந்து... பெருங் குழிகளாக மாறிப்போன கன்னங்களில் கூட ஒற்றைக்கட்டை கூட தட்டாமல் சுத்தமாக "முகம் வழிப்பு" செய்வதில் ஆதி, மாமன்னன். பெருங்கில்லாடி.

முருகேசன் போய் நின்றான். "நேரமாகுமோ" என்று எரிச்சலடைகிறான். முள்மேல் நிற்பவனைப்போல... இருப்பு கொள்ளாமல் தவிக்கிற முருகேச மனசு. இவனுக்குஇவனது அவசரம். இளவட்ட அவசரம்.

"பொழுதடைஞ்சு, இருட்டியும் இருட்டாத நேரத்துக்கு கரெக்டா நீ வந்துரு. நானும் வந்துருதேன்..."

"ஓடைக்குப் போறேன்னு பொய் சொல்லி ஓடைக்குப் போற மாதிரி போக்கு காட்டிட்டு... ஓடைக்கரைக்குப் பக்கத்துலே இருக்குற இடி கிணத்துக்கு வந்துருவேன். நீங்க வராம இருந்துராதீக...!"

இறவை இல்லாமல்... ஆள்போக்குவரத்து இல்லாமல், உபயோகமில்லாமல், சற்றே புதர்மண்டிக்கிடக்கிற பாழ் கிணற்றைத்தான்... "இடிகிணறு" என்பார்கள். இடிந்து கொண்டிருக்கிற கிணறு என்று அர்த்தம்.

செண்பகம் நினைவுக்கு வந்தாள். நல்ல கறுப்பு. லட்சணமான முகம். உடுக்கு மாதிரி திரேகம். சற்றே குட்டை. இடுப்பு மட்டும் ஒடுங்கி குறுகலாக இருக்கும். பிட்டமும், முதுகும் பரந்து விரிந்து அகலமாக இருக்கும். அதிலும் முன்னழகு ?

இவன் கிறங்கி விழுந்ததே... அதில் தான் அதைப்பார்த்துத் தான்.

"முகம் வழிப்பு" முடிந்து, குளித்து விட்டு, மாற்று வேட்டி சட்டை மாட்டி, எண்ணெய்தேய்த்து, உச்சிபார்த்து "சேக்கு" இழுத்து,அந்த முன்பக்க சுருள் ரோமக்கற்றையை வட்டமாக்கி நெத்தியில் நிறுத்தி... பவுடர்போட்டு, செண்ட் போட்டு...

அவள் இவனிடம் கிறங்கியது, இந்த செண்ட் வாசனையில் தான். சோப்பு போட்டு சோப்பு போட்டு கழுவித்துடைத்த முகப்பளபளப்பும் , இந்த செண்ட் வாசமும் செண்பகத்தை சுண்டி இழுத்து மடியில் தள்ளிவிட்டது.

முதலில் கிறங்கியது, செண்பகம் தான். பெரியபடிப்பு படித்து ஆபீஸரானவன்போல்.. பளபளத்த முகமும், பதவிசான நடத்தையும், வசீகரமான மனச்சிரிப்புமாக ஊரில் அவன் தனித்து ஒளிர்ந்தான். நட்சத்திரங்களின் ஊரில் திரிகிற பௌர்ணமி நிலா போல... முருகேசன் இருப்பதாக செண்பகம் நினைத்தாள். ரசித்தாள். நஞ்சடித்த கெண்டை மீனாக கிறுகிறுத்தாள்.

கடைக்குப்போகிற முருகேசன்... புஞ்சைக்கு அய்யா அம்மாவுக்குத் தூக்குச்சட்டியில் சோறு கொண்டு போகிற முருகேசன், காட்டில் வேலை பார்க்கிற கூலியாட்களுக்கு டீத்தூளும், மண்டைவெல்லமும் போட்டுக் கொதிக்கவைத்த கடுங்காப்பியும், அங்கு விலாஸ் புகையிலையும், வெத்தலைபாக்கும் கொண்டு போகிற

முருகேசன்.டக்கரில் ஏற்றிய லோடு மேல்... ராஜாமாதிரி கம்பீரமாக உட்கார்ந்து போகிற முருகேசன்.

முருகேசன்களைத் துரத்திதுரத்திப் பின்தொடர்கிற மயக்கமேறிய மையல் கண்கள். சென்பக மனசின் துள்ளலோட்டம்.

அந்த மன்மதனை எண்ணி எண்ணி மயங்குகிற சென்பக ரதி.

முருகேசன் அவளைக் கவனிக்கிற மாதிரி தெரியவில்லை. எங்காவது பார்த்தாலும் ... பார்வை ஒருகணம்கூட நிலைப்பதில்லை. திகைத்துக்கூட விலகுவதில்லை. சுவரை, மரத்தை, மாடுகளைப் பார்த்தமாதிரி... சட்டென்று விலகிவிடுகிற கண்கள். பொருட்படுத்தாத பார்வை. முருகேசன் கவனத்தைக்கவர்கிற ... அவன் மனப்பார்வையில் தைக்கிற... பலமுயற்சிகளைப் பண்ணிப்பார்த்தாள். கதையாகவில்லை.

மஞ்சணத்திமரத்துப் புஞ்சைக்கு .... துணிமணிகளையெல்லாம் அலசிவிட்டுக் குளிக்க வந்திருந்தாள் சென்பகம். பெரிய பொட்டலம். அலுமினிய வாளியிலும் அமுக்கிவைத்த துணிகள். "செல்லம்" சோப்புக்கட்டி, மதுரை செல்லம் சோப்பு, நல்லதுநுரை வரும்.துணி வெள்ளை வெளேரென்றாகிவிடும். வெள்ளைத்துணிகளுக்கு நீலமேற்றுவதற்காக... அதேசெல்லம் சோப்பில் நீலக்கட்டி ஒன்றும் கொண்டுவந்திருந்தாள்.

பம்ப் ஷெட் மோட்டார் ஓடிக்கொண்டிருக்கிறது. நல்ல பெரிய சிமெண்டுத் தொட்டி. சுற்றிலும் சோப்பு போட... துவைக்க... கும்மி யெடுக்க பலகைக் கற்கள்.

அவள் வருகிறபோது பொழுதுக்கால் உச்சி சரிந்துவிட்டது. நாலு மணி இருக்கும். சுள்ளென்று உக்கிரம் குறையாமல் அடிக்கிற வெயில்.

துணிகளை நனைத்து... ஊறவைத்து... சோப்பு போட்டு... கும்மியெடுத்து... துவைத்து...முடிக்க பொழுது சாய்ந்துவிட்டது.

கருகருவென்று மசங்குவதற்குள் வீடுபோக வேண்டுமே என்ற அவசரம், பதற்றம். பரபரப்பாகத் துணிகளைப் பிழிந்து பிழிந்து வாளிக்குள் திணிக்கிற செண்பகம். பொட்டலம் கட்ட வேண்டிய துணிகளை ஈரப்போர்வையில் பிழிந்து முறுக்கிய துணிகளாக எறிகிறாள்.

இதே மோட்டாரில் குளிக்க வந்தவன், முருகேசன். ஒருபெண் குளிக்கிறாள் என்றவுடன்... வந்தது தெரியாமல், பம்ப் ஷெட்ரூமுக்குள் புகுந்துகொண்டான்.

ஆண்மகன் பார்வையில் ஒருபெண் குளிக்கத் தயங்குவாள். தடுமாற்றம் அடைவாள். பதற்றப்பட்டு துணிமணிகளை அலசியும் அலசாமல் அள்ளிக்கொண்டோடுவாள்.

ஒரு பெண்ணின் குளிக்கும் சுதந்திரத்தில் குறுக்கீடு செய்வானேன் என்ற நினைப்பில் தன்னைத்தானே ஒரு மறைவில் ஒதுக்கிக்கொண்டான். பம்ப்ஷெட் ரூமுக்குள் புகுந்துகொண்டான்.

ரூமுக்குள்ளிருந்து சுவரில் ஓட்டைபோட்டுத்தான் வெளியே குழாய் போகிறது. அந்தக் குழாய் தான், நீர்க்கற்றையை உருக்கி வார்த்த வெள்ளியாக ஊற்றிக்கொண்டிருக்கிறது.

குழாய் போகிற ஓட்டையை... குழாய் போனது போக உள்ள மிச்சதுவாரத்தைக் கற்களாலும் துண்டுச் செங்கல்களாலும் அடைத்திருக்கிறார்கள். அப்படி அடைத்தாலும்... அதையும் மீறித் தெரிகிற இண்டு இணுக்குகளாகச் சிறுசிறு இடைவெளி. பார்த்தால்– நீர்க்கற்றை தெரிகிறது. கற்றையின் வேகம் தெரிகிறது.கற்றைக்குள் கொடுத்து அலசப்படுகிற துணி தெரிகிறது. முறுக்கிப் பிழிகிற கை தெரிகிறது. கைவளையல் தெரிகிறது. பிழியப்பட்டு வழிகிற நுரைநீர் தெரிகிறது.

கற்றையில் கொடுக்கப்படுகிற கூந்தல். நனைந்து நுரையும் எண்ணெய்ச்சிக்குமாக வழிகிற - தெறிக்கிற -நீர்த்திவலைகள்.

தேன்நிற ஜாக்கட்டோடு குளிக்கிறாள்.

முருகேசன் பார்ப்பான். "ச்சேச்சேய்.. பாக்குறது ஞாயமில்லே" என்று திரும்புவான். கைவளையலைப் பார்ப்பான். சீச்சீய் என்கிற சுயகண்டிப்புடன் திரும்பிக்கொள்வான்.

கள்ளப்பார்வை பார்க்கிற சபலமும் சுயகண்டிப்புடன் பார்வையை விலக்குகிற பேராண்மையுமாக அவன் முரண்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் தான்-

தேன்நிறத்து ஜாக்கட்டின் முன்பகுதி. அதில் பட்டு மோதித்தெறிக்கிற நீர்க்கற்றை.

இவனது பேராண்மை தோற்றுப்போன கணம். சபலம் ஜெயித்துவிட்ட நிமிஷம்.

இப்படி ஒரு வடிவமா...! இப்படி ஒரு பேரழகா? இப்படி ஒரு பருமனா? இப்படி ஒரு திண்ணக்கமா? இப்படி —ஏகப்பட்ட "இப்படி ஒரு" கள்.

அவன் கிறங்கிவிட்ட தருணம். தேனில் விழுந்த சிற்றெறும்பாகக் கட்டுண்ட பார்வை. நிலை தடுமாறிவிட்ட மனசு. நிலைத்து நின்ற கண்கள்—

அய்யய்யோ—

அவள் ஜாக்கட் ஊக்கைக் கழற்றுகிறாள். வனச்சுதந்திரம். ஆளற்ற காட்டுச் சுதந்திரம். அவளது திரேகக் கறுப்புக்குச் சம்பந்தமேயில்லாத ஒளித்தேகம். தேன்நிறத்துப்பிரதேசம் சூரிய ஒளி பார்க்காத அந்தரங்கம்.

வலது பக்கத்தில்.. அடிப்பக்கத்தில் ஒரு மச்சம். கரிய ஒளித்துளி. தேனில் கிடக்கும் கட்டெறும்பாக—

அவனது உயிர், அக்கணத்தில் அவள் மடியில் சரணடைந்தது.

ரெண்டு மூன்று நாளாகிவிட்டது.

தெக்காடு புஞ்சையில் ஏழு ஆட்கள் மிளகாய்ப்பழம் பொறுக்குகிறார்கள். அதில் செண்பகமும் ஒருத்தி.

இவன் எப்போதும் புஞ்சைப்பக்கம் போகாதவன். அன்று புஞ்சையே கதியென்று கிடந்தான். கமலைக்குழி நிழல் மறைப்பிலேயே புத்தகம் படித்துக்கொண்டிருந்தான்.

புத்தகம் எங்கே படித்தான் ?அது கையில் இருந்தது. மனசு... உயிர் முழுவதும் "செண்பகம் வரமாட்டாளா" என்ற ஏக்கத்தில்.

அங்கே இருந்த குடிதண்ணீர் குடத்தைத் தூக்கவந்தாள்.

அவள் ஏற்கனவே கிறுகிறுத்துக்கிடக்கிறவள். முருகேசன் கவனத்தில் விழுமாட்டோமா என்று ஏங்கிக் கிடக்கிறவள்.

குடம் இருக்கிற இடத்தில் அவன் இருக்கிறான்.

குடம் தூக்கி வருகிற வாய்ப்பைச் சண்டைபோட்டு வாக்குவாதம் செய்து கைப்பற்றிப் போயிருக்கிறாள்.

எண்ணெயும் நீரும் வழிகிற முகம். எண்ணெய் மினுமினுப்பான தலைமுடி. ஓட்டமாய் ஓடி வருகிற கறுப்புமான்.

"என்ன..."

முருகேசனை படபடப்போடு பார்த்து திகைக்கிறாள்.

"தண்ணி தூக்கவந்தேன்"

"இங்க_வா"

"என்னத்துக்கு ?"

"கிட்டத்துலே வா"

உள்ளுக்குள் கடலலைகளாகக் குமுறுகிற ஆர்வப்பெருக்கு. வெளிமுகத்திலோ குடம் குடமாக அச்சவியர்வை. கண்ணில் மருட்சி.

"செம்பகம்_ இங்க வா_ கிட்டத்துலே"

"பயமாயிருக்கு"

" நா ஒண்ணும் ஆளை முழுங்குற ராட்சஸன் இல்லே"

நெருங்கிவந்தாள். முகத்தில் வழிகிற வியர்வையும் நடுக்கமும் கண்ணில் பயமும்_அலைபாய்வும்.

"செம்பகம், ஒன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு"

அவனது நாவறட்சி, உலர்ந்த நாக்கு. சொல்லப்பயம். சொன்னபிறகும் பயம். என்ன சொல்வாளோ... என்ற பயம். அழுது ஆர்ப்பரித்துவிட்டால்,பெரிய கேவலமாகிவிடுமே, என்ற நடுக்கம். உள்நாக்கு உள்ளே இழுக்க மனசு குமுறிப்பாய்ந்து பொங்கிச்சீற... தயக்கங்களைக் கடந்து.... எப்படியோ சொல்லிவிட்டான். "ஒன்னை ரொம்பப் புடிச்சிருக்கு..."

சொன்னபிறகு திக்,திக்... திக்.... முருகேசனுக்குள்.தயக்கமும் மிரட்சியுமாக முகம்தாழ்த்தி.. கண் நிமிர்த்திப்பார்க்கிற செண்பகம். அகன்ற கண்களில் நீர்கோப்பது போல ஒரு மின்னல்.

மறுக்கப் போகிறாளோ... அலறப்போகிறாளோ...

"நீ ரொம்ப லட்சணமாயிருக்கே. ஒன்னோட கறுப்பு அழகுக்கறுப்பு. எனக்கு ரொம்பப்புடிச்சிருக்கு... அதுலேயும்..."

விரலை அவளது நெஞ்சின் வலதுபக்கம் நீட்டினான்.

"அதுக்கு அடியிலே இருக்கிற கறுப்பு மச்சம், என்னைச்சுண்டியிழுத்து... ஒங்காலடியிலே போட்டுருச்சு"

அவளுள் சட்டென்ற அதிர்வு. குலுங்கிப் போன அவள். தயக்கம், அச்சம் போன்ற பாவனைகளையெல்லாம் பறிகொடுத்து விட்டு "களுக்" கென்றுநாணச்சிரிப்பும் குடத்து நீர் இடுப்புமாக ஓடுகிற கரு மின்னல். வெயிலில் தெறித்தோடுகிற புள்ளி மான்.

முருகேசன் மனசுக்குள் பூக்காட்டின் வாசச்சிரிப்பு இதழ்விரித்த மலர்களின் வெடிப்போசை. உள்ளுக்குள் கிண்ணென்கிற போதை. வெற்றி தரும்போதை. பெருமிதலாகிரி.. அவனுக்குள் அலை அலையாக வட்டம் விரிகிற புன்னகைகள்.

இச்சிரமத்தின் நிழலில் உட்கார்ந்திருக்கிற முகவழிப்பு முடிந்து எழுந்தவரின் இடத்தில் கிடந்த ரோமநறுக்கு இணுக்குகளை வலதுகையால் பரசி.. கூட்டி அள்ளி.. மரத்து ஓரத்தில் போட்டுவிட்டு, முருகேசனைப்பார்க்கிற ஆதி....

"வாங்க ராசா_ உக்காருங்க"

"ரொம்ப டயமாயிருச்சு. வெருசா_."

"முடிவெட்டா, முகவழிப்பா ?"

"முகம் தான்"

"இந்தா_ ஒரு செகண்ட்லே"

ஒருபீடியை எடுத்து வாயில் வைக்கிற ஆதி. நுனியைக் கடித்து துப்பிவிட்டு.. பற்ற வைத்துவிட்டு, பல்லிடுக்கில் நிறுத்திக்கொண்டு, புகையை உறிஞ்சிய வேகம். அப்படியே தீட்டுக்கல் எடுத்து_ ஒருதுளி தேங்காய் எண்ணெய் வைத்து_ சவரக்கத்தியை தீட்டுகிற அவசரம். ஒதுக்கி, ஒழுங்குபடுத்தப்பட்ட சிறுமீசையை _ கையாலேயே தடவிச் சரிபார்த்துக்கொண்ட முருகேசன்.திருப்தியாக இருந்தது.

வேகவேகமாகப் புறப்படுகிற முருசேகன்.

"ராசா.." ஆதியின் கெஞ்சல் குரல்.

"என்ன ஆதி ?"

"ஒருகட்டுப்பீடிக்கு_ உத்தரவாகட்டும்.."

"அம்புட்டு காசு இல்லியே"

."பார்க்கப் போற கிளி சொக்கிவுழவேண்டாமா ? ஆதிக்கு பீடிக்கட்டு போட்டீகன்னா_ என்னோட வாக்குபலிக்கும்"

"என்ன வாக்கு ?"

"பீடிக்கட்டு போட்டீகன்னா..குளிச்சிட்டு கிளியைப்பாப்பீக. கிளிகிட்டேயும் குளிப்பீக.வீட்லே வந்து மறுகுளிப்பும்போடுவீக.."

முருகேசனுக்குள் பரவசக் கூத்தாட்டம். பூத்துச்சிரித்து கொந்தளிக்கிற உள் மனசு. வெளிப்பாவனையில் அதையெல்லாம் மறைத்து_ கூச்சப்பட்டவனாக நெளிகிறான்.

"அதெல்லாம்... ஒண்ணுமில்லே. கிளியுமில்லே, முயலுமில்லே"

"முயல்பிடிக்கிற ராசாவுக்கு, முகம் சொல்லிராதா ? நா பாக்காத எளவட்டமா ?"

பீடிக்கட்டுக்கு துட்டுதருகிறபோது..... குறும்புச்சிரிப்பும், கண்ணடிப்புமாக துள்ளல்குரலில் ...ஆதி.

"கிளியோட பேரு சொல்லட்டா ?"

"நீ சும்மா இரப்பா"

கூச்சச்சிரிப்போடு ஓடுகிற முருகேசன்.

ஓடுகிற முருகேசனைத் துரத்துகிற ஆதியின் குதூகலக்கேலி.

"அய்யா காதுலே போட்டு வைக்கட்டா ?"

திரும்பிப் பார்க்காமலேயே கையை உயர்த்தி,வேண்டாம் என்று கையசைக்கிறான்.

மஞ்சள் வெயில் மண்ணில் கீற்றுகீற்றாக. வேப்ப மரங்கள் மஞ்சள் வெயிலில் குளித்து மின்னுகின்றன. தென்னங்கீற்றுகளும், வேப்பஇலைகளும் எண்ணெய் தேய்த்த மாதிரி மினுமினுக்கின்றன.

குளித்தவேகம். துணி மாற்றிய வேகம். ஈரத்தலையில் எண்ணெய் அரக்கிய துரிதம். கண்ணாடியை வைத்துஉட்கார்ந்து, குனிந்து...சிறிய கண்ணாடிக்குள் தன்னைத்தேடி வகிடு எடுத்து.. நெற்றி மேல் ரோமச்சுருளை வளையப்படுத்தி ஸ்டைலான கர்லிங்கை சீப்பின் முதுகால் அழுத்தி.. சென்ட்போட்டு..

"எளையவனே... ஆடுகுட்டிக்கு கொழை ஒடிச்சுட்டு வாயேன்டா" .காமாட்சியின் கெஞ்சல்.

"அதுக்கு அண்ணனைப்பாரு"

"நீ எங்கே போறே ?"

முருகேசனுக்குள் கோபச்சீறல். சள்ளென்று அவன்னை மீறித் தெறிக்கிற குரல். "ம் ம் ம்...சுடுகாட்டுக்கு"

வெலவெலத்துப்போன காமாட்சி. பேயறைந்தவளைப் போல் திகைத்துப்போன பெற்ற மனம். துடிதுடிப்பான மனப்பதைப்பு.

"என்னடா... இப்புடிப்பேசுறே?"

"அய்யாவும் நீயும் என்னை ஒண்ணுக்கும் ஆகாத பயலாக்கிடுவீக. அதைவிட மயானக்கரையிலே படுக்குறது எம்புட்டோ ஒசத்தி..."

அய்யாமீதான நீண்டநாள் குமுறல். நீண்ட நாள் குமைச்சல். சுயபாதையில் செயல்பட முடியாத இயலாமை. அய்யாபாதையில் போக விரும்பாத மனஒதுங்கல்.ஆக.. சும்மாவே நாளும் பொழுதும் வீணாகி.. விரையமாகி... வெறுமையாகி...

எளையவன் எதுக்கும் லாயக்கில்லாதவன் என்ற முத்திரையும், நினைப்பும் அழுத்தமாகிவிட...

இந்தக் கோபமெல்லாம் இந்தக்கணத்தில் அம்மா மீது கற்றையாகச் சீறி வெடித்துச்சிதற...

எவ்வித குற்ற உணர்ச்சியையும் நினைக்கவிடாமல், சென்பகமச்சம் கண்சிமிட்டிஅழைக்க...

ஓட்டமாக ஓடுகிற முருகேசன், அம்மா பக்கம் திரும்பிக் கூடப்பார்க்காமல்.

இடிகிணற்றுக்குள் இவன் இறங்குகிறபோது.. கருகருவென்று இருள் பரவத்துவங்கிவிட்டது. மேகத்துவெளிச்சம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிற நிமிஷங்கள்.

உவர் பொங்கி... தூசியாகிப்போன படிகளில் பத்து இறங்கினால்.. மூலைப்படியில் சிமிண்டுத்தளம். நாலுக்கு நாலடி அகலச்சதுரம்.

வாகான இடம். வசதியான இடம். இவன் போகிற போது... அவள் பொறுமை காத்து காத்து, எதிர்பார்த்து எதிர்பார்த்து.. பொறுமை சிதைந்து.. ஒருபடி ஏறிய கணம்...

ஓடியவேகத்தில் மோதுகிற முருகேசன்.இடுப்புக்கு அடியில் கைசுற்றிக் கோத்து வளைத்து இறுக்கி பூச்சென்டு போலத் தூக்குகிறான். செந்தூக்காக தூக்குகிற இவனது உற்சாகப் பரவசப்

பரபரப்பில் அவளது கோபம், சலிப்பு, சோர்வு எல்லாம் மாயமாக மறைந்துவிட்டன.

செந்தூக்கு. இவனுக்கும் மேலாக அவளது முதுகும் தலையும். அண்ணாந்த நிலையில் ஏறிட்டுப் பார்க்கிறான். அவளது கிளுகிளுக்கிற வெட்கச் சிரிப்பின் முக அழகு. அதற்கும் கீழே இவனுக்குப் பிடித்த முன்னழகு. அதன் வடிவப்பிரமாண்டமும், வளைவுத் துல்லியமும்.

செந்தூக்காகத் தூக்கிய முருகேசன் அப்படியே கைகோப்பின் இறுக்கத்தைச் சற்றே தளர்த்த.. பிழியப்பட்ட முறுக்குமாவுபோல... மெல்ல மெல்லச்சரிந்து இறங்குகிற பூந்தேகம். நெற்றியில் உரசி உதடுகளை வருடி.. நாடியில் அழுத்தி ... நெஞ்சில் வந்து அப்புகிற சென்பகம்.

மோக மயக்கமும், நாணக்கண்டிப்புமாக... சென்பகம்.

"இதென்ன.. மொரட்டு வெளையாட்டு?"

"இதெல்லாம் ஒரு வெளையாட்டா? சும்மா ஒரு குறும்பு"

"அப்ப.. வெளையாட்டு?"

"அது இனிமேதான்.."

அவன் நெஞ்சில் முகம் பதிக்கிற சென்பகம். அவனது கட்கங்களில் சென்ட் வாசத்தைத்தேடி நுகர்கிற அவனது மனக்கிறக்கம்.

நாசியின் சுவாச இழுப்பை சுத்தமாக "ஷ்ஷ்ஷ்ஷ்" ஷென்று சுவாசிக்கிற அவளது எல்லைமீறிய மோகம். வெட்கமறியாத ஆசை. அவனோ.... அவளது முன்னழகில் மனசும் பார்வையும் கைகளும் லயித்துக் கிறுகிறுக்க...

அப்படியே அவளைக் கீழே சாய்த்துப் படுக்கவைக்கிற முருகேசன். மாராப்பை ஒதுக்குகிற பரபரப்பு. ஜாக்கட் ஊக்குகளை கழற்றுகிற விரல்களின் வியர்வை நடுக்கம்.

சற்று நிதானிக்கிற முருகேசன். நடுங்கும் விரலுடன் ஊக்கு கழற்றுவதை நிறுத்திய முருகேசன்.

"சித்த நேரம் பேசிக்கிட்டிருப்பமா ?"

"செத்தேன். நேரமாச்சு. வீட்லே தேட ஆரம்பிச்சிருவாக"

பதறுகிற செண்பகம். பதற்றத்தால் துரிதப்படுத்துகிற செண்பகம். பேச ஆசைப்படுகிறான். கொஞ்சலாம். கேலி பண்ணலாம். மனமடை திறந்த பேச்சும் ஒரு மனஉறவு தான். போதைதருகிற மனக்கலப்புதான். அவன் ஆசைக்கு இடமில்லை. நேரமில்லை.

துரிதப்படுத்துகிற பயம்.

அவனுக்குப் பிரியமான அந்த மச்சத்தில் எச்சிலால் முத்தமிடுகிற லாகிரியில் கிறுகிறுக்கிற முருகேசன், சர்க்கரைப்பாகில் சிக்கின ஈயாக.

23

சென்பகத்தின் அழகும் வடிவும் அவனை முதலில் ஈர்த்தது. பார்க்க வைத்தது. நீரின் நனைந்த இளமைக்கான மினுமினுப்பு, அவளது முன்னழகு தான்- அதன் எடுப்பும் விரிவும் தான் அவனை வீழ்த்தியது.

இரவில் கனவு கண்டான். பாயை விரித்தவுடன் படுத்து உறங்கிவிடுகிற முருகேசன், ரெண்டு மாசமாக உறக்கம் வராமல் புரண்டு புரண்டு வந்தான். அவன் மனசைப் புரட்டிப் புரட்டி எடுக்கிற சென்பகம். அவளது முன்னழகு. தேனில் அமர்ந்த கட்டெறும்பான அந்த மச்சம்.

தெருவில் எதிர்ப்படுகிற போதெல்லாம் ஒரு குறுஞ்சிரிப்பு. கண்ணின் மோதல்களில் மனஉரசல்கள். தண்ணீர்க் குடம் இடுப்பில் இருக்க. ஓடி ஓடி நீர் சுமக்கிற அவளை மனதாலும் கண்ணாலும் விரட்டுவது. அவனைப் பார்க்கிற ஆசைக்காகவே, தேவை முடிந்த பிறகும் ஏழெட்டுத் தடவை வெறுங்குடத்துடன் வந்து.. ஒரு கண் மோதல், ஒரு புன்னகை மோதல் என்ற மனக்கலப்பு நிகழ்த்தி விட்டுப் போகிற சென்பகம்.

ஊமைநாடகமாகவே ஓடிக்கொண்டிருந்த பல பத்து நாட்கள். பேசா உறவு, ஊர் பேசுகிற உறவு. சந்திப்பு இல்லை. சரசம் இல்லை. ஒரு சொற் பரிமாற்றம் கூட இல்லை.

பழநி வந்து முருகேசனைத் தேடினான்.

காமாட்சி... "ஊர் மடத்துப்பக்கம் போயிருக்கான்" என்றாள். பழநி ஓடினான். அவன் ஒரு மாதிரி.

"என்னடா— இங்க நிக்க ?"

"என்ன பழநி"

"படத்துக்கு வாரீயா ?"

"எப்ப ?"

"ரெண்டாவது ஷோ"

"என்ன படம் ?"

"ஏதோ — ஒரு மலையாளப் படமோ— தெலுங்குப் படமோ"

"தமிழ்ப் படமில்லியா ?"

"இல்லே"

"அந்தப் படம் நமக்குப் புரியாதுலே— ?"

"நடுவுலே ரெண்டு மூணு துண்டுப்படங்க போடுவாங்க. அதான் சூப்பர் சீன்க."

முருகேசன் முதலில் மறுப்பாக யோசித்தான். ஒழுக்கமில்லாத வேலை வேண்டாம் என்று நினைத்தான். "யாரும் பார்த்தால் கேவலம்" என்று தலைமறைக்கிற வெட்கக்கேடான செயலைச் செய்ய வேண்டாம்" என்று நினைக்கிறான்.

"நா வரலே"

"ஏண்டா ?"

"வேண்டாம் ?"

"சைக்கிள், செலவு எல்லாம் எம் பொறுப்பு"

"அதுக்கில்லே. நா, வல்லே"

"உங்க அய்யாவுக்குப் பயப்படுறீயா"

"நா எனக்குப் பயப்படுறேன். நமக்குன்னு மனசாட்சி இல்லே? அசிங்கத்துலே கண்ணை என்னத்துக்கு வைக்கணும்?"

"எதுடா... அசிங்கம்?" ஆதியிலும் ஆதியானது ஆண் பெண் சேர்க்கை தான். மனுச உற்பத்தியே அதாலே தான். அதுவா. அசிங்கம்?"

தயங்கித் தயங்கி மறுத்துக் கொண்டிருந்தவனை, விடாமல் வேப்பங்கொழை அடித்து— தன் வசத்துக்குள் கொண்டு வந்து விட்ட பழநி, முருகேசனுக்குள்ளும் சபல எச்சில் வழிந்தன.

ராத்திரி பத்துமணிக்கு சைக்கிள் எடுத்தனர். ஆறு மைல் சைக்கிள் மிதி. டிக்கட் வாங்கிக் கொண்டு உள் நுழைகிறபோது, எழுத்து ஓடிக்கொண்டிருந்தது. இருள் தான். தரை டிக்கட் மணல். அவ்வளவாகக் கூட்டமில்லை. தைரியமாக இருட்டில் நடக்க முடிந்தது.

பழைய காலத்துச் சினிமா. சினிமா ஓடிக்கொண்டிருந்த போதே "படத்தைப் போடுங்கப்பா" என்ற கூப்பாடு, கூச்சல், கூச்சல், கூச்சல்கள்.

படம் கட்டானது. வெண்திரை. இருள் அப்படியே இருந்தது. டர்ர்ர்ர்ர் ரென்று சவுண்ட் பெட்டியின் இரைச்சல். பின்னணி இசை இல்லாமல் ஓடுகிற படம். ஆடையில்லாத படம். இருளில் நடக்க வேண்டிய உயிருற்பத்தி நடவடிக்கைகள் வெளிச்சத்தில். தியேட்டருக்குள் மூச்சு மூட்டுகிற மௌனம்.

முருகேசன் அதிர்ந்து போய்விட்டான். அம்மணமாகிற பெண், நிர்வாணமாகிற பெண். சேர்ந்து குளிக்கிற காட்சி. படுத்துச் சேர்கிற காட்சி—

இவனுள் சட்டென்று பீறிட்ட அசூயையுணர்ச்சி, மெல்ல மெல்ல நிறமிழந்து, திரிந்து — சபலமாகிவிட—

முருகேசனுக்கு இது புதிய அனுபவம். படம் முடிந்த பிறகு பழநியை முகம் ஏறிட்டுப் பார்க்க மனசு கிடந்து கூசியது. பேசத் தோன்றவில்லை. ஊர் வரைக்கும் தொடர்ந்தே வந்த மௌனமும், இறுக்கமும்.

முருகேசன் மனசுக்குள் மீண்டும் மீண்டும் ஓடுகிற திரைக்காட்சி. திரைகளற்ற அம்மணக்கூத்து மறக்க முடியவில்லை. மறந்தாலும், மனசு அந்தக் காட்சியை வலிய நினைக்கிறது. மனசுக்குள் ஓட்டிப்பறக்கிறது. ரசிக்கிறது. முறுக்கேறுகிற உணர்வுகள். சதைத்தினவுகள். மன உன்மத்தம்

மறுநாள்...

இவன் புஞ்சைக்குப் பருத்தி எடுக்க வந்திருந்தாள், செண்பகம். இவனும் வந்திருந்தான். புஞ்சைக்குள் இறங்கி, உழைத்தான். கூலிப்பெண்கள் எடுத்த மடிப்பருத்தியை கடாப்பெட்டியில் வாங்கிக் கொண்டு வந்து..... சாக்கில் திணிக்கிற வேலை.

செண்பத்திடமும் மடிப்பருத்தியை வாங்க கடாப்பெட்டியுடன் நெருங்கினான். அமெரிக்கன் பருத்தி. நெஞ்சுயரத்துக்கு வளர்ந்திருக்கிற செடிகள், கொழை மோதிக் கிடக்கிற முரட்டு அடர்த்தி. நடந்து செல்கிறபோது, கல் போல அடிக்கிற காய்கள், பருத்தி எடுத்து விட்டுக் கீழே போட்ட வெறுங்கூடுகள், முள் போல உள்ளங்காலைப் பதம் பார்க்கின்றன. வெயிலுக்கு மறைப்பாக தலையில் முழுக்க மூடி துண்டால் வண்டு கட்டியிருக்கிறாள்.

பெட்டியை ஏந்துகிற சாக்கில் கூடுதல் நெருக்கமாக வந்து, குறைந்த சத்தக்கிசுகிசுப்பில்

"இன்னிக்குப் பொழுதடைய இடி கெணத்துக்கு வந்துரு" என்று ரகசியமாக ஆனால் கண்டிப்பாகக் கூறுகிறான்.

உள்ளங்கால் வரை பரவும் பாய்ந்து நடுங்க வைக்கிற அதிர்வலை. பயத்தில் - அவமானத்தில் - முகம் வெளுத்துப் போகிற செண்பகம்.

"என்னத்துக்கு ?"

"அதுக்குத் தான்"

பருத்தி வாங்கிய கடாப்பெட்டியுடன் வாய்க்காலில் நகர்ந்து விட்டான்.

மௌனப்பார்வையும், குறும்புன்னகையுமாக மட்டும் நகர்ந்திருக்கிற நாட்கள். ஒரு சொற்பிரயோகம் கூட நிகழ வில்லை. பேசிக்கலந்தது பூராவும், மௌனமும், பார்வையும், கள்ளச்சிரிப்பும் மனசும் தான்.

முதற்சொற்பிரயோகிப்பே, இதுதான்.

அடுத்த நிரையில் பருத்தி வாங்க கடாப்பெட்டியுடன் நெருங்குகிற முருகேசன். முகம் பார்க்காமல் கிசுகிசுக்கிறான்.

"வர்றேநீ, கட்டாயமாக வர்றே. வரலேன்ன ?"

"ம்"

"இடிகெணத்துலே என் உடம்பு கெடக்கும்"

இப்போது வேறொருமின்னல் அதிர்வு. உடலெங்கும் பரவிப் பாய்ந்து உயிரையே நடுங்க வைக்கிற அதிர்வு. முரட்டு மின்னல்.

அப்படியே உலுக்கியெடுக்கப்பட்டவளைப் போலக் கதிகலங்கிப் போயிருந்தாள், செண்பகம். அவன் முதுகையே பார்க்கிற அவளின் விழியோரங்களில், மனவெப்ப நீர்த்துளி.

"அடப்பாவி மனுசா— இப்படியா நெஞ்சுலே தீ வைக்குறது ?"

பாத்துச் சிரிச்சதுக்கு இது கூலியா ? சம்மதித்தது போல பார்வைச் சங்கமத்துக்கு, கண் தந்ததுக்கு, இது வெகுமானமா ?

எடுத்த எடுப்பிலேயே "இடி கிணத்துக்கு வா" என்பதா ? "அதுக்குத்தான்" என்று சொல்வதா ? சந்தேகமில்லாமல்..... சஞ்சலமில்லாமல் ஓர் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு இல்லாமல் — மெல்ல மெல்ல இங்கிதமாகப் பழகி— பேசி— பல நாள் பழகி— ஒரு மயக்க தருணத்து சறுக்கலில் நிகழ வேண்டிய விபத்தை.... விபரீதத்தை.... எத்தனை சாதாரணமாக... அலட்சியமாக.... சொல்லிவிட்டுப் போகிறான்.

எந்த நம்பிக்கையில் இம்புட்டுத் தைரியம் வந்தது ?

அதிர்வலைகளின் ஆக்கிரமிப்பில் மூழ்கி மூச்சுத் திணறினாலும் கூட .... அந்த மன நெருக்கடியான தருணத்திலும் கூட.... அவளுக்குப் பிடித்திருந்தது. அந்த விஷயம் தான்.

அவனது நம்பிக்கை. மூர்க்கமான நம்பிக்கை. முரட்டு நம்பிக்கை. சந்தேகத்துக்கு இடமில்லை. சஞ்சலத்துக்கு இடமில்லை. ஊசலாட்டத்துக்கு, மறு நினைவுக்கு இடமில்லை. நம்பிக்கை மட்டுமே அவனிடம்.

அந்த நம்பிக்கைக்குள்ளிருக்கிற பிரிக்க முடியாத மனக்கலப்பு, ஆழமாக வேரடித்துப் பரவியிருக்கிற நினைவு மரத்தின் வைரம் பாய்ந்த வலிமை.

"போவதா.... வேண்டாமா....." அவளுள் நிகழ்ந்த சஞ்சலம். உணர்வுப் போராட்டம். இளமைத் தேராட்டத்துக்கும், சமூக மிரட்டலுக்குமான போராட்டம்.

கைலியை மடித்துக்கட்டியிருக்கிற அவன். சட்டையில்லாத கருந்திரேகம். நெஞ்சுக்குழி முடிகளில் வியர்வைக்கசிவுகள். முடிச்சு முடிச்சாக உருத்திரண்டிருக்கிற தோள்பட்டைகள். நெஞ்சுச்சதைகள். உருண்டு திரண்ட கைகளிலும் கரிய ரோமங்கள். வட்டக்கட்டாக கட்டியிருக்கிற துண்டையும் மீறிக் கிடக்கிற தலைமுடி.

"வரலேன்னா_ என் உடம்பு கெடக்கும்"

"ஐயோ, பாதரவே" என்று பதறித்துடிக்கிற பெண்மனசு. போவது. என்னாலும் சரி_ போயிர வேண்டியது தான்.

முதல் தனிமையே, உடல் சந்திப்பாகத் தான் அமைந்தது. தவறாத உடல் சந்திப்புகள். தித்திப்பான சந்திப்புகள். சமூகம் குறித்த பயத்தையெல்லாம் அண்ட விடாத மயக்க சந்திப்புகள்.

உடல் வேட்கைக்கான சந்திப்பாக துவங்கினாலும்... மன ஆற்றாமைக்கான பகிர்ந்துகொள்கிற மனத்தோழமையாக பரிணமித்தது.

அன்றைக்கு_

முருகேசன் முந்தி வந்திருந்தான். மூலைப்படியில் அந்த சிமெண்டுச் சதுரத்தில் உட்கார்ந்து, முரட்டுச் சுவரில் சாய்ந்திருந்தான். கவலை படிந்த முகம். வருத்தத்தில் இறுக்கமான முகம்.

உவர் பொங்கிப் போயிருந்த படிகளில் மெல்ல பூனைபோல கால் வைக்கிற செண்பகம். நீரில்லாத கிணற்றின் அடிப்பகுதியில் மஞ்சணத்திச் செடிகள். தித்திச் செடிகள். எருக்கலஞ்செடிகள். ஒரு வேம்புக்கன்று.

இவள் இறங்கிவருவதைக்கூடக் கவனிக்காமல் எதிர் பார்க்காமல் உட்காந்திருக்கிற முருசேகன்.

பத்துபடிகளும் இறங்கிவிட்டாள். இன்னும்ஏறிட்டுப் பார்க்காத அவன்.

"என்ன_" என்று பரிவோடு விசாரித்துக்கொண்டு, பக்கத்தில் உட்கார்கிற செண்பகம்.

"வந்துட்டீயா"

"ம்"

" என்ன ஒருமாதிரியாயிருக்கீக ? என்ன தேட்டமில்லியா ? திகட்டிப்போச்சா_ ?"

"திகட்டுறதா ? எழுவது வயசானாலும் எலும்பும் தோலுமாய் கழண்டு போனாலும் உள்ளைத் தேடத்தான் செய்வேன். அப்பவும் நீ தித்திப்பாத்தான் இருப்பே."

கவலை மாறாத யந்திரக்குரலில் பேசினாலும், உயிர்கசிகிற உணர்வுப் பேச்சு. அவள் அப்படியே உருகிப் போகிறாள்.

" என்ன_ தொண்டைச்சத்தமே சரியில்லியே_ ?"

"வீட்லே பிரச்னை"

"என்னவாம் ? சொல்றதுன்னா சொல்லுங்க"

ஓங்கிட்டே சொல்லாம வேறயாருகிட்டே என்னாலே சொல்ல முடியும் ?

" அம்புட்டு உரிமையா எனக்கு ?"

" ஆமா... எங்க அய்யாவுக்கும் எனக்கும் பிரச்னை. எங்க அம்மாகிட்டே பேசமுடியுமா ? அண்ணன் கிட்டே பேச முடியுமா ? ஓங்கிட்டே தான் மனசு விட்டுப் பேசமுடியும்."

"எங்க அய்யா என்னைக் கிடைகாவலுக்குப் போகச் சொன்னாரு. முடியாதுன்னு எடுத்தெறிஞ்சு பேசிட்டேன். எங்க அய்யாதான் கிடைகாவலுக்குப் போயிருக்காரு."

" எளவட்டம் நீங்க இங்க இருக்கீங்க... வயசானவரை கெடை காவலுக்குப்போக வைச்சுட்டோமே என்று கவலையாயிருக்கா ?"

" அதே தான்"

" அப்ப, நீங்கபோயிருக்கலாம்லே ?"

" கிடையே வேஸ்ட்னு நா நெனைக்கிறேன்"

" அதெப்படி வேஸ்ட்டாகும் ? நல்ல ஓரம்தானே ?"

"மூணுமூடை காம்ப்ளெக்ஸ் எடுத்து வெதைச்சாலும்.. ஓரம்தானே ?"

" ஆமா"

" அப்புறமெதுக்கு ..கிடை கிடைகாவல்னு ஆறுநா ராத்திரி முழிச்சிக்கெடந்து சீரழியணுமா ?"

கோபமாக சினந்து கையை உயர்த்திப்பேசுகிற முருகேசன்,

"உங்களுக்குத் தெரியுற இந்த ஞாயம் மாமாவுக்குத் தெரியாதா ?"

"சொன்னாலும் தெரிய மாட்டேங்குது. படிச்சுப் படிச்சுச் சொன்னாலும் ஒத்துக்கிட மாட்டேங்குறாரு-"

" ஏன் ?"

" ஏன்னா காலம் மாறியிருக்கிறதை உணர மாட்டேங்குறாரு. பழைய நினைப்புலேயே.. பழைய காலத்துலேயே இருக்காரு. இன்னும் வண்டி மாட்டையும் ஏர்க்கலப்பையையும் வுட்டுத் தொலைப் பேனாங்குறாரு"

" அவரு பழைய ஆளு-"

" அவருவயசுள்ள ஆளுக எல்லாம்,மாடுகன்னை வுத்துட்டு வெவசாயம் பண்ணலியா ? டக்கரை வைச்சு உழுகலியா ? பைவிதை வெலைக்கு வாங்கலியா ? எண்டோ சல்பான் மோனோ கிராப்ட்ஸ் பூச்சிமருந்து வாங்கலியா ? ஸ்பிரேயர் வைச்சு மருந்தடிக்கலியா ? அடி

உரத்துக்கு டிஏபியும் காம்ப்ளெக்ஸும் மேல் உரத்துக்கு யூரியா உப்பும் மூடைமூடையா தூக்கி விதைக்கலியா ? யார் எதுலே கொறைஞ்சு போய்ட்டாங்க ? எங்க அய்யாதான் புரிஞ்சுக்கவே மாட்டேங்குறாரு"

" மாமா.. இதுக்கு என்ன பதில் சொல்றாரு"

"அவரு ரெண்டு பாயிண்டு சொல்றாரு. அப்படிப் புதுப்பாணியிலே வெவசாயம் பண்றசம்சாரிக எல்லாம் சர்க்காரு கடன், பேங்க் கடன்லே மாட்டிக்கிட்டாகளாம். தப்பிக்க முடியாம தத்தளிக்குறாகளாம். புஞ்சை மண்ணோட உயிர்ச்சத்தைகொன்னு போட்டார்களாம். புஞ்சைமண்ணை பெத்த புள்ளை மாதிரி வளர்த்து ஆளாக்கிக்கிட்டே வெளைச்சலுக்குப் பயன்படுத்தணுமாம்"

அய்யா நேரில் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஆவேசமாக பேசுகிற முருகேசன், உலர்ந்து உறைந்து போன எச்சில் கட்டிகள் தெறிக்க... உணர்ச்சி மயமாகப் பேசுகிறான்.

அழகேசனிடம் பேசமுடியாது. அய்யாவிடம் பேசமுடியாது. அம்மாவிடம் பேசமுடியாது. வேறு எவரிடமும் பேசமுடியாது. ஆயினும், இவன் பக்கம் இருக்கிற நியாயத்தின் வலிமையை யாரும் புறக்கணித்து விடவும் முடியாது.

தன் பக்கத்து நியாயத்தைப்பகிர்வதற்கு, இவளை விட்டால் வேறு யாரிடம் பகிர்வது ?

அவனையே அன்பும் அனுதாபமுமாகப் பார்க்கிற சென்பகம். அவன் ஆண்மகன். எங்கே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பொழுதைக் கழிக்கலாம். இவள்பெண். வீட்டில் கேள்வி கேட்பார்கள். ஆயிரம் கேள்விகள். அதட்டல்கள். மிரட்டல்கள். அச்சுறுத்தல்கள்.

நேரம் மெல்ல மெல்ல ஊர்கிறது. கருகருவென்று இருளின் இறக்கைநிழல் வந்து மூடுகிறது. சென்பகத்துக்குள் பதற்றத்தின் மெல்லிய அதிர்வுகள். அவளுக்குள் இருமனசு. ஊசலாட்டம்.

உயிர்ப் பங்காளியாகவும் உடல் பங்காளியாகவும் ஆகிவிட்ட இந்த மனிதர். இந்த அளவுக்கு நொந்து நூலாகிப்போயிருக்கிறாரே என்கிற அனுதாபப்படுகிற மனசு. " வீடு மிரட்டுமே... ஓடணுமே" என்கிற மனசு.

அவனது உள்ளங்கையில் தன்கையைக் கோக்கிற செண்பகம். பரிவு மிக்க அனுதாப மொழியாக அந்த ஸ்பரிசம்.

" மொதல்லே கோபப்படாதீக.. கோபத்தைக்குறைங்க.. மாமா வழியிலேயே போய்.. மாமாவைத் திருப்பமுடியுதான்னு பாருங்க"

"அவரைத் திருத்துறது, இந்த செம்மத்துலே நடக்காது"

" உங்ககோபம் உங்க ஞாயத்தைக் காப்பாத்திருமா ?"

சட்டென்று அவனுள் அவனை மடக்குகிற்கேள்வி. நியாயமான மறிப்பு. அவனே இப்படி யோசித்ததில்லை.

" உங்க ஞாயத்தை நிலை நாட்டுறதுக்கு வேற வழியைப் பாருங்க"

அவள் முகத்தைப் பார்க்கிறான். அவளிடமிருந்து வந்த அந்த அன்பு அறிவார்ந்த புத்திமதி முகத்தை இருகையாலும் ஏந்துகிறான். தன்பக்கமாக இழுக்கிறான்.

அவளது வலது கையால் அவனது பிடரிரோமத்தைப்பற்றி.. தன்பக்கமாக இழுக்கிறாள். நெஞ்சுக்குள்முகம் புதைக்கிற அவன்.

உணர்வின் நிறம் மாறுகிறது. மனம்தனின் ஆளுமைக்குள் ரதி, லாகிரியுடன் கொந்தளிக்கிறாள்.

இப்படித்தான்... உடல் தோழமையாகவும், மனத்தோழமை யாகவும் நகர்கிற நாட்கள்.

அவனது ஆவேசங்களை மனப்புழுக்கங்களை அய்யாவுடன் நடத்திய சண்டைகளை.. தர்க்கங்களையெல்லாம் இவளிடம் கொட்டித் தீர்ப்பான்.

இவளும் மடியேந்தி வாங்கிக் கொள்வாள். மனசால் வருடி.. அவனை ஆறுதல்படுத்துவாள். அமைதிப்படுத்துவாள். அமைதிப்படுத்தினாலும் அமைதியாகாத ஒருகேள்வி. அவர்களுக்குள் மௌனமாகி நின்று உறுத்திக் கொண்டே நிற்கும்.

" உங்க ஞாயத்தை ஞாயம்னு எப்புடி நிலைநாட்டுறது ?"

ஆத்திரமும் ஆங்காரமுமாய் அவன் பேசுவதும், அவள் அனுதாபமும் அமைதியுமாகப் பதில் பேசுவதும்.... நிகழ்ந்தாலும், இந்தக் கேள்வி அப்படியே மிச்சமாக நின்றது.

வழி மறித்து நிற்கிற கேள்வி. நகரவிடாமல் நிறுத்துகிறகேள்வி. "எனக்கான பதில் பேசு" என்று சேலையைப்பற்றிக் கேட்கிறகேள்வி.

அதை அடிமனசுக்குள் உணர்கிற செண்பகம்.

" யம்மா_ நா ஓடைக்குப் போய்ட்டு வாரேன்"

" வீட்டை விட்டு வெளியேறுகிற செண்பகம்.

" வெருசா வந்துசேருடி_"

" வந்துருவேன்_ வந்துருவேன்"

முற்றத்தில் இறங்கி, வெளியேறி, தெருவில் இறங்குகிறாள்.

தெருவோரத்தில் சிறுவர்கள் விளையாடுகிறார்கள். சில்லாங்குச்சி விளையாட்டு. அடிபட்டு இரைச்சலுடன் வருகிற குச்சியை அந்தரத்தில் கைப்பற்ற வேண்டும். ஊசியானகுச்சி, கையில் குத்தினால்,புண்ணாக்கிவிடும். முகத்தில் எந்தஇடத்தில் பாய்ந்தாலும் படுகாயம் நிச்சயம்.

பிடிபடாமல் பிடிபடாமல் நழுவிப் போகிற குச்சி. அப்படிப்பிடி. இப்படிப்பிடி என்று ஆட்டத்தில் கலக்காமல் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த செல்லமுத்து. பிடிபடாமல் நழுவவிட்டவுடன், விட்டவனைத் திட்டித்தீர்க்கிறான். ஒரு கட்டத்தில்.

திட்டுகிற செல்லமுத்துவின் வசவு தாங்கமுடியாமல் அந்தச் சிறுவன் கோபமாக எகிறி, ஆத்திரத்தில் பொறிகிறான்.

"அப்புடிப் புடி இப்புடிப்பிடி என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? புடிச்சுக்காட்டு. செய்ஞ்சுகாட்டு"

செண்பகத்தின் செவியில் விழுந்த இந்த வார்த்தைகள். அவளுக்குப் போதிமரமானது இந்த வாக்கியம்.

அவளுக்குள் சில கதவுகள் மடார், மடாரென்று திறந்து கொண்டன. வெளிச்சமும் இளங்காற்றும் உட்புகுந்தன. அங்குக் கிடந்து புழுங்கிக்கொண்டிருந்த கேள்வியை வெளிச்சமும் காற்றும் விரட்டியடித்தன.

இடிகிணற்றுக்குள் இறங்குகிற செண்பகம் எல்லாம் முடிந்து பிசுபிசுப்பும் மூச்சிரைப்புமாக ஜாக்கட் ஊக்கை மாட்டுகிற செண்பகம்.

"புதுப்பாணி புதுப்பாணின்னு சொல்லிக்கிட்டேயிருந்தா என்ன அருத்தம் ?செய்ஞ்சுகாட்டணும் ?"

" எப்படி செய்ஞ்சுக்காட்டுறது ? எதுலே செய்யுறது ?"

"பாலையா நாயக்கருகிட்டே வாங்குன புஞ்சையை மாமாகிட்டே பேசி, வாதாடி வாங்குங்க. நீங்க ஒங்கமுறையிலே வெவசாயம் பண்ணி, உங்க ஞாயத்தை ஜெயிக்க வைச்சுக்காட்டுங்க..."

" அய்யாவுடுவாரா ?"

" அப்ப.. ஊரைக்கூட்டிப்பேசுங்க"

24

கல்யாணம் காட்சி முடிந்து.. மாப்பிள்ளைச்சோறு மறுவீடு, மாமனார் விருந்து எல்லாம் நடந்து... வீட்டில் வந்து செட்டில் ஆனபிறகு.. மாமியாருக்கும் மருமகளுக்கும் மனக்கசப்புகள் வந்து, வாய்ப்பேச்சில் அது கசிந்து- மனஉரசல், வாய் உரசல் என்று சண்டை சத்தக்காடு வந்து... வீடே ரணகளமாகியிருக்கும். நிம்மதியில்லை என்றான பயங்கரநிலையில்,

"கிட்டே இருந்து முட்டிக் கொண்டு மண்டை உடைப்பதைவிட .. எட்ட இருந்து இணைந்து வாழலாம் என்று மகனையும் மருமகளையும் வேறொரு தனி வீட்டில் அடுப்புகூட்டி பால் காய்ச்சி தனிக்குடித்தனம் வைப்பார்கள். தனியாகக் குடித்தனம் நடத்தி சிரித்த முகமும் தேவியுமாக வாழ்கிற இளசுகளுக்கு வாழ்வதற்கு ஒரு தொழில் வேணுமே என்று பெரியவர்களே யோசித்துப் பெருந்தன்மையாக காடுகரைகளையும் சொத்துகளையும் பாகப்பிரிவினை செய்து அவனுக்குரிய பங்கை ஒதுக்குவார்கள்.

இது ஊர், நடப்பு. உலக வழக்கு. ஆனால்,தலை கீழாக இருக்கிறது, முருகேசன் செய்கிற கூத்து.

"இதென்ன அதிசயக் கூத்தாயிருக்கு?" என்று ஊர் ஜனங்கள் ஆச்சர்யப்பட்டு மாய்கின்றனர்.

"இப்புடியும் நடக்குமா ஊர் உலகத்துலே?" என்றுவியந்து வியந்து வாயைப் பிளக்கின்றனர். ஊர்மடம், கடைகண்ணித் தண்ணீர் எடுக்கிற இடம் என்று எல்லா இடங்களிலும் இதே பேச்சு

தான். மனித மக்கள் கூடுகிற இடமெல்லாம் இதே விவாதம் தான். நாலுபேர்சேர்ந்து நின்றால்.. அங்கே முருகேசன் விஷயம் தான் மெல்லப்படும்.

நாட்டாமை கார்மேகம் சாயங்காலம் புஞ்சைப்பக்கம் போயிருந்தார். பொழியில் நின்றிருந்தார். பருத்தி வெள்ளாமையைப் பார்த்தார். பச்சைப்பசேலென்று இருக்க வேண்டிய செடிகள். குழைவாக-தழைவாக இருக்க வேண்டிய இலைகள். பார்த்த கண் குளிர்ந்து போகிற ஈரப்பசுமையுடன் இருக்கவேண்டிய தோட்டம்.

செக்கச்செவேலென்று கிடக்கிறது.இலைக்காடு பூராவும் செவலை செவலையாக சிவந்து கிடக்கின்றன. புதுவகையான நோய். பூபிஞ்சுபூராவும் செடித்தூர்களைச் சுற்றி உதிர்ந்து கிடக்கின்றன. பார்த்தால்.. பிஞ்சுக்காம்புகள் நறுக்கப்பட்ட மாதிரியிருக்கிறது. காய்ப்புழுவின் மேய்ச்சல் கடுமையாக இருக்கிறது. குனிந்து உற்றுப்பார்த்தார். தேடினார். சில இலைகளின் பின்புறம் பச்சைநிறத்தில் ஊர்ந்து போகிற காய்ப்புழு. பார்த்தால் ரயில்புழுபோல் இருக்கிறது.

முற்றியகாய்க் காம்புகளை இதனால் கடிக்க முடியாது. பிஞ்சுக்காம்புகளை இரைக்காக மென்று விடும். அதனால்தான் பூபிஞ்சு உதிர்கிறது.

கார்மேகத்துக்கு மலைப்பாக இருக்கிறது.

வெள்ளாமையை இந்தப் பருவத்திற்குக் கொண்டு வருவதற்குள் ஆறுதடவை மருந்தடித்தாகிவிட்டது. ஆறுதடவையும் கடுமையான மோனோ கிராப்ட்ஸ் மருந்துதான்.

கடுமையான நஞ்சு. கூடுதலான விலை. பணத்தைப் பணம் என்று பார்க்காமல் அள்ளி இறைத்தாகிவிட்டது.

மருந்து வாங்கினால் போதுமா ?

ஸ்பிரேயரை முதுகில்போட்டு சுமந்து நிரைநிரையாக அடிக்கிற தீக்கொளுத்திக்கு, டேங்குக்கு ரெண்டு ரூபாய் சம்பளம். டேங்குக்கு தண்ணீர் சுமக்கிறவனுக்கு முப்பது ரூபாய் கூலி. பீடி.சிகரெட் கணேஷ் புகையிலை கார்கில் பாக்கு, டீச்செலவு வேறு.

ஆறுதடவை மருந்தடித்தே காய்ப்புழு மேய்ச்சல். செவட்டை நோய். இன்னும் என்னென்ன மருந்துகள் அடிக்கணுமோ? காய்ப்புழு சாகுமோ... நாமதான் செத்துமாயப் போகிறோமோ?

இப்ப ஏதோ ஒருமருந்து வந்திருக்கிறதாம். நூறுமில்லி நானூறு ரூபாயாம். அதை வாங்கியடித்தால் தான்.. காய்ப்புழுக்கள் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது சாகுதாம்...

இப்படி கடன் உடன்வாங்கி.. அவனிடம் இவனிடம் கெஞ்சிக் கூத்தாடி காலைப்பிடித்து கையைப்பிடித்து காசுகளைப்புரட்டி, மருந்தை வாங்கி இதோட வாயில் ஊற்றி ஊற்றி.. இந்தக் காய்ப்புழுக்களை மீறி விளைகிற பருத்திக்காவது விலை கிடைக்குதா? அதுவுமில்லை..

சம்சாரித்தனம் பார்த்த சம்சாரிக்கு சர்க்கார் வருஷாவருஷம் தண்டனையும் அபராதமும் தர்ற மாதிரி கடன்ஏறுகிறது.. நட்டம், நட்டம் என்று நட்டக் கணக்கின் ஏற்றத்தில் கடன் சுமைகள், லாபமாகின்றன.

என்னத்துக்கு வெவசாயம் பாக்கணும்? மல்லுக்கட்டி, தெல்லுதெறித்து போராடி விவசாயம் செய்து, உற்பத்தி பண்ணிபொருட்களை நாட்டுக்குத் தந்துவிட்டு நட்டம், கடன் என்று நாசமாகப் போவதற்கா?

மண்ணைக்கட்டி மாரடிக்கிறவன் வாழ்க்கை மண்ணாகிப் போகிறது என்பது மட்டுமே நிஜமாகிவிட்ட பிறகு .. என்னத்துக்கு மாரடிக்கணும்?

கோயம்புத்தூர், ஓசூர் என்று பஞ்சம் பிழைக்கப்போய்.. கூலிவேலை பார்த்தால் கூட நிம்மதியாக இருக்கும்.

பாரம்பர்யமே ரத்தம் சிந்திய நிலம். தாத்தாவுக்குத் தாத்தா, தாத்தா, அப்பா என்று வாழையடி வாழையாக வாழ்ந்த முன்னோர்களின் வியர்வையும் கனவும் உயிரும் உதிரமும் இந்த மண்ணில் தான் கலந்திருக்கின்றன. முன்னோர்கள் கஷ்டப்பட்டார்கள். ஓடிப்போகாமல் உழைத்தார்கள்.

மீண்டுமேடேறினார்கள். தாதுவருஷப்பஞ்சம் போலப் பல பஞ்சங்கள் பல வருஷவறட்சிகள்... தாளமுடியாத வெள்ளப்பெருக்குகள்... ஊரையே கொள்ளைகொண்டுபோன காலராநோய்கள் எல்லாத்துயரங்களுக்கும் இதயம் கலங்காமல், மிரண்டோடாமல் இருந்து, போராடி, உழைத்து ஜெயித்தவர்கள் முன்னோர்கள்.

"அந்த வீரவம்சத்தின் ரத்தத் தொடர்ச்சியாகப் பிறந்த நாம் மட்டும் கோழையைப்போல ஓடலாமா ?என்கிற கௌரவ உணர்வு. நிலஉடைமையாளன் என்ற பெருமையை இழக்கலாமா என்கிற உணர்வு.

"காடுகரைக இருக்கு...வீடுமனை இருக்கு. அவனை நம்பி எம்புட்டு வேணும்னாலும் கடன் தரலாமப்பா" என்று ஊரில் பேசுகிறார்களே... அந்த நிலப்பெருமானத்தைச் சொத்துக்காரன் என்கிற தகுதியைப் பறிகொடுப்பதா என்கிற உணர்வு.

இவைதாம்... நட்டங்களை கடன்களை அவமானங்களை இழிவுகளைச் சுமந்துகொண்டே, நிலத்தோடும் விசாயத்தோடும் நம்மைப் பிணைத்துக் கட்டப்பட்டிருக்கிற தளையில் சுகம் காண்கிற மனோபாவத்தைத் தருகின்றன.

கார்மேகம் பொழியிலேயே நடந்து செல்கிறார். கவலை நிறைந்த நினைவுகள் உள்ளுக்குள் மொய்க்கின்றன. கசப்புணர்வும், சலிப்புணர்வுகளுமாக... மனசு சோர்வடைகிறது.

அயற்சியும், மலைப்பும் வந்து வழியை மறிக்க... பொழியில் நடக்கிற கார்மேகம்.

"மாமா..."

புதியகுரல்.பயமும் தயக்கமும் குழப்பமும் குழைந்து, பவ்யமாகியிருக்கிற குரல். திரும்பிப் பார்த்தார், முருகேசன்.

"என்னப்பா.. ?"

"உங்ககிட்டே ஒரு விஷயம் பேசணும்"

"எதுவும் பஞ்சாயத்தா ? யார்கூடயாச்சும் சண்டை சத்தம் போட்டுட்டீயா ?"

"இல்லே மாமா_"

"பெறவென்ன ?"

"தயக்கத்தையும், ஆன்மாவின் ஆணிவேரை அறுக்கிற மனசாட்சியின் உறுத்தலையும் தாளமுடியாமல் தத்தளிக்கிற முருகேசன் _ அவசரத்தின் மூலமாக அதைத்தாண்டுகிறான்.

"எங்கய்யாகிட்டே யிருந்து எம்பங்கை வாங்கித்தரணும் ?"

சட்டென்று நடையை நிறுத்துகிற கார்மேகம். நம்பமுடியாதஅதிர்வில் வெலவெலக்கிறார். கண்களை இடுக்கிக் கொண்டு கழுத்தைத் திருப்பி அவன் முகத்தைப் பார்க்கிறார். பார்வையில் துல்லியமாகத் தெரிகிற மனசின் அசூயை.

"பரமசிவம் மவன்தானேநீ ?"

"ம்.ஆமா"

"பரமசிவத்தை மாதிரி ஒரு தங்கமான மனுசனை, எங்கே தேடுனாலும் கெடைக்கமாட்டானே.... அவன் கூடவா வெவகாரம் பண்ணனும் ? இப்ப_ ஒம்பங்கை வாங்கி, என்ன செய்யப்போறே ?"

"வெவசாயம் பண்ணப்போறேன். இப்ப உள்ள காலத்துக்கேத்த மாதிரி புதுவெவசாயம் பண்ணி_ ஜெயிச்சுக்காட்டப்போறேன்_"

"ஏதாச்சும் எசகு பிசகாகி_ புஞ்சையை வுத்துட்டேன்னா_ ?"

"விக்கவேமாட்டேன்_"

"வெவசாயம் பண்ற தீவிரத்திலே கடன் உடன் வாங்கி... நிலமதிப்புக்கும் மேலா கடன் சுமையை நீ ஏத்தி வைச்சுட்டா_ ?"

"செய்யமாட்டேன்... கூட்ட ஒரு புஞ்சையை வாங்கிக் காட்டுவேன்"

"ஏங்கிட்டே மட்டும் சொல்லியிருக்கியா ?வேற யார்கிட்டேயும் சொல்லியிருக்கியா ?

"உங்ககிட்டே தான் முதல்லே பேசுதேன்_"

"சரி_நீபோ_ நா_ ஆக வேண்டியதைச் செய்றேன்"

புஞ்சைகளின் நடுவாய்க்கால்களில் நடந்துபோகிற முருசேகனைப்பார்க்கிற கார்மேகம். கவலைப்பட்ட மனசின் கனத்த பெருமூச்சு. அடர்த்தியான சத்தத்துடன் வெளியேறுகிறது.

இப்படியும் ஒருபிள்ளையா? ஊதாரித்தனத்துலேயும் மைனர்த்தனங்கள்லேயும் துட்டைத் தொலைக்கிறதுலேயும் ஊர்சுத்த வேண்டிய வயசுலே.... வெவசாயம் பண்ணிக்காட்டுதேன்னு முன்வர்றதும், முண்டுறதும் முட்டி மோதுறதும் ஒரு நல்ல பண்புதானே? பரமசிவம் ரத்தம். அப்படித்தான் யோசிக்கும்" என்று உதடுகள் அசைய முணுமுணுக்கிற கார்மேகம்.

"ஆனா.... இது, பரமசிவத்தைக் கேவலப்படுத்தும். அவன் இம்புட்டுக்காலமா செய்ஞ்சுவந்த வெவசாய முறையையே கொறைசொல்லும். காறித்துப்பும் _ ஜெயிச்சுருக்குற பரமசிவத்துக்கு இக்கதின்னா.. கடனும் உடனுமா சொமை ஏறியிருக்கிற எனக்கெல்லாம் எக்கதி?"

"பரமசிவம் இப்ப, தனிச்சிருக்காரு. தனிமைப்பட்டுப் போயிருக்காரு. யாருவீட்லேயும் வண்டி இல்லே. மாடுஇல்லே. கமலைக்ககூனை இல்லே. மேக்கால் இல்லே. இதை எதையுமே வுடாம, வைச்சிருக்குற பரமசிவம். அவருமட்டுமே வைச்சிருக்காரு. ஊருபூராவும் ஒருதிசையிலே. அவரு, பழைய திசையிலேயே. மாறாத திசை. மாற்றாததிசை.ஒத்தையிலே அவருமட்டும் அவருதிசையிலே. அவரோட மகன் கூட ... அந்தத்திசையிலே கூடவரல்லேங்குறான். இதுவும் பரமசிவத்துக்கு ஒரு சோதனை தான். தன் பல்லே தன்னோட நாவைக் கடிக்குற மாதிரி ஒரு சோதனை

அவருள் ஓடுகிற நினைவுகள். சாயங்காலக்காற்றாக சோம்பலுடன் நடைபோடுகிற நினைவுகள். அவருக்குள் சுழன்று அவரையே சுழற்றுகிற நினைவுகள்.

கிராமத்துப் பிரமுகர்களில் ஒவ்வொருவராக தேடியலைகிற முருசேகன். ஒவ்வொருவரிடமும் பிராது தருகிற முருகேசன். தகப்பன் மேல் மகன்தருகிற பிராது. முற்றிய வயசில் போடவேண்டிய பிராது. பிஞ்சு வயதிலேயே தருகிறான்.

கார்மேகம் போலவே எல்லோரும் அதிர்கின்றனர். ஆச்சரியத்தில் மலைக்கின்றனர். சிலர், பரமசிவம் மேல் குரோதம் கொண்டவர்கள். உள்ளுக்குள் மகிழ்கின்றனர்.

வெற்றி பெற்று வருகிற அவர்மீது சிலருக்குப்பொறாமை. தாங்கமுடியாத வயிற்றெரிச்சல்.

சொந்தமா டக்கரு வைச்சிருக்கோம். நிறைய காடுகரைக இருக்கு. நிறைய வெளையுது. ஆனா_ கடனும் ரொம்ப இருக்கு. டக்கர் கடன்கூட அடைபடாம வட்டி மேலே வட்டியா குதிரையேறிக்கிட்டிருக்கு.

இவன் என்னடான்னா.. வண்டிமாட்டை வைச்சுக்கிட்டு நம்மளை முந்துறான். புதுசா காடுகரைக வாங்குறான். கடன் இல்லே. அருஞ்சுனைகிட்டே குடுக்கல் வாங்கல்வேற, வுடப்படாது. அவன் மகனை வைச்சே அவன் வண்டிமாட்டை குடைசாயவைச்சுரணும்"

பொறாமையில் பொங்குகிற கொதிநினைவுகள். வாய்ப்பைப் பயன்படுத்தி வாரிவிட்டு...விழவைத்து வேடிக்கை பார்க்க ஆசைப்படுகிற குரூரதாகம். இதெல்லாம் தெரிந்தும் தெரியாமலும் பரமசிவம்.

பரமசிவம், காமாட்சியுடன் சேர்ந்து சண்டு பொறுக்குகிறார். இருபத்திரண்டு சாக்கு மிளகாய்ப்பழங்கள். களம்பூராவும் இவரது பழம்தான்.

சாக்குப்பழத்தை குவியலாகத் தட்டி, சாக்கை உருவி உதறி சாக்குகளுடன்' போடுவார். ரெண்டு முழங்கைகளையும் சேர்த்து கோதி, மிளகாய்ப்பழத்தைக் கனமாக அள்ளிக் காயாதபழம் படுகனமாக இருக்கும். நாலு நாலாக உருவவிடவேண்டும். நாலு நாலாக உதிரஉதிர மெல்ல நகர்கிற பரமசிவம். கொத்துகொத்தாகவிடாமல், நாலு நாலு பழங்களாக நழுவவிடுவதால் தரை மறைத்த கற்றைப் பழவரிசையாகக் கிடக்கும். களம் முழுக்க இவரது பழம்தான். ஈரப்பழம். ரத்தச்சிவப்பு.மின்னுகிற சிவப்பு. ரத்தமின்னல். ரத்தமின்னலையே தரை முழுக்க அள்ளிப் பூசிப்பரப்பி விட்ட மாதிரி... சமுத்திர அகலச்சிவப்பு வெளிச்சம் மாதிரி...

காயப்போடும் போதே கண்ணில் தட்டுப்படுகிற பச்சைக்காய்களைப் பொறுக்கி மடியில் போட்டுக் கொள்வார். அதையும் மீறி.... குத்தல் விழுந்த பழங்கள், சரியாகப் பழுக்காத அரைப்பழங்கள் நுனிமட்டும் பச்சையுள்ள பழங்கள்... இவை தான் உலர்ந்து காய்ந்த பிறகு, சண்டு வத்தல்.

காய்ந்து கனலேறிய சிவப்பு மலையாகக் குவிந்து கிடக்கிறவத்தல் மலையில் சண்டு வத்தல்கள் வேற்று நிறமாக அபசுரமாக- நிறக்குறைவாகத் தோற்றமளிக்கும்.

காமாட்சியும் உட்கார்ந்திருக்கிறாள். பரமசிவமும் தான். வத்தல் மலையின் அடிப்பகுதியைக் கிளறிப்பரத்தி.. அகலமாக்கி.. சண்டு வத்தலை பொறுக்கி விட்டு.. மொத்தமாகக் கூட்டிப் பின் தள்ள.

பின்னால் கிடக்கிற சிவப்புக்குன்றுகள் தனிச் சிவப்பு மின்னலாக.... முன்னால் கிடக்கிற மலையோ... நிறக்கலப்பு உள்ள குவியலாக...

"நுனி வெள்ளையைக் கூடப் பொறுக்கிரு" என்கிற பரமசிவம்.

"ஆமா... இன்னிக்குத்தான் வாக்கப்பட்டு வந்துருக்கேன். எனக்கு வெவரம் சொல்லணும்லே ?" என்றுகேலியாக எதிரடி தருகிற காமாட்சி.

அப்போது வருகிற மீனக்கா. செண்பகத்தின் அம்மா.

"என்ன..மீனக்கா, சண்டு பெறக்குதியா ?"

"பெறக்கச் சொன்னா.. பெறக்குதேன்"

"பெறக்கு. வழமை மாதிரி... நீ பெறக்குற சண்டுகளை நீ வீட்டுக்குக் கொண்டுபோ.. தனியா கூலியும் வாங்கிக்கோ.."

"தருமதுரை, நீங்க சொல்லணுமா ? செய்யின்னு சொல்லுங்க. செய்றேன். இந்தான்னு குடுங்க. மறுப்பில்லாம வாங்குறேன்"

மீனக்காவும் வத்தல் முன் உட்கார்ந்தாள். வத்தலை இழுத்து, பரப்பி விரித்து சண்டுகளை நீக்கினாள். பழகியவேலை. வேலைக்குப் பழகிய கை. "பொடு பொடு" வென்று ரெண்டு கையாலும் சண்டு பொறுக்குகிற வேகம்.

கிளிப்பச்சையில் தள வாய்புரம் சேவை. பின்கொசுவம்வைத்து உடுத்தியிருக்கிறாள். ராவுத்தமார் பெண்கள்போடுகிற மாதிரியான தொளதொளப்பான சட்டை. வளர்ந்த காதுகள் ஈரக்கயிறாக தொங்குகின்றன. பாம்படமில்லாத வெறுமை, வீட்டு வறுமையைச் சொல்கிறது. காமாட்சி வயது இருக்கும். இல்லாக்கொடுமை. அவளைவிடவும் கிழடியாகத் தோற்றம் தருகிறாள். வற்றிச்சுருங்கிய உடம்பு. நனைந்த துணியைப்போர்த்திய எலும்புக்கூடு மாதிரியான தோற்றம். வாட்டிப்பிடுங்கிய வறுமை, சதைபூராவையும் கரைத்து விழுங்கியிருந்தது.

காமாட்சியைப் பரமசிவம் ஏதோ சொல்ல அவளும் திருப்பி பதிலடி கொடுக்க... கோபப்படவேண்டிய அக்கணத்தில் கூட்டாகச் சிரித்துக்கொள்கிற அந்த ரெண்டு பேர்.

"இப்புடிச் சிரிச்ச சீதேவியாக உங்க குடும்பம் இருக்கு. இதுகெடுக்க..விதிவர்றது. உங்களுக்குத்தெரியாதுபோல"

"என்ன சொல்லுதே. மீனக்கா ?"

"அப்ப.. ஒங்களுக்கு வெஷயமேதெரியாதா ?"

"ம்ஹூம். நாங்க என்னத்தைக்கண்டோம் ? நாங்க உண்டு, எங்கபாடு உண்டு"

"அப்ப... ஒங்க மகன் எளையவரு வெஷயம் தெரியவே தெரியாதா ?"

திக்கென்கிறது, பரமசிவத்துக்கு. சண்டு பொறுக்குவதை நிறுத்துகிற வேகத்தில் தெரிகிற அவரது மனஅதிர்வின் சத்தம்.

"மகனே_ சண்டாகிட்டானா"... அவருள் திகில்யுகம்.

" என்ன விஷயம், மீனக்கா ?"

"எனக்கு சென்பகம் தான் சொன்னா. இதது இப்படி நடக்குங்குறதை சொன்னா. தங்கமான மனுசரு நீங்க. தருமராசா நீங்க. ஒழைக்கிறதுலேயும் வெளைஞ்சதை ஒண்ணுசேக்குறதுலேயும் உங்களை மிஞ்ச, பூமியிலே யாருமேயில்லே. அப்பேற்பட்ட

பாட்டாளிக்கு இந்தச் சோதனையா"ன்னு எம்மனசு தாங்கலே. ஓட்டமாய் ஓடியாந்துட்டேன்..."

மீனக்காவின் நெகிழ்வான மனசு. நெகிழவைக்கிற உணர்வுகள். உயிரின் கசிவாக வருகிற மனச்சொற்கள். மனசின் சத்தமாக வருகிற துயரப் பெருமூச்சு.

"சரி.. என்ன நடக்குதுன்னு இன்னும் நீசொல்லலியே" உயிரை உதட்டின் நுனியில் நிறுத்தி, மனசுதுடிக்க விசாரிக்கிற காமாட்சி.

மீனக்கா சொல்கிறாள். கார்மேகத்தைப் பார்த்தது.... மற்ற பிரேமுகர்களிடம் பார்த்துப் பேசியது.

அவள் சொல்லச் சொல்ல_ முகம் கறுத்து வருகிற காமாட்சி. பதறித்துடிக்கிற கண்ணிமைகள். வெட்டுப்பட்ட பல்லிகளாகத் துடிக்கிற உதடுகள். முந்திக்கொண்டு வருகிற கண்ணீர்க்கோடுகள்.

ஆனால்... பரமசிவத்தின் முகம், கோப வசப்பட்டிருந்தது. "திகுதிகு"வென்று அவர் நெஞ்சுஎரிகிறது. கொந்தளிக்கிற உயிரின்கொதி வெப்பமாக வெடிக்கிற சொற்கள்.

"அவன் வெளங்காமப் போற நேரம் வருது"

25

அருஞ்சுனை கடை வியாபாரத்தில் மும்முரமாக இருந்தான். சாயங்காலநேர வியாபார மும்முரம். காட்டு வேலைக்குப் போன பெண்கள், உயிரையும் வியர்வையும் வேனாக்கொதிக்கிற வெயிலில் கொட்டிவிட்டு, தீர்ந்துபோகாத மிச்ச உயிர்ப்பலத்தில் வாழ்க்கையுடன் மல்லுக்கட்டுகிற உள் முகப்பாசவேட்கை.

புருஷனுக்கு ஆக்கிப் போடணுமே....ஆலாய்ப் பறந்து வர்ற புள்ளைகளுக்கு ஏதாச்சும் திங்கத்தரணுமே என்கிற வாழ்வின் உள்வட்ட உயிர்ச்சுழல்.

அரிசி பருப்பு வாங்க.... "நாமுந்தி நீமுந்தி" என்று முண்டியடிக்கிற கிராமத்துப் பெண்கள். நடுவில் இண்டு இடுக்கில் நுழைந்து கொண்டு... "எனக்கொரு ஐஸ்மிட்டாய்" எனக்கொரு பிஸ்கோத்து" என்று துறுதுறுத்து நச்சரிக்கிற பொடுசுகள்.

ரெண்டு கைகளும் பதினாறு கைகள் இயங்குகிற வேகத்தில் சுழல்கின்றன.

"இந்தா_ கால் ரூவா புளி, வேற ?"

"ம், ஆறு அப்பளம். வேற_ வேற ?"

"ம்ம்ம்_ இருபது பைசா சீரகம்"

நறுக்கி வைக்கப்பட்டிருக்கிற சதுரக்காகிதங்கள்.அதில் புளியைச் சுருட்டுகிற வேகம். சீரகத்தை மடிக்கிற துரிதம்.

மண்டைவெல்லக்கட்டியைக் கைக்கணிசமாகத் தூக்கி எடை பார்த்து, அனுபவச்செறிவுடன் காகிதத்தில் சுருட்டுகிற லாவகம்.

சரக்கு கொடுக்கிற மனம். கணக்கு சேர்த்துக் கொண்டே வருகிற இன்னொரு மனம். வாங்குகிறவள் கையில் ரூபாய் இருக்கிறதா. கடன் சொல்லப் போகிறாளோ என நோட்டம் பார்க்கிற ரகசிய மனம். காத்திருப்போரின் பொறுமையின்மையைச் சமாளிக்கிற இன்னொரு சாமர்த்தியமனம். நச்சரிக்கிற சிறுசுகளை நைஸ் பேச்சாகப் பேசி நிறுத்துகிற விளையாட்டு மனம்.

பலசரக்குக் கடைக்காரனிடம் பல சரக்குகள். மருந்துச் சாமான்களிலிருந்து மங்களகரச் சாமான்கள் வரை, கல்யாணச் சாமான்களிலிருந்து பிரசவ மருந்து மாயம்வரை... சகலவிதமான பலசரக்குகள். அதது அததன் டப்பாக்களில்.

பலசரக்குக்கடை நடத்துகிற அருஞ்சுனையிடமும் பல மனசுகள். மனசுகளின் பல அடுக்குதான் ஒரேசமயத்தில் பன்முகம் காட்டுகிற மனசு. பலகுணம் காட்டுகிற மனசு.

"எனக்கு ஒரே ஒரு சீயக்காய்ப்பொட்டலம் குடு_ வெண்ணி கொதிச்சுக்கிடக்கு."

நடுவுலே ஒரே சாமான் குடுத்துரு அருஞ்சுனை. ஒரே ஒரு சிங்கமார்க் பொடிப்பட்டை"

இன்னொரு பெண்ணின் கோபச்சீறல்.

"சோறு தண்ணி காய்ச்சாம கெடந்து சீரழியுதோம்... பொடிப்பட்டைக்குத்தான் அவசரமாக்கும்?"

"கிடக்குறதெல்லாம் கிடக்கட்டும், கிழடியைத் தூக்கி மணையிலே வைன்னு சொன்னாளாம். அந்தக் கூத்துல்லே இங்க நடக்கு" இணைத்தாக்குதலில் ஒருபெண்.

"குடுக்கிற மவராசன் பொடிப்பட்டையை எறியுறான். சும்மா இருக்குற சிறுக்கிகளுக்குல்லே அரிக்குது.

சகலுருக்குமான கிழவியின் பதிலடி.

வாக்குவாதமும், சொலவடைச் சண்டைகளும் சிரிப்பும் சீறல்களுமாக இங்கு நடக்க... சரக்குகளைப் பொடுபொடுவென்று தருகிற அருஞ்சுனை. மனக்கணக்கில் வருகிற ஆகமொத்தம்.

"ம்_ இந்தாங்க_வேற_ ?"

"ம், புடிங்க_ வேற_ ?"

"ரைட்_ எடுத்துப் பெட்டியிலே வைங்க_ வேற ?"

நச்சரிக்கிற பெண்களின் கூவல்காடும், துரிதப்படுத்துகிற அருஞ்சுனையின் பன்முகச் செயல்பாடும்_

"பொழுதடைஞ்சிருச்சே_ வந்து கொல்வாரே மனுசரு_ காப்பி தண்ணிகூடக் கொதிக்கவைக்கலியே_"

"தா வந்து அடுப்பு மூட்டவா ?"

பதற்றமாக அவசரப்படுத்துகிற பெண்ணை நக்கலடித்து சுமுகப்படுத்துகிற அருஞ்சுனை.

"அடுப்பு மூட்ட வரவேண்டாம். சட்டுன்னு வெல்லம், தேயிலையை தந்தாப்போதும்"

ஒருபெண்ணைச் சரக்கு முடித்து அனுப்பினால், இடுப்பில் குத்துப்பெட்டியுடனும் எண்ணெய்ச்சீசாக்களுடனும் நாலு பெண்கள். சீசாக்களின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கிற கயிறுகள், விரல்களின் வளைவில் தொங்குகின்றன. மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட கைதிகளைப்போல.

அந்நேரம்.... பயங்கரப்பரபரப்பில் ஓட்டமாய் ஓடி வருகிற கணேசமூர்த்தி. கிராம நிர்வாகசபையின் உறுப்பினர்களில் ஒருவன்.

"பத்துப் பைசா சொக்கலால் பீடியும், ஒருதீப்பெட்டியும் குடு. ரொம்ப அர்ஜெண்ட்"

"என்ன அர்ஜெண்ட் ?"

"நாட்டாமை கார்மேகம் மாமா வூட்லே நிர்வாகக்குழுக் கூட்டம் ஆரம்பிச்சிருச்சு. நான்தான் லேட்டு"

"அம்புட்டு அவசரமாய் என்ன பஞ்சாயத்து ?"

"உங்க பரமசிவம் மாமா வீட்டுப் பஞ்சாயத்துதான்"

ஓடுகிற பரமசிவம். அவன் சொல்லிவிட்டுப் போன இடித்தகவல் அவனுள் மின்னல் சரங்களாகப் பரவியது.

"பரமசிவம் மாமாவீட்டுப் பஞ்சாயத்தா ?"

பதற்றமும் சோகமுமாய்க் குழம்புகிற அருஞ்சுனைக்கு சரக்கு வாங்குகிற பெண்ணே விவகாரம் முழுக்க விளக்கிச் சொன்னாள்.

"முருகேசன் பாகம்பிரிச்சுக் கேட்டு...ஊர்ப்பெரியாளுககிட்டே பிராது குடுத்துருக்கான்"

"என்னிக்கு ?"

"இப்பத்தான். சாயங்காலம் தான் வீடுவீடாப்போறான். "நிர்வாக"த்தாளுகளைப் பாத்துப்பேசுதான்"

அருஞ்சுனைக்குள் வந்துநிற்கிற பரமசிவக் கம்பீரம். யாரிடமும் கடன் வாங்காத கையேந்தாத தன்மானம். யாருக்கும் தலைவணங்கத் தேவையில்லாத நேர்மை. எவரிடமும் தலைசொறிந்து நிற்கத் தேவையில்லாத குற்றமற்ற ராஜகண்ணியம்.

அந்த மாமன்னனா- ஒருசபையில் தலைகுனிந்து நிற்பது ? ஊர் உலகத்துக்கே உழைப்பிலும் வாழ்க்கையிலும் பாடமாக இருக்கிற அந்தப் புத்தகத்துக்கா- குப்பைக்காகிதங்கள் உபதேசம் செய்வது ?

அருஞ்சுனைக்குள் அதிர்வுடன் அலையாகப்பரவுகிற வலி. வருத்தமும் கவலையுமாக இருக்கிறது. அடிவயிற்றில் ஐஸ்கத்தியைச் சொருகின மாதிரி, ஒரு சூன்ய உணர்ச்சி.

அவன் சரக்கு கொடுப்பது நிற்கவில்லை. கணக்கு பார்ப்பது நிற்கவில்லை. சிறிசுகளுக்குச் சமாளிப்புச்சொற்கள் நிற்கவில்லை.

மனசின் பல அடுக்குகளில்... இப்போது கூடுதலாக ஓர் அடுக்கு. மனசின் இன்னொரு டப்பா.

அவனுக்குள் ஒருயோசனை அரும்புகிறது. பரமசிவம் மாமாவின் கம்பீரமும் கௌரவமும் உயர்கிற மாதிரியான யோசனை. அது நல்ல யோசனை. பேரேட்டுக்கணக்கைக் கூடுதலாக ரெண்டு மூன்று தடவைகள் கூட்டிப் பார்த்து, சரி பார்ப்பது போல.... அந்த யோசனையை வேறுவேறு கோணத்திலிருந்து பரிசீலித்து, சரி பார்த்துக்கொண்டான். சுளகில் போட்டு சீரகத்தைப் புடைத்து.. தூசித்துப்பட்டைகளைக் காலிபண்ணுவதைப் போல... அந்த யோசனையை பலதினுசுகளில் புடைத்து, சரிசெய்துகொண்டான்.

நிர்வாக உறுப்பினர்களும், ஊர்ப்பெரியவர்களும் பார்ப்பதற்கு முன்பாக— மாமாவைத் தான் பார்த்துப் பேசியாக வேண்டும். ஆறுதல் சொல்லணும். மனசில்பட்டிருக்கிற யோசனை வெளிச்சத்தை மாமாவிடம் தரணும்.

"யம்மா— பூர்ணம்"

கடையோடு சேர்ந்திருக்கிற வீடு. வீட்டுக்குள்ளிருந்து பூர்ணத்தின் எதிர்க்குரல்.

"என்ன....? அடுப்பு வேலையிலே புகைமூட்டத்துக்குள்ளே பொசுங்கிக்கிட்டிருக்கேன்."

"சித்தே.. கடையைப்பாரு. எனக்கொரு சோலி"

"சோறாக்க வேண்டாமா ?"

"எல்லாத்தைவிடவும் முக்கியம். வெருசா, வா.."

சரக்கு வாங்கிக் கொண்டிருக்கிற பெண்கள், அருஞ்சுனையை ஆச்சரியமாகப் பார்க்கின்றனர். அவனது உணர்வுகள்.. கொதி மனசின் உச்சரிப்புகள்.முகத்தில் கவலையின் நிழலிருட்டுகள்...

"பெத்தபுள்ளே ஊரைக்கூட்டி மான மரியாதையைக் கெடுக்குது. மானமரியாதையைக் காப்பாத்த ஊராபுள்ளே அருஞ்சுனை துடிக்குது."

"ரத்துப்பாசத்துக்கு இருக்குற பவரைவிட ... நட்புப்பாசம் பவர் ஜாஸ்தி"

அருஞ்சுனை_ கப் கப் பென்று நடக்கிறான். காலடித்தடத்தின் சத்தத்தில் நிலம் அதிர்கிறது. அகலஎட்டு. வேக வேகமான நடை_

"என்னப்பா_ வேகு வேகு ன்னு நடக்கே ? நடையா, ஓட்டமா ?"

"சும்மதா_"

"எங்கேயும் தீ,கீ புடிச்சு எங்கேயும் வேகுதா ?"

வேடிக்கையான விசாரிப்பிலேயே விஷமத்தனமான கேலி.

"எவன் குடும்பத்துலே தீ வைக்கலாம்னு ஊர்லே நாலுபேரு அலையுறப்ப... தண்ணிஊத்தி அமர்த்துறதுக்கும்பத்துப்பேரு வரமாட்டாகளா ?"

வேக்காடு நிறைந்த கங்குச் சொற்களை வீசியெறிந்து கொண்டே வீசுகிற கைகளும், பாய்கிற காலுமாக வேகநடை. வெண்குதிரை வாகன மேறி... வானமதிர, சாட்டை சுழற்றி அருஞ்சுனை காத்த அய்யனாரே காலனை வெல்லும் கனல் கோபத்துடன் பாய்வதைப்போல_ அருஞ்சுனை.

முகத்தில் இறுக்கம். எதிரிகளின் ரகசியச்சூழ்ச்சிகளை வீழ்த்திக் காட்டித்தீரவேண்டும் என்கிற மனத்தீவிரம். சீண்டப்பட்டு சீறி வெடிக்கிற மாமாவின் மானத்தையும் குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றுவதற்கான முயற்சி உக்கிரம்.

இவன் வீட்டுமுற்றத்துக்குள் நுழைகிறபோது

மீனக்கா இருகாலையும் நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். வற்றலை வலதுகையால் இழுத்துப்பரத்தி.. தென்படுகிற சண்டு வத்தலைப் பொறுக்குகிறாள்.

காமாட்சி கண்ணீரும் புலம்பலுமாகப் பரமசிவத்தைக் கண்டிக்கிறாள்; கெஞ்சுகிறாள்; கோபப்படுகிறாள்; குமுறிக் குமைகிறாள்; குழைந்து மருகுகிறாள்; தணலும் புனலுமாக தளதளக்கிறாள்.

"புண்ணியமாய்ப் போகுது. புள்ளையை சபிக்காதீக. புள்ளைகளுக்காகத் தானே இம்புட்டுப்பாடுகளும்? அதுக நல்லாயிருக்கணும்னுதானேமாடு கன்னுகளை வளர்க்குறோம்? ஆடுகுட்டின்னு பின்னிக்கிடக்குறோம்? குப்பை கூளத்தை சேக்குறோம்? காடுகரைகளை வாங்குறோம்? அதுகளை சபிக்கலாமா? அதுகளைச் சபிச்சிட்டு நாம வாழணுமா? வாழ்ந்து எந்த ராஜ்யத்தை பட்டம் கட்டி ஆளப்போறோம்?"

பரமசிவம் ருத்ரதாண்டவமாடுகிறார். முகமெல்லாம் தீக்கனல். கோபவெறி தாளாமல் மட்டியைக் கடிக்கிறார். கடிபட்ட அடி உதடு, பல்தடம் தெரிய எச்சில் படிந்துகிடக்கிறது.

"ஊர்க்காரனைப் பூராத்தையும் உருட்டித்திரட்டி கூட்டியாந்து, என் முன்னாடி நிப்பாட்டி, என்னைப்பயங்காட்டவா? பயந்து நடுங்கிருவேனா? ஊர்க்காரங்களா, எனக்குச்சம்பாரிச்சுப் போட்டது? அவுக உத்தரவுக்கு நா என்ன மயித்துக்குக் கட்டுப்படணும்? வரட்டும்... வரட்டும்.. ஊர்பூராவும் தெரண்டு உருண்டு வரட்டும். என் கெண்டைக்கால் ரோமத்தைக்கூட எந்த மயிராண்டியும் தொட்டுர முடியாது. வரட்டும் வரட்டும்... ஊரா.. நானான்னு போட்டுப்பாத்துருவோம்... இன்னிக்குத் தானே இருக்குது, கதை. ஊரைக்காட்டி பெத்ததகப்பனை மடக்குறவன், உருப்பட்டுருவானா? வெளங்கிருவானா? ஊர்ப்பேச்சைக்கேட்டு அப்பனைப் பகைச்சவன், நாசமாய்த்தானே போவான்? ஊரு, அவனை பிய்ச்சித்தின்னுரும்லே? இவன்கிட்டே இருக்குற சதையை உயிரை ரத்தத்தை கரைச்சுக்குடிச்சிட்டு வாயைத் தொடைச்சுக் கிட்டுப் போயிரும்லே, ஊரு?"

ரெண்டு பேர் பேச்சையும் கேட்கிற மீனக்கா. தங்கமான மனிதர்கள் ரெண்டுபேருக்கும் இந்தக் கோலமா... வரவேண்டும்? யார்குடியையும் கெடுக்காமல் யார்வாயிலும் மண் அள்ளிப்போடாமல்...சொந்த வியர்வையைச் சிந்தி, மண்ணோடு மல்லுக்கட்டி மண்ணோடு மனசு கலந்து மண்ணைப்போலவே செழித்து வருகிற ஒரு குடும்பத்துக்கு இக்கதியா வரவேண்டும்? எந்தப் பாவிப் பயலின் கொள்ளிக்கண்பட்டதோ?

மீனக்கா என்ற கூலிக்காரியின் வியர்வை மனசின் வெள்ளை நினைவுகள். கலங்கி மருகுகிற வருத்த எண்ணங்கள். ஆனாலும்_

தான் என்ன செய்ய முடியும் ? தலையிட்டுச் சொல்லமுடியுமா ? தருமதுரையிடம்... ஒண்ணுக்குமத்த சிறுக்கி, சமதையாக நின்று பேசமுடியுமா ? பேசலாமா ? வாய் வருமா ?

அப்போதுதான் அருஞ்சுனை முற்றத்துக்குள் நுழைகிறான்.

"மாமா_"

கொதிப்பும் குமுறலுமாய்ப் பரமசிவம் சீறுகிறார்.

"பாத்தியா மாப்புள்ளே ? வூட்டுக்குள்ளேயே வெஷப்பாம்பு ? ஊரைக்கூட்டிக் கூத்துக்கட்டுற கோலத்தைப் பாத்தீயா, மாப்புள்ளே ?"

"மாமா.. இங்குட்டு தனியுா வாங்க.. ஒருமுக்கிய விஷயம் பேசணும் ?"

"வெஷப்பாம்புன்னு தெரிஞ்சுக்கிட்டா..அடிச்சுக்கொன்னுர வேண்டிதுதானே.இதுலே என்ன_ விஷயத்தைப்பேச ?"

"வெஷப்பாம்புன்னாலும்... உங்க ரத்தத்துலே உங்க கொடியிலே_முளைச்ச பாம்பு_"

"தம்பி _ மாமாவுக்கு நல்லது கெட்டது எடுத்துச் சொல்லுப்பா. நிதானம் தெரியாம_ ஆகாயத்துக்கும் பூமிக்குமாக திங்கு திங்குன்னு ஆடுறாரு. இவரு ஆடுறஆட்டத்துலே குடும்பமே ஆடிப்போயிரும் போலிருக்கு"

காமாட்சியின் கண்ணீர்க்குரல். பாசமும் கோபமும் குழைந்த சுடுசோறு. காரமும் உப்பும் கலந்த குழம்புக்கொதிவாசம்.

அக்காவைப் பார்க்கிற அருஞ்சுனை.

"யக்கா... சுத்தியடிக்கிற சூறாவளி கெட்ட புத்தியோட கிட்ட வருது. நாமதான்_ புத்தியோட வெலகி நின்னு, ஜெயிச்சுக்காட்டணும்"

"அந்த மனுசருக்கு அதை எடுத்துச் சொல்லு"

" என்ன மாப்புள்ளே .. ஒருதினுசாவே பேசுதே? என்ன வெஷயம்? நீசொல்ல வர்றதை சட்டுன்னு சொல்லு..."

"மாமா...ஊருபூராவும் ஒண்ணு சேர்ந்தாலும், உங்களுக்குச் சமமாகுமா ?"

"ஆகாது. சொல்லு"

"ஊரோட பகைக்குற குடும்பம், வேரோட கெடுமா, கெடாதா ?"

"கெடத்தான் செய்யும். நீ என்ன கொழப்புதே? அங்குட்டும்தள்ளுதே.. இங்குட்டும் இழுக்கே?" .

"நா தெளிவா இருக்குறதாலே தான்.. ஓடியாந்துருக்கேன். எங்க மாமா.. ஊரைப்பகைக்காமலேயே ஊரை ஜெயிச்சு ஒசந்துநிக்கணும்னுதான்.. சாயங்கால நேரக்கடை ஏவாரத்தைக் கூடவுட்டுட்டு.. இப்புடி ஓடியாந்துநிக்கேன்.."

"ஊரைப்பகைக்காமலேயே... ஊரைச்செயிக்கவா ? என்ன சொல்லுதே ?"

"சாட்சிக்காரங்க கால்கள்லே வுழுந்து சீரழிஞ்சு தலைகுனியுறதைவுட... சண்டைக்காரன் கையைப்புடிச்சுட்டா? நம்ம புள்ளைக்கு நாமே தானம் பண்ணி தலைநிமிர்ந்துட்டா..?"

"எளைய பயலுக்கு தாழ்ந்து போறதா ? அவனோட இழுப்புக்கு எறங்கிப்போறதா ?"

கொதிப்புக்குரலில் தெறிக்கிற பரமசிவரௌத்ரம்.

"மாமா.. யோசிங்க. உங்களுக்குத்தெரியாத யோசனை எதுவுமில்லே. ஊரு, உங்க வளர்ச்சி கண்டு பொறுக்காம வவுறு எரிஞ்சு கெடக்கு. உங்க குடும்பத்துலே எப்ப தீ வைக்கலாம்னு ஏக்கத்தோட காத்துநிக்குது"

"ஆமா. மாப்புள்ளே... நீ சொல்றது, நூத்துலே ஒரு வார்த்தை"அவரது அடிமனச்சிந்தனையைத் தொட்டுவிட்டான் அருஞ்சுனை. ஒத்த சிந்தனையோடு . உற்றதைச் சொல்ல வந்திருக்கிறான் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டான்.

"இந்த ஊரோட வாய் பட்டா.. நம்ம வீட்டுவெள்ளாமை நாசமாயிரும்_"

"ஆமா_"

"அதுக்குத்தான் என் மனசுலே ஒருயோசனை_"

" சொல்லுன்னா_"

"ஊரு மூக்கை நீட்டுதுக்கு இடமே தராம_ நீங்களே முருகேச மாப்புள்ளையை கூப்புட்டுப் பேசிரணும் ஏலேய் ...நீ ஆசைப்படுற மாதிரி .. பாலையாநாயக்கருக்குத் தோட்டத்தை நீயே வெவசாயம் பாரு. மூணுவருஷடம் ஒந்திறமையை காட்டு. ஒன்னோட யோசனைப்படியே வெவசாயம் பண்ணிக்காட்டு. ஜெயிச்சா, சந்தோஷம்னு நீங்ளே பெருந்தன்மையா தானம் பண்ணுங்க. ஊர் சொல்லி தலைகுனியுறதைவிட_ உங்க புள்ளைக்கு நீங்களேதானம் பண்ணி.. தலைநிமிர்ந்து நில்லுங்க. ராஜாமாதிரி கம்பீரமா ஒசந்து நில்லுங்க_"

அருஞ்சுனை பேச்சுக்கு ஒப்பவும் மனமில்லை. ஒதுக்கித்தள்ளி விடவும் முடியவில்லை.

"சின்னப்பயலுக்கு சிரம் தாழ்த்திப்போவதா என்ற நினைவு முறுக்கி முறுக்கிப்பிழிந்தாலும்_ நம்ம பிள்ளையை நாமே மன்னித்து_ ஒருவாய்ப்பும் தந்து.. பெருந்தன்மைப்பண்பால் உயர்ந்து நிற்கலாமே என்கிற அருஞ்சுனையின் வார்த்தை நியாயம். நிறைய யோசிக்கிறார் பரமசிவம்.

26

மீனக்கா பரமசிவம் வீட்டு முற்றத்தில் சண்டு வற்றல் பொறுக்கிக் கொண்டும்...உயிரை வியர்வையாகச் சிந்தி நரம்புகளை முறுக்கி கயிறாக்கி முன்னேறி வருகிற ஒரு குடும்பத்துக்குள் ஒரு விஷப்பாம்பு போல ஒருபிரளயம் நுழைந்து..ஆட்டம்போட்டு குடும்பத்தையே ஆடவைக்கிறதே என்றும் கவலைப்பட்டுக் கொண்டும்.. கண்ணீர்கலங்கிக் கொண்டிருக்கிற அதே அந்தி வேளையில்,

சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே கள்ளப்பூனையாக வீட்டைவிட்டு வெளியேறுகிற சென்பகம். குளித்துமொழுகி யிருந்தாள். முருகேசன் வாங்கித் தந்திருந்த வாசனைச் சோப்பு.

கிடுகுக்கட்டு மறைவில் தான் குளிப்பு. அந்தச் சோப்பை உள்ளங்கையில் எடுத்துவிட்டால்.. தேகமே புல்லரித்து அடங்கும். மேனியெங்கும் பரவுகிற சிலிர்ப்பலை.

மார்புவரை தூக்கிக்கட்டியபாவாடை. தகரக்குவளையால் தண்ணீர் அள்ளி ஊற்றுவாள். ஓடியாடி வேலைபார்த்து, வியர்வை வழிந்து அடங்கிய உடம்பு. வியர்வைக்கசகசப்பும் உழைப்புக் கதகதப்புமான திரேகம். குளிர்ச்சியான நீரின் ஸ்பரிசம் பட்டவுடன்- ஒருசுகம் பரவும்.

"ஸ்ஸ்ஸ்ஸ்–ஆ" என்ற அந்தப் பரவசத்தை மனசால் ருசிப்பாள். பச்சைடப்பாவில் இருக்கிற அந்தச்சோப்பு. பக்கத்தில் மஞ்சள் துண்டு.

சோப்பை எடுக்கும் போதெல்லாம் மனசுகிடந்து புல்லரிக்கும். முருகேசனின் நினைவு மட்டுமல்ல. முருகேசனே உள்ளங்கையில் இருப்பதைப் போலொரு பிரமை. மீசைவிரிய புன்னகைக்கிற அவன் முகம், உள்ளங்கையிலிருந்து உடம்பு பூராவும் பரவுவதாக, படர்வதாக உராய்வதாக நுரைபெருக்குவதாக ஒரு மாயமயக்கம்.

வெண்ணிறத்திரவ நுரையாக சருமமெல்லாம் படர்கிற நறுமணம். அந்த முரட்டு மனிதனின் உதட்டு எச்சில் தானோ என்கிற மனச்சிலிர்ப்பு.

இப்போதெல்லாம்..குளிக்கிற பொழுதெல்லாம் மனசின் தாறுமாறாகத் துள்ளிக்குதித்தோடுகிற நினைவுகளின் மோகலாகிரியில் திண்டாடித் தவிக்கிறாள். இன்பத்திண்டாட்டம். சுகத்தவிப்பு.

அவளது கட்டுப்பாட்டையெல்லாம் தகர்த்துக்கொண்டு.. அவ்வப்போது "களுக்" கென்று சிரிப்பாக வெளிப்படுகிற அவளது மனக்கிளுகிளுப்பு.

கதவை இழுத்துச் சாத்தினாள்.பூட்ட வில்லை. பூட்டுவதற்கு வீட்டில் தங்கநகை இருக்கிறதா? சொத்துப் பத்திரம் இருக்கிறதா?

தாயும் மகளும் கூலிக்கு உழைக்க அனுதினமும் காடு களில்போய்... வேனலாய் கொதிக்கிற வேக்காட்டு வெயிலில் உயிரையும் சதையையும் கரைத்துவிட்டு வந்து, கரைகஞ்சி குடிக்கிற வெறும் வீட்டில் பூட்டிப்பாதுகாக்க என்ன இருக்கிறது?

மீனக்கா எங்க போய்த்தொலைஞ்சாளோ...? போய்ட்டுவாரேன் என்று சொல்வதற்கு ஒரு ஜீவன் இருந்தது. அவளையும் காணோம்.

அவளுக்காகக் காத்திருக்க முடியாது. அம்மாவுக்காக காத்திருந்தால்... பொழுது காத்திருக்குமா? இருட்டு வராமல் காத்திருக்குமா?

இடிகிணற்று மூலைப்படியில் எம்புட்டு நேரந்தான் அந்த ஆளு காத்திருப்பாரு? பாவம்...! இவள் பேச்சை அப்படியே கேட்கிறான். இவள் எள் என்றால்.. எண்ணெயாக நின்று விட்டான்.

இவள் தான் யோசனை சொன்னாள்.

"எதுக்கு.. அனுதினமும் புலம்பணும்? மாமா செய்ற வெவசாயம் சரியில்லேன்னு என்னத்துக்குப் புலம்பித்திரியணும்? நீங்க பாலையா நாயக்கரு தோட்டத்தைக் கேட்டு வாங்கிநீங்க உங்க மொறையிலே வெவசாயம் பண்ணி வெளைய னவச்சுக்காட்ட வேண்டியது தானே?"

இதோ.. இன்றைக்கு ஊர் நிர்வாகம் ஒன்று கூடிப்பேசுது. இவள் சொன்ன கோட்டில்... பிசகாமல் நடக்கிற அந்த ஆளைக் காக்கப் போடுறது பாவமில்லையா?

என்ன கழுதையோ..தெரியவில்லை. இந்தச்சிறுக்கியின் மனசு, அவன் மேல் கிறுக்காகிக்கிடக்கிறது. அவனது தோள்பட்டையின் தசை முறுக்கும் நெஞ்சுச்சதையின் திரள்வும், உருள்வும், அவனது தேகக்கட்டின் கச்சிதமும் இவளை கிறங்கடித்தது. இவளைச்சுழற்றியடித்து, மனசைச் சூறையாடிவிட்டது. நஞ்சடித்த கெண்டையாக அவனைச் சுற்றிச்சுற்றி வந்தாள்.

அனுதினமும் அவன் புஞ்சையில்தான் கூலிவேலை. பருத்தி யெடுக்க விதை ஊன்ற_ கதிரறுக்க_ களைவெட்ட என்று ஏதாச்சும் ஒரு புஞ்சையில் ஏதாச்சும் ஒருவேலை.

அநேகமாக..புஞ்சைக்காரனாக அவன் வருவான். வராமலும் இருப்பான்.

அவனைப் பார்க்கிற போதெல்லாம் மனசு கிடந்து சொக்கும். சோப்புப் போட்டு சோப்புப்போட்டு ஓயாமல் கழுவித்துடைத்த முகப்பளபளப்பு தான் இவளை முதலில் அடித்துச்சாய்த்து வீழ்த்தியது.கிட்டத்தில் அவன் வருகிற போதெல்லாம் _ நெஞ்சுக்குள் மோதி கிறங்கடித்த அந்தச்செண்டு வாசம்.

அவனையே குறுகுறுவெனப் பார்ப்பாள். புஞ்சைக்காட்டில் வேலையில் மனசு கவியாது. மனசு பூராவும் அவனைத்துரத்திக்கொண்டு திரியும். துடியாகத் துடித்த ஆசை.

இரவில் படுத்தால் நெருஞ்சிமுள்ளாக கண்ணுக்குள்வந்துநிற்பான். உழைத்த களைப்பில் உறக்கம் சூழ்ந்து மூழ்கடித்தால் தான் உறக்கம் இல்லையென்றால். அந்தப்பாவி நினைப்புதான். உடலை ஒருநிலை கொள்ளவிடாமல் உருட்டியெடுக்கும். உறக்கமில்லாத இருட்டாக அவனது நினைப்பில் பொழுதுகரையும்.

நல்லவேளை_

இவளே வெட்கத்தைவிட்டு, கூச்சமற்று கூறுகெட்ட கிறுக்கின் உச்சத்தில் வாய்விட்டுக் கேட்பதெனத் துடித்துக்கொண்டிருந்த சமயம்.

"ஒங்கமேலே ஆசைஆசையாயிருக்கு. என்னைப் புடிச்சிருக்கா ?" என்று கேட்டே விடுவது என்று விளிம்பின் நுனியில் துடித்துக்கொண்டிருந்த தருணம்.

அவனேகேட்டு விட்டான்.தெக்காட்டில் குடத்துத் தண்ணீரைத் தூக்கப்போன தனிமையில் சட்டென அவன்கேட்டு விட்டான். நல்ல வேளை_அவன் முதலில் கேட்டான்.

நூலிழையில் இவள் மானம் தப்பியது.

அவன் இழுக்கிற இழுப்புக்கெல்லாம் இழுபடுவதையும், அவன் தொட்ட சமயமெல்லாம் தன்னை விட்டுக்கொடுப்பதையும் பார்த்து..இப்போது அவன் புரிந்திருப்பான்.

"இந்தக்கழுதை_முந்தியே நம்ம கிறுக்கு புடிச்சு கெடந்திருக்கு"

புரிந்திருப்பானா ? புரிந்த மாதிரி தெரியவில்லை. அவன் கிறங்கிக் கிடப்பதாகவும் அவன் சிணுங்குகிறபொழுதெல்லாம் இணங்கிவிடுகிற இளகிய மனசுள்ளவளாகவும் தான் நினைத்துக் கொண்டிருக்கிறான்.

அவள் அடிமனதில் ஒரு கனவு.

கூலிக்காரியாக வந்து "கொத்து"க்குப் பாடுபடுகிற இதேபுஞ்சை மண்ணில் "புஞ்சைக்காரியாகவும் உரிமையோடு நிக்கணும்.

பாலையா நாயக்கரு தோட்டம்ங்குற பெயர் மங்காமல் துலங்கி வருவதைப்போல... செம்பகம்புஞ்சைன்னு தலைமுறை தலைமுறையாக மங்கி மறையாம _ தன்பெயர் துலங்கணும் என்றொரு ஆழ்மனநினைப்பு. மனச்சமுத்திரத்தின் அடித்தரையின் கனவு.

இந்தக்கனவெல்லாம்..ஆதியில் கிடையாது. கிறுக்குப் பிடித்துப்போய் நஞ்சடித்த கெண்டையாகச் சுற்றிச் சுற்றி வந்து, உற்று உற்றுப்பார்த்த நாளில் கிடையாது.

"பொழுதடைய.. இடிகெணத்துப்பக்கம் வா"என்று உரிமை யோடும் கொஞ்சலாகவும் சொன்னானே... அப்போது கூட இந்தக்கனா அரும்பவில்லை.

"நீ வரல்லேன்னா_ மூலைப்படியிலே என்னோட ஒடம்பு தான் கெடக்கும்" என்றாளே... அந்த மிரட்டலின் கணத்தில் தான் நெஞ்சுக்குள் அந்தக்கனா அரும்பியது.

கூலிக்காரியாயிருக்குற தான்_ புஞ்சைக்காரியாக மாறணும் என்கிற கனா மொட்டாகியது.

ஏனெனில்..நீ வரல்லேன்னா... செத்துருவேன்" என்ற சொற்களிலிருந்த காதல். மனப்பிடிவாதம். உயிரையும் மீறுகிற உறுதியின் அடர்த்தி.

அந்தக்காதல்தான் இந்தக்கனவை அரும்பச் செய்தது.

அவனது உயிர்க்காதலின் கொடியில் தான் இந்தக்கனவுப்பூ மொட்டாகியது.

"உசுரைவுட்டுருவேன்" என்ற அவனது சொல்லின் காதல் பெருக்குதான்.. அவன் தொட்டபோதெல்லாம் விட்டுத்தருகிற இளகியமனசாக இவளை ஆக்கியது. சிணுங்கிய போதெல்லாம் சுயமரியாதையில்லாமல் இணங்குகிற மோகத்தை_ அவனதுகாதல் தான் விளைவித்திருந்தது.

இவள் விட்டுக் கொடுத்த வேகத்தில்_இவள் இணங்கிச்சரிந்த துரிதத்தில் அவனும் இவளுள் உயிர்க்காதலைத் தரிசித்தான்.

தன்உடம்பைப் பெரிதாக நினைக்காத. சுயபாதுகாப்புகுறித்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாத உயிர்க்காதல் இவளுள் சுடர்வதை அவன் மனசால் கண்டான்.

"மோகக் கிறுக்குபிடித்த கழுதை" என்று நினைக்கவில்லை. "காமக்கோட்டி பிடித்த பொட்டைச்சி" என்று எண்ணவில்லை.

உயிரைப்பொருட்படுத்தாத தீவிரத்தில் தனது காதல் என்றால், மானாபிமானம் பொருட்படுத்தாத தீவிரத்தில் அவளது காதல் என்றே நினைத்தான்.

அந்தப்பரஸ்பரக்காதலை அவர்கள் உணரவில்லை. வார்த்தைகளில் உச்சரிக்கவில்லை. நினைவாகக்கூடி வடிவம் கொடுத்துக் கொள்ளத்தெரியவில்லை.

ஆனால்.. அந்தக்காதல்தான்அவர்களை இயக்கியது. நினைவாகக் கூட வடிவம் பெறாத அந்தக்காதல்தான் அந்த இருநெஞ்சுகளின்வேர்களாக நீண்டு பரவி ஆழம்நோக்கிப் பாய்கின்றன.

அந்த உரிமையில் புஞ்சைக்காரி என்கிறகனவு. அந்தப் புரிதலில் தான்.. அவள் சொன்னவுடன் அய்யாவுக்கு எதிராக ஊர் நிர்வாகஸ்தர்களைச் சந்திக்கிறான்.

மஞ்சள் வெயில் தங்கத்தைக் கரைத்து செடி இலைகளில் பூசுகிறது.வேப்ப இலைகள் எண்ணெய் பூசிக் கொண்டஇளந்திரேகம் போல மின்னுகிறது.

பொடி நடையாக நடக்கிற செம்பகம். வேகமாகவும் போக வேண்டும். வேகமாகப் போவதாகக் காட்டிக்கொள்ளவும் கூடாது.

"எங்கேடி.. இந்த வேகத்துலே? என்னத்துக்கு இப்படிப் பறப்பெடுத்துப்போறே?" என்று யாரும் கேட்டு விடவும் கூடாது. அவர்கள் மனசில் கூடத் தோன்றிவிடக்கூடாது.

பொடுபொடுவென்று நடக்கிற பொடி நடை. தெருப்புழுதி யெல்லாம் மஞ்சள் வெயிலின் பிஞ்சுவிரல் வருடல்கள்.

புஞ்சைப்பொழிகளின் அறுகம்புல்லில் கூடத் தங்கமினுமினுப்பு. மஞ்சள் தகதகப்பு.

வண்டிப்பாதையின் ஓரங்களிலெல்லாம் சீமக்கருவேல மரங்களின் அடர்த்தியான மறைப்பு. வண்டிப்பாதைப்புழுதி, குமித்து வைத்த கேப்பை மாவு போல "மெதுக், மெதுக்" கென்று மிருதுவாக இருக்கிறது.

நடக்க நடக்க சுகமாக இருக்கிறது. வெப்பம் தணிந்த வெதுவெதுப்பான இதமான புழுதி. நடக்கிற நடையில் பாதம் முழுக்க பவுடர் பூசிய மாதிரியான வெண்மைப்பரவல். விரலிடுக்குகளில் பிதுக்கிக் கொண்டு கொப்பளிக்கிற புழுதிச்சீறல்கள்.

இடிகிணற்றின் முதல்படியில் கால்வைத்தாள். மூலைப்படியில் உட்கார்ந்த நிலையில் சாய்ந்திருக்கிற முருகேசன். பாதி சாய்ந்த நிலையில் உட்கார்ந்து வலது காலை ஊன்றி, முழங்கால் மீது இடது காலை மடக்கிப் போட்டிருக்கிறான். கவலை படிந்தமுகம் சோப்புப்போட்டுக்கழுவிக்கழுவி.. பளபளக்கிற அந்த முகம், வியர்வைக்கசிவு போல வருத்தச்சாயல்களில் இருண்டு கிடக்கிறது.

"வந்துட்டீயா?" என்கிற ஆவல் பறப்பான துள்ளல் கேள்வி இன்றைக்கு இல்லை. இவள் பாதம் மூன்றாவது படியில் வைக்கிறபோது,நிமிர்ந்து பார்க்கிறான். உலர்ந்த உதடுகள், கண்ணிமைகளில் ஈரக்கனம், விசாரத்தில் நனைந்துகிடக்கிறது.

வெறும்பார்வை, ஏறிட்ட பார்வையில் துள்ளல் இல்லை. துடிப்பு இல்லை.ஆவலின் உயிர்ப்பு இல்லை. ஆசையின் தவிப்பு இல்லை. ஆர்வப் பரபரப்பு இல்லை.

வறண்ட பார்வை. வருத்தம் நிறைந்த கலங்கல் பார்வை. இவள் பக்கத்தில் போய் நின்றாள். வழக்கம்போலப் பரவசப் பெருக்குஇல்லை. கையைப்பற்றி வெடுக்கென மேலே இழுத்துப்போடுகிறவேக முறுக்கு இல்லை. விறுவிறுப்பான வீர்யத்துடிப்பு இல்லை.

ஏகப்பட்ட "இல்லை"கள்

இல்லைகளின் இடத்தில்இருக்கிற அவனது மனக்கனம். நினைவுப்பாரம்.

அவன் கையைப் பிடித்து இழுக்காமலேயே... அவன் மேல் விழாமல் பரிவும் குழைந்த மனசுமாகப் பக்கமாய் உட்கார்கிற செண்பகம்.

இவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தாழ்ந்த கண்கள். எதிர்ச்சுவரின் மஞ்சணத்தி இலைகளைப்பார்க்கிற கண்கள். அங்கேயே நிலைகுத்தி நிற்கிற கண்கள். இவளைப் பார்க்காத கண்கள். பார்க்கிற யத்தனிப்போ... சலனமோ.. இல்லாத கண்கள். ஆழ்ந்து விடுகிற பெருமூச்சில் கேட்கிற அவனது மனச்சுமை. சுமையின் கனம் தாளாத நினைவுகளின் முணங்கல்.

"அப்போதே... வந்துட்டீகளா ?"

"ம்" சோகச்சுமையான மனஇறுக்கத்தின் உறுமல்.

"என்னைக் காணோம்னு தேடலியா ?"

"தேடுனேன். வரல்லியான்னு ஏங்குனேன்"

"என்னத்துக்கு ?"

"கட்டிக்கிட்டு அழுகிறதுக்கு. சொல்லிக் கதறுறதுக்கு"

சொல்லும் போதே குமுறிப்பொங்கி குமைகிற அழுகை. உதடுகளின் விம்மல்களின் விம்மல்கள். புடைப்புகள். பொங்கி வெடித்து வெளிக்கிளம்புகிற அழுகை. கண்ணீர் வழிகிறது.

சுவரில் சாய்ந்து கிடக்கிற உடம்பு. சுவரில் படியாமல், குனிந்தழுகிற முகம். தலை.

ஒட்டி உரசி உட்கார்ந்த செண்பகம். கனிந்து அழுகிற முகத்தின் கண்ணீரின் வெப்பத்தகிப்பில் அவள் துடித்துப்போகிறாள். அப்படியே அந்த முகத்தை உள்ளங்கைகளால் ஏந்திப்பிடித்துக் கொள்கிற அவள். அது உள்ளங்கைகளல்ல, அவள் மனசு. நெஞ்சு. நெஞ்சால் அவன் முகம் ஏந்திக்கொண்டே விசும்பிவெடிக்கிற செண்பகம். அவளது நெஞ்சுக்குள் நினைவுநெரிசல். உணர்வின் முட்டல். கண்ணுக்குள் நீர் முள் உறுத்தல்கள்.முள்ளாக உறுத்தி வெப்ப நீராக வழிகிறது.

"ராசா...நீங்க அழலாமா? என்னத்துக்கு ராசா, நீங்க அழுகணும்? என்ன கொடுமைக்கு அழணும்? ஒரு மலை சரியலாமா? ஒரு மரம் சாயலாமா? ஒரு முழுத்த எளவட்டம் அழலாமா?"

கெஞ்சலும் கொஞ்சலுமாக, அழுகைப் பிசினுமாக நெக்குருகி... நெகிழ்கிற குரலின் தளுதளுப்பு. ஆன்ம ஒருமையில் உயிர்கலந்த மனசுகளின் தழுதழுப்பு.

" எளவட்டம்... "கல்யாணம் பண்ணி வை"ன்னு சண்டை போடலாம். பங்கைப்பிரிச்சுக்குடுன்னு கேக்கேனே.. நா ஒரு மனுசனா? இந்தப்பாவம், என்னைச்சும்மாவுடுமா?"

"இது எப்படிப் பாவமாகும்? குடிச்சுச்சீரழிக்குறதுக்கா, பங்கைப் கேக்கீக? கூத்தியாளுக்கு எழுதிக்குடுக்குறதுக்கா... புஞ்சையை கேக்கீக?"

"இல்லே செம்பகம்_ எங்க அய்யா_ நெசமாவே ராஜா மாதிரி. யாருக்கும் கட்டுப்படாத ராஜா. அவருக்கு மண்ணு அடங்கும். மழைகட்டுப்படும். வெயில் பணியும். புஞ்சை வெளையும். அவரோட உத்தரவுக்கு எல்லாமே கட்டுப்படும். அப்படிப்பட்ட ராஜா எங்க அய்யா. அவரு பெத்த புள்ளை நா. நா அவருக்கு அடங்கலியே_ அவரோட விருப்பத்துக்குப் பணியலியே. ஊருமுன்னாடி அந்தராஜாவை நிப்பாட்டி, தலைகுனிய வைக்கப்போறேனே_ ராஜாமாதிரியான ஒரு தகப்பனுக்கு ஒருபுள்ளை இப்படியா ஒரு கொடுமை செய்றது?"

குற்ற உணர்ச்சி தாளாத குமுறலில் குமைந்து குமைந்து அழுகிற முருகேசன். தங்குதடையற்றுப் பொங்கிப் பெருகி வழிகிற அழுகையும், சொற்களும்.

தலைமுடியை வலதுகையால் கோதுகிற செண்பகம். வலதுகையால் மொழியில்லாமல் ஸ்பரிசமாகிற மனமிருது.

"டி.ஏ.பி.மூடைபோட்டு முடிக்கிற உரத்துக்கு... ஆறுநா கெடைகாவல்லே மெனக்கிடுகிறாரு. ஓடைக்காட்லே தரிசுக்காட்லே ஆவாரங்கொழையும், ஆதாளையும் அறுத்துச் சீரழியுறாரு. குப்பைக்கு கரம்பை மண்ணு அடிச்சுக்குமிச்சு சங்கடப்படுறாரு.

"ஒரு மணி நேரத்துலே ஸ்பிரேயர் வைச்சு பூச்சி மருந்து அடிச்சு முடியுற விஷயத்துக்கு... "வேப்ப முத்தை ஆட்டி ஊறவைச்சு- ஆட்டி, அரைச்சு- அப்புறமும் ஊற வைச்சு- வடிகட்டி- கொஞ்ச வேலைகளா? ஒடம்பைப் புண்ணாக்குறாரு... வெவசாயத்துலே வந்துருக்குற புதுமுறையைச் செய்யமாட்டேங்குறாரு. ஆனா, அதுக்கு இம்புட்டுப் பெரிய தண்டனை நா தரலாமா? ஊரைக்கூட்டி, குத்தவாளியா அவரை நிறுத்தி, அசிங்கப்படுத்தலாமா? அவமானப்படுத்தலாமா?

"இத்தனைக்கும் கடன் வாங்குனாரா? கைமாத்து வாங்குனாரா? புஞ்சையை அடமானம் வைச்சாரா? இல்லியே-புதுசு புதுசா புஞ்சைகளை வாங்குனாரு. அருஞ்சுனை மாமாகிட்டே ஆயிரம் ஆயிரமா குடுத்து வைச்சாரு. ரொக்கப் புள்ளின்னு பேரு வாங்கிருக்காரு. வெவசாயத்துலே ஜெயிச்சிருக்குற எங்கஅய்யாவை ஊரைக்கூட்டி தலைகுனிய வைக்குறேனே.. இது பாவமில்லையா? எத்தனை ஜெம்மமெடுத்தாலும் கழுவித் தீர்க்க முடியாத பாவமில்லையா?"

ரெண்டு கைகளாலும் முகத்தில் அறைந்து கொள்கிற முருகேசன். வலதுகையால் தலையில் அடித்துக்கொள்கிற அவன். தன்னைத்தானே தண்டித்துக்கொள்வதற்கு வழிவகையறியாத குழப்பமனசின் வெறியாட்டம்.

அவனது சோக வெறியாட்டம். குற்ற உணர்ச்சியில் குமுறிக்குமைகிற மனக்கூத்தாட்டம்.

இது சொல்லித் தணிகிற வெறியல்ல. பேசிக் குழைய வைக்கமுடியாத மூர்க்கம். வார்த்தைகளின் வருடலில் வசங்காத உணர்வு உக்கிரம்.

"இம்புட்டு மனசுலே சொமையை வைச்சுக்கிட்டு, என்னத்துக்கு புஞ்சை? புஞ்சையும் வேண்டாம்.. ஒண்ணும் வேண்டாம். பேச்சை வுட்டுருங்க. வெவகாரத்தை நிப்பாட்டிருங்க... பங்கும் வேண்டாம், மண்ணும் வேண்டாம்னுவுட்டுருங்க... ராசா, முள்ளு மனசோட என்னத்தையும் ஆரம்பிக்கக்கூடாது ராசா-"

சாமி அருள் வந்தமாதிரி உணர்ச்சிமயமாக கத்தினாள்.

கோபமும் குமுறலுமாக... கொதித்துக்குமைகிற உணர்ச்சி கரமான சொற்களுடன் அவனை அப்படியே அள்ளி, தன் நெஞ்சுக்குள் போட்டுக்கொண்டாள். அவனது தோள்பட்டையில் அவளது கண்ணீர்க் கன்னத்தைப் பதித்தாள். தோள்பட்டையை வாயால் கவ்வினாள். தலைமுடியைக் கோதி விரல்களால் இறுக்கினாள்.

அவளும் பேய் பிடித்தவளைப் போல உக்கிரமடைந்தாள். மூர்க்கமாக அவனை அள்ளி, தன்னுள் புதைத்தாள். செவிமடலைக் கடித்தாள். கண்ணீர் வடித்த கண்களை எச்சிலாக்கினாள். புலம்பி, வெப்பம் துப்பிய அவனது உதடுகளைக் குளிர் உதடுகளால் கவ்வினாள். கன்னத்தைக்கடித்தாள்.

ஆர்ப்பரிக்கிற அவள், ஆவேசமடைகிற அவள், எல்லைதாண்டுகிற அவள், எல்லை தாண்டவைக்கிற அவள். சட்டை ஊக்குகளைக்கழற்றுகிறான். அவளை நிமிர்த்தி தான் நிமிர்ந்து தனது மடியில் அவளைச்சாய்த்து– அவள் மீது அவன் ஆக்ரமித்து பரவிப்படர்ந்து– உருட்டி, புரட்டி உணர்வு உக்கிரத்தின் வெறியாட்டம்.

அவளை அப்படியே சாய்த்து, காலடிச்சேலையை பாவாடையை உயர்த்த முயன்றபோது-

கோபமில்லாமல் தடுக்கிற அவள்.

"இன்னைக்கு வேண்டாம் ராசா–"

திகைத்துக் குழம்புகிற அவன்.

27

மூலைப்படி சிமிண்டுச்சதுரத்தில் மலர்ந்து ஒளிவீசுகிற பூவாக, செண்பகம். வெயில்படாத அவளது தேகமெல்லாம் அவனது கண்படுகிறது.

எதையும் மறைக்க முயலாத அவளது நேர்மை. பாவலா பகட்டு, ஏமாற்று இல்லாத வெள்ளைக்காதல். ஊடல் உப்பு கூட இல்லாத இனிப்புக்கட்டியான மனப்பிணைப்பு. அவள் பக்கத்தில் ஒருக்களித்துப் படுத்திருக்கிற முருகேசன். அவனுக்குப்பிடித்தமான மார்பக மச்சத்தில் படுகிற கண்பார்வை. நெற்றி முதல் முத்தமிட்டு முத்தமிட்டு... கவ்வி எச்சிலாக்கி.. கீழிறங்கி வருகிறஅவனது வேகம்.

வியர்வைக்கசிவான அவளது சருமத்தின் உப்புக்கரிப்பு. உப்புக்கரிப்பே உணர்ச்சி வெப்பத்தை உக்கிரப்படுத்துகிறது. வெறியூட்டுகிறது. மூர்க்கமாக்குகிறது.

அவனது வலதுகை, மடக்கி நிறுத்தப்பட்டிருந்த இடது காலின் பாதத்தைப் பற்றுகிறது. பற்றிய கை, வருடியவாறே மேலேற சேலையின் அடிநுனியும் பாவாடைநுனியும் சுருண்டு சுருண்டு உயர...

கனிந்து குழைந்த நிலையில் முழுசாகத் தன்னையே ஒப்படைத்திருந்த இடதுகை, அவனது மேலேறும் கையைத் தடுத்து நிறுத்துகிறது.

"இன்னைக்கு இது வேண்டாமே_" கெஞ்சிமருகுகிற அவளது குரல்.

"ஏன்_? இன்னைக்கு வேணாம்?"

"வேண்டாம் ராசா_"

"ஒனக்கு வேண்டாமா?"

"எனக்கும் வேணும் ராசா_ ஆனா, இன்னைக்கு நமக்குள்ளே வேண்டாம்"

திகைத்துக்குழம்புகிற முருகேசன். முன்னேறிச் சீறிய மூர்க்கத்தைக் கட்டுப்படுத்துகிற யத்தனிப்பின் திணறல். திமிறுகிற தன்னை அடக்க முனைகிற முயற்சியின் தடுமாற்றம்.

"பத்துநாளா நா ஒன்னைத்தொடலே"

"தொட்டாலும், நா விடலே"

"ஆமா_ ஏன் ? என்னத்துக்கு?"

"ராசாவுக்குக் கேவலம் வந்துரக்கூடாதேன்னுதான்"

"ஒண்ணும் புரியலே"

"என்னோட உசுரு, ஒடம்பு, மானம் எல்லாத்தையும் ராசாவோட காலடியிலே எப்பவோ ஒப்படைச்சுட்டேன். ராசா இஷ்டம் தான், எல்லாம். எனக்கு என்ன ஆனாலும் கவலையில்லே. என்னோட ராசாவுக்கு தலைக்குனிவு வந்துரக்கூடாதேன்னு தான். பயப்படுதேன்"

"எனக்கு என்ன தலைக்குனிவு?"

அப்படியே மலர்ந்த பூவாகத் திறந்த புத்தகமாகக் கிடக்கிற அவள்.அவற்றுள் பார்ப்பதுவும், சில்மிஷம் செய்வதும், அங்கே இங்கே தடவுவதும், கிள்ளுவதுமான அவனது சேட்டைகள். அவற்றை ரசித்துக்கொண்டும், ருசித்துக் கொண்டும் சிரித்த பூமலர்ந்த முகமாக அவள்.

"வவுத்துலே தங்கிட்டா_ ஒங்களுக்குத் தலைக்குனிவுதானே ?"

"ஆமா_"

"(மாதவிலக்காகி) தூரமாய் போய் ஏழு பொழுது கூட ஆகலே. இப்ப நாம ஏதாச்சும் பண்ணுனா_ வவுத்துலே தங்கினாலும் தங்கிடும். அப்படித்தங்கிட்டா.. வர்ற இழிவை என் ராசா தாங்குவாரா? தாங்கலாமா?"

அவன் அப்படியே நெக்குருகிப் போய்விட்டான். அவனுக்குள் ஏற்கனவே வேரடித்துவிட்ட அவளது ஆணிவேர் அவனது உயிருக்குள் புகுந்து ஊடுருவுகிறது. அப்படியே நெகிழ்ந்து போய்விட்டான். தன்னைத் துறந்த காதல். என்னை உயிரெனப் போற்றுகிற காதல்.

"அடக்கிறுக்கு கழுதை, எம்மேலே ஒனக்கு அம்புட்டு அக்கறையா?

வலதுகையை எடுத்துவிட்டான்.அவளது சட்டை ஊக்குகளை அவனே இழுத்து மாட்டுகிறான். தேன்நிறத்துச் சருமத்தை மறைக்கிற பச்சை ஜாக்கட்.

அவனது வலதுகை அவளது கன்னத்தில் செல்லமாய் தட்டுகிற தட்டில் தெரிகிற பாசம், அவள் மேல் சரிந்து அவளது உதடுகளைத் தன் உதடுகளால் பூப்போல வருடுகிற மென்மையில் காமமற்ற பேரன்பு.

ஒதுங்கிக்கிடந்த மாராப்புச் சேலையை எடுத்து ஒழுங்குபடுத்தி, அவள் உடம்பைப் போர்த்துகிறான்.

"என்னோட மானமரியாதை உசுரு, உடம்பைவிட என்னோட ராசாதான் எனக்கு முக்கியம்"

முகத்தில் சிதறிக்கிடந்த கூந்தல் ரோமக் கற்றைகளை விலக்கி, தலைமுடியுடன் சேர்க்கிற அவளது காதல். இடதுகையால் அவள் முதுகை வளைத்து அப்படியே தூக்கி.. தன் நெஞ்சோடு அவளது முதுகையும் பின்னந்தலையையும் போட்டுக்கொள்கிற பிரியம். மனப்பரிவு.

"பழகிக் கொஞ்சநாள்தான் ஆகுது நாம. தலைக்குனிவுக்கு நா ஆளாயிறக்கூடாதுன்னு நீ பதைக்குறே. பதறுதே. பெத்து வளர்த்து ஆளாக்கி சொத்தும் சம்பாதிச்சு வைச்சிருக்கிற பெத்தவரை..ஊரு முன்னாடி தலைகுனிஞ்சு நிக்க வைக்க நா ஆலாய்ப்பறந்து வாரேன். நா எம்புட்டுப் பெரிய ஈனப்பய ?"

அவனது நெஞ்சில் ராசாத்தி மாதிரி சாய்ந்து கிடந்த செண்பகம். வெட்கம் நிறைந்த கூச்சக்குரலில் அவன் சொல்லிலேயே கண்ணீர் வழிகிற மாதிரியிருந்தது. துணுக்குற்ற மாதிரியிருந்தது. அரிவாள் வெட்டு விழுந்த மாதிரி துள்ளித்துடித்து எழுந்தாள்.

"எது செய்ஞ்சாலும்.. மனசுக்கு சரின்னு பட்டதை துணிஞ்சு செய்யணும். சரியில்லேன்னு மனசுலே பட்டுச்சுன்னா, எம்புட்டுப் பெரிய விஷயமாயிருந்தாலும் நிறுத்திரணும். தப்பானதை செய்யவே கூடாது.."

"என்ன சொல்லுதே.. ?"

"மொதல்லே எந்திங்க..வீட்டுக்குப்போங்க..போறதுக்கு முன்னாடி நிர்வாகஸ்தர்களையெல்லாம் பாத்துட்டுப் போங்க. எங்க வீட்டுப் பஞ்சாயத்துக்கு எவரும் வரவேண்டாம்னு கட்டன் ரைட்டா சொல்லிட்டுப்போங்க..."

செண்பகம் விறுவிறுவென்று படியேறிக்கொண்டே, அவிழ்ந்த கொண்டையை அள்ளி முடிந்துகொள்கிற செண்பகம், அவள் சொற்களில் ஒரு வெளிச்சம் இருந்தது.

"எந்த மூஞ்சியோட வீட்லே போய்..அம்மா முன்னாடி நிக்குறது"என்றுரொம்ப நேரமாக நெஞ்சுக்குள் அறுத்துக் கொண்டிருந்த கேள்வியையும் தகர்த்தெறிந்திருந்தது.

இவனும் எழுந்தான். அவிழ்ந்து நழுவிய கைலியை இழுத்து எடுத்துக்கட்டிக்கொண்டான். அவனை தொற்றிக் கொண்ட பரபரப்பு. செயலில் விறுவிறுப்பு, புயல்வேக நடை

நேராக கார்மேகம் வீட்டில் வந்து நின்றான். நாட்டாண்மை, நிர்வாகஸ்தர்களுக்கான தலைவர்.

"என்ன மாப்புள்ளே-தீப்பிடிச்ச மாதிரி வாரே?"

"ஒண்ணுமில்லே மாமா- சும்மாதான்"

"லேட்டாயிருச்சான்னு யோசிக்கீயா? சாப்பாட்டு நேரத்துக்குப் பெறகு தான்- நாங்க ஒங்கவீட்டுக்கு வருவோம்"

"வரவேண்டாம்... மாமா" வெட்கிக் கூசுகிற தணிந்த குரல். நோய் கண்ட கோழியின் முணங்கல் மாதிரியான குரல். கார்மேகம் முகத்தில் ஒரு திடுக்கிடலான வெளிப்பாடு. மேல்துண்டையெடுத்து தின்னையில் போடுகிறார். அவர்முகத்தில் வியப்பான மலர்ச்சி. திகைப்பான வெளிச்சம். கண்ணில் ஓர் ஆறுதலான உணர்வின் பிரகாசம்.

"என்ன மாப்புள்ளே-? என்னன்னா சொல்லுதே?"

"இல்லே மாமா- வேண்டாம். மத்த ஆளுகளையும் நீங்களே வரவேண்டாம்னு சொல்லிருங்க. நா உங்ககிட்டே சொன்ன வழக்கை-மனசுலே வைச்சிக்கிடாதீக, மாமா- அயத்துருங்க"

அவரது உதடுகளில் ஒருசிறிய சிரிப்பு. பெருந்தன்மைச் சிரிப்பு.

அந்தமனுசரு வீட்டு முன்னாடி போய்.. "ஊர்ப்பஞ்சாயத்து வந்துருக்கோம்"னு எப்புடிச் சொல்லுறது என்று மருகி மருகி குழம்பிக்கிடந்த அவருக்கு- இது ஓர் ஆசுவாசமாக இருந்தது.

மனப்பாரம் இறக்கப்பட்ட மாமா. தெரிஞ்சும் தெரியாம... உங்களை மாதிரிப்பட்ட பெரியாளுக நேரத்தை நாசமாக்கிட்டேன். மன்னிச்சிருங்க- மாமா-"

"ஏய்- மாப்புள்ளே, என்ன இது இம்புட்டுப் பெரிய வார்த்தை? மன்னிக்கத்தோணலே மாப்புள்ளே.. இப்பவாச்சும் புத்தி வந்துச்சேன்னு வாழ்த்தத்தோணுது"

குற்றத்தையெல்லாம் கழுவிக்கரைத்த மன்த்தெளிவுடன் தெருவுக்கு வந்த முருகேசன் தெருவிளக்குகளின் குண்டுபல்ப் மஞ்சளாகச் சிரிக்கிறது. கனிந்த அந்தி வெயிலைப் போன்ற அந்த வெளிச்சம், முருகேசனுக்குள் பரவுகிறது.

குற்றமற்ற மனசின் கனமற்ற பஞ்சுமென்மை. பாரமற்ற மனசின் சுதந்திரச்சிறகுகள் ஆகாயத்தையே உரிமையாக்கி அகல விரிகின்றன. நெஞ்சு நிமிர்த்தி நடக்கிறான்.

பாவத்தில் விழாமல் தப்பித்துவிட்ட மனசின் ஆசுவாசம். உள்ளுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சிகளின் சிறகடிப்பு.

ஒரு டிராக்டர்... ட்ரெய்லரின் தட்தடப்புடன் இவனைக்கடந்து செல்கிறது. அதன் ட்ரெய்லரின் "தங்கு, புங்கு" என்று குதிப்புகள். அதில் முழங்கால் மடித்து உட்கார்ந்திருக்கிற தீக்கொளுத்தியின் முதுகில் அசைப்புப் பிரேயர்.

ட்ரெய்லர் புடைத்தெடுக்கிற மாதிரி தூக்கித்தூக்கிப் போட்டாலும்.. பற்றிய கைகளின் இறுக்கத்தில் உட்கார்ந்திருக்கிற தீக்கொளுத்தி.

இந்த டக்கரையும் ஸ்பிரேயரையும் பூச்சி கொல்லி மருந்தையும் அண்டவிடமறுக்கிற அய்யா. டி.ஏ.பி மூடைகளையும், யூரியா உப்பு மூடைகளையும் வேண்டாம் என்று விலக்கி வைக்கிற அய்யா.

வந்திருக்கிற புதுமைகளை- விஞ்ஞான வசதிகளை பயன்படுத்த மறுக்கிற பிடிவாதம்.

அய்யாவின் விவசாய முறையின்மீது இவனுக்கு இருக்கிற விமர்சனமும் கோபமும் அப்படியேயிருக்கின்றன.

வெற்றி பெறுகிறார். விளைய வைக்கிறார். புதிய புதிய புஞ்சைகளை விலைக்கு வாங்குகிறார்.

எப்படிக்குற்றம் சொல்ல? அய்யா செய்றது, தப்பாக இருக்கலாம். குற்றம் இல்லையே_

தப்புகளெல்லாம் குற்றமாகிவிடாதே_ தப்பு என்பது சறுக்கல். மன்னிப்புக்கும் சகிப்புக்கும் உரிய கூறுகள். தண்டனைக்குரிய குற்றமல்லவே. மன்னிப்புக்கும் பொறுமைக்கும் அப்பாற்பட்ட மாபெரும் கொடுமையில்லையே_

குற்றம் செய்தவருக்குத்தரவேண்டிய தண்டனையை.. தப்புசெய்து பிடிவாதம் பிடிக்கிற அய்யாவுக்குக் கொடுக்க இருந்தேனே_ நல்லவேளை_! பிழைத்தேன்.

சென்பகம்... கூறுகெட்ட சிறுக்கிதான். "வா"ன்னா... படுக்குறவாதான். ஆனாலும் ... ராசா காலத்து மந்திரி மாதிரி. மதி சொல்வதில்... வழி காட்டுவதில் ஒளிகாட்டி நெறிப்படுத்துவதில்... அந்தக் கிறுக்கச்சி_ மகாப்பெரிய சாமர்த்தியக்காரி.

குற்றப்பாவ வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்ட தன்னை, கரையில் இழுத்துப் போட்டுக் காப்பாற்றியவள், அவள்தான்.

வா...ன்னா, வந்தே மடியில் படுத்துவிடுவது கூட தப்பா? சிறுமையானதா? காமக்கோட்டி பிடித்துப் போயா... அப்படிச்செய்கிறாள்? தொட்டவுடன் "இடம்" தருவதுவும், சிணுங்கியவுடன் தடையேயில்லாமல் இணங்கிவிடுவதுவும் அவளது தாழ்வையா காட்டுது? உயர்வையல்லவோ காட்டுகிறது.

சுய அர்ப்பணிப்புக்காதல். கடவுள்மேல் ஆண்டாள் கொண்டிருந்த காதல். என்னோட உசுரு, ஒடம்பு,மானம் எல்லாத்தையும் ராசாவோட காலடியிலே எப்பவோ ஒப்படைச்சுட்டேன். ராசாவோட இஷ்டம் தான் எல்லாம்" என்றாளே பாதகத்தி! இப்படி ஒரு சுயஅர்ப்பணிப்புக் காதலைப் பெறுவதற்கு .. நான் செய்த புண்ணியம் தான், எனக்கு இந்தப்பெருமையா? பெருமிதத்துக்குரிய தோழியா? இப்படியொரு ஒளிமிக்க சேர்மானமா? கர்வத்துக்குரிய கௌரவமான காதலா? கடவுளுக்கு ஆண்டாள்காட்டிய காதலுக்கு இணையான செண்பகத்தின் காதல்.

"இது காதல் " என்று ரெண்டு பேரும் நினைக்கவில்லை. இது இன்ன விதக்காதல்" என்று ரெண்டு பேரும் கணிக்கவில்லை. கள்ளக்காதலர்க்குரிய சாகசமும், தந்திரமுமாக நடக்கிற சந்திப்புகள். அவசர அவசரமான சங்கமிப்புகள். சங்கமிப்புகளுமில்லாத சந்திப்புகளிலும்_ மனச்சங்கமிப்புகள். பரஸ்பரம் ஒருவரையொருவர் நெறிப்படுத்திக் கொள்கிற மனப்பேச்சுகள்.

தெற்குத்தெருவைக்கடந்து வந்தான். இவனுக்குப் பின்னால், கேட்கிற கிசுகிசுப்புகள். இவனைக்கடந்து போகிற எல்லாருமே இவனைப்பற்றி ஏதோ முணுமுணுக்கிறார்கள். பார்வையில் சுரீரிடுகிற வெறுப்பின் தீ நாக்குகள். ஏளனமும் ஆத்திரமுமான பார்வை.

"இவனெல்லாம்_ ஒருபுள்ளையா ? வந்து பெறந்த கொள்ளி"

"அப்பனை இழுத்து ஊர்ச்சபையிலே நிறுத்தி... கேவலப்படுத்த துணிஞ்சிட்ட பாவி"

"ஊரையே கூட்டி, வீட்டுக்குள்ளே வரச்சொல்லி.. வீட்டை ரெண்டாக்குகிற நாசகாலி"

இப்படித்தான் நீள்கின்றனவோ... அந்தத் தீ நாக்குகள். அந்த வெறுப்பின் சுளிப்புக்கு இதுதான் பொருளோ ?

குன்றிக்கூச வேண்டிய முருகேசன் இதையெல்லாம் நினைத்து உல்லாசமாகச் சிரித்துக் கொண்டான். "இப்போதைய முருகேசனின் உயரமும் குணமாற்றமும் இந்தப்பயல்களுக்கு என்ன தெரியப்போகுது ?"

செம்பகத்தால் சுகப்பட்ட நா... அவளாலே உருப்படவும் செய்ஞ்சிருக்கேன் என்பதை இந்த நாய்கள் என்ன அறியும் ?

வீட்டு முற்றத்துக்குள் வந்தான். சிவந்த மலையாகக் குவிந்திருந்த மிளகாய்வற்றல், சண்டுகள் பொறுக்கப்பட்டு, சுத்த சிவப்பு ரத்த மலையாக மின்னிய வற்றல், கடாபெட்டியில் காமாட்சி அள்ளி அள்ளிக்கோபுரம் குத்தியாக நிமிர்த்தி வைக்க.. ஒவ்வொரு பெட்டியாகத் தூக்கி வீட்டுக்குள் கொண்டுபோகிற பரமசிவம். முற்றமெல்லாம் வற்றலின் கமறல்நெடி. காற்று முழுக்க நிரம்பியிருந்த வற்றலின் காந்தலான நெடி.

தும்மித்தும்மி மூக்கெல்லாம் வலி. மூக்குச் சீறி, மூக்குச் சீறி விரல்களெல்லாம் வலி.

காந்தலையும் கமறலையும் பழகிப்போன வெயிலாக நினைத்துக்கொண்டு... வீட்டுக்குள் அம்பாரத்தில் குமிக்கிற கடாப்பெட்டிகள். தனக்கான சண்டு வத்தலை அள்ளிக் கொண்டு இப்போதுதான் போகிற மீனக்கா.

"கூடஇருந்து.. நானும் வத்தலை அள்ளி விடட்டுமா ?" கேட்டாள் மீனக்கா.

காமாட்சிதான் பெருந்தன்மையாக மறுத்துவிட்டாள்.

"நீ போ -மீனக்கா,வயசுக்கொமரியை வீட்லே வைச்சிருக்குறவ. வெருசா...வீடுபோ. எங்க பாடு எங்களோடு. கடல் மாதிரி. காலம் பூராவும் வத்தவே வத்தாது"

எல்லா வத்தலும் அம்பாரம் போய்ச் சேர்ந்துவிட்டது. பரமசிவத்தின் நாசித்துவாரங்களில் சளியின் ஒழுகல். கறுத்த திரேகத்தில் செழித்துக்கிடந்த ரோமங்களுக்கிடையே கோணல் மாணலான கோடுகளாக வியர்வை வாய்க்கால்கள். முத்துமுத்தாக நீர்த்துளியாக வியர்வைக் கண்கள். ரோம நுனிகளிலெல்லாம் வியர்வைச் சிறுமணிகள்.

வீட்டுத்தலைவாசலுக்குமேல் குண்டு பல்ப். அறுபது வாட்ஸ் பல்பின் வெள்ளை வெளிச்சம். பால்நிற குண்டு பல்ப். பால்நிறத்து வெளிச்சம்.

கரும்பழுப்பும், வெண் செவலையுமான சண்டு வத்தல்களை ஆறுசாக்குகளில் அள்ளி வைத்திருந்தனர். கூட்டிப்பிடிக்க கழுத்து இல்லாத அளவுக்கு, சாக்கு நிறைய சண்டு வத்தல். ஆறுசாக்குகளும் திண்ணையில் சாத்தி வைக்கப்பட்டிருந்தன.

வந்து நிற்கிற முருகேசன். வந்து குற்ற உணர்ச்சி நிறைந்த வெட்க உணர்ச்சியில் வெட்டுண்ட தலையாக தொங்க.. நின்ற இளையவன்.

அவனை வெறிக்கிற பரமசிவம். அவரது விரிந்த கண்களில் ரத்த ரேகைகள். கோபமும் ஆங்காரமுமாக முகத்தில் ஏற்படுத்துகிற விறைப்புகள்.

தாங்கமுடியாத ஆத்திரத்தில் கடைவாய்ப் பற்களைக் கடிக்கிறார். நெறுநெறுக்கிற பற்களின் உறுமலில், மனசின் ரௌத்ரம் வெளிப்படுகிறது. கன்ன எலும்புகளின் புடைப்புகள். காதோரத்து நரம்புகளின் புடைப்புகள்.

மகனை எரித்து விடுவதைப்போல நின்று நிலைத்த பார்வை. குத்தீட்டியாகப் பாய்ந்து, வகிர்ந்து பிளக்கிற பார்வை. இன்னும் முருகேசன் பஸ்பமாகாமலிருப்பது, ஆச்சரியம்தான். ஆனால் அவரது குத்தீட்டியின் பாய்ச்சலை ஏறிட்டு எதிர் கொண்ட கணத்தில் அவன்

உள்ளுக்குள் கருகிச் சாம்பலாகி விட்டான். உயிரின் கருகல் நெடி. ஆன்மாவின் சாம்பல்தூசித் தெறிப்பு.

விருட்டென்று விலகிய ரௌத்ர அம்பு காமாட்சியின் வியர்வைத் திரேகத்தில் விழுந்து, முகத்தைப் பார்த்தது.

மகனைப் பார்த்து, உடைகிற தாய், கலங்கி நெக்குருகுகிற அம்மா. குலைகொதித்து கொந்தளிக்கிற காமாட்சி. தணலும் புனலுமான அழுகைக் கொதிப்பு.

"அடப்பாவிப்பயலே_ ஏண்டா இம்புட்டுக் கேவலப்படுத்துதே, ? ஒனக்கு இந்த மகராசா, என்ன தப்பு செய்ஞ்சாரு ? ஒஞ்சம்பாத்தியத்தை குடிச்சிச் சீரழிச்சாரா ? சூதாடித் தொலைச்சாரா ? கூத்தியாளுகளைத் தேடிக்கிட்டு கூண்டு வண்டி கட்டிக்கிட்டு ஊர்ஊராத் திரிஞ்சாரா ?"

"ஒழைச்சாரு, ஒடம்பைக் கடம்பா கடைஞ்செடுத்தாரு. ஓயாம, ஒறங்காம ஓடிஓடி ஒழைச்சாரு. சலிப்பில்லாம களைப்பில்லாம ஒழச்சாரு. ஒழைச்சுக்கிட்டிக்காரு. ஒண்ணு ஒண்ணா சம்பாத்தியம் பண்ணுறாரு ஆம்பளை வேலை பொம்பளை வேலைன்னு வித்தியாசம் பார்க்காம ஒசத்தி தாழ்த்தி பாக்காம_ எல்லாமே நம்ம வீட்டு வேலை தானேன்னு வேத்துமை பாக்காம ஒழைச்சாரு.

"என்னத்துக்குடா ? இம்புட்டுப் பாடுகள் எதுக்கு ? ராவும் பகலுமா வேர்வை சிந்துறாரே_ யாருக்கு ? ஒங்களுக்காகத்தாண்டா ? நாங்க செத்து மயானம் போறப்ப_ மடியிலே கட்டிக்கிட்டா _ கொண்டு போகப்போறோம் ? அண்ணாக்கயிறைக்கூட அத்துப்போட்டுட்டு, வெத்து உடம்பைத்தானே பொதைப்பாக ?சொத்து சொகம்,வீடு, காடு, மாடு, ஆடு எல்லாமே ஒங்களுக்குத் தானே ?

"புள்ளைகளுக்காக ஓடி ஓடி ஒழைச்சுச் சுண்ணாம்பா ஆன மனுசருக்கு_ புள்ளைக_கிரீடம் வைக்க வேண்டாம். தோள்லே தூக்கி வைச்சு கொண்டாட வேண்டாம். சிம்மாசனம் போட்டு அமர வைக்க வேண்டாம். உசுரோட கொள்ளி வைக்காம, இருக்கலாம்லே ? ஏண்டா, எளையவனே..இப்புடிப்பண்ணிட்டே ? இவரு நெஞ்சுகொதிச்சு...

குலை கொதிச்சு சபிக்கிறாருடா. சபிச்சா.. பலிக்கும்டா... சத்தியவந்தன்டா_ அவரு"

தலைவிரிகோலமாக கண்ணகியாகச் சீறுகிற அம்மா. கோபமும் குமுறலுமாகக் கொதிப்பும் அழுகையுமாக கண்ணீர்க் கதறலாக தளதளக்கிற அம்மா. கொதி பானைச்சோறாக கொந்தளிக்கிற காமாட்சி.

அம்மாவை நிமிர்ந்து பார்க்க இயலாமல், அரையாகிப்போன மேல் பார்வையில் பார்க்கிற முருகேசன்.

அடி உதட்டை ஆத்திரமாகக் கடித்துக்கொண்டு அம்மாவை அடிக்கப்பாய்கிற அய்யா. வலதுகையை ஓங்கிக் கொண்டு, மடித்த நாக்கைக்கடித்துக் கொண்டு சீறுகிற அய்யா.

பரமசிவ ருத்ரதாண்டவம். உக்கிர நிலை.

"ஏய்ய்க்" என்ற ஆங்காரமான அதட்டல்.

"வெளங்காம, நாசமாய்ப்போகப்போற அந்தப்பயலோட என்னபேச்சு ? உருப்படாத நாய்கிட்டே என்னத்தை ஞாயத்தைக் கேக்கே ? நா... சொன்னதை மட்டும், நாய்கணக்கா அந்த நாய் கிட்டே சொல்லு. ஊர்க்கமிட்டியாளுக வந்து நின்னா, மானம் கெட்டுப்போகும். அதுக்கு முன்னாடி... நா...ஞ் சொன்னதை - அந்த நாசமாய் போற நாறப்பயகிட்டே சொல்லிரு"

கடாபெட்டியை கோபத்தில் வீசியெறிந்துவிட்டு, நெருப்புத் தழலாக வீட்டுக்குள் போகிற அய்யா.

28

அய்யா இல்லாதமுற்றம். பால்நிற வெளிச்சத்தில் பொங்கிவருகிற அழுகையை அடக்கமுனைகிறவளாக அம்மா. அடங்காத மனச்சோகத்தின் திமிறலில் அழுதுகுலுங்குகிறாள்.

அழுகையோடு அழுகையாக வேலையை நிறுத்தாத பாட்டாளி. சிவப்பு ரத்தமலையாகக் குவிந்திருந்த வத்தலை சண்டுகள் நீக்கி, சுத்தப்படுத்தி உள்ளே சேர்த்தாகிவிட்டது.

முற்றம் முழுக்க சிதறிக்கிடக்கிற மிளகாய்விதைகள். பொடிப்பொடி விதைகள். விதைகளை இழந்த வத்தல் உடைசல்கள். வெறும் தொலிகள். சிவப்புத்தொலிகள். விதைகளுடன் கிடக்கிற காய்ந்து உதிர்ந்த காம்புகள்.

"ஏண்டா.. இளையவனே, ஒனக்கு மட்டும் புத்தி இப்புடிப் போச்சு? கல்யாணத்துக்கு முன்னாடியே பங்கு பிரின்னு ஊரைக்கூட்டி கேவலப்படுத்துற துணிச்சல் எங்குட்டு கூடிவந்துச்சு.?"

கொதிப்பும் இரைஞ்சலும் கலந்த ஒரு குரலில் வெளிப்படுகிற கண்ணீர்ச் சொற்கள். விளக்குமாறால் முற்றத்தைப் பெருக்குகிறாள். வத்தல் தூசி கிளம்புகிறது. கமறல்நெடி காந்தலாகப் பரவுகிறது.

முருசேகன் நாசிக்குள்ளும் கமறல்நெடி நடுநெஞ்சு வரைக்கும் ஜிவ்வென்று பரவுகிறது. மாறி மாறித்தும்முகிறான். தொண்டையைச் செருமி தும்மலை அடக்கப்பார்க்கிறான். அம்மா குனிந்து குனிந்து விளக்குமாறால் கூட்டுகிறாள். கிளம்புகிற புழுதிப்புகையாக வத்தல் காந்தல்.

அடக்கமுடியாமல் தும்மிக்கொண்டே பக்கத்திற்கு நெருங்கிவருகிற முருகேசன். நச், நச், நச் சென்கிற தும்மல்.

"நீ இருந்து வத்தலைஅள்ளி அம்பாரத்துலே சேக்கணும். எளவட்டப்பய வெரல் நகத்துலே அழுக்குப்படாம, அலையுதே. கெழட்டுக்கழுதைக நாங்க கெடந்து பாடுபட்டுச் சீரழியுதோம்."

"சண்டு பெறக்குன வத்தலை அள்ளிப்போடுடான்னா மாட்டேன்னு சொல்லிருவேனா?"

"அதுக்கு ஒருமிஷினு கண்டுபுடிச்சிருக்குன்னு நீ சொன்னாலும் சொல்லுவப்பா."

போலிப் பணிவாகவும் விட்டாற்றியாகவும் சொல்லுகிற காமாட்சி. முற்றம் முழுக்க பரசிப் பெருக்கிக் கூட்டுகிற விளக்குமாறு ஒற்றை இணுக்குவிதைகூடத் தப்பிவிடாமல் சுத்தமாகக் கூட்டுகிறாள். கூட்டிப்பெருக்கிக் குமித்த விதைக்கழிவுகளை, ஒரு சுளகு நிறைய அள்ளி... ஒரு சாக்குக்குள் தட்டுகிறாள்.வெளிப்பானையிலிருந்து சருவச்சட்டியில் தண்ணீரைச் சாய்த்து... வற்றல் கிடந்த இடத்தில் தெளிக்கிற காமாட்சி. உழவுக்குப்பின்னால் கம்பு விதைக்கிற அதே நேர்த்தியுடன் நுட்பத்துடன்-தண்ணீர்தெளிக்கிறாள். "சளப் சளப்"பென்று ஒரே சீராக போய்விழுகிற தண்ணீர். கோடுபோட்டு கோலம் போட்ட மாதிரி. ஒரே கச்சிதமாக விழுகிற நீர்த்தடம்.

தண்ணீர்த்தடம்பட்ட இடமெல்லாம் காந்தல் நெடியும் கமறலும் தணிகிறது. ஆயினும், தொண்டைக்குள் கமறலின் நமைச்சல். காறித் துப்பியதில், தொண்டையே புண்ணாகிவிட்டது.

"ஏம்மா.. நீயும் அய்யாமாதிரி நக்கலும் நையாண்டியும் பண்ணுதே?"

"ஏன்னா... நீ செய்ற செய்கையும் பேசுகிற பேச்சும் அந்த லட்சணத்திலே இருக்குது"

"வந்துருக்குற புதுமுறையைப் பயன்படுத்தி.. உழைப்பைக் குறைச்சு,வெளைச்சலைப் பெருக்குறது தப்பா? ஊர்லே உள்ள எல்லாரும் இதைத்தானே செய்றாக?"

"எதுக்கு செம்மறியாடுமாதிரி ஊர் ஒலகத்துக்குப் பின்னாலே கண்ணை மூடிக்கிட்டுப் போறே? நீ...உங்க அய்யாவைப் பாரு.. டா. அய்யா செய்றதை பாத்து.. நீயும் செய்ய வேண்டிதுதானே?"

"அருதப்பழசான பாணியா இருக்கே.."

"நட்டமா இருக்கா?"

"இல்லே"

"அப்ப... பழசாயிருந்தாலும் சரிதான். ஞாயம் தான். பழசுங்குறதுக்காக அம்மாவை ஓரங்கட்டிரலாமா?"

அயற்சீ வசப்படுகிற முருசேகன். அம்மாகூட வாதாடுவதற்கு அவனுக்கு வழியில்லை. அம்மாவின் கேள்வி, அவன் முன்னால் மறித்துக்கொண்டு பிரமாண்டமாக நிற்கிறது. அதை வளைக்க முடியவில்லை. ஒடித்துப் போட முடியவில்லை. அதைத்தாண்ட முடியவில்லை. அவனிடம் வார்த்தைகளில்லை. வாதத்தை எடுத்து முன்வைக்க அவனுள் கருத்து இல்லை. முடக்கப்பட்டவனாக அவன்.

"ஊரைத் தெரட்டிட்டீயா? உங்க அய்யாவை குத்தவாளியா நிறுத்தி வைச்சு.. விசாரிக்குறதுக்கு ஊராள்க எப்ப வாராக?"

கொதிக்கிற நெஞ்சுடன் இறுகலான சொற்களின் தெறிப்பு. கங்குத்தெறிப்புகளாகச் சீறிவந்து சுடுகிற சொற்கள்.

முருசேகன் தலைகுனிகிறான். அடிஉதட்டு விளிம்பை மேற்பல்லால் கவ்விக்கொண்டு முகம் கவிழ்கிறான். குற்ற உணர்ச்சியின் பாரம் தாளாத மனத்திணறல்.

"வரமாட்டாக.." தொண்டைக்குள் மூழ்கி நைந்த குரல். பயந்த குரலில் குற்றவுணர்ச்சியின் வதை.

"சோத்து நேரத்துக்குப் பெறவு வரப்போறதாக.. சொன்னார்களே..?"

"யாரு சொன்னது?"

"யாரு சொன்னதா? அடப்பாவிப்பயலே.. ஊரே சொன்னது. ஒவ்வொருத்தரா வந்து துட்டி கேட்குற (துக்கம் விசாரிக்கிற) மாதிரி

வந்து.. வந்து.. கேட்டுட்டுப் போறாக.... வருத்தத்தோட சிலபேரு.... கும்மாளக் குதூகலத்தோட பலபேரு. புத்துமண் வளர்ந்து வர்ற மாதிரி குடும்பம்... இடிஞ்சு தகரப்போற சந்தோஷம்,அவுகளுக்கு என்னசெய்ய? எங்க வவுத்துலே புள்ளைக்குப்பதிலா, கொள்ளி பொறந்துருந்தா_ ஊருக்கு ஒரே கொண்டாட்டம் தான்"

அமைதியான குரலில் சூள்கொட்டலுடன் பேசுகிற காமாட்சி. குரலின் அமைதியிலும் துயரப்பாரம். துன்பச் சுடுநீரில் நனைந்த சொற்கள். மனக்கொதிப்பின் ஆவி பறக்கிற வார்த்தைகள்.

கோபப்பட்டு சீறுகிறதை விடவும் நெஞ்சைப் போட்டு "கரங் கரங்" கென்று அறுக்கிற கொடூர அமைதிச்சொற்கள். சுய வருத்தமாக சூள் கொட்டுகிற மனசின் வலியில் இவனுக்குள் ரண அதிர்வைப் பரவச்செய்கிற ஆற்றல்.

"வரமாட்டாகன்னு சொல்லுதேன்லே? அதைப்பத்தி, என்ன ஏதுன்னு கேக்கீயா?"

"வரட்டா என்ன, வந்துநின்னா... என்ன? சிந்துன பாலை அள்ள முடியுமா?போன மானத்தை மீட்கமுடியுமா? ஊரெல்லாம் பேச்சாகிப்போச்சே.. ஊரெல்லாம் தெரிஞ்சுப்போச்சே.. கொட்டடிச்சு கூவிச் சொன்ன மாதிரி .. ஊரெல்லாம் அறிஞ்சு_ ஒவ்வொருத்தரா வந்து துட்டி கேட்டுட்டாகள்லே? இனி.. வராட்டா, என்ன மிஞ்சப் போகுது ? வந்துட்டா.. புதுசா என்ன போகப்போகுது?"

நொந்தகுரலின் நைந்த பிசிறல். விரக்தியின் மடியில் விழுந்த உணர்வின் குரல். சலிப்பின் உச்சத்தில் முட்டிக்குனிகிற மனக்கந்தல்.

வீட்டுக்குள்ளிருந்து கூப்பாடாக வருகிற அய்யாவின் கத்தலில், குறையாத கோபச்சூடு. மனாக்னி.

"ஏய்ய்க்...! என்ன அங்க கொஞ்சிக்கிட்டிருக்கே? வெளங்காமப்போறதுக்குன்னே... எடுக்காத எடுப்பெடுத்து, ஊர் சுத்தி_ வீடு வீடாப்போய் நின்னு_ அப்பன் ராட்சஸன். அவங்கிட்டே யிருந்து எஞ்சொத்தை வாங்கித் தாங்க"ன்னு பிச்சை ஏந்துன பயல்கிட்டே_ என்ன வளாவளாப்பேச்சு? நாஞ்சொன்னதை மட்டும் சொல்லிட்டு, வந்து சோத்தை வை"

"அய்யா_ என்னம்மா சொன்னாரு?"

"அருஞ்சொனை வந்துருந்தான். ஆகாயத்துக்கும் பூமிக்குமாக "தங்கு, புங்கு"ன்னு குதிச்சு_ ஊரோட மோதி_ கிழி கிழின்னு கிழிச்சு கேப்பையை நட்டி.. ஊர்க்காரவுகளோட பகையை வளர்க்க நெனைச்சிருந்த உங்க அய்யா கொதிப்பை... அந்தத் தம்பிதான், குளுந்த வார்த்தை சொல்லி தணிச்சு வைச்சான். கூறுகெட்டுப்போய் கொந்தளிச்ச அய்யாவைக் கட்டுப்படுத்தி வைச்சான். ஊர்க்காரவுக முன்னாடி... தலைகுனிஞ்சு நிக்காம... "நீங்களே பெருந்தன்மையா நடந்துக்கோங்க"ன்னு புத்திமதி சொல்லி .. நல்லபடியா வழிகாட்டியிருக்கான். அருஞ்சொனைதான் இன்னிக்கு தெய்வம்போல வந்து நின்னு... உங்க அய்யாமானம் காப்பாத்தியிருக்கான்.. அவன் சொன்னபடியே அய்யாவும் முடிவு செய்ஞ்சுட்டாரு_"

"அதான்ம்மா_ என்ன முடிவு ?"

"பெத்த கடனுக்கு சோத்தைப்போட்டுறவேண்டியதுநீ வீட்லே இருக்க வேண்டியது. பாலையா நாயக்கரு தோட்டத்தை ஒம் பொறுப்புலே வுட்டுர்றது. லாப நட்டம் ஒம்பாடு. பெறந்த கடனுக்கு ஒனக்கு ஒரு கட்டுப்பாடு"

"என்னது ?"

"என்ன காரணமானாலும்_ எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும்.. புஞ்சையை வுத்துரக்கூடாதுன்னு ஒனக்கு ஒரே ஒரு கண்டிஷன்."

"அந்தப்புஞ்சையை என்னோட இஷ்டப்படி வெவசாயம் பண்ணிக்கலாமா ?"

"பண்ணிக்கலாம். மண்ணைப் பொன்னாமாத்துறதும் பொணமாக்குறதும் ஒம்பாடு. ஒன்னோட இஷ்டப்படி கூத்தடி. என்ன வேணும்னாலும் செய்ஞ்சுக்கோ. வரவு செலவு எல்லாம் ஒம்பாடு. வீட்லே துட்டுதுக்கானி கேக்கக்கூடாது_"

முருகேசன் பார்வை வீட்டுக்குள் போனது. அய்யா ஒரு நீதிமான். ஊரிடம் சொல்லி நிர்வாகஸ்தர்கள் மூலம் பஞ்சாயத்து பண்ணி.. முருகேசன் எதைப் பெற விரும்பினானோ.. அதை.. அப்படியே.. அவர் இஷ்டப்பட்டு அவராகவே தந்துவிட்டார்.

இப்பேர்ப்பட்ட நீதிமானையா... ஊரார் முன்னால் குற்றவாளியாக நிறுத்த இருந்தேன்_?"

தான் செய்ய இருந்த பாவத்தின் பரிமாணம் இப்போது இவனுக்குக் கூடுதலாகவே தெரிகிறது.

பெற்ற தகப்பனையே ஊர் முன்னால் இழிவுபடுத்திய மகாபெரிய பாதகத்தைச்செய்த பழிவந்து சேர்ந்திருக்கும். நல்ல வேளை_ சென்பகம் புண்ணியத்தில் தப்பிவிட்டேன்.

"வராட்டா_ என்ன மிஞ்சப் போகுது.? வந்து நின்னா_ புதுசா என்ன போகப் போகுது?" அம்மாவின் விரக்தியான குரல். சலிப்பின் உச்சத்தில் முட்டிநின்ற மனவேதனை.

அப்போது.. அம்மா உள்ளே போவதற்காக எட்டெடுத்து வைத்தவள், வாசல் படியில் காலெடுத்து வைத்த நிலையில் திரும்பிப்பார்த்தாள். உங்க அய்யா... ரொம்ப மனசொடிஞ்சு போய்ட்டாரு. உசுரே அந்துபோன மாதிரி நொந்து போயிருக்காரு. ஒன்னாலே, ஒரே நாள்லே இருபது வயசு கெழடான மாதிரியாயிட்டாரு. நீயா எதுவும் அய்யாகிட்டே பேசக்கூடாது. ஒரு வார்த்தை கூடப்பேசக்கூடாது, அய்யான்னு கூப்புடக்கூடாது. அவருகிட்டே தலைநிமிர்ந்து நின்னு.. உதடு அலுங்க பேசக்கூடாது இப்பச் சொல்லிட்டேன்_"

உறுதிமிக்க குரலில் ரௌத்ரமும் எச்சரிக்கையுமான உத்தரவாகவே கூறுகிற அம்மா. வலதுகை சுட்டு விரலை உயர்த்தி அவள் எச்சரித்த விதம்_ எதிரியை மிரட்டுதைப் போலிருக்கிறது.

"ஒங்காரியத்துக்கு உங்க அய்யா குடுத்துருக்குற ஒரே தண்டனை, இதுதான். "அய்யா" ன்னு நீ கூப்புடக்கூடாது".

அம்மா உள்ளே போய்விட்டாள். குத்துப்பட்டவனாக வீழ்ந்துகிடக்கிற முருகேசன். நடுவீதியில், பட்டப்பகலில், கட்டிப்போட்டு செருப்பால் அடித்தமாதிரி இருக்கிறது. முருகேசனுக்கு அவமானத்தில் மனசின் ஆணிவேரே அறுந்துபோயிருந்தது.

ஒரே தண்டனையா, இது? சிறிய தண்டனையா?

கொடிய தண்டனையல்லவா?

பெற்ற தகப்பன் வழங்குகிற தண்டனையின் உச்சமல்லவா இது? " நீ என்மகனே அல்ல" என்ற தண்டனையல்லவா? "நான் உன் அப்பன் என்ற ரத்த உறவை நான் அறுத்துக்கொண்டேன்" என்று அய்யா பிரகடனப்படுத்துகிற தண்டனையல்லவா?

மகன் என்ற பாச உறவை அடகுவைத்து வாங்குகிற புஞ்சை, ஒருநிலமா? ஒருசொத்தா? ஒருவிவசாய முறைக்கான களமா?

"தான் ஒரு குற்றவாளியாகிவிட்டோமே"என்ற உணர்வு நிரந்தரமான பழிபாவத்துக்கு ஆளாகிவிட்டோமே என்ற அச்சம்.

இதுவரை யாரும் செய்யாத மகாப்பெரிய பாதகத்தை - பழியை-குற்றத்தைச் செய்ஞ்சிட்டோமோ" என்ற பயப்பதற்றம். வரம்பு மீறிய அத்துமீறலான குற்றம்இழைத்துவிட்டோமோ" என்ற நடுக்கம்.

அய்யாவை "அய்யா" என்றழைக்கும் உரிமையை இழந்துவிட்டோமே என்று நினைக்க நினைக்க நெஞ்சுக்குள் உயிர் அறுபடுகிற வேதனை.

நடுமுற்றத்தில் நிறுத்தப்பட்ட குற்றவாளியாகத் தான் நிற்பதாக ஓர்உணர்வு. பால் நிறத்து குண்டு பல்பின் வெளிச்சத்தில் அகன்ற முற்றத்தில் ஒற்றையாக நிற்கிற அவன். சுற்றிலும் பரவியுள்ள வெளியின் வெறுமையில் தன்னை உறுத்துகிற தனிமை உணர்ச்சி. அடிவயிற்றில் கவ்விப் பிடிக்கிற சூன்ய உணர்வு.

ஒற்றையாக, தான் மட்டும் தனித்து விடப்பட்டதோர், வெறுமை உணர்ச்சி. தன்னைச்சுற்றிலும் மனித உணர்வேயில்லாமல்போன மாதிரியோர் பயங்கரப்பிரமை. இந்தக்கணத்தில் குடும்பத்தில் மட்டுமல்ல. உற்ற உறவினர் மத்தியில் மட்டுமல்ல. மொத்த ஊரிலேயே பரிவுடன் தன்னைப்பார்க்க ஆளே இல்லாமற் போய்விட்ட மாதிரியோர் பிரமை.

பரிவுப் பாலையில்.. அன்பற்ற பாலையில்.. தான் மட்டுமே தனித்துநிற்கிற பயங்கரம். தன்னைச்சுற்றிலும் ஏளன வெயில் பரவலும்,வெறுப்பு மணல் பரப்புமே படர்ந்து விரிந்திருப்பதாக ஒரு கொடிய தனிமை உணர்ச்சி. உள்மனசின் ஆணிவேர்வரை பரவுகிற கலக்கம். கண்ணோரங்களில் மனவெப்பத்துளிகள்.

"ஏலேய்... எளையவனே... வா. வந்து சாப்புடு"

அம்மாவின் அழைப்புக்குரல். சுதந்திரமற்ற கம்மியகுரல். அய்யாவுக்கு அஞ்சுகிற அடங்கியகுரல்.

உள்ளே போவதற்கு முன்பாக...வெளிப்பானைக்குப்போகிறான். மண்பானை மொடாக்களி குளிர்ச்சியான தண்ணீர். சிமெண்டுத் தொட்டியில் நிறைந்து ததும்புகிற தண்ணீர். அள்ளி உடம்பை அலசுகிறான். முகத்தை கழுத்தடியை-நெஞ்சை-முதுகை-கால் கைளை நீரூற்றி அலசுகிறான். சுவரின் மாடக்குழியில் இவனது சோப்புடப்பா.

முகம், கழுத்தடி, பிடரியெல்லாம் சோப்பு நுரையை யெல்லாம் நீரூற்றி கழுவிவிட்டு, துண்டால் அழுந்தத் துடைத்து, காதுக்குள்ளும் விரல் சுற்றிய துண்டால் குடைந்துகொண்டு...

வீட்டுக்குள் நுழைகிற முருகேசன்.அய்யா...குத்துக்கால் வைத்து உட்கார்ந்து குனிந்து வெங்கல வட்டிலில் இருக்கிற கம்மஞ்சோற்றைச் சுட்டு விரலால் வெட்டி யெடுக்கிறார்.கருவாட்டுக் குழம்பில் தொட்டு முக்குகிறார். வாய்க்குள் போடுகிறார்.

ஈரக்காலில் ஒட்டியிருக்கிற பாதமண்ணை வாசலில் தட்டி உதறுகிறான். அய்யா ஏறிட்டுப் பார்க்கவில்லை. வெறுப்பாகவோ.. வெறித்தோ...பார்க்கவில்லை. எறும்பு, ஈ வந்தால் பார்க்கவா செய்வார்கள் ?

அய்யா முகத்தில் வெறுப்போ-கோபமோ-கனிவோ இல்லாத வெறுமை உணர்வுதான், இவனது உயிரின் ஆணிவேர் வரை கருக்கியது. தன்னை -மகனாக-மனிதனாக-அந்நியனாக-ஒருபொருளாக-ஒருநாயாக-ஒருபூனையாகக்கூடப் பொருட்படுத்தாத அந்த உணர்ச்சியற்ற- சலனமற்ற -வெறுமைதான், இவனது அற்பத்தை இவனுக்கே உணர்த்துகிறது. உயிரை அறுக்கிறது.

"நீ ஒன்றுமே யில்லையடா"என்று உணர்வால் உலர்ந்த முகத்தால் இவனை ஏற்றித்தள்ளுகிற அந்தப்பாராமுகம், இவனுள் இவனை வதைக்கிறது.

முருகேசன் சட்டையை எடுத்து மாட்டுகிறான். தலைமுடியை சீப்பால் ஒழுங்குபடுத்துகிறான். சுவரிலுள்ள கையகலக் கண்ணாடியில் முகம் பார்க்கிறான். இலேசாக பவுடர் பூசுகிறான்.

இதையெல்லாம் வெறுப்பாகப் பார்ப்பார், அய்யா.

"சம்சாரி மகன் சம்சாரி..மூஞ்சியிலே பவுடர் பூசுவானா? நாத்தமெடுத்த இந்த மாவாலே என்ன கெடைக்கப்போகுது? ஓடிஓடி உழைக்குறதுலே குறியாயிருக்குறவனுக்கு, வீட்லே எந்தவேலை மிச்சமிருக்குன்னு தேடிப் பாக்குறவனுக்கு, பவுடரு பூச நேரமிருக்கா? மனசிருக்குமா?"

என்றெல்லாம் சொல்ல மாட்டார். ஆனால் நினைப்பார். அந்த நினைப்புகள் கண்ணிலும் முகத்திலும் தெரியும். வெறுப்பும் ஏளனமும் சுளிக்கிற ஓரப்பார்வை பார்ப்பார்.

அந்த வெறுப்பும் ஏளனமும் நினைவுகளாக அந்த நினைவுகளைச் சுமந்த அந்தப்பார்வையில்_ ஒரு கடுப்பும் கோபமும் இருந்தது. அத்துடன் ஒருபந்தம் இருந்தது. ஒருதொடர்பு இருந்தது.ஓர் உறவு இருந்தது. மகன் என்ற நினைப்பு இருந்தது. மகன் சீரற்ற திசையில் பயணப்படுகிறானே"என்ற விமர்சனமும் சீற்றமும் இருந்தது.

இன்றைக்கு_ அந்தப் பார்வையாவது பார்க்க மாட்டாரா என்று ஏங்குகிற முருகேசன். வெறுப்பும்,ஏளனமும் கலந்த அந்தப்பார்வை இன்றைக்கு இல்லை. ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை.

இதுஓர் உயிர்_ஓர் உடம்பு_ இது ஒரு ஜென்மம் _ ஒரு பிராணி என்று கூடப் பொருட்படுத்தாத கண்டுகொள்ளாத வெறுமை.

அய்யா... என்னை ஒரேயடியாகத் தொலைத்தே விட்டாரா? தொலைத்து தலைமுழுகிவிட்டாரா? அய்யாவுக்கு நான் இப்போது இல்லை, எனக்கும் அய்யா இல்லாமல் போய்விட்டாரா?

முருகேசன் மனசுக்குள் மருண்டநிலை. அரண்டு போன உணர்வுகளின் அலைபாய்வு. பவுடர்பூசிய முகத்தில் படிந்த கவலைகள். வருத்த உணர்வுகள்.

உள் மனசை கசக்கிப் பிழிகிற வலிகள். தாங்க முடியாத இழப்புணர்வு.

அய்யாவுக்குப் பின்னால்-சற்றுத்தள்ளி யிருக்கிற முருகேசன். அய்யாவின் பரந்தமுதுகு. ரோமங்கள் அடர்ந்த கறுப்பு முதுகு. தோள் பட்டையின் அசைவுகள். கூர்ந்து பார்க்கிறான். நான் எப்போப்பட்ட உழைப்பாளி மாமனிதரைப் பறிகொடுத்திருக்கிறேன் என்ற நினைப்புடன் நெஞ்சுக்குள், பொங்கிப் பீறிட்டுக் கண்ணீர் துயர நீராக வழிகிறது.

"இன்னும் ரெண்டு அகப்பை வைக்கட்டா?"காமாட்சியின் விசாரிப்பு.

"போதும்.."

"நெத்திலிக்கருவாடுகளை எடுத்துக்கடிங்க..."

"காலி பண்ணிட்டேன்.."

"இன்னும் கொஞ்சம் ஊத்தட்டா?"

"நாலைஞ்சு நெத்திலியை மட்டும் பெறக்கிப்போடு"

எவ்வித உணர்ச்சிவேற்றுமையுமில்லாத ஒரு சகஜத் தன்மை. புறக்கணிக்கப்பட்ட மகன் பக்கத்திலிருக்கிறான். தன்னிடம் அத்துமீறலாக நடந்து, தலைக்குனிவையும் இழிவையும் ஏற்படுத்திய ஓர் ஈனப்பயல், விடுகிற மூச்சு கேட்கிற அண்மையில் இருக்கிறான். அதுகுறித்த உணர்ச்சி ரீதியான சலனமேயற்ற சகஜத்தன்மை. தானும் தனது உயிர்ப்பங்காளி மட்டுமே தனித்திருப்பதாக... தனித்திருந்து உணவு உண்பதாகவே நடந்துகொள்கிற அய்யா.

இந்த சகஜத்தன்மையில் தான்... அவரது வெறுப்பின் உச்சமும் மனக்கசப்பின் பரிமாணமும் முழுமையாக முகம் காட்டுகிறது.

கண்கலங்க நிற்கிற மகனையும், கண்டே கொள்ளாத புருஷனையும் மாறி மாறிப் பார்க்கிற காமாட்சி. அவளுக்குள் கலக்கம். பதற்றம்.

"இந்த வெறுப்பும், கசப்பும், சாபமும் எளையவனை என்ன கதிக்கு ஆளாக்குமோ" என்கிற தாய்மைப் பதைப்பு.

29

"ஏலேய், மூத்தவனே..."

"என்னய்யா..?"

"ஒங்க அம்மாவை எங்கடா?"

"புல்லறுக்கப்போயிருக்கா."

"எங்க?"

"பாலையாநாயக்கரு புஞ்சைக்கு"

"அந்தப் புஞ்சைக்கு என்னத்துக்குப்போறா? அதைத்தான்.. வெளங்காமப்போற பயலுக்கு குடுத்தாச்சே..?"

"யாரோட புஞ்சையிலேயும் புல்லறுக்கலாம்ப்பா"

"நாசமாய்ப்போற அந்த நாயோட புஞ்சையைத் திரும்பிப் பார்த்தவன் கூட திசையத்துப் போயிருவான். இந்தக் கழுதை, புல்லறுக்க அங்க என்னத்துக்குப்போறா? அங்க புல்லறுத்து மாட்டுக்குப் போட்டா மாடும்லே வெளங்காமப் போயிரும்?"

வாசல்படியில் நின்று பதில் சொல்கிற அழகேசன். கோபமும், ஆங்காரமுமாய்... வன்மத் தீப்பொறிகளாக வெடித்துச்சிதற பரமசிவசொற்கள். கொதிநிலைப் பரமசிவம். ருத்ர தாண்டவக் கோலம்.

பொழுது மேற்கில் சாய்ந்துவிட்டது. வேலைத்தேரம் (வேலை நிறுத்துகிற மாலை மூன்று மணி) எப்பவோமுடிந்துவிட்டது. மிச்சம் கிடந்த நாலு நிரைகளை உழுதுமுடித்துவிட்டு.. அங்கேயே கலப்பையை நிறுத்திவிட்டு.. மாடுகளையும், பட்டரைவார்கள் தார்க்குச்சியுடன் வந்துநிற்கிற அய்யா. கருந்திரேகத்தில் வியர்வை வரிகள். தேகமெல்லாம் வியர்வைக்கசிவு. உழவுப்புழுதி வியர்வையெல்லாம் படிந்து.. வியர்வைவரிகளுடன் மண்கரைசலாக வழிகிறது. வயிற்றில் விழுந்திருந்த மூன்று குறுக்கு மடிப்புகளில் ஈரமண் குழைவு வரிகள்.

"கலப்பையைக் கொண்டு வரல்லியா.. ய்யா ?"

"பருவம் தப்பியிருச்சி. நாளைக்கே ரெண்டாம் உழவும் போட்டுரலாம். மேக்காலை நட்டுக்க ஊனி.. ஏர்க்கலப்பையை வுட்டுட்டு வந்துருக்கேன். நாளைக்கு ... நீ போய் அந்த உழவைப் போட்டுருதீயா ?"

"ஆட்டுமய்யா ?"

"ஒழவு மேலே ஒழவு தானே ? செரமமில்லாம... "பொது பொது"ன்னு கொழுவு பாயும். ஒழவு சாயும்"

"எப்புடி இருந்தாலும்... நம்ம வேலைதானய்யா ?போய்ட்டு வாரேன்யா_"

"நல்லவேளை...! சரின்னு சொன்னே. வெளங்காமப்போற பயமாதிரி...நீயும் டக்கர் கலப்பை... டிரில்லர் ஒழவுன்னு சொல்லலியே_"

பரமசிவம் பட்டரைவார்களை திண்ணையில் வீசி யெறிகிறார். சொத்தென்று சத்தமாய் விழுவதுடன், மாட்டுமணிகளின் சங்கீதச் சலங்கைச் சத்தமும் வருகிறது. காளைமாடுகளைத் தொழுவத்துக்குள் பத்தினார். சாணிசகதி அள்ளாமல், நசநசவென்று கிடக்கிறது. சாணி சகதியுடன் காலடிக் கூளமும், மூத்திரக்கவிச்சியும். பக்கத்துத்தொழுவத்தில் எட்டிப்பார்த்தார். பசு மாடுகளும் எருமைகளும் ஆடுகளும் கட்டிக்கிடக்கிற அதிலும்...

அள்ளாமல் கிடக்கிற சாணிசகதி. சாணிமேல் மாடுகள் படுத்தெழுந்த அடையாளங்கள். குப்பைக்கூளமும், மூத்திரநெடியும் நாசிக்கு இதமாக இருக்கிறது.

வேனாக் கொதிக்கிற வெயில்லே முக்கிமுக்கி உழுதுட்டு வர்ற காளை மாடுகளை.. சாணிசகதியிலே நிப்பாட்டுறதா ? அவர் மனசு பொறுக்கவில்லை. மாடுகளையும் பாடுகளின் தோழனாக நினைக்கிற பரமசிவத்தின் நேயம்.

"மூத்தவனே_"

"என்னய்யா ?"

"இந்த மாடுகளைப் பிடிச்சு.. வெளியே குளுதாடியிலே தண்ணி காட்டு. நா_ இந்தா வாரேன்.

மாடுகளின் நூல்கயிறு கைமாறியது. மாடுகளைவிடவும் கூடுதலாகப் பாடுபட்டுவிட்டு வந்திருக்கிற பரமசிவம்.அலுப்பறியாத மனப்பரபரப்போடு..சிறுதொழுவத்திற்குள் நுழைகிறார்.

மாரிமுலையில் கிடந்த பருத்திமார்களால் கட்டப்பட்ட விளக்கு மாற்றை எடுத்தார். சாணிக் கூடையையும் எடுத்தார். சாணிகளள்யெல்லாம் வழித்து கூடையில் அள்ளினார். மூலைமுடுக்குகளையெல்லாம் விளக்குமாறால் கூட்டி... கூளம், குப்பை, சாணி சகதி எல்லாப்பிசுபிசுப்புகளையும் கையாலேயே அள்ளி அள்ளிக் கூடையில் போட்டார். தொழுமுழுக்க பலகைக்கல் பதித்த தளம், பதிக்கப்பட்ட பலகைக் கற்களின் இடைவெளிவழியாக வழிந்து வருகிற மூத்திரமெல்லாம் மூலையில் தரையில் பதித்திருக்கிற மண்பானையில் நிறையும். அதையும்_ பழைய இரும்பு வாளியில் அள்ளினார். தரையில் பதித்த மண்பானைக்கோமியத்தை தேங்காய்ச் சிரட்டையால் அள்ளிஅள்ளி.. இரும்பு வாளியில் ஊற்றுகிறார்.

தலையில், தூணில் கிடந்த கொங்காணிச்சாக்கை எடுத்துப்போட்டுக்கொண்டு நீர்க்கசிவெடுத்து சொட்டடிக்கிற சாணிக்குப்பைக்கூடையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டார்.

தலைப்பாரத்துடன் சற்றே உடல்தணிந்து வலதுகையில் கோமியம் ததும்புகிற இரும்பு வாளி,தோள்பட்டையை இழுக்கிறது.

கூடைக்கனம் கழுத்தை நெரிக்கிறது. சாணிக்கரைசல் கூடையிலிருந்து சொட்டடிக்கிறது.

உழுது வந்த வியர்வைக்கசிவிலும், உழவுப்புழுதி படிந்த மண்கரைசலிலும் சேர்ந்து சொட்டடித்து வழிகிற சாணிமூத்திரக் கரைசல். நடைபோல ஓட்டம். ஓட்டமாய்ப் பாய்கிற நடை.

பாரம் தாளாமல் வருகிற வேகம். அழுத்துகிற சுமையைக் குப்பையில் கொட்ட வேண்டுமே என்கிற பரபரப்பில் வருகிற விரைவு. "வெருசு,வெருசாக" எட்டெடுத்து ஓடுகிற பரமசிவம்.

மேற்காமல் ஓடுகிறார். பத்து வீடுகள் தள்ளி, கிராமத்தின் மேற்கு விளிம்பில் தான்... இவரது குப்பைக்குழி. குப்பைமேடாகத் தானிருக்கும். குழி முழுக்க, அறுத்து கட்டுக்கட்டாகப் பரத்திப் போட்ட ஆவாரங்கொழையும் ஆதாளங்கொழையும் நிரம்பியிருக்கும். வலையபட்டிக் கண்மாயின் உள்வாயுக்குள் குழிவைத்து வண்டிவண்டியாக கோபுரங்குத்தியாக பாரமேற்றிக் கொண்டு வந்த கரம்பை மண்ணும் கொழையை மூடியிருக்கும். அதற்கும் மேல்தான்– மாட்டுக்குப்பையும் வீட்டுக்குப்பையும் சாணி சகதியில் ஊறித்திளைத்த கூளமும் நாத்துக்கழிவுகளும், உலர்ந்து போயிருந்தாலும் செமித்த குப்பையாகிவிடும். குன்றுபோல உயர்ந்துநிற்கிற குப்பைக்குமியில் சாணிக்கூடையை பொத்தென்று குப்புறக் கவிழ்த்துகிற பரமசிவம். இரும்புவாளிக்கோமியத்தையும் குப்பையில் நிதானமாக சாய்க்கிறார். சந்தனக்கரைசல் வீணாகிவிடக்கூடாதே என்கிற அக்கறையுடன் மெதுமெதுவாகச் சாய்க்கிறார். குப்பை குடிக்க குடிக்க மெதுவாகச் சாய்க்கிறார்.

இனியும் இதேவேகத்தில் போகவேண்டும். பசுக்களும் எருமைகளும் ஆடுகளும் கட்டிக்கிடக்கிற பெரிய தொழுவத்திற் குள்ளும் சாணி சகதியை வழித்துக் கூட்டியள்ள வேண்டும். நாலு கூடைக்கும் மேலிருக்கும். மூத்திரவாளியும் சுமக்க வேண்டும்.

"பாவம் காமாட்சி. விடிஞ்சபொழுது அடையுற வரைக்கும் காட்லேயே... "பாடுபாடு"ன்னு ஓயாம ஓழைச்சுச்சாகுதாள்.வீட்லே வந்தா...கம்புகுத்த... சோறாக்க...குழம்பு வைக்கன்னு ஓயாத

அடுப்புவேலை. இதுக்கு இடையிலே சாணி சகதி அள்ளுகிற சோலி.ஒத்தை மனுசி, எத்தனைசோலிக்கு தோள்தர்றது_? பாவம்_"

மனசுக்குள் காமாட்சி முகம். வியர்வைக்கசிவில்லாத நிலையில் அந்த முகத்தை என்றைக்காவது பார்த்த ஞாபகமிருக்கிறதா என்று மனசை உள்ளுக்குள் ரொம்பத் தூரத்துக்கு துரத்தினார். கடந்த நாட்களின் உலகத்துக்குள் நினைவால் துழாவுகிற பரமசிவம். "ம் ஹூம்_ வியர்வையில்லாத காமாட்சிமுகத்தைப் பார்த்ததேயில்லே_"

அப்பேற்பட்ட ஓய்வறியாத பாட்டாளி மனுசி. அவள் வந்து அள்ளுகிற வரைக்கும் சாணிசகதியை நாறப்போட்டு வைக்கவேண்டுமா? விளக்குமாறு சாணிக்கூடையை ஆம்பளை தொடலாமா என்று வீம்புபார்க்கலாமா? பார்த்தால் நான் ஒரு ஆம்பளையா? நா ஒரு மனுசக்கழுதையா?

தானே தஞ்சம் என்று காலடியில் உயிரையே ஒப்படைத்து விட்ட பாட்டாளி மனுசியின் மீது இரக்கமும், பாசமும் அன்பும் காட்டாமலிருந்தால்_ என்னைப்போல ஈனப்பய_ வேற யாரு?

நினைவுகள் தானடித்த மூப்பாக நாலாத்திசையும் பாய்ந்து திரிய கொங்காணிச்சாக்கை எடுத்து தலையில் போட்டுக் கொள்கிற பரமசிவம். வெறுங்கூடையையும், வெறும் வாளியையும் தூக்கி ஒற்றைக் கையில் சேர்ந்தாற்போல வைத்துக்கொண்டு நடக்கிற பரமசிவம். கூடையிலும் வாளியிலும் சாணக்கரைசலின் சொட்டடிப்பு.

"என்ன பரமு.... சாணிக்கூடையும் மோத்தல வாளியுமா?" விசாரிக்கிற மூக்கையா மாமா.

"சும்மாதான் மாமா_ உழுதுட்டுவந்தேன். தொழுவம் ரெண்டும் சாணி சகதியா "கசா கசா" ன்னு கெடந்துச்சு. வழிச்சு அள்ளிப் போட்டுக்கிட்டிருக்கேன்"

"ஏங்_ காமாட்சி இல்லியா?"

"புல்லறுக்கப் போயிருக்கா. மாடு கன்னுகளுக்கு"

"அப்பவும் .. ரெண்டு முழுத்த எளவட்டங்களுக்கு அப்பன். பெரிய மனுசன இந்த மாதிரி_ பொம்பளைக சோலியையெல்லாம் நீ பார்க்கலாமா?"

நடந்துகொண்டே பேசிய பரமசிவம், மூக்கையாமாமாவின் கேள்வியில், "தக்" கென்று நின்றார்.

"பொம்பளை சோலி ஆம்பளைசோலின்னு என்னத்துக்கு வேத்துமை பாக்கணும்? நம்ம வீட்டுச் சோலின்னு நெனைக்கலாம்லே? ஆம்பளை வேர்வை, பொம்பளை வேர்வை எல்லாத்துலேயும் உப்புதான் மாமா. ஆம்பளை வேர்வையிலே வைரம் இல்லே"

"இருந்தாலும்...இடுப்புலே கூடைவைச்சு,வெளக்குமாறும் கையுமா இருக்குறது பொம்பளைக லட்சணம். சாணிக்கூடையும் கையுமா ஒன்னைப்பார்த்தா.. சீலைகட்டுன ஆம்பளை கணக்கா அசிங்கமாயிருக்கு-"

பரமசிவத்துக்கு மூக்கையாமாமாவின் பேச்சு சுத்தமாகப் பிடிக்கவில்லை. எரிச்சலும் கடுப்புமாக இருந்தது.போதாக்குறைக்கு எல்லை மீறிவிட்டார். சீலைகட்டுன ஆம்பளை... அசிங்கம் என்றெல்லாம் வார்த்தைகளை அத்துமீறலாக வீசியெறிந்துவிட்டார்.

வயது காரணமாக மதித்து- சகித்து வந்த பொறுமை உணர்ச்சி தகர்ந்துவிட்டது. வினை விதைத்தவன் வினை அறுக்கட்டும். சொல்லை எறிந்தவர் சொல்லாலேயே சாயட்டும்.

"பெத்ததாய் சொத்தையெல்லாம் வளைச்சு அழுக்கிக்கிட்டு- கஞ்சி ஊத்தாமப் போட்டு, கதறக்கதற பட்டியினியிலே சாகவுடுற ஆம்பளை இருக்கானே... அவன்தான் சீலைகட்டுன ஆம்பளை அசிங்கம், கட்டுனபொண்டாட்டியை வேத்து மனுசியா நெனைச்சுக்காம...தாழ்ந்த மனுசியா நெனைக்காம ... சமதையா மதிக்குறவன் தான்-ஆம்பளைச்சிங்கம், மாமா-தெரியுமா?"

ஆவேசமும் ஆங்காரமுமான குரலில் உயர்ந்த ஸ்தாயியில் காட்டமாகக் கேட்ட பரமசிவம். மூக்கையா பெரிசுக்கு முகம் செத்துவிட்டது. கெக்கலிச்சிரிப்பும் ஏளனமின்னலும் இருந்த நரைத்த கண்கள், வெட்கிக் குனிந்து தாழ்ந்தன.

இப்படியொரு தாட்சண்யமற்ற எதிரிச்சாட்டைச் சுழற்சியை எதிர்பார்க்காத வெலவெலப்பில் அவரது முகம் கறுத்து வாடிப் போய்விட்டமுகம்.

"ஏய்_ என்னன்னா_ இப்புடி மூஞ்சியிலே அடிச்சது கணக்கா_ பேசிட்டே ?"

"பேசுனது உண்மையைத்தானே பேசுனேன் ? பொய் பேசலியே... பெத்த தாயை பட்டினிபோட்டு சாகவுட்டதும் சொத்துகளை வளைச்சு, அமுக்கினதும் நெசந்தானே ?"

பெரியாளு சின்னஆளு வித்தியாசம் தெரியாம, மூஞ்சியிலே இடிச்சது கணக்கா தாட்சண்யமில்லாம பேசுறீயே_ அதனாலே தான்_ ஒன்னோட வவுத்துலே... தகப்பனை தலைகுனிய வைச்சு கூத்து பாக்குற புள்ளை பெறந்துருக்கு. குருவிக்கேத்த கொண்டை"

கெட்டிக்காரத்தனமாக முட்டி மோதிவிட்ட காளையாக கொம்புகள் சிலிர்க்க கம்பீரமாக நிமிர்ந்து பார்த்த பரமசிவம், உயிரதிர குலுங்கிவிட்டார். மூக்கையாவின் எதிரடியில் வாயடைத்துப்போன பரமசிவம். ஊர்ப்பஞ்சாயத்தைக் கூட்டுவதற்கு வீடு வீடாகப் படியேறிய முருகேசனை பிள்ளையாகப் பெற்ற பாவத்தில்... வாயடைத்துப் போகிற பரமசிவம். நெஞ்சுக்குள் சீழ்வடிகிற புண்ணுக்குள் குத்தீட்டி பாய்ந்த மாதிரியோர் ரணச்சிரிப்பு. நரம்பெங்கும் ரத்தமாகப் பாய்ந்து பரவுகிற வலியின் அதிர்வுகள்.

முகம் கறுத்துப்போன பரமசிவம். மூக்கையா கிழவனை ஏறிட்டுப் பார்க்கிற தைர்யம் கூட இல்லாமல்.. குனிந்த தலையும், கூசிக் குறுகின நெஞ்சுமாக "விடு, விடெ"ன்று நடக்கிற பரமசிவம். "விளங்காமப் போற பயலால்" வந்துசேர்ந்த தலைக்குனிவு. உழைத்து உழைத்து காடுகரைகளுடன் மானமரியாதையையும் சேகரித்து, சம்பாதித்து வைத்திருந்த பரமசிவம்.இளையவன் செய்கையால்... ஒரேநாளில் மானமரியாதைச் சம்பாத்தியத்தை இழந்த ஓட்டாண்டியாகிவிட்ட பயங்கரம்.

ஏழேழு தலைமுறைக்கும் தொடர்கிற அவமானம்.

பெத்த தாய்க்கு கஞ்சி ஊத்தாமப்போட்டு, நாதியத்த அனாதையா சாகவிட்ட ஈனப்பயலெல்லாம்... என்னைத்தலைகுனிய வைச்சிர முடியுது. அம்புட்டுத் தூரத்துக்கு,என்னைக் கேவலப்படுத்திட்டான். விளங்காமப்போற பயல். அவன்

வெளங்கிருவானா ? உருப்படுவானா ? நாசமாய்ப் போயிருவான். ஏங்குலை கொதிக்கிற மாதிரி... அவனும் குலை கொதிச்சு... வெந்து போயிருவான்_"

சாணிக்கூடையும் வாளியுமாக நடையை எட்டிப்போடுகிறார். மூக்கையா மாமா பின்தங்கியவர். வேறுதெருவுக்குத் திரும்புகிற போது... தன்னை நியாயப்படுத்திக் கொள்வதற்கான முணுமுணுப்போடுதான் திரும்பினார். பரமசிவத்தின் செவிக்கு எட்டுகிற அளவிற்கான முணுமுணுப்பு.

"எல்லார் நடுமுதுகிலேயும் இருக்குற அழுக்கு தெரியாம... யோக்கியன் மாதிரி... பெரிய சுத்தக்காரன் கணக்கா பேசுனா... இப்புடிதான். ஒனக்குதான் நாக்கு நீளுமா ? எங்க நாக்கு நீளாதா ? ஒம்முதுகுலேயும் அழுக்கு இருக்குஇல்லே ? துள்ளுன மாட்டு முதுகிலே, பொதி சுமை ஏறத்தான் செய்யும்"

மூக்கையாவின் முணுமுணுப்பைக் கேட்கிற பரமசிவத்தின் நெஞ்சுகொதிக்கிறது.

அடிவயிற்றில் திகுதிகுவெனத் தீப்பிடித்து எரிகிற மாதிரியொரு சூன்ய உணர்ச்சி. அவமான அவஸ்தையால் மனவலி, உடல்சோர்வாகப் பரவி.. உயிரைத் துவள வைக்கிறது.

அப்படியே திண்ணையில்போய் விழுந்து... "கோ குலை" யென்று கதறியழுதுவிடலாமா.... என்று வருகிற மனவேட்கை. குமுறிப்பொங்கிக்குமைந்து விம்மி விடைக்கிற மனச்சோகம்.

"நெஞ்சே வெடித்துச்சிதறிவிடுமோ" என்கிற அளவுக்கு புடைத்து விம்முகிற நெஞ்சுத்துயர்.

ஆம்பளை ! அழுதுரக் கூடாது ! கோழையில்லே. மண்ணோட மல்லுக்கட்டுற மனுசன். மண்ணை புள்ளையா மதிக்கிற வீரன். மண்ணை..விளைச்சல் தருகிற தோழனாக யோசிக்கிற மரபுச்சம்சாரி. நா அழுதுரக்கூடாது. கோழையாகிரக் கூடாது.

ஏன் வயித்துலே வந்து பொறந்த கொள்ளிக்கு நா, கருகிரக்கூடாது. கொள்ளியை எச்சில் துப்பி அணைக்குற துணிச்சல் உள்ளவனாகணும்.

சம்சாரிக பார்க்காத பஞ்சமா? சம்சாரிக பார்க்காத வறட்சியா? சம்சாரிக பார்த்தனுபவிக்காத மழைக் கொடுமையா? சம்சாரிக பார்த்தறியாத வெள்ளச்சேதாரப் பேரழிவா?

அதைவிடவா, பெரிசு இந்தக் கொள்ளி?

அத்தனை பேரழிவுக்கும், அழுது சாகாத- மடிந்து சாயாத- சம்சாரி, இந்த விளங்காமப் போற சின்னஞ்சிறு எறும்புக்கு அழுதுரலாமா?பயந்துரலாமா? கோழையாகி- அசிங்கப்படலாமா?

பரமசிவத்துக்குள் வருகிற வைராக்யம். துயர் கடந்து முன்னேறுகிற பாரம்பர்ய வலிமை. அவமானத்தைத் துடைத்துக் கொண்டு புதிய வரலாறு படைக்க முன்னோக்கி உயர்கிற மரபார்ந்த விவசாய ரத்தத்தின் ரோஷாக்னி.

நெஞ்சு நிமிர்கிறார். உடல் விறைக்கிறார். உயிரின் வைராக்யப் புடைப்பு.

சாயங்கால வெயில் முதுகில் விழுகிறது. அவரது நிழல் அவர்முன் தரையில் நீள்கிறது. நிழலைமிதித்து முன்னேறுகிற நிஜமாக பரமசிவம்.

பெரிய தொழுவத்திற்குள்ளும் சாணிசகதி அள்ளிச்சுமக்கிற தொடருழைப்பு. வியர்வைப்பெருக்கின்முடிவற்ற நடை.

சிறிய தொழுவத்திற்குள் காளைமாடுகளைக் கட்டிய அழகேசன் கூளப்படப்பிலிருந்து கூளத்தை உருவிப்போட்டு... கட்டைக்குச்சியால் தூர் மண் கட்டிகளை அடித்து உதறி.. கூளத்தை அள்ளிக்கொண்டுவந்து,காடியில் போட்டிருக்கிறான். உழைத்து வந்த மாடுகள் தாகம் தீர குளுதாடியில் பருத்தி விதைப்பால் குடித்துவிட்டு.. ஆறஅமர கூளம் கடிக்கின்றன. ஈர்க்குச்சிகளைப் போன்ற நாத்துக்கூளம். கொத்துக்கொத்தாக வாயால் கவ்வி... பல்லால் மடித்து.. நாவால் வளைத்து உள்ளிழுக்கிற மாடுகள். கூளம் தின்னுகிற மனமகிழ்ச்சியில் வாலையாட்டிச் சுழற்றிக் கொள்கின்றன.

மாட்டு ஈ பருவட்டானது. உட்கார்ந்தவுடன் வாயிலிருந்து ஊசியை இறக்கி, ரத்தம் குடிக்கும். மாட்டு ஈ வந்து உட்கார்ந்தால்,

அதை விரட்டுவதற்காகவே மாடுகள் காலை எடுத்து மாற்றி வைக்கின்றன. பலகைக் கல் தளத்தில் அதன்குளம்புச்சத்தம். கூளம் தின்பதற்கேற்ப அசைகிற கழுத்து. கழுத்து மணிகளின் நாவசைவில் எழுகிற இனிய ஒலிலயம்.

பெரிய தொழுவத்தில் கட்டிக்கிடக்கிற பசுக்கள், எருமைகள், ஆடுகள். இவற்றை அவிழ்த்துக் கட்டாமலேயே... சாணிசகதியை கூட்டிவழித்து அள்ளுகிற பரமசிவம். ஒவ்வொரு மாட்டையும் தோள் பட்டையால் முட்டி நகற்றி_ அதன் காலடிச்சாணி சகதியை வழிக்கிற லாகவம். சாணத்தோடு சேர்ந்து நச நசத்து விட்ட கூளத்தையும் சேர்த்து வழிக்கிறார்.

காடிகளில் கிடந்த உதிரிக் கூளத்தையும் ஆடுகுட்டிகள் கடித்துப்போட்ட கொழைக்காம்புகளையும் கூட்டிவழித்துச் சாணியுடன் சேர்க்கிறார்.

உழுது களைத்து வந்த மாடுகள் ஓய்வாக இரையைப் பிடித்து மடித்து வளைக்கின்றன. உழைத்துக்களைத்துவந்த பரமசிவம், ஓயாமல் ஓடிஓடி சாணசகதியள்ளுகிறார்.

சாணி, சகதி, மாட்டு மூத்திரம் என்பது வெறும் கால்நடைக் கழிவுகளா? ஆமாம். ஆனால் மண்ணை நேசிக்கிற மரபார்ந்த சம்சாரிக்கு... சாணி சகதியும் கோமியமும் வெறும் கழிவல்ல; மண்ணுக்கான உணவு. ஒன்றைத் தந்தால், நூறாகத் திருப்பித் தருகிற மண்ணுக்கான சத்துணவு. விளைச்சல் தருகிற மண்ணுக்கு உயிர்ச்சத்து தருவது, இந்த இயற்கை உரம்தான். சாணியும் சகதியும் மூத்திரமும் ஆவாரங்கொழையும் ஆதாளங்கொழையும் குப்பை கூளமும் மழைநீரும் கரம்பை மண்ணும் கலந்து, பின்னி, ஒன்றுக்குள் ஒன்றாக இழந்து உறவு அடைந்து, செமித்து, மக்கி, ஒன்றாக ஒருமைப்பட்ட உணவு.

உணவு தருகிற மண்ணுக்கு சம்சாரி தருகிற உணவு, மீனுக்குக்காட்டுகிற தூண்டில் புழு போன்ற உணவல்ல. வயிற்றில் இருந்து வளர்ந்து உருக்கொண்டு வெளிப்பிறந்த பிள்ளைக்கு தாய் ஊட்டுகிற பால் போன்ற உணவு. சுரண்டல்நோக்கமற்ற பரஸ்பரப்

பரிவர்த்தனை. மண்ணை மலடாக்கவிடாமல்... மேலும் மேலும் செழிப்பாகவும், வளமாகவும், இளமையாகவும் ஆக்குகிற பாசத்துடன் கூடிய உணவு, குப்பை உணவு. கோபுரக்குணம் கொண்ட மக்கிய உணவு.

சாணியள்ளிய கூடையும், மூத்திரம் அள்ளிய இரும்புவாளியுமாக நடையாய் நடக்கிற பரமசிவம். பரமசிவத்துக்குள் மூக்கையா மாமா சொருகியகுத்தீட்டி. இளையவனாகத் திகழ்ந்த மகன், விளங்காதபயலாக வீழ்ந்த பாவத்தை, அதைச்சுமந்து பெற்ற கேவலத்தையும் குத்திக்காட்டிப்பேசிய பரமசிவம்.

"காமாட்சி வந்தவுடன்... சொல்லியழலாமா" என்றேங்குகிற இதயம். யாரிடம் சொல்லியழ? வேறுயாரிடம் சொல்லியழமுடியும்? தமது உயிரின் பங்காளியிடமாவது சொல்லியழ வேண்டாமா?

30

கனத்த புல்லுக்குப்பாரம் தாளாமல் கழுத்து குறுகுகிறது, காமாட்சிக்கு. பசுமாடுகளும் கிடக்கின்றன. ஒரு எருமையும் நிற்கிறது. அதில் மூன்று பசுக்கள் பால் தருகின்றன. எருமையும் ஒரு பசுவும் சினை. வெள்ளாடு ஒன்றும் கன்னங்கரேலென்று கிடக்கிறது. அதுபோட்ட கன்றுகள் மூன்றும் கிடாய்களாய் வளர்ந்து கொழுத்து நிற்கின்றன.

அம்புட்டுக்கும் இரைவேணும். வாயில்லாச் சீவன்க. வாயைத்திறந்து, புல்லைக் கொண்டா என்றா கேட்கும்? பசிவந்தால் கத்தும். கனைக்கும். நாமதான் நேரம் தப்பாம... வாய்க்கும், வவுத்துக்கும் இரை தரணும்.

மனுசருக்கு பாலை குடுக்குற லட்சுமிக. மண்ணுக்கு சாணியும் மூத்திரமும் சத்துணவாகப் போடுகிற தருமலட்சுமிக.

அதுகளை பட்டினிபோடலாமா? பாவமில்லையா?

காட்டுவேலைக்குப் போய்விட்டு வந்த காமாட்சி மாட்டுக்குப் புல்லையள்ளிப் போட்டுட்டு கஞ்சிகுடிப்போமே என்று நினைத்தாள். தொழுவத்துத் திண்ணையில் புல் இல்லை. உலர்ந்து காய்ந்த புல் இணுக்குகள் தாம் கிடந்தன.

காமாட்சிக்குப் பகீரென்றது. குலையைப் பிடுங்கிப் போட்டது போலிருந்தது. "அடப்பாதரவே" என்று பதற்றமும் பதைப்புமாக அலறி விட்டாள்.

நேரத்துக்கு நேரம் வவுறுமுட்ட வாய்லே சோத்தை அடைச்சுக்கிடுதோமே... வீட்டையே விளங்கவைக்கிற மகாலட்சுமிகளைப் பட்டினியா போடுறது? பாவமில்லையா?

என்று புலப்பமெடுக்கிற நினைவுகள். வெறும் புலம்பல் நினைவல்ல; செயலுக்கான உயிர்ப்பான நினைவுகள்.

படப்புக்குப் போனாள். ஓட்டமும் நடையுமாய்ப் பாய்ந்தாள். :"பரட், பரட்"டென்று நாத்துக் கூளத்தை இழுத்தாள். ஒரு குடங்கை இருக்கும். கட்டைக்குச்சியால் அடித்து உதறி.. தூர்மண் கட்டிகளைத் துப்புரவு செய்து... கூளத்தை அள்ளினாள். ஆளுக்கு அஞ்சாறாகப் பகிர்ந்து போட்டாள்.

ஆட்டுக்கும் ஒருகைப்பிடிநாத்தை கயிற்றில் கட்டித் தொங்கவிட்டாள். வீட்டுக்குள் பாய்ந்தாள். ஒரு செம்பு தண்ணீரை மடக் மடக்கென்று குடித்தாள். வீட்டைச்சாத்திவிட்டு, முற்றத்தில் இறங்கினாள். பண்ணரிவாளை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

காட்டுவேலை. வேனாய்க் கொதிக்கிற வெயிலில் வெந்து செத்தது. "பாடு பாடு" என்று பொழுதுக்கும் வேர்த்து மடிந்தது.

அலுத்த உடம்பு, "சித்த_ படேன்" என்று கெஞ்சுகிறது. "சித்த_ கட்டையைக் கீழே சாய்ச்சு கிடத்து" என்று கெஞ்சிக் கூத்தாடி மன்றாடுகிற குறுக்கெலும்புவலி. தோள்பட்டை, முழங்காலெல்லாம் உயிரைப்பிடுங்குகிற ரணம். "எங்கனடா_வுழுந்து சாவோம்" என்று வருகிற ஆயாசமும், அயர்வும்.

வாயில்லாச் சீவன்க, வவுத்துக்கில்லாம கிடக்குதுகளே என்கிற மனக்கொதிப்பு, ஐயோ... பாதரவே, அதுகளை காயப்போட்டுட்டு... படுத்துக்கிடக்க மனசுவருமா என்று ஆலாய்ப்பறந்து வருகிற மனஅலைபாய்வு.

சகஜீவன்களாக மாடுகளையும் ஆடுகளையும் நேகிக்கிற விவசாய மனசு. அந்த மனசுதான் உடம்பை இயக்குகிறது. "ஓடு_ ஓடு_ ஓடு... புல்லுக்கட்டோடு ஓடி வா" என்று உடம்பைக் கட்டி இழுத்துச்செல்கிற மனசு.

காமாட்சிக்கு கழுத்துஒடிகிறது. தலை, கீழாக அழுத்தப்பட்டு அமுங்குகிறது. நெஞ்செலும்பு நெறுக் நெறுக்கென்று நொறுங்குகிற மாதிரியோர் பிரமை. கழுத்தை அழுக்க, அழுக்க மூச்சுமுட்டிக் கொண்டு வருகிற நெஞ்சுத்திணறல்.

ஊர் எல்லை நெருங்குகிறது.

கால் எலும்புகள் யாவும்_ நனைத்த கயிறாகத் துவள்கின்றன. உள்தொடையில் வழிந்து வருகிற வியர்வைக்கோடுகள். கண்ணைக்கட்டிக்கொண்டு வருகிற கிறுகிறுப்பு.

இடுப்பில், கட்கத்தில் கடாப்பெட்டி நிறைய அகத்திக் கொழையும் ஆமணக்கு கொழையும் தலையை அமுக்கி,உயிரையே நசுக்கிவருகிற புல்கட்டுப்பாரம்.

மஞ்சள் வெயிலும் கறுப்பு வெயிலாக மாறுகிற மாதிரியோர் பிரமை. கண்ணிமையில் திரண்டுவருகிற வியர்வைத்துளி கண்ணுக்குள் விழுந்ததால்_ வருகிற கண் மறைப்பா ? கிறுகிறுப்பால் வருகிற கண்ணைக் கட்டுதலா ?

நினைவில் உயிர் பிரிகிறதோ_

"கொண்டா_" என்ற ஆண்குரல். கொண்டவரின் குரலா ?

இவள் உயரத்துக்குத் தன் உடம்பைத்தாழ்த்தி... இவள் முகத்துடன் முகம் சேர்த்து..புல்கட்டுப்பாரத்தைத் தனது தலையால்முட்டி தனது தலைக்கு மாற்றிக்கொண்டு நிமிர்கிற பரமசிவம்.

பேய்க்கனம்.

அவள்முகமெல்லாம் வியர்வை ஊற்று. தலைரோமங்கள், அடிபட்டு நைந்த புளிச்சநாராக பஞ்சாடிக் கிடந்தன. சொருகிவருகிற அவள் கண்கள். கீழே சாய்ந்துவிடுவாளோ_ ?

பக்பக்கென்று அவளது இடதுகை கட்கத்தில் பற்றி நிறுத்துகிற அவர். சரியத்துவங்கிவிட்ட திரேகத்தை வலுமிக்க தனது கையால் நிலைநிறுத்துகிற பரமசிவம்.

"ஏய்ய்க்...கிறுக்குக் கழுதை..." என்று பதற்றமாக அதட்டுகிறகுரல். அரற்றலாக வருகிற அதட்டல்.

மடிந்துவந்த நினைவின்உயிர், மீண்டுவிட்டது. கண்ணுக்கு மஞ்சள் வெயில் தெரிகிறது. வண்டிப்பாதைப்புழுதி தெரிகிறது.

"வந்துட்டீகளா..."

சட்டென்று சுதாரிக்கிற காமாட்சி. வலது கட்கத்திலிருக்கும் கடாப்பெட்டினைக் கீழே விழவிடாமல் பற்றிக்கொள்கிற பரபரப்பு.

"நல்ல வேளை! சமயத்துக்கு வந்துட்டீக.. கண்ணைக் கட்டிக்கிட்டு வந்துருச்சு. கிறுகிறுத்துக் கீழே சாய்ஞ்சேன்னா... புல்லுக்கட்டு போட்டு அமுக்கி, என்னைக்கொன்னுபோடும்"

கோபம் கோபமாய்ப் பெருவிழி விரிந்து பார்க்கிற பரமசிவம். கெட்ட வார்த்தைகளில் வைகிறார். கேட்கிறவர்களுக்குக் காது கூசும், அம்புட்டும் கெட்ட வார்த்தைகள். புழுத்த வாயிலிருந்து புறப்படுகிற நாற்றமெடுத்த வசவுகள். வாயில் வைத்துப் பேசமுடியாத வசவுகளை யெல்லாம்_ உச்சபட்சவெறியில் வீசுகிறார்.

"என்ன மயித்துக்கு இம்புட்டுப் பெரிய கட்டைப்போட்டு இழுத்துக்கிட்டு வாரே...? ஒனக்கு ஒண்ணு ஆச்சுன்னா... நா எங்கபோய் நிப்பேன்?"

அவரை இடதுகையால் பற்றி, தன்னைச்சுதாரிக்கிற காமாட்சி. மெல்ல மெல்ல உயிர்வருகிறது. மூச்சுத்திணறல் சற்று தணிகிறது. "கேஸ்ஸு, புஸ்ஸுஸெ"ன்று இளைப்பு வருகிறது. நின்ற மூச்சு வருதே என்றொரு ஆறுதல்.

பரமசிவம் வைய வைய உலர்ந்த உதடுகளால் சிரித்துக் கொள்கிற காமாட்சி. பாசத்தில் வருகிற கோபவசவுகள். பதைப்பில் வருகிற ஆங்காரத்திட்டுகள். வியர்வைக்கசிவான அவளது மென்சிரிப்பு.

"நா-இம்புட்டு வைதேன்_ நீ வாயைப்போட்டு இளிக்கே?"

"வைய வைய வைரக்கல்லு_ திட்டத்திட்ட திண்டுக்கல்லு"

"வா கழுதை, வீட்டுக்கு.."

புல்கட்டுப்பாரத்துடன் முன் நடக்கிறார். இடுப்பு கடாப் பெட்டியைத் தலைக்கு மாற்றிக்கொண்டு வருகிற காமாட்சி.

வீடுவந்து பார்த்தால்_ கழுவிப்போட்ட சோற்றுப்பானை போல சுத்தமாக இருக்கிற தொழுவங்கள். இம்புட்டும் யாரு செய்ஞ்சது? ஆச்சர்ய முட்டல்.

கோபம் கோபமாக சீற்றப் பேச்சாகவும் வசவுகளாகவும் வருகிற பரமசிவத்தைப் பார்க்கிற காமாட்சி.

"சாணி சகதியைக் கூட்டி அள்ளினது,யாரு?"

"ம்ம்ம்_ ஒம்புருஷன்"கோபச்சீறலாக அவர்.

அப்படியே நெக்குருகிப்போகிற காமாட்சி. நெஞ்சின் உயிர் கரைந்து_ நெகிழ்ந்து அவரை நோக்கி வழிகிறது.

"சிங்க மகாராசா_ ஒங்களுக்கென்னத்துக்கு இந்தச்சோலி?" நெகிழ்ச்சியில் தளு தளுக்கிற அவளதுகுரல். அவள் கண்ணில் மனப்பரவச நீர் அருவி.

"சாகக் கெடந்து... உசுருதப்பி வர்ற கழுதை நீ. நீவந்து சாணிச்சகதி கூட்டட்டும்னு காத்துக்கிடக்கணுமாக்கும்?"

கோபமாக எகிறுகிற அவரது ஆத்திரச்சீற்றம். அவரது முகத்தில் கோபத்தின் விடைப்பும், முறுக்கும். கன்ன எலும்புகளின் புடைப்பு. ஆத்திரத்தில் அனலாகச் சினக்கிற கண்கள்.

"கூடையும் விளக்குமாறுமாய்... நீங்க எதுக்கு பொம்பளை சோலியை பாக்கணும்? ஆம்பளை ராசா_நீங்க_"

"ஆம்பளைன்னா... ஏழெட்டு பொம்பளை வைப்பாட்டியா வைச்சிருக்கிறவனா...? இல்லே. கட்டுன பொண்டாட்டி மேலே எரக்கப் பட்டு_ அவளையும் தன்னைப்போல நெனைக்குறவன்தான்_ ஆம்பளை. தெரியும்லே?" என்று சொல்லவில்லை, பரமசிவம். சொல்லுவதுபோல, காமாட்சியின் உயிருக்குள் தெரிகிறது.

"ஏய்..அறிவுகெட்ட குருட்டு நாயி.... நீமட்டும் பாத்திகட்டலாம். ஏர்கலப்பையோட மேழிப்புடிச்சு உழுகலாம் கமலைவடம் புடிச்சு தண்ணி இறைக்கலாம். நாங்க மட்டும் சாணிசகதியை தொட்டுரக் கூடாதாக்கும்?"

அவளுக்குள் நெஞ்சுக்குள் முட்டிக்கொண்டு வருகிற பரவச அழுகை. உயிர் கரைந்து, கண்ணுக்குள் முள்ளாக உறுத்துகிற நீர்த்துளி. அவளுக்குள் மனசே கிடந்து இளகி உருகி வழிகிறது. இந்தப்பாவிமனுசனை எப்புடிக்கொண்டாடுறது என்றோடுகிற நினைவுகளால் கனத்த மௌனம். பேசிக் கழிகிற கடனா, இது? வார்த்தைகளால் தீர்ந்து போகிற கடனா?

அவளுள் நெகிழ்ச்சி மிக்க நினைவுகளில் நனைந்து வருகிற கண்ணீர் தாறுமாறாக வழிகிறது. நெஞ்சுமுட்டிவருகிற பரவசம், விசும்பல்களாக வெடிக்கிறது.

அவளைக் கவனிக்காமல்... வெளிப்பானைக்கு குளிக்கப்போய்விட்ட பரமசிவம். தார்ப்பாய்ச்சியிருந்த வேட்டியை உருவிவிட்டு, கோவணத்துடன் நின்று, நாலு குவளை அள்ளி மேலே ஊற்றிக்கொள்கிற அவசரம். குளிக்கக் குளிக்க... உழுத அலுப்பு தெரிகிறது. சாணி சகதிகளைக் குனிந்து குனிந்து கூட்டிப்பெருக்கி அள்ளிச்சுமந்த களைப்பு தெரிகிறது. புல்கட்டின் கனம் தெரிகிறது.

அலுப்பெல்லாம் கரைந்து வழிந்து.. வியர்வைக்கரம்பை மண்போல ஓடவேண்டிய அளவுக்குக் குளிக்கணும் என்று மூர்க்கமாகிவிட்ட பரமசிவம். பச்சைத் தண்ணீர். பச்சை மண் போன்ற மழலைவிரல்களால், மனசை வருடுகிற பதமான குளிர்ச்சி.

குளிக்க குளிக்க சுகமாக இருக்கிறது. மொடாப்பானை காலியான பிறகும், அலுப்பு தீர்ந்த மாதிரி தெரியவில்லை. குளிக்கும் ஆசை கூடிக் கொண்டே போயிற்று.

"சளப்,சளப்" பென்று குவளையால் அள்ளி அள்ளி ஊற்றுகிற பரமசிவம். ஊற்றிக்கொண்டே யிருக்கிற குளிப்பு சுகம்.

ஒருநிதானத்துக்கு வந்தார். ஒரு சொலவடை ஞாபகத்தில் உரசி அவரை நிதானப்படுத்தியது.

"ஆசை தீர_ பெண்டாட்டியை ஆண்டவனுமில்லே, அலுப்புதீர குளிச்சவனுமில்லே" என்ற அந்தச் சொலவடை

அலுப்பும்... ஆசையும் வாழ்க்கையைப் போல முடிவற்றது. குளித்தால் குறைகிற அலுப்பு. அடுத்த அலுவலில் வந்துவிடும். மனைவியோடு ஆண்டது போதும் என்று எண்பது வயதுப்புருஷன் கூட மனத்துறவு கொள்ளமாட்டான். துவண்ட வயதிலும் துவளாத ஆசையுடன் மனஉறவும், உடலுறவும் வைத்துக்கொள்வான். அலுப்பும் ஆசையும் தீர்வதில்லை என்ற மிகப்பெரிய வாழ்க்கைத் தத்துவத்தை, கிராமத்தான்..ஆபாசக்குறும்புடன் கூடிய குறுஞ்சிரிப்புச் சொலவடையாகச் சொல்லி வைத்திருக்கிற சுவாரஸ்யம். அறிவார்ந்த சுவாரஸ்யம் தானே, அழகியல் ?

அவருக்குள் வருகிற குறுஞ்சிரிப்பு பொங்கிப் பெருகிப் பீறிடுகிற அந்த நினைப்பும் மனத்தினவும் குறுஞ்சிரிப்பாகப் பூத்து வெடிக்கிறது.

தலையைத் துவட்டுகிறார். காமாட்சி தருகிற வேட்டியை கட்டிக்கொள்கிறார். மாற்றுக்கோவணம் கொடியில் வெடவெடப்பாகத் தொங்குகிறது.

குறுஞ்சிரிப்புடன் வாசல்படியில் காலடிமண்ணைத் தட்டி உதறுகிற பரமசிவம். மனநினைவுகளாலும், குறுஞ்சிரிப்பாலும் சூரியகாந்திப்பூப்போல விரிந்து பரந்து ஒளிர்கிற அவரதுமுகம்.

"என்ன...இம்புட்டுச் சிரிப்பாணி ?"

பெருஞ்சிரிப்பாக வெடிக்கிறது. தலையையசைத்து "ஒண்ணு மில்லே" என்கிறார். அவருக்கு வெட்கம் பிடுங்கித் தின்கிறது.

ஆர்வப் பெருக்காகிப்போன காமாட்சி. சின்னஞ்சிறுமிமாதிரி கெஞ்சுகிறாள். அதென்ன ரகசியம் ? ஏங்கிட்டே சொல்லமாட்டீகளா ? ஐயா இல்லே ? ராசா இல்லே ?கண்ணுஇல்லே ? எனக்கு மட்டும் மெதுவாச் சொல்லிருங்க_"

"ஒண்ணுமில்லே. லேசுக்குளிப்பா ஆரம்பிச்சு_நீளக் குளிப்பாக போய்க்கிட்டேயிருந்துச்சு. அப்ப.. ஒருசொலவடை ஞாபகத்துக்கு

வந்துச்சு. அதைத்தான் நெனைச்சு, நெனைச்சு, சிரிச்சுக் கிட்டிருக்கேன்..."

"என்ன சொலவடை?"

அவளை நிமிர்ந்து பார்க்கிற பரமசிவம். அவர்களது வயது குறித்த பிரக்ஞை. "வேண்டாம்..வுட்டுரு"

"ஏன்னத்துக்கு..? அதெல்லாம் வுடமாட்டேன்"

"வுட்டுரு.. நாம கெழட்டுக்கழுதைக. நம்ம தரத்துக்கு வேண்டாம்."

"ஐயா.. செல்லம்! கண்ணு.. கட்டித்தங்கம்.."

அவரது நாடியைப் பிடித்து கெஞ்சுகிற சிறுமியாகக் காமாட்சி.

"சொல்லட்டுமா?"

"ம்"

"சொல்லியே ஆகணுமா?"

"ம்"

"ஆசைதீர.. கட்டுனவளை ஆண்டவனுமில்லே. அலுப்புதீர குளிச்சவனுமில்லே.."

நாடியிலிருந்து விருட்டென்று கையை யெடுத்தவள், முகம் முழுக்க வெட்கத்தால் கோணியது, குமரிப்பெண்போல.

"ச்ச்சீய்ய்க்.. நெனைப்பைப்பாரு"

அந்தமுகக் கோணலின் நாணமும் சின்னஉதடுகளின் வெட்கச்சிரிப்பும் காமாட்சிக்குப் பேரழகைத் தருவது போலிருந்தது. அப்பவும் தொடர்ந்து இதுகுறித்தே பேசுகிற காமாட்சியின் நாணக்குழைவு.

"அந்தச் சொலவடையை வேறமாதிரிச் சொல்லுவாக?"

"எப்புடி ?" ஆவலாய் பரமசிவம்.

"ஆசைமுடிய பெண்டாட்டியை பாத்தவனுமில்லே. அழுக்குமுடிய குளிச்சவனுமில்லே..." காமாட்சிக்குபொங்கிவருகிற வெட்க உணர்வு.

"ரெண்டும் ஒண்ணு தான் ஒழைச்சாத்தான் வேர்வையும் அலுப்பும், அழுக்கும் வரும். பாக்குறது, எல்லாரையும் பார்க்கலாம். ஆள்றது பெண்டாட்டியை மட்டும்தான்... அதனாலே சரியான சொலவடை நாஞ் சொன்னதுதான்_"

அவரைக் கண்குளிரப்பார்க்கிற காமாட்சி. கண்விரியப் பார்க்கிறாள். மனசு விரிகிறது. உடல் விரிகிறது. சகலமும் விரிகிறது. உயிர் உருகி வழிகிறது. ஆயினும், வெட்கச் சிணுங்கலும் நாணக் கோபமுமாய்க் காமாட்சியின் முணுமுணுப்பு.

"கெழடனுக்கு ஒண்ணும் குறையலே. எளவட்டமப்பு ஏறித்தான் இருக்கு_"

"சரி_சரி சோத்தை வை_ பசி, உசுரை வாங்குது"

"ஒக்காருங்க... கோவணம் கட்டாத நிலையில் குத்துக்கால் வைத்து உட்கார்கிற பரமசிவம். மறுபடியும் "களுக்" கென்றுவெட்கச் சிரிப்பு காமாட்சியிடம் "வேட்டியை நல்லாஇழுத்து மூடுங்க"

பசுமாடுகளுக்கு இரைபோட்டு, எருமைக்குத் தண்ணீர்காட்டி, ஆடுகளுக்குக் கொழையை கட்டி... பருத்திவிதையை மொடாப் பானையில் நனையவைத்துவிட்டு_ கூளப்படப்புக்குப்போய், ராத்திரி முழுக்க மாட்டுக்குத் தேவையான கூளம்பிடுங்கிக்கொண்டுவந்து வைத்து_.

லைட்டை அமர்த்தும் போது... மணி பதினொன்றாகிவிட்டது. மூத்தவன் வெளித்திண்ணையில் தொழுவத்துக்குக் காவலாய் கட்டில்போட்டுப் படுத்திருக்கிறான். முருகேசன், நடுமுற்றத்தில் வெளி வாசலை ஒட்டி_. நார்க்கட்டில் போட்டு உறங்குகிறான்.

அடுப்பங்கரையை ஒட்டிய குளிப்பறையில் குளிக்கிற காமாட்சி. பாலை உறை ஊற்றி வைத்துவிட்டு வெண்ணெய்ச் சட்டியை மூடிவைத்துவிட்டு.. குளித்து..சீலைமாற்றிக் கொண்டு.. நடைக்கு வந்தாள். லைட்களை அணைத்துவிட்டு, பச்சைநிற விடிவிளக்கை மட்டும்போட்டாள்.

ஒருக்களித்து உறங்குகிற பரமசிவம். உழைத்தஅலுப்பு. அயர்ந்த உறக்கம். பாயின் ஓரத்தில் படுத்திருக்கிறார். பக்கத்தில் இடமிருக்கிறது.

தனியாகப் பாய்விரித்துப்படுக்கிற பழக்கம் வந்து ரொம்ப வருஷங்களாகிவிட்டது. நடுச்சாமத்துக்குமேலே "ஒண்ணுக்கு" எழுந்தால் பக்கத்தில் பரமசிவம் படுத்து மேலே காலைப் போட்டிருப்பார்.

மங்கலான வெளிச்சத்தில் பரமசிவமுகம். அதன் ஆண்மைப் பேரழகு. உழுத கம்பீரம். சாணி சகதி அள்ளிய கருணை. புல்கட்டை ஏந்திய காதல். வைதுதீர்த்த பாசம். குறுஞ்சிரிப்போடு சொலவடை பகிர்ந்து கொண்ட காமம்.

அவளுக்கே ஆசையாக இருக்கிறது. உயிர்உருகிக் கரைகிற உள்மனக்காதல் திரேகத்தினவாகி, "நெக்குருகி, நெகிழ்ந்த தருணங்களுக்கான கடன்கழிப்பு என்பது... இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நினைப்பாகி…"

அவளாகவே அவரருகில் படுத்துக்கொண்டாள். உறங்குகிற புருஷன் மேல்...தைர்யமாக காலைப்போட்டாள். அவரது முதுகு ரோமங்களைத் தொட்டுணர்கிற அவளது வெற்றுடம்பு.

முழிப்பு தட்டுகிறது, பரமசிவத்துக்கு வாழ்வின் அதிசயம். காணாததைக்கண்ட பரமசிவம். இவர்தான் முதலில் முயலவேண்டும். முயற்சிக்கு பலன்களும் இருக்கும். பலனில்லாத சிலநாளும் இருக்கும்.

இதென்ன புதுசு! அவளாகவே காலைப்போட்ருக்கிற அதிசயம். முதுகில் உரசுகிற அவள் வெப்ப வெதுவெதுப்புத்தேகம்.

அவள் அழைக்கிறாளா? இல்லை. அப்படிப்பட்டவளில்லை.

அவள் தன்னையே அளிக்கிறாள். தன்னையே பரிசாகத் தருகிறாள்.

"என் ஆசை நாயகனே, அன்புப் புருஷனே...இதோ உனக்கு எனது அன்பளிப்பு. நானே எனது அன்பளிப்பு" என்று சொல்லாமல் சொல்லுகிற அவளது தேகவெதுவெதுப்பு. குறுக்காக விழுகிற அவள் கை. இப்ப குளித்த குளர்ச்சியான கை. மார்பு ரோமங்களுக்குள் பரசிப்பரவிக் கோதுகிற அவளது விரல்கள்.

புரண்டு திரும்புகிற பரமசிவம். மங்கலான பச்சைநிற வெளிச்சத்தில்.. அவள். அவளாக மட்டும். புனைவில்லாத உண்மையாக_

பரமசிவம் நெகிழ்ந்து போகிற நெஞ்சுடன் கனிவாக கிசுகிசுக்கிறார்.

"என்ன இது_ எப்பவுமில்லாத வழக்கமா_"

"தோணிச்சு_" முகத்தை நெருங்கினாள். அவளாகவே அவர் உதடுகளைக் கவ்வினாள். கன்னத்தை மெல்லக்கடித்தாள். முகமெல்லாம் வாயால் வருடி வந்தாள். இடதுகையால் செவி மடலைத்திருகி.... தோள்பட்டையை வருடி.. மார்பு ரோமங்களை வயிற்றுரோமங்களை நீவி_

"ஆசைதீர கட்டுனவள ஆண்டவனுமில்லேன்னு என்று சொலவடை சொன்னீக_இல்லே?"

"ஆமா?"

"ஆம்பளைக்கு மட்டும் தான் ஆசையா? பொம்பளைக்கு ஆசை இருக்கக்கூடாதா..?"

அவரை மல்லாக்கச் சாய்த்து ..அவரது நெஞ்சில் இவள் புரண்டு முகத்தைப் புதைத்து_கிச்சலம் காட்டி_ கண்ட இடமெல்லாம் செல்லக்கடி கடித்து_ அவரைப்புல்லரிக்க வைக்கிற காமாட்சி.

"இன்னைக்கு என்னமோ உங்களுக்கு உசுரைக் குடுத்துரணும்னு ஒரே ஆசை_ அதனாலே மானமில்லாம என்னைத் தந்துட்டேன்"

அள்ளி அணைத்துக் கொண்ட அந்த ஆண்மகன்.

அவளைப்புரட்டி கீழேதள்ளி _ அவர் அவளை ஆக்கிரமித்து_ பரவிப் படர்ந்து_குமுறிக்கொந்தளிக்கிற பேரலைப் பேரார்ப்பரிப்பு.

வியர்த்துக் கொட்டுகிறது. தஸ்ஸு புஸ்ஸென்கிற மூச்சிரைப்பு. வெற்றிகொண்ட மாவீரனாக விலகி, மல்லாந்து படுக்கிற பரமசிவம். இருகைகளையும் சிலுவையைப் போல விரித்துப்போட்டிருக்கிறார்.

துவண்டு..சரிந்து ..களைத்துச்சோர்ந்துகிடக்கிற பூங்கொடியாக காமாட்சி. அவள்முகத்தில ஒருபூவின் மிருதுவான மலர்ச்சி. உதட்டில் ஒரு புன்னகை. கண்ணைமட்டும் சாய்த்து ஓரக்கண்ணால் பார்க்கிறாள். பார்வையில் மனநிறைவின் மின்னல் தெறிப்பு. "எஞ்செல்லம்_ என் ராசா_ என் தங்கப்பெட்டி" என்றெல்லாம் பூரித்துக் கொஞ்சுகிற -கொண்டாடித் திளைக்கிறது, அந்தப் பார்வையின் மின்னல்.

அந்த மின்னல் இவருள் மின்சாரத்தைப்பாய்ச்ச மீண்டும் புரண்டு அந்தக் கண்ணில்முத்தமிட முத்தமிட்டவரின் முகத்தை எடுக்க விடாமல் பிடரியைக் கைகளால் வளைத்து அவள் அமுக்கிக் கொள்ள.. ஆசைதீர ஒன்னை ஆளப்போறேண்டா" என்று மிழற்றுகிறஅவள்.

அப்படியே ...உயிர் வடிந்த உடம்பாகத் துவள்கிற பரமசிவம்.. அவள் பக்கத்திலேயே குப்புறச் சரிகிறார். அவர் முதுகெல்லாம் வியர்வைக் கசிவு. வியர்வைக்கோடுகளின் உயிர் நகர்வு. அடித்துப்போட்ட நாயாக சரிந்து கிடந்த காமாட்சி_ மெல்ல புரண்டு எழுந்து.. அவரது குதிகாலை முத்தமிடுகிறாள்; அவர்மேல் குப்புறக்கிடக்கிறாள். குதிகாலில் முகம். குதிகாலில் உயிரை அர்ப்பணிக்கிற காதலின் உச்சம்.

குதிகாலை எச்சிலால் நனைத்து..அவரது பின்னங்கால்கள் என்று மேலேறி வருகிற அவளது வேகம்_ "என்னை ஆளுடா"

பரமசிவம் இளைப்புடன் சொன்னார்.."இன்னைக்குத் தான் ரொம்பச் சந்தோஷமாயிருக்கேன்." தனது மார்புக்குள் அவர் முகத்தைப் புதைக்கிற காமாட்சி. புல்லரித்த பரவச உச்சத்தில் சொல்கிறாள். "இப்பவே செத்துரணும்".

31

பாலையா நாயக்கர் புஞ்சையை கிரையம் பேசி பத்திரம் முடித்த பிறகு — ஒரு நல்லநாள் பார்த்து பரமசிவமும், காமாட்சியும் வந்தனர். அப்போது ரெண்டுபயல்களும் பிறக்கவில்லை.

கல்யாணம் முடித்து நாலைந்து வருஷம் ஆகியிருந்த சமயம். சாயங்காலம் வெயிலின் வெள்ளை நிறம் மாறிவருகிறது. பொழுதுக்கால் உச்சியைவிட்டு இறங்கி, மேற்கில் வெகுவாக சரிந்து விட்டது. மேலடிவானம் முழுவதும் மேகமற்றவெற்றுவானம். கூடுதலாக பவுடர் அப்பிய கிழவிமுகம் மாதிரி, மேலடிவானம் சாயங்கால வெயிலில் களைகெட்டு கிடக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் மடிப்புகளுக்குள் கரிய நிழல் படுத்துக்கிடக்கிறது. மலையின் முகட்டுக்கோடும், வானமும் உரசுகிற இடத்தில்- ஆகாயம் முடிவதைப்போலத் தோன்றுகிறது.

பாலையா நாயக்கர் புஞ்சையைப் பார்க்காதவர்களல்ல, பரமசிவமும் காமாட்சியும். இதற்குமுன் உழுவதற்குப் பலதடவை ஏரும் மாடுகளுமாகப் போயிருக்கிற அனுபவம். காமாட்சியும் களைவெட்ட, பழமெடுக்க பருத்திவிதை, ஊன்ற என்று கூலி வேலைகளுக்குப் போயிருக்கிற நாட்கள் அநேகம்.

அப்போதெல்லாம்... அது பாலையா நாயக்கர் புஞ்சை. இன்றைக்குப் பரமசிவம், காமாட்சி புஞ்சை. எங்க புஞ்சை என்ற உரிமை பிறந்திருக்கிற மகிழ்ச்சியும் பரவசமுமாகப் புறப்படுகிற

பரமசிவம். காமாட்சி முகத்தில் பூ மலர்ந்த மாதிரியோர் விரிவு. ஒளிசிந்துகிற பூரிப்பு. மனச்சந்தோஷத்தின் கொந்தளிப்பு கண்களில் பெருமிதமாக விரிகிறது.

நீலநிறத்து சேலையும் ஜாக்கட்டும் உடுத்தியிருக்கிறாள். புத்தம்புது சலவைச்சேலை. சலவைவாசமும்,புதுமினுமினுப்புமாக ஆகாயம் போல ஜொலிக்கிற சேலை. எண்ணெய் தேய்த்து, இழுத்துக் கொண்டை போட்டிருக்கிறாள். கொண்டையில் மல்லிகைப்பூ. அவள்முகமும் கறுப்பு. தலைமுடியும் கறுப்பு. மல்லிகைப்பூ மட்டும் வெள்ளிச்சிரிப்பாக, தூக்கலாக பளீரிடுகிறது.

பரமசிவமும் சலவைவேட்டி கட்டியிருக்கிறான். தார்ப்பாய்ச்சி கட்டாமல், மடித்துக்கட்டியிருக்கிற அழகு. பீமராஜா திரேகம் போன்ற கம்பீரமும், ராஜதோரணையுமான பரமசிவத்தின் தோளில் ஒரு வெள்ளைத்துண்டு.

எதிர்வீட்டு ராஜம் சொன்னாள்.

"மொதமொத... சொந்தப்புஞ்சைக்குப் போறீக. விடியக்காலம் ஏறு பொழுதுலே போகக்கூடாது ?எறங்கு பொழுதுலே போறீகளே_ ?"

"பொழுதுலே என்ன இருக்கு அக்கா ? நம்ம மனசுலேயும் ஒடம்புலேயும் தெம்பு இருந்து பாடுபட்டா_ எல்லாப் பொழுதும், நல்ல பொழுதுதானக்கா_ ? நம்ம பொழுதுதானேக்கா ?"

"இருந்தாலும்_ பெரியாளுக சொன்னா_ அதுலே ஒரு ஞாயம் இல்லாமலா இருக்கும் ?"

பரமசிவம் தலையிட்டான். குறுக்கிட்டான்.

"அந்திநேரம்_ நல்லநேரம் தான் மதினி_"

"அப்பிடியா சொல்றீக, கொழுந்தா ?"

"முந்திக்காலத்துலேயெல்லாம், அந்திப் பொழுதுலே தான்... கல்யாணமுகூர்த்தமே வைப்பாக... ராத்திரிபட்டினப்பிரவேசமா பல்லக்குலே வருவாக"

"அப்படியா, கொழுந்தா ?"

"அதுமட்டுமில்லே மதினி... பகல்பொழுது வவுத்துப் பாட்டுக்கான வேர்வைப் பொழுது. அந்திப்பொழுதுதான் மனச்சந்தோஷத்துக்கும் மனுச உற்பத்திக்குமான பொழுது. இது தான் மங்களப்பொழுது_"

"ராஜம் சிரிக்கிறாள். கேலியும் கிண்டலுமான கண்டனச்சிரிப்பு என்ன கொழுந்தன்பேச்சு போற தெசை சரியில்லியே_"

"மதினிமாருகிட்ட பேசாம, வேற யாருகிட்டே போய் இப்புடிப்பேசமுடியும் ?"

"போங்க...போய் புஞ்சையை பாத்துட்டு, சந்தோஷமா வாங்க. காமாட்சி வவுத்துலே பூச்சி புழு உண்டாகட்டும்"

" அதது_ நேரம் வந்தா_ தானா நடக்கும், மதினி" கேலிப் பேச்சும் கிண்டல் சிரிப்புமாக அந்தத்தெருவே, அந்திப்பூந்தோட்டமாக ஒளிசிந்தியது.

கதவைச்சாத்திவிட்டு தெருவில் இறங்குகிற காமாட்சியும் பரமசிவமும். பரமசிவம் இடுப்பில் பம்ப் ஷெட்ரூமின் சாவியை சொருகியிருந்தான். சாவியுடன் ஒரு செயினில் தொங்குகிற ஏதோ ஒருடாலர்.

ஊரைக்கடந்து ... ஊருணியையும் கடந்து, வண்டிப்பாதையில் நடக்கின்றனர். வண்டிப் பைதாத்தடங்களுக்கு நடுவில் கரடுபற்றிய அறுகு. நெருஞ்சிப்பூக்களின் மஞ்சள் சிரிப்பு. வண்டிப்பாதையின் ஓரங்களில் தித்திச்செடிகள். அவற்றில் சந்தனநிறப்பூக்கள்.

மைனாக்களின் சிறகடிப்பு. ஊருணிக்குள் தரையில் பூத்த வெண்பூச்செண்டாக கொக்குகள். மண்நிறத்திலான நாரைகள்.

மஞ்சணத்தி மரங்கள். வெளிர்நீலநிறத்து பனங்காடைகளின் வீறிடல்கள். காட்டில் ஆளில்லை. வேலை நேரம் கடந்தாகி விட்டது. வீட்டுப் பாடு பார்க்க மனிதமக்கள், மாடுகன்றுகளுடன் அங்கங்கு தலைதெரிகிறது. அவர்களும் ஆடுகளை நகற்றி, பத்திக்கொண்டு ஊரோரம் நெருங்குகின்றனர்.

"மொத மொத... புதுப் புஞ்சைக்கு வாரோமே... வாழைப்பழம், வெத்தலை பாக்கு பத்தி எடுத்துட்டு வந்துருக்கலாம்."

பரமசிவத்தை ஓரக்கண்ணால் நிமிர்ந்து பார்க்கிற காமாட்சி.

"இதைச் சொல்றது, ஊருக்குள்ளே இருக்குறப்ப சொல்லியிருக்கணும். நடுக்காட்லேயா வந்து சொல்வாக?"

"இப்பத்தானே.. யாவுகத்துக்கு வந்துச்சு?"

"சாமிங்குறது இங்க இருக்கு. மனசுக்குள்ளே மனசு வைச்சு, மனசார கும்புட்டுக்கிட்டா...போதும். பத்தியிலேயும் சாம்பிராணிப் புகையிலேயும் மட்டுமா, சாமி இருக்கு?"

நெஞ்சில் கைவைத்துப் பேசுகிற காமாட்சியை பிரமிப்புடன் பார்க்கிற பரமசிவம்.

"இம்புட்டு வெவரம் எங்க இருந்து வந்துச்சு,ஒனக்கு? ராஜா காலத்துமந்திரிகணக்கா... மண்டை பூராவும் ஒனக்கு, அறிவுதான்"

"ரொம்பவும் தாளிக்காதீக. வுட்டா, தலையிலே வைச்சு கொண்டாடுவீக.."

"கொண்டாடலாம்லே? கரண்டு போட்ட புஞ்சைங்குற தாலே... வேண்டாம்னு சொல்லிட்டேன். தலையை இப்புடியும் அப்புடியும் ஆட்டுன என்னை,மேலும் கீழுமாக ஆட்டவைச்சு புஞ்சை வாங்கறதுக்கு, புத்திசொன்ன மகராசியே.. நீ தானே?"

வஞ்சகமில்லாமல் முகத்துக்கு முகமாகப் பாராட்டுகிற புருஷனை...முகமெல்லாம் பூரிக்கப் பார்க்கிறாள். அவள் உதட்டின் ஈரத்தில், அந்திவெயிலின் மின்னல்.

சாயங்கால வெயிலில் அவர்களது நிழல்கள் கீழ்ப்புறமாக தரையில் நீள்கிறது.வண்டிப்பாதையில் ஆளுக்கொரு தடத்தில் நடக்கின்றனர்.

புஞ்சைக்குப் பக்கமாக நெருங்கிவிட்டனர். பரமசிவம் மனசில் ஒரு நெகிழ்ச்சி. மனசின் சந்தோஷ ஊற்றுகளின் பீறிடல்கள், இனம்புரியா உணர்ச்சிகளின் கூத்தாட்டம்.

இது...யாரிடமோ இருந்த நிலம். இன்னைக்கிலிருந்து நம்ம நிலம். நாமே சம்பாதித்து வாங்கிய நிலம்.நாமே பாடுபட்டு, வெளையவைச்சு... சம்பாதிச்சு வாங்குனநெலம். நம்ம ஒடம்பை, கடம்பா கடைஞ்சு வாங்குனநெலம். வம்பாடுபட்டு கொட்டுன வேர்வையிலே, வாங்குன மண்ணு. இன்னைக்கிலிருந்து நம்ம நெலம். இனிமே... நிரந்தரமாக இது நம்ம நெலம்தான். என்னோட வம்சத்தின் மூச்சும், வேர்வையும்,மூத்தரமும் உசுரும் இந்த நெலத்துலேதான். என்னோட பேரனின் அந்தப் பேரனுக்குப் பேரனும் இந்த நெலத்துலேதான் வேர்வை சிந்துவாக...

பரமசிவத்திற்குள் பொங்கிப் பெருகுகிற நினைவுகள். நெஞ்செல்லாம் ஒரு பரவசத்தினறல்.திரும்பி, காமாட்சியைப் பார்க்கிற கண்களில் நீர்கோத்திருக்கிறது. காமாட்சிக்கும் அதே நினைவுகள். அதே உணர்ச்சிப் பேரலைகளின்ஆர்ப்பரிப்பு.

"ஏங்க..."

"என்ன காமாட்சி?"

" நம்ம வம்சத்துலே வரப்போற நம்ம பேரன்மாருக... இந்த நெலத்துலே நின்னு, நம்ம பேரைச்சொல்லுவாகளா?"

"சொல்லுவாக... நீயும் அதைத்தான் நெனைக்கியா?"

பரமசிவத்துக்குள் ஒரு சிறிய விசும்பல். முழுத்த ஆண்மகனின் அழுகை. ஆனந்தப்பரவச வெடிப்பழுகை. வெடித்தெழுகிற விசும்பலும், வழிகிற மனக்கண்ணீருமாக ரெண்டு பேரும் ஒரேகணத்தில்- ஒரேமனத்துடன் வலது காலெடுத்து நிலத்திற்குள் வைக்கின்றனர். குனிந்து காலடி மண்ணைத் தொட்டு வணங்கிக் கொள்கின்றனர். நிலத்துமண்ணை அள்ளி..திருநீறாகப் பூசிக்கொள்கின்றனர்.

நிலத்து மண்ணை விரல்களால் தீண்டுகிற கணத்தில்... மனசுக்குள் ஒரு நெகிழ்வு. குழைந்து கனிந்து கசிகிற உணர்வின் வரிகள்.

புஞ்சை மண்ணை அள்ளுகிற பரமசிவம். ரெண்டு கையாலும் கூட்டியள்ளுகிற மண். உயிர்ச்சத்து இல்லாத பொறுபொறுத்த மண். உயிரற்றமண். பொலபொலவென்றிருக்கிறது.

ஈரல் கட்டி மாதிரி இருக்க வேண்டிய மண். ஈரமும் இல்லாமல், உயிர்ச்சத்தும் இல்லாமல் வறண்டுபோய்... வெலவெலத்துப் போயிருக்கிற மண். பொக்குமண். விளைச்சல் இல்லாமலேயே உலர்ந்து போன பொக்குத்தான்யம் மாதிரி... உயிர்ப் பற்று காற்றாடியிருக்கிற மண். மலட்டுமண்.

மண்டிபோட்டு அமர்ந்து, மண்ணையள்ளி, காமாட்சியிடம் காட்டுகிற பரமசிவம்.

"குப்பையடிக்காம...கொழைதழை ஓரமில்லாம.... சாணிசகதி காணாம... வருஷக்கணக்கா பட்டினிகெடந்துருக்கிற நெலம். டிஏ.பி., காம்ப்ளெக்ஸ், யூரியான்னு ரசாயன ஓரங்களைப் போட்டுப்போட்டு நெலத்தை ஒட்ட ஒட்ட உறிஞ்சு உசுரறுத்துட்டாங்க. உசுருல்லாதமண்ணு. கூளம் போடாமலேயே வேலைவாங்குன காளைமாடுக எலும்புந்தோலுமா ஓய்ஞ்சு போறமாதிரி உசுரு செத்துக் கெடக்குறமண்ணு"

அசலான கவலையுடன் வருத்தப்பட்டு மனம் தவிக்கிற பரமசிவத்தின் தலைமுடியைப் பரிவுடன் வருடுகிற காமாட்சி. அதான்... நம்மகிட்டே வந்துருச்சு இல்லே? மண்ணை புள்ளை கணக்கா கண்ணும் கருத்துமா பாத்துக்கிருவோம். நம்மகிட்டே மாடுகன்னு இருக்கு.சாணிசகதிக்குப் பஞ்சமில்லே. புஞ்சைக்கு வஞ்சமில்லாம ஓரம்செய்வோம். உசுருகுடுத்து, உசுப்பிருவோம்..."

"வெறும்மண்ணாகி நம்மகிட்டேஒப்படைச்சிருக்காக. இதை விளையுற உசுருள்ள மண்ணாக்குறது நம்ம கையிலே தான்இருக்கு..."

தாபமும் தவிப்புமாகப் பேசுகிற பரமசிவத்துக்குள் ஒரு மனப்பாரம். அந்த மனப்பாரத்தைத் தோள்தந்து வாங்கிக்கொள்கிற காமாட்சி. உயிர்ப்பங்காளி.

அது, வெறும் தாபமல்ல. வெறும் தவிப்பல்ல. கனவு. உயிர்க்கனவு. உயிருக்குள் கருவளர்ந்து உருவாகிற கன்வு. மண்ணை மகனாக நேசிக்கிற உழவனின் கனவு.

அது,வெறும் கனவல்ல. திட்டம். நனவாக்கியேதீரவேண்டும் என்கிற திட்டம்.நிறைவேறிய திட்டம். வியர்வை நிறைவேற்றியது.

அருஞ்சுனை பேச்சுக்குச் சம்மதித்து, அந்த நிலத்தை முருகேசனிடம் ஒப்படைப்பதாக.. சொல்லிவிட்ட மறுநாள்.

"இளையவனாக, இருந்த முருகேசன், விளங்காமப்போற பயலாகிப்போன மறுநாள்.

இனிமே, அந்தப்புஞ்சைக்கும் நமக்குமான சங்காத்தம், அத்து போச்சுன்னு உறுதியாயிருச்சு. அந்தப்புஞ்சை மண்ணை அந்த வெளங்காதபயல் கொன்னுபோடுவான்.

கொல்லுறதுக்குத் தானே... எடுக்காத எடுப்பு எடுத்து, செய்யத்தகாத சேட்டை செய்து... ஒழைச்சுச் சம்பாதிச்ச என்னை ஊர்முன்னாடி, தலைகுனிய வைக்குறதுக்கு நெஞ்சுதுணிஞ்சு...

என்னைக்கொதிக்கவைச்சவன்,எப்புடி வெளங்குவான் ? எப்படி உருப்படுவான் ? நாசமாய்ப்போற நேரம் வரப்போய்த்தானே, அவனுக்கு இப்புடிப் புத்திபோகுது ? ஊர்நிர்வாகஸ்தர்கள் வீடுகளைத் தேடிக் கால் போகுது ?

மண்ணைக் கொன்னுருவான்.

பரமசிவத்தின் அறுபது வயது மனசு, முதுமையில் கதறுகிறது. இன்னிக்கோட...அந்த நிலத்துக்கும் எனக்குமான உறவு முடியப்போகுது என்ற நினைவே நெஞ்சுக்குள்ளிருந்து நீள்கிற குத்தீட்டியாக வலித்தது.

கடைசி_ கடைசியாக_ அது உசுரோட இருக்குறப்ப. ஒருதடவை பாத்துட்டு வந்துருவோம் என்கிற துக்ககரமான நினைவின் துடிப்பு.

மேற்குமலைத்தொடருக்கு மேலாகப் பொழுது நிற்கிற போது,புறப்பட்ட பரமசிவம். மேலடிவானத்தில் அடர்த்தியாக நின்ற மேகப்பொதிக்குள் மறைந்துவிட்ட பொழுதுக்கால். அந்தி வெயிலுமில்லாதுபோய்... ஒருதவிட்டுவெளிச்சம் மட்டுமேயிருந்தது.

புஞ்சையை நோக்கி நடக்கிற பரமசிவம். இதுதான் கடைசி நடை. இனி இந்தப்புஞ்சை இருக்குற திசைக்கடையை ஏறிட்டும் பார்க்க மாட்டேன் என்கிற மனவைராக்ய நினைப்பு.

மஞ்சணத்தி மரத்துள்ளிருக்கிற செம்போத்துப்பறவையின் சோகமும், ஏக்கமுமான இனிய கூவல். அந்தக் கூவலின் இனிமை. அதற்குள்ளிருக்கிற கவலைப்பாரம். ஏக்கச்சுமை. நெஞ்சைப் பிசைகிற மாதிரியிருக்கிறது.

நிலத்துக்குள் இறங்குகிறார், பரமசிவம்.

முப்பது வருஷ வியர்வை. ஒவ்வொரு வருஷமும் சாணிக்குப்பை. கிடையாடுகளின் சாணியும் மூத்திரமும் ஆட்டுவெக்கையும் கொழைதழைகுப்பை. வேப்பங்கொழைகளை வெட்டிகுழிக்குள் போட்டு, மண்ணையும் போட்டு, மக்கவைத்து... அந்தஉரம்.

நிலம் உழுதுகிடக்கிறது. கன்னங்கரேலென்று ஈரமின்னலாக நிலம். கொழுத்தகிடாயின் ஈரல் கட்டிமாதிரி...உழுதமண். ஆங்காங்கே காய்ந்த எருவாகக் கிடக்கிற சாணம். மண்ணின்ஈரம்,பாதத்தில் குளிர்ச்சியைத் தருகிறது. பிள்ளையின் ரத்தம். மண்டிபோட்டு உட்காருகிற பரமசிவம். அவரது முழங்கால், உழவு மண்ணுக்குள் பதிகிறது.

ஈரல் கட்டி மாதிரி கன்னங்கரேலென்று மின்னுகிற ஈரமண்ணை ரெண்டு கையையும் அகலவிரித்து... பாசத்துடன் மண்ணைப்பரசி...கையில் அள்ளுகிறார். கைப்பிள்ளையைத் தூக்குகிற மனப்பரவசம், அவருக்குள்.

உழவு மண்ணை அப்படியே அண்ணாக்க நிமிர்கிற முகத்தில் போடுகிறார். மண்ணை மீண்டும் அள்ளி நெஞ்சில் போடுகிறார். மண்ணை அள்ளி அள்ளி முகத்திலும் தலையிலும் மார்பிலும் மீண்டும் மீண்டும் போட்டுக் கொள்கிற மன உக்கிரம்.

அவருக்குள் பொங்கிப் பெருகிவருகிற அழுகை. வெடித்தெழுந்து பீறிட்டுக் கிளம்புகிற மனச்சோகத்தின் குரல் தெறிப்பாக... "கோ, குலை" யென்று அழுது கதறுகிறார்.

"ஐயோ... பாதரவே...முப்பது வருஷமா ஒன்னை ஊட்டி ஊட்டி வளர்த்தேனே... வசக்கி வேலை வாங்குனாலும், வயித்துக்கு வஞ்சகமில்லாம ஓரம் போட்டேனே... உசுர தந்தேனே... ஒண்ணுபோட்டா, ஓராயிரமா திருப்பித்தந்த ஒனக்கு, நன்றி விசவாசமா இருந்தேனே..புள்ளை மாதிரி ஊட்டி ஊட்டி வளர்த்த

ஒன்னை.. எம்புள்ளையே கொல்லுறதுக்கு வுட்டுக் குடுத்துட்டேனே...ஐயோ... நா...ஒரு பாவி... நா ஒரு பாவி...

இனிமே... அந்த வெளங்காமப் போற பயல், நாசமாய்ப்போறபயல்... ஒன்னை மண்ணாக்கூட மதிக்கமாட்டானே, புள்ளையாக எப்புடி மதிப்பான்? கொதிக்குற ரசாயன ஓரங்களைக் கொண்ணாந்து... ஒம்மேலே போடுவானே... ஒன்னைக் கொல்லுவானே.. உசுரை உறிஞ்சு... வெறும் மண்ணா.. மலட்டுமண்ணா... ஆக்கிருவானே...

கதறிக்கதறி அழுகிற நினைவுகளின் முடிவற்ற புலம்பல். தார்ப்பாய்ச்சிய வேட்டி பூராவும் மண் துகள்கள் நெஞ்சு ரோமம் பூராவும் ஈரமண். குழைவான் துகள். உழவுமண்.

முழங்காலை மண்டிபோட்டு உட்கார்ந்திருக்கிற கோலத்திலேயே... குப்புறச் சாய்கிற பரமசிவம். உழவு மண்ணில் புதைகிற முகம். படிந்திருக்கிற நெஞ்சு ரெண்டு கைகளையும் அகலவிரித்து மண்ணைப் பாசத்துடன் பரவுகிற வேகம். மண்ணையள்ளி முதுகில் போட்டுக்கொள்கிற வெறி. சாமிவந்து, உக்கிரமமாக ஆடுகிறவரின் வெறியைப்போல... உன்மத்த உணர்வின் உச்சத்தில் பரமசிவம்.

அவருக்குள் பொங்கிப் பொங்கிப் பெருகி வருகிற அழுகை. சாகக்கிடக்கிற அப்பாவைக் கட்டிப் புரள்கிற மகனின் உக்கிரசோகம். வெம்பி வெதும்பி வெடித்தழுகிற அழுகை.

"ஐயோ... ஐயோ... ஐயோ.." என்று முடிவற்று அரற்றுகிற உதடுகள். இன்னிக்கோட இந்த மண்ணோட சங்காத்தம், எனக்கு முடியப் போகுது" என்று புலம்பித் தவிக்கிற உதடுகள். அப்படியே சாய்ந்து... நிலத்துமண்ணின் ஈரத்தில் புரள்கிற வெறி வேகம். அப்படியே அடித்துப்போட்ட மாதிரி கிறங்கிப்போன பரமசிவம்.

அந்தி மறைந்து, இருள் வந்து முழுசாக ஆக்ரமித்து, ரொம்ப நேரமானபிறகு.. முழிப்பு தட்டியது பரமசிவத்துக்கு.

நிலத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் தன்னைப் பிய்த்துக் கொண்டு ஊரைநோக்கி நடந்துவந்த பரமசிவப் பிரேதம்.

32

"கருசக் காட்டுக்குப் போய் நாத்தறுப்போமா?

காமாட்சிதான் கேட்டாள். சோளத்தை உரலில்போட்டு குத்தி மாவாக்கி, கொதிக்கவைத்துவிட்டாள். திறந்திருக்கிற பானையில் கொதித்தடங்குகிற சோறு. நீரும் மாவும் சேர்ந்து பிசினைப்போல உறைந்துவருகிறது. கொதிப்படங்குகிற இறுதியடையாளமாக "டிப்,டிப், டிப்" என்று நுரை எழுந்து வெடிக்கின்றன. அரிசிப்பருக்கையும் வேகவைத்துஇறக்கிவிட்டாள். மதியம் வைத்த புளிக்குழம்பும், சுரைக்காய் கூட்டும்மிச்சமிருக்கின்றன. அதையே ராத்திரிக்கும் ஒப்பேற்றிவிடவேண்டியதுதான்.

பரமசிவம் காளை மாடுகளுக்கடியில் உட்கார்ந்து உன்னி பொறுக்கிக் கொண்டிருந்தார். ஈமாதிரி இருக்கும். ஈவடிவத்தில் மரக்கலரில் அட்டை மாதிரி இருக்கும். மாட்டின் ரத்தம் அடிவயிற்றில் இருக்கும். தேவைப்படுகிறபோதெல்லாம் மாட்டின் ரத்தம் குடிக்கும். உட்கார்ந்தாலும் ...அடியில் தலை சாய்த்து, கழுத்தைத்திருப்பி அண்ணாந்துபார்க்க வேண்டும். நரம்பு மறைவில் சாணி படிந்து உலர்ந்த மறைவுகளில் ஒளிந்திருக்கும். தேடிக்கண்டுபிடிப்பது கஷ்டம். கண்டுபிடித்துவிட்டால் பற்றுவதும், பிடிப்பதுவும் சுலபமல்ல. சுட்டுவிரலும் கட்டைவிரலும் சேர்ந்து உன்னியைப் பற்றிவிடும். இழுத்தால் வராது. வரமறுத்து அடம் பண்ணும். மலைங்காட்டு அட்டை மாதிரித்தான். இலேசில் வராது. வலுவாகக் கட்டைவிரலையும் சுட்டு விரலையும் ஊன்றி விறைப்பேற்றி... வலிமையையெல்லாம் விரலில் குவித்து, "தம்ம்" பண்ணினால் தான் பிடுங்கமுடியும். பிடுங்கி கல்தரையில் வைத்து நசுக்கவும்முடியாது.

நசுங்காது.மரச்சிறாய் இணுக்குமாதிரி மல்லுக்கட்டும். தீயில் போட்டுத்தான் கொல்லமுடியும்.

மகளுக்குத் தாய் பேன் பார்க்கிற அதேபாசத்துடன் பரமசிவம் அடிக்கடி உன்னி வேட்டை நடத்துவார். காளைமாடு என்பது வெறும் ஜீவனல்ல. பாடுகளில் கழுத்தை நீட்டுகிற தோழன். ஏர்க்கலப்பைக்கும் வண்டிக்கும் முகக்காலில் கழுத்தைக்கொடுக்கிற சக சிநேகிதன். சகா. அதன் ஆரோக்கியமும், நலமும் சம்சாரிக்கு ரொம்ப ரொம்ப முக்கியம். அதிலும் பரமசிவம் மாடுகளை ரொம்ப நேசிக்கிறவர்.

ரத்தம் குடிக்கிற உன்னிகளை அடிக்கடி பொறுக்கி நெருப்பில் இடுவார். இன்றைக்கும் அப்படித்தான்.

உன்னி மேய்ச்சல் அடிவயிற்றிலிருந்தால்... மாட்டுக்கு அடிக்கடி புல்லரிக்கும். மாட்டுத்தோலில் அலைஅலையாக ஓடுகிற புல்லரிப்பைப் பார்த்தே... பரமசிவம் கணித்துவிடுவார்.

"உன்னி_ ரொம்ப இருக்குமோ ? இன்னிக்கு வைச்சுக்கிருவம் கதையை..." என்பார். மாட்டின் கழுத்தில் தடவுவார். முதுகில் வருடுவார். "உன்னி ரொம்ப கடிக்குதாக்கும் ? கவலைப்படாதே... இன்னிக்கு அதுகளை "கண்டு பேசிருவம்" என்று காளைமாடுகளுக்கு தைர்யமும், ஆறுதலும் சொல்லுவார்.

உன்னிகளைப் பொறுக்கி முடித்துவிட்டு,தொழுவத்து மூலையில் பழைய கூளத்தில் உருவாக்கியிருந்த நெருப்பை மண்ணள்ளிப் போட்டு அணைத்துவிட்டு...வீட்டுக்குள் வந்த பரமசிவத்திடம் தான் காமாட்சி கேட்டாள்.

"கருசக்காட்டுக்கு நாத்தறுக்கப்போவமா ?"

கூளத்துக்காகவே விதைத்த நாற்றுச்சோளம். விரல் அளவு இடைவெளிகூட இல்லாமல் விதைத்த நாற்றுச்சோளம். இடைவெளி யற்ற நெருக்கம் தான்... சோளநாற்றை முற்றவிடாமல் இளசாகவே, மென்மையாகவே வளர்த்தெடுக்கும். பொடிசாக கதிர்வாங்கும். கதிர்வாங்குகிற பருவத்துக்கு அறுத்துவிட்டால்தான், மாடு மென்று திங்குற அளவுக்கு இளசாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

அறுப்புக்கு ஆள்தேடிப்பார்த்தாள் காமாட்சி. ஏழெட்டுக்குறுக்கம். பாதை யோரத்தில் சமுத்திரம் போல கன்னங்கரேலென்று பரந்துகிடக்கிற கரிசல்காடு. எறும்பு நுழையக்கூட இடமிருக்காது. சிறிய சிறிய பசுந்தோகைகள். பார்த்தால் பசிய நிறத்து அலைகடல் போலத் தோன்றும். உயர்ந்த தோகைகள் தங்கநிறத்தில் இருக்கும்.

அறுப்புக்கு ஆட்கள் கிடைக்கமாட்டேன் என்கிறது.இன்றைக்கு வாரேன், நாளைக்கு வாரேன் என்று இழுத்தடிக்கிறதுகள். காமாட்சியுடன் கூலிவேலைக்கு வரப்பயப்படுவார்கள்.

பண்ணையார் வீட்டம்மாமாதிரி குடைபிடித்து மஞ்சணத்திமரநிழலில் இருந்துகொண்டு, மேற்பார்வை பார்க்கிற வர்களுக்கு ஆள், அட்டியில்லாமல் கிடைக்கும். கூப்பிட்டால் "நாவாரேன் நாவாரேன்" என்று போட்டிபோட்டுக் கொண்டு ஓடிவருவார்கள்.

கேலிப்பேச்சுகளும், கிண்டல்சிரிப்புகளும் ஊர்ப்புரணிகளும் உள்ளூர் கதைகளும் பேசிப்புழங்கி.. லேசுமாசாக வேலை பார்த்துவிட்டு சம்பளம் வாங்கிவிட்டுப் போய்விடலாம்.

காமாட்சி மாதிரி பண்ணரிவாள் பிடித்து, மண்டிபோட்டு உட்கார்ந்து கொண்டு "பர்ருச், பர்ர்ர்ர்ருச்" சென்று அறுத்துச் சாயப் போட்டுக் கொண்டு போகிற பாட்டாளிகள் புஞ்சைக்கு என்றால், வரத்தயங்குவார்கள். "எனக்குச் சோலி இருக்கு" எனக்கு கொறை வேலை கெடக்கு"என்று பின்னடிப்பார்கள்.

பேசத்"தேர" மிருக்காது.சிரிக்க வழி இருக்காது. காமாட்சி யுடன் சேர்ந்து அறுத்துக்கொண்டு சமதையாக முன்னேறியாக வேண்டும். உயிர்அறுந்துபோகும்.

"அவா புஞ்சை அவாகூளம்... அவா உசுரைக்குடுத்து அறுக்க வேண்டியதுதான். அவா குடுக்குற கூலிக்கு அறுக்குற நாமளும், என்னத்துக்கு மாய்ஞ்சுமடியணும்? கூலிக்கு மாரடிக்க வந்துட்டு, தாலியறுக்கவா முடியும்?"

இப்படியொரு நினைப்பு.இதனால் பின்னடிப்பு. ஆள்கிடைப்பதில் தாமதம். மீனக்கா. செண்பகம் என்று ரொம்ப

நெருக்கமாகப் பழகுகிற ஏழெட்டு ஆட்கள் நாளை மறுநாள் அறுப்புக்கு வருவதாகச் சம்மதித்திருக்கிறார்கள்.

பரமசிவம், காமாட்சியை "உர்ர்ர்"ரென்று பார்க்கிறார். பிடிக்காதபார்வை. உன்னி பொறுக்கி பொறுக்கி..இடுப்பொடிந்து விரல்கள் வலியெடுக்க... உஸ்ஸ்ஸென்று உட்காரலாம் என்று வந்தால்... "அறுப்புக்கு வாரீயா" என்கிற கழுத்தறுப்பு.

"அதான்... ஆள்க வாரதாக சொல்லி யிருக்காக இல்லே? அதுக்குள்ளே.. நீ என்னத்துக்கு பறக்கே?"

"இன்னிக்கும் நாளைக்கும் நாம போனோம்னா... ஒருகுறுக்கம் அறுத்துப் போட்டுரலாம்.. இருக்குற "சுமந்த" (மிகஅதிக) வேலையை,குறைச்சுக்கிடலாம்லே?"

"ஓடம்பு புண்ணாகிப்போகும்லே?"

"உக்காந்து எந்திச்சா... பொழுது மண்ணாகும்லே?"

"ஓடிச்சாகணும்ங்குறீயா?"

"நெழல்லே உக்காந்தவனுக்கு எதிர்லேயிருக்கிற தொலைவு பெருகும். வெயில்லே எறங்கி நடந்தவனுக்குத் தொலைவு சுருங்கும்,

"சரி.. ஓய்ஞ்சு உக்காந்த ஆனையைவிட ஊர்ந்து போற எறும்பு கெட்டிக்காரனாயிரும்ங்கே? சரி... நீபெறப்புடறப்ப, நாமட்டும் இங்க ஊஞ்சல் கட்டியா ஆடப்போறேன்..."

"கருசக்காடு ரொம்பத் தொலைவு. நடந்து போனா... பொழுது,அதுக்கே சரியாயிரும். வண்டியை போட்டுப் போவோம். வாற்ப நாலைஞ்சு கூளக்கட்டுகளை வண்டியிலே போட்டுக் கொண்ணாந்துரலாம். என்ன சொல்லுதே?" என்கிற பரமசிவம்.

"இது நல்ல யோசனையாயிருக்கே. மாட்டை அவுத்துட்டு வந்து, வண்டியிலே போடுங்க"

சாயங்கால வெயில் சாந்தமாகத் துவங்கியிருந்தது. வண்டியை இழுத்துக்கொண்டு மாடுகள் நடையை எட்டிப்போட்டன. வண்டிப் பைதாக்களின் "தடக், தடக்" கென்று ஒரே லயமான சத்தமும் மாட்டுக்குளம்புகளின் சீரான சத்தமும்.... கழுத்துமணிகளின்

சங்கீதச் சலங்கையும் ஒரே சத்தக் கலவையாக சங்கமமாகி... பறவைகளின் சத்தத்தை வரவேற்றது.

வண்டிச்சட்டத்தில் உட்கார்ந்து மாட்டைப்பத்துகிற பரமசிவம். பரமசிவம் பின்னால்... வண்டியில் உட்கார்ந்துவருகிற காமாட்சியின் இடுப்பில் இரண்டு பண்ணாரிவாள்கள்.

தெற்காமல்போகிற வண்டி மேற்கிலிருந்து தனது நெருப்புவிரல் களால் தீண்டுகிற சாயங்காலவெயில். மாராப்புச்சேலையை இழுத்து இடது பக்கக் கன்னத்தையும் செவியையும் மறைத்து, நிழல் உண்டாக்கிக் கொள்கிறாள்.

"மேல்துண்டு கெடக்குல்லே ?"

"வெயிலுக்கா ?"

"சுள்ளுங்குல்லே ?"

"அதுபாட்டுக்கு சுள்ளுங்கு. நமக்கென்ன ? வெயிலுக்குப் பயந்தா_ வேலைசோலிக பாக்க முடியுமா ?

"நம்ம எதுவூட்டு ராசம் அக்கா... ஒருதாக்கல் சொன்னாக_"

வாழ்வின் அந்தரங்கத்துக்கு இடம்மாறுகிற பேச்சு. தொண்டைக்குள் குரலாக_ தணிந்த சத்தத்தில் கிசுகிசுக்கிறாள்.

"என்னவாம் ?"

"வெளித்திண்ணையிலே கட்டில்போட்டுப் படுக்கான்லே ?"

"நம்ம பய, மூத்தவன் தானே ?"

"ம்"

"அவனுக்கென்னவாம்... ?"

"சாமக்காட்ல வெறும் கட்டில்கெடக்காம். ஆளைக் காணலியாம்"

"எங்க போறானாம்_ ?"

"அது தெரியலே_ அந்த அக்காவுக்கு"

"ம்_ம்_ம்_ அப்ப_ ராத்திரி நேரம் கிளித்தட்டு பாய்தான் ?"

"கூப்புட்டு விசாரிச்சுருவமா ?"

" விசாரிச்சு ஆகப்போறது என்ன ?"

"பெறவு_ ?"

"பேசாம... ஒருநல்ல பொண்ணைப் பாத்து "மூய்ச்சி" வைச்சுட்டா, காளைங்கன்னு தொழுவத்துக்குள்ளே நின்னுக் கிரும்லே ?"

"பொண்ணுன்னா_ தேடணும்லே ? நாலு பேருகிட்டே தாக்கலு சொல்லிவைக்கணும். கொணமான பொண்ணாவும் இருக்கணும். வஞ்சகமில்லாம பாடுபடுற பொண்ணாகவும் அமைஞ்சுட்டா_ நம்மபய யோகக்காரன்தான்"

உருளும் வண்டிக்குள் உட்கார்ந்துகொண்டு அடுத்த தலைமுறையின் வாழ்க்கையை நகர்த்துகிற அந்தக் கிழடுகள்.

"எங்க வழியிலே... ஒண்ணுவிட்ட அண்ணன் மாரிச்சாமி. அவருகிட்டே ஒருபொண்ணு இருக்கா. சடங்காகி அஞ்சுவருசமாச்சி. மஞ்சக்கெழங்குகணக்கா.. நல்லசெவப்பு. முகலட்சணமான பொண்ணு"

"கேட்டா _ தருவாகளா ?"

"நம்ம பயலுக்கென்ன ? ராசாகணக்கா. நாம கிட்டே காடுகரைக இருக்கு. சொத்துபத்து இருக்கு. பொண்ணு குடக்குறதுக்கு கசக்கவா_ செய்யுது ?

"அப்ப_நீயே துப்பு சொல்லிப்பாரு. அங்க இங்க தேடியலையாம_ சொந்தத்துலேயே அமைஞ்சிட்டா_ அலப்பரை இல்லே"

"ம்ம்... பார்ப்போம். அந்த ஊர்லேயிருந்துதானே, பாத்திரஏவாரி வாராரு ? அவருகிட்டேயே சொல்லி விடுவோம்_"

யோசனையில் உறைகிற மனத்தீவிரத்துடன் பின்னோக்கிச் செல்கிற காடுகளையே பார்க்கிற காமாட்சி. வண்டியின் ஆட்ட அசைவுக்கேற்ப ஆடுகிற அவள். குலுங்குவதைக் கண்டு கொள்ளாத காமாட்சி.

"மாட்டைச்சுண்டிப்பத்துங்க... போய்.. நாத்தறுக்கணும் பொழுதுபோகுது"

சுதாரிப்பாகிற பரமசிவம். தன் பாதங்களால் மாடுகளின் அடிவற்றில் செல்ல எற்று எற்றி... மாடுகளைத்துரிதப்படுத்துகிறார். அதுகளும் வால்களைச் சுழற்றிக் கொண்டு, தலையையாட்டிக் கொண்டு எட்டிப் போடுகின்றன.

ராசாத்திக்கு வயது முப்பத்தேழு இருக்கும். நடுப்பருவம். ஒரே மகள். வாய்த்த மாப்பிள்ளையே பாண்டிச்சேரி பக்கம். நல்ல இடம். மளிகைக்கடை. தாயில்லாதவன். அன்புக்கும் பாசத்துக்கும் வீட்டுச் சோற்றுக்கும் ஏங்குகிறவன்.

"நகை நட்டு கூடவேண்டாம்" என்று வந்துநிற்கிற மாப்பிள்ளை பெண் கொடுத்தால், மகிழ்ச்சி அடைவான். தலையில் வைத்து, மகளைக் கொண்டாடுவான் என்று புரிகிறது.

ஆனால்...மகளுக்கு வளமான.. செழிப்பான வாழ்க்கை அமைந்துவிடும். தான் நாதியற்றுப்போவோம். தனிமையில் கிடந்து சீரழிய வேண்டும். தலைவலி காய்ச்சல் என்றால் கூட புரட்டிப்பார்க்க ஆள் இருக்காது. தனது பாதுகாப்பா, மகள் சுகவாழ்வா ?

தான்.. நாதியற்று... தனிமையில் கிடந்து தவித்தாலும் பரவாயில்லை...! இளம்பிஞ்சு. சிறுநாற்று. பொடிக்குஞ்சு. அவள் வாழ்க்கையில் நன்றாக இருந்தால் போதும். வறுமையிலும், கூலி வேலையிலும் வேனாய் கொதிக்கிற வெயிலிலும் வெந்துமடிந்த மகளின் திருமண வாழ்வாவது, நகையும் நட்டும் காரைவீடும், கரண்டு விளக்குமாக செழிக்கட்டும் என்று-

முடிவுக்கு வந்த ராசாத்தி, தாய்மை மனசு முடிவையே செயலாக்கினாள். ஜேஜே என்று நடந்த கல்யாணம். எல்லாம் மருமகன் செலவு.

மாப்பிள்ளை விருந்து, மறுவீடு எல்லாம் முடிந்து, மகளை கூட்டிக்கொண்டு பாண்டிச்சேரிக்குப் பயணப்பட்டுவிட்ட மருமகன்.

ராசாத்திக்கு அன்றைய சாயங்காலம், சுள்ளென்று சுட்டெரிக்கிற வெறுமை. கல்யாணவிழாவின் தடபுடல் சுவடுகள், மிச்சம் மீதியாக ஆங்காங்கே திட்டுதிட்டாக இருக்கின்றன.

ஆனால், மகள் இல்லை. தன்னுடன் பின்னிக்கிடந்த உயிர்த்துணை. இரவிலும் பகலிலும் "அம்மா, அம்மா" என்று கூடவே

இருந்த ஜீவன். நோயிலும் செழிப்பிலும் உடனிருந்து உணர்வுகளை பகிர்ந்து கொண்ட வயிற்றுமகள். ரத்த நிழல்.

அவளைக் காணோம். போய்விட்டாள். தன்னை விட்டுப் போய்விட்டாள். அவள், அவள் வாழ்வை வாழ்வதற்கு... வாய்த்த துணையுடன் உடலையும் மனசையும் எதிர்காலத்தையும் பகிர்ந்துகொள்வதற்கு _ பிள்ளைகுட்டி பள்ளிப்படிப்பு, கல்லூரி என்று புதிய தலைமுறையை உருவாக்கி வளர்ப்பதற்கு_

இவள் மட்டும் தனிமையில் அதே கூரைவீட்டில்.அதே கூலிக்காரியாக. இவள் வயிற்றில் பிறந்தது,ஆணாக இருந்திருந்தால்...?

மகன் உடனிருப்பான். மருமகளும் புதிதாக வந்து சேர்ந்திருப்பாள். பேரன், பேத்தி வந்திருக்கும்.வீடு செழித்திருக்கும். உயிர்களின் வெதுவெதுப்பான அரவணைப்பில் முதுமையை சுகமாகக் கழித்திருப்பாள்.

இருந்தது, மகள். ஊரார்வீட்டுப்பெண். ஊரான் வீட்டுக்குப் போக வேண்டியவள். பெற்றவளைப் பிரிவதே வாழ்வின் விதியென ஆகிப் போனவள்.

"ஒத்தையாளாகிப் போயிட்டோமே" என்கிற நினைப்பு ஒரு நோயைப் போல ராசாத்திக்குள் வேர்விட்டு அவள் உணர்வைப் பிளந்தது. தனிமை உணர்வின் தகிப்பு. அனாதையாகிப் போனோமே என்கிற அவல உணர்ச்சி.அலைபாய்ந்த ஆன்மா.

பரமசிவம் புஞ்சைக்குத்தான் பதிவாக வேலைக்குவருவாள். நாத்தறுப்பு, மிளகாய்ப் பழமெடுப்பு களையெடுப்பு,பருத்தி விதை ஊன்ற கடலை விதைப்பு என்று காமாட்சி புஞ்சைகளுக்கே தினசரி வருவாள்.

கல்யாணத்துக்குக்கூட கைச்செலவுக்கு என்று ஆயிரம் ரூபாய் பரமசிவம் கொடுத்திருந்தார். அத்துடன் ராசாத்திக்கும் அவளது மகளுக்குப் புதுச்சேலை, சட்டை எடுத்துக் கொடுத்திருந்தார்.

பாலையா நாயக்கர் புஞ்சையில் பம்ப் ஷெட் மோட்டார் ஓடிக் கொண்டிருந்தது. பருத்திஎடுக்க வந்திருந்த கூலியாட்கள், கொழை

ஒடித்துக் கொண்டும், மிளகாய்மார்களை விறகுக் கட்டாகவும் கட்டிக்கொண்டும், பம்ப் ஷெட்டில் குளித்த ஈரச்சேலையோடும் எல்லாரும் போய்விட்டார்கள்.

பருத்திப்பொட்டலங்களையெல்லாம் வண்டியில் பாரமேற்றிக் கொண்டும், புல்லுக்கட்டும் கொழைக்கட்டும் வண்டியில் அய்யாவும் அம்மாவும் மாட்டுவண்டியில் போய்விட்டனர். மோட்டார் ஓடுகிற சத்தம். உருக்கி வார்த்த வெள்ளிக்கற்றையாக வந்து தொட்டியில் விழுகிற நீரின் இரைச்சல். வாய்க்கால் நிறைய திமு, திமுவென பாய்ந்து வருகிற தண்ணீர். கம்பம் பயிருக்குத் தண்ணீர் பாய்கிறது. அழகேசன் தான் தண்ணீர் பாய்ச்சுகிறான்.

வேலையிலேயே முழுக்கவனமாக இருக்கிறான். வாய்க்கால் மண்ணை மம்மட்டியால் சரட் சரட் டென்று இழுத்து வரப்பில் அள்ளிப் போடுகிறான். காய்ந்துவிப்போடிய வாய் மடையை மம்மட்டியின் கொண்டையால் தட்டி, நெரித்து, சரிபண்ணுகிறான். பாத்தியில் பரவுகிற தண்ணீர் மூலைமுக்கு மறைய மறைய... வாய் மடையை கொத்தியள்ளி_ இழுத்து விலகுகிறான்.

சாயங்காலவெயில் முதுகை எரிக்கிறது. மடித்துக்கட்டிய கையிலியெல்லாம் ஈரமும் சகதியும். தலையில் வட்டக்கட்டாகத் துண்டு. கன்னமேடுகளை சுரீரிடுகிற வெயில்.

"டடக்"

ஏதோ ஒருசத்தம். கரண்டு நின்று, மோட்டாரின் மூச்சறுபடுகிறஅதிர்வு.

"அடடே... கரண்டுபோச்சா ? தொட்டித்தண்ணியில்லாச்சும் குளிச்சிரலாம்"

வருகிற வாய்க்கால்தண்ணீருக்கு மூன்று பாத்திகளின் வாய்மடைகளைத் திறந்துவைத்துவிட்டு..பம்ப்ஷெட்டுக்கு வருகிற அழகேசன். நீரிலேயே இருந்த பாதங்கள்,ரத்தமிழந்து வெளுத்துப்போய் சுருக்கம் விழுந்து கிடக்கின்றன. பம்ப்ஷெட் வாசல், தெற்கு பார்த்து. கம்பம்புஞ்சையோ பம்ப்ஷெட்டுக்கு வடக்கில். கிணறுவெட்டி, குவித்த செம்பாறைக்குன்று உயரமாக இருப்பதால்_ பம்ப்ஷெட் தெரியாது. புஞ்சையை விட்டுக்கடந்து செம்பாறைக் குன்றையும் தாண்டியவுடன் பம்ப்ஷெட் வந்துபார்த்தால்...

தொட்டித்தண்ணீர், நுரைபொங்கி அழுக்காகிக் கிடக்கிறது. எண்ணெய்ச்சிக்கு படிந்த தலைமுடியுடன் குளித்த அடையாளம். முக்கால்பாகம் சாத்தியிருக்கிற ஷெட்டின் தகரக்கதவு.

பம்ப்ஷெட்டின் கதவை மெல்லத்திறக்கிறான், அழகேசன். உள்ளே... ராசாத்தி. ஈரச்சேலை சொதசொதவென்று சொட்டடிக்கிறது. ஜாக்கட்டில்லாத உடம்பின் தங்கக்குளுமை. தகதகப்பு.

கையில் வைத்திருந்த ஜாக்கட்டுக்குள் இடதுகையை நுழைக்கிறாள். மராப்புச்சேலையை பல்லால் கவ்வி மறைத்தாலும், எதையும் மறைக்கமுடியாத நிலைமை.

இவனைக் கண்டதும் பதற்றப்பதைப்புடன் கதவின்பின்னால் மறைகிற ராசாத்தி.

இவனும் பாம்பை மிதித்தவனைப்போன்ற அதிர்வின் வெலவெலப்புடன் துள்ளிப்பின்வாங்கிக்கொண்டான். பின் வாங்கினாலும்... ஆண்மனசின் கள்ளம். கதவிடுக்கு வழியாக ஓரப்பார்வை பார்க்கிறான். ராசாத்தியின் வெயில்படாத பிரதேசத்தின் ஒரு கீற்று தெரிகிறது.

"என்ன மயினி, எல்லாரும் ... போய்ட்டாக, அப்பவே நீங்க போகலியா ? ?"

"வெறகைக் கட்டிக்கிட்டு ... கொழையை ஒடிச்சுக்கிட்டு வந்து குளிச்சேன்... பறப்பெடுத்த சிறுக்கி எல்லாம், ஓட்டம் கின்னிட்டாக"

"நீங்க மட்டும் ஒத்தையா நிக்கீகளாக்கும் ?"

"ஒத்தைங்குறது எந்தலையெழுத்து. வாழ்க்கையிலேயும் ஒத்தை தான். வேலைத்தளத்துலேயும் ஒத்தை தான்."

"இப்ப நாம ரெட்டையா இருக்கோம்லே, மயினி ?"

"வக்கணையா ஒங்களுக்குப் பேசத் தெரியுது. ஓட்டைத் தலையெழுத்தை மாத்தியெழுதிதர முடியுமா ?"

கதவைத்தள்ளுகிற அழகேசன் வாலிப மூர்க்கம். இளமைத் திணவு. பறப்பெடுத்துப்போய், பசித்துக்கிடக்கிற திரேக வெறி.

உள்ளே வந்தவனை பதற்றமும் பதைப்புமாகப் பார்க்கிற ராசாத்தி. கண்ணில் பயப்படபடப்பு. ஜாக்கட்டின் ரெண்டாவது கையை நுழைத்து... உயர்த்த... பல்லால் கவ்வியிருந்த மாராப்பு மறைப்பை இவன் விலக்க...

முப்பத்தேழு வயது நடுவயதுப் பெண் சின்ன வயசிலேயே துணையையிழந்தவள்.

புழங்காத பாத்திரத்தின் அச்சழியாத புதுமை. சரிந்து சாயாமல் நின்று கொந்தளிக்கிற இளமை. குளித்த குளிர்ச்சியான உடம்பில் அவனது வாலிப உஷ்ணக்கை.

விட்டு விலகுகிறாள், ராசாத்தி. துள்ளிப்பதறி... பின்வாங்குகிறாள். கோபக்கதறல். கண்டனச் சீற்றம்

"சும்மா இருங்க. வெளியே போங்க. மானம் மரியாதையோட சூடுசுரணையோட...ஒழைச்சுக்கஞ்சி குடிச்சுக்கிட்டிருக்கேன்... போங்க வெளியே. போங்கன்னா_ போங்க"

பத்ரகாளியாக சீறிச்சினக்கிற அவளது ரௌத்ரம். பதற்றப் பரபரப்போடு ஈரச்சேலையை அள்ளி முடிந்துகொண்டு.. பாதுகாப்புக்காக வெட்ட வெளிக்குப் பாய்ந்துவிட்ட ராசாத்தி.

"மயினி...மயினி...உள்ளே வாங்க... மயினி_ ஒங்களுக்கு ஒரு மானக்குறையும் வராது மயினி. ஒத்தைக்கு ஒத்தையா தொனையாயிருக்கேன் மயினி_"

"கட்டிக்குடுத்த மகளாச்சும் நல்லாயிருக்கணும். நா... இங்க மானம் கெட்டுச்சீரழிஞ்சு ... கொழுப்பெடுத்துத்திரிஞ்சா.. அங்க .. எம்மகளுக்கு எம்புட்டுக்கேவலம்? அவளோட வாழ்க்கையே பாதிச்சிருமே.... அழகேசா, நீங்க எளவட்டம் ஆம்பளை... எது எப்படியானாலும் என்னமும் கொறையாது. நா பொம்பளை. நா ஒடம்புக்காக அலைஞ்சுட்டா... எம்புள்ளையோட ஆணிவேரு அந்து போகும். புண்ணியமா போகுது.. உங்க புத்தியும் கண்ணும், என்னைவுட்டுட்டு வெலகிரட்டும்"

தப்பியோடிய தவிப்போடு.. மலத்தை மிதித்த அசூயையோடு விறகுக் கட்டும், கொழைக்கட்டுமாக ஒடுகிற ராசாத்தியையே பார்த்த அழகேசன்.

கும்பிட்டு அழுத அவளது கண்ணீர். புண்ணியமாப்போகுது என்று கெஞ்சியவள் ஆயினும் அவனது வாலிபத்தினவு அடங்கவில்லை. நல்லது கெட்டது தர்ம நிபாயம் பார்க்கவில்லை.

33

பாலையாநாயக்கர் புஞ்சையின் பம்ப்ஷெட்முன்னால் நின்ற முருகேசன். பம்ப் ஷெட், மஞ்சள்நிறத்து டிஸ்டெம்பர் அடித்திருப்பதால் மாலைவெயில் நிறமாக இருக்கிறது. நல்லசிமெண்ட்பூச்சு பூசிய கட்டிடம். காரைவீடு போல ஏகப்பட்ட டிசைன்கள். கைபிடிச்சுவர்களின் நெற்றியில் ஏகப்பட்ட பூவேலைப்பாடுகள். ஆட்டியன்போன்ற சீட்டாட்ட டிசைன்கள்.

நற்சதுரக்கட்டிடம். கடாப்பெட்டியைக் கவிழ்த்து வைத்த மாதிரி கச்சிதமாக இருக்கிறது. இந்தஊரிலேயே உள்ள இருநூற்றுக்கும் மேற்பட்ட பம்ப்ஷெட்களிலேயே... இந்தப்பம்ப்ஷெட் தான் ஏகப்பட்ட செலவு செய்து கட்டப்பட்டது. ஒண்ணரையடி அகலச்சுவர். சிமெண்டும் செங்கல்லும் வைத்துக்கட்டப்பட்டது. சுண்ணாம்புக்கார் என்ற பேச்சே கிடையாது. பனங்கட்டையும் கிடையாது. எல்லாமே கான்கிரீட்தாம். தளத்திலும் சிமெண்டுப்பூச்சுதான். உள்சுவர்முழுக்க வலுவான சிமெண்டுப்பூச்சு. சிமெண்டுப் பால்கரைத்து, வழுவழுப்பாக்கிய உள்சுவர். வெற்றுடம்போடு சாய்ந்தாலும், சுவர் ஜில்லென்று மென்மையான ஸ்பரிசம் தரும்.

பம்ப்ஷெட் வாசலில் கூட,வலுவான மரத்தில் செய்த நிலை தான்வைக்கப்பட்டது. அதிலும் ஏகப்பட்ட கைவேலைப்பாடுகள். கதவும் பெரியது-கனத்த இரும்புக் கதவு, குறுக்குப் பட்டைகள் பெரிய பெரிய இரும்புப்பட்டைகள்.

புாலைா நாயக்கர் கௌரவத்துக்கு கட்டியது. பெருமைக்கு மாவு இடித்தால், குலுக்கைத்தான்யத்துக்குத் தான் சேதம் என்ற சொலவடை ஒன்று உண்டு குலுக்கைத்தான் காலியானாலும் பரவாயில்லை என்ற வீராப்பு உள்ளவர் பாலையா நாயக்கர். பெருமைக்காகக் கட்டிடம் கட்டினார். கடன் உடன் வாங்கிப் போட்டார். அவரது ஒரே நோக்கம்.

"பாலையா நாயக்கருக்கு பம்ப் ஷெட்டை மிஞ்சி ஊர்லே ஒரு பயலும் கட்ட முடியலே" என்ற பெயர் வாங்கவேண்டும். வாங்கி விட்டார். வாங்கிய பெயரும், பெருமையும் இன்று வரைக்கும் நிலைக்கிறது. நிலைத்து வாழ்கிறது.

"இந்தப் பம்ப் ஷெட்" பங்களா அறை மாதிரியே இருக்கிறது" என்று பார்த்த முதற்பார்வையிலேயே யாரும் சொல்லிவிடுவார்கள். அந்தப்பெருமையும் பாராட்டும் பிரமிப்பும் பாலையா நாயக்கருக்குரியது.

மோட்டாரை தகரசெட்டால் மூடியவர்கள் உண்டு. வெறும் மண்சுவரும், பனங்கட்டைத் தடியும் போட்டு ஒப்பேற்றியவர்கள் ரொம்ப. கருங்கல்லும் சுண்ணாம்புச்சாந்தும் போட்டு சுவரெழுப்பி ஓடுவேய்ந்தவர்கள் ஏகப்பட்ட சம்சாரிகள்.

ஆனால், ஆடம்பரபங்களாவின் ஓர் அறைபோல வரவேற்பு அறைபோல வடிவமைத்து... பிரம்மாண்ட கனவுகளுடன்-செலவுகளுடன் கம்பீரத்துடன் தனித்துவப்பெருமையுடன் கட்டியவர் பாலையா நாயக்கர் ஒருவர் தாம்.

புஞ்சைவாங்கி முதன்முதலாக அம்மனும் சாமியுமாக வந்துபார்க்க காமாட்சியும் பரமசிவமும் வந்திருந்த அன்றைக்கு-

பம்ப்ஷெட் சுவரை உள்ளங்கையால் தடவித்தடவிப் பிரமித்தார். "மனுசரு_ என்னமாய் கட்டியிருக்காரு ? ராஜா அரமனை கட்டுனது கணக்கா,கட்டி யிருக்காரே_ ?"

"நல்லாயிருக்குல்லே ?" காமாட்சி ஒருசிறுமிக்குரிய ஆவல் குதூகலத்துடன் கேட்கிறாள்.

அடிஉதட்டைப் பிதுக்குகிற பரமசிவம். "நல்லால்லே" என்ற அர்த்தத்தைச் சொல்லுகிறது. அந்த உதட்டுப்பிதுக்கல்.

"ஏனாம்?"

"இதைக்கட்டுன செலவுலே எட்டுப் பசுமாடுகளை பிடிச்சிருக்கலாம். எட்டுபசுகளை கட்டிப்போட்டு பால்பீய்ச்சுனா, எம்புட்டு லாபம் வரும்? எம்புட்டு சாணி சகதி சேரும்? எம்புட்டு பல்கிப் பெருகும்?"

பரமசிவத்தை ஆச்சர்யமாக பார்க்கிற காமாட்சி. மலைப்பும் பரவசமுமான பார்வை.

"இந்தக் காரைக் கட்டிடம் பெருமையை பீத்திக்கிடத்தான் ஆகும்? வேற என்னத்துக்காகும்? ஒருஉப்புக்கல்லுக்குக் கூட பெறாது"

முருகேசன் அரைக்கைச்சட்டை போட்டிருக்கிறான். கட்டம் போட்ட சட்டை. முண்டாப் பனியன். பொடிக்கட்டம் போட்டகைலி.

பம்ப்ஷெட்டின் மஞ்சள் நிறத்து டிஸ்டெம்பரை வலது கையால் வருடுகிறான். அவனுக்குப் பெருமையாக இருக்கிறது.

ஊரிலேயே உயர்வான தனிச்சிறப்பான இந்தப்பம்ப் ஷெட் இப்போது என்கையில், எனது அதிகாரத்தில் எனது உரிமையாக_

சுற்றிலும் பார்க்கிறான். ஆறுஏக்கர் தோட்டம். வட்டச் சமுத்திரமாக நிலம். கன்னங் கரேலென்று பரந்துகிடக்கிற மண்கடல். நடுவில் கிணறு. கிணறு தோண்டியகாலத்து செம்பாறைக்குன்று. அதன் சூழலையே அழகு செய்கிற இந்தப்பம்ப் ஷெட்ரூம்.

டக்கர்விட்டு நிலங்களை உழுகணும். உழவில் போடுவதற்கு டி.ஏ.பிமூடைகள் வேணும். கூடுதலாக பொட்டாஷ்மூடைகள் எடுக்கமுடிந்தால்_ நல்லது. பாத்திகட்டணும். நீர் பாய்ச்சணும்.அதுக்கு ஆள்விடணும். பருத்தி விதைப் பைகள், மிளகாய் விதைப்பைகள் வாங்கணும். ஒருநிலத்துண்டில் ஒட்டுக்கம்பு போட்டுப் பாக்கலாம். அதுக்கும் கம்புவிதைப்பை வாங்கணும்.

எல்லாத்துக்கும் பணம் வேணும். லம்ப்பா பணம்வேணும் பணத்தை விதைச்சுத்தான், பணத்தை விளையவைக்கலாம்.

போட்ட சட்டை கழற்றாமலேயே... உடலை அலுங்காமல் வைத்துக்கொண்டே... ஆறுகுறுக்கத்திலும் விவசாயம் பண்ணி விளைச்சல் எடுக்கலாம்.

இதுதான் அய்யாவுக்கு புரியமாட்டேன் என்கிறது.

"வெவசாயத்துக்கு ரூவா என்னத்துக்கு ? ஒழைக்குற தெம்பும், மனசும் இருந்தா.. போதுமில்லே ?" என்று தான் அய்யா சொல்வார் செய்வார்.

இந்த ஆறுகுறுக்கத்தையும் அவரே உழவு போடுவார். மாட்டுழவு. ஏர்க்கலப்பை உழவு. பத்து நாளாவது ஆகும். ஓர் உழவு போட. அப்புறம் நாலு நாளைக்கு ஆறப்போடுவார். அப்புறமும் பத்துநாளைக்கு ரெண்டாம் உழவு. மாட்டுழவு தான். மாட்டோடு மாடாக இவரும் மேழியைப் பிடித்து அமுக்கி, மாட்டுக்குப் பின்னாலேயே நடந்து சாகணும்.

டக்கர் உழவு வேண்டவே வேண்டாம் என்பார். அதன் ஆவியே ஆகாது என்று வெறுத்தொதுக்குவார்.பச்சைநாவி (கடும்நஞ்சு)யாக நினைத்து பதறிப்பதைத்து துரத்துவார்.

"தண்ணிபாய்ஞ்ச நெலம், பாத்திக்குப்பாத்தியா தண்ணி பாய்ச்சுனநெலம்.இதுலே கொண்டு போய்.. இத்தந்தண்டி இரும்புக்கழுதையையும் இத்தந்தண்டி டயரையும் உருள வுட்டாஎன்ன ஆகும் ? தண்ணிபாய்ஞ்ச ஈரநிலத்தை டக்கரும் டக்கர்டயரும் சேர்ந்து... புல்டோசர் மாதிரிமுன்னுக்கும்பின்னுக்குமாகப் போய் மண்ணை இறுக்கிரும். அமுக்கே அமுக்குன்னு இறுக்கிடும். சிமிண்டு போட்டமாதிரி செட்டாகிரும். சீப்புப்பல்லுமாதிரி இருக்கிற டிரில்லர்கொக்கி.... மேல் மண்ணை மட்டும் கோடுகோடாய்ப் போட்டுரும். அதுக்குப் பேரு, ஒழவா ? அடிப்பகுதி பூராவும் கான்கிரீட் மாதிரி இறுகிச்செட்டாகிட்டு, மேல்மண்ணைமட்டும் உழுது புழுதி யாக்குனா, போதுமா ? வைக்கிற பயிர் எதுவானாலும் தாராளமா வேர் அடிக்கணும்லே ? வேர்,எம்புட்டு ஆழத்துக்குப் போகுதோ... அந்தளவுக்குத்தானே, பயிர் வளர்ச்சி ? வேர் போகவிடாம... நிலத்தை கான்கிரீட்போட்டுட்டா...வெள்ளாமை வெளைச்சல் எப்படி வெளங்கும் ?"

என்று கோபமும் கொதிப்புமாகக் கத்தித் தீர்ப்பார். "அடப்பாவிகளா... மண்ணை உழுகணும். உழுது உழுது மாவுப்புழுதியா ஆக்கணும். அதுக்குப் பதிலா... கான்கிரீட்போட்டு இறுக்கிட்டா... என்னத்துக்காகும் ? "என்று கொந்தளிப்பார்.

அய்யாவின் ஆவேசத்தையும் சாமிவந்து ஆடுகிற மாதிரியான கோப வெறியாட்டத்துடன் கூடிய குமுறலையும் ஏளனமாக நினைத்துக்கொள்கிற முருகேசன். அவனது உதட்டில் வந்து நிற்கிற இகழ்ச்சியான சிரிப்பு.

வந்து நிற்கிற விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டு மிரண்டு பின்னோக்கி ஒதுங்குகிற அய்யாவின் பிற்போக்குச்சிந்தனைகள், அனாவசியமாக- விரையமாக- உழைப்பைக் கொட்டித்தீர்ப்பதை மகத்தானதாக நினைத்துக்கொள்கிற அவரது போலிப் பெருமிதம். பொய்யான சுயதம்பட்டம்.

அய்யாவை ஒதுக்கி வைத்துவிட்டு, புஞ்சையைப் பார்த்த முருகேச மனசு. இதை எப்படி நிர்வகிப்பது? எவ்வாறு வெற்றி பெறுவது? என்ன பயிரிடுவது? எவ்வாறு லாபம் பார்ப்பது?முதலாம் வருஷத்திலேயே லாபத்தைக் காட்டியாகணும்? எப்படிக் காட்டுவது?

உள்ளுக்குள் பயணமாகிற நினைவுகள். உள்முகப் பயணமாக ஆழம் ஆழமாக நுழைந்து பரவுகிற நினைவுகள். யோசனையில் உறைகிற முருகேசன். எல்லாத்திசைகளிலும் கால் பரப்பியலைந்த நினைவுகள், ஒரு திசையில் வந்து முட்டிக்கொண்டது.

"இம்புட்டுக்கும் பணத்துக்கு எங்கே போறது? என்ன செய்றது?"

முட்டிக்கொண்ட நினைவுகள். முட்டி மோதித் திகைத்த நினைவுகள். நினைவுகளே கவலைகளாக சட்டென நிறம் மாறி, மனசை வதைக்கின்றன.

அய்யாவுக்கு இந்தக்கவலை வந்ததேயில்லை. பணத்துக்கு என்ன செய்ய என்று ஒருநாள் கூடக் கவலைப்பட்ட மாதிரியாக ஞாபகமில்லை.

பணத்துக்கான அவசியம் பெரிய அளவில் இல்லை. ருசக்காடு உழவுக்கு மட்டும் தான் டக்கர். ஏகப்பட்ட காடு என்பதால், அதற்கு மட்டும் டக்கர். அதுக்கான வாடகை. அப்புறம் ஆள்கூலிக்கு மட்டும் தான்.

இருக்கவே இருக்கிறார் அருஞ்சுனை மாமா. அருஞ்சனை தான், அய்யாவுக்கு பேங்க் மாதிரி. விளைந்த விளைச்சல், பணமாக

மாறுகிறபோது_ அவரிடம் தான் அதையெல்லாம் கொடுத்துவைப்பார். ஆகிறசெலவுகளுக்கு அவ்வப்போது அவரிடம் வாங்கிக் கொள்வார்.

இவனுக்கு அப்படியொரு பேங்க் கிடைக்குமா ? கேட்கிற போதெல்லாம் பணம் தருகிற பேங்க்.

நேற்று உழவுக்கு டக்கரைக் கூப்பிடுவதற்காக யோகேந்திரனைப் போய்ப் பார்த்தான். அவரது வீட்டில் டக்கர் நட்டுகள், ஆணிகள் போன்ற துருப்பிடித்த உதிரிச்சாமான்களையும் எண்ணெயில் முங்கியெழுந்த உதிரிப்பாகங்களையும் இனம் பிரித்துக் கொண்டிருந்தார்.

"என்னப்பா_முருகேசா_"

"சும்மா_ உங்களைத்தான் பாக்க வந்தேன்"

"சொல்லு.தனிப்பண்ணை அடிக்கப்போறீயாம்லே ? ஊர்லே பேசிக்குறாக_"

"ஆமண்ணாச்சி"

"என்ன இது... புதுக்கோப்பு(முயற்சி) ? யாரும் எடுக்காத கோப்பா இருக்கு. கல்யாணத்துக்கு முந்தியே தனிக்கோப்பா ?"

"ஆமண்ணாச்சி_ நம்ம யோசனைப்படி வெவசாயம் பண்ண_ அய்யாவுடமாட்டேங்காரு... அவுரு, அவரு பாணியிலேயே பழம்பஞ்சாங்கமா பண்ணனும்னு பிடிவாதம் பண்ணுறாரு_ அதான், இப்புடி_"

"ம்ம்ம்... சரி... பாப்போம். நீ ரொம்ப அகலக்காலு வைக்குறீயோன்னு யோசனை வருது"

"ஏன் அண்ணாச்சி ?"

"நாங்க எல்லாம் வெவசாயம் பண்ணி வெவசாயம் பண்ணி_ நட்டப்பட்டுப்போய்க் கெடக்கோம். வாங்குன கடன்களை அடைக்க, வழியில்லாம தெகைச்சுப்போய் நிக்கோம். சரிசரி_ மொத மொதல்லே துணிஞ்சு ஒரு காரியத்துலே காலை வைக்கே. என்னத்துக்கு ஒன்னைப் பயமுறுத்தணும் ? சொல்லு என்னசோலியா வந்தே ?"

"ஒழவுக்கு டக்கரு வேணும் ?"

"எம்புட்டு எடம் ?"

"ஆறகுறுக்கம்"

"சட்டி ஒழவா_ டிரில்லரா ?"

"டிரில்லரே போதும்"

" ஓரடியா_ ரெண்டடியா ?"

"ரெண்டடிதான்"

"குறுக்கத்துக்கு நூத்தி இருவது ரூவா. தெரியும்லே ?"

"தெரியும்"

"கையிலே ரொக்கம் இருக்கா ?"

"இல்லே_"

"பெறவு ?"

"வெள்ளாமை வெளைச்சல்லே குடுத்துருதேன்."

"கையிலே ரொக்கம் வைச்சுக்கிட்டு உழவுக்கு கூப்புடுறவுகளுக்கே... போய் அடிக்க முடியலே. டயமில்லாம தவிச்சுப்போய் நிக்கோம்... நீ வருஷலோன் சொல்லுதே ? நீ எந்த ஒலகத்துலே இருந்துக்கிட்டுப்பேசுதே ?"

அவரது ஏளனச்சிரிப்பும் இகழ்ச்சியான கேள்வியும் அவனை மிகவும் இழிவுபடுத்தியது. அவனது அறியாமையையும், அசட்டுத்தனத்தையும், அவனுக்கே உணர்த்துகிற கேள்வி. நடப்புலகம் தெரியாத அப்பாவியாக இருக்கிறாயே" என்கிற இகழ்வுத் தொனியிலான கேள்விக்குரல்.

"லோனுக்கு வாங்குனடக்கர்_ட்யூ (தவணை)கட்ட வழியில்லாம கண்ணுமுழி பிதுங்குறது... எங்க தொடர்கதை. அன்றாடம் டீசல் வாங்கவே கதியில்லாம திண்டாடுறது, தினசரிக் கதை.

"சரிண்ணாச்சி... ஏதோ எண்ணத்துலே எறங்கிவிட்டேன். நீங்கதான் ஒத்தாசை பண்ணனும் !"

"ஒத்தாசைதான் பண்ணலாம். ஓசியா ஒழவடிச்சுத்தர முடியுமா ? ஆயிரத்தைந்நூறுரூவாய்க்கும் மேலாகுது. ஆயிரம் ரூவா கொண்ணாந்துகுடு. நா.. ரெண்டடி அடிச்சுத் தந்துருதேன். மிச்ச ரூவாயை... நீவேணும்னா.. பதறாம குடு. என்ன சொல்லுதே ? சரியா ?"

"சரிண்ணாச்சி" என்ற முருகேசனின் குரல், உள்ளுக்குள் ஒடுங்கியிருந்தது. உயிர் வடிந்த குரலாக சோர்வுற்றிருந்தது. ஆயிரம் ரூபாய்க்கு எங்கே போவது? என்ன செய்வது?

யோகேந்திரன் அவனை ஒரு சிறுபையனைப் பார்க்கிற மாதிரி பார்க்கிறார். அவனது சிறுபிள்ளைத்தனமான செயல் பார்த்து.. ஏளனம் செய்கிற தொனி, அவரது பார்வையில் இருக்கிறது.

"இதுக்கே... இந்த முழி முழிக்கீயே... நீ எப்புடி வெவசாயம் செய்யப்போறே? முதல் (மூலதனம்) இல்லாம ஏவாரமா? மாவு இல்லாம பணியாரமா?"

"என்னண்ணாச்சி, இப்புடிச் சொல்லுதீக?"

"ஆமா... நா, டக்கரோட ஒழவுக்கு வர்ற்ப்ப குறுக்கத்துக்கு ரெண்டு மூடை டி.ஏ.பியும், ஒருமூடை பொட்டாஷும் வேணுமே.. அதுக்கு ரூவா வேணும்லே? ரொக்கமில்லாம ஒரு உப்பு கூட வாங்க முடியாதே..."

"அம்புட்டுக்கும் ரூவா எம்புட்டாகும் ண்ணாச்சி?"

"கொறைச்சுப்பார்த்தாலும் ஆயிரம் ரூவா வேணும். அடி உரம் போடாம, ஒழவடிச்சு என்ன செய்ய?"

முருகேசனுக்குள் அடிவயிற்றுப்பிசைவு. குடலைப்புரட்டிக் கொண்டு வருகிறமாதிரி இருக்கிறது. அச்சமும், படபடப்புமாக வருகிறது. முன்யோசனையில்லாமல் காலெடுத்து வைத்து விட்டோமோ என்ற மனக்கீறல்.

"சரிண்ணாச்சி... ரூவாயோட வாரேன்" என்று சொல்லி விட்டு வெளியே வந்தவனை, அந்திவெயில் விழுங்கிக் கொண்டது. ஆனால், அவனுக்குள் இருட்டே அவனை விழுங்கிவிட்ட மாதிரி யிருக்கிறது.

தெருவில் இறங்குகிறவனின் முதுகில்யோகேந்திரனின் பரிகாச ஈட்டி துரத்தி வந்து பாய்வது போல... ஓர் உணர்வு மனசுக்குள் திகிலோடு, கவலையுடன் இருள்படிந்த எண்ணங்கள்.

இன்னும் விதைகள் வாங்கணும். அதுக்கு எப்படியும் மூவாயிரம் ஆகும். பாத்திகட்டு... விதை ஊன்றுதல், அதற்காக

ஆள்கூலி. இரண்டாம் உழவு இரண்டடி அடிக்க... ரூபாய் இரண்டாயிரம் வேணும்.

இத்தனைக்கும் எங்க போவது? யாரிடம் கேட்பது?

யாரிடம் போய நின்றாலும்.... உள்ளடங்கியகோபமும், ஒளித்துவைத்த எரிச்சலுமாகவே பார்க்கின்றனர்.

எடுக்காத எடுப்பு எடுத்தவனை... ஆகாத காரியத்தை செய்கிறவனை... தகாத முயற்சியில் தலையை முட்டுகிறவனைப் பார்க்கிற மாதிரியே... கடுப்புடன் நோக்குகின்றனர்.

ஆதரவுக்கரம் நீட்ட... பரிவாக வார்த்தை சொல்ல... அரவணைப்பாக அன்பு காட்ட. இந்தஊரில் ஆள் இல்லையா? அல்லது ஆதரவுக்கும் பரிவுக்கும் அன்புக்கும் வழியில்லாத முரட்டுத்தனமான காரியத்தில் இறங்கிவிட்டோமோ...? மூர்க்கமாக இறங்கிவிட்ட இக்காரியத்தில்தோல்வியடைந்து விடுவேனா? முதல் சந்திப்பே, முற்றிலும் கோணலாகிவிட்டதே...

தெருவில் இவனைக் கடந்து செல்கிறவர்கள் எல்லாருமே தள்ளிப்போய் திரும்பிப் பார்க்கின்றனர். வெறுப்பான பார்வை. பிடிக்காத பார்வை. கோபமும் குமைச்சலுமான பார்வை. "போறான் பாரு. விலாவுலே வெடிச்சு வெளியே தெறிச்சபய" என்று நினைக்கிற பார்வை.

"தான் ஒட்டு மொத்தமாக ஊருக்கே பிடிக்காதவனாகி விட்டோமோ" என்கிற புதிய உணர்வின் முள்குத்தல், குற்ற உணர்வுகளாக நெஞ்சில் பாரமேறுகிறது.

சமூக விரோதியை... மரபுவிரோதியை ..மனித விரோதியை பார்க்கிற மாதிரி, தான் பார்க்கப்படுவதாக உணர உணரஉள்ளுக்குள் பலவீனமடைகிற முருகேசன்.

தன்னைப்பலவீனப்படுத்துகிற இந்தப்பார்வைகளும், ஏளனத் தொனியும் பரிகாசச்சிரிப்பும்தாம்... இவனைச்சீண்டுகின்றன. சீறித்துடிக்க வைக்கின்றன.

"நானா, இதுவா" என்று ஒரு கை பார்த்துவிடுவோம் என்கிற வைராக்கியமாகிறது.

என்ன செய்தாவது_ இதில் ஜெயித்தாக வேண்டும் என்கிற வெறியாகிறது.

ஆனால் காலூன்றவே முடியவில்லையே_ காலைத் தரையில் வைக்கவே வழியில்லையே_ பிறகெங்கே நிலைத்திருப்பது ? அதற்கும் பிறகல்லவா ஜெயிப்பது பற்றி ?

காற்றின் திசையை எதிர்த்துப் பயணப்படுகிற மாவா, நான் ? மழை யென்றறியாமல் தெருவில் இறங்கிவிட்ட உப்புமூடையா ?

மனசு பரிவுக்கு ஏங்குகிறது. ஆதரவுக்கும் அரவணைப்புக்கும் ஏங்குகிறது. செண்பகத்தைத்தேடிப் போகலாமா ? செண்பகத்தை வரச்சொல்லிவிட்டு_ இடிகிணறு போகலாமா ?

ஊரே இவனை உற்றுக்கவனிக்கிற தருணம் இது. வெறுப்பும் விரோதமுமாக.. எரிச்சலும் கடுப்புமாக இவனது ஒவ்வொரு அசைவையும் ஒவ்வொரு மனிதரும் உற்றுப் பார்க்கிற கொடிய சமயமிது.

இப்போது போய்_ இடிகிணற்றுக்குப் போனால்_ ?

ஊரில் சிலர்கூடி இவனையும் செண்பகத்தையும் குறி வைத்து கண்ணி வைத்துப் பிடித்துவிட்டால்_ ?

இப்படி நடக்காது என்று ஏதேனும் உத்தரவாதம் இருக்கிறதா ?

பலவீனப்பட்ட மனசுக்குள் பயந்த நினைவுகள். அச்சத்தில் நனைந்து ஊறிய கற்பனைகள். பயப்படபடப்பு தரக்கூடிய யூகங்கள்.

வேண்டாம்_ இடிகிணறு வேண்டாம்.

"புஞ்சைக்குப்போவோம்" என்று இங்கு வந்துவிட்டான். பம்ப்ஷெட்டை உள்ளங்கையால் தடவினான். அதன் வழவழப்பு. புத்தம் புதுசுவர்போல இருக்கிற அதன்நிறம்.

இந்த ஆறுஏக்கர் புஞ்சையும் தனது கைவசத்தில் இருக்கிறது. தனது பாதுகாப்பில் உரிமையாக இருக்கிறது. இந்த நிலத்தைப் பேசவைக்க வேண்டும். பயிர்களை வளர்க்கிற உயிர் தரவேண்டும். உயிர்ப்புடன் இயங்க வைக்க வேண்டும். அதற்கு முதலில் பணம் வேண்டும். கணிசமான பணம் வேண்டும். இருபதாயிரத்துக்குக் குறையாமல் பணம் வேண்டும்.

பணத்துக்கு எங்குபோவது? என்ன செய்வது ? யாரிடம் போவது? கூட்டுறவு சொஸைட்டிக்குப் போனால் என்ன? கூட்டுறவு சொஸைட்டி செயலாளரிடம் பயிர்க்கடன் கேட்டால் என்ன? பயிர் விளைந்து, வரும் வருமானத்தில் கடனைக்கட்டிவிடலாமோ...

புகலற்ற நினைவுகளின் புகைமூட்டமான முற்றுகையில் திணறுகிற சுவாசத்தை இயல்பாக்க... சொஸைட்டி செயலாளர் கண்ணனைத்தேடி... புறப்பட்டான், அந்தி வெயிலில்.

34

ராசாத்தி மாற்றுச்சேலையை கட்டினாள். கூரைவீட்டுக்குள் சோறு தண்ணீர் காய்ச்ச ஆரம்பித்தாள். அடுப்பு எரிகிறது. சந்தனநிறத்தீஜ்வாலைகள் நாக்குநீள எரிகிறது. கொழையை அடித்து உதறி ஆட்டுக்கு முன்னால் நீண்ட கயிற்றில் கட்டித்தொங்கவிட்டாள்.

ஈரச்சேலை பாவாடை ஜாக்கட் எல்லாவற்றையும் வெளிப்பானைத் தண்ணீரில் ஒருமுக்கு முக்கி_ மொத்தமாக அலசி, பிழிந்து கொடியில் தனித்தனியாகக் காயப்போட்டாள்.

"அழகேசன் புள்ளாண்டான். இப்படிச்செய்யும்" என்று அவள் நினைக்கவேயில்லை. இன்னும் அடங்கி மறையாத பயப்படபடப்பு. உள்ளுக்குள் பதற்றஅதிர்வுகள். பார்க்காமல் மலத்தை மிதித்து விட்டால், மனசுக்குள் அசூயை வருமே, அதேமாதிரியான அருவருப்புணர்ச்சி.

"இந்தப்புள்ளாண்டான் இப்புடியா, பண்ணும்? த்தூ !த்தூ !" இன்றைக்கு நேற்றா பார்க்கிறாள். அவனை? இருபத்தைந்து வயது இளவட்டம், இப்போது. இவன் பிறந்த போது_ சடங்காகிற பருவத்தில் இருந்த முற்றிய மொட்டு, அவள். துள்ளித் திரிகிற விடலைப்பெண்.

கன்னங்கரேலென்று இருப்பான். கைக்குழந்தையான அழகேசன். குறவை மீன் மாதிரி கண்ணைமூடின கறுப்பு.

அழகேசனைத் தூக்கிக்கொண்டு போய் விடுவாள்.

"குறவைக்குட்டி... குறவைக்குட்டி என்று பட்டப்பெயர் வைத்துக் கொஞ்சுவாள்.

இவளது கல்யாணத்தின் போது.. விரலைப்பற்றிக்கொண்டு விடமறுத்து அடம்பிடித்த அஞ்சுவயசுச்சிறுவன்.

அவன் புஞ்சைக்குத்தான் பதிவு வேலை.அன்னாடம் அங்குதான் குமரிப்பெண்ணாக.. கல்யாணப்பெண்ணாக.., கல்யாணப் பெண்ணாக.. பிள்ளை பெற்ற பச்சை உடம்புக்காரியாக.. புருஷன் சாகக் கொடுத்த விதவையாக...எல்லாநாளிலும், எல்லாப் பருவத்திலும் பரமசிவம் புஞ்சைகளில்தான் கூலிக்குப்பாடுபடுவாள்.

"அழகேசு.. அழகேசு.." என்று இவள் கூப்பிடுகிறபோதெல்லாம், உள்மனசுக்குள் ஓர் உடன்பிறப்பு என்ற உணர்வுதான் எழும். உடன்பிறக்காத இளையதம்பி" என்று நினைப்பாள்.

அவன் மனசிலா.. இம்புட்டு அழுக்கு? அவனுக்குள் இப்படியோர் எண்ணமா?

"அடச்சீ... அக்காளா நெனைச்சிருக்க வேண்டியவளை... வெறும் பொம்பளையா, எப்படி நெனைக்க முடிஞ்சது? இல்லாதவன் பொண்டாட்டி, எல்லாருக்கும் மதினிம்பாக... இந்தப்பயலுக்கு என்னப்பத்தி எல்லாமே தெரியுமே...இப்ப மட்டும் எப்புடிவந்துச்சு, இந்தப்புத்தி?"

நினைக்க நினைக்க உடம்பில் "திகு, திகு" வென்று தீப்பற்றி எரிகிற உணர்வு.

"இதுக்கு முந்தியெல்லாம் ... இவன் இப்புடி, நெனைச்சதில்லியே! வித்தியாசமாக பாத்ததில்லியே.. இன்னிக்கு மட்டும் ஏனிப்படி? என் கிரகச்சாரம்"

இனியும் எப்புடி அந்தப்புஞ்சைக்கு வேலைக்குப்போறது? அந்த நாய் மூஞ்சியிலே எப்புடி முழிக்கிறது? ம்ம்ம் ஹூம்.. வேண்டாம். போதும். அவுக புஞ்சைக்கு வேலைக்குப் போகவேண்டாம். நிறுத்திக்கிடணும். அதான், மானமரியாதை..

ராசாத்திக்குள் கொதி நினைவுகள். கொந்தளிக்கிற எண்ணங்கள்.

காமாட்சியத்தை கேக்குமே... அதுக்கு என்னமுகாந்திரம் சொல்லுறது ?

"ஏண்டி... வேலைக்கு வரமாட்டேங்க ?இம்புட்டுகாலமா... வந்துக்கிட்டிருந்த ஒனக்கு, என்ன கேடு வந்துச்சு ?ஏன் வரல்லே ? காரணம், எனக்குத் தெரிஞ்சாகணும்"

என்று உடும்புப்பிடியாகப் பிடித்து உலுக்குமே. பாசக்காரி தானியதவசம் பெட்டி பெட்டியா அள்ளித்தரும். கொழை ஒடித்துக் கொள்ளச் சொல்லும். சுரைக்காய், கத்தரிக்காய் என்று வாய்க்கால் காய்களையெல்லாம் "புடுங்கிட்டுப்போ" என்குமே. மகள் கல்யாணத்துக்கு முன்னத்தி ஆளா நின்னு... மாலையெடுத்துக் கொடுத்து திருநீறு பூசி கைநிறைய மொய்ப்பணம்செய்து, மனம் நிறைய வாழ்த்திவிட்டுபோன அந்தஅத்தையின் பாசத்துக்கு என்ன பதில்சொல்ல ?

"நம்ம அழகேசு இப்புடிச் செய்ஞ்சுச்சு" என்று உண்மையைச் சொல்லிவிடலாமா ? "நீ பெத்து வைச்சிருக்கே பாரு... ஒரு காமக்கோட்டி புடிச்ச கழுதை" என்று எடுத்து வைத்து விடலாமா ?

"ஓம் புள்ளையைப்பாரு_ காறித்துப்பணும்" என்று ஏளனமாய் சொல்லிவிடலாமா ?

பாவம்... அந்தப் புண்ணியவதியின் பூமுகத்தை கரிபூசிப்பார்ப்பதா ? அநியாயம். அக்ரமம்.

வேலைக்குப் போகாமல் நிறுத்துவதற்கு... என்ன காரணம் சொல்ல ? எதுவும் சொல்லாமல் தப்பிக்க முடியாதே_

அடுப்பைத் தணித்தாள். உண்ணப்பிடிக்கவில்லை. நாளைக்கு வேலைக்குப்போயாக வேண்டுமே... காட்டில் உழைக்க வெயிலில் வெந்து சாக_ உடம்பில் தெம்பு வேண்டுமே_ சத்து வேண்டுமே_

பசியோடு படுத்து உறங்கமுடியுமா ? உறங்கிவிடமுடியுமா ?

வட்டிலில் சோத்தையள்ளிப் போட்டாள். சோளச்சோறு புளிச்சாறு ஊத்தினாள்.வறுத்த கத்தரி வத்தலை எடுத்துக்கடித்தாள்.

அரிக்கேன் விளக்கின் மங்கலான வெளிச்சம். மகள் இல்லாதவீடு. யாருமே இல்லாத தனிமை. மனசில் கொதிக்கிற.. கொந்தளிக்கிற உணர்வுகளை, யாரிடம் கொட்டியழ? யார் இருக்கிறார்கள்? ஒத்தையாளாகிப் போனோமே_

சுவரில் ஒரு பல்லியின் சத்தம். சுவர் நிறமாகவே இருக்கிற பல்லி. அதைக்கவனிக்கிறாள். சுவரில் சற்றுத்தள்ளி ஒரு பல்லி. அதன் வாலைச் சுற்றுகிறது. நிதானமாக சுழற்றுகிறது. இரண்டும் பேசிக் கொள்கின்றன.

பல்லிக்கு இருக்குற கொடுப்பினைகூட, தனக்கு இல்லாமற் போச்சே_ என்கிற மனப்புலம்பல்.

மகள் கல்யாணமாகிப்போன நாளிலிருந்தே, இவளை ஒரு நோயாகப் பிடித்தாட்டுகிற தனிமை உணர்ச்சி. தான் ஒரு சூன்யத்துக்குள் தூக்கி யெறியப்பட்டதான நினைப்பு. சுற்றிலும் உள்ள வெறுமை. மனசில் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ள ஆளில்லாத சூன்யம். சொல்துணை.. பேச்சுத்துணையில்லாது, வெறிச்சென்றிருக்கிற நிலைமை.

அவளுக்குள் ஒரு பாரமேறிய மனத்திணறல். சுமையின் அழுத்தம் தாளாத மூச்சுமுட்டல்.

அரிக்கேன் விளக்கின் சுடரில் எழுகிற புகை. சிம்னியின் பெரும் பகுதியில் அதன் கரிய புகையின் படிவு. அழுது வடிகிற வெறும் வெளிச்சம். சுவர் முழுக்க வெறும் சுவர். சாணிப்பால் போட்டு மொழுகிய தரையிலும் வெறுமை. எதுவும் இல்லாத வெற்று வெளியாகச் சுற்றுச்சூழல்.

மகளின் சுவடுகள். அவளது குரலின் நிழல்கள். "அடியே... சிறுக்கி மகளே, அந்தச்சட்டி பானைகளை காலாகாலத்துலே அலசிவை" என்று இவள் அதட்டிய குரலின் 'அதிர்வுகளின்

நினைவுச்சுவடுகள். அவளும் இருந்தபோது இந்த வீட்டுக்குள் ஒரு வாழ்க்கை உயிரோடு இருந்தது. உடன்பேச ஒரு ஜீவன். தன் மனப்பெருமூச்சைக் கேட்கிற ஒருகாது. தான் பேசினால் செல்லமாகவோ, கோபமாகவோ எதிரொலிக்கிற ஒருகுரல். அந்தக்குரலின் நிழல்கள்.

எல்லாமே_ நிழலாகிப் போச்சு. இப்போது முழுக்க வெறுமை. சூன்யம். தனிமைத்துயர்.

உண்டு முடித்தாள். வட்டிலைக்கழுவிக்கொட்டினாள். சோளச் சோற்றுருண்டைகளை உருட்டி உருட்டி நீச்சுத் தண்ணீர்ப் பானைக்குள் போட்டாள். மறுபடியும் குட்டிகளைப்பார்த்தாள். ஆட்டுக்கு கொழையை கட்டினாள்.

இனியென்ன... எவளிடம்பேச ? பேச விஷயமிருந்தாலும், "உம் ம்"னு கேக்க யாரு இருக்காக... ?

பாயை விரித்துப்போட்டாள். துணிப்பொட்டணத்தை தலையணையாக வைத்தாள். அது முழுக்க எண்ணெய்ச்சிக்குப் படிந்திருந்தது. ஏழுகோட்டை அழுக்கு.

படுத்தாள். ஒரே வேக்காடு. மூச்சுமுட்டலான புழுக்கம். நசநசக்கிற வியர்வை. கதவை ஒருக்களித்துவைத்தாள். லேசான திறப்பு. அதுவழியாக வருகிற காற்று. காற்றின் வருடல். வியர்வை நசநசப்பைத்தீண்டுகிற காற்றின் விரல்கள்.

காமாட்சியத்தைக்கு என்ன பதில் சொல்ல ? அழகேசு புள்ளாண்டானை காட்டிக் கொடுக்காமல்.. எதைச் சொல்லி மறைக்க ? ஆனால்... நிச்சயமா அவுக புஞ்சைக்கு வேலைக்குப் போகக்கூடாது. போனால், மானக்கேடு. மரியாதைக்குறைவு. அழகேசனுக்கே சம்மதம் சொன்ன மாதிரி_ கேவலம்.

இங்கு நாம் மானம் கெட்டுப்போய்த் திரிந்தால் அதைமூடி மறைத்துவிடமுடியுமா ? ஊர்வாயை ஒலம்பட்டியால் பொத்தமுடியுமா ?

மருமகன் காதில் விழுந்தால்...? ஐயய்யோ... பாதரவே!

"உங்காத்தா இப்புடித்திரிஞ்சா...நீயும் அப்புடித்தானே இருப்பே? நூலுப்புத்தி, சீலைக்கில்லாமலாப் போயிருமா?" என்று மகள் வாழ்விலும் புயல்வீசி விடாதா...?

மகள் வாழ்வில் புயல் வீசுகிறதோ... இல்லையோ... நாம் நம்ம மானத்துடன் வாழவேண்டாமா? உடம்பின் வழியில்மனசு போய்விட்டால்... மானமரியாதையில்லாத கேவலப்பிராணியாக இழிந்துவிட்டால்...

ச்சீய்ய்... அப்படியொரு ஈனப் பிழைப்பு, பிழைக்க வேண்டுமா? அதைவிட மாண்டு மடியலாமே...

காற்றின் மென்சுகம்.நினைவுகளின் பயணமயக்கம்.அப்படியே உறங்கிவிட்டாள். உழைத்தஅலுப்பு. வேனாய்க் கொதிக்கிற வெயிலில் வேலைபார்த்த அயற்சி.

நன்றாக உறங்கிப்போனாள்.

அவளுக்குள் மெல்லிய நினைவு. நினைவின் ஆழத்தில் ஓர் உணர்வு. பக்கத்தில் புருஷன் படுத்திருப்பாக ஒரு மாயமயக்கம்.சும்மா பக்கத்தில் படுத்திருக்கிறான். மேலே காலை கையைப்போடாமல்... அந்தப்பக்கமாக ஒருக்களித்துப் படுத்திருக்கிறான். அவனது தேக வியர்வையின் மணம். அவனது நெஞ்சுத்துடிப்பின் மெல்லிய சத்தம். ஒரேசீரான சுவாச லயம். மூச்சின் ஒரேசீரான இரைச்சல்.

செத்துப்போனவன் வருவானா? இறந்து போனவன் உடன் வந்துபடுப்பானா? கிணறு வெட்டுகிற போது... வேட்டுவெடித்து, பாறையில் தெறித்துச் சிதறியதையும் ரத்தமுமான பிரேதமாக ஏழெட்டுப் பேர் தூக்கிக் கொண்டு வந்த காட்சி.

அவனோ... படுத்திருக்கிறான்? ஒரு மனத்திடுக்கிடலில் முழுமையாக விழித்துக் கொள்கிற ராசாத்தி. கண்விழித்துப் பார்க்கிறாள். பக்கத்தில்... சற்றே இடைவெளிவிட்டு படுத்திருக்கிற அழகேசன்.

எதிர்ப்புறமாக ஒருக்களித்து,முதுகைக்காட்டிக் கொண்டு படுத்திருக்கிறான். அயர்ந்து உறங்குகிறான். கள்ளமில்லாத சுவாச ஏற்ற இறக்கம்.

பார்த்த கணத்தில்-

"கோ...குலை"யென்று கத்திக்கதற வேண்டுமென்று பதறித்துடித்த மனசு. பயத்தில் குப்பென்று வியர்த்துக்கொட்டியது. வீல் என்று கத்த நினைத்தவள்- சற்றே நிதானித்தாள்.

சும்மா படுத்திருக்கிறவன். அசந்து உறங்குகிறான். உடம்பைத்தீண்டவில்லை. உருட்டவில்லை. புரட்டவில்லை. எந்தத் தொல்லையும் செய்யாமல்...சும்மா வந்துபடுத்திருக்கிறான். சொந்தவீட்டில் மாதிரி, உரிமையுடன் உறங்குகிறான். பயந்தலற நினைத்த ராசாத்தி.. சற்றே நிதானித்தாள். பரமசிவம் மாமாவைப் பார்க்க வேண்டும். காமாட்சியத்தையை மதிக்க வேண்டும். அவர்களுக்கு ஒருகேவலம், வந்துவிடக்கூடாது. என்ன செய்ய? கத்திக் கதறி... ஊரைக்கூட்டிவிட்டால்... அவர்கள் மானமுமல்லவா, காற்றில் பறக்கும்? அவர்களும் தலைகுனிந்து, கைகட்டி நின்றாக வேண்டுமே.

****

" பாலையா நாயக்கர் புஞ்சையின்பம்ப்ஷெட் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிய அழகேசன். ராசாத்தி ஓடிய திசையையே பார்த்தான். தெறித்தோடுகிற வேகம். அவளது மனாக்னி. சூடுசுரணை நிறைந்த நெருப்புச்சீற்றம்.

அவனுக்கே அவன் குற்றம் புரிந்தது.

தப்பு பண்ணிட்டோம்..தன்னந்தனியாக... காட்டுவெளியில்... பம்ப்ஷெட் மறைவுச்சூழலில்.. அரைநிர்வாணக் கோலத்தில் பார்த்த கணத்தில்... மதிபுரண்டுவிட்டோம். இப்புடிச் செய்திருக்கக் கூடாது.

அவனுக்குள் ஒருபயம். குற்ற உணர்வு நிறைந்த அச்சம். வீட்டில் போய்ச் சொல்லி விடுவாளோ... ஊரில்போய் பஞ்சாயத்து வைத்து விடுவாளோ... மானம் போய் விடுமோ... அய்யாதலைகுனிய நேரிடுமோ... என்ற பயத்துடன் சேர்ந்து ... உள்ளுரக் குற்ற உணர்வு.

இத்தனை நாளும் ஓர் உடன்பிறப்பு மாதிரி பழகினோமே! "மயினி.. மயினி" என்று வாய் உச்சரித்தாலும் மனசுக்குள் "அக்கா, அக்கா" என்றுதானே உணர்வுஒலிக்கும்? அப்படியொரு உடன்பிறப்பாகப் பழகிவிட்டு... கள்ளமில்லாமல், கபட நோக்கமில்லாமல், இத்தனை காலமும் பழகிவிட்டு.. திடுதிப்பென்று ஒருகணத்தில். மிருகமாயிட்டேன்... தரம் தாழ்ந்து விட்டேனே.. புத்திசிதறி... குறுகிப்போய்ட்டேனே...

அவனுக்கே அவனை மன்னிக்க முடியவில்லை. தானே தன்னைக் காறித் துப்பணும் போலிருந்தது.

ஊரைநோக்கி... நடப்பதற்கு கால்கள் தயங்கின. இந்நேரம்... ராசாத்தி மயினி அம்மாவிடம் சொல்லியழுதிருப்பாள். அய்யா கொந்தளிப்பார். அடி, பின்னியெடுத்துவிடுவார்.

ச்சேய்.. ஒரு நிமிஷத்துலே புத்திபேதலிச்சுட்டேனே.. தூக்கிச் சுமந்தவள். தன்னைப் பிள்ளைப் பருவத்திலிருந்து இடுப்பில் சுமந்தவள். பாசத்தைப்பொழிந்தவள். கம்மஞ்சோற்றுருண்டையை பிய்த்துப் பிய்த்து, வாயில் ஊட்டியவள். கொஞ்சிக் கொஞ்சி, மகிழ்ந்தவள். இவன் சேட்டை பண்ணி, அழுது அடம்பிடித்த போதெல்லாம்... பாசமும் பரிவும் சாமர்த்தியமுமாக சமாதானம் செய்தவள்.

அப்பேர்ப்பட்ட பாசமிக்க மயினிடம் போய்... அற்பமாக நடந்து கொண்டேனே... கறித்திமிரை காட்டி விட்டேனே... வெறும் மிருகமா அசிங்கமா நடந்துவிட்டேனே..

நடக்கத் தயங்குகிற அழகேசனின் கால்கள். வீட்டுக்குப் போக பயமாக இருந்தது. "ஏண்டா பாவி, இப்புடிச்செய்ஞ்சே?" என்று அம்மா கோபமும் கொந்தளிப்புமாகக் கத்துவாளே.. சாட்டைக்கம்பால் அய்யா வெளுத்து வாங்கிவிடுவாரே..

அற்பமாக நடந்து, அவமானத்தைச் சம்பாதித்து விட்டோமே என்கிற குற்ற உணர்வுடன் கூடிய பயம். நடுக்கம். வெட்க வேதனை ... மன உளைச்சல்.

அங்கும் இங்குமாக பொழுதுகளைக் கரைத்து விட்டு.. வீட்டுக்கு அவன் பயந்து பயந்து அடக்கமாக நுழைகிற போது-ஊர் அடங்கிவிட்டது. ஒன்பது மணிக்கு மேலிருக்கும்.

அம்மா மட்டும் முழித்திருந்தாள். கோபமில்லாத அம்மா. குமுறல் இல்லாத அம்மா. எதுவும் புதுக்கோலம் காட்டாத அம்மா. எப்போதும் போலான அம்மா.

"என்னடா மூத்தவனே_ இம்புட்டு நேரம்?"

"சும்மாதாம்மா_"

"குளிச்சிட்டு வா. சாப்புடு. நாங்க ஒறங்க வேண்டாமா?"

அழகேசனுக்குள் அதிர்வலைகள். புயலை எதிர்பார்த்தவன். எதுவுமற்ற எப்போதுமான நிலைமை. சகஜமான சுமுக நிலைமை.

குளித்தான். துணிமணியைமாற்றினான். சாப்பிட்டான். அய்யா உறங்குகிறார்.

இவன்_ திண்ணையில் கட்டிலைப் போட்டான். ஜமுக்காளம் விரித்து, தலையணையைப் போட்டான்.

படுக்க மனசில்லை.

மயினியின் மன்னிப்பைத் தாள முடியவில்லை. மன்னிப்பிலுள்ள பாசத்தை-பரிவை-அன்பை-தாங்க முடியவில்லை. தண்டனைக்குப் பயந்து_ அவமானத்துக்குப் பயந்து, அடிக்கு நடுங்கிப் போயிருந்த அழகேசனுக்குள், இந்த மன்னிப்பும், அமைதியும் பிரளயத்தையே ஏற்படுத்திவிட்டது. மனப்பாரம் தாளாமல், தத்தளித்தான். வெட்கத்தில் மனசுகிடந்து கூசியது. வெட்க உணர்வையும், குற்ற உணர்ச்சியையும் சுமக்க முடியாமல் திணறுகிற அழகேசன்.

அமைதியும், மன்னிப்பும் இவனைத் துன்புறுத்தியது. "போ... போ.. போ.... போய் மயினி காலில் விழு. விழுந்து கதறு. கண்ணீர்விட்டு அவள் பாதத்தைதக்கழுவு" என்று துன்புறுத்துகிற மனசாட்சி.

நடுச்சாமம் வரை கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தான். உறக்கத்தை அண்டவிடாமல்அவனைப்புரட்டியெடுக்கிற குற்ற உணர்வுகள்.

எழுந்தான். முற்றம் தாண்டினான். தெருவில் இறங்கினாள். பழகிய நாய்கள் தலையைத் தூக்கிப்பார்த்துவிட்டு, உறக்கத்தைத் தொடர்ந்தன.

ராசாத்தி குடிசை. கதவைத்தட்ட விரலை மடக்கினான். கதவு சாத்தியநிலையில், சற்றே திறந்திருக்கிறது. உள்ளே படுத்திருந்த மயினி.

எழுப்ப விரலை நீட்டினான். சற்றே திகைத்தான். உசுப்புவதை தப்பாகப்புரிந்துகொண்டு கத்தி விட்டால்..? மறுபடியும் வீடுதேடி காமப்பசியுடன் வந்துவிட்டதாக நினைத்து, கூப்பாடு போட்டு விட்டால்_?

அழுது கதறி... காலைக் கட்டி மன்னிப்புக்கேட்க வந்தது. மனஉண்மை_! சொன்னால், யார் நம்புவார்கள்?

பேசாமல், சற்றுத்தள்ளி_ வெறும் தரையில் படுத்துவிட்டான். மனப்பாரம் தணிந்த நிலையில் உறங்கியும் விட்டான்.

அனளதுதோள் பட்டையில் சப்பென்று விழுகிற அடியில், கண்விழித்த அழகேசன்.

கோபம் கொந்தளிக்கிற குரலில், "என்னத்துக்கு வந்தே? என்கிற ராசாத்தி. அவள் குரலின் நெருப்பு.

படுத்த நிலையிலேயே கையெடுத்து கும்பிடுகிற அழகேசன். "மயினி... நா மனுசப் பயலேயில்லே. மிருகமா நடந்துக்கிட்டேன். அரைநொடியிலே மதிகெட்டுப் போயிட்டேன். மன்னிச்சேன்னு நீங்க சொன்னாத்தான் கும்புட்ட கையை எடுப்பேன்..." கண்கலங்குகிற அழகேசன். கைகுவித்த நிறைகும்பிடு. கண்ணீர் இருபக்கமும் வழிய_ அழப்போவதைப் போல நெளிகிற உதடுகள்.

35

முழுமையான இருட்டை, அரிக்கேன் லைட்டின் புகைபடிந்த அழுக்கு வெளிச்சத்தால் ஒன்றும் செய்யமுடியவில்லை. பக்கத்தில் படுத்திருப்பது வேற்று ஆம்பளை என்ற எண்ணப் பகீரும் மனப்பயமும் தான் முதலில் வந்தது. வீறிட்டுக் கத்தவேண்டும் என்ற தன்னியல்பான பதற்றம் ஏற்பட்டது.

கத்தினால்... கதறினால்.. கூப்பாடு போட்டால், தெருவே திரண்டுவிடும். என்னவோ ஏதோ என்ற பதைப்புடன்ஓடிவரும். ஆள் ஆளுக்கு மொய்ப்பார்கள். இங்கு நடந்தது எதுவாக இருந்தாலும், கேவலமும் இழிவும் இவளுக்குத்தான்.

"என்னத்துக்கு இப்புடி கூப்பாடு போட்டு, ஊரைக்கூட்டுனே ?"

"ஒனக்கு கொமரிப்புள்ளைன்னு நெனைப்பு ?"

"கையைப்புடிச்சான்.. மேலேவுழுந்தான்னா. சாமக்காட்லே கூப்பாடு போட்டுரது, ஞாயம். செவனேன்னு படுத்துக்கிடந்தா... ஒடனே கூப்பாடுதானா ? என்ன ஏதுன்னு தெரிஞ்சுக்காமலேயே கூவல்காடுதானா ?

"மகளைக்கட்டிக்குடுத்த அனுப்புன பொம்பளைக்கு வயசுக்கேத்த நிதானம் வேண்டாம் ? அறிவுவேண்டாம் ?"

எல்லாவற்றையும் ஒரு கணத்தில் நினைத்துப்பார்க்கிற ராசாத்தி. பயத்தில் வெலவெலத்த ராசாத்தி... அரிக்கேன் லைட்டைத்திருகி சுடரை ஏற்றினாள். சற்றே பரவுகிற மஞ்சள் வெளிச்சம்.

பார்த்தால்-

ஒருக்களித்துப் படுத்திருக்கிற அழகேசன். "இவனா...? இங்குமா? அடப்பாவி_ இதுக்குத்தானா?"

பம்ப் ஷெட்டில் அவன் செய்த அத்துமீறல். ஆக்ரமிக்க முயன்ற மூர்க்கம். தப்பித்து, மீறி, திமிறி வருவதற்குள் அவள் பட்டபாடு. பட்ட சிரமங்கள்.

மறுபடியும் கத்தவேண்டும். "ஐயோ_ யம்மா_ இந்தக் கொடுமையைப் பாருங்களேன். கேப்பாரில்லையா? தடுப்பாரில்லியா?" என்று கதறி தெருவை கூட்டிவிடவேண்டும் என்று பதறினாள், பதைத்தாள். கோபமும் கொந்தளிப்புமாக ராசாத்தி. மனசு கிடந்து கொதிக்கிறது. திகு,திகுவென்று பற்றியெறிகிற நினைவு.

அடித்துப் போட்ட நாய் போல, அசந்து உறங்குகிற அவனது வாயிலிருந்து எச்சில் வடிகிறது. இடது முழங்கையை மடித்து, அதன் மேல் தலை வைத்திருக்கிறான். கையில் வழிந்து இறங்குகிற எச்சிலின் ஈரம் கூடத் தட்டுப்படாமல் உறங்குகிற அவன். சுரணையற்ற உறக்கம். சொந்த வீடுபோன்ற பதற்றமேயில்லாத உறக்கம்.

இவன் என்னத்துக்கு வந்திருந்தான்? அதுக்கு என்றால் மேலே விழுந்திருக்க வேண்டுமே... நாசக்காடு பண்ணுவதற்கான மூர்க்கத்தில் புரட்டிருக்க வேண்டுமே...

அதெல்லாம் செய்யாமல், பூனைபோலப் படுத்து, வீட்டுநாயாக நிம்மதியாக உறங்குகிறானே_

குடைகிற கேள்வி உள்ளுக்குள் நிதானப்படுத்தினாலும், கோபமும் கொந்தளிப்பும் குறையவில்லை.

ஒத்தைமனுசி, நாதியத்தவ, அனாதைச்சிறுக்கி படுத்துருக்குற வூட்லே சாமக்காட்லே முழுத்த எளவட்டம் வந்து படுத்தா_ என்ன அர்த்தம்? என்ன நியாயம்? கேப்பாரில்லாமப் போனதால் வந்த திமிறா? நாதியத்த சிறுக்கிதானே என்ற எளப்பமான நினைப்பில் வந்த மப்பா?

தோள்பட்டையில் சட்டென்று நுனிவிரலால் சுளீரென அடித்தாள். பதற்றமும் கொதிப்புமாகக் கேட்டாள். "என்னத்துக்கு வந்தே ?"

முழித்துப் பார்த்தான். புரண்டு கூடப்படுக்காமல் ... ஒருக்களித்து படுத்திருந்த நிலையிலேயே கையெடுத்துக் கும்பிடுகிற அவன். அழுகப் போகிறவனாக அடிஉதடு நெளிகிறது. முகக்கோணல். தனது அற்பத்தனத்துக்கு வெட்கப்படுகிற.. லஜ்ஜைப்படுகிற-முகக்கோணல்.

"அரை நொடியிலே மதிகெட்டுப் போயிட்டேன், மயினி புத்தி பேதலிச்சுட்டேன். மன்னிச்சேன்னு நீங்க சொன்னாத்தான் கும்புட்ட கையை வெலக்குவேன். என்னை மன்னிச்சிருங்க மயினி_ மனுசத் தன்மையைவுட்டுட்டு, மிருகமாகிட்ட என்னை மன்னிச்சிருங்க... மயினி"

அவனது அழுகை. கண்ணின் இருமருங்கிலும் வழிகிற கண்ணீரில் தெரிகிற அவனது மனசு. குற்ற உணர்விலும் வெட்க உணர்விலும் தத்தளிக்கிற அவனது உள் மனசு.

அவனையே வெறிக்கிற ராசாத்தி. குறவைக்குட்டியாக இருந்த மழலை. தளிர்நடைபோட்டு நடைவண்டி உருட்டிச்சிரித்த கைக் குழந்தை. விரல் பற்றி உடன்நடந்த சிறுவன்.

கையெடுத்துக் கும்பிட்டு, கண்ணீர் விட்டழுகிற அதே அழகேசன். அவளுக்குள் ஒருநெகிழ்வு. இறுகிய மனசுக்குள் ஓர் இளக்கம். கோபமும், கொந்தளிப்பும் அடங்கித் தணிகிறது. ஏறி இறங்கிய மூச்சிரைப்பும், பதற்றமும் தணிந்து தணிந்து தன்னிலைக்கு வருகிறது.

அப்படியே படுத்தநிலையில்... புரண்டு... இவள் பக்கமாக திரும்புகிறான். கைகும்பிட்ட நிலையிலேயே இருக்கிறது. கும்பிட்ட கையை எடுத்து_ அவளது பாதங்களின் கணுக்காலைப் பற்றுகிறான். பாதத்தில் புதைகிற அவனது முகம் பாதத்தில் அவனது வெப்பக்கண்ணீரின் கசிவு. அவள் மனசே சிலிர்த்துப் போகிறது.

குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்த ராசாத்தி_ பதற்றத்தில் துடிக்கிறாள். "ஐயோ _ கால்லே கண்ணீராலே கழுவுகிறானே" என்ற பதைப்பு. நெக்குருகிப் போகிறாள்.

இந்த அளவுக்கு மனசாட்சியா? அதர்மத்துக்கு இத்தனை பயமா? செய்த குற்றத்துக்கு_ இத்தனை சுய தண்டிப்பா?

பாதத்தில் கிடக்கிற அவனது முகத்துக்குள் உள்ளங்கையால் சொருகி... முகத்தைத் தூக்குகிறாள். கண்ணீர்க் கசிவுடன் கூடிய முகம். அழுது கசங்கிய முகம்.

ஒரு கையால் அவன் முகத்தை ஏந்திக் கொண்டு வலது கையால் அவனது தோள்பட்டையைப் பற்றி உயர்த்துகிறாள். உயர்த்திக் கொண்டே.... காலை மடித்து தரையில் உட்கார்ந்து கொண்ட ராசாத்தி_ வலது கையால் பற்றிய தோளைச் சற்றே முன் இழுக்கிறாள். அவனது முகத்தை தனது மார்பில் போட்டுக் கொள்கிறாள்.

அவளது மார்பில் புதைந்திருக்கிற அவனது முகம். அவனது பிடரி ரோமத்தை வலது கையால் பற்றி_ கோதி_ அழுத்துகிற அவளது உணர்ச்சிப்பெருக்கு. மனநெகிழ்ச்சி.

அவளுக்குள் வளர்த்த பாசமும், உடற்காமமும் பீறிட்டுப்பாய்ந்து கலந்து சங்கமித்த வினோத ஆவேசம். தனிமைத்தகிப்பும் தூக்கிச்சுமந்த அந்யோந்யமும் கலந்து கனிந்த மனநிலை. குழைகிற உடல்விறைப்பு.

இவனது இடது கை, அவளது தோளிலும், வலது கை அவளது மடியிலும் கிடக்கிறது. ஒரு குழந்தையைத் தோளில் போட்டு, அழுகையை அமர்த்துவதைப் போல_ தனது நெஞ்சில் அவன் முகம் புதைத்து, பிடரிரோமத்தை அழுந்தப்பற்றுகிற ராசாத்தி.

"மன்னிச்சுட்டீகளா_மயினி?"

அவனது கண்ணீர்க் குரலின் கசிவு.

"என்னத்துக்கு மன்னிக்கணும்?" அவளது குழைந்து நெகிழ்கிற மனசின் கனிந்த குரல்.

"நா... பண்ணுனது குத்தமில்லியா, மயினி ?"

"ஆசைப்படுறது.. ஒரு குத்தமா ?"

அவனது உச்சந்தலையில் பதிகிற அவளது முகமும், எச்சிலும்.

"காட்டுத்தனமா நடந்துக்கிட்டேனே... உங்ககிட்டே அப்படி அல்பத்தனமா நடந்துருக்கக்கூடாது... மயினி"

"ஏங்கிட்டே... ஒனக்கு இல்லாத உரிமையா கண்ணு ?"

ராசாத்தியிடம் காணப்படுகிற புதிய உணர்வு மாற்றத்தை உணர்கிறான். மன்னிப்பு கேட்டு வந்த இடத்தில்,வெகுமதியா ? அவனுள் திகைக்கிற நினைவு. மருண்டு, வெருண்டு மருகித் தவிக்கிறான்.

நெகிழ்ந்திருக்கிற ராசாத்தி. குழைகிற ராசாத்தி. ஒனக்கு இல்லாத உரிமையா கண்ணு என்ற நெகிழ்வுக் குரலில் தொனிக்கிற சம்மதம். ஓர் ரகசிய அழைப்பு. மாய உணர்வின் வினோதக் கூத்தாட்டம். அவனது வாலிப மதர்ப்பின் குருட்டு முனைப்பு.

முகம்புதைத்த இடத்தில் முண்டுகிறான். முட்டி மோதுகிறான். அவளது மடியில் கிடந்த வலது கையை எடுத்து, அவளது இடுப்பில் போட்டு இறுக அணைக்கிறான். முண்டி, முட்டுகிற இவனது முகத்துக்கு இடம் தருகிற நெகிழ்வு. அவன் முகத்தை ஏந்தியிருந்த இடது கையை யெடுத்து பின்பக்கமாக ஊன்றி, அதன் பக்கத்தில் மெல்லச் சாய்ந்து, அகன்று விரிகிற ராசாத்தி. அவள் தோளில் கிடந்த அவனது கை, சற்றே முன்னேறி பின்னங்கழுத்தை சுற்றி வளைத்து, நெருக்குகிறது. இடுப்பைச் சுற்றியிருக்கிற அவனது கையை அவளே மெல்ல... மென்மையாக விலக்கி... அவளது வயிற்றுக்கு மேலாகப் படர விடுகிறாள்.

முகத்தைத் தூக்குகிறான். சற்றே விலகுகிறான். அவளிடமிருந்து ஒரு வெப்ப ஆவி அடிக்கிறது. அவளது தேகம் முழுவதிலும் குழைவும், கனிவும், வெப்பத் தகிப்புமாகத் துவள்கிறது.

அவளது முகத்தில் பார்க்கிறான். பறவையாடுகிற கண்ணில், தாபத்தின்தகிப்பு. பல வருஷப் பசியின் தாபம். மோகத்தகிப்பில் துடித்துக் காத்திருக்கிற அவளது ஈரஉதடுகள். காத்திருக்கும் பொறுமையில்லாமல்-அவனது செவி மடலைக் கவ்வுகிற அவள். செவி மடலில் அவளது நாவின் துழாவல்.எச்சில் ஸ்பரிசம். மூர்க்கமாகிற அழகேசன்.வெறித்தன வேகத்தில் உதடுகளைக் கவ்வுகிற அவன்.

காட்டில் உழைத்த கையின் வலு. காய்ப்பேறிய உள்ளங்கையின் அழுத்தம். கன்னி காணாத வாலிப மூர்க்கம். இளமை முறுக்கு.

அவனது மூர்க்கத்தில் குளிர்ந்து...குழைந்து...உடம்பு மனசு எல்லாம் துவண்டு, சரிந்து பூச்சரமாக அவனது கைக்குள்ளும், மடியிலும் வழிகிற அவள்.

துவண்டு போனவளின் கால்கள் சற்றே நீள்கிறது. அவளது கால்களின் குறுக்காக இவனது கால். அவனது முதுகிலும் பிடரியிலும் அலைந்து பரவுகிற அவளது கைகள். அழுத்தி அழுக்கிற மோக மூர்க்கம். அவளே புயலாகி அவனைச் சுழற்றி_

எங்கோ... சேவல் கூவுகிற சத்தம். பனங்காட்டு மயில்களின் கூவல் சத்தம்.

வியர்த்து விறுவிறுத்து துவண்டு அவள் மேலேயே கிடக்கிற அவன். அவனைப் புரட்டித் தள்ளக்கூட மதியற்று... உணர்வற்று.. சரிந்து_மழையில் நனைந்த பூவென கிறங்கிக் கிடக்கிற ராசாத்தி.

சேவலின் கூவல். ஒன்றையடுத்து ஒன்றின் சேவல்களின் கூவல்கள். மயில்களின் கிலிக் கூவல்கள்.

"ஏய் அழகு, விடியப் போகுது_"

"என்ன செய்ய_?"

"வீட்டுக்குப்போ_."

மெல்லப் புரண்டு விலகி... ஊன்றிய முழங்கையில் தலை வைத்து அவளைப் பார்க்கிறான். கசங்கிப்போய், பூரித்துக்

கிடக்கிறாள். பரவசத்தினைப்பில் கண்ணைச்சொருகுகிறாள். அவள் உதட்டில் மனநிறைவின் ஈரப்புன்னகை.

அவனது மற்றொரு கை. அவள் மேல் அங்குமிங்குமாக அற்றலைகிற அவனது விரல்கள்.

"விடிஞ்சுரும்_ வீட்டுக்குப்போ_"

"போவோம்_இன்னும் ஒண்ணையும் பாக்கலியே"

"போதும் நாளைப் பின்னே பாத்துக்கலாம்"

ஊக்கைக் கழற்றமுடியாமல் தத்தளிக்கிற அவன் கை. அவளே கழற்றிவிடுகிறாள்.

போகச் சொல்லுது வாய். ஊக்கைக் கழற்றுகிறது கை. மறுபடியும் திரண்டு வருகிற மேகங்கள். மின்னல் வெட்டுகள். இடி முழக்கங்கள். பெரும் பாட்டமாய் மூர்க்க மழை. பாட்டம் பாட்டமாய் மழைகள்.

நாள்பட்ட தரிசுநிலம் நனைந்து குளிர்ந்து மிருதுவாகிறது.

மறுநாள் அழகேசன் தெக்காட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். பரமசிவம் கூப்பிட்டார் திண்ணையில் உட்கார்ந்தவாறு.

"ஏலேய் ? மூத்தவனே_"

"என்னய்யா ?"

"எங்க பெறப்புட்டுட்டே_ ?"

"தெக்காட்டுக்கு"

"அங்க பருத்தி யெடுப்புக்கு ஆளுக போறாக. ஒனக்கு அங்க என்ன சோலி ? நீ மணக்காட்டுக்குப்போ_"

"இல்லேய்யா.. பருத்தியெடுத்தவுடனே தண்ணி பாச்சணும்லே ?"

"ஆமா"

"வாய்க்காலு இழுக்கப் போறேன். வரப்பெல்லாம் "போய்" கெடக்கு"

"சரி சரி_ என்ன இழவோ_ ஒங்கிட்டே புதுப்போக்கு தெரியுது. சொன்ன சோலியை வுட்டுட்டு _ சொந்தமா முடிவெடுக்கே_"

காமாட்சி குறுக்கிட்டாள்.

"முழுத்த எளவட்டம். ஏவுன பொம்மையாகவே காலம் பூராவிலும் இருக்குறது? சொந்தமா சோலி பாக்கட்டும்"

"சொந்தமா யோசிக்குறது நல்லதுதான். கிடங்குகுழியிலே வுழுந்துராம_ கோளாறா யோசிக்கணும்லே?"

"குழியிலே வுழுந்து எந்திச்சாத் தான்... மேடுபள்ளமும் இருக்குன்னு அறிவு வரும். அனுபவம் வரும்"

"ம் ம்_ நீ மவனுக்குச் சப்போர்ட்டா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. மனசுலே பட்டதைச் சொன்னேன்_"

"சொல்லு_சொல்லு_"

மம்மட்டியைத் தோளில் வைத்தான். புறப்பட்டு விட்டான். தெக்காடு நோக்கி நடையை எட்டிப்போட்டான்.

ஏழுபேர் பருத்தி எடுக்கிறார்கள். ராசாத்தி, செண்பகம், மீனக்கா, காமாட்சி என்று ஏழு பேர்.

மம்மட்டியால் வாய்க்கால் மண்ணைக் கொத்தாமல் பரசிப்பரசி இழுக்கிறான். "பர்ரட்_ பர்ர்ரட்_ பர்ர்ர்ர்ரட்" என்ற லயம் தப்பாத மம்பட்டி இழுப்பு, மம்மட்டி இழுப்பில் வருகிற மண்ணை வரப்பில் போடுகிறான். புழுதிமண். எடுத்துப்போட்ட பருத்திக்கூடுகள் காலைக் குத்துகின்றன. பழுத்து உதிர்ந்து, உலர்ந்த பருத்தி இலைச்சருகுகள், மிதிபட்டு நெறுநெறுக்கின்றன. ஆண்பூவான மஞ்சள் பூ.. உதிர்ந்து வாடி உலர்ந்து காய்ந்து சண்டு வத்தலாக சுருண்டு நிறம் மாறிக் கிடக்கின்றன. சிவந்த பூக்கள் தாம் பெண்

பூக்கள். அவைதான்... பிஞ்சாகி, காயாகி... வெடித்துச்சிரிக்கிற வெண்பஞ்சுப் பருத்தியாக_

பருத்திப்பூக்களை விட... வெடித்துப்பூத்த பருத்தியின் வெள்ளிச்சிரிப்பே அழகான பூவாகத்தோன்றும்.

சாக்குகளில் பருத்தியை வாங்குகிற அழுகேசன். பருத்தியை எடுத்து எடுத்து மடியில் போடுகிற பெண்கள். மடிநிறைந்து பருத்தவுடன் அதைச் சாக்குகளில் வாங்கித் திணிக்கிறான்.

ராசாத்தியிடமும் போய் பருத்தி வாங்குகிறான். முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியாத கூச்சம். மனலஜ்ஜை.

நேற்றைய நினைவுகள். இரவின் நர்த்தனம். தலையைத் தாழ்த்தி முகம் கவிழ்ந்த நிலையிலேயே பருத்தி வாங்குகிற அழுகேசன்.

"என்ன அழகு, புதுப்பொண்ணுமாதிரி தலைகுனியுதான்_?"

மீனக்கா தான் கண்டுணர்ந்து, சுட்டிக்காட்டி கேட்கிறாள்.

"சும்மா தான்_ கூச்சம் தான்" என்கிற இன்னொருத்தி.

"எளவட்டத்துக்கு என்ன கூச்சம்?"

அவளது கேள்வி, பதில் சொல்வாரற்று வெட்ட வெயிலில் திரிகிறது. குறுஞ்சிரிப்பில் ராசாத்தி தன்னிடம் மடிப்பருத்தி வாங்க வருகிற அழுகேசனை... குறுகுறுவென்று பார்வையால் குடைகிறாள். அந்தக் குடைச்சலான பார்வைதாம், இவனை ஏற்றி விளையாடுகிறது. பந்தை கால் எற்றுவதைப் போல உதைபட்டு உருள்கிற இவனது உள்மனசு.

மெல்ல நிமிர்ந்து ஏறிட்டால்... அவளது உதடுகளின் குறுஞ்சிரிப்பு. கண்களில் தெரிகிற கேலிமின்னல்கள்.

இவனுக்கு உயிரே கழன்று உருவுவதைப் போல ஒரு குற்ற உணர்வு.

பருத்தி வாங்க வேண்டாத இடைவெளி நேரமெல்லாம் மம்மட்டியால் வாய்க்காலை இழுத்துச் செதுக்குகிறான்.

மடிநிறைந்தவுடன் அழகு என்றுகுரல்தர, சாக்குடன் ஓடுகிற அவன். வளர்ந்து அடர்ந்து நிற்கிற பருத்திச் செடிகளைக் கடந்து பருத்திக்காய்களின் தாக்குதல் போன்ற உரசல்கள் துணியில் கல்லைப்போட்டு சுழற்றியடித்த மாதிரியான பருத்திக் காய்களின் உரசல்.

எல்லாப்பெண்களும், பேச்சில் வெயில் மறக்கின்றனர். ஊர்ப்புரணிகளில்_ தெருக்கதைகளில் வேலிக்காட்டு ஜோடி மாற்றச் சேர்மானக் கதைகளில் வெயில் மறக்கிற மனவேகம்.

பேச்சுகளில் கலந்து கொள்ளாத ராசாத்தியின் மௌனம். உள்பேச்சுகளாகத் துள்ளிக்குதித்தோடுகிற நினைவுகளின் கும்மாளம். அவளுக்கு மடிநிறைகிறபோது-

"அழகு_" என்று அவள் அழைப்பாள்.

பேச்சு வேகத்திலிருந்து விலகி, எல்லாரும் எந்திரத்தனமாக அழகு என்ற சத்தம் கொடுத்துவிட்டு, பேச்சைத் தொடர்கிற மும்முரம்.

ராசாத்தி அழைக்கிற அழகில் ஒரு துள்ளல். உணர்ச்சியின் புதுமைத் தொனி. பேச்சே இல்லாமல் அழகு என்று உச்சரிப்பதற்காகவே காத்திருந்து ஊறித்தேங்கிய உயிரின் துடிப்பாக ஒலிக்கிற தனித்துவம்.

அதையே கூர்ந்து கவனிக்கிற மீனக்கா.

மணிமூன்றாகி விட்டது. பொழுதுக்கால் மேற்கில் ரொம்பச் சாய்ந்துவிட்டது. வெயிலின் நிறம் வண்ணமேறத் தொடங்கிவிட்டது.

"வேலைத்தேரம் ஆயிருச்சு. பெறப்படப்பாருங்க" என்று சத்தம் கொடுக்கிற காமாட்சி.

எடுக்குற பருத்தி எடுப்பை முடித்துவிட்டு விறகு கட்டவும் கொழை ஒடிக்கவும், வாய்க்கால் செடிகளிலுள்ள வெண்டை, கத்தரி, தக்காளி போன்ற காய்கறிகளைப் பொறுக்குவதிலும் எல்லாரும் மும்முரமாகப் பருத்தியெடுப்பிலேயே இருக்கிற ராசாத்தி.

எல்லாரும் வீட்டுக்குப் புறப்பட்டாலும், ஏதேனும் வேலை சொல்லி... சாக்குப் போக்கு சொல்லி. புறப்படாமல் புஞ்சையிலேயே இருப்பாளோ_ ராசாத்தி ?

மீனக்கா கூர்மையாக சந்தேகப்பட்டாள். எல்லாரும் புறப்பட்ட பிறகுதான் கொழை ஒடிக்க ஆரம்பித்த ராசாத்தி.

"ராசாத்தி நீ வரல்லியா ?"

"நீங்க போங்க.. விறகு கட்டிக்கிட்டு கொழை ஒடிச்சுட்டு பின்னாடியே வாரேன்"

"அப்ப நாங்க போகவா ?"

"அவளுக்கு வேற ஏதாச்சும் சோலி இருந்தாலும் இருக்கும்" என்று விஷமமும் கூர்மையுமாகச் சொன்ன மீனக்காவின் கிண்டலைக் கவனிக்காமல் அழகேசனையே கவனிக்கிற ராசாத்தி.

36

பதினோரு மணிக்கு வந்து சேர்ந்தான் முருகேசன். ஒரே காம்பவுண்டுக்குள் தான் தாசில்தார் ஆபீஸும் போலீஸ் ஸ்டேஷனும் இருக்கின்றன. இவனுக்குத் தாசில்தார் ஆபீஸில் தான் வேலை. "பத்து ஒன்று அடங்கல்" வாங்க வேண்டும். பத்துநாளைக்கும் மேலாக அலைகிறான்.

அலைகிறான், அலைகிறான் அலைகிறான்_பேய்த்தனமான அலைச்சல் அலைகிறான்.

இன்றைக்கே.. இந்த இடத்துக்கே சாதாரணமாகவா வந்து சேர்ந்திருக்கிறான். புறப்பட்டான் வந்துவிட்டான் என்ற கதையா? அல்ல_ அல்ல.

வாடகைச் சைக்கிளுக்கு காத்திருந்து, சொல்லிவைத்து.. சைக்கிள் கிடைத்து குளித்து மொழுகி, வெள்ளையும் சொள்ளையுமாக சட்டை வேட்டி மாட்டி வியர்க்க விறுவிறுக்க சைக்கிள் மிதித்து, திருவேங்கடம் வந்து.. மணிக்கணக்கில் காத்துக்கிடந்து_ சார்லஸ் பஸ்ஸைப் பிடித்து சாத்தூர் வந்து_ சங்கர் அய்யர் ஹோட்டலில் இட்லி, வடை, ரவாதோசை சாப்பிட்டு விட்டு தாசில்தார் ஆபீஸுக்குள் வர பதினொன்றுமணி.

ப்யூனை தேடிப்பிடித்து மெல்ல விஷயத்தைச்சொன்னான். "பட்டிக்காட்டுலேயிருந்து உருண்டு பெரண்டு சிரமப்பட்டு.. வந்து சேர்ந்துருக்கேன்."

"அதுக்கென்ன செய்ய? உங்க ஊருக்கு பஸ் விடணுமா?

அவருடைய நக்கலில் உள்ள தைர்யம் சிதறிப்போன முருகேசன் சமாளித்துக் கொண்டு தத்தளித்தான்.

"இல்லே... பத்தொண்ணு அடங்கல் வாங்கணும். எப்படியாச்சும் இன்னிக்கே வாங்கியாகணும். எடுத்தேறி.. திருப்பித்திருப்பி அலைய முடியாது.. அதான்..."

"எந்த ஊரு? எந்தப் பிர்க்கா? சர்வே நம்பர் தெரியுமா"

அவருடைய டெக்னிகல் வார்த்தைகள் புரியாமல் தத்தளித்தான். தடுமாறிக் குழம்பினான்.

உளறி உளறி ஊர் பெயரைச் சொன்னான்.

"உங்க ஏரியா ஆர்.ஐ.இன்னைக்கு கலெக்டர் ஆபீஸ் கேம்ப். தாசில்தார் வெடிவிபத்து நடந்த பயர் ஆபீஸுக்குப் போகப் போறாரு."

"கிராம முன்சீப் ஐயரு. கையழுத்துப் போட்டுக் குடுத்துருக்காரு. அதுலே ஆர்.ஐ சார் தாசில்தார் ஐயா கையெழுத்து வாங்கணும்."

"நீங்க உங்க சோலியிலேயே குறியாயிருக்கீக. ஆர்.ஐ. இல்லேன்னு சொல்லுதேன். காதுலே வாங்கமாட்டேங்குறீக. ஐயா... இப்ப புறப்படப் போறாரு..."

இதற்குள் ப்யூனைக் கடந்து போய்க்கொண்டே விஷ் பண்ணியவர்கள் "டேபிளுக்கு பைலைக் கொண்டாங்க" என்ற அழைப்புகள். ஐயாகிட்டே சிக்நேச்சர் வாங்கி, சீல் போட்டு வையுங்க" என்று அவர் கையில் திணிக்கப்பட்ட பேப்பர்கள் எல்லாமே ஏராளம். அவர் நின்று பேச நேரமில்லாமல், உருவத் தயாரான நிலையில். இவனோ நேரங்காலம் தெரியாமல் அப்புராணித்தனமாக கழுத்தறுத்துக் கொண்டு...

"நா என்ன செய்யணும்?" சள்ளையோடு சீறுகிறார். அவன் புரியாமையில் குழம்பித் தவிக்கிறான்.

"போய்... டீ கீ குடிச்சுட்டு பதறாம வாங்க. அப்புறமா சொல்றேன். எனக்கு டயமில்லே."

தள்ளு கதவைத் தள்ளிக்கொண்டு விரைகிற அவர். கறுப்பான ஆள். ஒல்லியான ஆள். ப்யூனுக்கான யூனிஃபார்ம் போடவில்லை. சாதாரணமாக. பேண்ட் ஷர்ட்தான்.

வேறுவழியில்லாமல் வெளியேவந்த முருகேசன். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருக்கிறது. ஒன்றும் புரியவில்லை. எல்லோரும் டிப்-டாப்பாக டிரெஸ் பண்ணிக்கொண்டு, பேப்பர்களும் பேனாவுமாக ஃபைல்களும் லொக் ஓட்டமுமாகப் பரபரத்துத் திரிகிறார்கள். எல்லார் முகத்திலும் குறிநோக்கிப் பாய்கிற மனத்தீவிரம். உள் புரிந்த உள்தெளிவு.

புஞ்சை வந்துவிட்டது. விவசாயம் செய்ய ரூபாய் வேண்டும். இருபதாயிரம் வேண்டும். இல்லாமல் ஓர் எட்டு கூட வைக்க முடியாது. புஞ்சைத் தலைமாட்டுக்கு டக்கர் கூட வந்து நிற்காது.

"சம்சாரித்தனம்னா... ஏவாரம் இல்லேடா. மண்ணைப் பொன்னாக்குற வியர்வை வித்தைடா. மூலதனம் போட்டு ஏமாத்துறவன் ஏவாரி. மூலதனமேயில்லாமே, வியர்வையைக் கொட்டி, விளைய வைச்சு, மூலதனத்தை உருவாக்குறவன் தாண்டா சம்சாரி. மூலதனத்தை நம்புன பொழைப்பா _ வெவசாயத்தை மாத்திக்கிட்டு வாறாங்கடா... வெவசாயமும் சீரழிஞ்சுபோகும். மண்ணும் உசுரு செத்துப் போகும். வெவசாயமும் நாசமாயிரும்."

என்று முந்தா நாள் அழகேசனை உட்காரவைத்துக் கொண்டு அய்யா, சாமி வந்தவரைப் போல ஆவேசமாகச் சொன்னது. அழகேசனுக்கில்லை. இவனுக்குத்தான். இளையவனுக்கானது. குத்திக் காட்டுகிறார். வார்த்தைச் சாட்டையால் சுழற்றுகிறார்.

பணம் இல்லாமல், விவசாய வேலை துவக்காமல் இருப்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

"மாடுகன்னு வளக்கணும். ஆடு குட்டி வளக்கணும். சாணி சகதி சேக்கணும். கொழை தழை அறுக்கணும். கம்மா வண்டலுமண்ணு அடிக்கணும். குப்பை சேக்கணும். கிடை போடணும். மாட்டைக்கட்டி, கலப்பையைப் போட்டு உழுகணும். நாமே பாத்தி கட்டணும். இப்புடிப்பாடுபட்டா_ என்னத்துக்கு துட்டு தேவைப்படுது?

துட்டு இல்லாம வெவசாயம் நிக்குமா? வெவசாயத்தாலே, துட்டு வரும். மாடு வித்தா துட்டு வரும். துட்டு துட்டா அள்ளிக்குடுக்குற லட்சுமிடா வெவசாயம், மண்ணை நம்பி பாடுபடுறவனுக்கு மண்ணை புள்ளையா நெனைக்கிற ஒழைக்குறவனுக்கு. துட்டைத் தேடி அலைஞ்சுக்கிட்டு வெவசாயத்தை நிப்பாட்டுறவன்வெளங்குவானா? உருப்படுவானா? வெவசாயத்தையும் நாசமாக்கி அவனும் நாசமாய்ப் போயிருவாண்டா_"

மூத்தவனிடம் கொதிப்பும் கோபமுமாக சீறுகிற பரமசிவம் மூத்தவனோ தலையாட்டிக்கொண்டே மரத்தடியில் உட்கார்ந்திருக்கிற இளையவனையே பார்க்கிறான். முருகேசனுக்கு அவமானமாக இருக்கிறது. விளக்குமாறை நனைத்து அடிக்கிறார். மூத்திரத்தில் ஊறி நனைந்த விளக்குமாறால் விளாசுகிறார்.

அவனே நொந்து நூலாகிக் கிடக்கிறான். கண்ணனைப் பார்த்தான். நேற்று.

"சொஸைட்டிலே போன் போட்டுத் தாரீகளா?"

"ம்_ பயிர்க் கடன் போடலாம். சொஸைட்டிலே மெம்பராகணும். பத்தொண்ணு அடங்கல் வாங்கணும்"

வெகு இயல்பாக சொல்கிற சொஸைட்டி செயலாளர்.

இவனுக்குத் திக்கென்றது. ஒரே குழப்பம். திகைப்பு.

"பத்தொண்ணு அடங்கலனா_ என்னது?"

"பாலையா நாயக்கர் புஞ்சை ஆறு ஏக்கர்_ உங்கபராமரிப்புலே தான் இருக்குன்னு அக்கரைப்பட்டி கிராமமுன்சீப்ஐயர்சாமி ஒரு சான்றிதழ் தரணும். அந்தச்சான்றிதழ்லே ஆர்.ஐயும், தாசில்தாரும் கையெழுத்துப்போட்டு சீல் போடணும்"

"இதெல்லாம் _ எங்க வாங்குறது?"

"தலையாரியை புடிச்சு..ஐயருகிட்டே வாங்குங்க. அப்புறம் சாத்தூர் போய்_ தாசில்தார் ஆபீஸ்லே போய்_"

"ரொம்பச் செலவாகுமோ?"

"செல்வாக்கு இருந்தா... செலவேயில்லாம, அரைமணி நேரத்துலே வாங்கலாம். நம்மளை மாதிரிப்பட்ட ஆளுகளுக்கு... மாறிமாறி விடாம அலையணும். செலவழிக்கணும். சீரழியணும். ஐந்நூறு ரூவாய்க்கு கொறையாம ஆகும்_"

அவனுக்குள் ஆயாசமாக வந்தது. சோர்வும் அயற்சியுமாக வந்தது. "சரி_ அடிச்சுப்புடிச்சு_பெரண்டு உருண்டு _பத்தொண்ணு அடங்கல் வாங்கிட்டு வந்துட்டா_நீங்க ரூபா தந்துருவீகளா?"

"அதெப்படி? எங்க ஆபீஸ்லேசில ப்ரொஸிஸர்ஸ் இருக்கும்லே? பேரேடுலே கணக்கு ஏத்தணும். உங்க அப்ளிகேஷன் மேலே எங்க எஸ்.ஓ.வந்து பார்வையிடணும்_ அப்புறம்தான் சாங்சன் ஆகும். லோன்_"

"இதுக்குப் பொறகாச்சும் ஒடனே வந்துருமா, பணம்?"

"அதெப்படி? சாங்சன லோன் சரிதானா... ஞாயம் தானா, முறைப்படி இருக்கான்னு வெரிபிகேஷன் நடக்கும். அப்புறம் தான் செக். அதுலேயும் கூட ஒரு பகுதி கட்டாயமா நாங்கதர்ற உரஉப்பு, விதைக, மருந்துக வாங்கியாகணும். அதுபோக மிச்சம் மீதிக்குத்தான் பணம் பட்டுவாடா_"

"பாதி பாதியா கொறைஞ்சுபோகுமே_?"

"ஆமா. அதுலே ரெண்டு கண்டிஷன்"

"அது என்னது?"

"ஜாமீன் கையெழுத்துப்போட_ஓர் உறுப்பினர் ரெடியாகணும். இந்த நிலத்துக்கான பத்தொண்ணு அடங்கல் உங்க பேருக்கு தர்றதுக்கு?ஆட்சேபணையில்லைன்னு உங்க ஐயா ஒரு கையெழுத்துப் போடணும்"

"ஐயா கையெழுத்தா?" அவனுக்குள் ஒரு புலி உறுமிக் கொண்டு அவன் மேல் பாய்வது போலிருக்கிறது. செயலாளர் சொல்லச் சொல்ல_ லோன் வாங்கி விவசாயம் செய்வது அத்தனை சுலபமல்ல_ என்று புரிகிறது.

சொஸைட்டி செயலாளர் சொல்லச் சொல்ல அவனுக்குள் வந்தமிரட்சி. மருட்சி. ஏழுமலைகளை ஏறி இறங்கி...ஏழு சமுத்திரங்களைத் தாண்டிப்பறந்து...ஏதோ ஒரு குகைக்குள் போய் விழுவதைப் போன்ற மருட்டலான உணர்வு.

முதல் துவக்கமே... இத்தனை தடைகளா ? வழி மறிப்புகளா ?

இருட்டுக்குள் கண்ணைக் கட்டிக் கொண்டு, முள்காட்டுக்குள் பயணப்பட்ட மாதிரியோர் மலைப்பு.

இத்தனை தடைகளையும் தாண்டி... கடன் பெற்று, விவசாயம் துவக்கி விடமுடியுமா ? ஐயாவிடம் கையெழுத்து பெற்று விட முடியுமா ?

கவலைகளில் சிக்கி, நொந்து நூலாகிக்கிடக்கிற முருகேசனை நோக்கித் தான்... ஐயாவின் இத்தனை பாணங்களும் பாய்கின்றன. சாபங்களும் கோபங்களும் சீறுகின்றன.

வேதனை தாங்க முடியாமல் வெளியே எழுந்து போய்விட்ட முருகேசனை அனுதாபமாகப் பார்க்கிற அழகேசன்.

தலையாரியைபோய்ப் பார்த்தால்... இன்றைக்கு, நாளைக்கு என்று இரண்டு நாட்கள் இழுத்தடித்து விட்டார்.அப்புறம் மூன்றாம் நாள் சம்மதித்தார்.

வாடகைச் சைக்கிளில் தலையாரியையும் ஏற்றிக் கொண்டு பெடல் மிதிக்கிற முருகேசன்.முள்காட்டில் ஒற்றையடிப்பாதை. மேடும் பள்ளமுமான ஏற்ற இறக்கமான இடைஞ்சல்கள்.

அக்கரைப்பட்டி போனால்_ "பேரேடைக் காணோம். கணக்குப் புத்தகக் கட்டைத் தேடணும்." என்று ரெண்டு நாள் இழுத்தடிப்பு செய்த ஐயர்சாமி. கையெழுத்தாவதற்குள் ஆத்தாடி, அம்மாடி என்றாகி விட்டது.

ரொம்பச்செலவாகிவிட்டது.

இதோ_ சாத்தூர் வந்திருக்கிறான். டீக்கடையில் நின்றான். ஒரு வடையை தின்றுவிட்டு, டீ குடித்தான். கிழக்கில் சினிமா தட்டிப் போர்டுகள். இருக்கண்குடி சாலையில் சண்முகநாடார் சேவுக்கடையில் கூட்டம் நெரிபுரியாகிக் கிடக்கிறது.

இவனையே கவனித்துக் கொண்டு... பின் தொடர்ந்த ஒரு பெரியவர்...கிட்டத்தில் வந்தார்.

"தம்பி..நீங்க.. வில்லேஜா ?"

"ஆமா..டீ..சாப்புடுகிறீகளா ? இவருக்கு ஒரு டீ குடுங்க"

"உங்களைப் பாத்தா.. பாவமாயிருக்கு.."

"ஏங்க ?"

கிட்டத்தில் வந்தார். காதுக்குள் நெருக்கமாக வந்து சொன்னார். "தம்பி... நீங்க வெவரம் புரியாம.. அப்புராணித்தனமா வெயிட் பண்றீக ?"

"அப்படியா ?"

"ஆமா... அந்த ஆளுகிட்டே பேப்பரைக்குடுத்தா... கூடவே நூறுரூவாயையும் குடுத்தீகன்னா.. இந்நேரத்துக்கு வேலை முடிஞ்சிருக்கும்..."

"நெசமாவா ?"

"ஆமா. அவரு... அதைத்தான் சாடைமாடையா சொன்னாரு, ஆர்.ஐ.கேம்ப் போயிட்டாரு,தாசில்தாரு போகப்போறாரு"ன்று. நீங்க தான் புரிஞ்சுக்கல்லே..."

"அப்பச்சரி.."

அவரை உபசரிக்கிற முருகேசன். வழிகாட்டிய ஒளித்தெய்வம். காத்திருப்பையும் இன்னொரு மலைப்பிரம்மாண்ட அலைச்சலையும் தவிர்க்க வழிசொன்ன புண்ணியவான்.

வெத்தலைபாக்கு வாங்கித்தந்து, பன்னீர் புகையிலையையும் வாங்கித் தந்து, அத்துடன் ஓர் ஐந்து ரூபாயும் காணிக்கை செலுத்தி விட்டு...மீண்டும் ஆபீஸுக்குள் பாய்ந்தோடுகிற முருகேசன். வேலை முடிந்து, சீல்குத்திய கையெழுத்துகளுடன் பத்து ஒன்று அடங்கல்" கைவந்து சேர... சாயங்காலமாகிவிட்டது.

மதியச்சாப்பாட்டுக்கு ப்யூனே கூட்டிக்கொண்டு போய், சிக்கன், மீன், மீல்ஸ் என்று ஒரு "வெட்டு" வெட்ட எல்லாவற்றுக்கும் இவன் தான் அழுது தீர்த்தாகவேண்டிய கட்டாயம்.

போதாக் குறைக்கு - வில்ஸ் சிகரெட் மூன்று.

சார்லஸ் பஸ்ஸைப்பிடித்து... திருவேங்கடம் போகிறபோது, ராத்திரியாகிவிட்டது. சைக்கிளை யார்கடையில் பத்திரமாக வைத்து விட்டுப்போவது என்று காலையில் யோசித்ததும், அலைந்ததும்/கடை கடையாக திரிந்ததும். சற்றே முகம் தெரிந்தவர்கள் கூட... தயங்கியதும்... மலைத்ததும்- "சைக்கிள் இருக்கட்டும். காணாமப் போச்சுன்னா- ஏங்கிட்டே கேக்கக் கூடாது" என்று பொறுப்பேற்க மறுத்ததும்- அதுஎல்லாமே தனிக்கதை. தனிச்சோகம். உபரிவேதனை.

சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். புறப்படுவதற்கு முன், ராஜாத்தேவர் ஓட்டலில் நாலுதோசை சாப்பிட்டுக்கொண்டான். சேவுக்கடையில் ஓலைப்பெட்டியில் சீனிமிட்டாயும் மிக்சரும் வாங்கிக் கொண்டான்.

சைக்கிள் தார்ச் சாலையில் வந்தது. தெருவோரங்களில் குப்புறக் கவிழ்ந்து நிற்கிற தெருவிளக்குகள். குண்டு பல்ப்களின் மஞ்சள் நிற வெளிச்சம்.

ஊரைக் கடந்தவுடன்-

குப்பென்று சூழ்ந்துகொண்ட இருட்டு. காற்றில் மிதந்து வந்து, கண்ணில் விழுந்து, தீக்கங்காக எரிகிற இரவுப் பூச்சிகள். உத்தேசமாக இமைதட்டி இமைதட்டி முழித்து வருகிற முருசேகன்.

பொடிப்பொடியான வியர்வைமணிகள். நெற்றிப்புருவங்களில், மீசைரோமங்களில் வியர்வைத் துளிகள். வாடகைச்சைக்கிள். பெடல் சுழல மறுக்கிறது. அதையும் மீறி அழுத்தி மிதித்தால்- பாதநுனியை புரட்டிவிடுகிறது. செயின் கவரில் "கரட், கரட்" டென்று தொடர்ந்து உரசிக்கொண்டே வருகிற செயின்.

இருளை ஊடுருவிப் பார்க்கவிடாமல் இரவுப் பூச்சிகள். கண்களை இடுங்கிய நிலையிலேயே வைத்திருக்க வேண்டிய கட்டாயம். இருபுறங்களிலும் செங்கற்சூளைகளின் புகைமூட்டம். மண்வேகிற வேக்காட்டு வாசம். சூளைகளின் ஆள் நடமாட்டம்.

சத்திரப்பட்டி வரைக்கும் தார்ரோடு. சாமி நாதபுரம் வரைக்கும் நாய்குதறிய சர்க்கரைச்சாக்காக கிழிந்து கிடக்கிற மெட்டல் ரோடு.சாமி நாதபுரத்தில் ஒரு பெரிய சாம்பல் நிற நாய். தப்பிப்பது, கடவுள் புண்ணியம். அதனிடம் கடிபட்டவர்கள் ஏராளம். விரட்டப்பட்டவர்கள், ஏறக்குறைய எல்லோரும்.

சாமிநாதபுரம் தாண்டிவிட்டால் கரிசல்காட்டு வண்டிப்பாதை. ஒற்றையடிப்பாதையாக நடுவில் நீளும். குறுக்கெலும்பெல்லாம் குத்திக்குடைகிற ரணம். தோள்பட்டைகளிலும் பின்னியெடுக்கிற வலி. மனசுகிடந்து துவள்கிறது. சலிப்பும், அயற்சியும் தருகிற சோர்வான நினைவுகளின் சோம்பலான அலைவு, மனசுக்குள்.

எடுக்காத எடுப்பு எடுத்துட்டோமோ...? யோகேந்திரன் அண்ணாச்சி சொன்ன மாதிரி அகலக்கால் வைத்துவிட்டோமோ? ஆர்வக்கோளாறில் வாலிபத் திமிறில்- சிக்கலில் மாட்டிக் கொண்டேனோ?

உள்ளுக்குள் ஓடுகிற குடைச்சலான நினைவுகள். கவலை தருகிற முள் நினைவுகள்.

அண்ணனை மாதிரியே_ அடங்கியபிள்ளையாகவே_ அய்யா பின்னால் போயிருக்கலாமோ? சொன்ன வேலைகளைச் செய்து விட்டு, ஊற்றிய கஞ்சியைக் குடித்துவிட்டு தொழுவத்து மாடுபோல நாமும் இருந்துவிட்டுப்போயிருக்கலாமோ? நமக்கென்ன என்றிருந்திருந்தால்_ இந்தச்சிக்கலே வந்திருக்காதோ_?

அவனுக்குள் உள்முகமாகத்திரும்பிப்பயணப்படுகிற சுயவிமர்சன நினைவுகள். அவனை அவனே எடைபோட்டுப் பார்த்துக் கொள்கிற முயற்சி. நினைவுக்கண்ணாடியில் தன் செயலை நிறுத்திப் பார்த்துக்கொள்கிற யத்தனிப்பு.

இருந்தாலும்... அய்யா கொடுமை, பெருங்கொடுமை. ஊரெல்லாம் மாறினாலும் தான் கொஞ்சம் கூட அசையமாட்டேன் என்று அடம்பிடிக்கிற வைராக்யப் பிற்போக்கு. உறுதிமிக்க பழம்பஞ்சாங்கம்.

"பருத்தியில் நோய் என்றால் வேப்பமுத்துக்கரைசலை தூக்குவாளியில் ஊற்றி... தும்பைச்சடிகளை வலதுகையில்... முக்கி முக்கித் தெளி" என்கிற முரட்டுமூர்க்கப்பிடிவாதம்.

ஸ்பிரேயரை கண்டு கொள்ளாத அய்யாவின் மூர்க்கம். மோனாகிராப்ட்ஸ் மருந்தை.. ரோகோர், எக்காலெக்ஸ் என்று வந்துவிட்ட நவீன மருந்துகளை ஏறிட்டுக்கூடப் பார்க்க மறுக்கிற முரட்டுவீரம்.

டி.ஏ.பி... காம்ப்ளக்ஸ்... பொட்டாஷ்..யூரியா போன்ற ரசாயன உரங்களை பச்சைநாவி (விஷம்) யென நினைத்து... வெறுப்பும் குரோதமுமாக விலக்கிவைக்கிற அய்யாவின்..பிடிவாதப்போக்கு..

"ஊரோடு... நாடோடு.. நாமோடு.." என்று ஒத்துப்போவதற்கு, கொஞ்சமும் ஒத்துக்கொள்ளாத அய்யாவின் குருட்டுத்தனம்.

காலத்தின் திசைக்குப் பொருந்தாத எதிர்த்திசையில் வைராக்கியமாக எட்டெடுத்து வைக்கிறஅய்யாவின் விவசரயப் பாணியுடன் எப்படி ஒத்துப்போக ?

அவருக்குப் பாடம் கற்றுத்தரவேண்டும். "நவீன விவசாயம் என்றால் என்ன"என்று நடைமுறையில் நிரூபித்துக்காட்டவேண்டும். "பசுமைப்புரட்சி எத்தனை முற்போக்கானது" என்பதை அய்யாவுக்கு உணர்த்தியாக வேண்டும்.

உழைத்து..உழைத்து.. உழைப்பின் மூலமாகவே சகலமும் சம்பாதித்த அய்யாவின் வீரம், அவரது ரத்தமான என்னுள்ளும் ஓடாதா ? ஓடும். அவரது ரத்தமான நானே... அவரைப்போலவே வைராக்கியம்ாக நின்று..நிலைத்து.. சோதனைகள் கண்டு கலங்காமல்... தோல்விகண்டு திகைக்காமல்.அய்யாவைப்போலவே மாவீர வலிமையோடு போராடவேண்டும். ஜெயித்துக் காட்ட வேண்டும்.

அவன் மனஉறுதியை குலைக்கிற மாதிரி சாமிநாதபுரம் வந்துவிட்டது. சாம்பல்நிற நாய். வேங்கைமாதிரி பாய்ந்து மேலேவிழும். குலை பதறுகிறது. என்ன செய்ய_?

ஊருக்குத் தெற்கிலேயே... கரிசல் காட்டு உழவுக்குள் சைக்கிளை உருட்டி..உழவுக்கட்டிக்குள் உருட்டமுடியாமல் திண்டாடி, ஊருக்கு மேற்காக விலகி சைக்கிளை உருட்டி ஊருக்குள் போகாமலேயே ஒதுங்கி... சைக்கிளை உருட்டி... ஊரைக்கடந்து.. துஷ்டனைக் கண்டு தூர ஒதுங்குவது நல்லது. அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சுவது புத்திசாலித்தனம்.

37

புஞ்சையில் நிற்கிறான், முருகேசன். உழவுக்கு ஏங்குகிற புஞ்சை. வெள்ளாமை எடுத்தாகிவிட்டது. அழிந்த நிலையில் பழைய பாத்தி கட்டுகள். ஆத்திச் செடிகளில் கொத்து கொத்தாகக் காய்கள். அழிந்த பாத்திகட்டுச் சுவடுகளில் மிளகாய் இலைகளின் உலர்ந்த சுருள்கள் தூசிகள்_ துப்பட்டைகள்.

இந்நேரம் உழுது ஆறப் போட்டிருக்க வேண்டும். ஆறப்போட்ட உழவுக் காய்ச்சலில் குப்பைக்குமிகளை வரிசை வரிசையாக வைத்திருப்பார். ஒவ்வொரு வண்டியும் ஒரு குமி. குப்பைகளை நிறுத்திய பிறகு இரண்டாம் உழவு. அப்புறம், கோனாரின் செம்மறியாட்டுக் கிடைகள். அப்புறம் ஒரு உழவு. அதுவே பாத்திக்கட்டு உழவாக இருக்கும்.

மற்ற புஞ்சைகளில் பரமசிவம் அதைத் தான் செய்து கொண்டிருக்கிறார். முந்தாநாள் கூட கோனாரிடம் "கிடை எப்ப அமர்த்தலாம்" என்று விசாரித்துக் கொண்டிருந்தார்.

அவர் கையில் துட்டு இருக்கவேண்டியதில்லை. எல்லாம், மனித உழைப்பு. சேமிக்கப்பட்ட உழைப்பாகக் குப்பை. செமிக்கப்பட்ட உழைப்பு என்றும் சொல்லலாம்.

இவன் கையில் துட்டு இல்லாததால் முதல் உழவுக்கே வழியற்று நிற்கிறான் முருகேசன். பம்ப் செட்டில் வாசல் படியில்

உட்கார்ந்திருக்கிறான். அடிக்கிற மாலை வெயிலை வெறிக்கிறான். ஆங்காங்கே மேய்கிற ஆடுகள். இவன் புஞ்சையிலும் மிச்சம் மீதியாயிருக்கிற பச்சைகளை மேய்கிற செம்மறிகள். அதன் கொச்சை வாடை, இங்கே வரைக்கும் மூக்கைத் துளைக்கிறது குமட்டல் வருகிறது. அதிலும்... தலையைத் தலையை ஆட்டுகிற ஆடுகள். பலமான சத்தத்தில் செருமிக்கொள்கிற ஆடுகள். செருமுகிற போது, அசிங்கமாக வெளிப்பட்டு நாலாப்புறமும் தெறிக்கிற மூக்குச் சளியின் ஆபாசம்.

சொஸைட்டி லோன் சாங்சன் ஆகிவர இன்னும் ஒருமாசமாகும். அதுவரைக்கும் வெறுங்கையும் வெறும் புஞ்சையுமாக இருப்பதா ?

மனச்சோர்வும் அயற்சியும் அவன் உற்சாகத்தை நோகடித்திருந்தது. உத்வேகத்தின் ஆணிவேரில் ஒரு வெப்ப நீர்க்கசிவு.

அருஞ்சுனை கடைக்குப் போயிருந்தான்.

வாசனைச் சோப்பு வாங்கினான். மைசூர்சாண்டல் சோப். பவுடர் டப்பாவும் வாங்கினான்.

கடையில் வேறுஆள் இல்லை. ஒரு தனிமை. ரகசியம் பேசுவதற்குத் தோதான சூழல்.

அருஞ்சுனை முகம்தான், அடைக்கோழி முகமாக சிடுசிடுத்துப் போகிறது. பல்லைக் கடித்து, வெறுப்பை மறைக்கிற யத்தனிப்பின் அடையாளம். மனசின் அசூயையும் அருவருப்பையும் சிரமப்பட்டு உள்ளடக்க முனைகிற பிரம்மத்தனம்.

ஆடம்பர ஐட்டங்களாக வாங்குகிற கடுப்போ ? வீட்டுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளச் சொல்லி விடுவேன் என்ற எரிச்சலோ ? அவரது நட்புமிக்க மாமாவை எதிர்த்து, ஊரைத் திரட்ட முயன்ற என் மீதான கோபம், இன்னும் குறையவில்லையா ?

தயக்கத்துடன் கேட்டான்... பேசவே பயந்தான். உலர்ந்த உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டு "மாமா..." என்றான்.

"வேணுங்குற சரக்கு வாங்கிட்டீல்லே ?"

"வாங்கிட்டேன்"

"அப்புறமென்ன ?"

"வேறொண்ணு கேக்கணும். மாமா, கேக்கலாமா ?

கடையில் இருந்தவாக்கில் கழுத்தைத்திருப்பி, அவனைப் பார்க்கிற ஓரப்பார்வை. அருஞ்சுனையின் பார்வை நங்கூரத்தில் யோசனையின் நிழல்.

"சொஸைட்டி லோன் வந்தவுடனே... தந்துருதேன். முன்கூட்டி ஒரு மூவாயிர ரூவா குடுங்க" என்று கேட்கத்தான் யோசித்தான் முருகேசன். அதற்காகத்தான் பீடிகையுடன் ஆரம்பித்தான். நாயின் முகத்தைப் பார்த்தவுடனேயே... முயலை இது பாய்ந்து கடிக்குமா, குப்புறப்படுக்குமா என்பதைக் காண்பதில் கில்லாடியான அருஞ்சுனை. உதடுகளின் சொற்களை நம்புவதில்லை. உள்ளுக்குள் என்ன ஓடுகிறது என்று உற்று நோக்குகிறவன். பார்வைகளின் பாவனைகளைப் பொருட்படுத்துவதில்லை. பார்வையின் ஆணிவேரின் தன்மையை உணர்கிறவன். அப்பேர்ப்பட்டவனின் கூர்மையான பார்வையைத் தாங்கமுடியாமல் தடுமாறித் தத்தளித்த முருகேசன்.

"கேக்கட்டா... மாமா ?" மனமீசையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிட்டுக்கொண்டே, மென்மைக்குரலில் யத்தனிக்கிற முருகேசன்.

"மருமகனே.. மாமாவுக்கு இப்பக் கொஞ்சம் துட்டுச் சிக்கலு. குடுத்த கடன்கள் வந்து சேரலை. வாங்குன கடன்களை கைமாத்துகளை-நிப்பாட்ட முடியலே. அதனாலே குடுக்கல்வாங்கல்லே கடுமையான இழுபறி. பணவிஷயம் தவிர... வேற எதுனாச்சும்னா.. கேளு, மருமகனே"

முருகேசனின் மனசு, அடிபட்டு மல்லாக்கச் சாய்ந்தது, வாயைத் திறந்த நாவில் முடிச்சு விழுந்தது. உள்நாக்கு அறுபட்டவனாக... முகம் செத்து, உயிர் வாடிப்போன முருகேசன்.

"கேளுஃ மாப்ளே, கேளு"

"ஒண்ணுமில்லேஃ மாமா" செருப்படிபட்ட அவமானத்தை மென்று விழுங்கிவிட்டு, மௌன வலியுடன் கூச்சலிடுகிற ரணத்துடன் வெளியேறி வந்த முருகேசன்.

முருகேசனுக்குள் நேற்று நடந்த அந்த நிகழ்வு. உயிர் கழன்ற உடல் பிரேதமாக கடையைவிட்டு வெளியேறிய அந்த நினைவு. அதன் வலியுதிர்வுகள். மனசெங்கும். மூலைமுடுக்கெல்லாம்-கவலை ரத்தமாகப் பரவிப் பாய்கிற அந்தவலி.

மனப்புண்ணின் சீழையெல்லாம் தழுவிக்கொண்டு, வெளிப்படுகிற கனத்த பெருமூச்சின் நீள இழுப்பு. பம்ப்ஷெட்டின் மொட்டை மாடியில் ஏறி நின்று- சுற்றிலும் பார்க்கிறான்.

வேப்பமரங்களும் பூவரச மரங்களுக்கும் மத்தியில் தெரிகிற ஊர்க்காடுகள். காடுகளின் கரிய தோற்றம். பெரும்பாலான புஞ்சைகள் உழுதுகிடக்கிற அடையாளம். எல்லாமே டக்கர் உழவு, டிரில்லர் உழவு. கன்னங்கரேலென்ற சமுத்திரமாக விரிந்து பரவிக் கிடக்கிற நிலப்பரப்பு. ஒன்றிரண்டு நிலத்திட்டு தான் உழப்படாமலிருக்கிறது. இயலாதவர்கள், இல்லாதவர்கள், ஏதும் வழியற்றறவர்கள். அவர்களில் இவனும் ஒருவன்.

நினைவே கசப்பாக இருக்கிறது. நொந்த புண்ணில் ஈ ஊசி இறக்கிற மாதிரி, சுரீரிடுகிற வலி. அவமானமாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

வேறுவழியில்லாமல் திகைத்து நிற்கிற தனது புகலற்ற நிலைமை. உதவுவதற்கும், ஆதரவுக்கரம் நீட்டுவதற்கும் நாதியற்ற நிலைமை. "எடுக்காத எடுப்பு எடுத்தாயேஃ" விலாவுலே வெடிச்ச பயஃ" "அப்பனை அசிங்கப்படுத்திட்டுஃ அப்படி என்னத்தை இவரு சாதிச்சுக் கிழிக்கப் போறாராம்" என்றெல்லாம் சொல்லிக் கொண்டும், எண்ணிக்கொண்டும்ஃ இவனை அசூயையாகப் பார்க்கிற சமூக ஒதுக்கல்.

புஞ்சையில் நிற்க மனசில்லை. இறங்கி.. மளமளவென ஊரைநோக்கி நடந்தான். ஊரின் விளிம்பில்... ஓடைக்கரையேறி வருகிற போது-

சைக்கிளில் எதிரில் வருகிற கண்ணன். முருகேசனைக் கண்டதும், சைக்கிளிலிருந்தவாறே ஒரு காலை நிலத்தில் ஊன்றி, ஒரு காலை பெடலில் வைத்து நின்ற தோரணை. கண்ணனின் முகச் சிவப்பு. இளம்வயசுக்குப் பொருந்தாத பெரிய கண்ணாடி.

"என்ன முருகேசா_ புஞ்சைக்குப் போய்ட்டு வாரீயா"

"ஆமா... வெறும்புஞ்சை" சலிப்பும் வேதனையும் ததும்புகிற குரலின் அயற்சி.

"அதான்_ லோன் ஏற்பாடாகுதுலே? அப்புறமென்ன கவலை?

"ஆமா.. லோன் பெரீய்ய்ய லோன்! வேகிற கூரைக்கும் வெட்டுற கெணத்துக்கும் கிட்டத்துலேயா இருக்கு?"

"லோன்_ சீக்கிரம் சாங்சன் ஆயிருமப்பா_"

"அதெல்லாம் ஆயிரும். அதுலே சந்தேகமில்லே. அதுலே என்ன பிரயோஜனம்? தாகத்துக்குத் தண்ணிகேட்டா... நீ மேகத்துக்கு ஆளனுப்பியிருக்குன்னு சொல்லுதே?"

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்லுதே?"

"நீ என்ன செய்ய முடியும்? ஒன்னாலே முடிஞ்சதைச் செய்ஞ்சுட்டே. எந்தலையெழுத்துத்தான், கோண எழுத்தாயிருக்கு. எல்லாரும் உழுதுபோட்டு, வெள்ளாமைக்கான டி.ஏ.பி.மூடைகளை வாங்கி விதைச்சுட்டு, பாத்தி கட்டப் போறாக. நா ஊரைச் சுத்திக்கிட்டிருக்கேன், துட்டு இல்லாம. உழுகுற காலத்துலே ஊர் வழி சுத்துறவன், அறுக்குற காலத்துலே அருவாளைத் தேட முடியுமா?"

துவண்டுசரிந்த மனசின் வேதனையும் கவலையுமான அவனதுகுரல். அவனது முகமெல்லாம் வருத்த நிழலின் இருட்டு.

கண்ணனுக்கே பரிதாபமாக இருக்கிறது.

ஓர் இளைஞன். ஒரு விவசாய ஆர்வம். ஒரு விவசாய முறை மீதான ஆசை. ஆசையும் ஆர்வமுமாக சவால்விட்டு விட்டு.. களத்தில்

இறங்கி... கையறு நிலையில் கலங்குகிற வாலிபன். பாவமாக இருக்கிறது.

"சரி... முருகேசா... நாளைக்கு ஓராளுகிட்டே ஐயாயிர ரூவா வாங்கித் தாரேன். வட்டி கொஞ்சம் ஜாஸ்தியாகும். பரவாயில்லையா ?"

"எம்புட்டு ?"

"ஆயிரத்துக்கு நூறுவட்டி. ஐயாயிரத்துக்கு ஐந்நூறு ரூவா வட்டி. லோன் வாற்றப்போ_ நானே அதைக் கைப்பத்திக் கிட்டுத்தான் மிச்சம் தருவேன்_ சம்மதமா ?"

ஐந்நூறுவட்டி என்பது... வட்டியா ? பெருங்கொள்ளை யல்லவா ? ரெண்டு பைசா வட்டிக்குக் கடன் கிடைக்கிற கிராமத்துச் சூழலில் ... பரஸ்பர நம்பிக்கைகள் அழிந்து போகாத கிராமத்தில் ரெண்டு பைசா வட்டிக்கு அடமானப் பொருள் இல்லாமலேயே கடன் தரக்கூடிய கிராமியச் சூழலில்_ இது பெரும் அநியாயம். அக்கிரமம்.

ஆனால்...ஆனால்...ஆனால்... இவனுக்கு ரெண்டுபைசா வட்டிக்கு யாரும் கடன்தரமாட்டார்கள். அருவருப்பும் அசூயையுமாக பார்க்கிற ஊர்க்காரர்கள், இவனை எப்படி நம்புவார்கள் ? மனிதனாகவே ஒப்புக் கொள்ளாதவர்கள், இவனை ஒரு சம்சாரி என்று எப்படி அங்கீகரிப்பார்கள் ?

"என்ன சொல்லுதே ?"

"வட்டி_ பெருங் கொடுமையாயிருக்கே_"

"பெருங்கொடுமைதான். ஆனா...லோன் யார் யாருக்கு சாங்சன் ஆயிருக்கோ.. அவுகள்லே முக்கா பாதிப்பேரு இந்த வட்டிக்குச் சம்மதிச்சு_ முன்பணம் வாங்கியிருக்காக_"

"நெஜமாவா ?"

"ஆமா. நீயும் கவலைப்பட்டு, தனிமைப்பட்டு நிக்கீயேன்னு அனுதாபப்பட்டதாலே தான்... ஒனக்கும் ஒத்தாசையாயிருக்க லாமேன்னு.. இந்த ஐடியாவைச் சொன்னேன்"

கண்ணன் முகத்துச்சிவப்பில் சாயங்கால வெயிலின் மஞ்சள். கண்ணாடியில் சூரிய ஒளிப்புள்ளி அவன் முகத்தையே அண்ணாந்து பார்க்கிற முருகேசன்.

"சரி... ஏலமாட்டாத நொண்டிப்பய... ஏழுகுதிரைக்கு ஆசைப்பட்ட கதையா.. நா வந்து மாட்டிக்கிட்டேன்.. வேறு வழி? வழியத்தவனுக்கு வட்டியும் ஒரு வழிதான்_ ம் ஹூம்_"

"அப்ப_ ஏற்பாடு பண்ணிரவா?"

"ம்_ எப்ப வரும்?"

"இப்பவே.. பொழுதடையுறதுக்கு முந்தி, என்கிட்டே வந்து.. பணத்தை வாங்கிக்க_"

வலதுகையால் பெடலை உன்னிமிதித்து, பிரேக்கை விட்டு விட_ ஓசைக்குள் இறங்குகிற கண்ணனின் சைக்கிள்.

ஏதோ_ ஒரு குகைப் பாதை கிடைத்த மாதிரி_ மலைப்பாறை வழி தட்டுப்பட்ட மாதிரி.. கரடு முரடான மூர்க்க வட்டியுடன் கிடைக்கிற ஓர் அவசரக் கடன்.

யோகேந்திரன் அண்ணாச்சியிடம் ஆயிரத்தைக் கொடுத்து, நாளைக்கே உழவடித்துவிடலாம். டி.ஏ.பி.மூடைகள் வாங்க பணம் போதாது. என்ன செய்ய? உள்ளூர்க்கடையில் விலை ஜாஸ்திதான். மூடைக்குப் பத்து ரூபாய் கூடுதலாக இருக்கும்.

பரவாயில்லை. ரெண்டாயிரத்தைந்நூறைத் தந்துவிட்டு, பன்னிரண்டு மூடை டிஏ.பியும் எட்டு மூடை பொட்டாஷும் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். மிச்சத்துக்கு வாய்தா சொல்லிக் கொள்ள வேண்டியது தான்.

"சொஸைட்டி லோன் வந்தவுடனே.. மிச்ச ரூவாயை பைசல் பண்ணிடுதேன்"

ஊருக்குள் நுழைகிற முருகேசனின் மனசுக்குள் புதிய மஞ்சள்வெயில். அந்திவெயிலில் அறிமுகமாகிற உலகமே புதியதாகத்தான் இருக்கிறது. சோகமயமான ஓர் ஓவியம் போல உள் மனசுக்குள் புது அனுபவமாகிறது.

சம்சாரி.. ரெண்டு வழியிலே சூறையாடப்படுறான். ஒண்ணு.. வெவசாயத்துக்கான பொருள்கள் வாங்குறபோது. ரெண்டு. வெளைஞ்ச வெவசாயப் பொருள்களை விக்கப்போறபோது.

அப்படீன்னு சொல்றாக. அது முழு உண்மையில்லே. சம்சாரி சூறையாடப்படுறது... இன்னும் பல்லாயிரம் வழிகள்லே. இன்னும் சொல்லப் போனா. அவன் சூறாடப்படாத வழிகள் ஏதேனும் மிச்சமிருக்கா ?

தலையாரி நினைவு. தாசில்தார் நினைவு. சொஸைட்டி லோன். உரமூடைக்கிழிசல், நெளிஞ்சடப்பா பூச்சிமருந்துகள் போகத்தான் மிச்சப்பணம். அதிலும் பங்குத் தொகை பிடிமானம் வேறு ஐந்நூறு ரூபாய் வட்டி– ஆத்திர அவசரத்துக்காக உள்ளூர்க் கடைகளில் அதிக விலை கொடுக்கப்பட வேண்டிய கட்டாயம்.

கடந்த பதினைந்து நாட்களுக்குள் இவனுள் சூறையாடப்பட்ட கொடுமைகள். பதினைந்து நாட்களில் இத்தனை கசப்பான சூறையாடல்கள் என்றால், காலம்பூராவிலும் வெள்ளாமை செய்கிற சம்சாரிகள். எத்தனை கொடிய, எத்தனை பயங்கர எத்தனை ரகமான சூறையாடல்களுக்கு உள்ளாவார்கள் ?

இத்தனை சூறையாடல்களுக்கும் உள்ளாகிற -பலியாகிற - இவனைப் பார்த்துத் தான்... "நீ நாட்டின் முதுகெலும்பு" என்கிறார்களா ? இது விவசாயப் பொருளாதார நாடு என்று எப்படி பெருமை பீற்றிக் கொள்ள முடிகிறது ?

அவனுள் கவிகிற கவலைஇருட்டு, தன்னைச் சூழ்ந்த அனுபவங்களே– தன்னைச் சுழற்றியடிக்கிற தேசத்தின் அவலத்தை ஒட்டு மொத்தமாக உணர வைக்கிறது.

"படித்தவன்... எல்லாம் தெரிந்தவன்" என்றிருந்த மமதையெல்லாம் நொறுங்கித்தகர்ந்து– இந்தப்பதினைந்து நாட்களில் கற்ற பல புதிய அனுபவங்களே– "நீ இதுவரைக்கும் எதுவும் தெரியாத பாமரனாயிருந்திருக்கிறாய்" என்பதையும் செருப்பால் அடித்து உணர்த்துகிறது.

கண்ணனிடம் பணம் வாங்கணும். யோகேந்திரனைத் தேடிக் கண்டு பிடிக்கணும். உள்ளூர் உரக்கடைக்காரரிடம் முன்கூட்டியே... பார்த்து நைஸ் பேச்சுகள் பேசி.. வாய்தா சொல்வதற்கான வாய்ப்பை கனிய வைக்கணும். நாளை உழவடிப்பதற்கு மரம் மட்டைகளை வெட்டித் தயார் பண்ணனும்.

இப்படி நிறைய "ணும்"கள். இவனை எதிர்பார்த்து, இவன் அலைச்சலை எதிர்பார்த்து-இவனது உழைப்பு முன் முயற்சிகளை எதிர்பார்த்து-காத்துக்கிடக்கிற ஏகப்பட்ட"ணும்"கள்

ஆனால், இவன் கால்களோ.. இடிகிணற்றை நோக்கி நடைபோடுகிறது. செண்பகத்தைப் பார்த்து பதினைந்து நாட்களுக்கும் மேலாகிவிட்டது. அதற்கும் முன்பு சந்தித்தது.

அன்றைக்கும்..."இன்றைக்கும் வேண்டாமே" என்று அணைபோட்டுத் தடுத்துவிட்டாள். "தங்கினாலும் தங்கிடுமே..." என்று அச்சுறுத்தி அரட்டிவிட்டுப் போனாள்.

அவனுள் வாலிபத் திணவு. நாள்பட்ட பசி. அவனை மீறுகிற ஆவல். அன்றாடக் கடமைகளை அலட்சியம் பண்ண வைக்கிற மனச்சபலமும், உடற்சலனமும்.

எதையும் பொருட்படுத்தாத மூர்க்கத்துடன் வேகம் வேகமாகப் போகிற முருசேகன். இடிகிணற்றுக்குள் இறங்கினான். செண்பகமும் அப்போதுதான் மூலைப்படியில் காலை வைக்கிறாள்.

அவளது பின்னழகைப் பார்க்கிறான். நீலநிறத்தில் ப்ரவுன் நிறப்பூக்கள் போட்ட சேலை. அதற்கேற்ற ஜாக்கெட்டின் முதுகில் படுகிற மஞ்சள் வெயில். பின்னித் தொங்கவிட்ட சடையின் நுனியில் சலங்கை வைத்த குஞ்சம்.

விரிந்த தோள்பட்டை குறுகலான இடுப்பு. பரந்த பிட்டப்பகுதி. நிறுத்திவைத்த உடுக்கை மாதிரியான தோற்றம். அவனுக்குள் இனம்புரியாத மனக்கிளர்ச்சி. அவன் திரேக நரம்புகளில் உஷ்ணரத்தம், கூடுதல் வெப்பமாக விரைந்து பரவுகிறது. அந்தச் சூட்டில் முறுக்கேறுகிற நரம்புகள். அவனுக்குள் ஒருகாய்ச்சல்

பரவுவதைப் போன்றதோர் உணர்ச்சித்திணறல். திகுதிகுவென உடல்முழுக்க ஒரு வெப்பப் பரவல்.

"வந்துட்டீகளா ?"

என்ற கேள்விக்குக்கூட எவ்விதப் பதிலும் சொல்லாமல், வெறித்தனமாக அவளைப்பற்றினான். பின்பக்கமாகவே கைபோட்டு, அலாக்காகத் தூக்கிய வேகம். தூக்கிய அவளைச் செந்தூக்காகத் தூக்கி நிறுத்திய கைவலிமை. கால்களை அந்தரத்தில் ஆட்டிக் கொண்டே உடல் பதறிய செண்பகத்தின் கைகள் அவன் தோளைப் பற்றிக் கொள்ள...

"இதென்ன.. வெறிக்கூத்து ?" கண்டனச்செல்லமாக சிணுங்கிய செண்பகம்.

"எல்லாம் ஒன்னாலே தான்..."

"நா என்ன பண்ணுவேன் ?"

"ரொம்பநாள் காயப்போட்டே இல்லே ?"

"நானா ?"

"பெறவு"

"நீங்க தான்..ராசா.. பத்துநாளா.. என்ன நெனைச்சுக்கூடப் பாக்கலே. புஞ்சை லோனு.. அது இதுன்னு சுத்தியலைஞ்சீக...?"

அதற்குள் அவன் மும்முரமாகிவிட்டான். அவளைக் கீழே தள்ளிய வேகம். ஜாக்கட் ஊக்கைக்கழற்றிய விறுவிறுப்பு. அவளை ஒரு ஜீவனாகவோ.. மனுசியாகவோ.. பொருட்படுத்தாத மூர்க்கம். ஒரு பொம்மையாக மட்டுமே கருதுகிற காமக்காரி யார்த்தம்.

முந்தானையை ஒதுக்குகிற வேகம். காலடிச்சீலையை உயரத்தள்ளிய வேகம். அவளைப்புரட்டவும்..உருட்டவும்.. ஏதேதோ செய்யவும் அவளிடம் எதையும் எதிர்பார்க்காத வெறிவேக உணர்ச்சி நர்த்தனம்.

புதிய முருகேசன். இங்கிதமில்லாத புதிய ராசா. கொஞ்சிக் குழையாத புதிய ஆண். குழைய வைப்பதற்காக வார்த்தைகளில் காமத்தை எச்சிலாக வழிய விடாத புதிய முருகேசன். சற்றே மிருகத் தனமாகிற முருகேசன். யந்திரமாகிவிட்ட முருகேசன்.

சம்மதித்து.. சகலத்துக்கும் வளைந்து கொடுத்தாலும் அவள் மனசுக்குள் ஒரு புதிய முள்ளின் நெருடல். புதிய முள்ளின் உறுத்தல். ஒரு தினுசாக அவனையே பார்த்துக்கொண்டு, அவனுக்கு இணங்குகிற செண்பகப்பூ.

அவனுள் சட்டென முள்விளாராக அடித்த நினைவு. தலையாரி... முன்சீப்... தாசில்தார்... கண்ணன்... ஐநூறுரூபாய் வட்டி என்ற கசந்த யதார்த்தத்தின் முள்விளாரின் சாட்டிச் சுழற்றி போன்ற நினைவு.

பாதியிலேயே தளர்ந்து..துவண்டு.. விலகுகிற முருகேசன். "ஏன்...என்னாச்சு ?" வெட்கத்தை விட்டு விசாரிக்கிறாள். "இன்னைக்கு என்னாலே முடியலே"

38

"ஏலேய் அழகு, களத்துலே முளகாய்வத்தல் காய்ஞ்சுகெடக்கு காவலுக்கு நீ போய் படுத்துக்க..."

"ஆட்டும்யா_"

களத்தில் காயப்போட்டுடிருக்கிற மிளகாய்ப்பழம். அறுத்து ஊற்றிப் பூசிவிட்ட ரத்தப்பெருக்காகத் தரையில் பரந்து கிடக்கிறது. இரண்டாம் நாள் காய்ச்சல். ஈரமினுமினுப்பு உலர்ந்து,சுருக்கங்கள் விழுந்துவிட்டன.

மழைக்கோப்பு இருந்தால்... அத்தனையும் கூட்டி, குமித்து, சாக்குகளால் தைக்கப்பட்ட படுதாவினால் மூடவேண்டும். மழைக்கான அடையாளமில்லை.

கழுவிப் போட்ட கறுப்புப் போர்வையாக வெற்றாகாயம். ஒற்றை மேகம் கூட இல்லை. வளர்பிறைக்காலம். நிலாவும் அடைந்துவிட்டது. அள்ளியிறைத்த சோற்றுப்பருக்கைகளாக நட்சத்திரங்கள்.மல்லிகைப்பூக்கள் மாதிரி வெள்ளைவெளேரென்று முளைத்துக்கிடக்கிற நட்சத்திரங்கள். நார்க்கட்டிலைச் சுமந்து கொண்டு வருகிற அழசேகன். தலையணை, போர்வை எல்லாம் சுருட்டி கட்டிலின் மேல் வைத்திருக்கிறான்.

கட்டிலைத்தூக்கி ஏந்திய நிலையில் இரண்டு கையும் விறைப்பாக உயர்ந்திருக்கின்றன. உயர்த்திய கைகளில் கட்டில் குப்புறக்கிடக்க, ஹெர்குலிஸ் மாதிரி நடந்து வருகிறான்.

விரிந்தகன்ற முற்றத்தைவிட்டுப் புறப்படும் போதே வாசலில் காத்திருந்து பார்க்கிற எதிர்வீட்டு ராஜம்.

அவளுக்கு மனசெல்லாம் நமைச்சல்.

"களத்துக்குக் காவலுக்காகப் போறான்? காவல் இல்லாத காட்லே மேய்ச்சலுக்குப் போறான்.

அவள் பார்ப்பதையும், பார்த்துக் கொண்டிருப்பதையும், நாடியில் வைத்த சுட்டுவிரலுடன் "குர்ர்ர்"ரென்று பார்ப்பதையும், தெருவில் போய்க்கொண்டிருப்பவனை விடாமல் விரட்டிப் பார்ப்பதையும் கவனிக்கிற காமாட்சி.

"அந்தப் பய ஊரைக் கூட்டி குடும்பத்தைத் தலைகுனிய வைச்சான். இந்தப்பய..என்ன கூத்து கட்டக் காத்திருக்கானோ... தெரியல்லியே_" என்று அடிமனசில் புலம்புகிற காமாட்சி.

பாயில் படுத்தால் கண்ணுக்குள் உறக்கம் ஒட்டவில்லை. நெருஞ்சிமுள்ளைச் சொருகின மாதிரி கண்ணெல்லாம் வலி. பாடுபட்டு வேர்வை சிந்திய உடம்பு, "ஒறங்கு, ஒறங்கு" என்று போராடுகிறது. அடித்துப்போட்ட நாயாக விழுந்து கிடக்கிற உடம்பு. மனசில் தான் நெருஞ்சிமுள். "என்ன மாதிரியான கேவலத்தை இடிமாதிரி குடும்பத்தோட தலையிலே போடப்போறானோ...?" கொத்திக்குதறுகிற நினைவுகள். நினைவுமுட்கள்.

படுத்த திரேகம் ஒய்ந்துகிடக்க_ ஓயாத நச்சரிப்புக்குள் மனசு. முணுமுணுப்பதுவும் மணிக்கைகளை அசைப்பதுவுமாக குட்டிபோட்ட பூனையாக அவள்.

கட்டிலைக் களத்தில் போட்டான் அழகேசன். மிளகாய் வற்றல் காயப்போட்ட நிலையில் கிடக்கிறது. இரவுப்பதமேறிய வற்றல் மூன்றாம் நாள் வெயில்ல காய்ந்தால்_ நல்ல நிறம் கிடைக்கும்.

களம், ஊரின் மேற்கு விளிம்பு. கட்டிலில் உட்கார்ந்தவனுக்கு படுக்கத் தோன்றவில்லை. ராசாத்தி நினைப்பு உள்ளுக்குள் பூவாசமாக கமகமக்கிறது.

பொழுதடைந்த நேரத்தில் அவளது தெருப்பக்கம் போனான். சும்மா ஆள் கூப்பிடுகிற சாக்கில், நாலு பேரிடம் பேச்சு கொடுத்துக்கொண்டான். கூரைவீட்டு முற்றத்தில் குத்துரலில் உட்கார்ந்திருக்கிற ராசாத்தி.

குளித்திருக்கிறாள். இப்பத்தான். சலவை மடிப்பு மாறாத சீலை உடுத்தியிருக்கிறாள். ஈரத்தலையில் சிணுக்கொலி போட்டு இழுத்து இழுத்து சிக்கெடுக்கிறாள்.

அந்தப் பக்கமாக நின்று, நிதானித்து நடக்கிற அழகேசன்.

"என்ன மயினி, குத்தொரல்லே உக்காந்துட்டீக. வேலை சோலி முடிஞ்சிருச்சா ?"

"ஒத்தைமனுசிக்கு என்னசோலி ?"

"சோறாக்கி, கொழம்பு வைச்சுட்டீகளா ?"

"எல்லாம் ஆச்சு.."

"இந்நேரத்துக்குள்ளேயா ?"

"வாரீயா.. சாப்புடுதீயா ?"

"வந்தா.. சோறு வைப்பீகளா ?"

"வந்தா.. வைச்சுத்தராமலா, இருப்பேன் ?"

"அப்ப.. இன்னைக்கு வாரேன்.."

மதினி, கொழுந்தன் உறவின் அடிப்படையில் கேலி கிண்டல் பேச்சாகப் பேசிச்சிரித்துக்கொண்டாலும், உள்ளுக்குள் ஓர் அந்தரங்கக் குரல்.

அழைப்பும் வேண்டுகோளுமான உரையாடல் மர்மம். வருவதாக உறுதி கூறுகிற ரகசியம்.

குளிப்பும் ஈரக்கூந்தலும் கூட அவனுக்கொரு சமிக்ஞைதான். வரலாம் என்கிற தொனி. வாயா என்கிற அழைப்பு.

கட்டிலில் உட்கார்ந்து ஆகாயத்தைப்பார்க்கிற அழகேசன். ஒளிச்சரிவாக வீழ்கிற விசையுள்ள எரிகல்.

"வந்தா... வைச்சுத்தராமலா இருப்பேன் ? "ராசாத்தியின் மோகமூட்டுகிற கொக்கிக்குரல். அப்போதைய அவளது ஈரஉதட்டில் எச்சில் மினுமினுப்புடன் பூத்த பூமலர்ச்சி. இருகண் விழியையும் ஓரத்தில் நிறுத்தி தாழ்த்திப் பார்த்த பார்வையின் குறும்பு மொழி.

இவனுக்குள் திகுதிகுவென்று உடம்பு தகிக்கிறது. காய்ச்சல் கண்டவனைப் போல ஒரு குதுகுதுப்பு. அவளது ஈரக்கூந்தலின் குளிர்ச்சியை உள்ளங்கையால் வருடி விடணும் என்றொரு பரபரப்பு. குளித்த மேனியைத் தொட்டுத் தடவி. அவளது தகிப்பான வெக்கை மூச்சை ஸ்பரிசிக்க ஆசைப்படுகிற தினவு. உடம்பெல்லாம் முறுக்கேறுகிற மாதிரியோர் திமிறல். அடிவயிற்றில் பகீர் பகீரென்கிற சூன்யம்.

ஊர் இன்னும் அடங்கவில்லை. செம்மறியாடுகளின் சத்தம். அதன் செருமல் குரல். காற்றில் மிதக்கிற கலவையான வானொலிச் சினிமாப் பாட்டுகள். எருமை மாடுகளின் கனைப்புகள். வாலைச் சுழட்டியடிக்கிற சத்தங்கள். கூளப்படப்பில் கூளத்தின் தூர்மண் கட்டிகளைக் கட்டையால் அடிக்கிற சத்தம்.

ஊர்மடத்தில் இளவட்டங்களின் கும்மிரைச்சல். விவசாயப் பாடுகள். அரசியல் பற்றிப் பேச்சுகிற முட்டல் மோதலான விவாதக் குரல்களின் உரசல் வெக்கை.

அந்த மடத்தில் தான் ஒரு பெரியவர் இளவட்டங்களுக்குச் சமதையாக கெட்ட வார்த்தை விஷயம் பேசிக் கொண்டிருந்தார்.

"எளவட்டப் பயக வயசு மீறுன பொம்பளைகளோட சகவாசம் வைச்சுக்குறது நல்லதுல்லே"

"இளசுகளுக்கு எங்க போறது ? தட்ட மாட்டேங்குலே ?" "அதானே... ? அத்தது, அலைஞ்சதுன்னு, முத்துனதுக தானே சிக்குது"

"முத்துனதுகளைத் தேடணுமாக்கும் ? அதுகளே ஒன்னை மாதிரி வெடலைப்பயகளை வளைச்சு மடியிலே போட்டுக்கும்"

"கிடைச்சதை அனுபவிக்க வேண்டியதுதான். வேறபுகல் ?"

"ஆமா. நம்ம கனிசாமிகூடரெண்டுமூணுகுட்டிகளோட உள் கெழட்டு வெள்ளாடு பின்னாடி திரியுதானாம்".

"திரியுதானா_ மேய்க்கானா ?"

"மேய்ச்சல் தான். வவுறுமுட்ட மேய்றான்."

"பெறகென்ன...? அந்தளவுக்கு லாபந்தானே ?"

"இப்ப லாபந்தான்_ அவனுக்கு வாழ்க்கை நட்டந்தான்"

"நட்டமா_ நட்டமா ? என்ன நட்டம் ?"

மடம் பூராவும் அலை அலையாக வெடித்துவெடித்து எழுந்து கொண்டிருந்த சிரிப்பாணிக் கூத்து, சட்டென்று நின்றது.சட்டென்று முளைத்து உட்கார்ந்து கொண்ட மௌனம். பெரியவர் முகத்தையே தவிப்புடன் பார்க்கிற இளசுகள்.

மடத்து வராண்டாவில் தொங்குகிற மஞ்சள் நிறக் குண்டு பல்பின் வெளிச்சத்தில் அவரது முகம் நிழல் மறைக்கிறது.

"சின்னப்பயதானே.. இவனாலே என்ன ஏலும்ங்குற ஏளனநெனைப்போட தான் எடம்தருவாள். இவன் எம்புட்டு வீம்பு வீராப்போட தம்புடிச்சு மல்லுக்கட்டினாலும்... இம்புட்டுத்தானா நீங்குற மாதிரி ஒரு இகழ்வாய் ஒரு பார்வை பாத்துட்டான்னு வைச்சுக்கே.. நீ செத்தே. ஒன்னோட சக்தி மேலே ஒனக்கு சந்தேகம் வந்துரும், அப்புறம்.. ஒனக்கு வாக்கப்பட்டு வந்த சின்னப் பொண்ணுகிட்டேகூட நெருங்கப் பயப்பட்டு பம்முவே. அவளையும் ஒன்னாலே திருப்தி பண்ணமுடியாது. வாழ்க்கையிலே வேண்டாத தும்பமும், கொழப்பமும் தான்_"

"பெரிசு... பெருசு பெருசா அவுத்து வுடுறாரப்பா"

"அதுமட்டுமில்லே..."

"ம்"

"முத்துன பொண்ணுகளோட சகவாசம் வைச்சுக்கிட்ட வனுக்கு.. ஆயுசு கட்டை தான்."

"எதுக்கு ?"

"சின்னவயசுலேயே நெஞ்சுலே சீக்கு வந்துரும். அல்பாயுசுலே நெஞ்சடைப்புச் சாவு வந்துரும்"

"எதனாலே... " "எப்படி ?" "என்னத்துக்கு ?" "நெசந்தானா ?" என்று ஏகப்பட்ட கேள்விகள் ஒரு சேர வெடித்தெழுந்ததில் இளவட்டங்களின் மன அதிர்வு தெரிந்தது.

பெரியவர் சற்று இடைவெளிவிட்டார். மௌனம் காத்து எங்கோ வெறித்தார். பொருத்தமான வார்த்தைகளை உள்ளுக்குள் தேடியலைகிற நினவின் பயணம்.

"எப்புடி_ என்னத்துக்கு_ சொல்லுங்க_ சஸ்பென்சு தேவையா_ பட்டுன்னு போட்டு ஒடையுங்க_" விடாமல் தொடர்கிற விடலைகளின் நச்சரிப்பு.

"வயசுக்கு மீறுன முத்துன கழுதைகளோட சகவாசம் வைச்சுக்குற விடலைப்பய_ அவளை முழுசா பெண்டாளணுமேன்னு ஆசைப்படுவான். முழுசா ஆளமுடிஞ்சிருமான்னு அடிமனசுலே, ஒரு சந்தேகம் கிள்ளிக்கிட்டே இருக்கும். அந்தச் சந்தேகம் கிள்ளிக்கிட்டே இருக்கும். அந்தச்சந்தேகத்துலேயே அவன் வீம்பு, வீராப்பு,வெறி, வேகம், வீர்யம் பூராத்தையும் தெரட்டி மோதுவான். தெனம் தெனம் தெரட்டி தம்புடிச்சு தம்புடிச்சு_நெஞ்சுஇத்துப்போகும். ஊதி ஊதிக் காத்துப்போன பலூன் உசுருல்லாமப் போயிருதுலே? அதுமாதிரி"

மடத்துக்குப் பெரியவர் தினசரி வருவார். எப்பவாவது இளவட்டங்கள் நிறையாயிருக்கிற நேரத்தில் இந்த விஷயத்தை ஆரம்பித்துவிடுவார். மாதத்துக்கு ரெண்டு தடவை, மூணுதடவை இந்த மாதிரி "விஷயம்" நடக்கும்.

விடலைப்பயல்கள் அவரை கேலி கிண்டல் பண்ணினாலும்.. "பெரிசு, புளுகு, கப்ஸா" என்று நக்கல் செய்தாலும் உள்ளுக்குள் அவரை மதிப்பார்கள்.

அழகேசனும் மதிப்பான். அவரது குரல் அவனுக்குள் வந்து போகும். ராசாத்தி விஷயத்தில் அவர் சொன்னது நூற்றுக்கு நூறு நிஜம் என்று அனுபவத்தில் உணர்ந்திருக்கிறான். அரிக்கேன் லைட்டின் புகைபடிந்த சிம்னியை கடந்து வருகிற மங்கலான சந்தன வெளிச்சத்தில் இருளுமில்லாத ஒளியுமில்லாத அரண்ட வெளிச்சத்தில் அவளைப் பார்த்திருக்கிறான். அவளைமட்டும். உண்மையான ராசாத்தி. மறைப்புகளற்ற ராசாத்தி. ஓய்ந்து சரியப் போகிற மயிரைப் பற்றும். தாளாத வெறியில் பற்றுகிற அழுத்தம்.

பற்றுகிற கையின் அழுத்தத்தில் தலையை தன்நெஞ்சுடன் புதைப்பாள்.

"இன்னும்... இன்னும்... இன்னும்" என்கிற தாபத்தின் தொனி. மாட்டுக்கு தார்க்குச்சியாக அந்த தாபம்.

நிறைவடைந்த மாதிரியான மிழற்றல். "ராசா... கண்ணு" என்கிற குழைவு கொஞ்சல் எல்லாமே யோசித்துச் செய்கிற காரியமாகவே மாயம் காட்டும். பிடரியைப் பற்றி உள்ளிழுத்து அழுத்துகிற தாபமே, அவளை மீறிய அவள் வெளிப்பாடு என்று அடிமனசு உணரும்.

"அப்படீன்னா.. நானும் அல்பாயுசுதானா ?" என்ற எண்ணம் ஒரு கீற்று வெளிச்சமென வந்து மறைந்தது.

போர்வையை விரித்து, கட்டிலில் தலையணையை நேர்வசத்துக்கு வைத்து பக்கத்தில் மூடுகிற ஜமுக்காளத்தைச் சுருட்டி வைத்து, அதன் மேல் போர்வையால் மூடினான்.

ஊர் அரவம் அடங்கிவிட்டது. பனங்காட்டில் மயிலின் கத்தல். தூரந்தொலையில் லாரியின் உறுமல். அதெல்லாம் கேட்கிற அளவுக்கு ஊரின் உறக்கம். பகல் முழுவதும் வியர்வை வடித்த களைப்பில் அசந்து உறங்குற ஊரின் அமைதி.

கட்டிலைத் தள்ளி நின்று பார்க்கிற அழகு. யாரோ படுத்திருப்பது போன்ற தோற்றம். போர்வையால் போர்த்திக் கொண்டு தூங்குவது போன்ற பிரமை.

இவன்.. தனக்குள் சிரித்துக் கொண்டான். நமட்டுச் சிரிப்பு. தன்னைத்தானே பாராட்டிக் கொள்கிற மனப்பூரிப்பு.

"வந்தா... வைச்சுத்தராமலா இருப்பேன் ?" ஈரமின்னலாக உதடுகள் கனிய குளிர்ந்த சிரிப்பில் அழைத்த ராசாத்தி. அவளது திரேக வாசம். அடிமனசின் மோக வெறியை மூண்டெழ வைக்கிற அவளது ரகசியம். வெயில் பார்த்தறியாத அந்தரங்கம். இவனுக்கு அத்துப்படியான சொர்க்கம்.

இவன் பூனைபோல நடந்தான், ராசாத்தி வீட்டுக்கு. அங்கே அவனுக்காகக் காத்திருக்கிற விளக்குமாறு.

39

ஊரரவம் அடங்கிவிட்டாலும், ஊருக்குக் கண் உண்டு. உறங்காத ஒரு கிழட்டுக்கண் பார்த்தாலும்... ஊரெல்லாம் தீப்பிடித்த மாதிரி செய்தி பரவிவிடும். எச்சரிக்கையுடன் கூரை நிழலிருட்டுகளில் பம்மி பம்மி பதுங்கி நடந்து வருகிற அழகேசன்.

ராசாத்தி வீடு, எப்போதும் போல லேசாகத்திறந்த கதவோடு காத்திருந்தது. தட்ட வேண்டாம். ரகசியச்சத்தம் தரவேண்டாம். கருவாட்டு வாசம் பிடித்து நுழைகிற கள்ளப்பூனை மாதிரி, சத்தமில்லாமல் உள்ளே நுழைந்தான்.

இவன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தவளாக ராசாத்தி விழித்திருந்தாள். அரிக்கேன் லைட்டும் முழுசாக சுடர்விட்டு எரிகிறது. அரைத்திரியாகக் குறைத்திருக்கிற வழக்கம் மாறியிருந்தது.

"மயினி..." கிசுகிசுக்கிற அந்தரங்கக்குரலில் கிட்ட வந்து படுக்கிற அழகு.

"என்னத்துக்கு வந்தே?" வழக்கமில்லாத கேள்வி. அதுவும் இறுகலான கோபக்குரல். அடைக்கோழியின் சிடுசிடுப்பு.

"வந்தா... வைச்சுத்தாரேன்னு சொன்னீகளே, சாயங்காலம் கூட, அயத்துட்டீகளா?" (மறந்துட்டீகளா?)

"அயத்துட்டேன் நா. பலதையும் அயத்துட்டேன். என்னோட வயசை அயத்துட்டேன். கட்டிக்குடுத்துருக்குற எம் மகளை

அயத்துட்டேன். தூக்கிச் சுமந்த சின்னப்பயலுக்கு முந்திச்சீலை விரிக்குறது கேவலங்குறதை அயத்துட்டேன்.ஒடம்புச் சொகத்துலே மானச் சுரணையை அயத்துட்டேன். மானங்கெட்டு சொகங்கண்டு, மகளோட வாழ்க்கையை அழிக்குற பாவத்தை அயத்துட்டேன்.. போதும்யா.. அயத்தது போதும்... அயத்துரய்யா என்னை.இந்த நெனைப்பையே அயத்துருயா. இந்த சகவாசத்தையே அயத்துருயா"

சுய புலம்பலாக ஆரம்பித்து, அழுத கதறலாக குமுறிப்பொங்கி_ பிரளயமாகக் கண்ணீர் வடித்து, தலைக்கு மேல் கையெடுத்துக் கும்பிட்டு, வாய் கோணித்து, அழுகிற ராசாத்தி.

வெலவெலத்துப்போன அழகு. சாட்டையடிக்கு ஆளானவனைப் போலத் துடிக்கிற மனசு. விளக்குமாறால் அடிபட்டவனாக உணர்கிறான். திகைப்பும், குழப்பமுமாகப் பார்க்கிற அவனுக்குள்ளும்_ அவமான உணர்வு.

"என்ன மயினி_ என்ன சொல்லுதீக ?"

அழுகையும்,கதறலுமாகக் கிழிந்து நைந்துகிடந்த அந்த நனைந்த காகிதம், சட்டென சீறும் வேங்கையென சிலிர்த்தாள். கண்ணில் கனல் தெறித்த முகவிறைப்புடன் அவனைச் சீற்றமாய்ப் பார்த்தாள்.

"மயினி நொயினின்னுக்கிட்டு இங்க வரக்கூடாது. வந்தா... வெளக்குமாறு பிய்ஞ்சுபோகும்"

"மயினி_"

"சாணியை மிதிச்சகாலு மாதிரி நானாயிட்டேன். கழுவிக்கிடுதேன். மனசையே எரிச்சு பஸ்பமாக்கிட்டேன். இனிமே_ ஒம் மனசுலே, என் நெனைப்பே இருக்கக்கூடாது. புஞ்சைக்கு வருவேன். வேலைக்கு வருவேன். வீட்டுக்கு வருவேன். இந்த நெனைப்போட நீ ஏறிட்டுப் பாக்கக்கூடாது. பாத்தா... செருப்படிதான்...போயிரு... இப்பவே... போயிரு... போ... போ... போய்த்தொலை_ வெருசா_ எடத்தைக்காலிபண்ணு"

சொறிநாயை அடித்துவிரட்டுகிற அசூயை, அவள் முகத்தில். இவன் வெளியேறினான். இருட்டில் கருப்பெனக் கலந்தான்.

"தாலியறுத்தவ தாட்சணியம் பாத்தா தலைநெறைய சாணிச்சொமைங்குற சொலவடை மாதிரியே... நா, அசிங்கமாயிட்டேனே... எரக்கப்பட்டு எடங்குடுத்து,என்னை நானே...சாணியாக்கிக்கிட்டேனே... இடுப்புலே தூக்கிச் சுமந்த குட்டிநாய்க்கு, படுக்குதுக்கு மடியை குடுத்துட்டேனே... பாதகத்தி நா... மானங்கெட்ட சிறுக்கி நா"

"மடேர், மடே" ரென்று தலையில் அடித்துக்கொண்டு அழுது கதறுகிற புலம்பல்குரல்... முதுகைத் துரத்துகிறது. மனசை அறுக்கிறது. இருளின் கறுப்பாக நடந்து வந்த அழகு, களம் வந்து கட்டிலில் அரைப் பிணமாக விழுந்தான்.

"வந்தா... வைச்சுத்தராமலா இருப்பேன் ?" என்று பலத்த சத்தச் சிரிப்பில், அந்தரங்க அழைப்பைப் பொட்டலம் கட்டித் தந்ததை வாங்கிக் கொண்டு குறுஞ்சிரிப்புடன் முதுகு மறைந்திருக்கிறான் அழகு. அவன் மறைந்த தெருமுக்கையே அவன் நினைப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிற ராசாத்தி.

அப்பத்தான்-

தபால்கார அண்ணாச்சி சைக்கிளை உருட்டிக்கொண்டே வந்துநின்றார். அவரது இடதுகையால் கடிதக்கற்றை.வலதுகையில் உருவி வைத்த ஒரு நீலநிறக் கடிதம்.

"ராசாத்தி... யம்மா... ஒனக்கு ஒருதபால்..."

குத்துவிரலைவிட்டு எழுகிற பதற்றம். பவ்யமும் பதற்றமுமாக ஓடிவந்து வாங்கிய ராசாத்தி.

"வாசிச்சிருவீயா... ம்மா ? வாசிச்சுக்காட்டணுமா ?"

"வாசிச்சிருவேண்ணாச்சி.. ஒடைச்சுமட்டும் குடுத்துருங்க"

இந்த நீலக்கலர் கடிதம் பெரீய்ய்ய அச்சலாத்தி. மூன்று மடிப்பு மடித்து, மூன்று பக்கமும் ஒட்டியிருக்கும். எத்தனை நுட்பமாக தேடிப்பார்த்து, சூட்சுமம் அவிழ்த்து கிழித்தாலும்... கடிதம், தாறு மாறாகத் தான் கிழியும். அதன் சூட்சுமம் யாருக்குமே புரியாது.

தபால்கார அண்ணாச்சியும் கஷ்டப்படுகிறார். கண்ணுக்குப் பக்கத்தில் வைத்து, விரல் நகத்தால் கிழித்து, விரல் நுழைய இடம் சம்பாதித்து, விரலை நுழைத்து விரலால் வெட்டுகிற அவர். பெரும்பிரயத்தனம்.

"இந்தாம்மா_"

அவர் சைக்கிளை உருட்டிக் கொண்டே சொல்கிறார். "மத்தியானமே தபால் வந்துருச்சு. நா வந்தேன். வீடு பூட்டியிருந்துச்சு. சரி... காட்டுவேலைக்குப் போயிருப்பேன்னு நெனைச்சுட்டுப் போய்ட்டு_ இப்ப வந்தேன்_"

"சரிண்ணாச்சி_"

"பாசத்துக்குரிய அம்மா" என்று ஆரம்பித்திருந்த கடிதம். இவளுக்கும் "கட, கடா" வென்று "பொடு, பொடு"வென்று வாசித்து விட முடியாது.. எழுத்து எழுத்தாகக் கூட்டி மல்லுக் கட்டி, தட்டுத் தடுமாறித்தான் வாசித்தாக வேண்டும்.

அந்தி வெயிலும் மறைந்து, மேகத்து வெளிச்சம் மிச்சமாக இருந்து, அதுவும்_கருகருக்கத்தொடங்கிவிட்டது.

சுகம்விசாரித்து... அவளுடைய சௌகரியம் சொல்லி... மாப்பிள்ளையின் குணம் சொல்லி, பாதுகாப்பாக பராமரிக்கிற பாசத்தைச் சொல்லி.. மாதவிலக்கு நின்று.வயிற்றில் வளரும் உயிர் குறித்துச்சொல்லி, கடை வியாபாரத்தைச்சொல்லி_ புதிதாக பெரீய்ய மோட்டார் பைக் வாங்கி, அதில் அகலக்கேரியல் பிட் பண்ணியிருப்பதைச் சொல்லி...பாண்டிச்சேரியில் ஞாயிற்றுக் கிழமைகளில் சுற்றிப் பார்த்த இடங்களைச் சொல்லி, உரித்த கோழியை மஞ்சள் பூசின மாதிரி வெள்ளை வெளேரென பிரெஞ்சுக்காரர்கள் இருப்பதைச் சொல்லி... கடைசியாக, இப்படி முடிந்திருந்தது.

"நூலைப் போல சேலை, தாயைப் போலப் பிள்ளை என்று பெரியாட்கள் சொல்லுவார்கள். உன்னைப்பார்த்துத் தான் என்னை எடை போடுவார்கள். என்னைப்பார்த்துத்தான் உன்னை

மதிப்பிடுவார்கள். ஒத்தையாக இருக்கிறாய்.பத்திரமாக இரு. பாதுகாப்பு குறைவாக இருந்தால்.. இங்கு வேண்டுமானால் வந்துவிடு"

இது சாட்டைச்சுழற்சியென "சுளீர், சுளீ" ரென்று இவளை சுழற்றி யெறிந்தது. உயிரின் ஆணிவேர் வரைக்கும் அதிர்ந்து குலுங்கிப் போனாள்.

அழகேசனுடன் சரசமாடுகிற "அழகை" கேள்விப்பட்டு எழுதுகிற வரிகள் போல அல்லவா தெரிகிறது. "பத்திரமாக இரு" என்கிறாளா, "ஒழுக்கமாக இரு" என்கிறாளா ?

"ஒழுக்கமாக இரு" என்பதைத்தான் பூசி மழுப்பி "பத்திரமாக இரு" என்று சொல்லிக்காட்டுகிறாளோ... ?

"உன்னை வைத்துத்தான் என்னை எடைபோடுவார்கள்" என்ற வரி சொல்லுகிற ரகசியம் என்ன ? "நீ மதி கெட்டு, மானம் கெட்டு, மனம்போன போக்கில் மப்புக் கொழுப்பேறித்திரிந்தால்... நன்றாகவாழ்ந்து கொண்டிருக்கிற நான்- நாசமாகிவிடுவேன்"என்ற எச்சரிக்கையையா ?

பெற்ற மகளே "தாயை" ஒழுக்கமாய் இரு" என்று சொல்கிற அவலம், ஒரு பெண்ணுக்கு நேரலாமா ? இதைவிடக் கேவலம், வேறொன்று உண்டா ? மனுசிக்குரிய மானமரியாதையை காப்பாத்தியிருக்கேனா ? ஒரு மகளின் தாய்க்குரிய பாசப்பொறுப்புணர்வோடு இருந்திருக்கிறேனா... ?

எதிலும் தேறாத நான், இருக்கலாமா... உயிர் வைத்து ? "ச்சீய்-" காறித் துப்பி என்னை குளுப்பாட்டலாம்.

நீர் முள்ளாகக் கண்ணுக்குள் உறுத்துகிற மனக்கசிவு. முட்டித் ததும்பி நிற்கிற துளிமுத்து. மனஅழுக்கின் திரட்சி.

காயிதத்தை வைத்திருக்கிற வலது கை நடுங்கியது. அது உயிரின நடுக்கம். ஒடுங்கிப்போன ஆன்மாவின் வெட்கப்பதற்றம். அவளே அவளுக்குக் கசந்தாள். அருவருப்பான பிறவியாக-பிராணியாக-தரம் தாழ்ந்துவிட்ட உணர்கிற உயிரின் பதற்றம்.

நாய்களுக்கு இது சரிதான். மானமரியாதை பார்க்காமல், உடம்பின் ஆசைப்படி, அசிங்கப்படுவது_ நாய்க்கு சரி. நான் மனுசி. தாய். மகளைக் கட்டிக்கொடுத்த தாய். எனக்கு இது சரியா ? ச்சேய்க்!

நாயிடமாச்சும் நன்றி உணர்ச்சி இருக்கும். பண உதவியும் மனஉதவியும் செய்து, மகள் கல்யாணத்தை முன்னின்று நடத்திக் கொடுத்த பரமசிவம் மாமாவுக்கும், காமாட்சி அத்தைக்கும் நான் நன்றியோடு, விசுவாசம் காட்டியிருக்கிறேனா ?

அவர் மகன் நாசமாகிறதுக்கு நானும் உதவி, துரோகம் பண்ணியிருக்கேன். வீட்டுக்காரனைக் கடிக்கிற புத்தி, வெறி பிடித்த நாய்க்குக் கூட வராதே_ எனக்கு வந்து விட்டதே_

நினைக்க நினைக்க புகைமூட்டமெனச் சுற்றி வந்துமுற்றுகையிடுகிற வெட்க உணர்வு. அசிங்கமான பிராணியாகி விட்டோமே என்கிற அவமானஅவஸ்தை.

மூச்சு முட்டிக்கொண்டு வருகிற மனத்துயரம். அடிவயிறெல்லாம் கிடந்து புரள்கிற குமட்டல்.

"செத்துத்தொலையணும்.. மாண்டுமடியணும்"என்ற நினைவு முற்றுகை. நினைவுகளின் மொய்ப்பாக சட்டென்று அதிகரிக்கிறது.

"சாவு ஒன்று தான், இந்தப் பாவத்திலிருந்து எழுந்த குற்றத்துக்கான தண்டனை_"

அழுகை வரவில்லை. முத்தெனத் திரண்ட கண்ணீர் அப்படியே நின்று கொண்டது. உறைந்து போகிற மனத்துயரம்.

அழுதுரக்கூடாது. அழுதால் வடிந்துவிடும். அழுது வடித்துவிட்டுப்போகிற அவமானமல்ல. தண்டனை பெற்றாக வேண்டிய அசிங்கமான குற்றம். ஈனக்குற்றம்.

தண்ணீர் வாளியிலிருந்து கயிறை அவிழ்த்தாள். அவசரத்தில் அண்டாவிற்குள்ளும் கைபோகாது. பதற்றத்தில் முடிச்சை அவிழ்க்க முடியாமல், தத்தளித்து தடுமாறுகிறாள். பரபரப்பும் அவசரமுமாக முடிச்சை அவிழ்க்கிறாள். வீட்டுக்குள் புயலெனப் பாய்கிறாள். செப்புப் பானையைக் குப்புறப்போட்டு அதில் ஏறினாள். வாசலில் காவல் தெய்வமென பரமசிவம்.

வாசலை மறைத்துக் கொண்டு பிரம்மாண்டமாய், அவர்.

40

ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தது. வாய் வார்த்தை பேசாமலேயே கண்ணிலேயே, தானாடாவிட்டாலும் தசையாடும் மனக்கலக்கத்தைக் கசியவிட்டு வந்தது... அத்துடன் சரி. பரமசிவம் அதற்குப்பிறகு முருகேசனைப் பற்றி நினைக்கவில்லை. யாரும் அவரிடம் அவன் பற்றிப் பேசினாலும் அவர் அசைவதில்லை.

காமாட்சி வந்து தலையை விரித்துப்போட்டுக் கொண்டு ஒப்பாரி வைத்தாள். "ஐயோ.. என் சீமை ராசா... மூஞ்சி தெரியாம கட்டுபோட்டிருக்கே.. ஒடம்பு பூராவும் காயம் பட்டுருக்கே... சுழட்டிப் போட்டு தூக்கியடிச்ச மாதிரி புள்ளையை கந்துகந்தா கிழிச்சுப் போட்டிருக்கே..."

அடிவயிற்றிலிருந்து பீறிட்டு வருகிற ஒப்பாரி. குரலெடுத்து கூப்பாடு போடுகிற அவள். கையால் தரையை பரசிப் பரசி தலையில் அடித்துக் கொள்கிற "மடேர், மடே"ரென்ற அடிகள்.

அவளையே வெறிக்கிற பரமசிவம். அதட்டவோ, ஆறுதல் கூறவோ தோன்றவில்லை. அவருக்குள் வெறுப்பாக இருந்தது.

"இளையவனுக்காக இவா என்னத்துக்கு இம்புட்டு அழுகணும்? அழுது அழுது தொண்டைத் தண்ணியையும் ஜீவனையும் வத்தடிக்கணும்? கண்ணை மூடிக்கிட்டு வண்டியை ஓட்டுனா... இப்புடித்தான். லாரியிலே மோதியிருந்தா... இந்நேரத்துக்கு

சாம்பலாகியிருப்பான். இந்த மட்டோட தப்பிச்சு, உசரு பொழைச்சானேன்னு ஆறுதல் படாம... "ஓ,ஓ,ஓ"ன்னு இம்புட்டு அழுது ஒப்பாரி வைச்சு, என்னத்தை ஆகப் போகுது?"

வெறுப்பில் விறைப்பாக பார்க்கிற பரமசிவத்தின் மன முணுமுணுப்பில் உதடுகள் அசைகின்றன.

வெறுப்பை வெளிப்படுத்த விரும்பவில்லை. மனசைக் கட்டினார். உள்ளமுக்கி வைக்கிற உணர்வுகள்.

"சுமந்து பெத்த வவுறு. ரத்தப்பாசம். கெடந்து குலை கொதிக்கும். கொதிக்கிற நெஞ்சு கொட்டித் தீத்துட்டுப் போகட்டும்" உள்முணுமுணுப்பாக யோசித்துவிட்டு, வீட்டுக்குள் நுழைகிற பரமசிவம்.

முருகேசன் ஓரளவுக்கு குணமாகி, வீடுவந்து சேர்ந்தபிறகும் காமாட்சிபோய் பார்த்துவிட்டு வந்தாள். முந்திக்கு இப்ப பரவாயில்லை. ஒன்று இரண்டுகளில் காயத்தின் பொக்குகள். அதன் மேலும் தடவப்பட்டுள்ள நீலநிற மருந்து.

"யப்பா_ இப்ப எப்படிடா இருக்கு. எளையவனே?"

"இப்ப எம்புட்டோ தாவலைம்மா. உசுருபோயி, உசுருவந்த மாதிரி தான். மறுஜெம்மம் எடுத்த மாதிரி"

"இதெல்லாம்... நீ தும்பப் படவேண்டிய நேரம் இருந்துருக்கு. இல்லேன்னா.. வழியிலே போற சனியன் ஒன்னை வம்புக்கு இழுத்துருக்குமா?"

"தும்பத்திலேயும் ஒரு நல்லதும்மா"

"என்னது எளையவனே?"

"கல்லுமாதிரி வைராக்யமா வெறுத்த அய்யா எளகிப் போய், பாக்குறதுக்கு, மெனக்கெட்டு வந்துட்டார்லே?"

"நீ சொல்றதும் வாஸ்தவம் தான். "வெளங்காதபயல், நாசமாய்ப்போற பயல்" னு வாய்க்கு வாய் சொல்வாருல்லே? அதையும் துப்புரவா நிறுத்திட்டாரு. பாசக்கார அப்பன்."

கட்டிலில் உட்கார்ந்திருக்கிற முருசேகன். அவன் முழங்காலைத் தொட்டுத் தொட்டு வருடுகிற காமாட்சி. தரையில் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்கிறாள். மகனையே வருடி மேய்கிற பாசப்பார்வை.

ஈஸ்வரி எவர்சில்வர் கிளாஸை நீட்டுகிறாள். அதில் ஆவி பறக்கிற டீத் தண்ணீர்.

"யத்தே_ இந்தாங்க_ இதைக் குடிங்க"

"என்னத்தும்மா ஈஸ்வரி ?"

"சும்மா_ ஒருமடக்கு_ டீத்தண்ணீ"

"எளையவனுக்கு இல்லியா ?"

"இருக்கு. அவுகளுக்குத் தனியாயிருக்கு_"

"அதென்ன _ அவனுக்கு மட்டும் தனி"

"இனிப்பே போடாத வெறுந்தண்ணி"

"வெறும் டீத் தண்ணீயா_ ? கசாயம் மாதிரியில்லே, கசக்கும் ?"

"என்ன செய்ய ? இனிப்பு ஆகாதாம்லே ? டாக்டரு கண்டிசனா சொல்லிட்டாரு_."

காமாட்சி கண்ணில் பதற்ற அதர்வு. வெட்டுண்ட பல்லி வாலாக துடிக்கிற நரைத்த இமை ரோமங்கள். உயிரின் வேர் வரை அதிர்ந்து கருகிவிட்ட வெலவெலப்பில முகம் கிடந்து வெளுத்துவிட்டது.

"என்ன ஈஸ்வரி சொல்லுதே ? இடியைத் தூக்கி தலையிலே போடுதே_"

"டாக்டரு... ரத்தத்தையும், மூத்திரத்தையும் ஒருதடவைக்கு மூணுதடவை செக்கப் பண்ணிட்டாரு. சக்கரைச்சத்து ரொம்ப கூடுதலா இருக்குதாம். நீரழிவு சீக்காம். இனிப்பு சுத்தமா சேக்கக் கூடாது. அரிசிச் சோறும் ஒரு தடவை தான். அதுவும் அரை வயித்துக்குத் தான்_"

"சின்ன வயசுலேயிருந்து நெல்லுச்சோறுன்னா... ஆலாய் பறப்பானே. வீட்லே எல்லாருக்கும் கம்மஞ்சோறு சோளச் சோறுன்னாலும் அவனுக்கு மட்டும் தனியா நெல்லுச்சோறு ஆக்கி வைச்சிருப்பேன். ஆசை ஆசையா சாப்புடுவானே_"

அதிர்வும் துயரமுமான அங்கலாய்ப்பாக சோகப்படுகிற காமாட்சியின் புலம்பல்.

"அப்பவும் ... இம்புட்டு சின்ன வயசிலேயா நீரிழிவு சீக்கு வரணும்? ரொம்ப முத்துன வயசுலே... எம்பது வயசுக்கு மேல பணக்காரச்சீமான்களுக்குத்தான் அந்தச் சீக்கு வரும்? அதுவா... எளையவனுக்கு? நெசந்தானா?"

மருமகளிடம் கேட்டாலும் மகனையே பார்க்கிற காமாட்சி. கையில் வாங்கிய டீக்கிளாஸ் தரையில் இருக்கிறது.நெளிந்து வளைந்து எழுகிற ஆவி. அதிர்வில் அலைபாய்கிற தாய் மனசிலிருந்து தெறித்துச் சிதறுகிற சோகப்புலம்பல் வார்த்தைகள். நடுங்கும் கண்ணிமையிலிருந்து சிதறித்தெறித்து உதிர்கிற மனக்கண்ணீர்.

காமாட்சிக்கு ஈரல்குலை கிடந்து பதறித் தவித்தது. குடலை உருவி வெளியே போட்டது மாதிரியிருந்தது. தன்வயிற்றில் பிறந்த... நேத்துப் பிள்ளைக்கு நீரழிவுச்சீக்கா? பணக்காரச் சீமை ராசாக்களுக்கு... வயசான கெழடு கட்டைகளுக்குவரவேண்டிய சீக்கு, நம்ம புள்ளைக்கா? எளையபயலுக்கா?

"என்னடா... இப்புடி? எப்புடிடா இந்தச் சீக்கு? ஒனக்காடா. இந்த விதிக்கொடுமை?"

காமாட்சியின் பதைப்புமிக்க கேள்வித் தெறிப்புகள். கண்ணீர் நெளிவுகள். உதடுகளில் பதற்றத் துடிப்பு.

அத்தனைக்கும் சோகை படிந்த மென்சிரிப்புதான் முருகேசனிடம். "என்ன செய்ய...? தலையெழுத்து அப்படி" உயிர் அறுந்த மனச் சோகத்தின் முணுமுணுப்பு.

"இதுக்கு வைத்தியமில்லியா? இது எப்ப சீராகும்?"

"வைத்தியமிருக்கு. பாக்கணும். ஆனா முழுசா சீராகாது. சாகுறவரைக்கும் கூடவே இருக்கும்..."

முருகேசனின் சோகை படிந்த மெலிந்த குரலில் கசிகிற விரக்தியும் வேதனையும் தாய் மனசை அறுத்து வதைக்கிறது.

"போம்மா.. கவலைப்படாதே.. வர்றதை சொமந்து தாம் ஆகணும். அய்யா ஒன்னைத் தேடுவாரு..

"ஒடம்பை பாத்துக்கோடா, எளையவனே... நீரழிவுன்னா.. ரொம்ப அச்சலாத்தி புடிச்ச சீக்கு. நல்லபடியா கவனிச்சுக்க..."

பரமசிவத்தின் ஞாபகம் வந்தவுடன் நினைவில் தீபிடித்த மாதிரியிருந்தது. "ஐயய்யோ... தேடுவாரே... மனுசருக்கு நா இல்லேன்னா.. கையொடிஞ்ச மாதிரி தவிச்சுப் போவாரு.."

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பதறிப்பதைத்த மனசில் நீரிழிவு என்கிற தீராச் சோகம்.

"நெல்லுச்சோறா தின்னு தின்னு செல்லமா வளர்ந்த புள்ளைக்கு இப்புடிச் சீக்கு வரலாமா?"

சிதறிக் கிடந்த தலைமுடியைச் சீர்படுத்தி உள்ளுக்குள் சொருகி கொண்டை போட்டுக் கொண்டாள். வாசல் படியைத் தாண்டினாள். சத்தம் கொடுத்துக் கூப்பிட்டாள்.

"யம்மா.. ஈஸ்வரி.."

"யத்தே.. கௌம்பிட்டீளா?"

"ஆமம்மா... நல்லபடியா பாத்துக்க.. அடிக்கடி பாகக்காய் வதக்கிக்குடு.. நா.. போய்ட்டு வாரேன்"

"ஆட்டும்த்தை.."

முற்றத்தில் இறங்கி தெருவில் வந்தாள். முருகேசன் வீடு முழுக்க யூரியா சாக்குச் சுருட்டுகள். ஒரு குட்டிச் சாக்கு நிறைய பூச்சிக்கொல்லி மருந்து டப்பாக்கள்.

மற்றபடி.. வீட்டில் எந்த இடத்திலும் விவசாய வாடை சுத்தமாக இல்லை. ஒரு பட்டரைவார். ஒருகூனை, வடக்கயிறு கலப்பை, உருளை வண்டி, கடையாணிக்குச்சி, தான்யமுடைகள்,சிந்தினசிதறின மிளகாய் வற்றல்கள் இப்படி எந்த அடையாளமுமில்லை. சம்சாரிவீடு என்பதற்கான அறிகுறியே தெரியவில்லை. வழித்தெறிந்து கழுவி வைத்த சோற்றுப்பானை மாதிரியான வெறுமை, காமாட்சியை உறுத்தியது.

சம்சாரி வீட்டில் பிறந்து சம்சாரி வீட்டில் வளர்ந்து,சம்சாரி வீட்டில் வாழ்க்கைப்பட்டு, சம்சாரித்தனத்தையே மூச்சாக சுவாசித்து வாழ்கிற காமாட்சிக்கு இந்த வெறுமை, மகாபயங்கரமான முள் கட்டையாக உறுத்தியது.

உரக்கடைக்காரரிடம் கடன் கேட்பதற்காக போன இடத்தில் தான் விபத்து. இந்த வருஷ விவசாய வேலைக்கு ரூபாய்க்கு என்ன செய்யப் போகிறான்?

இதைக்கேட்க வாயெடுத்த காமாட்சியிடம் தான் டீத்தண்ணீரை நீட்டினாள். ஈஸ்வரி அப்புறம் சீக்கு பற்றிய பதற்றமாகிவிட்டது. கேட்க முடியவில்லை. கேட்டாலும் நம்மால் என்ன செய்ய முடியும்? கொடுத்துதவ முடியுமா? ஒரு குடும்பத்தை ஒரு குடும்பம் தூக்கிச் சுமக்க முடியுமா? அவரவர் சுமைகளே அவரவர் தோள்களைப் போட்டு அமுக்கிற போது, ஒரு குடும்பத்தின் சுமைகளை இன்னொரு குடும்பம் எப்படி ஏந்த? நடக்கிற காரியமா?

தெருவில் நடக்கிற காமாட்சி. சாயங்கால வெய்யில் தெருவில் கீற்று கீற்றாக விழுகிறது. வீடுகளின் நிழல்களும் மரங்களின் நிழல்களுமாக தெருநிறைந்து நிற்கிறது. மரங்களின் தலையெல்லாம் மஞ்சள் வெயிலின் தங்கப்பூச்சு. எண்ணெய் தேய்த்து உருவிவிட்ட மாதிரி தென்னை மரங்களின் கீற்றுகள் மினுமினுக்கின்றன. வீட்டுக் கூரைகளின் பூசணிக்கொடிகளைத் தொட்டுச்சிரிக்கிற மஞ்சள் வெயில்.

"வந்துருப்பாரா_வீட்டுக்கு? தெக்காடு போயிருந்தாரு_"

அவளை முந்துகிற நினைவுகளின் பதற்றம். "வெக், வெக்" கென்று எட்டை எடுத்து வைக்கிற காமாட்சியின் மனவேகம்.

பத்துநாளைக்கு முந்திதான்... பாண்டிச்சேரியிலிருந்து ராசாத்தி வந்திருந்தாள். அவள் குடியிருந்த கூரைவீட்டை விற்கலாமா என்ற யோசனையில் வந்திருந்தாள்.

பைநிறைய துணிகளும் சாமான்களுமாக வந்தாள். காமாட்சி வீட்டில்தான் வந்து நின்றாள்.

"என்ன ராசாத்தி... இப்பத்தான் வாரீயா?"

ஆமத்தை... நிக்க எடமில்லாமப் போச்சு. இந்த ஊர்லே வந்து... யாருவீட்லே சோறு திங்குறது, யாரு வீட்லே படுத்துறங்குறது?"

"ஏண்டி... ஒன்னை அடிக்காத வெளக்கமாத்தை வீட்லே வைச்சிருக்கலாமா டீ..?"

ஆங்காரமான கோபத்துடன் சீறுகிற காமாட்சி.

"ஏன்த்தை?" என்று பயந்து வெலவெலக்கிற ராசாத்தி.

"இந்த வீட்டை விட்டா... ஒனக்கு எந்தவீடு இருக்கு, இந்த ஊர்லே? எங்களை விட நெருங்குன சொந்தக்காரங்க, இந்த ஊர்லே வேற எந்த சிறுக்கி இருக்கா? பேசாம இங்கேயே இரு. சாப்புடு... ஒறங்கு..."

ரெண்டு நாள் தங்கியிருந்தாள், ராசாத்தி. பேசிப்பேசித் தீராத அளவுக்கு விஷயங்கள். பாண்டிச்சேரியைப் பற்றி.. அங்குள்ள ஏவார நிலைமை பற்றி.. மனித மக்கள் பழக்க வழக்கம் பற்றி.. இப்படி வண்டி வண்டியாக அனுபவங்கள்.

இந்த ஊரிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் வாழ்க்கை நிகழ்வுகள், வண்டி வண்டியாக. காலத்தின் தீண்டலால் சலனமுற்ற குடும்பங்களின் அசைவுகள், புரள்வுகள், உருளல்கள் என்று பலப்பல விஷயங்கள். காமாட்சிக்கும் சொல்லச் சொல்ல வற்றாத வாழ்க்கைச் சமுத்திரம்.

ரெண்டாம் நாள் ராத்திரி தாம்... உட்கார்ந்துபேச நேரம் கிடைத்தது, பரமசிவத்துக்கு. நெல்லுச் சோற்றில் வாளைக் கருவாட்டுக்குழம்பு ஊற்றித்தந்த காமாட்சியின் கைப்பக்குவத்தை வாயாரப் புகழ்ந்து பேசிவிட்டு, உண்டு முடித்த மனநிறைவை ஏப்பத்தில் சொல்லிவிட்டு..

"ம் – சொல்லு– ராசாத்தி, என்னசோலியா இப்ப வந்துருக்கே ?" என்றார். தோள்துண்டை எடுத்து, வாசலை ஒட்டிய திண்ணையில் தட்டி, தூசியை விலக்கி விட்டு– நிறைவுமிக்க பெருமூச்சுவிட்டார்.

"வீட்டை வித்துட்டு...துட்டாக்கிட்டுப் போகலாம்னு வந்துருக்கேன் மாமா–"

நரைத்த மீசையில் ஒட்டியிருந்த ஈரத்தைத் துடைத்துவிட்டு, தலையின் வழுக்கையை தடவிக்கொண்டே கேட்டார். துட்டுக்கு ரொம்ப அவசியமா ?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே – மாமா–"

"அவசியமில்லாம.. இம்புட்டுத்தூரம் பயணப்பட்டு வந்துருக்க மாட்டே பசியிருக்கு. மறைச்சுப்பேசுதே–"

சுவரில் சாய்ந்திருந்த ராசாத்தி, கண்ணீரை மறைக்க வேறுபக்கம் முகம் திருப்பினாள்.

"மகளையும் மருமகனையும் நம்பி பாண்டிச்சேரியிலே இருக்கே. என்ன இருந்தாலும்... அது சம்பந்தகாரவுகவூடு. மகாஇருந்தாலும்.. அது ஒனக்கு அடுத்தவீடு. ஒட்டுச்சுவரு மாதிரி. நெலைக்காது. நெலை குலைஞ்சிட்டா– வந்து ஒதுங்குதுக்கு ஒனக்கு ஒரு வீடுவேணும். இடம் வேணும்."

"துட்டுக்கு ரொம்ப அர்ஜெண்டுமாமா–"

"தெரியுது– தெரியுது. துட்டோட தேவைக்காக யாருக்காச்சும் வீட்டை வித்துட்டா– நீ ஏதுமத்தவளாயிருவே. அதனாலே– நா வழி சொல்லுதேன்"

பரமசிவத்துக்கு பேச்சின் நியாயம் புரிகிறது. அவரது வழியை அறிந்து கொள்வதற்கு இவர் பக்கமாக முகம் திருப்புகிற ராசாத்தி.

"சொல்லுங்க மாமா_"

"நா... அருஞ்சொனை கிட்டே வாங்கி... ஒங்கையிலே நா கொஞ்சம் ரூவா தாரேன். கொண்டுகிட்டுப் போ. ஒந்தேவைக்கு வைச்சுக்கோ."

"வீடு_ ?"

"அது எங்க பராமரிப்புலே இருக்கட்டும். ஆனா_ அது ஒனக்குப் பாத்தியப்பட்ட வீடு. ஒன்னோட வீடு தான். எப்பவேணும்னு நீ வந்து நின்னாலும் நீ குடியிருந்துக்கலாம்"

பரமசிவத்தைப் பார்க்கிற ராசாத்தி. ஒரு தெய்வத்தைப் பார்க்கிற பரவசம்.

"ஒனக்குன்னு இருக்குற ஒரே ஆதாரம், அந்த வீடு ஒண்ணுதான். அதை ஒரேயடியா வுத்துரக்கூடாது. நா_ தர்ற பணம், ஒனக்கு பிரயோசனப்படட்டும். வீடு, எங்கபொறுப்புலே இருந்தாலும் அது எப்பவும் ராசாத்திவீடுதான்"

இன்றைக்கும் காவல் தெய்வமாக இருக்கிற பரமசிவம். வானுக்கும், பூமிக்குமாக ஓங்கி உயர்ந்து தோன்றுகிற மனப்பிரம்மாண்டம்.

அவளது கண்ணில் கரகரவென்று வழிகிற கண்ணீர்ப் பெருக்கில், அவள் மனசின் நெகிழ்வு கசிகிறது. கைகுவித்து அவரை கும்பிடுகிறாள்.

"மாமா_நீங்க தெய்வம் போல_"

"நீயும் தெய்வந்தான். அடுத்தவுக நல்லாயிருக்கணும்னு நெனைக்குற எல்லா மனுச ஜெம்மமும் தெய்வந்தான்."

அவர் சொல்லுக்குள் ஆயிரமாயிரம் காயங்கள் நூறு நூறான நிகழ்வு நினைவுகள். ஏராளமான வாழ்வியல் தத்துவங்கள்.

ரெண்டுநாள் இருந்துவிட்டு கையில் பணத்துடன் புறப்பட்டாள் ராசாத்தி. போகிற வரைக்கும், ரெண்டு நாள் பூராவும்

வண்டி வண்டியான ஊர்க்கதைகள், உலகக் கதைகள் பேசினாலும்... காமாட்சியிடம் அழகேசனைப் பற்றி ஒற்றை வார்த்தை கூடக் கேட்கவில்லை. ராசாத்தி.

உள்ளத்துக்குள் குமுறிக்குமுறி வந்து... நெஞ்சுக்குள் முட்டி மோதினாலும், உதட்டுக்கு வராமல்.. இறுகி உறைந்து கொண்டாள். ராசாத்தி. அதேமாதிரி ... காமாட்சியும் மனசுக்குள் முண்டிக் கொண்டேயிருந்த கேள்விகளை கடைசி வரைக்கும் கேட்கவேயில்லை.

"மீனக்காவும், செண்பகமும் எப்புடி இருக்காக?"

41

அந்திப்பகலைப்போல மஞ்சள் பிரகாசமாகத் தெரு. தெருவிளக்குகளின் குண்டு பல்ப்கள் ஒளித்தங்கமாக ஜொலிக்கின்றன. தெருவின் இருட்டையெல்லாம் அள்ளி விழுங்கிவிட்டு, சாயங்காலத்தங்க வெயிலடிப்பது போலவே முழு ராத்திரியையும் ஆக்கிவிட்டன.

பரமசிவத்துக்கு ஆச்சரியமென்றால்... ஆச்சரியம் பேராச்சரியம். "கரண்டு வந்து, என்னகூத்தெல்லாம் கட்டியிருச்சு? தெருவுலே லைட்டை மாட்டி, ராத்திரியை பகலாக்கியிருச்சே. இருட்டு முதுகுலே மறைஞ்சு எங்கெங்கோ சுவரேறிகுதிச்ச எளவட்டப் பயகளுக்கு தெருலைட்டு பெரிய வில்லனாகிருச்சே..."

மாட்டுக்கான கூளத்தைப் படப்பிலிருந்து உருவி தூர்மண் கட்டிகளை அடித்து உதறி, தொழுவத்தில் வைத்துவிட்டு, "கோழி கூப்புட" வைகறையில் எழுந்து ஆட்டுரலில் போட்டு ஆட்டுவதற்கான பருத்திவிதையை நனைய வைத்துவிட்டு ஏழே கால் செய்தி முடிந்தவுடன் பரமசிவம் கண்ணயர்ந்துவிடுவார்.

உழைத்து ஓய்ந்த உடம்பை உறக்கத்தில் துவளவிட்டால் தான்,மறுநாளைய உழைப்பிற்கான ஆற்றல் ஊற்றெடுக்கும். உழைத்த அலுப்பு கரைவதற்காகவே குளிப்பு. உழைப்பதற்கான வலிமையை பெருக்குவதற்காகத்தான் சாப்பாடு. உயிருற்பத்தி உறவு கூட பாடுபட பிள்ளைகள் வேண்டுமே என்பதற்குத்தான். உழைப்பு தான் சக்கரம். அதன் மையம். அதன் ஆரக்கால்கள் எல்லாம்.

ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் ஊர் அரவம் அடங்கிவிடும் முன்பு. மனிதர்கள் உறக்கத்தின் மடியில் உயிர் புதைப்பார்கள். இப்போது என்னவென்றால் ராத்திரி மணி பத்தானாலும் ஊருக்குள் பேச்சரவம் கேட்கிறது.

இருட்டு, உறக்கத்தின் இஷ்டதேவதை. அதன்சிறகு மென்மையில் கண் வருடப்படும். நினைவுகளைத் தாலாட்டி உறங்க வைக்கிற தாய்மை, இருட்டுக்கு உண்டு. வெளிச்சம் நினைவுகளை உசுப்பும். உசும்புகிற நினைவுகளை உற்சாகப்படுத்துகிற காமாட்சிகளைக் காட்டும். உறக்கத்தை அண்டவிடாத பேச்சுகளை வெளிச்சம் பெருக்கும்.

இருட்டு, உயிரின் கர்ப்பப்பை. கதகதப்பாக வளரும். வெளிச்சம்,உடலின் கூத்தாட்டக்களம். ஓய்வின் தேவையையும், மீறிஓங்காரமாகக் கத்திக் கூப்பாடு போடவைக்கும்.

பரமசிவம் தூக்கம் வராமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார். நாளைக்கு கரிசல் காட்டில் வேலைகள் கிடக்கின்றன. விடியற் காலம் விரைவாக எழுந்து ஓடணும். கருக்கிருட்டு கலையாத வைகறைப் பொழுதிலேயே ஓடணும்.

எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, பாலுக்கு உறை ஊற்றி மூடிவைத்துவிட்டு, கருவாட்டுக் குழம்புச் சட்டியை பூனை உருட்டிவிடாத அளவில் பத்திரப்படுத்தி விட்டு... படுக்கத் தயாராகிற காமாட்சி.

"அழகு... வெளியே கட்டில்லே படுத்திருக்கானா ?"

"படுத்துருக்கான்"

"எளையவன் ?"

"அவனும் வெளித் திண்ணையிலே ஒறங்குதான்"

"ஒனக்கும் படுக்குதுக்கு நேரம் வரல்லியா ?"

"ஏன்...நீங்க ஒறங்க வேண்டியதுதானே ? நா... படுக்கணும். சூடம் கொளுத்தணும்."

மூன்று சூடத்தையும் தீப்பெட்டியும் எடுத்துக் கொண்டு வருகிற காமாட்சி. இவரது தலையை மூன்று தரம் சூடம் உள்ள கையால் சுற்றி... மூன்று முறையும் அவரை "தூ--தூ--தூ--" வென்று துப்பச் சொல்லி, வாய்க்கு நேராக நீட்டுகிறாள்.

"இதுலே... என்ன... இருக்கு ? கண் திருஷ்டி கழிக்கீயாக்கும் ?"

"கத்தி கூட ஒண்ணும்செய்யாது. கண்பார்வ குடும்பத்தை அலைக்கழிச்சிடும். எல்லாக்கண்ணும் ஒண்ணுபோல இருக்காது. ஒண்ணு ரெண்டு கொள்ளிக்கண்ணாக இருக்கும்லே ?"

எல்லோருக்கும் சூடம் காட்டி... முற்றம் தாண்டி, தெருவுக்கு வந்து,கீழே வைத்த சூடக் கட்டி மேலே தீக்குச்சியைப் பொருத்தி வைத்தாள். சந்தனச்சுடராய் எரிகிற திருஷ்டிச்சூடம்.

தனியாக விரித்துக்கிடக்கிற பாயில் படுக்கிற காமாட்சியிடமிருந்து வெளிப்படுகிற ஆழ்பெருமூச்சு.

"நம்ம கல்யாணம் மூய்ஞ்சு, வாழ்க்கையை ஆரம்பிக்குறப்ப தெக்காட்டுப் புஞ்சை மட்டும் தான் சொந்தம். இப்ப.. கருசக்காடு, செவல்காடு... பாலையா நாயக்கரு புஞ்சை, ரெண்டுமூணு காலிமனைக, ரெண்டு ஓட்டுவீடுக என்று ஏதோ ரெண்டு ஐவேசு சேர்ந்துருக்கு. இது எத்தனை பாதகத்திக கண்ணை உறுத்துதோ... யாரு கண்டது ?"

தனக்குள் தானாகப் பேசிக் கொள்கிற காமாட்சி "தாயே நீ தான் தொணை" நீதான் தொணை" என்று சாமியை கும்பிட்டுக் கொள்கிறாள்.

"வெறும் கழுதையா இருந்தப்ப, எட்டிக்கூடப் பார்க்காத சொந்த பந்தங்க... இப்ப தானா தேடித்தேடி வருது..."

"நம்ம ரெண்டு பயலுகளுக்கும் பொண்ணு தர்றதாக ரெண்டு மூணு எடங்க வந்துருச்சு..."

"யாரு என்ன படையெடுத்து பாய்ஞ்சுவந்தாலும்... நாம, நம்ம முடிவுலே வலுவா இருக்கணும்"

"என்ன சொல்லுதே?"

"மூத்த பயலுக்கு... எங்க தூரத்துச் சொந்தத்துலே ஒண்ணுவிட்ட அண்ணன் மக தான் பொண்ணு. அதே மாதிரி உங்கவழியிலே தூரந்தொலைவாகிப்போயிட்ட ஒண்ணுவிட்ட உங்க தங்கச்சி மக தான், எளையவனுக்கு. இதுலே எந்த மாத்தமும் வரக்கூடாது..."

"மாத்தம் என்னத்துக்கு வரப்போவுது?"

"நகை போடுறோம், சீர் செய்றோம், வீடு தாரோம்னு ஆசைகாட்டி வந்தாலும், நாம அசைஞ்சிரக்கூடாதுன்னு சொல்லுதேன்..."

"வாய் குடுத்து சொல்லியாச்சு. நாப்பேச்சு மாறாது. அசையுறதுக்கும், ஆடுறதுக்கும் நாம என்ன பேராசை புடிச்சுப் போயா... திரியுதோம்?"

கண்விழித்துப்பேசுகிற அந்தத்தம்பதி. முகக்காலில் கட்டிய ரெட்டைக்காளையென வாழ்க்கையோடு முட்டி மோதி, கட்டிப்புரண்டு, மல்லுக்கட்டிப்போராடி வெற்றிக் கொடி பறக்கவிட்டிருக்கிற அந்த வியர்வைத்தம்பதி. பூஜ்யத்தில் வாழ்க்கையைத்துவக்கி, மிகப்பெரும் ராஜ்யமாக உருமாற்றியிருக்கிற அந்த வீர உழைப்பாளித்தம்பதி.

வென்று முடித்து முன்னேறிக் கடந்திருக்கிற கடந்த காலத்தை நினைத்துக் கொண்டே, எதிர்காலம் குறித்த கனவுக்கூடுகளை பின்னுகிற அந்தத் தம்பதி. அதிலும் ஒரு நாணயம். ஒருபண்பு. விட்டோடிப்போன சொந்த பந்தம், தொட்டோடிப்பின் தொடர்வதையும் எள்ளி நகையாடாமல் அரவணைக்கிற மன ஆகாயம்.

காமாட்சி மனசுக்குள் வெளிச்சொல்ல முடியாத முள் குத்தலான வலிகள்.

அழகு ஒரு திக்கிலும், முருகேசன் இன்னொரு திசையிலும் நழுவிப் போகிற ஆபத்து. காமத்தின் பாதையில் கண்ணைமூடிக் கொண்டு பாய்கிற பேராபத்து. குடும்பத்தின் மானம், மரியாதையைப் பற்றி நினைத்துப்பார்க்க முடியாத வெறித்தனமூர்க்கத்தில் பாய்கிற இளவட்ட முறுக்குகள்.

இந்த ராட்சஸக்குதிரைகளுக்கு எப்படி லகான் போட? எப்போது சுண்டியிழுப்பது? என்ன மாதிரி நிறுத்தி, நெறிப்படுத்த?

இவரிடம் சொல்லவா, வேண்டாமா? சொன்னால், தாங்குவாரா? "தங்கு, புங்"கென்று தரைக்கும், ஆகாயத்துக்குமாக குதிப்பாரா?

இளையவன் குணமும் சீரில்லை. உழைக்க மறுக்கிறான். விரல் நகத்தில் வியர்க்கக் கூடாது என்கிறான். உழைப்பதை "வீண்வேலை" என்று இகழ்ச்சியாக நினைக்கிறான். சீமான் குடும்பத்தாட்கள் விவசாயம் செய்கிற மாதிரி, சட்டைமடிப்பு கலையாமல், பொட்டு வியர்வை வழியாமல், விவசாயம் செய்ய நினைக்கிறான்.

கம்மஞ்சோறு, சோளச்சோறை கேவலமாக எண்ணுகிறான். நெல்லுச்சோறுதான்... தன் தகுதிக்கு நியாயம் என்று பெரிய நினைப்பு, நினைக்கிறான்.

குடும்பத்திலுள்ள அய்யா, அம்மா, அண்ணன் மூன்று பேரையும் கம்மஞ்சோறை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, தான் மட்டும் நெல்லுச்சோறு சாப்பிடுவதற்கு மனசு கிடந்து கூசவில்லை. "இதுதான் நியாயம்" என்று நினைக்கிற ஆணவம்.

உழைக்க மறுக்கிற அதே நேரத்தில் சொகுசு வாழ்க்கையை எதிர்பார்க்கிற மனோபாவம். வியர்வைக் குடும்பத்தில் இந்த மனோபாவம், மிகமோசமான நோய்.

இந்த நோயிலிருந்து இவனை மீட்கமுடியும் என்று தோன்ற வில்லை, காமாட்சிக்கு. பிறவிக்கு மட்டைவைத்து கட்டமுடியுமா? நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

காமாட்சிக்கு கவலை மேல் கவலையாக வந்து உட்கார்கின்றன. ஊமை மனசுக்குள் உறங்காமல் உழன்று வருகிற நினைவுகள். கண்ணில் மோதி காந்தலெடுக்க வைக்கிற அடுப்புப்புகையைப் போல... மனசைக் கிழித்து ரணப்படுத்துகிற நினைவுச் சுழற்சிகள். சுருள் சுருளான நினைவுகள்.

பரமசிவம் விடுகிற குறட்டைச்சத்தம். ஒரேசீரான சத்தலயம். இவள் உறக்கத்துக்கு இடைஞ்சல்தராத லயம். வசப்பட்ட ஒழுங்கான ராகம்.

"நீ இன்னும் ஒறங்கலியா...? ஒறங்குகழுதை" என்று செல்லமாக அதட்டுகிற குறட்டைதொனி.

எளையவனுக்கு நல்ல புத்தி யாரு சொல்றது? நாம சொல்லி, கேட்பானா? வேற எவர் சொன்னால் கேட்பான்? அந்தக் கடவுள் வந்துதான் புத்தி சொல்லணும். அப்பத்தான் கேட்பான். அதுவரைக்கும்.

இப்படியே தான். இதுஎங்கே போய்முடியும்? தகப்பன், மகனுக்குள்ளே தீராப்பகையைக் கொண்டு வந்து சேர்த்துவிடுமோ? அப்பனுக்கு, பிள்ளையை ஆகாமல் பண்ணிவிடுமோ?

அவளுக்குள் நினைக்க நினைக்க திகிலாக இருந்தது. அடி வயிற்றைப் புரட்டியெடுத்தது. குலை நடுங்குகிறது. அடிமனசு "கெதங்,கெதங்" கென்று அடித்துக் கொள்கிறது.

இளையவனிடம் இருக்கிற குணம், அவனுக்கே நன்மை தருமா? தப்புத்தப்பாக அவனை வழிநடத்தி.. எங்காவது குழிக்குள் தள்ளிவிட்டுவிடுமா?

தாய் மனசின் உள் பதைப்பு. நாலாத் திசைகளிலும் நழுவிப் பாய்கிற வினோதக் கற்பனைகள். எல்லாமே கெடுதலான திசைகள். எல்லாமே குழியை நோக்கிய நகர்கிற திசைகள்.

நிறைகுடமாகத் ததும்பிநிற்கிற தற்போதைய நிலவரம். விளைகிற காடுகள். கணக்கு வழக்கு பார்க்காமல் உழைக்கிற மனிதர்கள். உரிய நேரத்தில் உதவி செய்ய அருஞ்சுனை மாதிரியான மனித தெய்வங்கள். ஊரில் ஒரு நல்ல பெயர்.

"பரமசிவமா...? மானமரியாதையான மனுசனப்பா. ஒழைச்சுமுன்னேறுகிற நாணயஸ்தனப்பா.. அவளுக்கு வாய்ச்ச மகாலட்சுமியும், அவனை மாதிரியே, தங்கக் கட்டியப்பா_"

இப்படியொரு நல்ல மதிப்பு இருக்கிறது. மரியாதை இருக்கிறது. இந்த நிறை குடத்தில், யார் கண்படும்? ஏதாச்சும் கொள்ளிக் கண்படுமா? பொறாமையில் வயிறெரிகிற புசை கெட்ட மனசு, வெறுப்போடு பார்க்குமா?

இந்த நிறைகுடத்தில் இளையவனால் ஓட்டைவிழுமோ? உடைசல் நிகழுமோ_? குடும்பத்தின் பெயர் கெடுமோ?

அவளுக்குள் மருகிமருகி சுழல்கிற நினைவுப்புகை. புண்ணை மொய்க்கிற ஈக்களாக மனசுக்குள் சுற்றுகிற எண்ணங்கள். உறக்கத்தை இமையில் ஒட்டவிடாமல் துரத்துகிற சிந்தனைகள். திகில் நிறைந்த கவலைகள்.

வெளியே_ ஏதோ வேற்று அரவம் கேட்பது போலிருந்தது. மெல்ல எழுந்தாள். பூனைபோல முன்னங்காலை ஊன்றி ஊன்றி வந்தாள். அரவம் எழாத பூநிதானத்தில் தாழ்ப்பாளைத் திறந்தாள். வெளியே எட்டிப்பார்த்தாள்.

திண்ணையில் முருகேசன் உறங்குகிறான். குறட்டையில்லாத ஒரு சீரான சுவாசலயம். ஏறி இறங்குகிற சுவாச இரைச்சல். முற்றத்தில் பார்த்தாள்.

கட்டில் கிடக்கிறது. யாரோ படுத்திருப்பதுபோல தோன்றினாலும், அவளது அடிமனசில் ஒருசின்ன அம்மச்சம். சந்தேகம்.கிட்டேபோனாள். கட்டிலில் கிடந்த ஜமுக்காளத்தை எடுத்தாள். அழகேசன் இல்லாத கட்டிலில் தலையணை மட்டும் கிடக்கிறது.

"மூத்த பய எங்க போய்ட்டான்?"

அவளுக்குள் கவலையோடு பயமும் சேர்ந்துகொண்டது.

42

விழுப்புரம் பஸ் ஸ்டாண்டு, நெரிசலாக இருந்தது. இவள் கொண்டு வந்த துணிமணிகள் திணித்த பை. அத்துடன் காமாட்சி பாசத்துடன் கட்டிக் கொடுத்தனுப்பிய பொட்டலங்கள். உளுந்தம்பயறு, தட்டப்பயிறு, மிளகாய் வற்றல், தினையரிசி என்று பொருட்கள் அடங்கிய பொட்டலங்கள். இடுப்பில் ஒன்றும்,தலையில் ஒன்றும், வலது கையில் ஒன்றுமாக சுமைகளை வைத்துக்கொண்டு தடுமாறித் தத்தளித்து நடக்கிற ராசாத்தி.

திருவண்ணாமலைக்கு கூப்பிடுகிற கலர் பஸ் வரிசைகள். கடலூருக்கு அழைக்கிற பஸ்வரிசை. பாண்டி பஸ்கள் யாவும் தள்ளி தனியாக நின்றன. அதை நோக்கி நடக்கிற ராசாத்தி.

வயிறு பசிக்கிறது. தண்ணீர்தாகம் வேறு. சாப்பிட நேரமில்லை. மனசுமில்லை. இத்தனை சுமைகளையும் இழுத்துக் கொண்டு எப்படிச்சாப்பிட? இதை எங்கே வைத்துப் பாதுகாக்க? எவனும் எதையும் தூக்கிக்கொண்டோட மாட்டான் என்று என்ன நிச்சயம்?

பொழுது உச்சியிலிருந்து ரொம்பச் சரிந்துவிட்டது. மணிமூன்று இருக்கும். ஒரு டீக்கடை முன் நின்றாள். கால்மாட்டில் சுமைகளை வைத்துக்கொண்டு கவனம் பூராவையும் அவற்றில் நிறுத்தி.. ரெண்டு வடைகளைப் பிய்த்து வாயில் போட்டாள். வயிறுமுட்ட தண்ணீர் வாங்கிக் குடித்தாள்.

காலையில் போட்ட வடை. கெட்டுப்போன எண்ணெயின் வாடையும், கமறல்ருசியுமாக இருந்தது. குடித்த தண்ணீர்கூட அந்த வாடையை அலசிக் கொண்டுபோகவில்லை. கமறல்ருசி. தொண்டைக்குள் கட்டை மாதிரி நின்று திகைக்கிறது.

"ஒரு டீ போடுப்பா..."

டீயையும் குடித்தாள். பசியின் அயற்சி மாறாமலேயே வயிற்றில் ஒருபொய்யான நிறைவு.

"வவுத்துக்கு வஞ்சகம் செய்யக்கூடாது" என்று காமாட்சியத்தை வாய்க்கு வாய் சொல்லும். வட்டில் நிறைய கம்மஞ்சோற்றை வைத்து, கருவாட்டுக் குழம்பையும் ஊற்றி, "சாப்புடு ராசாத்தி... வவுறாரச் சாப்பிடு" என்பாள்.

இப்போது ... இவள் செய்திருப்பது, வயிற்றுக்கு வஞ்சகம்தான். அதன் நிஜத் தேவையானது, சோறு, சாம்பார், ரசம் என்ற முழுஉணவு. ஆனால் இவள் கொடுத்திருப்பது நாறிப்போன ரெண்டு வடையும், மூன்று கிளாஸ் தண்ணீரும். சாப்பிட்ட மாதிரியோர் ஏமாற்று. வயிற்றுக்கு ஏதோ தந்த மாதிரியோர் பாவலா. இதுதான் வஞ்சகம்.

பாண்டிக்கு போகிற பஸ்கள் இருக்கிற பக்கம் போகிற ராசாத்தி, சாமான்செட்டுகளையும் பையையும் சீட்டுக்கடியில் வைத்துவிட்டு உட்கார்கிறாள்.

பத்துப்பதினைந்து தலைகள் தென்பட்ட பஸ்ஸில் தான் ஏறியிருக்கிறாள். அதுதான் முதலில் கிளம்பும் என்று கணக்கு.

ஆயாசமாக வந்தது. கண்கள் சொருகிக்கொண்டு வந்தது. நெடுந்தூரப்பஸ் பிரயாணத்தில் குறுக்கெலும்பெல்லாம் கடுக்கிறது. தோள்பட்டை முழுக்க கொத்திப்பிடுங்குகிற வலி. வியர்த்துக் கொட்டுகிற நசநசப்பு,வேறு.

பஸ்புறப்பட்டால்.. உயிர் திரும்பும்போலிருந்தது. அப்படியொரு பெரிய அயற்சி.

" பாண்டி, பாண்டி பாண்டி" என்று கத்துகிறார்கள். "பாண்டி நேர்வழி" என்ற கூப்பாடு வேறு. எதையும் கவனிக்க

மாட்டாமல்,கண்ணை இறுகமூடிக்கொண்ட ராசாத்தி கம்பியில் தலைசாய்ந்து, அண்ணாந்து கண்மூடிய நிலை.

.... இப்படித்தான் இருட்டில் கண்ணைமூடியிருப்பாள். இப்படித்தான் வியர்த்துக் கொட்டும். இரண்டு கைகளையும் விரித்து தரையில் போட்டிருப்பாள். மேலே பரவிக்கிடக்கிற அழகு.

புருஷன் செத்த பிறகு பன்னிரண்டு வருஷமாக பார்க்காத சுகம். பண்னிரண்டு வருஷத் தரிசு.

விடலைப்பயல் அழகு. வாலிபக்கறித் திமிர் முறுக்கேறி யிருந்தாலும், செய்வதறியாத திகைப்பில்-குழப்பத்தில் பலவீனமாகிற சின்னஞ்சிறு பிஞ்சுவிடலை.

முற்றிய பெண்ணை கட்டியாண்டு விடமுடியுமா, தன்னால் என்று தன்பயத்தில் உயிர்ச்சக்தி குறைந்த முனைப்பு.

வியர்வைப் பிசுபிசுப்பான அவனது திரேகத்தின் பரவல் இவள்மீது. கவ்வப்படுகிற இவளது திரேகப்பகுதிகள்.கடிக்கவும் கசக்கவும்படுகிற மூர்க்கம். இதில் வலிகள் தானே இன்பம்! வேதனை தானே சுகம்...

ஒரு நாளா... ரெண்டுநாளா...ஆறுமாதம். ஏறக்குறைய அனுதினமும். காய்ஞ்சமாடு கம்பம்பயிரைக் கண்ட வேகத்தில், அவனது பாய்ச்சல் மும்முரம் இவளுக்கும் அதேமாதிரியான மனப்பசி.

ஒவ்வொரு நாளும்...

உயிர் வடிந்த உச்சத்தில்,நெஞ்சடைக்கிற மூச்சிரைப்போடு வியர்வைக் கசிவோடு அவன் துவண்டு சரிகிற கணத்தில்... இவளுக்குள் ஒரு நிறைவின்மை. "இன்னும், இன்னும் என்று அலைபாய்கிற மனத்தினவு. அவனது பிடரிமயிரைத் தனது வலது கையால் பற்றி, தனது கழுத்துக்கு கீழாக அவனது முகத்தை அழுத்துவாள். அவனுக்கு மூச்சுதிணறும்.

இந்த நிறைவின்மை தான், அவளது பசியைத் தூண்டிக் கொண்டேயிருந்தது. மானம், மரியாதை, மகள், விசுவாசம் எதையும்

யோசிக்க விடாத திரேகபசி. இதே இவளது நிறைவின்மையை உணர்ந்ததால் தான் "இன்னும், இன்னும்" என்று அவனை வரத் தூண்டியது. இவளிடம் "சபாஷ்" பெற்றாக வேண்டும் என்கிற வேட்கை. நிறைவில் அவளைத் ததும்ப வைத்துவிடவேண்டும் என்கிற உத்வேகம்.

அன்றைக்கும் அப்படித்தான்–

"மயினி– வரலாமா ? சோறு போடுவீகளா ?"என்ற அழகுக்கு "வந்தா..வைச்சுத்தராமலா இருப்பேன் ?" என்று தூண்டிலைப் போட்டாள். அவளுக்குள், "நிறைய குளித்தால், கூதலில்லை" என்பதைப் போல நாணம், வெட்கம், கூச்சம் கடந்த மோக மயக்கம்.

குத்துரலில் உட்கார்ந்து குளித்த ஈரத்தலைமுடியை சிக்கெடுத்துக் கொண்டே குறுநகை செய்துகொள்கிற ராசாத்தி.

மேயவிட்டுவிட்டு, "சும்மா" கிடக்கிற வழக்கத்தை மாற்றி, இன்றைக்கு ராத்திரி வரப்போகிற அழகேசனை வசக்கி வேலை வாங்கவேண்டும் என்று நினைத்தாள்.எப்படியெப்படி அவனை உசுப்பேற்றுவது, எப்படியெப்படி அவனை முறுக்கேற்றுவது என்பதை நினைக்க, நினைக்க அவள் மனசிலும் உதட்டிலும் குறுநகை பூத்துக் கொண்டேயிருந்தது.

அப்போதுதான் தபால்கார அண்ணாச்சி தந்துவிட்டுப் போன இன்லண்ட் லெட்டர். அது கிளப்பிய சூறாவளிச் சுழற்சி. பூகம்ப அதிர்வுகள். பிரளயச் சீற்றம்.

வாளிக்கயிறை அவிழ்த்தெடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போய் செப்புப்பானையை குப்புறப்போட்டு அதன்மீது ஏறி நின்று, விட்டத்தில் வாளிக்கயிறு எறிந்து, மறுமுனையை வலது கையால் பற்றியிழுத்து– நாண்டுக்கிட்டு மாண்டு மடிகிற முடிவில்-

எல்லாமே ஒரு வெறிவேகம். உயிரைப்போக்கடித்துக் கொள்ள வேண்டுமென்கிற கணநேரமூர்க்கம். உணர்ச்சிக் கொந்தளிப்பு. துரிதச்செயல் துடிப்பு.

அப்போதுதான்-

வாசல்படியை அடைத்துக்கொண்டு கம்பீரமான காவல் தெய்வமாக நின்ற பரமசிவம்.

பதற்றமாகாத பரமசிவம். வேடிக்கை பார்க்கிற நிதானத்தில் அவள். சூழலுக்குப் பொருந்தா அமைதியில் அவர்.

"நாண்டுக்கிட்டு சாகப்போறீயா? என்னத்துக்கு துள்ளத்துடிக்க ரணப்பட்டு சாகணும்? பேசாம... எண்டோசல்ஃபான் மருந்துலே... ரெண்டு மடக்கு, குடிச்சா போதும்லே?"

பரமசிவமே எதிர்பாராத இடியதிர்வு. அவரது நிதானக்குரல் அதைவிடவும் பயங்கர அதிர்ச்சி. சாவை அங்கீகரிக்கிற அந்தச் சம்மதம்... உயிரை உலுக்குகிற வினோதம்.

"மாமா... மாமா...மாமா..." செப்புப்பானையில் நின்ற நிலையில் அழுது வாய் கோணலாகிறது ராசாத்திக்கு. ஏதோ சொல்லிப் புலம்ப நினைத்தவளுக்கு, அதற்குமேல் வாய்வராமல், தடுமாறி தத்தளித்து அழுகிறாள்.

"மாமா... நா, மனுசியேயில்லே. மானங்கெட்ட ஈனச்சிறுக்கி மாமா... நா உயிர்வைச்சிருக்குறது பாவம் மாமா..."

"இப்ப ...நீ..நாண்டுக்கிட்டு மாண்டுமடிஞ்சு தொங்கிட்டா... ஊரு என்ன காரணம், நெனைக்கும்? கடன் தொல்லைன்னா...? வேற என்ன காரணம் நெனைக்கும்? சொல்லு".

அவள் எதுவும் பேசாமல்-பேசவார்த்தையில்லாமல்-பேச மனத்துணிவில்லாமல்-அவமானத்தில் நனைந்து துவள்கிற அவளின் அழுகை.

"எளவட்டப்பயகூட தொடுப்பா இருந்தா. யாருக்கோ தெரிஞ்சு போச்சு. அதான்... மடிஞ்சிட்டாள்ன்னு ஊரு சொல்லும்.இது... ஒம்மகளுக்கு நல்லது செய்யுமா? ஒம்மகளோட வாழ்க்கையை அழிச்சிருமா? சொல்லு"

கடைசி வார்த்தை மட்டும் அதட்டலாக வந்தது.

"மொதல்லே... பானையைவுட்டு கீழே எறங்கு"

இறங்கினாள். தோள்பட்டையில் முகம் கவிழ்த்து அழுகிறாள். வெட்கப்பட்ட அவமானத்தில் நிலைகுலைந்து விம்மி வெடிக்கிறாள்.

"நீயும்... அழகும் ஒடம்பு கொழுத்துப்போன மப்புலே தப்பு செய்ஞ்சீக. அதுக்கு நீ மாண்டு மடிஞ்சிட்டே. நா என்னத்துக்கு தலைகுனியணும்? நா, என்ன தப்பு செய்ஞ்சேன்? "நீ செத்ததுக்குஅழகுதான் காரணம்"னு ஊரெல்லாம் பேசுறப்ப... நா,தலைதொங்கி நிக்கணுமே... என்னத்துக்கு? நா என்ன தப்பு செய்ஞ்சேன்? என்னத்துக்கு எனக்குத் தண்டனை? ஒனக்கு தகப்பன்போல கூடஇருந்து, ஒத்தாசை பண்ணுனது, பாவமா?"

நிமிர்ந்து பார்க்கிற மனச்சக்தியில்லாமல், தலை தொங்கி, குலுங்கிக் குலுங்கி யழுகிற ராசாத்தி.

"ஒன்னாலே... ஒம்மக எதுக்கு வாழாவெட்டியாகணும்? அவ ஒடம்பாலே என்ன தப்புபண்ணுனா? ஒன்னோட வவுத்துலே பெறந்தது, ஒருபாவமா?"

அடங்கிய அமைதியான குரலில் பேசினாலும் ஆக்ரோஷமான தொனி. பரமசிவத்தின் மனருத்ரதாண்டவம்.

"சரி... இப்ப... எனக்கு நேரமில்லே. நா... போறேன்... அதுக்கு முன்னாடி_ நாலு வார்த்தை"

கவிழ்ந்த தலை நிமிராமலேயே... அழுகையுடன் கலுங்கல் நிற்காமலேயே கண்ணை மட்டும் உயர்த்தி அவரைப் பார்க்கிற ராசாத்தி.

"நீ... சாகக்கூடாது. நீ. செத்தா, அது ஒன்னையும் கேவலப்படுத்தும். அழகை கேவலப்படுத்தும். எங்களை கேவலப்படுத்தும். ஒம்மகளோட வாழ்க்கையை சீரழிக்கும். அதனாலே_"

நிறுத்துகிற அவரது உதடுகளைப் பார்க்கிற ராசாத்தி கண்கள்.

"நீ சாகுறதை நிறுத்து.ஆறுமாசமா பண்ணுனதப்பை நீயே நிறுத்து. அழகு வருவான். அவனை வெளக்கமாத்தாலே, அடிச்சுவெரட்டு. ஒன்னை திரும்ப நெனைக்காத அளவுக்கு_ அதட்டி வெரட்டு. நீ ஒன்னை ஒடுக்கிக்கோ. வழக்கம் போல புஞ்சைக்கு வா.

வேலையைப்பாரு. மனச்சுத்தத்தோட நடந்துக்க... ஆறுமாசத்தப்பு, ஆறுமாச ஒழுக்கத்துலே அயத்துரும். அப்புறம்...நீ, ஒம்மககூட போயிரு. பாண்டிச்சேரியிலேயே இரு. யாருக்கும் எந்தக்கெடுதலும் வராது. நடந்த தப்பு, இனி நடக்கப் போற நடத்தையிலே கழுவப்பட்டுரும்.."

"மாமா.. நா உங்க குடும்பத்துக்கு பண்ணுன துரோகம்.... மகாப்பெரிய கொடுமை"

"அதெல்லாம் கிடக்கட்டும். முள்ளுலேவுழுந்த ஈரச்சீலையை கிழிபடாத எடுக்கிற நிதானம் வேணும். ஒடம்பை ஒடுக்கி, புத்தியை அலைபாய விடாம பாத்துக்க. ஆறுமாசத்துலே நானே ஒன்னை பாண்டிக்கு அனுப்பிவைக்கேன்... சரிதானா ? இனிமே சாகுற நெனைப்பை கொன்னுட்டு... ஒழைச்சி. ஒழுங்கா.. பொழைக்கப்பாரு"

காவல் தெய்வம் உயிரைக் காப்பாற்றி கையில் ஒப்படைத்துவிட்டு கம்பீரமாகப் போய்விட்டது. தார்பாய்ச்சிய வேட்டி, அடிக்கடி இடதுகையால் பின்புறமடிப்பை சுருட்டிவிடுவார். அப்படி சுருட்டிவிட்டுக் கொண்டு நடக்கிற பரமசிவம்.

இவளுக்கு புத்தியில் அவர் சொன்னது உறுத்தியது.

சாவு, இவளுக்கு மட்டுமே விடுதலைதராது. கேவலம் வருவதை உறுதிப்படுத்தும். அழகேசனைக் கேவலப்படுத்தும். பரமசிவம் குடும்பத்துக்கே தலைக்குனிவு தரும். மகளின் வாழ்வை முழுமையாக சீரழிக்கும்.

சாவு... எந்தவகையிலும் தீர்வல்ல. சாவு, ஒரு தப்பித்தல். தான் கேவலமாகப் பேசப்படுவதைப் பார்க்காமல் தப்பிக்கிற முட்டாள்தனம் அவ்வளவுதான்.

விழுப்புரம் தாண்டி கீழ்த்திசை நோக்கி அகலமான தார்ச்சாலையில் ஓடுகிற பஸ். குலுங்குகிற உடம்பு. மூடிய கண்ணுக்குள் ஓடுகிற நினைவுகள்.

அழகேசனையும் ராசாத்தியையும் பற்றி பத்துநாள் ஊரில் பேச்சு. குசுகுசுவென்று பேச்சு. பெண்கள் கூடுகிற இடங்களில் இளவட்டங்கள் கூடுகிற இடங்களில் பலபுரணிகள் பேசப்படுவதைப் போல. அத்துடன் ஒன்றாக, ராசாத்தி புரணி.

பரமசிவம் புஞ்சைக்கு வேலைக்குப் போவதையும் பார்க்கிற ஊர். அழகின் சகவாசமில்லாததையும் பார்க்கிற ஜனங்கள். அதுவும் பேசப்பட..பேசப்பட.. பேசப்பட..

"இதையும் தாண்டி ரகசியமா ஏதாச்சும் நடக்குமோ" என்று வக்கிரமாக யோசிக்கிற அற்பர்களின் பார்வையிலும், சகவாசமில்லாத நியாயமான ஒதுங்கல்படுகிறது.

இதுவும் பேசப்படுகிறது. பேசிப்பேசிப் பல வரலாறுகளைக் கடந்த ஊர், இந்த விஷயத்தையும் மறந்துவிட்டது. பேருந்து போய்க் கொண்டிருக்கிறது. குறையாத வேகம். வேகத்துக்கேற்ப வருகிற காற்றின் சீற்றம். கண்ணைமூடி அதை உணர்கிற ராசாத்தி.

புருஷன் செத்ததால்... தான் வெறுமையானது விதிவசம். அழகேசன் அத்துமீறலான தீண்டல். அழுது கரைந்து மடியில் இடம்தேடிய ஆக்கிரமிப்பு. இது அவனது சுயநலம். அவனுக்கு இரக்கப்பட்டது மட்டுமே,இவள் செய்த பாவம். மற்றபடி முழுக்கஅவனது சுயநலம். அத்துமீறல். ஆக்கிரமிப்பு. அனுபவிப்பு.

நடந்த அவமானத்துக்கு இருவரும் பொறுப்பு என்ற மேலோட்டமான உண்மையை நம்பினாலும், பரமசிவம் என்ன செய்திருக்கவேண்டும்? அழகேசனை அடித்திருக்கவேண்டும். திட்டியிருக்கவேண்டும். அதற்குப்பதிலாக, ஆக்ரமிப்புக்குப்பலியாகி.. அவமானப்படுகிற ராசாத்திக்கே வசவு. திட்டு அதட்டல். மிரட்டல்.

மகள் கண்டிப்பதுகூட மகளின் குரலல்ல. மகளின் மனமல்ல. மருமகன் என்கிற ஆண்மகனின் குரல். அவனது மனம் கோணிவிடுமே என்ற பதற்றம்.

இது ...ஆண்களின் காலம். ஆளுவதும், அத்துமீறுவதும், அனுபவிப்பதும் எல்லாமே ஆண்கள். அகப்பட்டுக்கொண்டால், தண்டனைக்கு பெண் மட்டுமே பலியாக வேண்டும்.

இது என்ன கொடுமை? பந்தத்தின் மூலமாக மிரட்டுகிற மருமகன். பாசத்தில் மிரட்டகிற பரமசிவம். எல்லாம் செய்த கயவன்.சத்தமில்லாமல் ஒதுங்கிக்கொண்ட அழகேசன்.

என்ன செய்ய...! இது ஆண்களின் காலம். அவர்கள் ஆதிக்கக் காலம்..

43

அந்தி வெயிலின் தங்கநிறம் பூமியெங்கும் பொன்னைக் கரைத்துப் பூசியது போலிருக்கிறது. செம்பகம், "ஓடைக்குப் போய்ட்டுவாரேன்_" என்றாள் மீனக்காவிடம்.

"நா காமாட்சி மயினி வீட்டுக்குப் போறேன்... நீ போய்ட்டு வெருசா வந்து, வீட்டுவேலைகளை முடிச்சிரு_"

"ம்_ம்_ம்"

ஓடைக்கரையேறி மக்காச்சோளப்புஞ்சையின் குறுகலான பொழியில் நடந்து, இன்னும் இரண்டு தோட்டங்களைக் கடந்து இடிகிணறை நெருங்குகிறாள். செண்பகம்.

இடிகிணறுக்குள் எவ்விதத்தயக்கமோ கூச்சமோ இல்லாமல்_ எவ்விதத் தற்காப்புமுன்னெச்சரிக்கை கவனிப்புகளும் இல்லாமல் வெறிகொண்ட வேகத்தில் இறங்குகிறாள்.

மூலைப்படியில் சிமெண்டுத் தளத்தில் உட்கார்ந்திருக்கிற முருகேசன். இவளைக்கண்ட மகிழ்ச்சியில் துள்ளலாக எழுகிற அவனது பரபரப்பு. அவளை எட்டிப்பிடிக்க பாய்கிற வாலிப முறுக்கு.

எட்டிப்பிடிக்க வந்த அவனை, முந்தைய படியில் நின்று கொண்டே தடுக்கிற கண்டிஷன் பாவனை. தனது வலது கையை உள்ளங்கையை காட்டி,"அப்படியே தள்ளி நில்லு" என்பதாக நிறுத்துகிற செண்பகத்தின் முகத்தில் கோப இறுக்கம்.

"நா_ந் தொடக்கூடாதா?"

"இன்னையிலேயிருந்து_கூடாது"

"அது என்ன, இன்னையிலேயிருந்து ?"

"தொடக்கூடாதுன்னா... தொடக்கூடாது"

"நா... தொடாதது, பாக்காதது.. ஒங்கிட்டே என்ன இருக்கு ?"

"உசுரு"

அவன் விக்கித்துப் போனான். எதிர்பாராத குத்து,முகத்தில் விழுந்த மாதிரியோர்.. அதிர்வான திகைப்பு. அசட்டுச்சிரிப்பை அடித்து மாயமாக்கிய தாக்குதல்.

"நா...வெளையாட வரலே.. ஒங்களுக்கு பந்தி வைச்சு, பரிமாறுறதுக்கும் வரல்லே..."

"பெறகு ?"

"கண்டு கழிச்சு.. கணக்கு முடிச்சிட்டுப் போறதுக்கு"

அவள் முகத்தின் இறுக்கம். சிரிப்பை மறந்த மனமுறுக்கு. எல்லையற்ற சோகத்தையும் விரக்தியையும் உள் மறைத்த திரையாக முகவிறைப்பு.

"கணக்கு முடிக்கவா.. ? என்ன சொல்லுதே ?"

"அதெல்லாம் கிடக்கட்டும்... நாங்கேக்குறதுக்கு மறைப்பில்லாம பதில் சொல்லணும்"

"ம்.. சொல்லுதேன்.."

"வெளையாட்டு இல்லே.. வெனையமா கேக்குதேன்"

சென்பகத்தின் இறுகலான குரலுக்குள் கண்டிப்பு நிறைந்த மிரட்டல்.

"ஒங்களுக்கு எம்மேலே ஆசையா, என்னோட ஒடம்புமேலே ஆசையா ?"

"எலும்புந்தோலுமா.. நீ கெழடியா ஆனப்பெறகும் ஒம்மேலே ஆசைப்படுவேன். இது.. சும்மா.. படுத்து எந்திரிக்கிற காம ஆசையில்லே. உசுரோட பின்னிப் போன மன ஆசை..."

"சத்தியமா... ?"

"எங்க அம்மா மேலே சத்தியம்"

முருகேசனும் மனத்தீவிரமாகிவிட்டான். உள்ளத்தை உதட்டில் வைத்துப் பேசினான். அவளது சொல்லப்படாத மனஉளைச்சலை, உயிரால் உணர்ந்த மனசின் தீவிரம்.

"உயிரைவிடச் சொன்னா..?"

"வுட்டுருவேன்"

"என்னைக் கொல்லச்சொல்லி.. நாஞ்சொன்னா..?"

"கொன்னுட்டு என்னையும் கொன்னுக்கிருவேன்"

"நாஞ்சொன்னதை தட்ட மாட்டீகளா?"

"இல்லே.சொல்லு.."

"இப்பயிலேயிருந்து இந்தக்கணத்துலேயிருந்து என்னை நீங்க அயத்துரணும். அதுமட்டுமில்லே."

அவனுடைய உயிரில் விழுந்த அரிவாள் வெட்டு. அவனது ஆன்மாவின் ஆணிவேர்வரை ஆடிக்குலுங்கிய நடுக்க அதிர்வு.

"ம்ம்"

"உங்க அம்மா சொல்ற பொண்ணைக் கட்டிக்கிட்டு நல்ல படியா வாழணும். பாலையா நாயக்கரு புஞ்சையிலே, ஊர் உலகம் போல வெவசாயம் பண்ணி ஜெயிச்சுக் காட்டணும்."

"நீ?"

"நா...ஞ் சொன்னதை நீங்க கேட்டு நடந்தா.. நா எங்கோ ஒருதிசையிலே, உசுரோட இருப்பேன்.."

"இல்லேன்னா... ?"

"நாளைக்கே சுடுகாட்டுலே ஏங்கட்டை வேகுறதைப் பாப்பீக?"

அரண்டுபோன முருகேசனின் முகவாட்டம். அறுத்து வெயிலில் போட்ட கொடியென துவள்கிற அவன். துயர்தாளாத மனக்கனத்தில் படபடக்கிற கண்ணிமை ரோமங்கள். ரோமங்களில் ஈரச்சுமை.

அவள் கண்ணில் தெரிகிற உக்கிரம். முகஇறுக்கத்தில் புலனாகிற மனத்தீவிரம்.

வெற்று வார்த்தையல்ல_ வீம்புச் சொல்லல்ல... "சொன்னபடியே சாம்பலாவாள்" என்பதை உணர்த்துகிற உதட்டின் வெறித் துடிப்பு.

வெடித்து விசும்புகிற முருகேசன். உள்ளுக்குள் பொங்கிப் பொங்கிக் குமுறிய வேதனை உணர்வின் முட்டல். பீறிடத் துடித்த தினவு. "ஆண்மகன் ஆண்மகன்" என்ற பிரக்ஞையில் பற்களைக்கடித்து சமாளிக்க முயன்ற முருகேசன், தோற்றுவிட்டான். விசும்பி விசும்பி அழுகிற அந்த ஆண்சிங்கம்.

"இப்படி ஒரு பேரிடியை இறக்குறதுக்குத்தான், வந்தீயா? எந்தலையிலே போட்டு, என்னைத்தூளாக்குறதுக்குத்தான் வந்தீயா? ஒன்னை இப்படி ஆக்குனது, யாரு? ஒன்னை இப்புடி ஏவினது யாரு? ஒன்னை இங்க அனுப்பி வைச்சது யாரு?"

வெடித்துவிசும்பி அழுது கொண்டே கதறலும் கோபமுமாக கேட்கிற அவனைப்பார்க்கிற அவள் உயிர் கருகியது. உள்ளுக்குள் உடைந்தாள். கண்ணில் நீர்முள்ளாகக் குத்துகிற மனச்சோகம். இருந்தாலும்,தன்னைத்தானே இறுக்கிக் கொண்டாள். பொங்கிப் பீறிட்ட உணர்வுகளை உறையவைத்து இறுகலாக்கிக் கொண்டாள். அடி உதடடை ரத்தம வர_ அழுந்தக கடிததாள.

"யாரும் என்னை ஏவமுடியாது. யாரும் என்னை மிரட்டி மாத்த முடியாது. ஒடம்பையும் உசுரையும் உங்ககிட்டே ஒப்படைக்குறபோது, யாரு யாரு அதட்டுவாக, மிரட்டுவாக, எதிர்ப்பாகன்னு தெரியாமலா, இருந்தேன்? தெரிஞ்சிருந்தும் துணிஞ்சிதான்... என்னோட உசுரை உங்க காலடியிலே ஒப்டைச்சேன்...? இப்பவும் அதே துணிச்சல்லே தான், உங்ககிட்டே பேசிக்கிட்டிருக்கேன்_"

இது உயிரின் குரல். ஆங்காரமாகப் பேசுகிற அவள் குரலில் மனசின் உயிர்த்துடிப்பு.

"இதுலே மாத்தமில்லையா? நாம சேந்து வாழமுடியாதா? மாத்துயோசனைக்கு எடமில்லையா?"

பிச்சைக்காரனைப்போல மனசேந்தி கெஞ்சுகிற அவன்.

"எடமேயில்லை. நா...சுடுகாட்லே சாம்பலாகணுமா, நடைப்புணமா மண்ணுலே நடமாடணுமா ? நீங்கதான் சொல்லணும்"

ரொம்பநேரம் பேசினார்கள். அழுகையும் கண்ணீருமாக உடைந்த இதயங்களுடன் நொறுங்கிப்பேசினர்.

அவளைத் தோளில் தொட கை நீட்டினான். பாம்பைக் கண்டவளைப் போல விருட்டென விலகினாள்.

"தொடாம...ஒதுங்கி... என்னத்தைப்பாதுகாக்கப்போற ?"

"ஒடம்புலே மானம் இருக்குன்னு நெனைக்குற எல்லாரையும் போல, நீங்க நெனைக்கீக. மானம்ங்குறது ஒடம்புலே இல்லே. மனசுலே இருக்கு... மனசு இல்லாத ஒடம்பு, வெறும்பிரேதம் தான்..."

"என்ன சொல்லுதே ?"

"தேவுடியாக்குடியிலே தேவுடியாத்தனம் பண்ணுறவகூட, மனசால பத்தினியா இருக்கமுடியும். குடும்பத்துலே குலவிளக்கா இருக்குறவகூட மனசாலே தேவுடியாத்தனம் பண்ணலாம்..."

"ஒண்ணும்புரியலே..."

"மனசாலே வெலகுன நா, இப்ப உங்க கூடப்படுத்தா... நா தேவுடியா. இனிமே, உங்க மூச்சு கூட எம்மேல படாம... நா ஒதுங்கிட்டா... நா மனசாலே பத்தினிதான்..."

அவள் படியேறுகிறாள். எல்லாம் முடிந்துவிட்டது என்பதற்கிணங்க,எவ்வித விடைபெறலுமில்லாமல் புறப்படுகிற அவள். திரும்பிப் பார்க்காமல்..சலனமற்ற மனவிறைப்புடன் போய் மறைகிற செண்பகம்.

அவளைத் தீண்டாத விரல்களையும், உள்ளங்கையையும் கண்ணீரோடு பார்க்கிற முருகேசன். தவளை விழுங்கிய பாம்புபோல, மனத்ததும்பலோடு படியேறுகிற வழக்கத்துக்கு மாறாக, பாம்புக்கடிபட்டவனைப் போல உயிர் துவண்டு படியேறுகிற முருகேகன்.கருக்கிருட்டு, ராட்சஸப்போர்வையாகப் போர்த்தி இறுக்குகிறது. பிறைநிலா, பண்ணரிவாளைப்போல நிற்கிறது. அதன் பக்கத்தில் பளிச்சிடுகிற ஒற்றை நட்சத்திரம்.

இருளுடன் மல்லுக்கட்டமுடியாமல் பணிந்துபோனபிறை நிலா, "எப்பா மறைவோம்" என்று கோழைத்தனமாக நகர்ந்தது. இவனைப்போலத்தான் அதுவும், இவனைச்சூழ்ந்திருப்பதுவும் வெல்லமுடியாத இருட்டுதான். இவனை வீழ்த்திவிட்டு, விதியைப் போல. போய் மறைந்துவிட்ட செண்பகம்.

அவளில்லாத வாழ்வா? அவளில்லாத எதிர்காலமா? அவளைத் தொட்ட மனசால், இன்னொருத்தியைத் தொடுவதா?

தொடாமலேயே வாழ்ந்து முடிந்துவிட்டால் என்ன?

"நா சாம்பலாகணுமா?" என்று மிரட்டுகிற செண்பகத்தின் குரல், உயிருக்குள் அதிர்கிறது.

தெருவில் நடந்து வருகிற முருகேசன். உயிர் கழன்ற அயற்சி. வாழ்வே அஸ்தமித்துவிட்ட மாதிரியோர் அச்சம். மனசுக்குள் சொல்ல முடியாத சோகப்பெருவெள்ளம். வீடுபோனான். வெள்ளைக்குண்டு பல்ப், பால்நிற வெளிச்சம் தருகிறது. முற்றமெல்லாம் பாலைப்பூசிய மாதிரியோர் வெளிச்சம். வெளிப்பானைக்கு வந்தான்.திகைத்தான். தேங்கிநின்று யோசித்தான்.

வழக்கம் போல சோப்பு போட்டு, நுரைதள்ள.முகம் கழுவவேண்டுமா, உடம்பெல்லாம் சோப்பு போட்டு தேய்த்து அலசவேண்டுமா ? துண்டால் அழுந்தத் துடைக்கவேண்டுமா? சோப்பு வாசனையோடு உள் நுழைகிற வாடிக்கையைக் கடைப்பிடிக்கிற உணர்வே வரமறுக்கிறது. உயிர்அறுத்த செண்பகம், பிரக்ஞையையும் அறுத்துவிட்டாளா?

தகரப்போணியால் தண்ணீர் முகந்து பாதங்களை மட்டும் கழுவிக்கொண்டு திண்ணையில் உட்கார்கிற முருகேசன். வயிறுபசிக்கிறது. சாப்பிடத்தோன்றவில்லை. உடம்பெல்லாம் வலிக்கிறது. படுத்துஉறங்கத் தோன்றவில்லை.

ரொம்பநேரம் கழித்து...

வீட்டுவாசலில் வேற்று அரவம் கேட்கிறதே என்று எட்டிப்பார்த்த காமாட்சி, இவனைப் பார்த்து திடுக்கிட்டாள்.

"எளையவனே, எப்படா வந்தே?"

"அப்பதேயே வந்துட்டேன்..."

"ஏண்டா.. அம்மான்னு கூப்புடலே? சாப்புடுதீயா? சோறு வைக்கட்டா?"

"வேண்டாம்மா-"

"ஒனக்கு மட்டும் ஆக்குனநெல்லுச்சோறுவேற யாரும் சாப்புட மாட்டாக. பாழாய்ப்போயிரும்பா.. சாப்புடுரா, அம்மா வைச்சுத் தாரேன்டா-"

"பசிக்கலேம்மா-"

"எளவட்டப்பயலுக்கு எப்படி, பசிக்காமப் போகும்? சாப்புடுரா, வைச்சுத்தாரேன்-"

காமாட்சியின் நீண்ட நேர வற்புறுத்தலுக்குப்பிறகு அரைமனசுடன் சாப்பிட உட்கார்ந்த முருகேசன். வட்டிலில் சிரித்த வெள்ளைப் பருக்கைகளையும் ஊற்றிய குழம்பையும் நிதானமாகப் பிசைகிற அவன். பிசைகிற உணர்வில்லாமலேயே பிசைகிற சவத்தன்மை.

"ஏலேய்- எளையவனே-"

எங்கோ கனவுக்கிணற்றுக்குள் மூழ்கிக் கொண்டிருந்த வனைப் போல.. அப்படியே பிசைகிற அவன். பிசைந்து கொண்டே யிருக்கிற அவன். ஒருவாய்ச் சோறு கூட தொண்டைக்குள் இறங்க வில்லை.

காமாட்சியின் குரலும் அவனுக்குக்கேட்கவில்லை.

மகனின் உணர்வற்ற நிலை. செய்துவைத்த சிலையென உறைந்திருக்கிற முருகேசன்.

"ஏலேய்...முருகேசா... "சத்தத்தை உயர்த்தி அதட்டுகிற காமாட்சி.

திடுக்கிடலோடு அவளைப் பார்க்கிற அவனது வெலவெலப்பு.

"என்னடா.. என்ன ஆச்சு, ஒனக்கு? சாப்புடாம, சோத்தோட மல்லுக்கட்டிக்கிட்டிருக்கீயே.. என்ன வெஷயம்?"

"சும்மா தாம்மா_"

"சாப்புடு.. மத்த கவலையெல்லாம் பெறகுபாக்கலாம். வவுத்துக்கு வஞ்சனை பண்ணாம சாப்புடு_"

உயிர் வரத்துவங்கிய உடல். உணர்வு வரத்தொடங்கிய மனசு. சாப்பிடத் தோன்றாவிட்டாலும், சாப்பிட்டாக வேண்டும் என்கிற கட்டாய நிலை. மனஉலக மரணத்திலிருந்து இவனை இழுத்துக் கொண்டுவந்த லௌகீக உலகமாக அம்மாவின் குரல்.

"உண்டோமா.. ஒழைச்சோமா... உறங்குனமான்னு அழகைப்போல நீயும் கவலையத்த எளவட்டப்பயலா திரிய வேண்டிய பய. தேவையில்லாம அய்யாவை பகைச்சுக்கிட்டு கடன் தொல்லையும் கவலையுமா கஷ்டப்படுதே, துட்டுக்கஷ்டம்னு எவன்கிட்டேயும் கையேந்தாத அந்த மனுசருக்குப் பெறந்த பய... ரெண்டுவருஷ வெவசாயத்துலே ஊரெல்லாம் கடனை வாங்கிப் போட்டு வைச்சிருக்கே_"

"நம்ம ஊர்லே எல்லாரும் செய்ற மாதிரித்தானே நா வெவசாயம் பண்றேன்ம்மா...?"

"எல்லாச் சம்சாரிகளும் "கடன் கடன்"னு சீரழியுற மாதிரித்தான் நீயும் சீரழியுதே. உங்க அய்யா எதுலே கொறைஞ்சிட்டாரு? டக்கர் உழவுல்லே... ரசாயன உரஉப்பு இல்லே. விஷமருந்தடிப்பு இல்லே...ஆனாலும் வெள்ளாமை வெளைச்சல்லே அவரை ஜெயிச்சவன், எவன் இருக்கான்? ஒனக்கு மட்டும் தானடா.. கோணப்புத்தி வந்து குடும்பத்தை ஊர் சிரிக்க வைச்சு... நீயும் சீர்குலைஞ்சி.. வயசுக்குமீறுன கவலையோட கெடக்கே?"

பாசமும் கோபமுமான அம்மாவின் குரலில் குழைவும் கண்டிப்பும் கலந்துகிடக்கிறது. புருஷனையும் விட்டுக் கொடுக்காமல், பிள்ளைப் பாசத்தையும் குறைத்துவிடாமல் பேசுகிற அம்மாவின் குரலில் அவளது மனவேதனையும் கசிகிறது. இருதலைக் கொள்ளியாக அவள் ஊசலாடிப் போராடுகிற மனசின் வருத்தம்.

தனது கவலை விவசாயத்தைக் கவலை என்று நினைக்கிற அம்மாவின் அறியாமையை எண்ணி பெரு மூச்செறிந்தான். உண்டு முடித்தான். கையைக் கழுவி வாயைத் துடைத்துக் கொள்கிற இளையவன்.

"அய்யா எங்கம்மா?"

"தொழுவத்துலே நிக்காரு_"

"அண்ணனை எங்க?"

"அவன் மடத்துப்பக்கம் எளவட்டப் பயகளோட பேசிக்கிட்டிருப்பான்"

"சரிம்மா.. நா- திண்ணையிலே இருக்கேன்_"

அவளது வருத்தத்தையோ சொற்களையோ- கண்டிப்பையோ எதையும் சட்டை செய்யாத அவனது அலட்சிய பாவம் காமாட்சிக்குள் ரொம்ப வேதனைப்படுத்தியது.

"ஆக்கிப்போட்ட மனசுலே உள்ள ஈரத்தை உணராத பயலாக இருக்கிறானே.." என்ற வலி மிகுந்த நினைவு, அவளுக்குள் அறுக்கிறது.

அடிவயிற்றிலிருந்து பீறிட்டு வெளிப்படுகிற பெருமூச்சு. சோற்றுவட்டிலைக் கழுவியெடுத்தாள்.

"எல்லாம் அந்தக் கூத்துவன் பண்ணுற செயலு. இல்லேன்னா_ பெத்த தகப்பன், தங்கத்தகப்பன்,புள்ளைகளுக்கு சம்பாத்தியம் சேத்துவைக்குற சிங்கத்தகப்பன்.அப்பேற்பட்ட அப்பனைக் குத்தம் சொல்லிக் குறை சொல்லி.. தலைகுனிய வைச்சு.. தலைநிறைய கடனோட நிப்பானா-?"

வருத்தமான முணுமுணுப்பில் அவளது மனச்சோகம் கசிகிறது.

திண்ணையில் வந்து கட்டையைச் சாய்க்கிற முருகேசன். மூடிய கண் நிறைய செண்பகம். செண்பகம்கள்.

உருக்கிய ஊற்றிய வெள்ளிக்கற்றையென மோட்டார் தண்ணீர் பாய்கிறது. தேன்நிற ஜாக்கெட்டும், கனத்த மார்பகமுமாக நீருக்குள் ஏந்துகிற செண்பகம்...

தண்ணீர் குடம் தூக்க.... துள்ளும்மான் குட்டியாக ஓடிவந்த செண்பகம்.

கனத்த மார்பகத்தின் அடிப்பாகத்திலுள்ள மச்சம்பற்றிச் சொன்ன போது, அவளது நாணச்சிரிப்பு.

இவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஈடு கொடுத்து, உயிரையும் உடம்பையும் ஒப்படைத்த சரணாகதி....

"என்னோட உசுரைவிட உங்க மானமரியாதை முக்கியம் ராசா" என்று தொடவிடாமல் தடுத்து, தன்னிலும் இவனைப் பெரிதென நேசித்த செண்பகம்...

செண்பகம்.... செண்பகம்... செண்பகம். உயிரெல்லாம் செண்பகம் பூக்களின் வாசம்.

இனி. அது எனக்கில்லை.

44

தெக்காட்டுப் புஞ்சையில் நின்றிருந்தார், பரமசிவம். பருத்திச் செடி தொடை மட்டத்துக்கு வளர்ந்து நிற்கிறது. கொப்பும் கொழையுமாக அடர்த்தி. கொடி வீசி வளர்ந்திருக்கிற கிளைகளுடன் கிளைகள் பின்னிக்கிடக்கின்றன. வாய்க்காலில் நடந்தால், முற்றிய காய்கள் கல்லைப்போல முழங்காலில் உரசுகின்றன. புள்ளி விழுந்து பழுப்பேறி உலர்ந்த இலைச்சருகுகள் காலடியில் மிதிபட்டு நெறுநெறுக்கின்றன.

சாம்பல் பூத்த பச்சையாக இலைகள். மஞ்சள் பூக்களும் சிவப்புப் பூக்களுமாக சிரிக்கின்றன. மஞ்சள் பூ, ஆண். சிவப்பு நிறப்பூ பெண். ஈக்கள் மஞ்சள் பூவில் உட்கார்த்து மகரந்தம் உறிஞ்சிவிட்டு, சிவப்புப்பூவில் உட்கார்ந்து மகரந்தம் நுகரும். மஞ்சள் பூ, ஜென்ம வாசம் முடிந்து— வாடி உதிர்ந்து விடும். சிவப்புப் பூவும் வாடும். அது கர்ப்ப வாட்டம். காம்பின் அடிப்பகுதி, பிஞ்சுவின் மழலை முகமாக காய் தோன்ற... நுனிப்பூ வாடிச்சுருங்கி.... நின்று நிலைத்து.... பிஞ்சாகவும், காயாகவும், கர்ப்பம் வளர்ந்த பிறகு, தானாக உதிரும். பூவின் காம்பு, ரொம்ப மிருதுவாக இருக்கும். புழுவுக்கு அந்தக் கொழுந்து நிலை, ரொம்ப ருசி, வாய் வைக்கும். பிஞ்சாக வேண்டிய பூ, புழுவின் வாய்பட்டு.... உதிர்ந்து விடும். இளம்பிஞ்சுகளும் கூட மேய்ச்சலில் பலியாகி, உதிர்வதுண்டு.

களைவெட்டுவதற்கு நாலாட்களுடன் வந்து திரும்பிய காமாட்சி சொன்னாள்.

"பருத்தியிலே புழுமேய்ச்சல் தட்டுப்படுது"

"நீ பாத்தியா ?—"

"சின்னச் சின்ன அரும்புக, ஒண்ணு ரெண்டு உசந்துகிடந்துச்சு"

"மருந்தடிச்சிரணுமா ?"

"இப்பவே அடிச்சுட்டா.... உதுர்றது, கொஞ்சமா இருக்கும். விட்டுட்டோம்னா... புழுவும் பெருசாயிரும். பூ பிஞ்சு உதுர்றதும் கூடுதலாயிரும்.."

காமாட்சி கண் பொய் சொல்லாது. இருந்தாலும் தானும் ஒரு பார்வை பார்த்து விடலாமே என்று வந்திருக்கிற பரமசிவம்.

வாய்க்கால்களில் நடந்தார். பருத்திச் செடிகளில் காலடிநிழல்களில் கூர்மையாகத் தேடினார். பூக்களின் அரும்புகள் சின்ன மூக்குத்திகளாக விழுந்து கிடந்தன. ஒன்றிரண்டு தான். பரவலாக இல்லை. ஆனாலும் மெய்மறந்து விடக்கூடாது.

இந்தக் காய்ப்புழு, சாமான்யமானதல்ல பார்த்திருக்க பருமனாகிவிடும். முதல்நாள், அரும்புநிலைக் காம்புகளைக் கடிக்க முடிகிற சின்னஞ்சிறு புழுக்களாக இருக்கும். மறுநாளே_ காய்களின் காம்புகளைக் கத்தரிக்கிற ராட்சஸமாகிவிடும். மாய வளர்ச்சி.

மோனோ கிராப்ட்ஸ், எண்டோசல்பான், மோனாசில் போன்ற கடும் நஞ்சுக்கெல்லாம் இந்தப்புழுக்கள் சாகாது. மருந்தைக் குடித்து கொழுக்கும். டெஸிஸ் போன்ற உயர்வகை மருந்துக்குத்தான் மெல்ல வாடும். நூறு மில்லி முந்நூறு ரூபாய்க்கும் மேல்.

மோனோகிராப்ட்ஸ் போன்ற ஊடுருவிப் பாய்ந்து பரவுகிற நஞ்சுவையே விருந்தாக்குகிற வில்லாதிவில்லன்கள், காய்ப்புழுக்கள்.

ஸ்பிரேயர் நிறைய நீரும், மருந்தும் கலந்து முதுகில் போட்டு சுமந்து கொண்டே... இடதுகை அசைக்க, வலதுகை செடிகளின் மேல் மிதக்கும். பூச்சிதறல்களாக நாசியிலிருந்து, துளித்துளிகளாக தெறித்துப் பரவும். இலை, பூ, கிளைமட்டுமல்ல, தூர்வரைக்கும் வழிகிற மாதிரி... குளிர குளிர நனைப்பார்கள். அப்பவும் புழுக்கள் சாவதில்லை. காய்கள் தப்புவதுமில்லை. சம்சாரி, அதே மருந்தில் ஒரு மடக்கு குடித்தால் போதும், மண்டை உதறி விடுவான். சம்சாரியை விடவும் புழுக்கள் வலிமைமிக்க ராட்சஸமாகிவிடும்.

ஊரெல்லாம் இதே கூத்துக்கள் தாம். காய்ப்புழுவுக்கு மருந்தடிக்க ஆயிரக்கணக்கில் பணத்தை இறைத்தாக வேண்டும். புழுக்களைப் போலவே பூச்சி மருந்து உரக்கடைகளும், ராட்சஸமாக பெருகுகின்றன. பார்த்திருக்க, பணக்காரர்களாவது "மருந்து" உரக்கடைக்காராகள் தாம்.

உரக்கடைக்காரர்களுக்கு உரம் போட்டு, கொழுக்க வைத்து வளர்த்து விடுகிற ஊர்ச்சம்சாரிகளுடன், முருகேசனும் சேர்ந்து கொண்டான்.

ரெண்டு வருஷங்களாக டக்கரின் ராட்சஸடயர்கள், பாலையா நாயக்கர் புஞ்சையின் ஈரல் கறி போன்ற இருதயத்தை நசுக்கி நொறுக்குகிறது. அதன் சருமத்தை நகக்கீறல்களாகக் கிழித்துப் புழுதியாக்குகிற டிரில்லர் கொழுக்கள். தற்கொலை செய்து கொண்டு செத்துக் கிடப்பவனைச் சுற்றிலும் அரளிக்கொட்டையின் நசுக்குண்ட சக்கைகள் சிதறிக் கிடப்பதைப் போல.. பாலையா நாயக்கர் புஞ்சையையொட்டிய பொழிகளில் எண்டோசல்பான் மருந்துஇருந்த வெற்று டப்பாக்கள். ரோகோர் மருந்து இருந்த பாட்டில்கள். மோனோகிராப்ட்ஸ் டப்பாக்களின் நெளிசல்கள். கழற்றியெறியப்பட்ட அதன் மூடிகளின் தகர நெளிவுகள்.

காம்ப்ளெக்ஸ், டி.ஏ.பி., பொட்டாஷ், யூரியா போன்ற உர உப்புக்களைத் தின்று தின்று.... மண்ணைத் தின்கிற சவலைப் பிள்ளைகள் போல சோகை பிடித்துக் கிடக்கிற நிலம்.

இந்த ஊரிலேயே இந்த ரசாயன நஞ்சுகள் பக்கம் தலை வைத்துப் படுக்காத ஒரே ஆள், பரமசிவம் தாம். அவர் ஒற்றை மனிதர்.

பருத்திப் புஞ்சைக்குள் வாய்க்காலில் நடக்கிற பரமசிவம். அவரது வெறும் பாதங்கள். செருப்பு, புஞ்சையின் கால்மாட்டில், கழற்றப்பட்டுக் கிடக்கின்றன. தாய்மடியாகப் புஞ்சை மண்ணை நினைத்து மதிக்கிற வியர்வையாத்மா.

சாணிக் குப்பையிலும், கண்மாய் கரம்பை மண்ணிலும் குதியாளம் போட்டு வளர்ந்திருக்கிற பருத்திச் செடிகள். முதல் உழவிலேயே போடப்பட்ட வேப்பம்புண்ணாக்கு நொறுங்கல். முதல் தண்ணீர் பாய்ச்சுகிறபோது, தூருக்கு தூர் போடப்பட்ட கடலைப்புண்ணாக்கு நொறுக்கல்கள். அதற்கும் மேலாக காமாட்சி, பரமசிவத்தின் வியர்வையும், பாசக்கவனிப்பும்.

சாயங்கால வெயில், தைமாசப்பனியில் நனைந்து துவள்கிறது. மாரி மூலைக்காற்றின் மென்வருடல், கூதலாகச் சிலிர்த்தோடுகிறது. பருத்திச் செடிகள் போதிய இடைவெளிவிட்டு ஊன்றப்பட்ட விதைகளாக இருந்தாலும்.. பரமு, காமாட்சியின் ப்ாசம் நிறைந்த சுவாசம்பட்டுபட்டு தொடை உயரத்துக்கு வளர்ந்திருக்கிற செடிகள். கிளைவீசி... கொடியென ஓடிப் பின்னிக்கிடக்கிற நெருக்கம். புழு மேய்ச்சல் இருப்பதைக் கவனிக்கிறப ம்.ஒன்றிரண்டாக உதிர்ந்து கிடக்கிற அரும்புக.ள். அரும்பை ்த காம்புகளின் மென்நுனி, புழுவின் கடிபட்டு, கருத்திருக்கி

"காமாட்சிக்கழுதை சொன்னது சரிதான் ளையைப் போல வெள்ளாமையை மதிக்குற தாய் மனசு,அவளுக்கு.அதுதான் அவள்மனசு இதைக் கண்டுபிடிச்சிருச்சி. குழந்தைமூக்குலே ஒழுகுகிற நீர்த்துளியிலேயே வரப்போற காய்ச்சலைக் கண்டுபிடிக்குற அதே தாய்க்குணம்_"

மனைவியின் எச்சரிக்கை காலமறிந்து கூவிய கோழியின் கூவல்.

வீடுவந்தவுடன் உழக்கு வேப்பெண்ணெய் எடுத்து தகரவாளியில் ஊற்றி ஒருசிறிய சோப்புக்கட்டித்துண்டை உள்ளே போட்டு மூடி வைத்தார். பிரேயரை எடுத்துத் துடைத்தார். நாசில் துவாரங்களைச் சரிபண்ணி அசைப்புக்கு எண்ணெய் போட்டு, பிரேயர் தலைமூடியைக் கழற்றி உள்பக்கம் துணியைவிட்டுத் துடைத்து சுத்தம் செய்கிறார்.

"காமாட்சி_"

"என்ன ?"

"நாளைக்கு எங்க வேலை ?"

"அதைப்பத்தி உங்களுக்கென்ன ? நாளைக்குப் பருத்திக்குள்ளே மருந்தடிக்கப் போறேப்ப தண்ணிசொமக்க நா வாணுமாக்கும் ?"

"ஆமாம்_"

"பாத்துக்கிட்டுத்தானே இருக்கேன்_ வந்துருதேன். ஆனா_"

"என்ன_ஆனா -ஆவன்னா ?"

"விடியக்காலம் வெருசா போயிரணும். வேலைத் தேரத்துக்குள்ளே மருந்தடிப்பை முடிச்சிரணும். நாளைக்கு ரெங்கம்மாவுக்கு களைவெட்டப் போகணும்?

கூலிக்கா? அதெல்லாம் வேண்டாம். அம்புட்டா..தரம் தாழ்ந்துட்டோம்?"

"கூலிக்கு எதுக்குப் போகணும்? அதுக்கு ஏது நேரம்? நம்ம புஞ்சை வேலைகளே தோள்நிறைய கிடக்குதே_"

"பெறவு?"

"மாத்தாளு_"

"அப்பச்சரி. நம்மபுஞ்சைக்கு அவா வந்துருந்ததுக்கு, பதிலா_ நீபோய் களைவெட்டப் போறியா?"

"ம்_"

"தகரவாளியின் அடிப்பகுதியில் கிடந்த உழக்கு வேப்பெண்ணையை எட்டிப்பார்த்தார். மறுபடியும் மூடி வைத்தார்.

விடியற் காலம் பார்த்தால்_நுரைதள்ளி_நுரைபெருகி முக்கால் வாளிக்கு ஏறிவிடும். தண்ணீரில் கரையாத கடினத்திரவமாகத் தேன் மாதிரி இருக்கிற வேப்பெண்ணெய் நுரை நுரையாகப்பெருகி நீரில் கலந்து கரைகிற நீர்மாதிரியாகிவிடும். பிரேயரில் ஒருகுடம் தண்ணீரை ஊற்றி, ஒருசிரட்டையளவு எண்ணெய் நுரையைக் கலந்து, முதுகில் தூக்கிப்போட்டுக் கொண்டு_ அசைப்பை அசைத்து அசைத்துக் காற்றைப் பெருக்கி..நாசிலை பருத்திச் செடிகளின் தலைக்கு மேலாக உயர்த்திப் பிடித்துக்கொண்டே நடக்க வேண்டியதுதான். நீரும் எண்ணெயும் கலந்து நூறாயிரம் பூச்சி தூறல் துளிகளாக செடிகளில் விழுந்து கழுவும். இது, புழுக்களைக்கொல்லாது. புழுக்களிடமிருந்து பூ பிஞ்சுகளைப் பாதுகாக்கும். புழுக்களை அண்டவிடாது, அதன்கசப்பு. புழுக்கள் கசப்பு தாளாமல் பின்வாங்கி தயங்குகிற ஓரிருநாளில் பூக்கள், புழுக்களை மீறிய காய்களாக முற்றிவிடும். மண்ணெல்லாம் வேப்பெண்ணெய்க் கசப்பு காய்ப்புழுக்கள் வெளியேறிவிடும். பசியில் செத்து மடியும்.

தோள் முதுகெல்லாம் நரைத்துவிட்டது. பரமசிவத்துக்கு. நெஞ்சு, வயிறு ரோமங்களிலும் கருமைப்பரவல்களுக்கு மத்தியில் நரைவட்ட வெண்மை.

இளநீலநிற பிரேயர் வெயில்பட்டு,நீர்பட்டு, காலக்கரைசலில் அதுவும் நரைத்துவிட்டது. பருத்திப்புஞ்சை தலைமாட்டில் பிரேயரை உட்கார வைத்தார். பனித்தண்ணீர் இல்லாத அறுகம்புல் காலைநேரக் குளிர்மையுடன் உள்ளங்காலை வருடுகிறது.

தகரவாளியைப் பக்கத்தில் வைத்திருக்கிறார். சோப்பு நுரைகள் பெருகி, முக்கால் வாளி வரை உயர்ந்திருக்கிறது. ஒரு சிரட்டையும் மிதக்கிறது. பம்ப் ஷெட் மோட்டார்தண்ணீர் விழுகிற தொட்டியில் கிடக்கிற தண்ணீரிலிருந்து குடத்தை மூழ்கடித்துத் தண்ணீரால் நிரப்பி, தூக்கி இடுப்பில் வைத்து வருகிற காமாட்சி.

"ஏய்... இந்தா... "விருட்டு"ன்னு நடந்துவா. ராணி நடை நடக்கே ?"

"வரணும்லே ? பொழியிலே வழுக்கி வுழுந்து எலும்பு கிலும்பு ஒடைஞ்சிட்டா... என்னசெய்றது ?"

"சரி சரி -நிதானமாகவே வந்துசேரு..."

குடத்து நீரை பிரேயர் வயிற்றில் ஊற்றி, வேப்பெண்ணைய்க் கரைசலை ஒருசிரட்டை அள்ளி ஊற்றி, அதையும் கலந்து மூடியை இறுகலாகமூடி..

"ம்... இதை ஒருகைபிடிச்சு தூக்கிவிடு"

அவள் பிரேயரை ஏந்தி உயர்த்த ...முதுகில் பாலிதீன் பேப்பரும், சாக்கும் கிடக்க அதன்மேல் பிரேயரை தொங்கவிட்டு இழுத்து மாட்டுகிறார். அசைப்பை இடதுகையால் அசைக்க அசைக்க... நாசில் குழாயைக் கையில் ஏந்துகிறார். முதுகின் புடைப்பாக பிரேயர் குலுங்க.. நாசிலை ஏந்திக் கொண்டே வாய்க்காலில் நடக்கிறார்.

முதுகில் சாக்கும் பாலிதீன் தாளும் இல்லாமல் பிரேயரை வெற்று முதுகில் போடமாட்டார். ஆனால் மற்றசம்சாரிகள் அப்படியல்ல.அத்தனை எச்சரிக்கையை வீண்பயம் எனக் கருதுவார்கள். தலைத்துண்டைமட்டுமே முதுகில் பரத்தி விட்டு கட்டிக்கொள்வார்கள்.

அப்படித்தான் முத்தையாவும் துணிச்சலாக வெறும் முதுகில் பிரேயரைப்போட்டுக் கொண்டு மருந்தடித்தான். முதுகுமுழுவதும் மருந்து கலந்த வெண்ணிறப்பால் நிறத்தண்ணீர் வழியும்.

இடுப்புவேட்டி நனைக்கும். எதிர்க்காற்று அடிக்கிறபோது, நாசிலிலிருந்து சீறுகிற துளிகளும் உடம்பில்படும்

பத்துப்பதினைந்து பிரேயர் அடித்திருப்பான். திடுதிப்பென பொத்தெனக் குப்புற விழுந்துவிட்டான். மிளகாய்ச் செடிகள் நொறுங்கின. மயக்கம் போட்டு விழுந்துவிட்டான்.

ஊரே பதறித்துடித்தது. நிறைய பேர் அடித்துப்பிடித்து ஓடிவந்தனர். அவனைத் தூக்கிக்கொண்டு மாட்டுவண்டியில் போட்டு, ஊருக்குள் கொண்டுவந்தனர். பதற்றமும் தவிப்புமாகப் பலர் பேசிக்கொண்டனர்.

"வெறும் வயித்தோட மருந்தடிக்க வந்துட்டான். மருந்து நாத்தம். விஷமில்லியா ? அதான்.. கிறுகிறுப்பு"

"மோனாகிராப்ட்ஸ் மருந்து, கடுமையான நஞ்சு, மருந்தடிச்சுக்கிட்டு பீடியை பத்தவைச்சிருப்பான். அதான் கண்ணைக்கட்டியிருச்சு"

ஆள்ஆளுக்கு வாய்க்கு வந்ததை மனப்பதைப்புடன் பேசினர். சோடா அடித்தனர். நீச்சுத்தண்ணீர் குடிக்க வைத்தனர். மயக்கம் தெளிகிற மாதிரி தெரியவில்லை. உடம்பு துவளஆரம்பித்தது. அபாயத்தை உணர்ந்த பதற்றம். பரபரப்பு.

டக்கரில் தூக்கிப் போட்டு, திருவேங்கடம் ராஜேந்திரன் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார்கள்.

டாக்டர் பரிசோதித்து விட்டு.. கண்டிப்புடன் சத்தம் போட்டார். ஏன் இத்தனை தாமதமாக கொண்ணாந்தீக ?" என்றார்.

"முழுசா ப்ளட் பூராவும் வெஷம் பரவியிருக்கு. மோனாகிராப்ட்ஸ் மருந்தை நூறுமில்லியை குடிச்சிருந்தா.. எவ்வளவு விஷம் இருக்குமோ.. அதைவிட கூடுதலா விஷம் பரவியிருக்கு.."

"மருந்தைக்குடிக்கலியே.. மருந்தை அடிக்கத்தான் செஞ்சான் முத்தையா"

"இது கடுசான வெஷம். ஊடுருவிப் பாய்ஞ்சு பரவுகிறது. முதுகுலே, இடுப்புலேவழியுற விஷம் கலந்த தண்ணிமூலமா உள்ளே நஞ்சு ஊடுருவிப்பரவியிருக்கு.."

வாய்வழியாக டியூப்பை மாட்டினர். தற்கொலை முயற்சியில் விஷமருந்திய நோயாளிக்கு நடக்கிறஅதே மருத்துவம். அதே பயங்கரம். சாவின் வாசல் வரைபோய் திரும்பிய நிலை.

எட்டாயிர ரூபாய் செலவுக்குப்பின் தான், முத்தையா அரை உயிராக வீடு திரும்பினான்.

முதுகுலே பட்ட விஷத்தண்ணியே ஆளுக்குள்ளே போகுதாம். இந்த விஷத்தண்ணியைக் குடிச்சு வளர்ந்த தான்யங்கள் காய்கறிகள், நெல், பழவர்க்கத்தை எம்புட்டு வெஷம் ஊடுருவிப் பாய்ஞ்சிருக்கும். அதைத்தான் நாம திங்குறோம். நாம அதைத்தான் சாப்புடுதோம். நஞ்சைச்சாப்புட்டு வளர்ற தலைமுறைக்கு நோயெதிர்ப்புச்சக்தி எப்புடி இருக்கும்? அதான், நீரிழிவு இருதய நோய் உப்புச்சத்து ன்னு ஆயிரக்கணக்கானநோய்கள் பாடுபடுற கிராம ஜனங்களுக்கு..."

நடுத்தெருவில் நின்று மனக்கொதிப்புடன் பேசித்தீர்க்கிற பரமசிவத்தை யாரும் பொருட்படுத்தவில்லை.

"காலப்போக்கு தெரியாம, பழைய நெனைப்புலேயே இருக்காரு. ஊருஒலகம் போற பாதை தெரியாம, இவரு ஒத்தையிலே என்னத்தையோ பேசிக்கிட்டிருக்காரு" என்று அவரை ஏளனமும் இகழ்ச்சியுமாக நினைத்துக்கொண்டு அவரை விட்டு விலகுகிற இளவட்டங்கள்.

முத்தையாவுக்கு நிகழ்ந்ததை ஒரு சம்பவமாகத்தான் சாதாரணமாக நினைத்து ஒதுக்கிவிட்டனர். ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளவில்லை. உரிய பாதுகாப்பு நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. முதுகில் வெறுமனே, ஒருதுண்டை விரித்துப்போட்டு, பிரேயரை மாட்டிக்கொண்டு காலத்தை நகர்த்துகிற ஊர்ச்சம்சாரிகள்.

பரமசிவம் மோனோகிராப்ட்ஸ் போன்ற ஊடுருவிப்பாய்கிற நஞ்சைத் தொட்டுக் கூடப் பார்க்க மாட்டார். வெறும் வேப்பெண்ணெய்க் கரைசல்தாம். அதற்கும் சாக்கும் பாலிதீன் தாளும் பிருஷ்டம்வரை தொங்கும் கவசங்களாக.

குடம் குடமாகக் காமாட்சி சுமக்க... பிரேயர், பிரேயராக இவர் பருத்திச்செடிகளை நனைக்க.... சின்னஞ்சிறு பச்சை நிற

காய்ப்புழுச்சாத்தான்கள் நிற்க இடமில்லாமல் அற்றலைந்தன. தப்பித்தோடிற்று. வெயிலுக்கும், பசிக்கும் பலியாயிற்று.

"நா_ களைவெட்டப் போவணும்."

அவசரப்படுத்துகிற காமாட்சி

"பொறு, பொறு.... இன்னும் ஒரு குடம்தான். அதைத் கொண்ணாந்து வைச்சுட்டுப் போ_ மத்ததை நா பாத்துக்கிடுதேன்_"

"நீங்க சாப்புடணும்லே?"

"நீ சாப்புட்டு ரெங்கம்மா புஞ்சைக்கு ஓடு... நா வந்து சோறு வைச்சுச் சாப்புட்டுக்கிடுதேன்"

காமாட்சிக்கு சுரத்து இல்லை. உயிரில்லாத வேலைப்பாடு. உயிர் ஒட்டாத யந்திரமயச் செயல்பாடு. அவள் மனசெல்லாம் இளையவன். கடன் தொல்லை தாளாமல் மூச்சுத்திணறுகிற அவன். கடன் தொல்லை கொஞ்சமல்ல__

சொஸைட்டிக் கடன்_ பேங்கில் நகைக்கடன், விவசாயக்கடன், சங்கரன் கோவில் கமிஷன் கடையில் கடன், உரக்கடைகளில் கடன் என்று ஏகப்பட்ட இடங்களில் கடன் பட்டியல்கள். முருகேசனைத் தேடித் தேடிவருகிற ஆட்கள்.

இத்தனை தொல்லைகளுக்கும் மத்தியில்_ கௌரவத்துக்காக _ ரெண்டாயிரம் ரூபாய் கட்டி, தவணைக்கடனுக்கு எக்ஸ்.எல். வண்டி ஒன்றைப் புதிதாக வாங்கியிருக்கிறான்.

"என்ன கிரகசாரத்துக்கு.... இந்தப் பயலுக்கு இப்படிப் புத்தி போகுது? இது எங்க போய் முடியுதோ?" தாய் மனத்தவிப்பு.

45

இடிகிணறைத் "திரும்பித் திரும்பிப்" பார்க்கிறாள் செண்பகம். பார்ப்பதற்கு எதுவும் தெரியாத கருக்கிருட்டு. வேலிமரம் கூட இருட்டுக் கறுப்பாக இருக்கிறது. அவள் திரும்பிப் பார்த்தாலும் பார்ப்பது கண்ணல்ல. கழுத்தைத் திருப்பினாலும் முகத்தை அப்பக்கமாக நோக்கினாலும்.... பார்க்காத கண்களை மீறி, இடிகிணறைப் பார்க்கிற மனசு.

உயிரைப் பார்ப்பதற்குக் கண்கள் எதற்கு? இழந்து விட்டு வருகிற தனது சொந்த உயிரைப் பார்ப்பதற்குப் பார்வை எதற்கு?

அவனை எந்தளவுக்குப் பிரியப்பட்டாள்? இம்புட்டு, அம்புட்டு என்று அளவு சொல்ல முடியுமா? ஆகாயத்தை அளந்து சொல்ல முடியுமா?

சோப்புப் போட்டு சோப்பு போட்டு கழுவித்துடைத்த அந்த வாலிப முகத்தின் மினுமினுப்பு. ஆபிஸர் முகம் மாதிரி கம்பீரம். பட்டிக்காட்டு முரட்டுச் சொரசொரப்பு இல்லாத முகப்பளபளப்பு. படிப்பு வாசனை வீசுகிற பழக்க வழக்கம். எந்நேரமும் கையில் புத்தகம். வாசிப்புத் தீவிரத்தின் அறிவுக்களை. அழுக்கில்லாத விரல் நகங்களின் ஏற்ற இறக்கமில்லாத சீரான ஒழுங்கு.

அவனை நினைத்து நினைத்து இவள் கிறுகிறுத்துப் போய்க் கிடந்தாளே.....! அவன் கண்ணில் படுவதற்காகவே வேலைக் கிடையில் பம்ப் ஷெட்டுக்கு துள்ளியோடிய கணங்கள். அவன் காதுகளில் படுவதற்காகவே ஓங்கிச் சிரித்த சிரிப்பாணிகள் கொஞ்சமா?

"என்னடி... இது? சின்னக்கொமரிக்கு என்ன சிரிப்பாணி கேக்குது? அடக்க ஒடுக்கம் இல்லாத, ஆட்டம் போடுதோ?... என்று கண்டித்த "பெரிசுகள்" கோபத்தையெல்லாம் எறும்புக்கடியாக எண்ணிய அலட்சியம்.

ஏங்கி ஏங்கித் தவித்த நாட்கள்... அவனோடு பேசமாட்டோமா... பார்வையின் அர்த்தத்தை உணர மாட்டானா என்று எண்ணி எண்ணி உறங்காத ராத்திரிப் பொழுதுகள் கொஞ்சமா? ஏமாற்றத்தையும், தோல்விகளையும் பொருட்படுத்தாத விடாமுயற்சி. உயிர்த்துடிப்பான மனப்பிரியம். அவனாகவே கையைப் பிடித்து "ஆசையைச்" சொன்ன அந்த உச்சிமதியப் பொழுது. அந்திக் குளுமையின் காற்று அவளுக்குள். பீய்ச்சி அடிக்கிற தண்ணீருக்குள் உயிர் நனைந்த மாதிரியோர் புல்லரிப்பு.

அவன் கூப்பிட்ட போதெல்லாம் இடிகிணற்றுக்குப் போன மயக்கம். அவனது ஆசைக்கெல்லாம் வளைந்து கொடுத்த கிறுகிறுப்பு. உயிரையும், உடம்பையும் அவன் காலடியில் ஒப்படைத்த மனச் சரண். அவனது மானத்தையும், மரியாதையையும், அவனையும் பெரிதென மதித்த உயிர். தனது மானமரியாதையை நினைக்காத அச்சமின்மை.

உயிரினும் மேலான பிரியம். மானத்தினும் பெரிய மனச்சரண்.

அந்தப்பிரியத்தை அவளே சாகடித்து விட்டு வருகிறாள். சாக மறுக்கிற பிரியம். அந்த உறவைச் சாகடித்துவிட்டு வருகிறாள். அவனது வாழ்க்கைப் பாதையை அவன் போக்கில் விட்டு விட்டு, அவன் நலனுக்காகவே தன்னை விலக்கிக் கொள்கிற சுயமரணம். தற்கொலை.

..... இவள் சொன்ன யோசனை கேட்டு.... மலை போன்ற அய்யாவின் மானத்தைச் சரித்து, நிலம் வாங்கிய முருகேசன். வாங்கிய புஞ்சையில் விவசாயம் துவக்க முடியாமல் தத்தளித்த திணறல். கடன் வாங்க முடியாமல் பட்ட பாடுகள். அலைந்த அலைச்சல்கள். பட்ட அவமானங்கள். அப்பிக் கொண்ட தோல்விகள். அடித்து வீழ்த்திய அயற்சிகள்.

முதல் உழவு, முதற் பாத்தி கட்டு... முதல் உழவில் போட்ட டிஏ.பி. உர மூடைகள்... முதல் வெள்ளாமையில் "அ" போடும் போதே ஆயிரத்தெட்டாகப் பெருகிவிட்ட கடன்பட்டியல். மூச்சுத்திணறடித்த கைமாற்றுக் கடன்கள். கால் மாற்றுக்கடன்கள். காலைக் கட்டுகிற மனத்தடைகள்.

அவன் சொல்வதைக் கேட்டால்.... இவள் மனசு கிடந்து துடிக்கும். அவனே பட்ட துயரில் பத்தில் ஒன்று தான் சொல்லுவான். மற்றதை மறைப்பான்.சொன்ன சில சொற்பச் சோகமே இவளை வதைக்கும்.

"அடடா... நம்ம பேச்சை நம்பிக்கேட்ட ஆம்பளைக்கு இம்புட்டுத் தும்பமா? பிக்கல்பிடுங்கல்களா? நாம, புத்தியில்லாம பேசிட்டோமோ? தப்பான திக்குலே வழிகாட்டிட்டமோ....?" என்று அவளுக்குள் அனுதினமும் மனப்பிடுங்கல்கள். உள் நச்சரிப்புகள்.

"நம்ம காட்டுன பாதையிலே... தெசையிலே.... கண்ணை மூடிக்கிட்டு, கடனும் ஒடனும் வாங்கிப் போட்டு, பயணப்படுகிற வெவசாயத்தாலே, இவரு சீரழிஞ்சிருவாரோ....? அவுக அய்யா வாய்க்கு வாய் வெளங்காமப் போற பய, நாசமாய்ப் போற பயன்னு கரிச்சுக் கொட்டுறது, பலிச்சிருமோ? அதுக்கு நா காரணமாயிருவனோ? அவரோட அழிவுக்கு நானும் பொறுப்பாயிருவனோ?"

அவளுக்குள் ஊசிக்குத்தல்களாகக் குற்ற உணர்ச்சி மிகுந்த நினைவுகள். முள்முள்ளாக உள்வதை செய்கிற எண்ணங்கள்.

அன்றைக்குத் தெற்காட்டுப் புஞ்செயில் பருத்தியெடுப்பு. பருத்தியெடுத்த பெண்கள் எல்லாம் போய்விட்டனர். வேலை நேரத்துக்கு முந்தியே முடிந்துவிட்ட பருத்தி.

எல்லோருடனும் புறப்பட இருந்த மீனக்காவையும் செம்பகத்தையும் நிறுத்துகிற காமாட்சி.

"மீனக்கா... நீ ஆளுகளோட போ. காய்கறி வேணும்னா, பொறுக்கிக்கோ... செம்பகம் ஏங்கூட வரட்டும்."

"என்னமும் சோலியிருக்கா ?"

"ஒண்ணுமில்லே. தலையெல்லாம் கெடந்து அரிக்குது. ஈரும் பேணுமா கெடக்கு. செம்பகம், எளங்கண்ணுக்காரி_"

"வீட்டுக்குப் போயிரலாம்லே ?"

"பொம்பள மக்க பெறாத வவுத்துக்காரிக்கு யாரு பேனு பாப்பாக ? பாக்க நாதியில்லாதவள்னு ஊரெல்லாம் தெரியணுமா ?"

"சரிடி... செம்பகம், நீ அத்தை கூட இருந்துவா. வாற்றப்ப கொழை ஒடிச்சிட்டு வந்துரு."

"ஆட்டும்மா..."

பெரிய சாக்குகளைக் கிழித்துச் சேர்த்துத் தைக்கப்பட்ட போராக்களில் திணித்து, கிட்டிக்கப்பட்ட பருத்திப் பாரங்களை வண்டியில் பாரமேற்றிக் கொண்டு போன பரமசிவம். எல்லோரும் போய்விட்டனர்.

காமாட்சி மட்டும் பம்ப்ஷெட்ரூம் பக்கத்திலிருந்த சிமிண்டுத் தொட்டி நிறைய தண்ணீர் கிடந்தது. இருகைகளாலும் அள்ளியள்ளி மேலே ஊற்றினாள். நெஞ்சுக்கூடு, கட்கம், முதுகு, தலை முழுக்க ஊற்றப்பட்ட இருகைத் தண்ணீர். ஈரத்தலையை முந்திச்சீலையால் துவட்டிக் கொண்டாள். திரேகம் பூராவையும் துடைத்து, வியர்வை உப்புக்கோடுகளையும் அலுப்பையும் நீக்கிக் கொண்டாள்.

நீரில் நனைந்து துவட்டப்பட்ட ஈரக்கூந்தல், தோள் பட்டைகளை மறைத்து, முதுகில் வரிந்து கிடந்தது.

கமலைக் குழி பூராவும் புழுதி. ஓங்கி வளர்ந்த மரங்களின் நிழல்.

"இங்கன உக்காருவமா... ?"

"சரித்தை..."

"நீ இப்புடி கல்லுலே உக்காரு. நா கீழே உக்காரு தேன். அப்பத்தான்_ உச்சந்தலை ஒனக்குத் தெரியும்_"

கிடந்த கல்லில் உட்கார்ந்த செம்பகம். முழங்கால் மடக்கி உட்கார்ந்து, அகலித்திருந்தாள். அவளது முழங்கால் விரிப்புக்குள்

உட்கார்ந்த காமாட்சி. அவளது மடியில் பின்தலை தடவ, நெருங்கி உட்கார்கிறாள்.

செம்பகத்துக்குள் புல்லரிக்கிற திரேகச் சிலிர்ப்பு, முருகேசன் தொட்டு முகம் புதைத்த ரகசிய மடிக்குள் முருகேசனின் அம்மா. ஈரக்கூந்தலை வகிர்ந்து... இழை இழையாகப் பிரித்துப் பேன் பார்க்கிற செம்பகம்.

செம்பகத்தின் பத்து விரல்களின் நளின உரசல், காமாட்சியின் முடிகளுக்குள் பயணப்படுகின்றன. வெள்ளை ஈர்களையும், கரிய நிறப் பேன்களையும் தேடித்தேடி, கண்டுபிடித்து... ரெண்டு கட்டைவிரல்களின் நகங்களால் நெரித்துக் கொல்கிற செம்பகம். முழங்கால் முற்றுகைக்குள் அண்ணாந்து உட்கார்ந்திருக்கிற அத்தையின் முகச்சுருக்கங்கள்.

"பொம்பளைப் புள்ளே சொமக்காத இந்த வவுறு, இப்பத்தான் கொதிப்படங்கி... குளுருது"

"என்னத்தைச் சொல்லுதீக?"

"மடியிலே போட்டுக்கிட்டு, தலையை நீ வகிர்றப்ப... ஈரையும் பேனையும் அசிங்கம் பாக்காம நசுக்குறப்ப... ஒன்னை என்னோட வவுத்துலே பெறந்த பொண்ணாகவே நெனைப்பு வருது. அதுலே மனசு கெடந்து குளுருது."

நெகிழ்ச்சியில் கரகரக்கிற காமாட்சி குரல். கண்ணோரங்களிலிருந்து துளிர்த்து வழிகிற கண்ணீர். செம்பகத்துக்குள்ளும் பொங்கிப் பெருகி வழிகிற கருணை உணர்ச்சி.

சாயங்காலம் நெருங்குகிறது. மதியம் ரெண்டு மணியிருக்கும். உச்சிப்பொழுது மேற்கில் சரிந்து விட்டது. தகிப்பு குறையாத வெயில். குளிர்ச்சியான மரநிழல். மிக உயரத்திலே தடுக்கப்பட்ட வெயில்.

காமாட்சிக்குப் பேன் பார்க்கிற செம்பகம். அவளது மடிக்குள் கிடக்கிற அத்தை. அண்ணாந்த முகம். சில சமயம் தலை குனியச் சொல்கிற செம்பகம். பிடரிப்பகுதியில் அலையும் ஈரையும், பேனையும் வேட்டையாடுகிறாள். எங்கெங்கோ சுற்றியலைகிற பேச்சு. அங்கும் இங்குமாக அற்றலைகிற அசல் முகம் கசிகிறது. அழகேசனின்

கல்யாணம், கல்யாணச் செலவுகள்,... விருந்து நடத்தியது... சம்பந்தக்காரர்களின் பேச்சுப் பழக்க வழக்கங்கள்,.. அழகேசனை தனிக்குடித்தனம் வைத்தது.... அதற்கான செலவுகள்....என்று எங்கெங்கோ வட்டமடிக்கிற பேச்சுகள்.

காமாட்சியின் மன ரகசியக்கதவுகள் யாவும் திறந்துகொண்ட மாதிரி யிருந்தது. அங்கும் திறக்கப்படாத உள்ளறைகள் நிறைய இருந்தன. உள்ளறைகளின் இருட்டு, ஜன்னல் இடுக்குவழியே வெளியே பார்க்கிறது.

"எளைய பயலை நெனைச்சுத்தான்_ ஒரே கவலையாயிருக்கு. படுத்தாலும், கண்ணுலே ஒறக்கம் ஒட்டமாட்டேங்குது"

"எதுக்குத்தை ?"

"எடுக்காத எடுப்பெடுத்து, அவுக அய்யாவைத்தலைகுனிய வைச்சது கூட குத்தமில்லே. வீராப்பும் சவடாலும் பேசிட்டு, தனி வெவசாயம் பண்ணலாமா ? வெள்ளாமை வெளைய எம்புட்டோ நாளிருக்கு. இப்ப உழுது பாத்தி கட்டி.. வெதை மட்டுந்தான் ஊனியிருக்கான். ஆரம்பத்துலேயே ஏகப்பட்ட கடன். எல்லா எடத்துலேயும் கடன். எல்லார்கிட்டேயும் கடன். தாங்குவானா, இவன் ? இளநாத்து தலையிலே இடி எறங்குனமாதிரி பொசுங்கிப் போயிருவானோன்னு பயமாயிருக்கு_"

இவளுக்குள்ளும் இதே கவலை நினைவுகள். வருத்தத்துடன் உம் கொட்டி வருகிற செம்பகம்.

"இன்னும் வெள்ளாமை வெளைஞ்சு களம் வர்றதுக்குள்ளே_ எம்புட்டுக்கடனாகுமோ... வெள்ளாமைக்கும் மேலே கடனாயிருமே.. யாருக்கு என்ன பதில் சொல்வான் ? எந்தச்சுமையை எங்கனே, எறக்கிவைப்பான் ? இன்னும் ரெண்டு மூணு வருஷத்துலே வெள்ளாமையை விட கடன் கூடுதலா வெளைச்சிரும் போலிருக்கு. எப்படிச் சமாளிப்பானோ எதை வைச்சு சமாளிப்பானோ_"

பெத்த தாயின் கவலைகள் உற்ற தோழியின் மனக்கவலைகளாகவே துடிக்கின்றன.

"வீரமுள்ள மகராசன் கிட்டே சவடால் பேசிவீராப்பு பண்ணி, எடுக்காத எடுப்பெடுத்து... நட்டப்பட்டு தாங்கமுடியாத கடனாகி சமாளிக்க வழியறியாம_ ஒண்ணு இருக்க ஒண்ணு நெனைச்சுட்டா ?

அய்யாகிட்டே விட்ட சவால்லே தோத்துப்போறதை தாங்கமுடியாம.. ஏதாச்சும் கோணப்பாதையிலே கோழை மனசு போய்ட்டா ?"

திகிலும், கவலையுமாக அந்தத்தாய் மனசின் கவலையில், இவள் உயிர் துடிக்கிறது. நெஞ்சுகிடந்து பதைக்கிறது.

தனது இளையவன் தற்கொலை செய்துகொள்வானோ என்ற யூகத்திலேயே திகிலடைகிற இருமனசுகள். கதி கலங்குகிற உயிர்களின் பதைப்பு.

"உங்க மாமா (பரமசிவம்) வழியிலே தூரத்துச் சொந்தம். ரொம்ப வசதியான குடும்பம். செழிச்சசொத்து. ரெண்டு மூணு வீடுக. நகைநட்டுக. பேங்க்லே ரொம்ப இருப்பு. லட்சாதிபதி குடும்பம் ஒரே பொண்ணு. ஈஸ்வரின்னு பேரு. இளையவனுக்குப் பொண்ணு தாரேன்னு வலிய வர்றாக. இந்த மாலை பூத்துட்டா.. இளையவன் மீண்டுருவான்"

இவளுக்குள் விழுகிற அரிவாள் வெட்டு. உயிரின் வேர்வரை அறுக்கிற வார்த்தைகள். அவள் விரல்களில் வியர்வை. திரேகம் முழுதும் பரவுகிற நடுக்கம்.

"இளையவனோ எளவட்டப்பய. அய்யாவைஎதுத்துப் பேசுறபய. அவன் மனசுலே ஏதாச்சும் சிறுக்கி, கொக்கி போட்டுருக்காளோ, என்னவோ ? யாருகண்டது ?"

இவளுக்குள் நாகப்பாம்பு ஊர்ந்து சுற்றி வளைப்பதுபோன்றதோர் அச்சப்பதற்றம்.

"யார் சொல்லையும் கேக்காதபய. அவன் அழியாம வளரணும்னுனா.. வாழணும்னா.. அவன் மனசுலே கொக்கி போட்டுருக்குற சிறுக்கி.. விட்டு வெலகணும். வெலகுவாளா ? அதெப்படி வெலகுவாள் ? கூத்துவன் என்ன என்ன கூத்து கட்டி இருக்கானோ ? நெனைச்சா நெஞ்சு நடுங்குது."

காமாட்சியின் கண்ணீர்க்குரலின் வெப்பம், அவள் உயிரைத் தகிக்கிறது. காமாட்சி குரலே செம்பகத்தின் வாழ்வின் கூத்துவனாக நின்று, ஆட்டம் போட்டது.

46

முருகேசனின் கால்கள் கெந்திக்கெந்தி நடக்கின்றன. பாலையா நாயக்கர் புஞ்சையை நோக்கி நடக்கிறான். விபத்துக்குப்பிறகு இன்னும் இயல்பு நிலை வரவில்லை, காயமெல்லாம் ஆறிவிட்டது. மாத்திரை ஐட்டங்களும் நின்றுவிட்டது.

ஆனாலும், பழைய மாதிரி ஆக முடியவில்லை. இயல்பாக நடக்க முடியவில்லை. இடது முழங்கால் மூட்டில் ஏதோ வலி. நீரிழிவு நோயின் அயற்சி வேறு.

எதிரே தட்டுப்படுகிற உள்ளூர்க்காரர்கள்.

"என்ன ..இன்னைக்குத்தான் வெளியேற முடிஞ்சதா ?"

"ஆமா-"

"ஒடம்புதேவலியா ?"

"முந்திக்கு இப்ப பரவாலே"

"கெந்திக்கெந்தித்தான் நடக்க முடியுதோ ?"

"இன்னும் நாலு நாளைக்கு. அப்புறம் தன்னடைவந்துரும்"

தனக்குள் இல்லாத நம்பிக்கையைச் சொல்லிச் சமாளிக்கிறான்.

"ஹூம் படவேண்டிய நேரம் இருந்திருக்கு. பட்டு அழுந்துதே-"

குரலில் அனுதாபத்தையும் பரிவையும் காட்டிவிட்டு பெருமூச்சும் சூள் கொட்டலுமாகப் போகிறார்கள்.

இவனுக்குள் இந்த அனுதாபமும் பரிவும் ஆறுதல்லாக இருந்தாலும் உள்பலத்தைக் கரைக்கிறது. ஐயோ பாவம் என்ற தொனியிலான அனுதாபம், ஆழ்மனசைப் பலவீனப்படுத்தும். அவனே நம்பிக்கை சரிந்து கிடக்கிறான்.

விபத்தும் அதன் அதிர்ச்சியும் இன்னும் விலகவில்லை. கருத்த பழைய முள் புதருக்குள் தான் கிடந்த அலங்கோலம். ரோட்டின் இடதுபுறக்கிடங்கிலுள்ள சீமைக் கருவேலமரத்துக்கடியில் கிடந்த முள் புதருக்குள் இவன் நொறுங்கித் துவண்டு கிடந்த பரிதாபம். முதுகெல்லாம் முள் குத்தல். கன்னம், தோள்பட்டை யெல்லாம் முள் கிழித்த ரத்தக்கோடுகள். ரத்தம் பார்த்த அதிர்ச்சியில் கண்ணைக்கட்டிக்கொண்டு வந்துவிட்டது. கரியமுள் மட்டுமல்ல. சீமைக்கருவேலமரமும் கருத்தது. வெயிலும், சாலையும் வெளியும் கருத்தது. இருட்டு புதைசேற்றுக்குள் இறங்கிக்கொண்டே போவதான உணர்வின் மங்கல்.

அந்தக் கருப்பின் இருட்டு விலகியது,ஆஸ்பத்திரியில் தான்.

வண்டிப்பாதைவழியாக நடக்கிற முருகேசன் கொஞ்சம் தூரம். சாமி நாதபுரம்போகிற மெட்டல் ரோட்டில் போய்... விலகி.. ஒற்றையடிப்பாதையில் நடந்து, ரெண்டு ஓடைகள் இறங்கி ஏறி, வண்டிப்பாதையின் நடுவில் நாடாவைப்போல நீண்டுபோகிற ஒற்றையடிப்பாதையில் நடந்துபோனால், பாலையா நாயக்கர் புஞ்சை.

புஞ்சைப் பொழியில் நின்றான். நீளத்தோகையை இழுத்துக்கொண்டு போகிற மயில். கட்டைவாலோடு ஒட்டி நடக்கிற பெண்மயில். மஞ்சுணத்திமரத்தில் கருப்பும் செவலையுமான செம்போத்து. அதன் கூவலின் நீள நிதானத்தில் ஒருசோகம் வந்து நெஞ்சில் அறைகிறது. இளநீலநிறப்பனங்காடை கர்ணகடூரமான குரலில் வீறிட்டுக் கொண்டு விருட்டென்று பறக்கின்றன. மேலே வரிசைதப்பாமல் பறக்கிற வெண்ணிறக் கொக்குகள். அறுத்து வீசியெறிந்த முத்துமாலை போலிருந்த கொக்கின் வரிசை.

காலை வெயிலில் உயிர்ப்பும் உற்சாகமுமாகப் பறவைகள். உணவும் வாழ்வும் தேடியலைகிற தினப்பயணம் காலையில் குடித்த

டீயுடன் வந்திருக்கிற இவன். கைலியை மடித்துக் கட்டியிருக்கிறான். அரைக்கை சட்டை மடிப்பு குலையாம நேர்த்தியில், சோப்பு போட்டு கழுவித்துடைத்த முகத்தில் அப்பிப் பரத்தியிருந்த பவுடரை வியர்வைக்கசவு இழுத்துச்செல்கிறது.

பருத்திச்செடி முழங்கால் உயரத்தில் கட்டை குட்டையாக நிற்கின்றன. சரியான வளர்த்தியில்லை. இருக்கும் இலைகளும் செவட்டை விழுந்து பழுத்து நிற்கின்றன. பாத்திமுழுக்க புதராக மண்டிக்கிடக்கிற களைகள். மண்தெரியாமல் பந்தல் போட்ட மாதிரி கொழைமோதிக்கிடக்கிற சாரணத்தி.

இந்தச்சாரணத்தி இந்தக் காட்டுக்களையல்ல. காம்ப்ளக்ஸ் உப்பின் கலப்படமாக வந்த அயல் நாட்டுக் களை.

ஐயா கால் பட்டவரை இந்தப்புஞ்சையில் சாரணத்தி பிறப்பே கிடையாது. காம்பளக்ஸ் டி.ஏ.பி.உரமூடைகளும் எட்டிப்பார்த்ததும் கிடையாது.

இவன் கையில் வந்த முதல் வருஷமே டக்கர் உழவுதான். டி.ஏ.பி உரமூடைகள் தான். யோகேந்திரன் டக்கரில் வந்திறங்கிய மூடைகளை அவிழ்ப்பது மட்டும் தான் முருகேசன். பெட்டிகளில் அள்ளுவது, உழுதபுழுதியில் விதைப்பது எல்லாம் கூலியாட்கள். விரல் நகத்தில் மண் படியாத விவசாயமுறை.

"உரம் போட்டால் பயிர் வளரும்" என்பது எல்லாரும் அறிந்த விஞ்ஞானம். சாரணத்தி என்றொரு ராட்சஸக்களை முளைக்கும், என்பது யாரும் கணக்கில் எடுத்துக்கொள்ளாத நிஜம்.

கால்வைத்தால் மண்படவில்லை. மெத்தை மாதிரி களையும் சாரணத்திக்கொழையும் பசலிக்கீரையும் கிடக்கின்றன. நடுத்தாரில் மக்காச்சோளம்.

அதுவும் ஜீவன் செத்துக் கிடக்கிறது. களைவெட்டி, யூரியா உப்பு போட்டு விதைத்து, தண்ணீர் பாய்ந்திருந்தால் கரும்பச்சையாக மொறுமொறுவென்று வளர்ந்திருக்கும்.

வெளிர்ப்பச்சையில் விறைத்துப் போய்நிற்கிற சோளப்பயிர்கள். சவலைப்பிள்ளை போல வாடிக்கிடக்கின்றன. உயிர் வற்றிக்கிடந்தன. அங்கும் மண்மறைக்கிற அடர்த்தியில் களை. சாரணத்திக்களை.

ஆஸ்பத்திரியிலும் மருந்து மாத்திரையிலும் நாளையும் காசையும் கரைத்துக்கொண்டிருந்த சமயத்தில் புஞ்சைமுழுக்க களை மோதிக்கிடக்கின்றன. யூரியா விதைத்து நீர்பாயாததால் வளர்ச்சியில்லை. மிளகாய்ச்செடிகளிலும் சுருட்டையும் செவட்டையும் அடித்துக்கிடக்கிற கொடுமை.

டி.ஏ.பியும், யூரியாவும் பொட்டாஷும் கலந்து,,, களைவெட்டப்பட்ட பயிருக்குள் அள்ளி விதைத்து, தண்ணீர் பாய்ச்சியிருந்தால்.... ஏதோ கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது உயிர்பிடித்து, கண்ணை விழித்துப் பார்த்திருக்கும்.

உரமூடைகள் கடன்கேட்டுப் படையெடுத்தபோது தான்.. வந்துநின்ற சனியனாக,விபத்து.

முருகேசனுக்குள் கவலையும் விரக்தியுமாக வந்தது. அய்யாவிடம் போட்ட சவாலில் தோற்றுவிடுவோமா என்ற அச்ச நடுக்கம். தோற்றுக்கொண்டே வருகிறோம் என்ற உள் பதற்றம்.

கிணறும், பம்ப் ஷெட்டும் நடுமையத்தில்இருக்கிறது. சுற்றிலும் தோட்டங்கள் மொத்தம் ஆறுஏக்கர். சுற்றிஎறிந்தால் கண் தெறித்துப் போகும். அத்தனை பெரிய நிலப்பரப்பு. தனித்தனி பொழி.ஒரே சமுத்திரவிரிவு.

ஒவ்வொரு தாராக தனித்தனிப் பொழிகள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பயிர்கள். பருத்தி, மக்காச்சோளம், மிளகாய், கம்பு என்று தனித்தனிவெள்ளாமைகள். எல்லாம் இவன் நிர்வாகத்தில்.

இவன் கைக்கு வந்து ஆறுவருஷமாகிவிட்டது. ஆறுவருஷத்தில் விளைந்த விளைச்சல் அதிகம். ஆனால், மிஞ்சிய தெல்லாம் கடன்கள் தாம்.

முதல்வருஷம், விவசாயத்தில் கால் வைத்தவுடன் வாங்கிய முதல்கடன் சொஸைட்டிக்கடன் தான். அந்தக்கடன் வாங்கிய அனுபவத்தை நினைத்துப்பார்த்தான்.

பத்தொன்று அடங்கல், வாரிசுச் சான்றிதழ்கள் வாங்குவதற்குள் இவன்பட்ட பாடுகள். அவமான அவஸ்தைகள் அலைச்சல். சீரழிவுகள்.

இருபதாயிர ரூபாய்கடன் அன்றைக்குத்தான் லோன்பட்டுவாடா. ஆலங்குளம் வங்கிக்கு வரணும் என்று சொல்லிவிட்டார்கள்.

வாடகைச் சைக்கிளில் "லொக், லொக்" கென்று சைக்கிள் மிதித்துச் சீரழிந்தான். வியர்த்துக் கொட்டியது. இவனது டிப்-டாப் அலங்காரத்தையெல்லாம் சைக்கிள் மிதியும் வெயில் வியர்வையும் அலங்கோலமாக்கி விட்டது.

பெடல் சுழல மறுக்கிறது. பெடல் தடி "டொடக், டொடக்" கென்று நொண்டியடித்தது. செயின் கவரில் செயின் உரசுகிற "கொரட், கொரட்" டென்ற சத்தம். முக்கித்தக்கி மிதிக்கிற முருகேசன் உயிர் போகிற உடலவஸ்தை.

ஆலங்குளம் இவன் போகிற போது... மணி பத்து. மேனேஜர் வருவதற்கும் பதினோரு மணியாகிவிட்டது. பல ஊர்களிலிருந்து லோன் வாங்க வந்திருந்த விவசாயிகள்.. வெள்ளையும் சொள்ளையுமாக கொத்து கொத்தாக அலைந்தார்கள். பெருங்கூட்டம். எல்லாருக்கும் ஏகமான தாகம். தவிப்பு. வரிசையில் நின்று, இவன் பெயர் வாசிக்கப்பட்டபோது மணிநாலாகிவிட்டது.

மேனேஜர் முன் பேரேடும் பணிவுமாக நின்ற செயலாளர் கண்ணன்.

"நம்பர் என்னய்யா ?"

சொல்கிற கண்ணன்

"பேரென்ன ?"

"முருகேசன்..சார்"

"அய்யா பேரு பரமசிவமா ?"

"ஆமாசார்_"

"லோன் எவ்வளவு ?"

"டொண்ட்டி தவுசண்ட் சார்"

"பங்குத்தொகை எவ்வளவு பிடிக்கணும்? உரம் பூச்சி மருந்துக்கு எவ்வளவு பிடிக்கணும்? இதையெல்லாம் டோட்டல் பண்ணியாச்சா?

"பண்ணியாச்சு சார்"

"நீங்க எவ்வளவு வட்டிக்கு ரூவாவாங்கித் தந்தீக?"

"ஐயாயிரம் சார்"

"அதையும் பிடிச்சுக்கோங்க.. அதுபோக எவ்வளவு ரூபாவருது?"

"எட்டாயிரத்து நானூற்றி முப்பத்தேழு ரூபாய் சார்"

அவர்கள் பேசப்பேச இவனுக்குள் புளியைக் கரைத்தது. மனசுமுழுக்க வறண்டு கிடந்தது. பயத்தில் உலர்ந்து போன முகம்.

பேரேட்டில் பில்புக்கில் பங்குத்தொகை ரசீதில் அத்தனையிலும் நீட்டிய இடமெல்லாம் கையெழுத்துப் போட்டுவிட்டு வெறும் எட்டாயிரத்துடன் வெளியே வருகிறபோது இவன்பெயரில் இருபதாயிரம் கடன். இன்றுமுதல் வட்டியும் வட்டியோடு தவணையும் தவறிய வட்டி என்ற பெருங்குட்டியுமாக தவணைக் கடன் தொகை பல்கிப்பெருகித் தடிக்கப் போகிறது.

எட்டாயிரத்துடன் வந்தவனை ஊரில் சுற்றி வளைத்துக் கொண்ட கடன்காரர்கள்.

டக்கர் உழவடித்த யோகேந்திரன், பாத்திகட்டு செலவுக்கு கைமாற்றுதந்த ராமசாமி. உரக்கடைக்காரர். நடுவைச்செலவுக்கு பணம் தந்து உதவியவர். விதைப்பைகள் விலைக்குத்தந்த பூச்சிமருந்து கடைக்காரர் என்று எல்லோரும் வந்துமொய்க்க எட்டாயிரத்தைப் பிய்த்துப் பிய்த்து தந்தான். அப்பவும் கொடுபடாத கடன்களாக ஆறாயிரம் மிச்சம் இருந்தது. பற்றாக்குறையை சமாளிக்க வழியறியாமல் தத்தளித்தான்.

லோன் பட்டுவாடா ஆனவுடன் சென்பகத்துக்கு ஒரு சேலையும் பாவாடை சட்டைத்துணியும் எடுத்துக்கொடுக்கலாம் என்று மனப்பூந்தோட்டத்துக்குள் பூத்துக்கிடந்த கனவுகள் யாவும் தீப்பிடித்த நந்தவனமாகக் கருகிப்போயிற்று.

ஒருசைக்கிள்சொந்தமாக வாங்கலாம் என்று திட்டமிட்டிருந்தான். எல்லாவற்றிலும் மண்.

முருகேசன் நொந்து நூலாகிவிட்டான்.

மலைபோலக் கடன்சுமை. பனிபோலக் கையில் வந்த கடன்தொகை. கழுதைதேய்ந்து கட்டெறும்பாகிற கதை, இதுதானா ?

அரசு சார்ந்த கூட்டுறவு சொஸைட்டியில் வாங்குகிற கடன் வசதியில் இத்தனை நட்டங்களும் அலைச்சல்களும் அவமதிப்புகளும் ஏமாற்றங்களும் வேதனைகளும் என்றால், இதுவே தனியார்களிடம் கந்துவட்டிக் கடன் வாங்கினால் என்னாகும் ?

முருகேசனுக்கு வயிறு பசியெடுக்கிறது. ஈஸ்வரி தேடுவாள். போகவேண்டும். வண்டிப்பாதையில் இறங்கினான். ரப்பர் செருப்பு "டபக் டபக்" கென்று லயமாக சத்தமிடுகிறது.

47

விடியற்காலம் இன்னும் வரவில்லை. வைகறையே தோன்றவில்லை. நடுச்சாமம் கடந்து மூன்று மணியாகியிருக்கும்.

அந்நேரம் திடுதிப்பெனக் கண்விழித்த பரமசிவம் தடபுடவென்று அவசரமாய் எழுந்தார். வாயில்ஊறிய எச்சில் கெட்ட ருசியாக இருந்தது. கதவைத்திறந்து வெளியே வந்து துப்பியவர் அண்ணாந்து பார்த்தார். வெள்ளிபூத்துக்கிடந்தது. விடிவெள்ளியில் நேர நிர்ணயம் செய்துகொண்டஅவர்... தொழுவத்திற்கு வந்தார். படுத்து அசைபோட்டுக்கொண்டிருந்த மாடுகளைச் சத்தமிட்டு எழுப்பினார்.

"ஆய்ய்க்...ஆய்ய்க் ஹே..ஆய்ய்க்" அசைபோடுவதை நிறுத்திவிட்டு "தட்டக்க புட்டக்க" வென்று எழுந்த மாடுகள். காதுகளை விடைத்தன. சாணமூத்திரக் கரைசலில் நனைந்த வாலைச் சுழற்றின.

பரமசிவத்தைக்கண்டதும் மாடுகளும் வேலைக்குத் தயாராகிவிட்டன. அவிழ்த்தார். பட்டரைவார் கடையாணிக் குச்சிகளை எடுத்து தோளில் போட்டார். மாடுகள் நேராக வண்டிக்குப் போய் நின்றன.

வண்டி, ராத்திரியே ரெடியாகியிருந்தது. காடி கட்டிய நிலையில் நின்ற வண்டிக்குள் கூடையும் மம்மட்டியும்.

மாட்டை முகக்காலில் மாட்டி, இவரும் சட்டத்தில் ஏறி உட்கார்ந்தார். மாடுகள் இழுத்த இழுப்பில், வண்டி உருளத் துவங்கியது.

வண்டிச்சட்டத்தில் இருபக்கமும் காலைத் தொங்கப் போட்டிருந்தார். மாடுகளின் அடிவயிறுகளில் அவரது பாதங்கள் உரசி, வருடி சிறுதட்டு தட்டாகச் செல்லத்தட்டு தட்ட மாடுகள், துள்ளலோடு நடைபோட்டன. ஊரைக்கடந்து.. ஆற்றுமணலுக்குள் வண்டிச் சக்கரங்கள் புதைந்து உருளும்போது "கர்ர்ரங்ங் கர்ர்ரங்ங்" கென்றுமணல் அரைபடுகிற சத்த சங்கீதம்.

மாட்டுச் சலங்கைகளின் கலீர் கலீரென்ற சத்தத்தில் பனந்தோப்பு மயில்கள் கத்தி வீறிட்டன. சிறுசிறுமுயல்கள் விருட் விருட்டென்று குதித்தோடி மறைகின்றனசெடிகளுக்குள்.

வலையப்பட்டியைக் கடந்து வடக்குநோக்கிப் போய்_ கிழக்காக விலகி கரிசல் காட்டு வண்டிப்பாதையில் மாடுகள் நடந்தன. இவர் ஒன்றும் மூக்கணாங்கயிறுகளைப் பிடிக்கவில்லை. சுண்டி இழுத்துவழிநடத்தவுமில்லை. அதுகளாகவே போகின்றன.

மாடுகளுக்குத் தெரியும்.இந்நேரம் பரமசிவம் வண்டியில் மாட்டினால் கண்மாயின் உள்வாய்க்குள் மண்ணள்ளத்தான் என்று.

கண்மாய் முழுக்க தண்ணீர் கட்டிக்கிடந்து சமுத்திரமாக அலையடிக்கிற கார்த்திகை மாதங்களில் போகமாட்டார் தண்ணீரெல்லாம் வற்றி முடித்து, தை மாச அறுவடையும் கோடைக்கால வெள்ளாமையும் முடிந்த வைகாசி ஆனியில் தான் பரமசிவம் வண்டியைப் போடுவார்.

கண்மாய் முழுவதும் நீரற்ற வெறுமையில், மண்டிக்கிடந்த வண்டல் செழித்திருக்கும். வெட்டினால், கன்னங்கரேலென்று ஈரப்பதமான கரிசல்மண் பெயரும். பலகாட்டு மண். காட்டு வெள்ளத்தால் கொண்டு வரப்பட்ட மண். மாதக்கணக்கில் நீருக்குள் உரமேறிய மண். அந்த மண்ணே முழுமையான உரம்.

பல, பல வென்று பொழுது விடிவதற்குள் இரண்டாவது நடை திரும்பிவிடுவார். தினசரி ரெண்டு நடை ரெண்டு மாசத்தில் நூறு வண்டி மண்ணுக்குக் குறையாது.

கடப்பாரையில் மண்ணைக்குத்திப்பிளந்து மம்மட்டியால் வெட்டி அள்ளுவார். கூடையில் அள்ளி எறிவதுடன் நிறுத்தமாட்டார். பருத்தி மருகைக்குள் பருத்தியைக் கிட்டித்து திணிப்பது மாதிரி வண்டியில் ஏறி, இவர் மிதித்து மிதித்து கிட்டிப்பார். காடிமட்டத்துக்கு மட்டுமல்ல காடிமட்டத்துக்கும் மேலாக கோபுரங்குத்தியாக ஒரு வண்டிமண் கிட்டிக்கப்பட்டிருக்கும்.

ஆக.... ஒருநடை என்பது இரண்டு வண்டிமண்ணை ஒருவண்டியில் கொண்டுவருவது. ரெண்டு நடை என்றால் நாலுவண்டிமண். இப்படியே ரெண்டு மாசம். ஆதாளங்கொழையும் ஆவாரங்கொழையும் சாணக்கூளமும் இந்த நூறுவண்டிவண்டல் மண்ணும் வந்துவிழுந்தால்..கொழை கூளம் பூராவையும் இந்த மண் தின்று செமிக்கவைத்துவிடும். சந்தனமாய்க் குப்பை மணக்கும்.

குப்பை சேர்ப்பதில் பரமசிவம் படுகில்லாடி.

அவர் அடிக்கிற குப்பையே தனிரகம். சந்தன வாசம். மண்ணுக்கு உயிர்தரும். உரம்தரும். வாலிபம்தரும். வலிமைதரும். ஒன்றை நூறாக்குகிற அதிசயம்தரும். நூறாக்கித்தந்த பிறகும், கோடிகளைத் தருகிற உயிர்க்கருக்கள் கொண்டதாக நிலத்து மண்ணை ஆக்கும். அதுதான் இயற்கை உரத்தின் அதிசய வல்லமை. மண்ணுக்கு நிரந்தர இளமையையும் உயிர்ப்பிக்கும் ஆற்றலையும் தருகிற வல்லமை.

போட்டது முளைக்கும். நினைத்ததை விட கூடுதலாக விளையவைக்கும்.

மாடுகள் தன் போக்கில் மூச்சிரைப்போடு சுதாரிப்பாகப் போயிற்று. வருஷா வருஷம் பழகிப்போன பாதை. காலுக்குப் புரிகிற வண்டித்தடம். மாடுகள், பழக்கப்பட்ட பயணத்தில் நடையை எட்டிப்போடும். வண்டிப் பைதாவின் "கடக், தடக்" கென்று சீரான சத்தலயம்.

வண்டிச்சட்டத்தில் கால்களை நீட்டி சாய்ந்திருக்கிறார் பரமசிவம். படுத்த மாதிரியும் இல்லை. உட்கார்ந்த நிலையும் இல்லை.

அரை உறக்கத்தில் அவர் கண்கள் சொருகினாலும் சொருகிக் கொள்ளாத மனசு. விழிப்பு நிலையில் மனசு.

....அன்றைக்கு வெள்ளை வேட்டியும் வெள்ளைத்துண்டுமாக டிப்டாப்பாக இருந்தார். தார்பாய்ச்சிகட்டாமல் வேட்டியை மடித்துக் கட்டியிருந்தார்.

முருகேசனுக்குப் பெண்தர விரும்பி சண்முகம் வருகிறார்.

அவரை வரவேற்கிற மனத்தயாரிப்பில் இவர்.

மனசில் இனம்புரியாத உளைச்சல்.

முருகேசனை, முருகேசா என்று கூப்பிட்ட நாளே கிடையாது. பிறந்ததிலிருந்து இளையவன் தான்.

"ஏலேய்..எளையவனே, ஏய் காமாட்சி! எளையவன் எங்கே போயிருக்கான்? இப்படித்தான் அடையாளப்படுத்திப்பழக்கம். அதுவும் இந்த வருஷம் அற்றுப்போய்விட்டது.

"வெளங்காத பய..." "நாசமாய்ப்போற பய" லாகிவிட்டான் இவரைப்பொறுத்தவரையில்

"பெத்த கடனுக்கு சோத்தைப் போட்டுரு" என்று காமாட்சியிடம் குலைகொதிப்புடன் அன்று எறிந்த சொற்கனல்.

அதே பெத்த கடன் தான், கல்யாணம் பண்ணி வைப்பதுவும். அந்தக்கடமையைக் கழற்றிப்போடுவது தர்மமல்ல. நியாயமல்ல. அதேநேரத்தில் தன்னை ஊர் நடுவில் தலைகுனியவைத்து தீரா அவமானத்தை உயிரில் அப்பிவிட்ட இந்தத் தப்பிலிப்பயலை "என்மகன்" என்று சொல்லவும் தயாரில்லை. மனசு ஒப்பவில்லை.

"என்ன செய்ய... என்ன செய்ய...என்ன செய்ய." என்று பரிதவித்து அலைபாய்கிற மனப்பிரளயம். எதுவும் புரியாத திகைப்பில் அவர். குலதெய்வத்தை மனசுக்குள் வருவித்து வணங்கிய போது கண்களை மூடியிருந்தார்.

"ஐயா... எங்கதெய்வமே.. என் நாவுலே நீருதான் வந்து குடியிருக்கணும். நீருவிட்ட வழிதான்இன்னைக்கு"

அப்பவும் அடங்காத மனசு. குட்டிபோட்ட பூனையாக முக்கி முணங்கியது. பதைப்பும் பரபரப்புமாக மனசுகிடந்து அலைவுற்றுத்திரிய எதையும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல் இறுக்கமான மௌனத்தில் இருந்தார். திண்ணையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்திருந்தார்.

விருந்தாள்களைஉபசரிப்பதற்கான பதார்த்தங்கள் காப்பித் தண்ணீர் ஏற்பாடு செய்கிற பரபரப்புக்கிடையில் குளித்து, நல்ல சேலை உடுத்திக் கொண்ட காமாட்சி.

அடிக்கடி வாசலுக்கு வந்து... இவரைப்பார்த்து கண்டிப்பும் கோபமுமாகச் சீறிவிட்டுப்போகிறாள்.

"ஏய் மனுசா_ வாய்லே நல்ல வார்த்தை வரட்டும். ஏதாச்சும் மனவேக்காட்டைக் கொட்டித் தொலைச்சிராதீரும்."

"நல்ல காரியம்_நல்ல வார்த்தையே பேசும்"

"அவள் எடுத்த எடுக்காத எடுப்புக்கு ஏகப்பட்ட கடன் சுமை சேர்ந்துருக்கு. இந்த வசதியான எடம் அமைஞ்சு வந்துருக்கு. இதுமுழுசா கைகூடிவந்துமாலைபூத்துட்டா.. இளையவன் தப்பிச்சிக்கிடுவான்_ ஒண்ணுஇருக்க ஒண்ணைப்பேசி_ காரியத்தை கெடுத்துராதீரும்_"

நல்ல பச்சைச்சேலை உடுத்தியிருந்தாள். கிழவி நல்ல லட்சணமாகத்தான் இருக்கிறாள்.

அவளது சீற்றமும் கண்டிப்புமான வார்த்தைப்பாய்ச்சலுக்கு எந்தப்பதிலும் சொல்லாமல், சிலைபோல உட்கார்ந்திருந்த பரமசிவத்துக்குள் நினைவுப்பிரளயம்.

பெரிய மோட்டார் பைக் தடதடத்து வந்து நின்றது. அதிலிருந்து வெள்ளைக்கதர்சட்டை வெள்ளைவேட்டியுமாக மீசையில்லாத முகத்துடன் வந்த சண்முகம். அவர் பின்னால் உட்கார்ந்துவந்தவர்,

இறங்கி வருகிறார். முகத்தில் பணக்களை. செல்வச் சிலுசிலுப்பு சீதேவிச்சிரிப்பு.

வண்டியை ஓட்டிவந்த நடுவயதுக்காரன், வண்டியை ஓரத்தில் சாய்த்து நிறுத்திவிட்டு வண்டிச்சாவியுடன் வருகிறான்.

"வாங்க _ வாங்க"

எழுந்து இருகரம் கூப்பி வணங்குகிற பரமசிவம். அவரும் சிரித்தமுகம் ஜொலிக்க செக்கச் செவேலென்று வருகிறார். கையெடுத்துக் கும்பிடுகிறார்.

"நம்ம ஒறவு,ரொம்பக் காலமா மறைஞ்சிருந்தது. இப்பத்தான் மறுபடியும் பெறந்து வருது-"

"ஆமா-- ஆமா-அதுவுக்கும் குடுக்கல் வாங்கல்லே வருது."

"வரட்டும் .. வரட்டும் --நல்லது கைகூடிவரட்டும்."

என்கிற பரமசிவம் காமாட்சியும் ஓடிவந்து வாசலில் நின்று சிரித்த முகத்துடன் ஈரக்கையைக் கூப்பி வணங்குகிறாள். உபசரிப்பு வார்த்தைகள் பேசுகிறாள். குசலவிசாரிப்புகள் நடக்கின்றன. குடும்பநிலவரம் மழைத்தண்ணீர் நிலவரம் வெள்ளாமை விளைச்சல் விபரமெல்லாம் பேசுகின்றனர். பெண் கொடுக்க முன்வந்திருப்பதை அவர் சொன்னார்.

"உங்க பையனைப் பத்தி நீங்க என்ன சொல்லுதீக--?"

"கெட்டிக்காரன், என்னோட ரத்தம். இந்த வயசிலேயே இப்புடித்தான் வெவசாயம் செய்யணும்னு விபரம் பேசுதான். வெறும்பேச்சா.. வாய்வீச்சா போயிரலே. ஏங்கூட சண்டைபோட்டு நெலம் தனியா ஒதுக்கச்சொல்லி அதுலே வெவசாயம் செய்ஞ்சுகாட்டுதான் அப்பேர்ப்பட்ட வீரமனசு."

"அதெல்லாம்.. தெரிஞ்சுதானே... பொண்ணு குடுக்க தயாரானோம்?"

"அப்பச்சரி நல்லதாய்ப் போச்சு. பொண்ணை குடுங்க. நல்லபடியா சீரும் செறப்புமா வாழட்டும். வாழ்வாக. அதுலே ஒருசின்ன வார்த்தை.

"சொல்லுங்க_"

"நிலம் கேட்டு வெவகாரம் பண்ணுனதுலே எங்களுக்குள்ளே சின்ன மனஸ்தாபம். பேச்சு வார்த்தையில்லே. நா..கல்யாணத்துலே கலந்துகிடமாட்டேன். காமாட்சி வருவா."

"அதெப்படி_? அய்யா இல்லாமலா ?"

"நா ஒருயோசனை சொல்லுதேன்_ தடபுடலா செய்யாம_ ஒரு கோவில்லே, லேசுமாசான மொறையிலே தாலியைக் கட்டலாம். அப்புடி நடந்தா_ நா கலந்துகிடாத்து பெருசா..யாருக்கும் தெரியாது.

காமாட்சியின் கையில் நடுக்கம். உயிரையே உதட்டில் கொண்டு வந்துநிறுத்தி தவித்துக்கொண்டிருந்தாள்.

"அய்யா இல்லாம மகனுக்குக்கல்யாணமா ? ஊர் என்ன சொல்லும் ? நீங்க கொஞ்சம் மனசு எறங்கணும், எறங்கிவரணும்"

"நா எறங்கமாட்டேன், வைராக்கிய கட்டை. கோவில்லே சொந்தபந்தங்கள்லே ரொம்ப நெருக்கமானவங்களைமட்டும் கூப்புட்டு வைச்சு.. கல்யாணத்தை நடத்துங்க.. கல்யாணமும் நல்லபடியா நடக்கும், கௌரவமும் காப்பாத்தப்படும்."

"உங்கஆசிர்வாதம் வேண்டாமா ?"

"பெத்த தகப்பன் ஆசிர்வாதம் புள்ளைக்கு எப்பவும் உண்டு. கொறை ஒண்ணும் அதுலே இராது"

சண்முகமும் நிறையப்பேசினார். இங்கிதமாகப் பலவிதங்களில் பேசிப்பேசி பரமசிவத்தைக் கரைக்கப்பார்த்தார். கரையாத கற்சிலையாக நின்று நிலைத்துவிட்ட பரமசிவம்.

நல்ல மாப்பிள்ளையை இழக்க விரும்பாத சண்முகம்.. கடைசியில்... பரமசிவம் சொன்னபடியே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

செய்யவும் செய்தார்கள். மனசால் ஆசீர்வாதம் செய்ததுடன் சரி... கல்யாணத்துக்கும் போகவில்லை. திருநீறு பூசவுமில்லை.

வண்டி கண்மாய்க்குள் நுழைய இறுகிக்கிடந்த வண்டல் மண்ணைக் குத்திப்பிளக்க, வெட்டியள்ள இறங்கிவிட்டார், பரமசிவம்.

48

மறுவீடு போயிருக்கிறான் முருகேசன். உள்ளூர்சக்தி மாரியம்மன் கோவிலில் வைத்து எளிமையான முறையில் நடந்த கல்யாணம். நெருக்கமான உறவினர்கள் மட்டும்தான். அதிலும் ஈஸ்வரி வீட்டாட்கள் தாம் அதிகம். பெண் வீட்டிலும் பெண் ஊரிலும் தான் நடக்க வேண்டிய கல்யாணம். அதுதான் குல வழிமுறை.

முருகேசனின் வற்புறுத்தலால் தான்... மாப்பிள்ளை ஊர்கோவிலில் கல்யாண வைபவம். சண்முகம் சம்மதிக்க மறுத்தார். முடியவே முடியாது என்று கோபப்பட்டார்.

"இது எங்க கௌரவப்பிரச்னை. இதுலே வுட்டுக்குடுக்க முடியவே முடியாது." என்று ரொம்ப தாட்டியமாகச் சொன்னார். தங்கு புங் கென்று ஆகாயத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தார்.

பொண்ணைக் கொண்ணாந்து வலியமாப்புள்ளே வீட்லே போட்டமாதிரி இது. எங்கபொண்ணு காலு குத்தமா, கைஒச்சமா ? இல்லே கொணத்துலே கொறையா ? குலஒழுக்கத்துலே கொறையா ? பெறகென்னத்துக்கு எங்க புள்ளையைக் கூட்டியாந்து வுடணும் ?"

"இல்லே. நீங்ககொஞ்சம் பொறுத்துப்போகணும். என் நெலைம அப்படி."

"நீங்க எங்க ஊரு வந்து_ பரிசம் போட்டு, பூ வைச்சு, நிச்சயம் பண்ணி.. தாலிகட்டி கூட்டியாரணும், அதுதான் பொண்ணுக்கு மதிப்பு. மரியாதை."

அதையெல்லாம் மறுக்காமல் ஒப்புக்கொள்கிற முருகேசன்நீங்க சொல்றது ஞாயந்தான். வாஸ்தவம் தான் என்று கருத்துரீதியாக ஒப்புக்கொண்டுவிட்டு, ஆனாலும் என்று இழுத்தான்.

கெஞ்சிக் கூத்தாடினான். மன்றாடிமருகினான். அடம் பிடிக்காமல் நிஜத்தை ஒப்புக்கொண்டு நிலைமையை விளக்கி கெஞ்சிக்கேட்கிற முருகேசனின் கண்ணியம் பிடித்திருந்தது. சண்முகத்துக்கு. இந்த நேர்மை மிகப்பெரிய பண்பு. சண்முகம் யோசித்தார். நிதானமாக யோசித்தார். சற்றே இறங்கிவந்தார்.

இவ்வளவு முயற்சித்து மல்லுக்கட்டி மன்றாடி கெஞ்சிக்கூத்தாடியது... ஒரே காரணம் தான். முருகேசனுக்கு.

அய்யாவைக் கலந்துகொள்ள வைக்கணும். அவரது கையால் திருநீறு பூசணும். நீ நல்லாயிருப்பா என்று அவர் சொல்லணும் அதுதான் ஒரே காரணம்.

உள்ளூரில் பதினைந்து வீடுகள் தள்ளியிருக்கிற கோவிலில் பெற்ற மகனின் திருமுணம் நடக்கிறபோது ஒருதகப்பனால் வராமல் இருந்துவிடமுடியுமா ? அருஞ்சொனை மாமா போன்ற நல்ல மனிதர்கள் அய்யாவை வற்புறுத்தமாட்டார்களா ? நல்லதை எடுத்துச் சொல்லமாட்டார்களா ? நச்சரித்து ஒப்புக்கொள்ள வைக்க மாட்டார்களா ? அய்யாவை வலுக்கட்டாயமாக தள்ளிக்கொண்டு வந்துவிடமாட்டார்களா ?

மனசார நம்பினான்முருகேசன். அய்யா வைரம் பாய்ந்த மனசு. வைராக்கியமாக மறுத்துவிட்டார். கடைசிவரைக்கும் வரவேயில்லை.

இவனும் கோவில் வாசலில் நின்று, வழியை வழியைப் பார்த்தான். ஆவலும் பிரார்த்தனையுமாகக் காத்துக் கிடந்தான்.

"அம்மா தாயே சக்திமாரியம்மா... அய்யா மனசை கரைச்சிரும்மா.. அய்யாவை கொண்ணாந்து நிறுத்திரும்மா"

ஆயிரந்தடவைகள் பிரார்த்தித்து முணுமுணுத்தான்.

காமாட்சிதான் அவனைப்பற்றி இழுத்துக்கொண்டு போனாள். "அவரோட கொணம் எனக்குத்தெரியும். அவரு வரமாட்டாருடா. நெனைக்கமாட்டாரு.நெனைச்சுட்ட அதைச்சாதிக்காம ஓயமாட்டாரு. அந்த வைராக்யம் தான் அவரு.."

"வாடா.. நீ உள்ளே வந்து தாலியைக் கட்டு. முகூர்த்த நேரம் தப்பிரக் கூடாதுப்பா.."

அம்மாவின் இழுப்பில் அரைமனசாக நகர்கிறமுருகேசன். கோவிலில் பூஜை நடந்துகொண்டிருந்தது. பூசாரிமாதையன் இடுப்பில் மஞ்சள் துண்டுகட்டியிருந்தான். பட்டைபட்டையாக நெற்றியிலும் எல்லா மூட்டுகளிலும் திருநீறு தீட்டியிருந்தான். உறவினர்களின் உல்லாசக் கூச்சல். உற்சாகப் பேச்சுகள். கேலிகளும், கிண்டல்களும் வெடிச்சிரிப்புகளும் சங்கிலிச்சிரிப்புகளும் கலகலத்துக் கிடந்தது. எல்லார் முகத்திலும் கோலாகலப் புன்னகையின் பூக்கோலம். குதூகலக் கூத்தாட்டங்கள். சிறுசுகளின் ஓட்டமும், ஆட்டமுமாய்க் கும்மாளக் குதியாட்டங்கள்.

மாலையும் கழுத்துமாய் மெரூன்கலர் பட்டுச்சேலையுமாக நிற்கிற ஈஸ்வரி. செக்கச் செவேலெனஇருந்தாள். சந்தனத்தை குழைத்துச் செய்து வைத்த சிற்பமாக இருந்தாள். ஒடிசலான உடம்பு. ஒடிசல் தெரியாத கட்டை மண்வாசனை ரேவதி மாதிரி லட்சணமாக ஜொலித்தாள்.

ஆனாலும், இவனுக்குள் சரேலெனக் கண்ணாடிச் சில்லால் அறுத்த மாதிரியோர் ரணவலி. கன்னங்கரேலென்று இருந்தாலும் சற்றே சதைப்பிடிப்புடன் .. இடுப்பு சிறுத்து மேலும் கீழும் பெருத்து குத்துரல்மாதிரி உடுக்கை மாதிரியிருக்கிற செண்பகத்தின் நினைவுக்கத்தி.

அவனுக்குள் உயிர்போய் திரும்புகிறமாதிரியான ஒரு வலித்தவிப்பு. செண்பகம் இல்லாத திருமணமா? வேறொருத்தி கழுத்தில் தாலிகட்டவா? இடிகிணற்றுக்குள் இணங்கி மலர்ந்த செம்பகத்துக்கு, இழுத்த இழுப்புக் கெல்லாம் ஈடுகொடுத்து அந்த இஷ்டதெய்வத்துக்குத் துரோகம் பண்ணுவதா? அவளை விட்டுவிட்டு வேறொருத்தியுடன் வாழ்வதா?

"நீங்க சம்மதிச்சு தாலிகட்டலேன்னா ஏங்கட்டை சுடுகாட்டுலே சாம்பலாயிரும்" அவளது மிரட்டல். அந்த உயிரின் அச்சுறுத்தல். அந்த ஆன்மாவின் கட்டளை. அதிகாரக்கட்டளை.

தாலிகட்டினான். குலவைச்சத்தமும் கோவில் மணியோசையும் காற்றில் கலந்து சங்கமித்து மங்களகர உணர்வை ஊரெல்லாம் பரப்பியது.

காமாட்சி.. தட்டைமுதலில் வாங்கி.. திருநீறு எடுத்து மகன் தலையில் போட்டு நெற்றியில் பூசினாள். அவள் கையில் நடுக்கம். மனசின் பரவசப்பெருக்கின் ததும்பல்.

" மகராசனா.. எல்லா வளமும் பெத்து, நல்லாயிருக்கணுமய்யா.. இளையவனே"

மறுபடியும் திருநீறையள்ளித் தலையில் தூவி நெற்றியில் பூசினாள். இது உங்கய்யா துருநீறு.. அவருமனசு ஒன்னை வாழ்த்தும். என்ன இருந்தாலும் ரத்தப்பொறப்பில்லையா ? அப்பன்புள்ளை ஒறவு எப்பவும் கொப்பும் கொழையுமா தளிர்க்கும் டா.. நீ சீமானா வாழ்வே.."

அப்புறம்தான் ஈஸ்வரி பக்கம் திரும்பினாள். அவள் கண்ணெல்லாம் நீர்த்ததும்பல். நீர்க்கண்ணாடி வழியாக மருமகளைப் பார்த்தாள். அவள் முகமெல்லாம் பூமலர்ச்சி. மனக்குழைவின் மிருது.

"நீ மகராசியா.. நல்லாயிரும்மா"

சண்முகம் பக்கத்தில் நின்றார். சுற்றிலும் சுற்றத்தார் எல்லார் முகத்திலும் கல்யாணப்பூரிப்பு. களையிழந்த முகத்துடன் முருகேசன் மட்டும்.அய்யா வரலே, இவனோட உசுரு வரலே. உசுருலே உசுராக ஒண்ணான செம்பகம் வரலே.."

மாப்பிள்ளையின் முகம் குறாவிப் போயிருந்ததை வாடித்துவண்டு களையற்றிருப்பதை எல்லாருமே கவனித்தார்கள். அவர்களாக நினைத்துக் கொண்டார்கள்.

"அய்யா..வரலேன்னா கல்யாண மாப்புள்ளே கலங்க மாட்டாரா ? அலையடிச்சு அலை ஒடையுமா, தண்ணிவெலகுமா ? அய்'யா புள்ளை ஒறவும் அப்படித்தான் காலப்போக்குலே ஒட்டிக்கிடும்"

ஈஸ்வரிவீடு வந்தாகிவிட்டது. மறுவீடு என்பது முருகேசன்வீடு. அங்கேபோய் சற்று இருந்து வாழைப்பழமும் பாலும்

அருந்தி விருந்து உண்டுவிட்டு. பெண்வீட்டுக்கு ரவைக்குள் திரும்பி வந்துவிடவேண்டும். இங்குதான் சாந்திமுகூர்த்தம்.

எல்லாமே தலைகீழ். வழிமுறையும் இல்லை. ஒரு மண்ணுமில்லை. பந்தல் இல்லை. மேளதாளம் இல்லை. மைக்செட் இல்லை. மங்கள வாத்தியமில்லை. கோலாகலமில்லை. கொண்டாட்டமில்லை. ஊர்ப்பந்தி இல்லை. உறவு முறை படையெடுப்பு இல்லை எதுவுமில்லாத தாலிகட்டு.

அய்யா இல்லாததால் வந்த கோலம். அய்யாவை எப்படியாச்சும் கலந்துகொள்ள வைக்கவேண்டும், என்பதற்காக கல்யாண இடம் மாற எல்லாமே தலைகீழ்.

ஈஸ்வரி ஊரில் நடக்க வேண்டிய கல்யாணம் முருகேசன் ஊரில். முருகேசன் வீட்டுக்கு மறுவீடு செல்ல வேண்டியது. ஈஸ்வரி வீட்டுக்கு மறுவீடு. நல்ல கூத்து.

சோக அவலத்தை நினைத்துச் சிரித்துக்கொண்டான். இயற்கை விவசாயத்தை எதிர்த்ததற்கான விலை. விஞ்ஞான ரீதியான புதுவகை விவசாயத்துக்காகப் போராடியதற்கான வலி.

தேவையா, இதெல்லாம். பேசாமல் அண்ணனைப்போல, அடங்கின பிள்ளையாக நடந்திருக்கலாமோ? பிடிக்குதோ, இல்லையோ தளபதி சொல்லுக்குக் கட்டுப்படுகிற படை வீரனைப் போலக் குடும்பத்தலைவர் அய்யா சொற்படி அடங்கிப் போயிருக்கலாமோ_?

அந்தத் திசைமாற்றத்தால், மொத்த வாழ்க்கைப்பயணமும் குளறுபடியாகிறதே...

ஈஸ்வரி அய்யாவுக்கு இந்தக் குளறுபடி தான் ப்ளஸ்பாயிண்டாகத் தெரிகிறது. புதிதாகச் சிந்திக்கிறார். சுயமாகச் சிந்திக்கிறார். சிந்தனைக்கு உண்மையாகச் செயல்படுகிறார். செயல்பாட்டில் வருகிற சிரமங்களைத் தாங்குகிறார். மனவலிமையோடு அதைக்கடக்க முயற்சிக்கிறார் என்று இவனை

எடைபோட்டு நூற்றுக்கு நூறுமார்க்போட்டிருக்கிற சண்முகம். நல்லவேடிக்கை.

"வாங்க சாப்புட வாங்க_"

எழுந்தான். கைகால் கழுவினான்.மடித்துப்போட்ட பாயில் உட்கார்ந்தான். அதிரசம், ஜிலேபி, உளுந்துவடை, நெல்லுச்சோறு கறிக்குழம்பு, கறிவருவல், அவித்தமுட்டை இரும்புக்கரண்டியில் அடை ஊற்றிய ஆம்லேட்

எல்லாவற்றையும் பரிமாறுகிற ஈஸ்வரி பட்டுச்சேலையின் இளநீலநிறமின்னல். கையில் தங்கவளையல்களின் சங்கீதச்சத்தம். முழுசாக உட்காராமல் வலது முழங்கால் மடித்து, இடது முழங்காலை கூடுதலாக மடித்து உட்கார்ந்தும் உட்காராத ஒருநிலையில் குனிந்து குனிந்து பரிமாறுகிறாள்.

"கூசாம சாப்புடுங்க" என்கிறாள். இயல்பான உபசரிப்பல்ல யாரோ கிசுகிசுத்து, வற்புறுத்திய பிறகு வருகிற உபசரிப்பு. உயிரில்லாத சொற்கள்.

எழுந்துபோய் அடுப்பங்கரைக்குப் போய் எடுத்துவந்து எடுத்துவந்து அதே அரை நிலையில் உட்கார்ந்து பரிமாறுகிறாள். ஈஸ்வரி. முகத்தை முகத்தைப் பார்க்கிறாள். கள்ளப்பார்வை கள்ளச்சிரிப்பு, கள்ளக்கண்ணடிப்பு போன்றவற்றை எதிர்பார்க்கிறாளோ? இயல்புதானே!

இவனது மனசும் உயிரும் சென்பகத்தின் முந்தானையில் இழுபடுகிறது. சத்தமில்லாமல், நிமிர்ந்து பார்க்காத குனிந்த முகத்துடன் சாப்பிடுகிறான். நுனிவிரல்களால் தொடுகிற அவனது நாசூக்கு. தொட்டும் தொடாமல் கொஞ்சமாய்ப் பிசைந்த சோற்றையள்ளி, நுனி விரல்களாலேயே, உதட்டு விளிம்பில் வைக்கிற இங்கிதம். மெல்லுவது தெரியாமல் அசைகிற கன்னப்புடைப்பு, இறங்குவது தெரியாமல், இறங்குகிற தொண்டையின் நளினம்.

மெத்தப் படித்த பெத்தாம் பெரிய ஆபீசருக்குரிய மென்நேர்த்தியோடு அவன் சாப்பிடுகிற நாகரிகத்தையும், நயப்பாங்கையும் ஒருமயக்கத்தோடு பார்க்கிற ஈஸ்வரி.

நிமிர்ந்து அவளைப் பார்க்கிறபோது. ஆம்லேட்டின் ஒருசிறிய துண்டு,அவனது நுனி நாக்கில் இருந்தது.

"நீயும் உக்காந்து கூடச் சாப்புடேன்_"

"ம்ஹூம்_ சாப்புட்டபெறவு"

"நீ கைவைக்கிற மாதிரி நா மிச்சம் போடமாட்டேன். எச்சிச்சோறுசாப்புட்டு பதிபக்தியைக் காட்டுறது எனக்குப் பிடிக்காது."

அந்தக் கணத்தில் தான், மயக்கம் தாண்டிய காதல் அவளுள் பூத்தது. அவனது ஆணிவேர் அவளுக்குள் ஊடுருவி உயிரில் கலந்தது.

அய்யா வைத்த மிச்ச தொடுகறியைக் கூடத் தொடமாட்டாள். அய்யா சாப்பிட்ட வட்டிலைக் கழுவக்கூடத் தயங்குவாள். அரைமனசோடு கழுவிவைத்துவிட்டுக் கையை முழுசாகக் கழுவிக் கொள்வாள். பிறர் எச்சில் மிச்சம் என்றாலே இவளுக்கு அருவருப்பு. அசூயை. அடிமனசில் புல்லரிக்கும்.

எல்லோரும் வற்புறுத்தி அதட்டி மிரட்டி நிர்ப்பந்தப் படுத்தியிருக்கின்றனர்.

"ஓம் புத்தியை ஒளிச்சுவைச்சுட்டு ஒம்மாப்புள்ளே மிச்சம் வைக்கிற சோற்றை இன்னைக்கு ஒரு நாளைக்காச்சும் தொட்டு, எடுத்து வாயிலே வையி_"

"ஐயய்யோ_ச்சேய்க் நம்மாலே முடியாதப்பா_"

"எச்சில் சோறை சாப்புடலேன்னா வெளக்கமாறு பிய்ஞ்சு போகும்"

ஆள் ஆளுக்கு அதட்டி அரட்டி, உருட்டி அடக்கி வைத்திருந்தனர். அடங்கமுடியாமல் அருவருப்பில் தத்தளித்த ஈஸ்வரி. தத்தளித்துக் கொண்டிருந்த ஈஸ்வரி.

அந்த நிமிஷத்தை எப்படிச் சமாளித்துத் தாண்டுவது என்று மனசுக்குள் மருகி, மருகி தவித்துக் கொண்டிருந்தாள்.

"எச்சிச்சோறு சாப்புட்டு_ பதிபக்தியைக் காட்டுறது, எனக்குப் பிடிக்காது என்று அவன் சொன்ன குரலில் இவளது ஆன்மாவின் குரல். உயிரின் ஒலி.

"ஹ... ப்ப்ப்பாடா.." என்றிருந்தது ஈஸ்வரிக்கு. மானத்தைக் காப்பாற்றிய மணாளனை படபடக்கும் இமைரோமச் சிலிர்ப்புடன் பார்க்கிறாள். பார்வை கண்களின் பார்வையல்ல; மன உயிரின் உள்பார்வை. மனசைச்சூறையாடி, மனசுக்குள் ஆணிவேர் பரப்புகிற மையல்பார்வை. மயங்கிய மனசின் மயக்குகிற பார்வை. வசீகரிக்கிற பார்வையின் வசீகரம்.

உண்ட வட்டிலிலே கைகழுவிய முருகேசன்

மிச்சம் வைக்கச் சொல்லி மென்மைக் குரலில் வற்புறுத்திய பெரிய பெண்களை, வெறும் சிரிப்பால் சமாளித்தான்.

"முன்னப்பின்னே தெரியாதவன். இன்னைக்குவந்தவன். என்னோட எச்சியை சாப்புட எப்புடிப்பிடிக்கும்? பிடிக்காததை செய்றதைவிட, பிடிச்சபடி நடந்து மனசுக்கு மனசா கலக்குறது தான் நெசமான ஒறவு."

அவன் சொன்ன விளக்கம் இவளுக்குள் ஒளியாக ஊடுருவிப் பரவியது. அங்குள்ள சகலபெண்மணிகளும் பாராட்டும் பெருமிதமுமாகிச் சிரித்தனர்.

"என்ன இருந்தாலும் படிச்சவுகளுக்கு நிகர் படிச்சவுகதான். அவுக யோசிப்பும் பேச்சும் நல்லாத்தானிருக்கு—"

அன்றைக்கு ராத்திரி_ ஒரு தனியறையை ஒதுக்கியிருந்தார்கள். அங்கிருந்த சாமான்செட்டுகள் யாவும் அகற்றப்பட்டு... சுத்தப்படுத்தப்பட்டு பன்னீர் தெளிப்பில் மனசு மணந்தது.

ஜன்னல் இல்லாத அறை. புதுப்பாய். புதுத்தலையணை. புதுச்சமுக்காளம். தட்டுகளில் பதார்த்தங்களும், பழங்களும், பால் நிரம்பிய டம்ளர்.

உச்சியில் அன்னப்பறவை உட்கார்ந்திருக்கிற குத்துவிளக்கு. அதன் ஐந்து முகத்திரிகள். ஐந்து முகச்சுடரின் இதமான சந்தனவெளிச்சம்.

சந்தனக்கலர் பட்டுச்சட்டையைக் கழற்றினான். பனியனும் பட்டு வேட்டியுமாக உட்கார்ந்திருந்தான். அந்த அறையின் வாசமும் ஐந்துமுகச்சுடரின் மயக்கமூட்டுகிற ஒளியும் இவனுக்குள் வினோத உணர்வைத் தந்தது.

இடிகிணற்றுமூலப்படியில் பதறிப்பதறிப் பயந்து பயந்து அனுபவித்த சென்பகம்... இப்படிப்பட்ட சூழலில் இனிய நறுமணவாசத்தில் உரிமையோடு உறவோடு வந்தால்..?

அவளது கனத்த நெஞ்சு. அதன் மதர்ப்பு. நிமிர்ந்த இளமைத்துடிப்பு. அதன் அடியில் இருந்த ஒற்றை மச்சம். அதன் கரிய புன்னகை.

அவளது இசைவு. அவளது குழைவு. உழைத்து இறுகிய திரேகத்தின் வளம். அவளது மனச்சரணாகதியின் மயக்கம். இவனுக்கு உயிரையும் மானத்தையும் தேகத்தையும் முழுசாக ஒப்படைக்கிற அவளது மனக்காதல். காமத்தையும் தாண்டிய மனப்பிரியம்.

இவனுக்குள் இவன் பயணப்பட்டுக் கொண்டிருந்தபோது, சிற்றுடம்புடன் வந்து நின்ற ஈஸ்வரி.

49

கங்குல் (இருட்டு) இருக்கும் போதே விழித்துவிட்ட பரமசிவம். நனையப்போட்டிருந்த பருத்திவிதை, அள்ளி அள்ளி ஆட்டுரலில் போட்டார். உரல் நிறைய நனைந்த விதைகள். குழவியின் தலையில் இடதுஉள்ளங்கையை வைத்து ஆட்டத்துவங்கினார். வலதுகையால் அரைபடுகிறவிதைக் கொதுக்குகளை குழவிக்கல் கிடக்கிற குழிக்குள் தள்ளுகிறார். வலுத்த கட்டை வைரம் பாய்ந்த கை. அலுப்பறியாத பலவருஷப்பழக்கம்.

அரைக்க அரைக்க பிசைந்த ரொட்டிமாவு போலக் குழைகிற விதை. பசிய வெண்மையுடன் தளதளக்கிற விதைப்பால்.அவற்றில் நெய்த்தவிட்டைத் தட்டுகிறார். முழங்கைவரைக்கும் முங்குகிறது. தொழுவத்திலிருந்து மாடுகளை அவிழ்த்து வந்தார். உரலைக்காட்டினார். ரெண்டு மாடுகளும் ஒன்றுபோல வாயை வைத்தன. ருசியான குழம்புசாப்பிடுகிறபோது நாவால் "ரொட்டை" போட்டு மனத்துள்ளலைக் காட்டுவது போல _ மாடுகளின் செவிகள் விடைத்தன. கரிய ஈரக்கண்களில் அதுகளின் மன மின்னல். நாசிகள் புல்லரித்து, புல்லரித்து சிலிர்க்கின்றன. ஒருமூச்சு குடித்துவிட்டு நிமிர்ந்து இவரை ஒருகனிந்த பார்வை பார்த்து.. கழுத்துப்பட்டை மணிகள் குலுங்க ஓர் உலுக்கு உலுக்குகிறது தலையை.

அதன் மனத்துள்ளல் அப்படி. அரைபட்ட விதைக் கொதுக்குகளை அள்ளி அள்ளி மாடுகளின் வாயருகே வைக்கிறார்.

நீருடன் அதையும் சேர்த்து வளைத்து மாட்டுகிற மாடுகள், வாலைச்சுழற்றிச் சுழற்றியாட்டுகின்றன.

பருத்தி விதைப்பால் தான் மாடுகளுக்கு ரொம்பப்பிடித்தமான உணவு. அதிலும் நெய்த்தவிடும்கலந்து விட்டால்.. சொல்லவே வேண்டாம். அதன் ருசியே தனி தான். பச்சை நெல்லுச் சோறும் நாட்டுக் கோழிக்குழம்பும் குழைத்துச் சாப்பிடுகிறபோது இரும்புக் கரண்டியில் வதக்கிய முட்டையும் கிடைத்தால் எப்படி இருக்கும்!

அப்படித்தான் மாடுகளுக்கு. வயிறு முட்ட குடித்தது. அதன் வயிற்றுப்பகுதியில் அதன் மனச் சிலிர்ப்பு. புல்லரிப்பு அலைகளாக ஓடுகிறது.

நீச்சுத்தண்ணீரும் கழிவு நீரும் கலந்து பானைநிறைய இருந்தது. அதையும் உரலில் கவிழ்த்துச் சாய்த்தார். அதன் கரிய வாய்களில் ஈரமினுமினுப்பு. தவிட்டுத்தடம் நீர்ச்சுவடு.

குடித்துக் குடித்து வயிறு முட்டி விட்டதை உணர்த்திய மாடுகள். அதுகளைத் தொழுவத்தில் கட்டி விட்டு. கூளத்தை அள்ளி காடியில் போட்டு பரத்திவிட்டுப் புறப்பட்டார்.

"ஏய் கெழடி... கொஞ்சம் நீச்சுத்தண்ணி தா.."

"எங்கே.. தூரவா ?"

"தெக்காட்டுக்கு"

"என்ன சோலி, இந்நேரத்துக்கு ?"

"கனன வெட்டுறதுக்கு..."

"நாலாளுக களைவெட்ட வாராக. நானும் வருவேன்லே ?"

"அடுப்புச் சோலிகனை முடிச்சுட்டு நீ பெறப்பட்டு வா.... அதுக்குள்ளே நா ரெண்டு மூணு நிரைகள், களைவெட்டிரலாம்லே ?"

"அதுவும் சரி தான். ரெண்டு நா வேலை, ஒரு நாள்லே முடிஞ்சுரும்.."

"நீச்சுத்தண்ணி தாரீயா ?"

"கம்மங்கஞ்சியும் மோரும் கரைச்சித்தாரேன். தரட்டா ?"
"கஞ்சிதர்ற மகராசி கைநீட்டுனா.. கசக்கவா செய்யும். ?"

மோரும் கஞ்சியும் சேர்ந்தால்_ அது ஒரு தனி வாசம். தனி ருசி. நீச்சுத்தண்ணீரை மாதிரி... ரெண்டு செம்பு கரை கஞ்சி குடித்து விட்டு, களை சுரண்டியுடன் முற்றத்தில் இறங்குகிறபோது, கங்குல் உடையத் தொடங்கியிருந்தது. காலடி வெளிச்சம் தெரிந்தது.

தெக்காட்டுப் புஞ்சைக்குள், கழற்றிய செருப்பைப் பொழியில் போட்டுவிட்டு இறங்குகிறபோது, பொல பொல வென்று விடிந்து விட்டது. குளிர்ந்த நேரத்தின் அதிகாலை ருசியை அனுபவித்துக் கொண்டே களைவெட்டக் குனிந்தார்.

ஊர்க்காடெல்லாம் கட்டியேறி மேய்கிற சாரணத்தி, இவர் புஞ்சையில் கால் வைத்ததில்லை. மத்தாங்கப் புல்லும், கோரைப்புல்லும், பசலியும் தான் முளைத்துக் கிடந்தது.

அதுவும் காட்டுக்கொரு புல். அங்கொன்றும் இங்கொன்றுமாக பசலிகள். களைவெட்ட வேண்டிய தேவை கூட இல்லை. இது, புல்லைக்களைவதற்கான களை வெட்டுமில்லை. பருத்திக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன், இப்படி ஒரு களை வெட்டு வெட்டணும். அது மிஞ்சி நிற்கிற ஒன்றிரண்டு களையைக் காலி பண்ணும். அத்துடன், தரை முழுக்க வெட்டுப்பட்டு கிளரப்படணும். மேல் மண் புழுதியானால், அடிமண் உடைந்து, தகர்ந்து நெகிழும். தண்ணீர் பாய்ந்தவுடன், புதுப்பயணம் புறப்படுகிற வேர்களுக்கு நெகிழ்வான பாதை கிடைக்கும். தடையற்ற பயணமாகும்.

களைக்கான வெட்டுமல்ல இது. தண்ணீர் பாய்ந்தவுடன் பருத்திச் செடிகள் புதுத்தளிர் பிடித்து வேகமாகக் கிளை விரித்து வளர்கிற வளர்ச்சிக்கு வழியமைக்கிற களைவெட்டு. மண்ணை மிருதுவாக்குகிற வெட்டு. மேல்மண்ணைப் புழுதியாக்குகிற வெட்டு.

பருத்திச்செடிகள் தொடை உயரத்துக்கு இருந்தன. கண்ணுக்கு இதமான வெளிர்ப்பச்சை. வேப்பெண்ணெய் அடித்ததால் புழு மேய்ச்சலும் இல்லை. தூருக்கடியில் உதிர்ந்து வாடிய பூமொட்டுகளுமில்லை.

நேற்று ராத்திரியே புண்ணாக்கைக் குத்துரலிலும் ஆட்டுரலிலும் போட்டு.... ஆளுக்கொரு உலக்கையால் குத்தி நொறுக்கியாகிவிட்டது. தகடு தகடாக இருந்த புண்ணாக்கு முழுவதையும் தூசி நொறுங்கலாக நொறுக்கியாகி விட்டது.

கீதாரிகோனாரிடம் வாங்கிய ஒரு மாட்டுவண்டி ஆட்டுப்புழுக்கையையும் காலாலேயே நெரித்து நெரித்து, மிதித்து தூசிக்காடாக்கி... அதையும் புண்ணாக்கு நொறுங்கலுடன் கலந்து, குழப்பி, நிரவி...

நாளைக்கு தூருக்குத் தூராகக் கொஞ்சம் புண்ணாக்குச் சாணித்தூசியைப் போட்டு..... களைவெட்டுப் புழுதியுடன் தண்ணீர் பாய்ந்தால்... சடைசடையாக காய்த்துத் தள்ளிவிடும்... பருத்தி வெடித்தாலும் இப்ப பொரித்த குஞ்சு போலப் பூ மிருதுவாக விரிந்து நிற்கும்.

களைவெட்டு முன்னேறியது. நிரை நிரையாக வெட்டுகிறார். வியர்த்துக் கொட்டுகிறது.

"இது பொம்பளை வேலைதானே" என்று ஒதுங்க மாட்டார். "இது வேலை நேரமல்ல" என்று முடங்க மாட்டார். "கூலியாளுக செய்ய வேலையைக் கூலி தர்றவன் செய்றதா" என்று கௌரவம் பார்க்க மாட்டார்.

பரமசிவத்தைப் பொறுத்த வரை, உழைப்பு என்பது சூரியனைப் போல. அதற்கு உறக்கமில்லை. ஓய்வில்லை. இங்கு இருட்டுகிற போதும், சூரியன் ஓய்வெடுப்பதில்லை. இன்னொரு நாட்டுக்கு ஒளியும் உயிரும் தரும்.

ஓய்வறியாத சூரியனைப் போலத்தான், உழைப்பும். உருண்ட மண்ணாக இருந்த பூமியை உலகமாக்கிய உழைப்பு. உலகத்தை கட்டிடங்களாலும், அணைகளாலும், கோபுரங்களாலும் அழகுபடுத்தியது உழைப்பு. வனத்தை நிலமாக்கியது, உழைப்பு. நிலத்தை உணவு தரும் அட்சய பாத்திரமாக்கிய உழைப்பு.

உழைப்புக்கு ஓய்வில்லை. உழைப்பதற்காக உடம்பு தின்னலாம். உறங்கலாம். உயிர் வளர்க்கலாம். அவை எல்லாமே உழைப்பாற்றலை மேலும் பல மடங்காக வெளிப்படுத்தத்தான்.

"இது தெரியாம... அந்த வெளங்காத பய, கடனும் உடனும் செமந்து சீரழியு தான். "

வியர்வையை விதைத்து, உணவை அறுவடை செய்கிற விவசாயத்தை— இந்த நாசமாய்ப் போற பய புரிந்து கொள்ளவில்லை. பணத்தை விதைத்து, பணத்தை அறுவடை செய்கிற

வியாபாரமாக்குகிறான். பணத்தை விதைத்து விதைத்து.... நட்டத்தையும் கடனையும் அறுவடை செய்கிறான்.

என்ன செய்யப் போகிறானோ_ எப்படிச் சீரழியப் போறானோ_

காலைச் சூரியனை மறைக்கிற மேகத்திட்டுகள். அதன் உடம்பு செங்கனலாகக் கனிந்திருக்கிறது. அதன் விளிம்பு பொன்னிறத் தகதகப்பாக ஒளிர்கிறது. கீழடிவானம் முழுதும் ரத்தப்பூச்சாகத் தெரிகிறது.

குறுக்கெல்லாம் கடுக்கிறது. தோள்பட்டையில் ரணமெடுக்கிற வலி. நரைத்த திரேகம் பூராவிலும் வியர்வைத் துளிகள் மின்னுகிற வெள்ளை ரோமங்கள். களைவெட்டுப் புழுதி எழும்பி... வியர்வை ஈரத்தில் அப்பிக்கொள்ள _ மண் கரைசலாக உடம்பு முழுக்க.

அறுபதுக்கும் மேலாகிவிட்டது வயது. அறுபத்தைந்து வயது நெருங்கிக்கொண்டிருக்கும். முதுமையின் இயற்கை தீண்டுகிறது. பயந்து பயந்து, தய்ங்கித் தயங்கித் தீண்டுகிறது. நாட்டுக்கம்பும், குள்ளங்கம்பும், நாட்டுச் சோளமும், கேப்பைக் கூழும் குடித்து வளர்ந்த உடம்பை நெருங்கப்பயப்படுகிற முதுமைத்தளர்வு. ஒட்டு வீரியத்தான்ய தவசங்களை.. ஒட்டு வீர்ய (ஐ.ஆர்) அரிசிகளை அண்டவிடாத பரமசிவத்தை, நோய்நொடி அண்டப்பயப்படுகிறது.

சுரண்டியைக் கீழே ஊன்றிய வாக்கில் நிமிர்ந்து நின்று, இடுப்பை ஆற்றுகிறார். கண்ணிமை ரோம வியர்வைத்துளிகள் வழியாகப் பொழுதுக்காலைப் பார்ப்பது, நல்ல அனுபவமாக இருக்கிறது. "தஸ்ஸ், புஸ்ஸ்"ஸென்று இரைக்கிறது. ஏறி இறங்கி இளைக்கிற நெஞ்சு. நெத்தி வியர்வையை விரலால் வழித்து துடைக்கிறார். களைப்பாக இருக்கிறது.

"கெழடி குடுத்த கரை கஞ்சி, "கம்"முன்னு கெடக்கு. பசி தெரியலே. வயசானதுனாலே_ முந்தி மாதிரி தொயர்ந்து (தொடர்ந்து) வெட்டிப் போக முடியலே_"

என்று தனக்குத்தானே பேசிக் கொண்டவர், மனசில் ஒரு நினைவு மின்னல் தெறித்தோடியது.

"இந்த மாதிரி வேலை பாத்த வேர்வையோட... பெத்த தாய் மாதிரி புஞ்சை மடியிலேயே விழுந்து செத்தா_ அதான், நல்ல சாவு. யோகமான சாவு."

50

ஒரு குறுக்கம் புஞ்சை முழுக்க நாலாள் கூலியில் களைவெட்டி முடித்து விட்ட பரமசிவம். முருகேசனுக்கு ஆறு குறுக்கம். ஆறு நான்காக இருபத்தினாலு ஆட்கள் கூலி தான் செலவாக வேண்டும். ஆனால்—

செவல் குளத்திலிருந்து ரெண்டு டிரிப் அடிக்கிற ஆட்டோ வேன். மொத்தம் அறுபது ஆட்கள். முப்பது முப்பதாக ரெண்டு டிரிப். வேனுக்கு மட்டும் அறுநூறு ரூபாய் வாடகை. அறுபதாட்களுக்கும் கூலி நாலாயிரத்து இருநூறு ரூபாய். ஆட்களைத் தேடிக்கண்டுபிடித்து சேர்த்துத் திரட்டிக்கொண்டுவந்து சேர்க்கிற கொத்தனுக்கு இருநூற்றைம்பது ரூபாய். டீ, வடை, பான்பராக் என்று அறுநூறு ரூபாய்.

ரெண்டாவது டிரிப் ஆட்கள் வந்து இறங்கும்போது, மணி பத்தாகி விட்டது. சரியாக மூன்று மணிக்கு கிளம்பி விடுவார்கள். அதற்குள் சாப்பாட்டுக்கு அரைமணி நேரம். மிச்ச நேரத்தில் நடக்கிற களைவெட்டுதான்.

அறுபது பேரையும் யார் கட்டி மேய்ப்பது? யார் கண்காணிப்பது? அவரவராக அவரவர் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு, தெய்வத்துக்குப் பொதுவாக நடப்பதுதான் வேலை.

களைவெட்டாமல், புழுதியை வெட்டிக் களையை மறைத்துவிட்ட புண்ணியவதிகளும் ஒன்றிரண்டு இருப்பர். கறுப்பாடுகள் எல்லா மந்தைகளிலும் இருக்கத்தான் செய்யும்.

முருகேசனும் கெந்திக் கெந்தி நடந்துகொண்டே ஊரைச்சுற்றினான். வீடு வீடாக ஏறி இறங்கினான். "களை வெட்ட வாரீகளா" களை வெட்ட வாரீகளா என்று கேட்டுப்பார்த்தான். யாரும் வரத் தயாரில்லை.

தீப்பெட்டியாபீஸுக்கு குச்சியடுக்கப் போகிறார்கள்... ஃபயர் ஆபிஸ் எனப்படுகிற பட்டாசுத்தொழிற்சாலைக்குப் போகிறார்கள். "ஆறுமுகா" பஞ்சுமில்லுக்குப் போகிறார்கள். எல்லாம் பெரியபெரிய பஸ்களில். நிழல் வாட்டத்தில் பயணம். நிழல் வாட்டத்தில் வேலை. வெயில் படாத வாகனத்தில் வீடு திரும்புதல்.

எல்லாநாளும் வேலை. "இன்னைக்கு வேலையில்லே" என்று சொல்வாரில்லை.

காடுகரைகளை நம்பிக் காத்திருக்க முடியுமா? பத்து நாளைக்கு வேலையிருந்தால், மிச்ச நாளைக்கு வேலையிருக்காது. வேனாக்கொதிக்கிற வெயிலில் வெந்து சாக வேண்டும். வெந்து வேர்வையை வடித்தாலும் சாதி மரியாதை தனித்தனி. நாடார், தேவர் கூலியாட்கள் குடத்தில் தண்ணீர் எடுத்துக் குடிக்கலாம். பறையர், குடும்பர், சக்கிலியர் ஆட்கள் தண்ணீர் "கேட்டு வாங்கி" குடிக்க வேண்டும். அவரவருக்குரிய சாதி மரியாதையோடு தான் பேசியாக வேண்டும்.

"யம்மோய்.. சாமியோவ். யாத்தா." என்று சாதிக்குரிய மரியாதை தனித்தனி. பஸ்ஸேறி, நிழல் வாட்டத்தில் வேலை பார்க்கிற இடத்தில் இந்தச் சனியன் இல்லை. ஓரளவுக்கு எல்லாரும் எல்லா வகையிலும் சமானம்.

இதனால் தான். காடுகரைகளை நம்பாமல், கூலியாட்கள் காரேறிப்போவது. விவசாயத்தை நம்பி வாழ முடியாத கூலி விவசாயிகள்.

இங்கு மட்டுமல்ல... அக்கம் பக்கமாக இருக்கும் சுற்றுக்கிராமங்களிலும் விசாரித்துப் பார்த்தான் முருகேசன். ஆள் கிடைப்பதே இல்லை. கிடைத்தாலும் நாலைந்து ஆட்கள் தான் தேறியது. இது போதாது.

வேறு வழி? வேறு புகல்?

பருத்தி, மக்காச்சோளம், மிளகாய், கம்பு எல்லா வெள்ளாமைகளும் வாடி வதங்கிக் கிடக்கின்றன. கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. களைவெட்டி, உரஉப்பு போட்டுத் தண்ணீர் விட்டால் தான். அரை வெள்ளாமை விளைச்சலாவது பார்க்கமுடியும்.

முருகேசனுக்குப் பணநெருக்கடி வேறு. எங்கும் கடன் வாங்க முடியவில்லை. அரசு சார்ந்த கூட்டுறவு சொஸைட்டி, கிராம வங்கி எல்லாம் நிலத்தை நம்பி, விவசாயத்தை நம்பி... "பயிர்க்கடன்" தருவதை நிறுத்தியாகி விட்டன.

பயிர்க்கடன் தரக்கூடாது என்று சட்டமில்லை. நடைமுறையில் தருவதில்லை. ஒரேயடியாக நிறுத்திக் கொண்டன.

ஒரே காரணம்_!

விவசாயிகள் கடனை வாங்குகிறார்கள். திருப்பிக் கட்டுவதில்லை. "தள்ளுபடியாகி விடாதா_ கடன் ரத்தாகி விடாதா?" ஒவ்வொரு தேர்தலையும் எதிர்பார்த்து நிற்கின்றனர். இடையில் நகர்கிற நழுவுகிற வருடங்கள்.

வட்டி, தவணை தவறிய வட்டி, கார் போட்டு வசூலுக்கு வந்த செலவு, தபால்கள் அனுப்பிய செலவு என்று வகை வகையான செலவுகளில் கடன் தொகை ஆறுமடங்கு, ஏழு மடங்கு பெரியதாக வீங்கி விடும். பெருத்து தடித்து விடும்

பெரும்பான்மைக்கும் மேலாக 90 சதவிகித விவசாயிகள் அப்படித்தான். முருகேசன் அப்படியல்ல.....! எட்டாயிரத்தைப் பெற்றுக்கொண்டு இருபதாயிரம் கடனைப் பெற்றுக்கொண்ட முதல்வருடம் கூட நாணயமாகத் திருப்பிச் செலுத்தி விட்டான். வட்டியுடன் கடனை அடைத்தான். ஆயினும்..

இவனுக்கும் பயிர்க்கடன் இல்லை. ஒரு மெம்பருக்கு மட்டும் அத்தனை பேரேடுகளும் ஆபிஸர்களும், ஊழியர்களும் போய் வர இயலாது. ஒரே ஒரு மெம்பருக்காக மட்டுமே ஒரு சொஸைட்டியின் ஒட்டு மொத்த மேல் மட்ட நிர்வாகமும் பணி செய்யுமா?

அது மட்டுமல்ல.. அரசுத்துறைகள், பொதுத்துறைகள் யாவும் இஷ்டம் போலத் தேயவிட்டு விட்டு.... தனியார் துறைகளையே செல்லப்பிள்ளையெனச் சீராட்டி தாலாட்டிப் பரவசப்படுத்துகிற அரசின் கொள்கைத் திசையை உணர்ந்துகொண்ட அதிகாரிகள், கடன் இல்லை என்று கைவிரிக்கத் தயங்குவதில்லை.

நகையிருந்தால் வங்கிகளுக்குப் போகலாம்.

"ஜ்வல்ஸ் லோன் தர்ரோம். வேணும்னா. வாங்க" என்கிற அதிகாரிகள்.

நகையில்லாமல், பொருள் இல்லாமல், விவசாயத்தை மட்டுமே நம்பி பயிர்க்கடன் சாத்தியமேயில்லை என்று முழுமையாகக் கதவைச் சாத்திக் கொண்ட நிலைமை. நிரந்தர இருட்டுக்குள் அலையவிடப்படுகிற விவசாயிகள்.

தனியார்களிடமே கடன்களை வாங்கியாக வேண்டிய நிலைமை. "தனியார்மயம்" என்பது எங்கோ ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி மேடைகளில் மட்டுமே உச்சரிக்கப்படுகிற சொல்லாக இருந்த நிலைமை. யாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. தனியார் மய அபாயம் குறித்த எச்சரிக்கையை எவரும் பொருட்படுத்திக் கொள்ள வில்லை.

இப்போது, அது ஒரு மேடையின் சொல்லல்ல. விவசாயிகளின், விவசாயத்தின் கழுத்தை நெரிக்கிற ரத்தக்காட்டேரியாகத் தெருவில் வந்து, "திங்கு, திங்கென்று பேயாடுகிறது.

பத்திரத்தில் கையெழுத்து போடச் சொல்கிறார்கள், கடன் தருகின்றவர். பத்திரத்தில் அவர் எதை வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம். வீட்டையோ.. காட்டையோ.. முழுச் சொத்தையோ கூட அனாமத்தாகத் தட்டிப் பறித்துக் கொள்ளலாம்.

ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருக்கிற முருகேசனுக்கு... காடுகளை.. காட்டில் போட்டிருக்கிற.. வெள்ளாமையை உயிர்ப்பித்தாக வேண்டும். அதற்குப் பணம் வேண்டும்.

எவ்வளவு ?

களைவெட்டுச் செலவு ஏழாயிரம். யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் ஆகிய உரமூட்டைகளுக்குப் பத்தாயிரம் வேண்டும். யாரிடம் போக ? எப்படி வாங்க ? ஒன்றும் வழி தெரியாமல் திகைத்த போது...

கழுத்துச் சங்கிலியைக் கழற்றித் தந்த ஈஸ்வரி.

இதோ.. களை வெட்டு நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், முருகேசன் இங்கே இல்லை. எக்ஸ்.எல்.வண்டியில் திருவேங்கடம் போயிருக்கிறான். உர உப்பு மூடைகள் தூக்குவதற்கு. இருநூற்றைம்பது ரூபாய் வாடகை பேசி, ஆட்டோ வேனில் மூடைகளைக் கொண்டு வந்து இறக்கினான்.

அப்புறம், புஞ்சைக்குப் போய் பணப்பட்டுவாடா நடத்தினான்.

51

உச்சியை நெருங்கிக் கொண்டிருக்கிற மதியப்பொழுது. தெருவில் ஒரு சுடுகுஞ்சு கூட இல்லை. ஆட்களெல்லாம் காடுகரைகளில் வெயிலில் வியர்வை சிந்திக்கொண்டிருக்கிறார்கள். வெறிச்சோடிக் கிடக்கிற தெருவில் ஒன்றிரண்டு வெள்ளாட்டுக் குட்டிகள். குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு குப்பைக்குமிகளை கிண்டிக்கிளறி... கெக்கெரிக்கிற கோழிகள். கோழிகளை கணக்கு பண்ணுகிற சேவல். செல்லக்கூவலும், செல்லக் கெக்கரிப்புமாக ஒட்டி ஒட்டி நெருங்குகிற சேவல்.

கடையில் ஒரு வியாபாரம் இல்லை. அவ்வப்போது வருகிற வெளியூர்க்காரர்கள் போடுகிற மொத்தச் சரக்குகள். இப்பவும் அருஞ்சுனை வியர்வையும் விறுவிறுப்புமாக மும்முரமாக சுழன்று கொண்டிருந்தார்.

சாயங்கால நேரம் தான். வியாபாரம் மும்முரமாகும். காடுகரைகளுக்கு பாடுசோலி பார்க்கப் போனவர்கள் வீடு திரும்பியவுடன், ஒரு செம்புத் தண்ணீரை மடக், மடக் கென்று குடித்துவிட்டு, கட்கத்தில் இடுக்கிய பெட்டியுடன் கடை வாசலில் தான் வந்து நிற்பார்கள்.

உலை வைக்க வேண்டுமே...

கடை வாசல் கொள்ளாமல் கூட்டம் நெரிபடும். தாழ்வாரத்துக்கும் வெளியே காத்திருப்பார்கள்.

"யப்பா_ வெருசா_ சரக்குக்குடு_ பொழுது சாயுது".

"யண்ணாச்சி, என்க்குக் குடுங்க... கால் கடுக்குது நின்னுநின்னு_"

ஆள்ஆளுக்கு அவசரப்படுத்துவார்கள். நச்சரிப்பார்கள். கோபமும் குமுறுலுமாய் சத்தத்தை கூட்டுவார்கள்.

பத்துக் கைகள் முளைத்த மாதிரி புயல் வேகத்தில் இயங்குவார், அருஞ்சுனை.

"ம்_ இந்தா_ வேற ?"

"என்ன வேணும்_ ?"

"இந்தா_ சீனிப்பாக்கெட்_ வேற ?"

என்று அவரும் பரபரப்பாக ஈடுகொடுப்பார்.

"என்ன வேணும் ?" என்று கேட்கிற முகம்.

"கடனா. ரொக்கமா ?" என்று உள்ளுக்குள் அளக்கிற மனம். "கடன் தரக்கூடிய புள்ளியா_ நல்ல வார்த்தைகளை நயமாகப் பேசி தட்டி விட வேண்டிய புள்ளியா ?" என்று ஆய்கிற இன்னொரு மனம்.

சொல்லுகிற சரக்கை கேட்கிற ஒரு மனம். தருகிற சரக்கை எண்ணுகிற ஒரு மனம். இப்படி பத்து மனசின் கூர்மையோடு பரபரப்பு குறையாமல் பம்பரமாகத் சுழல்கிற அருஞ்சுனை.

இதெல்லாம்_ சாயங்கால நேரத்து மும்மரம்.

இப்போது மதியப்பொழுது. ஆளில்லாத ஊரில், ஆடு குட்டியா வந்து சரக்கு வாங்கும் ? ஆனாலும், அருஞ்சுனைக்கு ஓய்வில்லை. பாக்கெட் போட்ட சீனியை அடுக்க. அரிசிப்பைகளை கிட்டங்கியிலிருந்து தூக்கிக் கொண்டு வந்து நிறுத்தி வைக்க_ பருப்பு ஐட்டங்களை அள்ளி அள்ளிச் சுமந்து நிரப்ப_ வெத்தலையை அலசி ஜாடியில் அடுக்கி விரிக்க. தேங்காய் உடைத்து சில்சில்லாக சீவிப்போட இப்படி ஆயிரத்தெட்டு வேலைகள்.

இந்தத் தயாரிப்புகள் முழுமையாக இருந்தால் தான், சாயங்கால வியாபார மும்முரத்தை அட்டியில்லாமல் சமாளிக்க

முடியும். தேவையற்ற தாமதத்தைத் தவிர்க்க முடியும். தடுமாற்றமில்லாத ஒழுங்கோடு தடதடத்துச் செயல்படலாம்.

அந்நேரம் ஈஸ்வரி வருகிறாள். இப்படி அதிக ஆள் நடமாட்டமில்லாத .. கசகசப்பு இல்லாத... நேரத்தில் தான் வருவாள். கூச்ச சுபாவி. நாலுபேர் கூடுகிற இடத்தில் நிற்கக் கூசுவாள். வாய் வராது. பேசுவதற்கு வார்த்தை வராது.

ஆளில்லாத அமைதியான பொழுது என்று இப்போது வருகிறாள். அவள் கழுத்தில் நகையில்லாத வெறுமை அருஞ்சுனை மனசை உறுத்துகிறது.

ஈஸ்வரியை மகள் மாதிரியான உறவு முறையில் "பாப்பா" என்று தான் அழைப்பார்.

"என்ன பாப்பா, என்ன வேணும்?"

அவள் கொஞ்சம் கூடுதாகவே வாங்குவாள். அரைக்கிலோ பருப்பு, ஒரு கிலோ எண்ணெய்ப் பாக்கெட், 25 கிலோ அரிசிப்பை என்று மொத்தம் மொத்தமாகத் தான் வாங்குவாள்.

இவள் நினைவிலிருந்து உருவி உருவி.. ஒவ்வொரு சரக்காக சொன்னாள். அருஞ்சுனை சிட்டையில் எழுதிக் கொண்டார்.

அரைமணி நேரமாயிற்று. எல்லாச் சரக்குகளையும் போட்டு.. சேகரித்து, அதற்கான கேரிப்பைகளில் போட்டு... ஒழுங்கு பண்ணினார்.

"பாப்பா... நீ இதை எடுத்துட்டுப் போ. அரிசிப்பையை அய்யா கொண்ணாந்து சைக்கிள்லே வீட்லே போட்டுருதேன்..."

"ஆட்டும்யா.. இதையெல்லாம் கணக்குலே சேத்துக்கங்கய்யா."

"ஆட்டும் பாப்பா..."

பேரேட்டைத் திறந்தார். "பரமசிவம்" என்று துவங்குகிற பக்கத்துக்கு எதிர்ப்பக்கத்தில் "ப. முருகேசன்" என்ற பெயர். நாலைந்து பக்கங்களில் கூட்டாமல் அப்படியப்படியே கிடந்த கணக்குகளை இன்றைக்குத் தான் கூட்டிச் சேர்த்து, மொத்த டோட்டல் போட்டிருந்தார்.

பன்னிரண்டாயிரத்து எழுநூற்றி நாலு ரூபாய், அறுபது காசு. இப்போதைய நடப்பில் இருப்பதிலேயே பெரிய தொகைக் கடன், இது தான்.

அருஞ்சுனையின் சக்திக்கு மீறிய தொகை. பரமசிவ மாமாவின்மகன்" என்ற ஒரே காரணத்திற்காக இவர் காட்டுகிற அதிகபட்ச தாட்சண்யம்.

தாங்க முடியாத அளவுக்குக் கடன் பற்றை ஏறவிட்டிருக்கிறார். அடைபட முடியாத கைமாற்றுகள். ராஜபாளையம் சரக்குப்போட, பணம் புரட்ட முடியாத நிலைமை. திருவேங்கடம் கடைகளில் நிற்கிற நிலுவை. அரிசிக்கடையில் இருக்கிற பெரும்பற்று. அங்கெல்லாம் முக்குகிறார்கள். முனகுகிறார்கள். சகிக்கவும் முடியாமல், முறிக்கவும் முடியாமல் திணறுகிறார்கள்.

"என்ன. அருஞ்சொனை, நிலுவை ஜாஸ்தியாயிருக்கு. கொஞ்சம் கொறைச்சி விடலாமே" என்று தாட்சண்யம் கருதி, தயங்கித் தயங்கிச் சொல்கிறார்கள்.

வருஷக்கணக்கான வாடிக்கையாளன், அருஞ்சுனை. கேட்ட பிறகு வரவு வைத்துப் பழக்கமேயில்லை. அவர்கள் கேட்பதற்கு முன்பே_ "நம்ம பற்றுலே ஏழாயிரத்தை வரவு வைச்சுக்கிட்டு, சிட்டை தாங்க" என்று பணத்தை நீட்டியே பழக்கம்.

"இது தான்.... அருஞ்சொனைங்குறது. குடுக்கல் வாங்கலை குளிர்ச்சியாக்கி விட்டுறது" என்று பாராட்டுகளைக் கேட்டுக் கேட்டுப் பழகிய காது. இப்ப என்னடா என்றால். "கொஞ்சம் கொறைச்சி விடலாமே" என்று கேட்கிற அளவுக்கு வந்துவிட்டது.

இதற்குக்காரணம்., முருகேசனின் மொத்தப்பற்று தான்.

"மருமகனுக்கு சீராப் போச்சா_ பாப்பா ?"

"சீராப்போச்சு அய்யா_"

"எங்க_ தூரவா போயிருக்காக ?"

"திருவேங்கடம் போயிருக்காக. யூரியா உப்பு, டி.ஏ.பி., பொட்டாஷ் மூடைக எடுக்கணும்னு சொன்னாக_."

அருஞ்சுனையின் அலைபாய்கிற பார்வை, அவ்வப்போது அவளது கழுத்தில் நின்று நகர்கிறது. நகர்வதற்கு முன்பு நின்று கவனிக்கிற பார்வையை அவளும் கவனிக்கிறாள். அவள் அடிமனசின் ஆழத்தில் பொங்கிக்குமுறுகிற கசப்புணர்வு. அருவாள்மணையில் அறுபடுவதைப் போல, உள்ளுக்குள் பாய்ந்து சீவுகிற அவமான வீச்சரிவாள். வெட்க உணர்வின் முட்கவையால் அறைபட்ட காந்தல்.

"என்னமும் சொல்லணுமா, அய்யா ?"

"சொல்லணும். நா மருமகனைப் பாக்குறப்ப, சொல்லிக்கிடுறேன். ஒங்கிட்டே வேண்டாம், பாப்பா"

"ஏன்ய்யா, குடுக்கல் வாங்கலு விஷயமா ?"

"அது கிடக்கட்டும், விடு, பாப்பா. கழுத்துச் செயினை கழுவுறுதுக்காக சோப்புத் தண்ணியிலே ஊறப்போட்டிருக்கீயா, பாப்பா ?"

" இல்லே அய்யா. பெத்த அய்யா மாதிரி நீங்க. உங்ககிட்டே மறைக்குறது, ஞாயமில்லே. அடகுக்குப் போயிருக்கு"

அருஞ்சுனைக்குள் ஆயிரத்தெட்டு நினைவுப் பிரளயம்.

"போனா... வராதே. என்னத்துக்குடுத்தே ?"

"நகையை அடகு வைக்கறதுக்கு நீ எதுக்கு குடுத்தே ?"

"மருமகன் போக்கும், சரியில்லே... புத்தியும் சரியில்லே"

"அய்யா மனசை நோகடிக்குறப்பவே, அவரு புத்தி அழுக்காயிருச்சு."

"இந்த மனுசனை நம்பி, நகையைப் பறிகுடுத்துட்டீயே"

இப்படிப் பலப்பல வார்த்தைகள் மனசுக்குள் வந்து முட்டுகிற போதிலும்... எதையும் வெளிக்காட்டாமல், மௌனம் கடைப்பிடிக்கிற அருஞ்சுனை.

மௌனமே நிறைய உணர்வுகளைப் பேசியது. அவரது கண் பார்வையில் கோர்த்த நீர்ப்படலம். அவரது மனக்கோபத்தையும், துக்கத்தையும் ஒரு சேர உணர்த்தியது.

அவளுக்குள்ளும் அதே உணர்வுகள் தாம். என்ன செய்ய? என்ன செய்ய என்று எந்த வழியும் புரியாமல் குழம்பித் தவிக்கிற புருஷனைப் பார்த்த பின்னும்... எனக்கு நகை தான் முக்கியம் என்று எப்படிச் சொல்ல? மனசு என்ன, இரும்பிலா செய்திருக்கிறது?

"இப்படி ஏமாந்த பிள்ளையா இருக்கீயே" என்று பரிதாபமாகப் பார்க்கிற அருஞ்சுனை. அது இவளது மனசாட்சியின் சொல்லாகத் தோன்றுகிறது.

மதிய வெயிலில் சரக்குகள் நிறைந்த குத்துப் பெட்டியும், மஞ்சள் பைகளுமாகப் போகிற ஈஸ்வரி.

"பூர்ணம்... கொஞ்சம் கடையை பாத்துக்கோ..."

"நீங்க... எங்க, தூரவா?"

"சும்மா... ஒரு சோலியா போய்ட்டு வாரேன்..."

சைக்கிளை எடுத்து.... சீட்டில் வலதுகை வைத்த நிலையில் பெடலில் காலை வைக்கிற அவசரம். இருபெடலையும் அழுத்துகிற துரிதம். பெல்லடிக்க தோன்றாத மனத்துக்கம்.

சைக்கிள் தெற்காமல் வளைந்தது. ஊருணியைத் தாண்டி, ஓடையைத் தாண்டி, தெற்காட்டில் வந்து நிற்கிற சைக்கிள்.

வண்டிப்பாதையில் ஸ்டாண்ட் போட்டு, கிளிப்பை காலால் தட்டி விட்டு வருகிற அருஞ்சுனையின் வேகப் பரபரப்பு.

அவன் மனதில் ஏதேதோ ஓடுகிற கற்பனைகள். அவலமும் அமங்கலமான யூகங்கள்.

பம்ப்ஷெட் மோட்டார் ஓடிக்கொண்டிருக்கிறது. சிமெண்டுத் தொட்டியில், உருக்கி ஊற்றிய வெள்ளியாக வந்து விழுகிற நீர்க்கற்றை. பெருவாய்க் காலில் நுரைகளும் தூசியுமாகச் சுமந்து வருகிற தண்ணீர். சிறு சிறு கல்துகள்களை உருட்டிக் கொண்டு நகர்கிற தண்ணீர், களைவெட்டுப் புழுதிக்குள் பாய்கிறது.

வாய்க்கால் வரப்பைச் செதுக்கிச் செதுக்கி சீர்படுத்தி, மம்மட்டியால் வாய்மடையைக் கொத்தி விலகுகிறார். நீர், பாத்திக்குள்

பாய்ந்து பரவுகிறது. தூர்களுக்கடியில் கிடக்கிற புண்ணாக்குச் சாணித்தூசியை நனைத்து, கரைத்து, உள்வாங்கி முன்னேறுகிற நீர்முகம்.

வாய்க்காலுக்குள் வருகிற அருஞ்சுனை. வாய்மடையை கொத்திவிட்டு, மம்மட்டி பலத்தில் வாய்க்கால் தண்ணீரில் நிற்கிற பரமசிவம். அவரது கெண்டைக்காலில் வெள்ளிக்காப்பு மாட்டிய மாதிரி... நீரின் வெண்ணிற நுரைத்தடம்.

"என்ன மாப்ளே... இம்புட்டுத் தூரம்?

"ஒரு முக்கியமான விஷயமாத்தான். மாமா"

"நல்லதா, கெட்டதா?"

"கெட்டதை நல்லதாக்குகிற விஷயம்?"

"என்ன மாப்ளே... கொழப்புதே"

"மாமா... எளைய மருமகன் செய்ஞ்ச காரியம் தெரியுமா?"

"அந்த வெளங்காத பய பேச்சு, நமக்கென்ன செய்ய?

அதைவுட்டுத் தள்ளு. மாப்ளே. நேத்து. உங்கத்தை சொன்னாள்"

"என்னன்னு?"

"தங்க நகையை அடகு வைச்சதைப் பத்தித்தானே?"

"ஆமா... மாமா"

"அதுக்கெதுக்கு நீ பதறிப் பதைச்சு, ஓடியாறே?"

"எனக்கு இது சரின்னுபடலே, மாமா... "

"எனக்கு ... சந்தோஷமும், பூரிப்புமா பொங்கிக்கிட்டா.... வருது? என்ன செய்யச் சொல்லுதே.... ?"

"மத்ததை பாத்துக்கிட்டு ஒதுங்கி நிக்குற மாதிரி, இதுலே ஒதுங்கி நிக்கக்கூடாது... மாமா"

"ஏன்?"

தண்ணீர் பாய்கிற பாத்திக்குள் குனிகிற பரமசிவம். வேரோடும், கிழங்கு முடிச்சோடும் பிடுங்குகிற கோரைப்புல்.அடுத்த பாத்திக்கு வாய்மடையைக் கொத்துகிறார்.

"மாமா_ அந்த ஈஸ்வரிப் புள்ளைக்கு இருக்குற ஒரே பாதுகாப்பு அந்த நகை தான்."

"ஏன் இந்த வெளங்காதபய இல்லியா ?"

"இருந்தும் இல்லாத மாதிரித்தான் மாமா"

"சரி அதுக்கென்ன செய்யணும்ங்குறே ?"

"நகையை நாமரூவா போட்டுத் திருப்பி நம்மகையிலே வைச்சிருக்கணும். வட்டியில்லாம எப்பவேணும்னாலும் திருப்பிக் கிடட்டும். திருப்பமுடியாமல் போயிட்டாலும் போகட்டும்.."

"ம்.. அப்புடியா, மாப்ளே ?"

"ஆமா மாமா அந்த ஈஸ்வரிப்பாப்பாவின் ஒரே ஆதாரம். எவன் கையிலோ சிக்கி, எப்படியோ நாசமாயிடக்கூடாது"

"நா திருப்பமாட்டேன். எங்கையாலே அந்தப் பயலோட பொருளைத் தொடமாட்டேன், மாப்ளே"

"நா..திருப்பி.. நா.. பாதுகாப்பா வைச்சிருக்கேன். நீங்க சரி சொன்னாப் போதும்_"

"ரைட் ஒனக்குச் சரின்னு பட்டா.. நீ செய்யி. எனக்குச் சம்மதந்தான்"

"அது போதும் எனக்கு"

அருஞ்சுனை புறப்பட்டுவிட்டார். பொழிக்குப்போய் செருப்பை மாட்டிக்கொண்டு, சைக்கிளை வட்டமடித்து திருப்பி_

"அப்ப நா வாரேன் மாமா_"

"சரி_ மாப்ளே"

சைக்கிளில் போகிற அருஞ்சுனையையே பார்க்கிற பரமசிவம். மதிய வெயிலின் வெண்ணிறப்பளீரிடல். வெற்று முதுகில் சுள்ளென்று தைக்கிற வெயிலின் ஊசி. மதிய வெயிலின்

வேக்காட்டில் சைக்கிள் எடுத்து வருகிற அருஞ்சுனையின் பாசப்பதைப்பு.

ரொம்பத்தூரத்துக்கும் சேர்த்து யோசிக்கிற சாமர்த்தியக்காரர். அவர் இப்படிப் பதறியடித்து மதிய வெயிலில் வருவதென்றால்?

அந்தப் பயலைப்பத்தி என்ன நெனைக்குறாரு? அவனுக்கு என்ன நடக்கும்னு பதறித் தவிக்காரு?

அந்தப் புள்ளைக்கு ஒரே ஆதாரம் நகை என்று அழுத்துகிறாரே. அப்ப இந்தப்பய? இவன் இருக்கான்லே?

இருந்தும் இல்லாதமாதிரி தான் என்கிறாரே-

இருப்பானா இல்லாமப் போயிருவானா?

இந்த மாப்பிள்ளை என்ன யூகிக்கிறார்? என்ன நினைக்கிறாரு? என்ன நடக்கும், எப்படி நடக்கும், எதுநடக்கும்னு நெனக்குறாரு-

பரமசிவத்துக்குள் கவலை படிந்த நினைவுகள் பரமசிவத்து கண்களை உருட்டிக்கொண்டு நுரையுடன் பொங்கிப் பாய்கிற நினைவுத்தண்ணீர்.

பரமசிவத்துக்குள் ஏதோ ஒரு பதைப்பு.

பாவம் கெழடி இப்புடிப் புள்ளையை பெத்துட்டு புருஷனையும் வுட்டுக்குடுத்துராம புள்ளையையும் தாங்கிப் பிடிச்சிக்கிட்டு தடுமாறி தத்தளிக்கிறாள்-

கெழடி மட்டுமா பாவம்? நானும்தான்.

முருகேசன் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறான். அவனது வலதுகால் கட்டிலின் எதிரிலுள்ள ஸ்டூலில் இருக்கிறது. வலது குதிகாலில்தான் வலி. நரம்புப் பிடிப்போ.. எலும்பு சுளுக்கோ தெரியவில்லை.

ஸ்டூல் பக்கத்தில் குனிந்த வாக்கில் அவனது காலைத் தடவி விடுகிற ஈஸ்வரி. அவளது வலது கையில் விளக்கெண்ணெயின் பிசுபிசுப்பு. எண்ணெய் தடவி, மெதுமெதுவாக நீவுகிறாள். வலி உள்ள இடத்தை விரல்கள் அழுத்தி நீவுகிறபோது சுரீரிடுகிற வலியில் முகம் சுளிக்கிற முருகேசன்.

அந்த சுரீரிடுகிற வலியின் போது அவன் காலில் ரணம் தாளாத துடிப்பு. அதிர்ந்து அடங்குகிற காலுக்குள் பரவிப்படர்கிற வலியின் அலைகள்.

"ரொம்ப வலிக்குதோ...? பதனமாக நீவிவிடுகிற அவளது பாந்தமான பரிவுக்கேள்வி. கண்ணில் ஒரு சோக நிழல்.

"லேசா சுரீரிங்குறவலி"

"எண்ணெய் போடப்போட வலி கொறைஞ்சிரும்."

நகையில்லாத வெறுங்கழுத்து. ஒருசெயின்தான் போட்டிருப்பாள். மற்றதெல்லாம் உள்ளே மரப்பீரோவின் உள்ளறையில்

தான் இருக்கும். அவற்றுடன் கழுத்தில்கிடந்த செயினையும் கழற்றி நீட்டினாள்.

"இது ஒங்கழுத்துலே கெடக்கட்டுமே_ ஒண்ணாச்சும் இருந்தா நல்லாயிருக்கும்"

"எல்லாமே பருத்திபோட்டவுடனே வந்துரப்போகுது. ரெண்டுமாசம் தான் அதுக்குள்ளே கழுத்துலே என்ன அலங்காரம்?"

"அப்படியில்லே. கடைகண்ணிக்குப் போவே. தண்ணி யெடுக்க குழாய்க்கு போவே. வெறுங்கழுத்துலே நின்னா நாலு பேரு நாலு விதமா பேசுவாக. ஏளனமா நெனைப்பாக."

"யாரு நெனைச்சு.. என்னாகப்போகுது ? நாம வெள்ளாமை யெடுக்க ரூவாவேணும். கடன் கெடைக்கலே. அதுக்குப் பதிலா நகை. ரெண்டுமாசத்துலே திருப்பிரலாம்லே?"

" மக்காச்சோளம் போட்டவுடனே திருப்பிரலாம்."

"அதுக்கு வேற கடன்காரங்க வந்துட்டாங்கன்னா"

" வந்தா நா சமாளிச்சுக்கிடுதேன்_"

எண்ணெய் தடவுகிற ஈஸ்வரியின் சுட்டுவிரல்.குதிகால் எலும்பை நீவிவிடுகிற அவள். குனிந்த நிலையில் இருக்கிற அவளது வெறும் கழுத்தில் கிடக்கிற கறுப்புக்கயிறு.

தோள்பட்டையில் வலதுகையை வைக்கிறான். குறும்பும் வெட்கமுமான பார்வையில் இமையை உயர்த்தி விழியை விரிக்கிறாள். "என்ன" என்று கேட்பதுபோல சின்ன உதட்டின் ஈரச்சுழிப்பு

"சும்மா தா_"

அவனிடமிருந்து வருகிற வாசனைச்சோப்பின் நறுமணம். பவுடர்பூச்சில் பளிச்சிடுகிறமுகம். வீட்டுக்குள் நுழைகிறபோது_

கால்கையை கழுவுகிறான். அப்போதே சோப்புடப்பா தயாராக இருக்கும். முகம்,கழுத்து, கட்கமெல்லாம் சோப்பு தேய்த்து வெண்ணிற நுரைபெருக்கி, சுழவித்துடைத்து விட்டுத்தான் வீடு

நுழைவான். வியர்வை வாடை இவனுக்கு ஒவ்வாது. வியர்வையும் ஒவ்வாது. அவன் நுழைகிறபோதெல்லாம் இவள் உடம்பிலும் நறுமணம் கமழ்கிற மாதிரி பார்த்துக் கொள்வாள். அவனை அவளது புன்னகை வரவேற்பதற்கு முன்பாக சோப்பின் நறுமணம் முந்திப்போய் மோதும். சமையல் கட்டிலிருந்து வருகிற போது கூட அவள் அப்படித்தான்.

அவன் குணமறிந்து ரசனையறிந்து இவளும் தன்னை மாற்றிக் கொண்டாள்.

அவளுக்கு இது இயல்பல்ல. வந்தபுதிதில் அருவருக்கவும் செய்தாள். எரிச்சல்பட்டாள். உள்ளுக்குள்.

"என்ன இது? வேர்வை நாத்தம் குப்புன்னு அடிக்குது"

"அடுப்பங்கரையிலே சோறாக்கிக் குழம்பு வைக்கணும்லே? வேலை பாத்தா_ வேர்க்காதா?

"எனக்கு இது புடிக்காது. அடிக்கடி சோப்பு போட்டு முகத்தை கழுத்தை கிளீன் பண்ணிக்கனும்"

அவளுக்குள் அருவருப்பும் அசூயையுமாக இருக்கும். இதென்ன ரசனை? பாயிலே படுக்குறப்ப நாலுசோப்புக்கட்டியா கூடக்கெடக்கும்? ஆளுதானே வேணும்" என்று சொல்லத்தோன்றும். சொல்லமாட்டாள்.

"நானென்ன ஒடம்பை வித்துப் பொழைக்குறவளா? வர்ற ஆம்பளைகளை கவர்றதுக்கும், கவிக்குறதுக்கும் சீவிச்சிங்காரிச்சு, செண்டு போட்டு மணந்துக்கிட்டே யிருக்கணுமா?" என்று கோபம் கோபமான எதிர்ப்பலைகள் உள்ளுக்குள் ஆவேசமாக எழும். அமைதியாக அடங்கிக் கொள்ளும்.

அவளை அவளே அடக்கிக் கொள்வாள். ஆதரவற்றவள். நாதியற்றவள். போக்கிடமோ_ புகலிடமோ இல்லை. கொதித்து குமுறும் ஆன்மாவைப் புறநிலை வெறுமை குளிர்நீர்த்துளிகளாக விழுந்து அமுக்கும்.

ஒரலுக்கு வாழ்க்கைப்பட்டாச்சு. ஒலக்கைக்குப் பயந்து என்னாகும் ? அவன் மனம்போல நாம மாறிக்கிடவேண்டியதுதான். பாத்திரத்துக்குள் விழுகிற கருப்பட்டிப்பாகு பாத்திர வடிவத்தைப் போலவே உறைந்து இறுகுவது போல.. இவளும் இவனைப்போல தன்னை மாற்றிக் கொண்டாள். வேறுவழி ?

எண்ணெய்க் கிண்ணத்தை ஸ்டூலில் வைத்தாள். தோளில் வைத்த கை.. அப்படியே கீழே இறங்குகிறது. ஏற்கனவே ஒதுங்கிக்கிடக்கிற மார்காப்புச்சேலை.

"கையை வைச்சிக்கிட்டு சும்மாயிருங்க தொண்டடைக்குள் சத்தமாக கிசுகிசுக்கிற அவளது குரலில் கண்டிப்பில் காரமில்லை. பொய்யான மறுப்பு. மறுப்பில்லாத ஒப்புதலை உணர்த்துகிற உதட்டு ஈரமின்னல்.

"ஏன் சும்மாயிருக்கணும்..?

"இன்னும் சரியா யிருட்டல்லே"

"அந்தி மாலை தான், நமக்கான நேரம்"

"கெணத்துத்தண்ணி ஆத்து வெள்ளமா கொண்டு போயிரும் ? ஊரடங்கட்டுமே_"

அடுப்புவேலை முடித்த கையோடு குளித்திருந்தாள். தூக்கலான சோப்பு வாசம். அவள் வார்த்தைகளுக்குப் பொருந்தாத முகத்தின் உணர்வுகள். விலகாத மனநிலை. வெறுப்போ மறுப்போ இல்லாத மௌனமான சொற்கள். பொருளையும் உயிரையும் தொலைத்த வெறும் வார்த்தைகள்.

ஸ்டூலிலிருந்து காலை விலக்கி கீழே வைத்தான். அவளைக் தோள் பட்டையில் அழுத்திய கையால் கட்டிலில் உட்கார வைத்தான். அவளும் விளிம்பில் தயக்கமாக உட்கார்ந்தாள். இவன் பக்கமாய் அவளை முழுசாகத் திருப்பினான்.

நெஞ்சுச்சேலையை ஒதுக்கினான். இளம்பச்சை நிறத்தில் சட்டை. சிற்றுடம்பு. ஈஸ்வரி. அவன் உடம்புக்கேற்ற வடிவத்தில் மூக்கு காது, கண், கை எல்லாம்.

இவனுக்குள் அலையடிக்கிற சென்பகம் இம்மாதிரியான மோகத்தருணத்தில் நெஞ்சுச்சேலையை ஒதுக்கினால் அவளது எடுப்பான இளமை. அதன் மதர்ப்பு அடங்காத வடிவத்திமிறல் "என்னைத்தொடு, என்னைத்தொடு" என்கிற அதன் துடிப்பின் அழைப்பு.

அவனுக்குள் குப்பென்று வியர்த்து அடங்குகிறது. அவனுள் ஏமாற்றத்தின் மிதிகள்.

ஏதோ இல்லாத வெறுமையான பகீர். எதையோ பறிகொடுத்த மனவெலவெலப்பு. உயிரின் ஆழத்தில் நிகழ்கிற அதிர்வுகள். ஆணிவேரைப் பற்றியிழுக்கிற அடியாழத்துச் சூன்யம்.

அவனே சேலையை இழுத்துச் சரி செய்கிறான். மறைக்கிறான். மறைகிறான். முகத்தில் தெரிகிற மனக்கபடம்.

"நீ சொன்னதுதான் ஞாயம். இப்பவேண்டாம்_"

"அதான் நா சொன்னேன்லே"

"புத்தியைக் கடன் குடுத்துட்டேன். நீசொன்னப்பவே நா அடங்கியிருக்கணும்."

அவனது இந்த விலகல் அவளுக்குள்செருப்படியாக விழுந்தது. அடியாழத்தில் அவமானமாக உணர்ந்தாள். சம்மதித்தவளைப் புறக்கணிக்கிற இந்தமூர்க்கம் அவளது ஆன்மாவை உருவிக்கிழித்தெறிகிறது.

"இப்ப வாச்சும் தெரிஞ்சதே ஒங்களுக்கு என்று சொல்லிக் கொண்டே எழுந்தாலும் உள்ளுக்குள், "ச்சீய்ய் நாயே" என்று காறித் துப்பத் தோன்றுகிறது.

"ஏலமாட்டாத நாய்க்கு இடுப்பைச்சுத்தி ஏழெட்டு அருவாளாம். ச்சீய்... மானங்கெட்ட ஈனப்பயலே... ஒனக்கு என்னத்துக்கு இந்த மப்புவேஷம் ?"

அவளுக்குள் புண்பட்ட உணர்வின் அவஸ்தை தாளாமல், பொங்கிச் சீறி தளதளக்கிற நினைவுகள். கொதி பானைச் சோற்றுப் பருக்கைகளாக எண்ணங்கள்.

கல்யாணமாகி மூனுவருஷம் ஆகிவிட்டது. இன்னும் ஒருமாதம் கூடத் தள்ளிப்போகவில்லை. மாதாமாதம் அந்த நாளில் மிகச் சரியாக அதுமட்டும் போய்விடும்.

"இன்னும் ஒண்ணுமில்லியா ?" என்று பெண்கள் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இவள் பதில் சொல்ல வாயெழாமல் தத்தளிப்பாள். கேள்வியின் பாறைக்கனம் தாளாமல் தவிப்பாள். பக்கத்தில் யாராவது பதில் சொல்லிச் சமாளிப்பார்கள்.

"இப்ப என்ன மூனுவருஷம் தானே ? அது ஒரு பெரிய வெஷயமா ?ஆற அமர பொறக்கட்டுமே"

இவன் ஒன்றும் இயலாதவனல்ல. முடியாதவனல்ல. மனம் ஒன்றிய மையலுடன் நெருங்கி வருகிற மோகப்பேய்- கிட்டவந்தவுடன் அடங்கி விலகிக் கொள்கிறது.

எது இவனை விலக்குகிறது. இவளிடம் என்ன குறை ? இப்போது தான் இப்படி என்றில்லை. கல்யாணம் முடிந்த அன்றே அப்படித்தான்.

ஐந்து முகக்குத்துவிளக்கு வெளிச்சத்தில் கொஞ்சநேரம் என்னவோ கேட்டான். ரகசியமான கேள்விகள். அவள் குனிந்த தலை நிமிராமல் "ம்" என்றாள் அல்லது "ம்ஹூம்" என்றாள்.

"நீ ஒண்ணும் ஊமையில்லியே" என்ற போது தான் அவள் வெலவெலப்புடன் நிமிர்ந்தாள். ஏறிட்டு நேருக்கு நேராக முகம் காட்டிப்பார்த்தாள்.

"நானா ? ஊமையா ? பாட்டு பாடவா ?"

"பாடத்தெரியுமா"

"ம்ஹூம்"

"ஒன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு பொன்னி அரிசிமாதிரி, சித்துடம்பு. மடக்கி சுருட்டி கைக்குள்ளே மறைச்சிரலாம் போல சின்ன ஒட்டம்பு"

"எங்கம்மா மாதிரி_ நா"

"நல்லா செவப்பா சந்தனச்சிலை மாதிரியிருக்கே_"

"செவப்புன்னா ஒங்களுக்கு ரொம்பப்பிடிக்குமா ?"

"புடிக்கும். ரொம்பப் பிடிக்காது"

"அப்படீன்னா"

"எனக்குக் கறுப்புதான் ரொம்பப் பிடிக்கும்"

"அப்ப என்னைப் பிடிக்கலியா ?"

"புடிச்சிருக்கு, புடிக்காமலா இப்புடிப் பேசிக்கிட்டு இருக்கேன் ? எல்லாம் சொல்லியனுப்புனாங்களா ?"

"என்னது ?"

"நல்லபடியா சம்மதிச்சு நடந்துக்கோன்னு சொல்லி யனுப்புனாங்களா ?"

"ம்"

"ஒனக்கு என்னைப் பிடிச்சிருக்கா" "ஒனக்கு என்ன என்ன பிடிக்கும்" "ஒன்னோட விருப்பம் என்ன" "ரசனை என்ன" என்ற கேள்விகளை எதிர்பார்த்து ஏமாந்த வெறுமை, உள்ளுக்குள் ஆயினும்.

"ம்" என்கிற அவளது மனச்சம்மதம்

அவனுக்குள் அலையடிக்கிற செண்பகம். அவளது உழைத்து உரமேறிய திரேகம். சற்றே சதைப்பிடிப்பான வலுத்த பருத்த திரேகம். எல்லாமே பருமன். கண் காது மூக்கு எல்லாமே பருமன். அந்தப்பருமன் தானே அவனை கிறங்கடித்து ஈர்த்தது !

பம்ப் ஷெட்ரூம் குழாயின் இடுக்கு வழியே பார்த்த அந்த நாள். தேன்நிறச்சட்டையுடன் நீர்க்கற்றைக்கு நெஞ்சு கொடுத்து நின்ற அவளின் பருத்த தோற்றம். அவனைக்கட்டிப்போட்ட கம்பீரம். தேனுக்குள் சிக்கிய எறும்பாக இவனை மூழ்கடித்த பிரம்மாண்டம்.

தோளில் கை வைத்தான். பக்கத்தில் இழுத்து, முகத்துக்கு முகமாக நெருக்கத்தில் நிறுத்தி.. இமைதட்டாமல் விழித்தான். பட்டாம்பூச்சியாக படபடக்கிற அவளது இமைகள். கூச்சம் தாளாமல் தத்தளிக்கிற அவள்.

அவனது உத,டுகள் குவிந்து அண்மித்தன. கண்ணுக்கு வந்த உதடுகள் மூடிக்கொண்ட கண்களில் அவனது எச்சிலின் சிலிர்ப்பும், உதடுகளின் அழுத்தமும்.

அவளுக்குள் புல்லரித்தது. அவள் உயிரின் சிலிர்ப்பு. அவன் அப்படியே இறங்கிவந்து, அங்கங்கே நின்று, மூழ்கி எழுந்து மாராப்புச்சேலையை அகற்றியவுடன்...

சிற்றுடம்பின் சின்னவடிவம்.

அவனுக்குள் வந்து போன செண்பகம். அவன் கண்ணில் சட்டென மின்னி மறைந்த ஏமாற்றம். அவனது முகத்தில் மின்னலைப்போல வெட்டி மறைந்த அதிருப்தி.

இவனது உயிருக்குள் அதிர்வலைகள். மனசின் அடியாழத்தில் வந்து மறையாத அச்சம். "தன்னைப் பிடிக்கலியோ" என்கிற சுயபதற்றம்.

கழுத்து நிறைய கிடந்த தங்கநகைகளைத் தடவிப்பார்த்தான். அதை ஒதுக்கும் சாக்கில் வருடுகிறான்.

அப்புறம் அவனுக்குள் ஒருமும்முரம். உடல்தீவிரம். மனமூர்க்கம். மன்மதக்கலையின் உக்கிர நர்த்தனம்.

அவளுக்கு மூச்சு திணறியது. திதும்பி வழிந்தாள். மனநிறைவின் உச்சத்தில் உடல் குளிர்ந்து கனிந்தாள். உச்ச பட்ச திருப்தியில் பல நாட்கள்.

அவனிடம் அவள் மனச்சரணடைந்த உடல் நிறைவுகள். அவன்மீது மையலும், மயக்கமும் கொண்டு மனதளவில் தன்னுள் முழுபுருஷனாக ஏற்றுக்கொண்டவள்.

ஆனாலும்.. இப்படி மனவிலகலாகப் பல சமயங்கள். ஏன் இப்படி? இவருக்குள் வேறு எவளும் இருக்காளா?

53

இரத்தச் சிவப்பு மலையாக முற்றத்தில் உயர்ந்து அகன்று கிடந்தது, மிளகாய் வற்றல். அரைக்குறுக்கத்தில் விளைந்தது. வாளிப்பான சரக்கு, உலர்ந்து காய்ந்து கலகலத்துக்கிடக்கிறது. சண்டுகள் பொறுக்கி விட்டதால்.. தனித்த சிவப்படர்த்தியாக இருக்கிறது.

பக்கத்தில் உருட்டிச்சுருட்டிய தாட்டுக்கட்டு. அவற்றில் பன்னிரண்டு தாட்டுகள் இருந்தன.

அத்தனையையும் அள்ளி தாட்டுகளில் அடைத்து திணிக்கவேண்டும். நாற்சதுரமாக அகலமாக இருக்கும். அதன் உச்சிவிளிம்பின் ஒருபக்கத்தில் வால் இருக்கும்.

நற்சதுரமான புடைப்பாகி விட்ட வற்றல் தாட்டை இந்த வாலைப்போட்டுமூடித்தான் தைக்க வேண்டும்.

கோணுசியும் சணல்களும் தயார். பரமசிவம் தார்ப்பாய்ச்சிய வேட்டியுடன் சுற்றிச்சுற்றி வருகிறார். காமாட்சி நாலைந்து குடங்களில் தண்ணீர் கொண்டு வந்து வைக்கிறாள்.

அழகேசனும் தாட்டுச் சுருட்டை அவிழ்த்தான். அவனுக்கு ஒத்தாசையாக ராஜதுரை. அவனது பால்ய வயதிலிருந்து கூட்டாளி.

"அய்யாவுக்கு வத்தல் அடையணும். வாரீயா ?"

"வரணும்னா_ வான்னுசொல்லு_ அதென்ன வாரீயான்னு ஒருகேள்வி."

அவன் வீட்டு வேலைகள் தோட்டவேலைகளுக்கு இவன் போவான். இவன் வீட்டு வேலைகளுக்கு அவன் வருவான். ராசதுரை தான் கேட்டான்.

"போதுமா, நாம ரெண்டுபேரும்? இன்னும் ரெண்டு பேரை கூட்டுக்கிடுவமா?"

"இன்னும் ரெண்டு பேர் வந்தா, நல்லது தான். வெருசா. ஜோலி முடிஞ்சிடும்."

குடத்துத்தண்ணீரை சருவச்சட்டியில் சாய்த்து, வற்றல்மேல் பரவலாகத் தெளித்தார், பரமசிவம். காய்ந்து உலர்ந்த வற்றல். கால்பட்டால் நொறுங்கி மாவாகும். பரவலாக நீர் தெளித்தால் சற்று பதப்பட்டு துவளும்.

வற்றல் அள்ள அள்ள..தெளித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அப்போதுதான் குவியலின் உட்பகுதியெல்லாம் நனைந்து துவளும்.

"ஏலேய் மூத்தவனே_ தாட்டுக போதுமா?"

"போதும்யா_"

ராசதுரை வாசலை வாசலைப் பார்த்தான். அவன் வரச் சொன்ன கனியும் காளிராசும் இன்னும் வரவில்லையே. வந்துரலாம்.

தாட்டை உருவினான்அழகேசன். நாற்சதுரமான தாட்டை ஆளுக்கொரு முனையில் பற்றிக் கொள்கின்றனர். வெளிப்பக்கமாக சுருட்டி சுருட்டித் தரையோடு விரிக்கின்றனர்.

"வத்தலை அள்ளட்டுமாய்யா?"

"மொதபெட்டியை அம்மாவை அள்ளச்சொல்லு"

எந்த ஒரு காரியமாக இருந்தாலும் காமாட்சிதான் முதல்கைவைப்பாள். ராசியான கை. லட்சுமிகரமான ராசி. தொட்டால் துலங்கும். பொன்னாகப் பெருகும். பூவாக மணக்கும்.

மிளகாய் நாற்று நடுவை என்றாலும் முதல் நாற்று காமாட்சியின் கையால் தான் ஊன்றப்படும். நாற்றங்கால் போடுவது என்றாலும் முதல் மண்வெட்டி அவளது தான். விதைகளைத் தூவுகிற போதும் அவள் கைவிதை தான் முதலில்.

"ஏய் காமாட்சி. இங்கன வா_"

"என்ன_? அடுப்புலே ஜோலியா இருக்கேன் "

"வத்தல் அடையணும். முதப்பெட்டி நீ அள்ளித் தந்துட்டுப் போயிரு_"

" இந்தா வாரேன்"

முகத்தில் வழிகிற வியர்வைக்கோடுகளுடன் வருகிற காமாட்சி. அவள்முகத்தில், பெருமிதமலர்ச்சி. பெருமையின் பிரகாசிப்பு. தன்னை கைராசியான மகராசியாக நினைக்கிற கிழட்டு மகாராசன்.

கடாப்பெட்டியில் வத்தலைக்கோதி.. கையால் வத்தலை உள்ளே தள்ளி.. பெட்டி நிறைய கோபுரங்குத்தியா நிற்கிற மாதிரி.. அள்ளுகிற காமாட்சி. "இந்தாடா_ மூத்தவனே_"

அழகேசன் வாங்கி, தாட்டுக்குள் கவிழ்க்கிறான். ராசதுரை. தாட்டுக்குள் விழுந்த வத்தலை பரத்தி மூலை முக்குகளில் திணிக்கிறான்.

கனி வந்துவிட்டான்.

"வேலை ஆரம்பிச்சிருச்சா ?" என்ற கேள்வியே தாமதத்திற்கான வருத்தத்தொனி. வந்த வேகத்தில் கயலியைமடித்து, இறுகலாகக் கட்டிக்கொள்கிறான். அரைக்கைச்சட்டையைக் கழற்றி அழகேசன் ராசதுரை சட்டை கிடக்கிற இடத்தில் போட்டான். துண்டையெடுத்து தலையில் வரிந்து கட்டிக் கொண்டான். எல்லாம் துரிதகதி.

அவனும் ஒரு கடாப்பெட்டியை எடுத்துக்கொண்டான். பின்னாலேயே வந்து சேருகிற காளிராசும் "அடடே

லேட்டாயிட்டோனோ...? என்ற கேள்வியுடன் துரித கதியில் கனிமாதிரி தயாராகிறான்".

"என்னப்பா_ கனி_ காளிராசு. எல்லாரும் வாங்கப்பா.."

" ஆமய்யா_"

"ஏலமாட்டாத கெழட்டுப் பயலுக்கு ஒத்தாசையா வந்தீகளாக்கும்?"

"இதென்னய்யா பெரிய ஒத்தாசை? அழகு எங்க வீட்டுச்சோலிகளுக்கு முதஆளா ஓடியாருவான்லே?"

"என்ன இருந்தாலும் உஸ்ஸுன்னு படுக்க வேடிய ஒழைச்ச கட்டையை இழுத்துக்கிட்டு வரணும்லே?"

பால்நிற வெளிச்சத்தை தருகிற வெண்ணிறக்குண்டுபல்ப் இவர்களது நிழல்களே இருளாகப் படர்ந்து நகர்கிறது.

"நம்ம மாதிரி சம்சாரிக. ஒண்ணுக்குள்ளே ஒண்ணா உதவிகிட்டு ஒத்தாசையா நின்னாத்தானே.. எல்லார்க்கும் வேலை நடக்கும்?"

"ஏய் காமாட்சி" வீட்டுக்குள் கழுத்தைத்திருப்பி பார்வையை எறிகிற பரமசிவம். உள்ளிருந்துவருகிற குரல். "என்ன?"

புள்ளைகளுக்கு என்னமும் தீம்பண்டம் வாங்கி வைச்சிருக்கீயா?"

"வேலை பாக்குற புள்ளைகளை வெறும் வயித்தோடா, அனுப்புறது? அருங்சொனைத் தம்பி கடையிலே கருப்பட்டி மிட்டாயும் காராச்சேவும் வாங்கிவைச்சிருக்கேன். அதோ புள்ளைகளுக்கு மாவு வடையும் சுட்டு வைச்சிருக்கேன்."

கனி கூச்சமாக சிரித்தான். "என்னம்மா இது வேலைக்கு வந்துருக்கமா_? விருந்துக்கு வந்துருக்கமா?"

"மூத்தவனுக்காக வந்துருக்குற புள்ளைகளை பாத்து மதிச்சு நடத்துறது,பெத்தவுக கடமையில்லியா?"

"இருந்தாலும்.. இது ரொம்ப கூடுதல் தாம்மா"

கனியும் காளிராசும் ஆளுக்கொரு கடாப்பெட்டியில் அள்ளி அள்ளி வத்தலைத்தட்ட, அழகும் ராசதுரையும் தட்டப்பட்ட வத்தலை விரித்துப்பரத்தி தாட்டுகளுக்குள் திணிக்க, சருவச்சட்டி தண்ணீரால் வத்தல் அள்ளப்பட்ட இடத்தில் பரமசிவம் தெளிக்க.. மளமள வென்று வேலை நடந்தது. வற்றலில் நீர் தெளிப்பதால், அவ்வளவாக கமறல் இல்லை. தும்மல்கள் இல்லை. நாசியைத் துளைக்கிற காந்தல் தூசிஇல்லை.

ஆறுதாட்டுகள் நிறைந்துவிட்டன. நால்வரும் பிடித்து மலையைத் தூக்கி நகர்த்திவைப்பது போலத் தள்ளி வைத்தனர்.

காமாட்சி வாசலில் உற்பத்தியானாள்.

"யப்பா புள்ளைக வத்தலுக்கு கொஞ்சம் ஒய்வு குடுங்க"

"என்னம்மா.."

" டீத்தண்ணி ரெடியாயிருச்சு. கொறிப்பான்களை ரெண்டு எடுத்து வாய்லே போட்டுக்கங்க"

"வடையும், கருப்பட்டி மிட்டாயும் சேவும் "கொறிப்பானாம்மா ? பெரிய விருந்தும்மா... "

"இருக்கட்டும். வாங்க. கையை கழுவுங்க"

பதினோரு தாட்டு நிறைந்திருந்தன. மணி பத்துக்கு மேலாகிவிட்டது. பதினோராவது தாட்டை அடைந்து முடிக்கவும் பரமசிவம் கோணூசியும் சணலுமாக தைக்க ஆரம்பித்தார். மற்றவர்கள் தையலுக்குத் தோதாக வற்றல் புடைப்பை முழங்கால் மூட்டுகளால் முட்டி முட்டித்தள்ளினர்.

அருஞ்சுனை சுண்ணாம்பு டப்பாவும் கையுமாக வந்து சேர்ந்தான்.

"என்ன வத்தலெல்லாம் தாட்டுக்கள்லே அடைஞ்சாச்சா ?"

"மூத்தவன் இருக்கான்லே ? பட்டாளத்தோட படை எறங்கிட்டான்லே ?"

பரமசிவம் பெருமிதச்சிரிப்புடன் அவனை எதிர்கொண்டார்.

"என்ன மாப்ளே. கடை எடுத்து வைச்சாச்சா ?"

"வைச்சாச்சு மாமா"

சுட்டு விரலால் சுண்ணாம்பு எடுத்து தாட்டுகளின் முதுகில் இழுவி இழுவி "ஆ.அ.ப" என்ற எழுத்துக்களை எழுதினார். "ஆமர்" நாடு அழகேசன் மகன் பரமசிவம் என்ற அர்த்தம்.

வற்றல் தாட்டுகளை டக்கரில் தூக்கிவிட்டால், சங்கரன் கோவில் அமராவதி நாடார் கமிஷன் கடையில் சரக்கு இறங்கும். மார்க்கட் வந்தால் விலை திகையும். எடைபோடுவார்கள். கடன் இருந்தால் கழித்துக் கொண்டு உடன் பணம் தருவார்கள்.

பரமசிவத்துக்கு கடன் எதுவுமில்லை. முழுமையும் ரொக்கமாக வரும். அருஞ்சுனையிடம் தான் கொடுத்து வைக்கவேண்டும். ஆத்திர அவசரத்துக்கு ஆகும்.

54

சங்கரன் கோவில் கோமதியம்மன் கோவிலும் ராவுத்தர் கடை பிரியாணியும் எத்தனை பிரபல்யமோ- அதே அளவுக்கு விவசாய சமுத்திரம் அலையடித்து மோதுகிற கமிஷன் கடைகளும் ரொம்ப பிரபல்யம். கார்த்திகை மார்கழிகளில் விவசாயக்கடன் கேட்டு வத்தல் சம்சாரிகள் படைபடையாக வந்து மோதுவார்கள்.

"எனக்கு ஐயாயிரம் வேணும், பத்தாயிரம் வேணும்" என்று கோரிக்கை வைப்பார்கள். "பம்பாய்லேயிருந்து ரூவா வரலே" சிங்கப்பூர்லே சரக்கு நின்னுக்கிடுச்சு" என்று கமிஷன் கடை முதலாளிகள் பஞ்சப் பாட்டு பாடி கண்ணீர் மூடுவார்கள்.

ஆனால் தானிய மூடைகள் கடலை மூடைகள் கொண்டு வந்து இறக்குகிற சேந்தமரம் புளியங்குடி சம்சாரிகளுக்கு கட்டு கட்டாகப் பணத்தை உடைத்து அட்டியில்லாமல் பட்டு வாடா செய்வார்கள்.

"அப்ப- ரூவா தரமாட்டீகளாக்கும்?" என்ற வருத்தக்குரலில் சடைத்துப்புளித்து மனக்கோணலாக புறப்படுகிற வத்தல் சம்சாரிகளையும் விட்டுவிடமாட்டார்கள்.

"வர்ற திங்கக்கெழமை வாங்க. ஏதோ எங்களாலே ஏண்டதைத் தாரோம். வத்தலை சிந்தாம சிதறாம கொண்ணாந்து சேக்கணும்"

"எங்க வத்தலை நாங்க எதுக்குச் சிதறணும்?"

உள்ளூர் ஏவாரிக்குப் போட்டுட்டோம்... அப்படி இப்படின்னு சிதறிரக் கூடாதுல்லே? நாங்க ஒக்காந்துருக்குறதே... கமிஷன் வருமானத்துக்குத்தானே?"

திங்களும் சனியும் புதனுமாக நேர்த்திக்கடனுக்கு அலைகிற மாதிரி அலைந்து கடன் வாங்குகிற சம்சாரிகள் தாம் எல்லோரும். கடனே வாங்காமல் ஒதுங்கி நிற்கிற சம்சாரிகள் பரமசிவத்தைப் போல ஒண்ணுரெண்டு பேர் தாம்.

சித்திரை பிறந்து இருபதுக்கு மேலாகிவிட்டது.தேதி. உருக்கி ஊற்றிய வெயிலாகக் கிடந்து தகிக்கிறது. கமிஷன் கடையின் உட்பக்கமெல்லாம் வரிசை வரிசையாக வற்றல் மலைகள். ரெண்டுபக்கமும் ஓலைப்பாய் மடிப்பு சுவராக நிற்க, வற்றல் குவியல் குமியின் முகத்தில் தாட்டுக்கட்டு. சுருட்டிய கட்டு. வத்தல்குமியின் உச்சந்தலையில் ஊன்றப்பட்ட மூங்கில் குச்சிக்கீறலில் சொருகப்பட்ட வெள்ளைக்காகிதம்.

"ஆமர்நாடு பரமசிவம் வற்றல் 11 தாட்டு 1 போரா" என்ற எழுத்துகள். கடைமுழுவதும் காய்ந்த வற்றலின் காரலான கமறல்நெடி தும்மலும் துரத்தலுமாக திமிலோகப்படுகிறது.

எல்லோரும் பஸ்ஸில் பையும் கையுமாக முதலாளிகள் மாதிரி தடபுடலாக வந்து சேர்ந்தனர். டக்கரில் ஏற்றப்பட்ட மிளகாய் வற்றல் தாட்டுப் பாரம், ஊஞ்சலாடும் கோபுரத்தேரென அசைந்தாடி அசைந்தாடி வர அதன் உச்சியில் உட்கார்ந்து வெயிலில் வெந்து இறங்கிய பரமசிவம்.

"இன்னிக்குமா வெயில்லே கெடந்து வேகணும்?"

வியப்பும் பரிகாசமுமான இக்கேள்வி, இயல்பானது. அன்றாடம் காடுகரைகளில் வேனாக் கொதிக்கிற வெயிலில் வெந்து கருகி வேர்வை சிந்தி, கஞ்சியையும் கூழையும் குடிப்பதே பிழைப்பு என்று வருஷம் முச்சூடும் சீரழிகிற சம்சாரிகளுக்கு... கடன் வாங்க வற்றல் விற்க சங்கரன் கோவில் வந்துபோவது, ஒரு திருவிழாக் கொண்டாட்டம் மாதிரி. விட்டு, விடுதலையான உல்லாச மனசின் ஆகாயச் சிறகடிப்பு.

வெள்ளை வேட்டியும் துவைத்த சட்டையுமாக அணியலாம் ,குளுகுளு வென எண்ணெய் தேய்க்கலாம். பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து நிழலும் காற்றும் தாலாட்ட கண்கள் சொருக, பயணம் செய்யலாம்.

சங்கரன் கோவில் டவுனை வேடிக்கைபார்க்கலாம். கார்கள் லாரிகள் மஞ்சள் வாகனங்கள் என்று பறக்கிற பெட்ரோல் வாசப் பரபரப்பு.

கோவிலைச் சுற்றி வரலாம். "போற்றி போற்றி" என்று எழுதப்பட்ட வெண்ணிற வரிகளையும் பார்க்கலாம். யானை கட்டிக்கிடக்கும். பச்சைப் பசேலெனத் தண்ணீர் கிடக்கிற கோவில் குளத்தில் மீன்கள் துள்ளுகிறபோது வெயில் மின்னும்.

பஜ்ஜியும், சுசியமும், வடையும் சாப்பிடலாம். டீயடிக்கலாம். கோமதி தியேட்டரில் சினிமா பார்க்கலாம். முத்தையா நாடார் கிளப் கடையில் கறியும் முட்டையுமாக மீனும் குழம்புமாக வளைத்து மாட்டலாம், வாய்க்கு ருசியாக.

இப்படி ஒரு கோலாகலக் கொண்டாட்டத்தில் குதூகலிக்கலாம் என்கிற சந்தோஷத்துள்ளலோடு தான் ஒவ்வொருசம்சாரியும் வருவார்கள். பரமசிவம் இன்றைக்கும் வழக்கமான சுவாசப்படியே வருகிறார்.

இன்னைக்கு என்ன? என்னது அதிசயமா? பாடுபட்டு வெளைய வைச்சதைப் பணமாக்க வந்துருக்கோம். இதுலே என்ன இருக்கு?

"இன்னைக்கு ஒரு நாளாச்சும் காலாற சுத்தி கண்ணார ரசிச்சு, வாய்க்குருசியா சாப்புடலாம்லே?"

"வெயில்லேயும் வேர்வையுலேயும் கூடவே கெடந்து சீரழியுற பொண்டாட்டியையும் பெண்மக்களையும் விட்டுவிட்டு வந்து.. நாம மட்டும் ஒத்தையிலே அனுபவிக்கலாமா? பாவமில்லியா அது?" என்று அவர் பேசுகிற பேச்சில், ராவுத்தர் கடைப்பிரியாணி தந்த திருப்தி மாயமாகிவிடும்.

வற்றல் குமியை பார்த்தார். தாட்டுக் கட்டு மேல் பல கால்கள் மிதித்த அடையாளம். குமியோர வத்தலும் காலடி மிதிபட்டு நொறுங்கிக் கிடக்கிறது.

பரமசிவத்துக்குக் கொதிக்கிறது மனசு.

"எருவமாடுக எருவமாடுக எருவமாடுக" கொதிப்பும் குமுறலுமாக மொறுமொறுக்கிற பரமசிவம்.

"ரவ்வுன்னும் பாராம, வெயில்னும் பாராம, கிடந்து மாடாய் பாடுபட்டு வெளைய வைச்சு பொன்னோ பூவோ ன்னு பொத்திப் பொத்தி பாதுகாத்து.. துட்டாக்கலாம்னு கொண்ணாந்து குமிச்சா.. .கிடைமாடுக மாதரி மிதிச்சு நாசக்காடு பண்ணுதாகளே.."

கொதிப்பான முணுமுணுப்பில் "தஸ்ஸு புஸ்ஸு" என்று மூச்சிரைக்கிறது. நெஞ்சுரோமம் ஏறி இறங்குகிறது. கூட்டம் ஜாஸ்தி. உட்கார இடமில்லை. உள்ளே போகிற வருகிற சம்சாரிகள். பீமன்கள் மாதிரி பிரம்மாண்டத்தோற்றத்துடன் ஓடியலைகிற லோடு மேன்கள்.

மதியம் ஒண்ணரை மணிக்கு மார்க்கெட் வந்தது. வெள்ளைப்பளீரிடுகிற தேய்ப்புச்சட்டைகள் பவுடர்பூச்சுமுகப் பளபளப்பு. ரிஸ்ட் வாட்சும் மோதிரங்களுமாய்க் கூட்டமாக வருகிற வியாபாரிகள், வியாபாரிகளின் ஏஜெண்டுகள். வேறொரு உலகத்து வினோத மனிதர்கள். எல்லார் நெற்றிகளிலும் வெண்திருநீற்றுப் பட்டைகள். நடுவில் குங்கும வட்டத்துக்குள் சந்தனப்புள்ளி.

அவர்களையே வேடிக்கையும் வெறுப்புமாக பார்க்கிற கிராமத்தாட்கள். இவர்களது ஒரு வருஷ உழைப்புக்கு அவர்கள் தாம் விலை நிர்ணயிக்கப்போகிறார்கள். இவர்களது வியர்வைத் தொழிலின் தலையெழுத்தை எழுதுகிற பிரம்மாக்கள்.

மதிய வெயிலின் உக்கிரத்தைப் பொருட்படுத்தாமல், சாப்பிடக் கிளம்பிய சம்சாரிகள். சாமான் செட்டுகள் வாங்கப் போனவர்கள். விதைமூடை வீட்டுப் பொருட்கள் வாங்குகிறவர்கள்.

மார்க்கட் நடந்து விலை நிர்ணயம் ஆனவுடன் எடைபோடுகிறவர்களின் மும்முரம். நாலாள் உயரத்தராசு விட்டமும் பத்துக்கிலோ படிக்கற்களுமாய் வியர்வைப்பெருக்கும் மூக்குச் சீறலுமாய் லோடுமேன்களின் உச்ச பட்ச பரபரப்பு. விறு விறுப்பு. வேகப் புயல்சீறல்.

எடைபோடப்படுகிற குமியின் உச்சியில் கிடந்த மூங்கில் குச்சிக்காகிதத்தை வைத்துக்கொண்டு பேப்பரும், பேனாவுமாக கணக்குப்பிள்ளை. குமியின் கடைசி விதைகளையும் நொறுங்கல்களையும் கைப்பலகையால் "வரட், வரட்" டென்று கூட்டி வழிக்கிற லோடு மேன்கள்.

எடை முடிந்தவுடன் கூவல் காடு.

"மூவாயிரத்து நானூத்தி எழுபத்தைந்து என்று தீர்ந்த ஆறுமுகம் வத்தல். ஏழுதாட்டு ரெண்டு சாக்கு. எடை நாலு குவிண்டால் எம்பத்தெட்டுகிலோ"

லோடுமேன் சவுண்டு கணக்குப்பிள்ளை சவுண்டு. சிட்டையை வாங்கிவருகிற கடைப் பையனின் கூப்பாடு.

சிட்டையில் குறிக்கப்பட்டிருக்கிற விலையும் எடையும்

கல்லாப்பெட்டிக்கு வந்து சேருகிற சிட்டை. கால்குலேட்டரும் கையுமாக கணக்குப் பார்க்கிற கணக்குச் செட்டியார், டோட்டல் தொகையை போட்டனுப்ப வண்டி வாடகை தந்தது. கைச்செலவுக்கு பணம் தந்தது போன்றவற்றைக் கூட்டிச் சேர்த்து மொத்தத் தொகையில் கழித்து...

"வாங்குன கடன் இருக்கா ? எம்புட்டு ? என்று கேள்வி கேட்டு அதற்கான வட்டித்தொகையைப் பெருக்கி எல்லாம் கழித்து கல்லாப் பெட்டி முதலாளியிடம் சிட்டை வருகிறபோது,

ஆமர் நாடு ஆறுமுகம் எங்க இருக்காரு ? வாரும்யா ? லட்சுமியை வாங்கிட்டுப் போரும்யா" என்ற சத்தமான அழைப்புடன் பட்டுவாடா நடக்கும். ஒரு வருஷ உழைப்புக்கான தலையெழுத்து கையில் பணமாக வந்து விழும்.

எந்தக்கழிப்பும் கழித்தலும் கடனுடனும் இல்லாமல்-சிந்தாமல் சிதறாமல் வந்து சேருகிற பரமசிவம் சிட்டை. கமிஷன் தொகை மட்டுமே கழித்தல் மற்றபடி அப்படியே மொத்தமாக இருபத் தொட்டாயிரத்து எண்ணூற்றி எழுபது ரூபாயும் ஐம்பது பைசாவும்.

"ஐயா-ஆமர்நாடு பரமசிவம் வாரும்யா ?"

"ஐயா. இந்தா இருக்கேன்யா"

"பாயிலே உக்காரும்யா..."

"இருக்கட்டும்யா"

"ப.முருகேசனுக்கு இருபத்திரண்டாயிரத்து முந்நூறு ரூபாய் பற்று இருக்கு. போன வருஷப்பற்று. ஒரு தாட்டு வத்தல் கூட வரல்லே. அது ஒம்ம மகன் தானே ?"

பரமசிவத்துக்கு முட்டிப்பாக இருந்தது. மனசுக்குள் மூச்சுத்திணறல். இல்லையென்றும் உதற முடியாது. ஆம் என்று ஏற்றுக்கொள்ளவும் இயலாது. வெறுப்பும் கோபமுமாக இருந்தது. ஒரு பெரிய சபையில்அவமானப்பட்டு தலைகுனிந்து நிற்கிற அவலநிலை பரமசிவத்துக்கு. முகம் கறுத்து விட்டது. உதடெல்லாம் உலர்ந்துவிட்டது.

"வெளங்காத பயலை பெத்து வளர்த்த பாவம் இப்படி வெட்டுப்பட்ட தலையாகத் தொங்கிக்கிடக்க வேண்டியிருக்குது" என்று உள்ளுக்குள் சோகமும் வேதனையுமாக முணுமுணுக்கிற வியர்வை வீரமனிதர்.

"என்னய்யா, பரமசிவம். முருகேசன் ஒம்மகன் தானே"

கறுத்துப்போன இருண்ட மனசோடு தலையைமட்டும் சோகமாக ஆட்டுகிற பரமசிவம்,. ஒரு கோவில் தேரே கம்பீரம் குலைந்து சித்திரம் அழிந்து கிடக்கிற கொடூரம்.

"அப்ப அந்தப்பற்றை.. ஒம்மருவாயிலே வரவு வைச்சிரலாமா ?"

"அது முடியாதுய்யா"

"ஏம்யா... ? புள்ளே வேற, அய்யா வேறயா ?" "தாயானாலும் புள்ளையானாலும் வாயும் வயிறும் வேற வேற தானய்யா ?"

"சொலவடையெல்லாம் சரி. எங்களுக்கு பற்று வரவு வந்தாகணும்லே ?"

"அவன் வெவசாயம் வேறய்யா. வரவு செலவு தனிய்யா. என்னோட வரவு செலவு வெவசாயம் வேறய்யா_"

"ஒம்ம சொத்து,புள்ளைக்குத்தானே ?"

"இதெல்லாம் என்ன பஞ்சாயத்து ? உங்க கடையிலே வத்தல்தாட்டுகளை எறக்குன குத்தத்துக்கா ? ஏங்கணக்கை எந்தப்பேச்சுமில்லாம முடிக்க வேண்டாமா ?"

கோபக்குமுறலோடு சத்தத்தை உயர்த்துகிற பரமசிவம்.

"இல்லேய்யா கோபப்படாதீரும். ஒம்மகனுக்கு ஒரு கடன் வட்டி அவமானம்னா அது ஒமக்கும் இல்லியா ?"

"இதெல்லாம் உங்களுக்குத்தேவையில்லாதது. அப்பன் புள்ளை ஒறவைப்பத்தி உங்களுக்கு என்ன பஞ்சாயத்து? இது என்ன வம்பு வழக்கு? நா பாடுபட்டு வெளைய வச்ச வத்தலுக்கு ஞாயமான உரிய தொகையைத் தரப்போறீகளா?

"தர்ரேன்யா இருந்தாலும் எங்க பாக்கி வரணும்லே?"

"அதுக்கு நானா பொறுப்பு? என்னைக்கேட்டா, கடன் குடுத்தீக...? இப்ப ஏங்கணக்குச் சிட்டையை முடிக்கப் போறீகளா..? இல்லியா? வேற பேச்சே வேண்டாம்."

கோபத்தின் உச்சத்தில் பரமசிவம். சுற்றி உள்ளவர்கள் வேடிக்கை பார்க்கிற அவமானம். உள்ளூர்க்காரர்களும் நின்று பார்த்துரசிக்கிற கேவலம் தகப்பமனசு கொதிக்கிறது. அந்த அவமான அவஸ்தையின் ரணத்துடிப்பு. கோபச்சீறலாக வெளிப்படுகிறது.

பணத்தை முழுமையாகப் பெற்றுக்கொண்டு கோப முணுமுணுப்பும் குமுறல் புலம்பலுமாக வெளியேறுகிற பரமசிவத்தின் மனசெல்லாம் அவமான உணர்வு.

மொத்த உலகமே முதுகுக்குப் பின்னால் கைதட்டிப் பரிகசித்து கூத்தடிக்கிற மாதிரியான மனப்பிரமை.

55

பாலையா நாயக்கர் புஞ்சையில் பன்னிரண்டு ஆட்கள் பருத்தி எடுக்கின்றனர். ரெண்டு குடங்களில் குடிதண்ணீர் கொண்டு போய்விட்டனர். மற்றவர்கள் புஞ்சை யென்றால் தண்ணீர்ச் சுமை புஞ்சைக்காரர் பொறுப்பு. பருத்தியை மடிகளில் நிறைந்துவிட்டால் அதைவாங்கி சாக்குகளில் திணிப்பதுவும் புஞ்சைக்காரர் பொறுப்பு. புஞ்சைக்காரர் கூடவே இருப்பார்.

"சும்மா நின்னு பொழுதைத் தேய்க்காதீக. "பொடு பொடு" ன்னு பருத்தி யெடுங்க. வாங்குகிற கூலிக்கு வஞ்சகமில்லாம சோலியைப் பாருங்க" என்று கண்காணித்து வார்த்தைகளால் தார்க்குச்சி இடிப்பார். வேலையாள்களை விரட்டி வேலை வாங்குவார்.

இந்தப்புஞ்சையில் முருகேசன் கிட்டவே வரமாட்டான். எல்லாம் அவரவர் பாடு. அவரவர் மனசாட்சிப்படி வேலைகள் நடக்கும். சாக்குக்கட்டையும் கூலியாட்களே கொண்டு வந்துவிடுவர். வாங்கித்தட்டுவதுவும் அவர்கள் பாடுதான் "ஏய்ய்" ன்னு ஏவுவாருமில்லை; ஆய்ய்னு அதட்டுவாருமில்லை.

முருகேசன் டீக்கடைகளில் உட்கார்ந்து பத்திரிகை வாசிப்பான். டீயும் வடையும் சாப்பிடுவான். பத்துமணிக்கு சாப்பிட வீட்டுக்கு வருவான். ஈஸ்வரி காலையிலேயே எழுந்து வீட்டு வேலைகள் செய்வாள். ஆடு குட்டி கிடையாது. மாடுகன்னும் கிடையாது. அடுப்பு வேலைதான். சுடுசோறு, சாம்பார், ரசம், ஒருகூட்டு தயாரித்து விடுவாள். அதுபோக ஆம்ப்ளேட்

போடுவதற்கான வெங்காயம் மிளகாய் அறுத்துவைத்திருப்பாள். இவன் தலை தெரிந்தபிறகு தான் முட்டையை உடைத்து, சீரகத்தூளும் உப்புத்தூளும் போடுவாள்.

சுடச்சுட முட்டை பொறித்துத்தருவாள். ஆம்ப்ளேட்டைவிட பொரியல் தான் முருகேசனுக்கு ரொம்பப் பிடிக்கும்.

"வீடு வந்தபிறகு ஈஸ்வரியிடம் தான் விசாரிப்பான். "பருத்தியெடுக்க ஆள் போயிருக்கா ?"

முட்டையை உடைத்து கலக்கி வெங்காயத்தை வதக்கலில் ஊற்றி, கரண்டியால் கிளறிக் கொண்டே ஈஸ்வரி சொல்வாள்.

"போயிருக்காக_"

"பன்னெண்டுபேரு போயிருக்காளோ ? யாராச்சும் வராம நின்னுக்கிட்டாகளா ?"

"எல்லாரும் போய்ட்டாக..."

"தண்ணி ?"

"ரெண்டு கொடம்தூக்கிட்டுப்போயிருக்காக. சாக்குக்கட்டும் கொண்டு போயிட்டாக"

பேச்சு பேச்சாக நடந்து கொண்டிருக்க, அவன் கால்கையைக் கழுவி முகம் கழுவி துடைத்துக்கொண்டிருப்பான்.

"சோறுவைக்கீயா ?"

"ம்_ வாங்க உக்காருங்க"

வட்டிலில் அரிசிச் சோற்றில் ஆவிபறக்கும். வட்டிலைச்சுற்றி சிறிய சிறிய எவர்சில்வர் பாத்திரங்களில் சாம்பார் ரசம் இருக்கும். தயிரும் இருக்கும். அதற்கான கரண்டிகள். பக்கத்தில் சிறிய கிண்ணத்தில் கத்தரிக்காய் கூட்டு. சின்னஞ்சிறு எவர்சில்வர் தட்டில் அவள் பொரித்த முட்டை இணுக்குக்குவியல்.

அவன் வட்டில் முன் உட்கார்ந்து சோற்றின் ஓரத்தில் நுனிவிரல்களால் சோற்றைக் கிளறினான்.

"நீ_ சாப்ட்டுட்டீயா ?"

"அப்பதேய சாப்புட்டுட்டேன்"

"டீத்தண்ணி போட்டு... வேலையாளுகளுக்கு நீ கொண்டு போய் குடுத்துருதீயா ?"

"ம் சரி_ அருஞ்சொனை அய்யா கடையிலே ஒரு கிலோ சேவு வாங்கிட்டு அவுகளுக்கு குடுத்துரட்டா ?"

"குடுகுடு_ அப்பத்தான் வேலை நல்லபடியா நடக்கும்"

சாம்பார் ஊற்றி .. நாலு கவளம் சாம்பாரும் ரசமும் ஊற்றி நாலுகவளம் தயிரில் பிசைந்து நாலுகவளம் என்று அவன் சாப்பிடுகிற பக்குவமே தனி. நுனிவிரல்களால் பிசைவதும் உள்ளங்கைபடாமல் நுணுக்கி எடுப்பதுவும், உதடுதிறக்காமல் உள்ளே வைப்பதுவும் வாய்திறக்காமல் மெல்லுவதும் எல்லாமே ஓர் அழகு. சுத்தமான ஒழுங்கு மென்மையான அணுகு முறை. எல்லாவற்றிலும் ஒரு நாசூக்கு. கச்சிதமான நுட்பம்.

அவள் சாப்பிடும் அழகையும் நிதானத்தையும் கண் குளிரப் பார்ப்பாள் ஈஸ்வரி. அவளுக்கு அது ரொம்பப் பிடிக்கும். ரசனையோடு வைத்த கண் எடுக்காமல் பார்ப்பாள்.

பட்டிக்காட்டான் என்றாலே "சத, புதா" வென்று பிசைந்து அரக்கப் பறக்க அள்ளி வாயில் அப்புவான் என்ற நினைப்பை தகர்க்கிற முருகேசன் படித்த ஆபிஸர்போன்ற நுணுக்கமாகவும் மென்மையாகவும் நிதானமாகவும் உண்ணுகிற மகாநேர்த்தி.

இவன் சாப்பிடுவதை ஈஸ்வரி ரசிக்கிற மாதிரி மற்றவர்யாரும் ரசிக்கமாட்டார்கள். வெறுப்பும் கடுப்புமாக அசூயையோடு பார்ப்பார்கள்.

"வேலையத்த சோம்பேறிப் பய சாப்புடுறதே அநியாயம். அதுலே என்ன நாகரிகம் வேண்டிக்கிடக்கு ? பாடுபட்டு வேர்வை சிந்துனா.. "அவக், தொவக்" னு சாப்புட்டுட்டு வேலையைப் பாத்து ஓடுவான். இது வெட்டிக்கழுதை. வீணான சோம்பேறி. இவன் திங்குறதும் ஒண்ணுதான். திங்காததும் ஒண்ணுதான். சும்மாவே சுத்துற வெத்துக்கழுதைக்கு பசிக்கவா போகுது ?" என்று எரிச்சலும் ஏளனமுமாக முணுமுணுப்பார்கள்.

சாப்பிட்டு முடித்த களைப்பு. நேரங் கடந்த வயிற்று நிறைவு. அதனால் ஏற்படுகிற ஆயாசம். நரம்புகளில் தளர்வு. அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டான். முட்டையின் பொரியல் மணம் நாவில் ருசிக்கிறது. வயிறு நிறைந்து வந்த ஏப்பத்தில் சாம்பார் வாசம் நெஞ்சுக்குள் பரவுகிறது.

"அப்ப_ நா_ கடைக்குப் போய்ட்டு வாரேன்"

ஈஸ்வரி மஞ்சள் பையுடன் புறப்படுகிறாள்.

போகிற ஈஸ்வரியையே பார்க்கிற முருகேசன். அவளது வெறுங்கழுத்து. நகையில்லாத சூன்யப்பகீர் பேங்குக்குள் போய் விட்ட தங்கச் சங்கிலிகள். உரஉப்பாகவும் பூச்சி மருந்தாகவும், களைவெட்டுக் கூலியாகவும் போய் மறைந்த தங்கநகைகள்.

கேட்காமலேயே கழற்றித்தருகிற ஈஸ்வரியின் மனஇளக்கம். பாயில் எல்லாவற்றுக்கும் சம்மதிக்கிற மனப்பணிவு. பொங்கிக் குமுறினாலும் பூரித்துத்துவள்கிற மனசு. பொங்கிவிட்டு "அம்போ" வென்று பாதியில் விட்டாலும்... வெறுப்பையோ கசப்பையோ காட்டாமல் பரிவுடன் சகிக்கிற அவள்.

இப்படியொரு பெண்ணா ஈஸ்வரி ? வசதியான குடும்பத்தில் பிறந்து ஒற்றைப்பிள்ளையாக செல்லமும் செல்வமுமாக வளர்ந்த பெண். தாயில்லாக் கவலை தவிர வேறு எந்த இல்லாமையையும் ருசிக்காமல் வளர்ந்த பெண். குதூகலக் கூத்தாட்டமாக... துள்ளியோடும் மானாக இருந்தவள்.

இப்படிப்பட்ட பெண்ணிடம் இந்த மனசா ? இந்தப் பணிவா ? இத்தனை நெகிழ்வா ?

அய்யாவிடம் சவால் விட்டு வீராப்பு பேசி ஊரைக் கூட்டி, நிலத்தை வாங்கி விவசாயம் ஆரம்பித்த முதல் வருஷத்திலேயே முப்பத்தேழாயிர ரூபாய் கடன். வரப்போகும் வருஷங்களை எண்ணி கதிகலங்கிப் போயிருந்த சமயத்தில் தான்_

வலியவந்த சண்முகம். அவருக்கான சொத்துகள். நிலபுலன் வீடுகள். தடபுடல் வசதிகள் ஒரே மகள். அத்தனை சொத்தும் வந்துசேருகிற வாய்ப்பு.

அந்த சபலத்தில் தான் செண்பக இழப்பை சகித்துக் கொண்டான். கடனிலிருந்து மீளலாம். ஈஸ்வரி மூலமாக வருகிற சொத்து சுகத்தை விவசாயத்தின் நெருக்கடியிலிருந்து மீள்வதற்குப் பயன்படுத்தலாம்.

விவசாய முன்னேற்றத்துக்கும் வெற்றிகளுக்கும் உதவியாக்கிக் கொள்ளலாம்.

இந்த நம்பிக்கையில்தான்... செண்பகத்தைப் பறிகொடுக்க சம்மதித்தான். அப்படியொரு வெற்றியையும் முன்னேற்றத்தையும் இவன் அடைய வேண்டும் என்பது தான் செண்பகத்தின் கனவு. இலட்சியம்.

அதற்காகத் தான் தன்னிடம் கெஞ்சினாள். ஈஸ்வரியை கல்யாணம் பண்ண சம்மதிக்காவிட்டால், "என்கட்டை சுடுகாட்டில் சாம்பலாகும்" என்று கண்ணீரோடு மிரட்டினாள்.

தனது முன்னேற்றத்திற்காகவும் வெற்றிக்காகவும் அவள் தன் வாழ்வையே அர்ப்பணித்தாள்.

எல்லாமே வீணாயிற்று. கல்யாணம் முடிந்த ஆறாவது மாதம் சண்முகம் இறந்தார். சண்முகம் இறந்த பிறகுதான் ரகசியமாக மறைந்துகிடந்த அனைத்துக் கடன்களும் விசுவரூபமாக எழுந்து ராட்சஸமாய் ஆர்ப்பரித்து நிலபுலன் வீடு எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பம் போட்டு மறைந்தது. கழுத்து நகைமட்டுமே ஈஸ்வரிக்கு மிச்சமாயிற்று.

அந்த முப்பத்தைந்துபவுன் நகைதான் மிச்சம்.

இந்தப் பேரிடியும் பேரிழப்பும் முருகேசனை பெரும் ஏமாற்றமாக தாக்கியது. அவனது நம்பிக்கைகளின் ஆணிவேரை அறுத்தெறிந்தது.

சர்வநாசமாயிற்றே என்று பகீரிடுகிற மனச்சூன்யம். எல்லா கனவுகளும் கருகிச் சாம்பலாயிற்று.

செண்பகத்தின் தியாகமும் இவனது சபலமும் வெறும் சூன்யமாகிவிட்டன. பொய்யாய், பழம்நினைவாய் மண்ணில் கொட்டிய அமிர்தமாயிற்று.

இது முருகேசனைத் தாக்கியது போலவே ஈஸ்வரியையும் தாக்கியது. புகலற்ற நிலைமையை உணர வைத்தது. நாதியற்றுப்போன நிஜத்தை உணர வைத்தது.

அதுதந்த பணிவு. அதனால் வந்த சகிப்புத்தன்மை. அதனால் நிகழ்ந்த சுபாவமாற்றம். செல்லமாய் வளர்ந்த ஈஸ்வரி காலடிப்புழுவாக நெளியப்பழகிக்கொண்டாள். கவலையற்றுச் சிறகு விரித்த அந்தப்பறவை முருகேசனின் விருப்பக்கூண்டுக்குள் அடங்கியிருக்க கற்றுக் கொண்டது. முருகேசனின் நல்ல மனசையும் தொட்டுணர்ந்தாள் உயிரால்.

இருப்பது போலத் தோற்றம் காட்டிய சொத்து மாரீசமான் மாயமான தருணத்தில்..... ஏமாந்தான். அதிர்ந்தான். மனத்தெம்பை இழந்தான். முகம் இருண்டான்.

ஆனால், ஈஸ்வரியை திட்டவில்லை. "சீ நாயே," என்று தள்ள வில்லை. "போடி.... வெறுங்கழுதை" என்று வெறுக்கவில்லை. பரிவுடன் அணைத்துக் கொண்டான்.

அதிருப்தி, அவநம்பிக்கை, ஏமாற்றம், விரக்தி எல்லாவற்றையும் உள்ளுக்குள் விழுங்கிக்கொண்டு, இவளை ஆதரவாகப் பார்த்துக் கொண்டான். அன்புக் கதகதப்பை வழங்குகிற மனக்கவசமாக நின்றான்.

அந்தப் புருஷன் பேராண்மையுடன் இவளது தந்தையுமானான்.

அந்த நற்பண்பை, இவளது உயிர் தொட்டுணர்ந்தது. அவனது காலடியில் மனச்சரண் அடைய வைத்தது. இவனது சேவகியாக இவனது பாதபூஜை செய்யத் துணிந்தாள்.

இதோ... கொதித்த டீத்தண்ணி ததும்புகிற பெரிய தூக்குவாளியும், சேவுப் பாக்கட்டும், பான்பராக்கு பாக்குச்சரமுமாக புஞ்சைக்கு புறப்படுகிற ஈஸ்வரி.

"அப்ப— நா போய்ட்டு வரட்டா?"

56

காமாட்சி அரிசியை அலசி, இரைந்து கொண்டிருந்த உலையில் போட்டாள். அள்ளி அள்ளி. விறகுக்கட்டை "கணங்கண"வென்று கனன்றெரிகிறது. அடுப்புக்கு வெளியே எரிந்து வருகிற தீயின் கங்குகள் சிறுசிறு வெடிப்புச் சத்தம் போட்டது. அவளது முழங்காலுக்குக் கீழ்ப்பட்ட கெண்டைச் சதையெல்லாம் அனல் காந்தியது. தீ நாக்கின் சிவப்பொளியும் வந்து தொடுகிறது.

உப்பை அள்ளி... உள்ளங்கையில் வைத்து "கணிசம்" பார்த்து, உள்ளே போட்டு உலையை மூடினாள். அரிசியும் உப்பும் விழுந்து நுரை பொங்குகிறது. உலை கொதித்த இரைச்சல் கூடிற்று.

காமாட்சியின் கண்கள் இங்கே இருந்தாலும், மனசெல்லாம் முருகேசன் நினைப்புகள் மொய்க்கின்றன. அவனைப் பற்றிய கவலைகள்.

சங்கரன் கோவில் கமிஷன் கடையில் வைத்து நடந்த கசகசப்பு. பல ஊர்க்காரர்களுடன் உள்ளூர் ஆட்களும் பார்க்க நடந்த கேவலக் கூத்து.

முருகேசனைப் பற்றி... அவன் வைத்திருக்கிற பற்று பற்றி.... வற்றல் ஒரு தாட்டு கூட வராத ஏமாற்றுபற்றி நடந்த சர்ச்சைகள்.

வத்தல் வராத முருகேசன் பற்றைக் கழித்து விடுவதாக இவரிடம் நடந்த வாக்குவாதங்கள்.

ஊரெல்லாம் இந்தக் கேவலக்கூத்தையே பேசிப் பேசி குறுஞ்சிரிப்பு சிரிக்கிற ஆட்கள். ஊர்ப்பாயாசத்தை சூடாற்றி சூடாற்றி, ருசித்து ருசித்துக் குடிக்கிற ஊர் ஜனத்தின் சந்தோஷம்.

பரமசிவத்துக்காகப் பரிதாபப்படுகிற தொனியில் பேசுகிறவர்கள் முருகேசனைப் பழித்தும் இழித்தும் பேசிக் கிழிப்பவர்கள்.

"மானமரியாதையோட பாடுபட்டு காடுகரைகளை, மாடுகன்னுகளை வாங்கி வளர்த்த பாட்டாளி மனுசரு, பரமசிவம். அவரோட தலைக்கிரீடத்துலே சாணியள்ளிப் போடுறான். இந்தச் சண்டாளப்பய"

"விலாவுலே வெடிச்ச பய....! சோப்பு நுரையும், பவுடர் நாத்துமுமா மூஞ்சி மொகரை பளபளத்து என்ன செய்ய? பொழைப்பு ஞாயம் "பப்பலா... பலாப்பலா"ன்னு வாயைப் பொளந்து கெடக்குதே..."
"வெரல்நகத்துலே அழுக்குபடாம வாழ்ந்து வாழ்ந்து, முழு வாழ்க்கையையும், நகரலாயிட்டானே..."

"கொஞ்சக்கடனா.....? ஆறு வருஷ வெள்ளாமையிலே ஒன்றரை லட்சத்துக்கு மேலலே பிக்கல் பிடுங்கல்கள். புஞ்சையை வித்தாலும், தப்பிச் சிரமுடியுமான்னு தெரியலே.."

"இதுலே... எக்ஸ்.எல். வண்டி வேற. பூவும் பகட்டும் ஜாஸ்தி..."

"ஒய்யாரக் கொண்டையாம்... ஊர் மணக்கும் தாழம்பூவாம்! உன்னே பிரிச்சுப்பார்த்தா... ஈரும் பேனும் நாறிக்கிடக்குமாம். இந்தச் சொலவடை இவனுக்குன்னே வந்த மாதிரி அப்படியே பொருந்துது"

தெரு முழுக்க இவன் தான் பேச்சு. டீக்கடையில் இவன் பாயாசம் தான். ஊர்மடத்தில் பத்து பேர் குந்த வைத்தால்... இவன் கூத்து தான். நாலுபேர் கூடுகிற இடமெல்லாம் இவன் பேச்சு தான்.

பேசிக் கொண்டிருக்கிற ஒங்காரச் சத்தமும், உல்லாசச் சிரிப்பும் காமாட்சி தலையைக் கண்டால், "கப்,சிப்" பென்று அடங்கும்.

தன்னைக்கண்டவுடன் தலைமறைத்துக் கொள்கிற சிரிப்புச் சத்தம் என்றால், இளையவன்பற்றித் தான் பேச்சு நடந்திருக்கிறது என்று இவளுக்குப் புரிந்துவிடும். அறுந்த பேச்சின் அடங்கிய சிரிப்பின் கனத்த மௌனமே, நிறைய கூச்சலிட்டு கத்தும். கைதட்டி கூப்பாடு போடும். இல்லாத சத்தம் நிறையப் பேசும். இவள் மனசு கிடந்து கொதிக்கும். "கரங், கரங்" கென்று, ரம்பம் போட்டு மனசை அறுக்கும்.

அருஞ்சுனை கடைக்குப் போயிருந்தாள், காமாட்சி. நெத்திலிக் கருவாடும், புளியும், சீரகமும் வாங்கிக் கொண்டு தெருவில் நடந்து

வந்து கொண்டிருந்தாள். அந்நேரம் தான் கடவுக்குள் நுழைந்து, தெருவில் நுழைந்து, முக்கு திரும்பினால், ஊர் மடத்துத் திண்ணையில் ஒரு ஏழெட்டு பேர். நிதானமில்லாத உற்சாகத்தில் சிரித்துக் கொண்டிருந்தனர். எகத்தாளப் பேச்சுகளும், இகழ்வுத் தொனியிலுமான சிரிப்பாணிக் கூத்து.இவள் தலை கண்டவுடன் அப்படியே உறைந்து, "கப், சிப்" பென்றாகி விட்டது. வாயடைத்துப் போன அந்த மௌன இறுக்கம், அறுபட்ட பல்லி வாலாகத் துடித்தது. சட்டென்று அந்த மௌனம் அப்பியவிதமே, அதன் தொடர்ச்சி நீளம் போவதை உணர்த்துகிறது.

தனது தலை கண்டவுடன் வாயடைக்கிற அந்த மௌனம், தனது குடும்பம் பற்றிய கூத்தடிப்பைக் கூச்சலிட்டுக் கூறியது.

அந்த வாயடைப்பில் இவளுக்கு நெஞ்சே அடைக்கிற மாதிரி இருந்தது. மனத்திணறல். இவள் மடத்தைத் தாண்டியவுடன்—

முதுகுக்குப் பின்னால், வெடித்தெழுந்த சிரிப்பலைகள், கூப்பாட்டுக் குதூகலம். அறுபட்ட சினிமா, மறுபடியும் ஓடத்துவங்குகிற அரவம்.

"ஊருகூடி கைகொட்டிச் சிரிக்கிற பொழைப்பாக்கிட்டானே, நம்ம சின்னப்பய.....!" என்ற நினைவின் வலி மனசெங்கும் பரவி, அதிர்ந்தது. காமாட்சிக்குள் கண்ட மேனிக்கு நாலாத்திசைகளிலும் பரவிப்படர்கிற நினைவின் அலைபாய்வுகள்.

அடுப்பையே வெறித்தாள் காமாட்சி. தீ நாக்குகள் அமைதியான நிதானமாக சலனப்பட்டன. ஒரு சீராக எரிகிறது. கங்குகள் பெருகப் பெருக கட்டையை உள்ளே தள்ளுகிற காமாட்சி. வேலி விறகுக்குள் மாவு உதிர்கிறது. அதன் பின் நுனியில் இளகி, நுரையிடுகிற பிசின்.

வசதியான வீட்டிலே வந்த சம்பந்தம். தேடி வந்த லட்சுமியாக செல்வச்சீமான் சண்முகம். ஈஸ்வரி பந்தத்தால், வந்து சேருகிற நிலபுலம், சொத்து சுகத்தின் பலத்தில் மேடேறிக்கொள்வான் என்று ஆறுதல் பட்ட தாய் மனசு. ஆசுவாசப்பட்ட ஈரமனசு.

அதுவும் நிலைக்கவில்லை.

தலைத்தீபாவளி வருவதற்குள் "போய்"ச் சேர்ந்த சண்முகம். "லட்சுமி"யின் லட்சணம் பல்லையிளித்தது. வலிய வந்த சீமான், சும்மா வரவில்லை. காரியத்துடன் தான் வந்திருக்கிறார். தனது

உள்வண்டவாளம் அவருக்குத் தெரிந்திருக்கிறது. பாசத்திற்குரிய ஒரே மகளைப் பாதுகாப்பான இடத்தில் ஒப்படைக்கத்தான், வலிய வந்த சீதேவியாக வந்திருக்கிறார்.

"பரமசிவம் பாத்துக்குவாரு" என்ற நம்பிக்கையின் ஒளியுடன் மரணத்தைத் தழுவியிருக்கிறார். தவிப்பில்லாத சாவு. ஆறுதலான சாவு. ஓய்வு பெறுகிற மனநிலையில் உறங்கப் போகிற மாதிரியான, நிம்மதியான சாவு.

"அவரு தப்பிச்சிட்டாரு... பாவம் முருகேசன்! அவன் தான் மாட்டிக்கிட்டான்! "மேடேறிக்கிடுவான்" என்று இவளது ஆசுவாசம், பள்ளத்தில் தலைக்குப்புற விழுந்து செத்து மடிந்தது.

"இப்ப... முருகேசன் முழி பிதுங்கிப் போய் நிக்கான். நிக்க இடமில்லாம, கடன்காரங்க வெரட்டுறாங்க. திரும்புன தெசையெல்லாம் நச்சரிப்பு. போய் நிற்கிற இடமெல்லாம், பிக்கல்பிடுங்கல்கள்.

நம்ம வீட்டுக் கேவலம் சங்கரன் கோவில் வரைக்கும் போயிருச்சு. சபையா நெறைஞ்ச கடையிலே வைச்சு, நம்ம பயலோட மானத்தை கிழிச்சிருக்காங்க. இந்த மனுசரு தலை குனிஞ்சு... வெட்டுப்பட்ட கிடாய் மண்டையாகத் தொங்கிப் போய்.... துவண்டு போய்... சீருகுலைஞ்சி, சித்திர மழிஞ்சி... சிதறுதேங்காயா சிந்திக் கெடந்துருக்காரு; நொந்து போயிருக்காரு...

எல்லாம்... இந்த வவுத்துலே இருந்து, வளர்ந்து, பொறந்த சின்னவனாலே வந்த கேவலம்...

இந்தா... நம்மூரு மடத்துலே பேசிச் சிரிச்சு கூத்தடிக்குறாக. அறிஞ்ச எடம் தெரிஞ்ச எடமெல்லாம் நம்ம கதையைப் பேசிப் பேசிச் சிரிக்காக...

நம்மளைப் பாத்து அடைச்சிக்கிற வாய்க, நம்ம இல்லாத நேரத்துலே... முழுசா தெறந்து கூப்பாடு போடுதுக. நம்ம மான மரியாதையைக் கோணல் மாணலாகக் கிழிச்செறியுதுக. இளையவன் புத்தியழிஞ்சி செய்ஞ்ச ஒரு காரியத்தாலே. மொத்தக் குடும்பமே தலை தொங்கிக் கிடக்குது..

நினைவின் தாறுமாறான ஓட்டத்தெறிப்புகள். தலை சிதறிப் பறந்தலைகிற எண்ணங்கள். மனசு கனக்கிறது. அழுகை அழுகையாக வருகிறது. கண்ணுக்குள்ளிருந்து குத்திக்கொண்டு வெளியேறுகிற மனநீர். மனத்துளிகள்.

முந்திச் சீலையால் கண்ணீரை அழுந்தத்துடைத்துக் கொள்கிற காமாட்சி.

"எந்தக் குத்தமும் செய்யாத நாம என்னத்துக்கு அழுகணும்? விதிக்கொடுமைக்கு அழுது தீக்க முடியுமா? அழுதா... நமக்கு அசிங்கம். நம்ம மனுசருக்கு அசிங்கம்.

மண்ணில் வியர்வை சிந்தி சிந்தி, மண்ணைப் போல வலிமையான வீர மனசுடன்... தெம்பு வந்த தெளிவுடன் அடுப்பு விறகை உள்ளே தள்ளுகிற காமாட்சி.

அழகேசனுக்கு கல்யாணமாகி ரெண்டுமாசம் முடிந்திருந்தது. "மறுவீடு" விருந்து முடிந்து, மாமா, சித்தப்பா, பெரியப்பா ஒன்றுவிட்ட அய்யாமார்கள் வீடுகளிலெல்லாம் "மாப்பிள்ளைச் சோறு" போட்டார்கள்.

"பாடுசோலிகள் கொஞ்சம் கொறைய இருக்கு. இது தான் சரியான சமயம். அழகுக்கு வர்ற மூணு நாளைக்கு நம்ம வீட்டிலே சாப்பாடு. அம்மனும் சாமியுமா வர்ற மாதிரி... அனுப்பி வையுங்க" என்று பரமசிவத்திடம் வந்து கெஞ்சுதலும், குழைவுமாகக் கேட்பார்கள்.

"தாராளமாய்... கூட்டிட்டுப் போய் தடபுடல் பண்ணப்பா" என்பார்.

பணியாரம்.. உளுந்த வடை... பருப்பு வடை.. அரிசித் தோசை.. இட்லி... பலகாரம்.. என்று காலை விருந்து தடபுடல் படும். மதியத்துக்கு நாட்டுக் கோழியை அடித்து குழம்பு வைத்து, முட்டை பொரித்து, கடாக்கறி வதக்கி, ரசம் வைத்து... பாயசம் செய்து என்று திகிடுமுகடாக கவனிப்பார்கள்.

இவன் புஞ்சையில் வேலை. அவர்கள் வீட்டில் விருந்து. மாப்பிள்ளைச் சோறு. உறுத்தான உறவுக்காரர்கள் வீட்டில் தான் கை நனைப்பார்கள். அதுவும் குடும்பத்தலைவர் சம்மதம் வேண்டும்.

இப்படியே ரெண்டு மாசம் ஓடி விட்டது. அழகு, ஒரு சுற்று பெருத்து விட்டான். ஒரு மினுமினுப்பு வந்துவிட்டது. கம்மஞ் சோற்றிலும், சோளச் சோற்றிலும் காலம் பூராவையும் ஓட்டியவன். காய்ஞ்ச மாடு கம்மம் புஞ்சையில் பாய்ந்த மாதிரி... புகுந்து

விளையாடி விட்டான். கொழுத்து விட்டான். அவன் பெஞ்சாதி அதுக்கும் மேல். வாய்க்கு ருசியான உணவு. நாவுக்கு புதிதான - பிடித்த- ருசி. மனசுக்கு நிறைவான விருந்து.

அடுப்பு வேலை பூராவும் காமாட்சி தலையில் தான். மருமகள் வந்த பின்பும், அடுப்பங்கரை அவளைவிட்டபாடில்லை.

. "புதுசா... கல்யாணமாகி வந்த சின்னப்பொண்ணு. புது இடம், புது உறவு, புரிஞ்சுக்கணும்லே? ரெண்டு சிறிசுகளும் பேசிப் பழகட்டும்" என்று சொல்லி, காமாட்சி "விட்டுப்" பிடிப்பாள்.

"பானைச் சட்டிகளைக் கழுவட்டா?"என்று வருகிற மருமகளை... தடுத்து விடுவாள்.

"போ.. போய், ஒம் புருஷனுக்கு என்ன வேணும், எது வேணும்னு கேட்டு... அவன் மனம் போல நடந்து, சந்தோஷமாயிரு. கரிச்சட்டிகளைக் கழுவிக்கிட நா இருக்கேன்லே?

குறுஞ்சிரிப்பும், கேலிப்பார்வையுமாக அவளை அனுப்பிவிட்டு.. விட்டு விலகாத அடுப்பங்கரையைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

எல்லா வீட்டு விருந்துகளும் முடிய, மாசம் ரெண்டு முடிந்தது. பரமசிவம் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். மேல்துண்டு மடித்த நிலையில் தோளில் கிடந்தது.

"ஏலேய், மூத்தவனே, இங்க வாடா..."

"என்னய்யா...?"

"நீ.. மேலே வீட்டிலே இருந்துக்கோ. நீயும், ஒம் பொஞ்சாதியும் ஆக்கி அவிச்சுச் சாப்புடுப்பா..."

"அதுக்குள்ளேயா.... நா "வேற" போகணும்? நா கொஞ்ச நாளைக்கு கூட இருக்கேனே... அம்மாவுக்குக் கை மாத்தி விடட்டுமே, வந்தவா?"

"ஒண்ணா இருந்தா எங்களுக்கு லேசு தான். நீயும் ஒம் பொஞ்சாதியும் செரமப்படணும். ஜெயிலுக்குள்ளே பிரிச் சுப் போட்ட மாதிரி சிதறிக் கிடக்கணும். இள வயசு உங்களுக்கு. இருந்து அனுபவிக்கணும்லே?

"தனியா அடுப்புக்கூட்டி ஆக்கி அவிச்சுச் சாப்புட்டா.. இஷ்டம் போல சந்தோஷமாகவும் இருப்பீக.

"தனியா அடுப்புக்கூட்டி ஆக்கி அவிச்சுச் சாப்புட்டா_ இஷ்டம் போல சந்தோஷமாகவும் இருப்பீக.குடும்பம்னா என்னன்னு பொறுப்பையும் ஒணர்வீக_"

அடுத்து வந்த வளர்பிறையில், தனி உலை வைத்து குடும்பம் நடத்த, பரமசிவம் ஏற்பாடு செய்துவிட்டார். மூத்த மருமகள் வந்து வீட்டுக்குள் ஒண்ணடியும் மண்ணடியுமாக இருந்தால்_ அடுப்பங்கரை புகை மூட்டத்தின் மூச்சுத்திணறலிலிருந்து நாலைந்து மாசமாவது விட்டு விடுதலையாகலாமே என்று காமாட்சி போட்டிருந்த மனக்கணக்கைத் துடைத்தழித்து விட்டார், பரமசிவம்.

பானை பிடித்த பாக்கியசாலி நாலைந்து மாசமாவது, மருமகளை ஒதுங்கி, காற்றாட நின்று பார்த்து ரசிக்கலாம். என்றிருந்த ஆசையில் மண்ணையள்ளிப் போட்டு விட்டார்.

இளையவன் கல்யாணம் நடந்த விதமே... தனி. கோவிலில் கல்யாணம் முடித்து.... மாமா வீட்டுக்கு, மறு வீடு போனவன், அப்படியே கீழ வீட்டில் தான் வந்து இறங்கினான். ஈஸ்வரி, இந்த வீட்டுக்குள் காலடியே எடுத்து வைக்கவில்லை.

அடுப்பை விட்டு வெளியேறி வந்த நெருப்பை உள்ளே தள்ளினாள். விறகைத் தள்ளினாள். கட்டை விறகு. நாள் பட்டு, காய்ந்து புழுத்துப் போன சீமைக்கருவேலி விறகு. கணங், கணங்" கென்று சுணங்காமல் எரிகிறது.

சோறு கொதிக்கிறது. உலை மூடிச்சட்டியை எம்பித் தள்ளிக் கொண்டு நுரை தள்ளுகிற கொதிசோறு.

உலை மூடிச்சட்டியை எடுத்து, அரைபாதியாக மூடி வைத்தாள். புகை "கப, கபா" வென்று வெளியேறுகிறது.

தீயின் வெக்கை அடிக்காலைத் தகிக்கிறது. காந்தல் எடுக்கிறது. எட்டு வயதில் இந்த அடுப்பு முன்னால் உட்கார்ந்தாள். இப்ப வரைக்கும் விட்டு விடுதலை இல்லை.

அனுதினமும் அடுப்புத்தீ. ஆடையும் கோடையும் அடுப்புத் தீ. மழைக்காலத்திலும் அணைந்து விடாமல் இவளைத் தகிக்கிற

அடுப்புத் தீ நாக்குகள். எல்லாக்காலத்திலும் எல்லா நாளிலும் அடுப்புடன் இடைவிடாத மல்லுக்கட்டு. காய்ச்சல் மண்டையடியானாலும், மூக்கை உறிஞ்சுக்கொண்டே அடுப்பைக் கட்டி மாரடித்தாக வேண்டும்.

இதோ... இப்போதும் அடுப்பையே வெறிக்கிறாள். தீ நாக்குகளையே எரித்து விடுகிறவள் போல எரிச்சலில் பார்க்கிறாள்.

ஜென்மம் எத்தனை எடுத்தாலும், பொம்பளையா மட்டும் பெறந்துரக் கூடாது. பெண்ணா பெறக்குறது பெரும் யோகம்னு சொன்னவன் வாயிலே மண்ணையள்ளிப் போடணும். பெண் ஜென்மமே நரக ஜென்மம். நாய்ப் பிறப்பு. காட்டில் கிடந்து வெயிலில் வேகணும். வீட்டில் வந்து அடுப்பில் வேகணும். ராத்திரியில் ஆம்பிளைத் தீயில் வெந்து மருகணும். பெண்ணுக்கு "உஸ், உஸ்ஸென்று உக்காரப் பொழுதுல்லே. செத்த சாவுக்குப் பிறகு தான்- உஸ்ஸீன்னு ஓய்ஞ்சி சாக முடியும்.

ஓய்வில்லாத இப்பெறப்புலே... மாசாமாசம் மூணு நாள் தொல்லை. அது இல்லேன்னா... வயித்துலே பாரம்.

பெண் ஜென்மத்துக்கு வாழ்க்கையே பாரம் தான். வாழ்க்கையே தொல்லை தாம். வாழ்க்கையே அடுப்புக்குள்ளே சொருகுன வெறகுதான்.

காமாட்சி உலை மூடிச்சட்டியை எடுத்தாள். விரலில் சுரீடுகிற உஷ்ணச்சுடல். பழகிப்போன சூடு. பல வருஷ காலத்துப் பழக்கம். சோறு கொதிக்கிறது. அகப்பையை உள்ளே விட்டாள். ஆவி பறக்கிற பருக்கையை நுனிவிரல்களால் பற்றி நசுக்கினாள்.

வெந்துவிட்டதா என்று பருவம் பார்த்தாள். ஏறக்குறைய வெந்து விட்டது. விறகை வெளியே இழுத்தாள். அடுப்புக்கங்கின் கணப்பில் கிடந்தால் போதும், முழுமையாக வெந்து விடும்.

வெங்காயத்தை உரித்து அறுத்தாள். புளியை ஒரு சட்டியில் நனையப் போட்டாள். இன்னொரு சட்டியில் நெத்திலிக் கருவாட்டை நனையப் போட்டாள்.

"அவரு வந்துடுவாரு_ வர்ற நேரம் வந்துருச்சு" என்ற நினைவு வந்தவுடன், இன்னொரு அடுப்பில் தீ முட்டினாள். டீத் தண்ணீருக்கான அலுமினியச் சட்டியை வைத்து, அளவுப்படி நீரூற்றி, மண்டை வெல்லக்கட்டியைப் போட்டு, தேயிலைத் தூளையும் தட்டினாள்.

"ஹீ.ய்.ய்."யென்ற இரைச்சலுடன் கொதிக்க ஆரம்பித்த டீத்தண்ணீர். தேயிலை வாசத்துடன் புகை, வீடெல்லாம் மணத்தை நிரப்பியது.

பரமசிவம் வந்தார். திரேகமெல்லாம் வியர்வை ஈரத்தில் அப்பிய புஞ்சைப் புழுதி. கரிய மண்ணின் ஈரக்கனிவைப் பிளந்து, வளைவு வளைவாக இறங்குகிற வியர்வை வரிகள்.

"என்ன... வெளிப்பானையிலே தண்ணியில்லியா ? கழுவிட்டு வரக்கூடாதா ? வேலை பார்த்த லட்சணத்தை, காட்டணுமாக்கும் ?"

"காட்டுனாலும்... நீ கிரீடத்தையா, தூக்கி தலையிலே வைக்கப் போறே ?"

"வேலையத்த ராசாக்களுக்குத் தான் கிரீடம். வேலையிலே ராசா, நீரு. ஒமக்கு, வேர்வை தான் கிரீடம்."

"ஒரு சொல்லு சொன்னாலும், உப்புக்கல்லு மாதிரி சொல்லிட்டே__"

அவரது பூரிப்பான மனமலர்ச்சியில் நரைத்த மீசை விரிந்தது. இளஞ்சிரிப்பாக உதடுகள் மலர்ந்தன.

"ஒழைக்குறதுலே மகராசி, நீ. அதான். ஒனக்கு வேர்வை கிரீடமாகத் தெரியுது. மத்த நாய்களுக்கு அது நாத்தம்"

அவர் சொல்லாமல் சொல்வது, முருகேசனை. உதட்டில் அவனது நினைவு கூட வருடிவிடக்கூடாது என்ற நினைப்பில் அவனை உச்சரிப்பதில்லை.

"விளங்காதபய" என்ற வார்த்தையைக் கூட உச்சரிப்பதில்லை. ஊரெல்லாம் கடன் தொல்லைகளை வைத்துக் கொண்டு சீரழிகிற அவனை "விளங்காதபய" என்ற சாபத்தைக் கூட வாயில் வைப்பது, மகாபாவம் என்ற அசூயை, அவருக்கு.

"டீத்தண்ணி போட்டுட்டீயா?"

"போய். காலு கையை... ஒடம்பை அலசிட்டு வாரும். மதியம் அவிச்ச பாசிப்பயறு இருக்கு. சாப்புடும்"

"தாளிச்சதா, வெறும் அவிச்ச பயறா?"

"அவிச்சு தாளிச்சது தான். தாளிச்ச வாசம் இருந்தா... கூடுதலா நாலைஞ்சு கை சாப்புடுவீகன்னு தெரியும்லே?"

"ஐய்க், ஐய்யய்க்... அடி சக்கை! தாளிச்ச பாசிப்பயறுன்னா... ஒரு பிடி பிடிச்சிரலாம். அது ஒரு "மாட்டு" மாட்டிட்டு, டீத்தண்ணியை மண்டுனா... வவுத்துப் பசி அடங்கிரும்."

சின்னப்பிள்ளை போலக் குதூகலிக்கிற... கும்மாளம் போட்டு சிரிக்கிற... அவரை பார்த்து ரசித்தாள். தாய்மைப் பரிவில் கனிகிற அடிமனசு.

பெண்ஜென்மமே, நாய் ஜென்மம் என்று எண்ணிக் கொண்டிருந்த அந்தந்த தருணத்தை எண்ணிப் பார்த்தாள்.

நாய்ப் பிறவிக்கு வாலாட்டி சந்தோஷத்தை காட்டுற ஒண்ணு ரெண்டு வாய்ப்பு வரத்தானே செய்யும்? அது மாதிரி தான் இதுவும்.

வெளிப்பானைத் தண்ணீரில் அலசித்துடைத்த திரேகத்துடன் வாசல்படியில் காலை வைத்து... ரெண்டு தட்டு, உதறித்தட்டி, உள்ளங்கால் ஈரப்புழுதியைப் படியில் உதிர்த்துவிட்டு உள்ளே நுழைகிற பரமசிவம். ஒரு சிறிய நார்க்கொட்டான் நிறைய பாசிப்பயறைப் போட்டு முன் வைத்து, பக்கத்தில் நீர் நிறைந்த செம்பையும் வைக்கிறான்.

பாசிப்பயறின் மேல் கிடக்கிற ஒன்றிரண்டு வற்றல் இணுக்குகளைப் பொறுக்கிப் போட்டு, ஆசையும், ஆர்வத்துள்ளலுமாக பயறை அள்ளி, வாயில் அப்புகிறார். வாய்க்குள் நிறைந்த தாளிதவாசம், மனசுக்குள்ளும் மணக்கிறது.

"இளையவன் பொழைப்பு, ரொம்ப ஏறங்கு திசையிலே போகுது. எங்கன பாத்தாலும் ஏகப்பட்ட கடன் தொல்லைக. நின்னு பதில் சொல்ல நிதானமில்லாம, சீர் குலைஞ்சி சித்திரமழிஞ்சு கெடக்கான். நாம... ஏதாச்சும் கை குடுத்து உதவணும்..."

"இதை வுட்டுட்டு வேற பேச்சு பேசுறதுன்னா... பேசு. இல்லேன்னா... நா எந்திரிச்சிப்போயிருவேன்."

நெகிழ்வோ, ஈரமோ இல்லாமல் அரிவாள் வெட்டாக விழுகிற வார்த்தை. ஊரறிய அவமானப்பட்ட உத்தமரின் கோபம். குற்றம் செய்யாமல் தலை குனிந்த சத்தியவானின் ரௌத்ரம்.

வாயோடு மனசும் அடைத்துப் போய்... அடுப்புத்தீயை வெறிக்கிற அவளது மௌனத்தில், அவளது மனக்கூச்சலும், கூப்பாடும்.

58

முருகேசன் வீட்டில் உட்கார்ந்து சாண்டில்யனின் கடல்புறா நாவலை வாசித்துக் கொண்டிருக்கிறான். முதிர் காலைநேரம். இளமதியம் வந்துவிட்டது. கட்டிலில் தலையணையில் முழங்கையை ஊன்றி, வலது காலை மடக்கி கட்டில் சட்டத்தில் நிறுத்தி, இடது கால் கீழே ஆடிக்கொண்டிருக்க கடல்புறா ரசனையோடு உள்ளிறங்குகிறது.

மருந்தடிக்க பவர் ஸ்பிரேயருடன் பாலசுந்தரம் வருவதாக சொல்லியிருந்தான். பெட்ரோல் வீட்டில் கைவசம் இல்லை. பவர் ஸ்பிரேயரை ஓட்ட இயலாது என்று சொல்லி விட்டான்.

வாங்கிவந்த பூச்சி கொல்லி மருந்துகள் பெரிய அட்டைப்பெட்டியில் பார்சலாக இருக்கிறது.

ஈஸ்வரி மதியச்சமையலுக்கான ஆயத்தத்தில் இருந்தாள். இப்போதுதான் உண்டு முடித்த மனநிறைவில் முருகேசன்.சுடுசோறு வெண்டைக் கூட்டு வதக்கல். வடபூட்டுக்குழம்பு. தயிர் வேறு.

பால், அம்மா குடுத்தனுப்பிவிடுவாள். டீக்கு தயிருக்கு காய்ச்சிக்குடிக்க எல்லாமே அம்மா தந்துவிடுகிற பால்தான். பால் சொஸைட்டியில் காசு கொடுத்து வாங்குகிற மற்றவர்கள் மாதிரியல்ல. முருகேசன். அம்மாவின் தாய்மைப்பரிவு. அய்யாவுக்கு அறிந்து வருகிற அனுதினப்பால். அறியாமல் வருகிற பணம், அவ்வப்போது.

எப்போதும் சிறுவாடு சேர்த்து வைப்பாள். முன்பெல்லாம் பரமசிவத்திடம் தான் ஒப்படைப்பாள்.

ஒருதடவை பரமசிவத்துக்குப் பணத்தேவை. ஒரு பசுமாடு, நல்லமாடு. கண்ணுக்குக்குளிர்ச்சியான செவலை நிறம். சீரான வளைவில் கொம்பு. சினைப்பசு. கனத்தமாடு தடித்த பசுமாடு பார்த்த முதல் பார்வையில் பரமசிவத்துக்குத் தரகர்கள் வேறு தாறுமாறாகப் புகழ்ந்து பேசி_ போற்றிகள் பாடினார்.

காலையிலே எட்டு, சாயங்காலம் ஆறு லிட்டர், பாலுக்கு நா கேரண்டி_ இதுலே கொறைஞ்சிட்டா, நா இந்தா ஒரு பக்கத்து மீசையை எடுத்துக்கிடுதேன்" என்று வீராவேசமாக முழங்கி, நம்பிக்கையை ஏற்றினார் தரகர்.

மாடுவைத்திருந்த சம்சாரியும் சொன்னார்.

"சம்சாரிக்கு சம்சாரி, நா பொய் சொல்லுவேனா ? எட்டு ஆறு- ரெண்டுவேளை பாலு நிச்சயம். வீட்லே நின்ன சீதேவி தொழுவுக்கே ஒரு அழகு. விக்குறதுக்கு மனசே யில்லே. ஒரு பணமுடை. அதான் வெலை சொல்லுதேன்"

அவரது குரலின் உடைவும் ஈர நெகிழ்வுமான கரகரப்பால் மனஉண்மை கசிவெடுத்தது. பரமசிவம் முழுசாக நம்பினார். நாலாயிரத்து எண்ணூத்தி முப்பது என்று விலை முடிவாயிற்று. நீண்ட நெடியவாக்கு வாதம் தள்ளுமுள்ளுக்குப்பிறகு.

மாடுவிற்றவருக்குப் பணம் உடன் தேவைப்பட்டது. அருஞ்சுனை இருக்கிற தெம்பு, இவருக்கு. விலையை முடித்து அட்வான்ஸும் தந்துவிட்டார்.

வெக்கு வெக்கு என்று வேகமாக அகல எட்டுகள் வைத்து நடந்து வந்தார், கடைக்கு. கடையில் பூர்ணம் தான் இருந்தாள்.

"என்ன தாயி மாப்ளே இருக்காரா ?"

"இல்லே அண்ணாச்சி. இப்பத்தான் ராசபாளையம் சரக்கு வாங்கப் போறாரு."

"கடையிலே ரூவா ஏதாச்சும் வைச்சிட்டுப் போயிருக்காரா ?"

அப்படியும் சில சமயம் வைத்துவிட்டுப் போவதும் உண்டு.

கடையில் சரக்குகளைப் போடுகிற சேவுக்காரர் கடலைமிட்டாய் ஏவாரி, முட்டை ஏவாரி, போயிலைக் கம்பெனிக்காரர், சிகரெட் கம்பெனிக்காரர், வேனில் வருகிற தேயிலைக் கம்பெனிக்காரர்கள், வர இருக்கிற நாட்களில் அவர்களுக்கான பணத்தை "இருப்பு" வைத்துவிட்டு மிச்சத்தைத்தான் காக்கிச்சுருட்டுப்பைக்குள் எடுத்து வைப்பான் அருஞ்சுனை.

"அப்படி ஏதாச்சும் பணமிருக்கா" என்ற தொனியில் தான் அவர்கேட்டார்.

"இல்லையே அண்ணாச்சி. அவுகளுக்கே இன்னைக்கு பத்தாக்குறை. ரெண்டு மூணுபேரு கிட்டே கைமாத்து வாங்கிட்டுப்போயிருக்காக..."

அவருக்குள் தேக்குமரமாக வானுயர்ந்து நின்ற நம்பிக்கை சுரண்டியால் வெட்டுப்பட்ட கோரைப்புல்லாக தூருடன் பெயர்ந்து புழுதிக்குள் மறைகிறது.

பொழுதைப்பார்த்தார். மதியம் நெருங்கிவிட்டது. உச்சியைத்தொடுகிற வெள்ளித்தகிப்பாக சூரியன்.

கையில் ரூபாயில்லை. மலையாக இருந்த அருஞ்சுனைவிஷயம் இப்படியாகிவிட்டது. ஆலமரத்தடியில் பசுவும், சம்சாரியும், தரகரும் இருக்கின்றனர்.

சீதேவி மாதிரி லட்சணமான பசு. கண்ணைப்பார்த்தால் கரியமின்னல். மனசுக்குப்பிடிக்கிற அடர்செவலை நிறம். இதைவிடலாமா? பணமில்லாததால் இதை இழப்பதா_?

தெக்காடு புஞ்சைக்கு துவண்ட நடையாக நடந்தார். டீயும், வடையும் சாப்பிட்டு பீடி சிகரெட் வாங்கித்தரச்சொல்லி உபசரிக்கும்படி தரகரிடம் ரூபாய் தந்து விட்டு வந்திருக்கிறார், பரமசிவம்.

ஒற்றை மனுசியாக மிளகாய்ச் செடிக்குள் களை வெட்டுகிற காமாட்சி ஏழெட்டுத்தடவைகள் வயிற்றோட்டமும் வயித்தாலே வாந்தியும் எடுத்த ஆள் மாதிரி உயிர் துவண்டு வருகிற பீமராசா.

"என்ன... உசுர(று)ந்துபோன முஞ்சியோட வாரீக.. என்னாச்சு ?"

"ஒண்ணுமில்லே நல்ல பசுமாடு சீதேவி மாதிரி முகலட்சணம் பாலு வளம் காலையிலே எட்டு சாயங்காலம் ஆறு. வீட்லே வந்து நிறுத்துனா வீடு செல்வம் பொழியும்."

"வாங்கிட்டீகளா ?"

"வெலை பேசி அட்வான்சு போட்டாச்சு. மாடுவிக்குற சம்சாரிக்கு . பணம் இப்பவே தேவைப்படுது அர்ஜெண்டா ஐயாயிரம் வேணும்."

"அருஞ்சுனைத் தம்பியைப் பார்க்கலாம்லே ?"

"மாப்ளே ராசபாளையம் போயிட்டாரு."

"வேற எங்கேயும் பெரட்டி உருட்ட முடியலியா ?"

"மதிய நேரத்துலே எல்லாரும் காட்லே கெடப்பாக ? யாரு வீட்லே இருப்பாக ?"

"வாய்தா சொல்லிப் பாக்கலாம்லே"

பரமசிவத்துக்கு "சுர்" ரென்று கோபம் வந்தது. நம்பிக்கை களெல்லாம் தகர்ந்து வருகிற பதைப்பு. பசுவைப் பெற முடியாமல்போய் விடுமோ என்ற பதற்றம். ஆத்திர அவசரத்துக்கு ரூபாய் புரட்ட முடியாதவன் எதுக்கும் ஏலாதவன் என்று தோற்றமளித்து அவமானப்பட்டு நிற்பதா ? சிறுமைப்பட்டுக் காட்சியளிப்பதா ?

"அவருக்குத் தான் பணமுடை இப்பவே தேவைப்படுதுன்னு அப்பதேயே சொன்னேன்லே ? பெறகென்னமயித்துக்கு வாய்தா சொல்லிப் பாக்கச் சொல்லுதே"

என்று கோபச்சீற்றமாக வெடிக்கிற அவரைக் கனிவாகப் பார்க்கிற காமாட்சி.

"பசு, அம்ம்ப்ப்புட்டுப் புடிச்சுபோச்சா ?"

"புடிக்காமலேயா..இம்புட்டுத்தட்டழியுதேன். அங்கேயும் இங்கேயும் ஓடியலையுறது மப்பேறிப்போயா ?"

அவரது கோப வெக்கை இன்னும் தகிக்கிறது. தடித்த வார்த்தைகளாகத் தெறிக்கிறது. சீறிச்சினக்கும் சிறுபிள்ளை முகம் பார்த்துச் சிரிக்கிற தாயைப்போலப் பொறுமையும் கனிவுமாக இதழ்விரிக்கிற காமாட்சி. அவள் ஈரஉதட்டில் ஈரமின்னல் வியர்வை பூத்திருக்கிற முகமெல்லாம் களைவெட்டுப் புழுதி அப்பியிருக்கிறது.

மறுபடியும் கோபப்படுகிற பரமசிவம்

"என்ன_? சொல்லச் சொல்ல_ இளிச்சுக்கிட்டேயிருக்கே? நா என்ன கிறுக்குப் பயலா?"

"சிரிச்சா இளிக்கிற மாதிரி தெரியுதோ_?"

"நா செனந்து சீறிக்கிட்டிருக்கையிலே சிரிச்சா?"

"செனம் தேவையில்லேன்னு அர்த்தம்?"

"என்ன சொல்லுதே?"

"லட்சணமான பசுவை வெலைக்கு வாங்கி வீட்லே நிறுத்த முடியாமப் போயிருமோங்குற கவலையிலே தானே கோபம் வருது?"

"ஆமா_"

"வாங்கி நிறுத்திரலாம்னு எனக்கு தைர்யம் இருக்கு"

"எப்புடி?" கோபம் இருந்த முகத்தின் கடுகடுப்பும் சிடுசிடுப்பும் போனமாயம் தெரியவில்லை. ஆவலும் ஆர்வமுமாக பூரித்துக்குதூகலிக்கிற குழந்தைப்பரபரப்பு.

"வீட்டுக்கு வாங்க_ நா_ ஐயாயிரம் தாரேன்"

"அப்பச்சரி_"

"வட்டி எம்புட்டுத்தருவீக?"

"ராத்திரியிலே எம்புட்டு முடியுதோ, அம்புட்டு. ஒன்னாலே எம்புட்டுத்தாங்கமுடியுதோ, அம்புட்டு"

அவள் கேட்ட குறும்பான கேள்விக்கு இவரது கண்ணடிப்பானபதில். அவள் சுரண்டியை வாய்க்காலில் போட்டுவிட்டு பொழிக்கு வருகிறாள். பின் தொடர்கிற பரமசிவம். ரெண்டு பேரும் பொழியில் கிடந்த செருப்பை மாட்டினர்.

செருப்பை மாட்டுகிற போது ஒட்டி நின்ற பரமசிவம் வாலிப மப்போடு அவள் இடுப்பில் கைபோட்டார். கல்மிஷ நோக்கமில்லாத தொடுதல் என்பதால் அவளும் சிலிர்க்காமல் சிதறி விலகாமல் நின்றாள்.

" இந்தமாடு நமக்கு ராசியான மாடா அமையும் பாரேன்"

"எப்படிச் சொல்றீக?"

"நாம வாங்குனதெல்லாம்..அட்வான்ஸ் ஒஞ்சிறுவாட்டு ரூவாயிலேதான் குடுத்துருக்கோம். அதெல்லாமே பொங்குது. இதுக்கு ஒஞ்சிறுவாட்டுலே யிருந்து மொத்த வெலையுமே குடுக்கப் போறோம். வேணும்னாபாரு, இது நிசமாவே சீதேவியா செல்லம் பொழியப் போகுது"

"ஒம்ம வாய் முகூர்த்தம் பலிச்சா போதும்"

இரண்டு பேரும் வண்டிப்பாதையில் நடந்தனர். ஆளுக்கொரு தடத்தில் நடந்தனர். காடுகரைகளில் வேலை பார்க்கிற அத்தனை தலைகளும் நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தன. வியந்து வியந்து பேசிற்று.

காலையில் இருவரும் சேர்ந்து போவது சகஜமான வாடிக்கை. மாலையில் இணையாக திரும்புவதுவும் சகஜம். உச்சிமதியத்துக்கு இருவரும் மாடு இல்லாமல், பட்டரைவாரில்லாமல் கொழைக்கட்டு சுமக்காமல் கடாப்பெட்டி இல்லாமல் தூக்குச் சட்டி, குத்துச்சட்டி இல்லாமல் ரெண்டுபேரும் வெறும் கையும் வீசினகையுமாக மதியப்பொழுதில் வண்டிப்பாதையில் ஜோடிபோட்டு நடந்துவருவது இதுவரை இல்லாத புதுமை.

என்ன ஏதுஎன்று விசாரிக்க, கேலிபேச, கிண்டல் பண்ணி நக்கல் அடிக்க பலபேருக்கு ஆசைதான் ஆர்வம் தான்.ஆனால் இப்பவேண்டாம்.

அவுக என்ன வெஷயமா போறாகளா? நல்லதோ பொல்லதோ? அதுதெரியாம இப்பநாம வெளையாட்டுப்பேச்சு பேசிரக் கூடாது" என்கிற கிராமத்து வியர்வை நாகரிகம்.

"ஒங்கிட்டே எப்படி இந்த மாதிரி ரூவா,சிக்குது. சிறுவாடு சேக்க ஏது ஒங்கிட்டே?"

உள்நோக்கமற்ற வெள்ளை மனசோடு விசாரிக்கிற பரமசிவம். அவரை ஒருவாஞ்சையோடு பார்க்கிற காமாட்சி.

"பாலு விக்குற காசு, வெண்ணெய் எடைபோடுற காசு, சண்டு வத்தலு விக்குற காசு, கொத்தைப்பருத்தி வித்த காசு.. எல்லாமே ஒங்ககிட்டே முழுசாவா தாரேன்? கொஞ்சம் தருவேன்.மிச்சம் மறைப்பேன் ஆத்திர அவசரத்துக்கு ஆகும்லே?"

அதுதான் புளிச்சாணிப்பானையோட பொங்குற குணம் ஒன்னை மாதிரியான மந்திரி மூளையுள்ள மகராசி இருக்குற வீடு ஒரு கொறையில்லாம பொங்கிப் பெருகும்.

அவள் வீடுவந்து எடுத்துத் தந்த பணத்தில் அந்தச் செவலைப்பசு தொழுவத்தில் வந்துநின்றது. வாழ்ந்து நிறைத்தது.

இப்படிப்பலதருணங்கள் இப்போதெல்லாம் அந்தச்சிறுவாட்டுச் சேமிப்பு இளையவனைத்தேடி ரகசியமாக வரும்.

* சவலைப்பிள்ளை மீது தாயின் கருணை கூடுதலாக வழியும். அது இயல்பு.

வீட்டு வாசலில் ஓர் உருவம் நிழலாடுகிறது. கடல்புறாவின் மஞ்சளழகியின் மார்பக மதர்ப்பு குறித்த வர்ணிப்பிலிருந்து விடுபட்டான்.

யார் என்று பார்த்தான்.

மருந்தடிக்க பவர் ஸ்பிரேயர் வைத்திருக்கிற பாலசுந்தரம். தண்ணீர் சுமந்து வந்து குடம் குடமாக ஊற்றுவதற்கு தீக்கொளுத்தி. அவனுக்கு முழுசசமபளம்.

" என்ன- தீக் கொளுத்தி?"

"பெட்ரோல் கிடைச்சிருச்சாம். பாலசுந்தரம் அண்ணாச்சி ஸ்பிரேயரோட புஞ்சைக்கு போறாரு- மருந்துகளையும் குடத்தையும் வாங்கிட்டு வரச் சொன்னாரு"

" சரி.. நீ கொடத்தை எடுத்துக்கிட்டு போ. நான் எக்ஸ் எல்லே மருந்தோட வாரேன்.

"அப்பச்சரி"

"ஈஸ்வரி நெளிச்சுபோன அலுமினியக்கொடம் இருந்துச்சில்லே ?"

"ஆமா அதை எடுத்துத்தந்துரட்டா ?"

"ம்"

"இவுகளுக்கு குடுக்குறதுக்கு ரூவா இருக்கா ? "தீக்கொளுத்தி மறைந்து விட்ட நிம்மதியில் மெதுவாகக் குரலில் கேட்கிற ஈஸ்வரி.

"அம்மா கொண்ணாந்து தருவா. வாங்கிவை. அந்த ரூவா.. இதுக்குத்தான்."

ஈஸ்வரி போட்டுக் கொடுத்த டீயை குடித்துவிட்டு முகத்தை சோப்பு நுரையால் கழுவித் துடைத்து பவுடர் போட்டு, சட்டையை மாட்டி வண்டியை யெடுத்துப் புறப்பட்ட பிறகு காமாட்சி வந்தாள்.

அவள் மனசில் ஒரு கவலை உள்ளுக்குள் எறும்பு ஊர்கிற மாதிரியான வருத்தம். கழுக்கமா ரூவா தந்துட்டுப் போறது பரமசிவத்துக்குச் செய்கிற துரோகம் மட்டுமா ? என்ற கவலை.

59

பவர் ஸ்பிரேயர் டேங்க் முழுக்க தண்ணீரால் நிரப்புகிற தீக்கொளுத்தி. குடத்தைச்சாய்த்து கவிழ்க்கிற நிதானத்தில் கொஞ்சம் கொஞ்சமாக சரிகிற நீர்.

"இதுலே நாப்பதுமில்லி, இதுலே இருவது மில்லி, இதுலே முப்பதுமில்லி", என்று மூன்று வகை மருந்துகளைக்காட்டியிருக்கிற முருகேசன். அதன்படி அந்தந்த விஷத்தை அதனதன் அளவில் மூடிகளாலே அளந்து அளந்து சரிக்கிற பாலசுந்தரம். ஒரு மருந்து டேங்க் தண்ணீரைப் பாலாக்குகிறது. இன்னொரு விஷம் பாலில் படரமறுக்கிற தேன்நிற இழைகளாக நீள்கிறது. இன்னொரு விஷம் திரவத்தண்ணீராக எவ்வித நிறமாற்றமும் கொள்ளாமல் கலக்கிறது.

மூடியால் திருகிமூடிவிட்டு ஸ்டார்ட் பண்ணுவதற்கான கயிற்றை ஸ்டார்டரில் சுற்றி, சட்டேரென்று உதறி உருவுகிறவேகத்தில் மோட்டார் உயிர் பெற்று. காடதிர, செடிகள் அதிர, தடதடக்கிறது. தீக்கொளுத்தி டேங்கைப்பற்றி ஏந்தி தூக்கிவிட முதுகைக்கொடுத்து வாங்குகிற பாலசுந்தரம்.

தூசிக்காடாகப் பரவுகிற மருந்து. துளிகளாக சிதறாமல் புகைச்சீற்றமாக சீறுகிற ஸ்பிரேயர். செடிகள் அதன் மோட்டார் காற்று மோதலில் அலைப்புறுகின்றன. புயற்சூறாவளியால் உலுக்கப்பட்டு நீரால் நனைக்கப்படுகின்றன. நஞ்சு மயமாகிற வெயிலும் காற்றும்.

குடம்குடமாகத் தண்ணீர் சுமக்கிற தீக்கொளுத்தி. ஸ்பிரேயர் சீற்றத்துடன் நிரைநிரையாக நடக்கிற பாலசுந்தரம்.

அய்யாவும், அம்மாவும் ஒரு குறுக்கம் பூராவையும் ஒருநாள் முழுக்க வேப்பெண்ணெய் அடிப்பார்கள். வெறும் அறுபதுரூபாய் செலவு. அசைப்புப்பிரேயர்.

ஆறுகுறுக்கத்தையும் ஒரே வேலை நேரத்தில் அடித்துவிடுவார்கள். பாலசுந்தரமும் தீக்கொளுத்தியும் பூச்சி மருந்துச் செலவும் அடிப்புச் செலவும் சேர்த்து ஆறாயிரம் ரூபாய். ஒருகுறுக்கத்துக்கு ஆயிரம் ரூபாய்.

அய்யாவும் அம்மாவும் தண்ணிச்சுமையும் ஸ்பிரேயர் டேங்குச் சுமையுமாக நார்ப்பறிவார்கள். வெயிலில் வெந்து நீரில் நனைந்து கருகுவார்கள். இதோ முருகேசன் பம்ப் ஷெட் ரூமுக்குள் கடல்புறா வாசித்துக் கொண்டிருக்கிறான். பின்னணி இசையாக தடதடக்கிற பவர் ஸ்பிரெயரின் யந்திரக்கூப்பாடு. மோட்டார் பேயிரைச்சல். மோட்டார் கூச்சலைத்தாண்டி கூப்பாடு போட்டுப் பேசுகிற தீக்கொளுத்தி.

முந்தா நாள்.. திருவேங்கடம் போயிருந்தான். முருகேசன் எக்ஸ்.எல். லில் தான் போனான். நிதானமான வேகத்தில் நிதானமற்ற யோசனைகளுடன் போனான்.

ஏகப்பட்ட கடன்கள். எந்நேரமும்யாராவது ஒருவர் பாக்கிகேட்டு வருவார். சத்தம் உயர்த்தி கேவலப்படுத்தாவிட்டாலும் போகிற இடங்களுக்கெல்லாம் வந்துமுற்றுகையிடுகிற கடன்காரர்களை நினைத்தால் இவனுக்கு அவமானமாக இருக்கிறது. சூழும் கேவல உணர்வால் மனசுகிடந்து அயற்சியடைகிறது.

அய்யாவின் மேற்பார்வையில் வியர்வையில் தெற்காட்டுப் புஞ்சைமண் கன்னங்கரேரென்று ஈரல் கறி மாதிரி இருக்கிறது. காட்டில் பாடுபடுகிற கன்னிப்பெண் மாதிரி திண்ணக்கமாக இருக்கிறது. இன்றைக்கும் வந்து விழுந்த ஒற்றைத்துளியை பல்லாயிரம் தானிய மணிகளாக திருப்பித்தருகிற தாயாக, தாட்டியமான இளந்தாயாக இருக்கிறது. அதன் கம்பீரம். மண்ணெல்லாம் கிடக்கிற ஆட்டுச்சாணிகள். ஆட்டுப்புழுக்கைகள். வளர்கிற பயிர்களில் இருக்கிற வீர்யம் வாங்குகிற கதிர்களில்

அடர்த்தியான மணிப்பிடிப்பு பருத்தியோ மிளகாயோ, நினைத்ததை விட கூடுதலாக விளைகிற விளைச்சல் · இன்றைக்கும் சங்கரன்கோவில் கமிஷன் கடையில் கடனில்லாமல் வற்றல்போட்டு இருபத்தையாயிரத்துக்குமேல் சிட்டைமுடிக்கிற சம்சாரியாக அய்யா.

பாலையா நாயக்கர் புஞ்சை..! இந்த ஆறு வருடத்தில் மாற்றுமண் விழாமல் சோகை பிடித்துப்போய் முகம் வெளுத்துக்கிடக்கிற நிலமுகம். குப்பை விழாமல் சாணி விழாமல், தூசி துப்பட்டையில்லாத சுத்தமாக சூன்யமான வெளுப்பில் கிடக்கிற வெற்று நிலம். மக்காச்சோளம் முழங்கால் உயரத்துக்கு மேல் வளர மறுக்கிறது. யூரியா,டிஏ.பி காம்ப்ளெக்ஸ் பொட்டாஷ் என்று எத்தனை ரசாயன உரங்களை அள்ளியிறைத்தாலும், "உள்ளதும் போச்சுடா நொள்ளைக்கண்ணா" என்பது போல விளைச்சல் அளவு குறைந்தே வருகிறது.

அய்யாவை விட பத்துமடங்கு கூடுதலாக செலவுகள். அய்யா எடுக்கிற மகசூலில் பத்தில் ஒரு பங்கு தான் இவனால் எடுக்க முடிகிறது. என்ன செய்ய ?

செலவுகள் கூடி.. வருமானம் வீழ்ந்தது மட்டுமல்ல, நிலமும் உயிரிழந்து விட்டது. எதற்கும் லாயக்கற்ற சோகைநோய் பீடித்துக் கிடக்கிறது.

செலவு பெருகி.. வரவுகுறுகி.. கடன் வளர்கிறது. அதுவும் பெருக்கல் விகிதத்தில். அஞ்சு, ஆறு, ஏழு என்றல்ல. அஞ்சு, பத்து, நூறு, ஆயிரம் என்று வளர்கிறது.

ஆறுவருஷத்தில் முழுசாகத் தோற்றுப் போனதை உணர்கிற முருகேசன். உணர்த்துகிற பலவீனத்தில் பருத்திச் செடிகள். அதன் காய்ப்புழுக்கள். மிளகாய்ச்செடிகள். அதன் இலைகள் சுருட்டையடித்துப்போய் சுண்டெலிக் காதுகளாக நெளிந்து கிடக்கின்றன. பச்சை நிறத்தில் மின்ன வேண்டிய மக்காச்சோளத்தில் வெளிர்முகநோய்.

நினைக்க நினைக்க சோர்வடைகிற மனசு. நினைக்காமலிருக்க முடியாத வெப்பச்சூழல். கடன் நெருப்பு நாக்குகள்.

உப்புமூடை சுமக்க ரெண்டுஆள். அள்ளிவிதைக்கஓர் ஆள். தண்ணீர் பாய்ச்ச ஓர்ஆள். எல்லாவற்றுக்கும் ஆள் . கூலியாள். அள்ளி அள்ளி இறைத்த யூரியாவெல்லாம் என்னாயிற்று? மூடை மூடையாக உழவில் கொட்டிய டி.ஏ.பி காம்ப்ளெக்ஸ் எங்கே போயிற்று? மண்ணுக்கு வலிமை சேர்த்ததா? மண்ணின் உயிர்ச்சத்தை ஒன்றுக்குப்பத்தாகப் பிடுங்கிக் காற்றில் கரைத்ததா?

உரக்கடையில் வந்து நின்றான். ஒருதடவைக்கு ரெண்டு மூன்று தடவைகள் ஆப்பிள் பழங்களும் ஹார்லிக்ஸ் பாட்டில்களுமாக பார்க்க வந்த உரக்கடை முதலாளி.

இவனது கோபத்தை ஆற்றி ஆற்றி சூடணைத்து நீருக்குள் போட்ட தீக்கங்காக்கிவிட்டார் உரக்கடைக்காரர்.

அவருக்கு முப்பத்தேழாயிர ரூபாய் கடன் இருக்கிறது. வில்லங்கம் பண்ணாமல் வாய்ச்சத்தம் போடாமல், வியாபாரத்தை வளர்த்துக்கொண்டே வசூல் பண்ணியாகணும். நோகாமல் நொங்கெடுத்து ஒதுங்கிக் கொள்ளணும்.

நுட்பமான உணர்வுடன் வலை பின்னிய அவரது சிந்தனை. இங்கிதமான இனிமையான அணுகுமுறைகள்.

வந்துநின்ற முருகேசனை-

"வாப்பா.. வா. வந்து உக்காரு..." என்று உபசரித்து வரவேற்கிறார். டீ வரவழைத்து தருகிறார்.

அவர் டேபிளுக்கு எதிரில் உட்கார்ந்திருக்கிற ஒரு வெள்ளைச்சட்டைப் பார்ட்டி. அவரது கணக்கைத் தான் போட்டுக் கொண்டிருக்கிறார் உரக்கடை முதலாளி.

கன்னங்கரேலென்று மினுமினுக்கிற அந்தப்பார்ட்டி. வெள்ளை வெளேரென்று பளிச்சிடுகிற வேட்டிசட்டை. விரல்கள் முழுக்க மோதிரங்கள். வலதுகையில் பிரஸ்லெட். கழுத்தில் முறுக்கு வடத்தங்கச் செயின்.

"இரு.. முருகேசா.. இவருக்கு டோட்டல் பண்ணி ரூவாயை வாங்கிட்டு வாரேன். நீ சித்தே உக்காரு."

சரியென்று சேரில் சற்று விலகி உட்கார்ந்த முருகேசன் டேபிளிலிருந்து ஒரு வெள்ளைத்துண்டுத் தாளையும் பேனாவையும் எடுத்தான்.

நினைவுகளைத் தோண்டித்துருவி ஞாபகங்களைத் தட்டி எழுப்பி ஒவ்வொன்றாக எடுத்து சிட்டையில் எழுதினான். யார் யாருக்கு எவ்வளவு கடன்?

கைமாற்று கால் மாற்று முதல் சொஸைட்டிக் கடன், ரெண்டுபைசா வட்டிக்கடன் வரைக்கும் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் குறித்து வந்தான்.

பூச்சி மருந்துகளின் நெடி, நாசிக்குள் ஏறுகிறது. ரசாயன உரங்களின் வீச்சமும் நாற்றமும் குடலைப்புரட்டுகிறது. அதையெல்லாம் யோசிக்காமல் கடன்காரர்களையே மனசுக்குள் தேடினான். யோசனைகளிலிருந்து உருவினான். பட்டியல் போட்டான். வரிவரியாக வரிசை தப்பாமல் எழுதி வந்தான். கூட்டிப்பார்த்தான். அவனுக்கு மலைப்புத்தட்டியது. உள்ளுக்குள்அச்சவியர்வைப்பெருக்கு.

ஒருலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து அறுநூறு ரூபாய். அந்தத்தொகை அவனை அச்சுறுத்தியது. மிரட்டியது. அடிவயிற்றில் பகீரிடுகிற வெறுமைப்படர்வு.

கூட்டுறவு வங்கிகள், அரசுசார் கிராம வங்கிகள் எல்லாமே பயிர்க்கடன்களை நடைமுறையளவில் நிறுத்திவிட்டு, தங்கநகைக்கடன் மட்டுமே தருகின்றன. இனிமேல், தனியாரிடம் தான் கடன் வாங்கி விவசாயம் செய்தாக வேண்டிய நிலைமை.நிர்ப்பந்தச்சூன்யம்.

உரக்கடை முதலாளி எதற்காகவோ எழுந்து வந்தவர், இவனைக் கடக்கிறபோது இவன் எழுதிக்கொண்டிருந்த சிட்டையை வெடுக்கென உருவினான். விளையாட்டாக அவரது வேடிக்கைச்சிரிப்பு.

"என்னப்பா கவிதை கிவிதை எழுதுறீயா?"

"இல்லே மோலாளி, கடன்பட்டியல்"

"என்னப்பா, யாரோட பட்டியல் இது? ஏறக்குறைய ரெண்டு லகரம் வருது?"

"என்னோடது தான்"

"ஆறு வருஷத்துக்குள்ளே யா? இம்புட்டு ஆளுக கிட்டேயா?"

கடன்காரர்களின் எண்ணிக்கையைக் கூட்டினார்.

"மொத்தம் இருபத்தேழு ஆட்களா? இத்தனைபேரிடமா? இதென்னப்பா கொடுமை? இத்தனைபேர் நச்சரிப்புகளை எப்படித்தாங்குறது?"

உரக்கடை முதலாளியின் கேள்வியின் தனித்துவத்தொனியை கவனித்தான். கூர்மையாக கவனித்தான்.

இம்புட்டுக்கடனா என்ற வியப்பில்லை.

இம்புட்டு ஆட்களிடமா என்ற வித்தியாசமான கேள்வி. கேள்வியின் திசையே வேறாக இருக்கிறது.

"இம்புட்டு ஆட்களிடம் பிக்கல் பிடுங்கல் இருந்தால் அவங்க குடுக்குற நச்சரிப்புகள்லே டார்ச்சர்கள்லே மனுசநிம்மதியே மண்ணாயிருமே..."

"என்ன சொல்றீக?"

"சொஸைட்டிக்கடன் வங்கிக்கடன் கவர்மெண்ட் லோன் எல்லாத்தையும் கழிச்சிட்டு தனியார் கடன் எம்புட்டுன்னுபாரு எத்தனையாளுகன்னு பாரு.."

"ஒரு லட்சத்துப்பன்னிரண்டாயிரம். இருபத்தி ரெண்டு ஆட்கள்"

"இதை .. ஒரே ஆள் கடனா ஆக்கிருவமா?"

"என்ன சொல்றீக..."

"ஒரே ஆள் கடனாயிட்டா.. தொல்லை இல்லே. நச்சரிப்பு இல்லை. அச்சலாத்தியில்லே. ஒருநிம்மதியா இருக்கலாம்."

"புரியலே.. நீங்க சொல்றது?"

"இந்தா இருக்காருல்லே.. இவரு நமக்கு வேண்டிய ஆளுதான். தங்கமான ஆளு. அவரோட பிஸினஸே ஃபைனான்ஸ் தான். நாஞ்சொல்லுதேன். ஒன்றரை லட்சரூபாய் இவர்கிட்டே வாங்கு. ஒரே பத்திரத்துலே கையெழுத்துப்போடு. அல்லுச்சில்லு கடன்களை யெல்லாம் வீசி யெறிஞ்சிட்டு நிம்மதியாயிரு."

"வட்டி?"

"அவருபேரே பத்து வட்டி பழநிமலை தான். ஒனக்காக வேணும்னா.. அஞ்சு வட்டியா கொறைக்கச் சொல்லுதேன்."

"அஞ்சுவட்டியா.. ? ஐயய்யோ..ஆளை அள்ளிச்சுருட்டி வுழுங்கிட்டுப் போயிருமே.. நமக்கு வேண்டாம் மோலாளி."

"ஏய் முருகேசா.. நாஞ்சொல்லுதைக்கேளு ! கண்டகண்ட அற்ப நாய்கள்ல்லாம் வந்து நின்னு கடன்கேட்டு ஒன்னை அசிங்கப்படுத்தணுமா ? தேவையா ? நிம்மதியா நிலம் நீச்சை கண்காணிக்க முடியுமா ?"

என்ற உரக்கடை முதலாளி பழநிமலைபக்கம் திரும்பினார். "யோவ் பத்துவட்டி இது நம்ம பையன். நல்ல பையன் புதுப்பாணி வெவசாய முறையிலே திறமையை காட்டுற பையன்.."

"இருக்கட்டும். ஒண்ணும் வெளக்கம் வேண்டாம். நீங்க கையை காட்டுனா.. அது நல்ல பார்ட்டியாத்தான் இருக்கும். எனக்கு நம்பிக்கையிருக்கு. விஷயத்தைச் சொல்லுங்க."

"ஒன்றரை லோன் குடுங்க.. நா சொல்லுறதை தட்டாம.. நீரு கேக்கணும். நாலுவட்டி தான் நம்ம முருகேசனுக்கு போடணும்"

பழநிமலையின் தயக்கம். வசூல் பண்ணப்போய் வருகிற செலவுகள். பெட்ரோல் செலவுகள். கூட வருகிற ஆட்களின் டாஸ்மாக் செலவுகள். புரோட்டடா மட்டன் செலவுகள் என்று பட்டியல் போட்டுக் கொண்டே போய்... நீளத்தயக்கத்துக்குப்பிறகு... பழநிமலை...

"உரக்கடை மோலாளி உத்தரவை மீறச்சக்தியில்லே. எனக்கு ஒப்புக்கொள்றேன்.ஆனா ஒரு கண்டிசன். என்கிற அவனின் போலிக்கண்டிப்பு

"என்னப்பா கண்டிஷன் ?"

"அசலு வருதோ, இல்லியோ, மாசாமாசம் வட்டிப்பணம், அட்டியில்லாம, வந்தாகணும். வந்துட்டா நா, தங்கம். வரல்லன்னா அசிங்கம்."

"அதெல்லாம் நாணயமான ஆளப்பா. பரமசிவம் வம்சம். நாக்கு பெரளாது. வாய் சுத்தம்."

ஒன்றரை லட்சம் கைமாற... ஒரு பத்திரத்தில் நாலைந்து கையெழுத்து போட்டான், முருகேசன். உரக்கடைக்காரரின் நாற்பதாயிர ரூபாய் பற்று, மொத்த வரவாயிற்று. அவர் முகமெல்லாம் ஒளிச்சிரிப்பு. ஆப்பிள் பழங்களும் ஹார்லிக்ஸ் பாட்டிலுமாகப் பின்னிய வலை, தன் இரையை அள்ளிச்சுருட்டிக் கொண்டது.

அவரது மென்மையான அணுகுமுறைக்கு முழுமையான வெற்றி.

இவன்கேட்ட பூச்சி கொல்லி மருந்துப்பட்டியலை ஆசை ஆசையாகப் போட்டார். சிரிப்பும் சந்தோஷமுமாக சிட்டைமுடித்தார்.

பழநிமலை கடினகுரலில் கூறினார்.

"தம்பி, மாசாமாசம் வட்டி ஆறாயிர ரூபாய். வசூல் செலவு அறுநூறு. ஆக மாசாமாசம் ஏழாந்தேதிவருவேன். ஆறாயிரத்து அறுநூறு சிந்தாம சிதறாம எடுத்து வைக்கணும். இன்னைக்கு நாளைக்கு என்று இழுத்தடிச்சா.. சரிப்படாது" அந்தக் கடினக்குரலுக்குள் ஒருமூர்க்கம் இருந்தது. "வராட்டா நா அசிங்கம்" என்ற வாக்குமூலத்தின் ஆதிமுகம் தெரிகிறது.

எல்லாக் கடன்காரர்களையும் வீட்டுக்கு வரவழைத்து செட்டில் பண்ணினான். ஈஸ்வரிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆயினும் என்ன ஏதுவென்று விசாரிக்கப் பயமாக இருக்கிறது.

அவனாகவே சொன்னான். சாதித்து முடித்து வெற்றி கண்ட பெருமிதக்குரலில்.

"அங்கேயும் இங்கேயுமாக ஆயிரத்தெட்டுக் கடன்களை வழிச்சுக்கூட்டி ஒண்ணாக்கி ஓர்ாள் கடனாக்கிட்டேன்.இனிமே கவலையில்லே. ஒருநிம்மதியா வெவசாயம் பண்ணலாம்.."

கிண்டிக்கிளறிக்கேள்வி கேட்க பயமாக இருக்க ஈஸ்வரி.. நடப்பது நல்லதாக இல்லை என்று மட்டும் தெரிகிறது. அவளது அடிமனசின் ஆழத்தில் ஒருபட்சி கத்துகிறது.

"இது நல்லதுக்கில்லே, இது நல்லதுக்கில்லே"

அந்தக் கத்தல் அவளது கரிக்குடலைக் கவ்வுகிறது. இனம் தெரியாத திகில் உள்மனசைப்பற்றி இழுக்கிறது. யாரிடம் சொல்லியழ?

போக்கிடமற்றுப் புலம்பி அற்றலைகிற அவளது ஒற்றை மனசு.

பாலையா நாயக்கர் புஞ்சைத் தலைமாட்டில் செருப்பைக் கழற்றிப்போட்டான், முருகேசன். காலைப்பொழுது மேலேறிவிட்டது. எட்டுமணி இருக்கும். ஆறுகுறுக்கமும் எந்தப்பயிர் பச்சையுமில்லாமல் சும்மா கிடக்கிறது. பருத்தி வெள்ளாமை முடிந்த புஞ்சைக்குள் கால்வைத்தான். பூமிக்குள் வேரோடிக்கிடந்து காய்ந்துலர்ந்த தூர்க்குச்சி காலைப் பதம் பார்க்கிறது. அழுத்திக் காலைவைத்து தூர்க்குச்சியும் இறுக்கினால் பாதம் கிழிந்து விடும். உள்ளங்காலுக்குள் ஒற்றைவிரல் அகலத்தில் காயமாகிவிடும். கூசிக்கூசிப் பயந்து பயந்து காலைவைத்தான். செருப்பில்லாத பாதங்கள். மண்கட்டிக்குக்கூட கூசியது. தரைபடாத பாதங்கள். மண்படாத உள்ளங்கால்கள். செருப்பே காலாக எல்லா இடங்களிலும் நடந்து நடந்து உள்ளங்கால் பூப்போல ஆகிவிட்டது.

பம்ப்ஷெட்டில் ரூமுக்குப் போனான். திறந்தான். மாரிமுலையில் அட்டைப்பெட்டியில் பூச்சி கொல்லி மருந்து டப்பாக்கள். வெறும் டப்பாக்கள் எல்லாம். ஒன்றிரண்டில் நூறு மில்லி, இருநூறு மில்லி மிச்சமாக இருந்தன.

பருத்தியை எடைபோட்டான். ஒன்பது குவிண்டால் தேறியது. ரெண்டாயிரத்து நானூறு விலை.

இவன் முழுத்த இளவட்டமாக இருந்தபோது பத்து வருஷத்துக்கு முன்னால் பனியன் ரெண்டு வாங்கினான். இருபத்தி நாலுரூபாய்பில். முந்தாநாள் ரெண்டு பனியன் வாங்கினான். அதே கம்பெனி. அதே சைஸ் .அதே தரம். எழுத்திரண்டு ரூபாய் பில். மூணுமடங்கு கூடுதல்.

பத்து வருஷத்துக்கு முன்னால் பருத்தி விலை குவிண்டால் ஆயிரத்து எழுநூறு. இப்போது ரெண்டாயிரத்து நானூறு. பருத்திமில் முதலாளிக்கு கம்பெனிகள் பல்கிப்பல்கிப்பெருகுகிறது. பருத்தி விவசாயியின் வாழ்க்கையைக் காய்ப்புழுக்கள் மேய்கின்றன.

மக்காச்சோளக்கதிர் அறுத்தான். அறுப்புக்கூலிக்கும் அடிப்புக்கூலிக்கும் போக.. கைசேர்ந்த தொகை பன்னிரண்டாயிரம் ரூபாய். மிளகாய் வற்றல் விலை பரவாயில்லை. முப்பதாயிரத்துக்கு வந்தது.

ஈஸ்வரி நகைக்கான ரூபாயை அருஞ்சுனையிடம் ஒப்படைத்தான். கடைப்பாக்கியை வரவு வைத்தான். கந்து வட்டி ஐந்து மாசம் அட்டியில்லாமல் கட்டிமுடித்தான். அசலில் வரவு வைக்கலாமா என்று யோசித்தான்.

அடுத்து வருகிற விவசாயச் செலவுக்கு வேணுமே... யாரிடமும் கடன் வாங்கக்கூடாதே... மாசாமாசம் ஆறாயிரத்து அறுநூறு ரூபாய் வட்டிக்கட்டணுமே...

என்ன செய்ய ?

கூட்டுறவு சொஸைட்டிக்கடன் கிராமவங்கிக் கடன் அரசுக்கடன், அப்படியே வட்டி வளர விட்டு விட்டு மிச்சமிருந்த இருபத்தையாயிரத்தை அருஞ்சுனையிடம் கொடுத்து வைத்தான்.

இதைவைத்து கடன் வாங்காமல் ஒருவெள்ளாமை செய்துவிட்டால் விளைகிறமொத்த வருமானத்தை வைத்து பத்து வட்டி பழநிமலையின் கடனை அடைத்துவிடவேண்டும் தப்பித்து கரையேறவேண்டும்.

கணக்கு சரியாவருமா ? இருபத்தையிராத்தை வைத்து முழு வேளாண்மை செய்து விடமுடியுமா ?

கணக்கு வெறுங்கணக்காகிவிடுமா ? விருதா கணக்காவிடுமா ?

ஏனெனில் இவன் மனக்கணக்கு இவனுக்கே அபத்தமாகத் தோன்றுகிறது. கற்றுக்குட்டி போடுகிற தப்புக்கணக்காகத் தோற்றமளிக்கிறது.

ஆறுஏக்கர் டக்கர் உழவு போடணும். யோகேந்திரன் தயவு வேணும். ஏக்கருக்கு நாலுமூடை டி.ஏ.பி மூடைகள் வேணும். எட்டு மூடை பொட்டாஷ் வேணும். மறுஉழவு போடணும். மூலைமுக்கு கொத்தணும். பாத்தி கட்டணும். இதுக்கிடையில் விதைப்பாக்கட்கள் விதைப்பைகள் விலைக்கு வாங்கணும். நாற்றங்கால் போடணும். ஒவ்வொன்றுக்கும் ஆள் வேணும். கூலி தரணும்.

இப்படியே ஏகப்பட்ட "ணும்"கள். பணத்தைக் கொண்டா கொண்டா என்று வேதாளப்பசியோடு வெறி கொண்டாடுகிற "ணும்"கள் என்பசிக்கு இந்தத் தொகையெல்லாம் சோளப்பொரி என்று உதட்டைப்பிதுக்கி ஏளனம் செய்கிற "ணும்"கள்

பத்துவட்டி பழநிமலைக்கு மூன்று மாதவட்டி கொடுத்தாகிவிட்டது. இன்னும் ரெண்டு மாதவட்டிக்கு கையிருப்பு இருக்கிறது. கவலையில்லை. ரெண்டொரு மாதங்களுக்கு அருஞ்சுனை மாமா கைகொடுத்துவிடுவார்.அதற்குள் அடுத்த வெள்ளாமை கைவந்து சேர்ந்துவிடும்.

முருகேசனுக்குள் முன்னும் பின்னுமாக அலைபாய்கிற நினைவூஞ்சல். அவநம்பிக்கையாகவும் நம்பிக்கையாகவும் வந்து மறைகிற எண்ணங்கள்.

போனமாசம் ஏழாம் தேதி பெரிய மோட்டார் பைக்கில் வருகிற வழக்கத்துக்கு மாறாக... காரில் வந்து இறங்கிய பழநிமலை "கார் வாடகைக்கும் சேர்த்து மாசாமாசம் ஆறாயிரத்து எழுநூறு வேணும். கூடுதலா நூறு ரூவா."

கழுதைக்கு வாழ்க்கைப்பட்டால் உதைக்குத்தப்ப முடியுமா ? உரலுக்குள் தலையைக் கொடுத்துவிட்டு உலக்கைக்குப்பயந்தால் நிற்குமா ?

சரியென்று சொல்லி வைத்தான்.

"வட்டி மட்டுமே வந்துக்கிட்டிருந்தா.. போதுமா ? அசலுலே கொஞ்சமாவது வரவு வைக்கணும்லே ?"

"வைச்சிருவம்"

"வட்டி பத்து வட்டின்னா சரிங்கலாம். நாலுவட்டி கட்டாது எனக்கு. காலா காலத்துலே அசலைக்குடுங்க. ஒண்ணரை லட்சம்னா மத்தவுகளுக்கு வட்டிக்குவுட்டு மாசம் பதினையாயிரம் சம்பாதிச்சுருவேன்..."

பத்துவட்டி பழநி மலை உரக்கடையில் பழமலையாகப் பேசினான். பழகினான். தோன்றினான் இப்போது என்னடாவென்றால் பாறை மலையாக இருக்கிறான். முறைக்கிறான். அமுக்குகிறான்.

பம்ப்ஷெட் ரூமைப் பூட்டினான். என்ன நினைத்தானோ.. திறந்துவைத்தான்.

பத்துவட்டி பழநிமலை ஊருக்குள் வருவதே இவனைப் பார்க்கத்தான். முருகேசன் கந்துவட்டிக்காரன் கிட்டேபோய் வகையாக மாட்டிக் கொண்டானே என்று கவலைப்பட்டது சிலர். களிப்பும் சிரிப்புமாகக் கூத்தடித்தது பலர்.

"தொலைஞ்சான் ! இத்தோட... இவன்சாப்டர் குளோஸ்" என்று குதூகலித்தவர்கள் எண்ணிக்கை ரொம்ப.

பழநி மலையில் சிக்கிவிட்டதையறிந்து ஊர் போடுகிற கும்மாளத்தில் குன்றிக்கூசிப்போகிற முருகேசன். காமாட்சி வந்து ஒருமூச்சு அழுது ஒப்பாரி வைத்துவிட்டுப் போகிறாள். "ஏண்டா எடுக்காத எடுப்பா எடுத்து இப்புடி தப்புமேலே தப்பா செய்றீயே.... எதைப்பத்தியாச்சும் யாரு கிட்டேயாச்சும் கலந்து பேசுதீயாடா ? நல்லவுககிட்டே நாலு யோசனை கேக்குறீயாடா ? நீயா என்னத்தையாச்சும் யோசிச்சு தப்பும் தவறுமா செய்துட்டீயேடா... இதுலே யிருந்து எப்புடிடா மீளுவே ? மீண்டு வர்றதுக்குப் பாதை இல்லியேடா..?"

அம்மாவுக்கு ஆறுதல் சொல்லி தைர்யம் தந்து கண்ணீரைத் துடைத்து அனுப்புவதற்குள் "போதும், போதும்" என்றாகிவிட்டது.

புஞ்சையை பூராவும் சுற்றினான். அய்யாவியர்வை அம்மாவியர்வை அழகேசன் வியர்வையை ருசிபார்த்திருக்கிற இந்த நிலத்தில் இவனது வியர்வை தெறிக்கவேயில்லை. காலடிகள் தான் தடம் பதிந்துள்ளன.

புஞ்சைமண் இறுகலாக இருக்கிறது. டக்கர்விட்டு உழுது உழுது காங்கிரீட்டாக இறுகிப்போனநிலம். புழுதியோ மிருதுவோ இல்லாத பொக்குமண். சாணிசகதி பார்த்தறியாத ஆறுவருசப்பசி. ஆட்டுக்கிடைவெக்கையை உணராத ஆறு வருசத்தாகம். கம்மாமண்ணோ ஆதாளை ஆவாரங்கொழையின் அழுகல்களோ வந்து விழாத ஆறுவருசத்தவிப்பு.

டக்கர் உழவால் இறுகிப்போனநிலத்தில் பாதம் படப்பட, அய்யா ஆகாயமாக உயர்கிறார். மலையாக விரிகிறார்.

அவர் பழையவரல்ல... மரபானவர்.

பழைமை என்பது வளர்ச்சிக்குத்தடையாக இருக்கும். உடைத்துத் தகர்த்தால் தான், முன்னேற்றம் சாத்தியப்படும்.

மரபு என்பது வளர்ச்சிக்கு உரமாக இருக்கும். மாற்றத்துக்கும், ஒளியாகத் திகழ்ந்து வழிகாட்டும். "மரபு" என்று நினைத்துப் பழைமையை துதித்து விடக்கூடாது. "பழைமையோ" என்று நினைத்து மரபை புறக்கணித்துவிடவும் கூடாது. பழைமையையும் மரபையும் இனம்பிரித்து... தள்ளுவது தள்ளி, கொள்ளுவதைக் கொள்வதற்கு பகுத்தறிவு வேண்டும்.

தன்னம்பிக்கையும் தன்னகங்காரமும் ஒன்றுபோலத் தோன்றும். ஆனால் நேர் எதிர்மறைக்குணம் கொண்டது. பழைமையும் மரபும் ஒன்று போலத் தோன்றும். ஆனால் நேர் எதிர் மறைக்குணம் கொண்டது.

அய்யாவைப் பழைமை என்று நினைத்துப் புறந்தள்ளி விட்டேனோ? மரபுக்கு எதிராக வீரம் காட்டி விட்டேனோ? தொட்டுத்தொடர வேண்டியமரபை வெட்டித்தகர்த்து என்னையே வீழ்த்திக் கொண்டேனோ? என் மீதே நான் காறித்துப்பிக் கொண்டேனோ?

பம்ப் ஷெட்டை சுற்றித் தோட்ட மண்ணில் கால்பதித்து நடந்துவந்தான். புஞ்சைத் தலைமாட்டுக்குவந்தான். சிமிண்டுக்கலர் கார் வண்டிப்பாதையில் மெதுவாக வருகிறது. பழநிமலை வர்றாரோ? இன்னிக்கு ஏழாந் தேதியா? இல்லையே... இன்னும் மாசம் பிறக்கலியே...

குழப்பமாக ஏறிட்டான். காலைவெயில்பட்டு எதிரொளிக்கிறது. கார், துரத்தில் நிற்க... பழநிமலைஇறங்கிவருகிறார். டிரைவர் காதில் படாமல் பேச, என்னரகசியம் இருக்கிறது?

நடையின் வேகம். மோதிரவிரல்களின் ஒளித்தெறிப்பு. கால்செருப்பின் "சர்ர்ருக், சர்ர்ர்ருக்" என்ற மிரட்டல் அச்சுறுத்தலான மனநிலைதருகிற வருகை. ராட்சஸ வருகை.

முகத்தில் கனல் தெறிக்கிற கோபம். கரியமுகத்தில் கரிபூசின மாதிரி வியர்வைக் கசிவும், கோபக்கொப்பளிப்பும்.

காலில் செருப்பை மாட்டுகிற நிதானமில்லாமல் திகைப்பும் குழப்பமுமாக நிற்கிற முருகேசன் பக்கத்தில் வந்துநிற்கிற பழநிமலை.

"என்ன..இன்னைக்கு வந்துருக்கீக? மாசம்பொறக்கலியே"

"எனக்கும் தெரியும். தலைபோற அர்ஜெண்டு. அதான் ஓடியாந்தேன்"

"என்ன வெஷயம்?"

"ஒரு ரியல் எஸ்டேட் கம்பெனி. ஃபைனான்ஸ் கேட்டுவந்துருக்கு. பக்கா டாக்குமெண்ட்ஸ். இருவது வட்டி தேருது. ஏழுகோடி கேக்கோக. அதை மூணு தவணையிலே கேக்குறாக..."

"நல்ல வெஷயம்தானே ? ஒங்களுக்குலாபம் வந்தா சந்தோஷம் தான்"

ஒஞ்சந்தோஷத்தை வைச்சு, நாக்கு வழிக்கவா? உப்பாகுமா? புளியாகுமா? என்னத்துக்கு ஆகும்."

அவசியமற்ற வார்த்தை தடிப்பு. அனாவசியமான அத்துமீறல். ஆத்திர மூட்டுகிற வார்த்தை சீண்டல்.

"என்ன சொல்லுதீக ?"

"ஏழாந்தேதி கார்லே வருவேன் வட்டியோட அசல் ரூவா ஒரு லட்சம் வந்தாகணும். வரல்லேன்னா ?"

"திடுதிப்புன்னு கேட்டா- நா எங்கபோவேன் ?ஒரு லட்சம்னா சும்மாவா ?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுப்பா. ரூவா ரெடியாக இருக்கணும். இல்லேன்னா-- ?"

"ஒம் பொண்டாட்டியைத் தூக்கி காருக்குள்ளே போட்டு கொண்டுக்கிட்டு போயிருவேன்"

அவன் சொன்ன வார்த்தைகள் வேற்றுமொழிபோலப் புரிபடாமல் மாயம்காட்டின. ஏதோ தவறி விழுந்த தடுமாற்றச் சொற்கள் போலத் தோன்றின.

"ஒரு லட்சத்தை எப்ப கொண்ணாந்து தாரீயோ அதுவரைக்கும் அடகுப்பொருளா ஒம் பொண்டாட்டி இருப்பா.. ஏங் கஸ்டடியிலே."

"என்ன சொல்லுதீக. இது எந்த ஊரு ஞாயம் ? யாரு கிட்டே என்ன பேச்சு பேசுதீக ?"

"இங்கபாரு, கந்துவட்டிதடுப்புச்சட்டம், ஆட்கொணர்வு மனுன்னு கச்சேரிப்பக்கம் போனேன்னு வைச்சுக்கோ... அப்புறம் நீ கையெழுத்துப்போட்டு குடுத்துருக்கிற வெத்துப்பத்திரம் என்னவேணும்னாலும் பேசும். பாத்துக்கோ..."

அவனுக்குள் "திகு,.திகு" வென்று எரிகிற நினைவுத்தீ. கொந்தளித்து குமுறுகிற குருட்டுவெறி. "இப்படியே பொழிக்கல்லால் மண்டையிலே அடிச்சு கொன்னு மலர்த்திருவோமா" என்றுவருகிற மூர்க்கவெறி.

அவன் சட்டைக்குள் தெரிகிற பச்சைநிற பெல்ட். அதில் சொருகிநிற்கிற சூரிக்கத்தியின் புடைப்பு. பொழிக்கல்லைக் குனிந்து எடுப்பதற்குள் அவன்ஆயுதம் முந்திவிடும்.

உயிரில் சொருகி உஷ்ணரத்தத்தை பீய்ச்ச வைத்துவிடுவான்.

அவன் கண்ணின் உக்கிரம். மனத்தீயின் நாக்குகள். மானத்தீயின் நாக்குகள்.

"இது என்னண்ணாச்சி? இது என்ன மனுசத்தனம்? வட்டிக்கு வுட்ட ரூபாயை கேளுங்க. கட்டுன பொண்டாட்டியை கேக்குறது என்ன ஞாயம்?"

"இங்கபாரு, எங்க குலதெய்வமே பணந்தான். எல்லாமே பணந்தான். ஒம்பொண்டாட்டியைத் தூக்கிட்டுப்போன பெறவு.. நீ மூணுமாசம். மூணே மூணுமாசம் பேசாம இருந்தீன்னா... போதும். அசலு மொத்தமும் கழிஞ்சி போச்சுன்னு ஒம்பொண்டாட்டியை ஒங்கிட்டே ஒப்படைச்சிருவம் ஒசியாவே..."

"என்ன சொல்லுதீக..?"

"உசுருள்ள தங்கம்யா.. பொம்பளை மூணுமாசத்துலே அதைவைச்சு மூணு லட்சம் சம்பாதிச்சுருவம்லே?"

இதைச் சொல்ல வெக்கமாயில்லை ஒங்களுக்கு? அடச்சீ!"

"இங்கபாரு இதுமானங்கெட்ட காரியம் தான். பத்துவட்டியே மானங்கெட்ட காரியந்தான். இருவது வட்டிக்கு அலையுறதுமானங் கெட்ட காரியந்தான். அடகுச்சாமானாவற்ற பொம்பளையை வைச்சு சம்பாதிக்கிறதும் மானங்கெட்ட காரியந்தான். அதானே எங்க தொழிலு. எங்களுக்குப்பணந்தான் புண்ணியம்"

அவனைப் பார்க்கவே அருவருப்பாக இருக்கிறது. காறித்துப்பலாம் போலிருந்தது.

"இங்க பாரு இந்த மானங்கெட்ட காரியத்தை ஊர்லே வைச்சுப்பேச வேண்டாம்னு தான் இங்கவந்தேன்.ஆனா ஒரு வெஷயம் நிச்சயம். வர்ற ஏழாந்தேதி எனக்கு ஒருலட்சம் ரெடியா இருக்கணும். இல்லேன்னா... ஒம்பொஞ்சாதியைத் தூக்கிட்டுப்போயிருவேன்.."

"ஊர்லே சும்மாயிருப்பார்களா? பாத்துக்கிட்டு சும்மாயிருப்பாகளா?அருவா கம்பை தூக்காமட்டாகளா?"

"நீ எழுதிக்குடுத்த ஒரு பத்திரத்துலே, "அவளை ஏங்கிட்டே அடகு வைச்சு ஒப்படைச்சு நீ எழுதுனமாதிரி" இருக்கும்.

ஊரைக்கூட்டி ஒம்பத்திரத்தைக்காட்டி, ஒன்னைகேவலப்படுத்தி ஊரையே கேப்பேன், "ஒண்ணரை லட்சம் தாரீகளா, வழியை வுடுதீகளா"ன்னு. ஊரோட சம்மதத்தோட ஒம்பெண்டாட்டியைச் சிறையெடுப்பேன். ஊரு, எழுதிக்குடுத்து பொஞ்சாதியை அடகுவைச்ச ஒன்னைத்தான் காறித்துப்பும் தேவையா?

இவனது மௌனத்தின் மீதேறுகிற பழநிமலை. "இங்கபாரு என்னை மடக்க நெனைக்காதே அது நடக்காது. ஒருலட்சம் ரெடிபண்ணு. இல்லேன்னா ஒம்பொஞ்சாதியை ஒப்படைக்க ரெடியாயிரு."

பதிலுக்கு எதிர்பார்க்காமல் புறப்பட்டு விட்டான். பழநிமலை.

அவன் சுற்றி வளைத்து முற்றுகையிட்டு, மானத்தின் கழுத்தை நெறித்து. உயிரைத் துடிக்க வைக்கிற ராட்சஸத் தனத்தில் ஜெயித்து விடுவான். இவன் பத்திரத்தை ஊர் பார்த்தால் என்னசொல்லும்? எப்படி காறித்துப்பும் எவ்வளவு பெரிய அவமானம்? எவ்வளவு பெரிய கேவலம்?

பழநிமலை கேட்டதும் பேசியதும் ஊருக்குத் தெரிந்தாலே... மானம் போய்விடுமே.. ஈஸ்வரி எப்படிப்பார்ப்பாள்?அவள் முகத்தில் எப்படி முழிப்பது? அய்யா முகத்தைப்பார்க்கிற தைர்யம் வருமா? ஊரில் யாரைத் தான் பார்க்கிற தைர்யம்?

மானங்கெட்ட காரியங்களைச் செய்யத்துணிகிற பழநிமலையைப் போலவா நான்? மானம் போனபிறகு எப்படி உயிர் வாழ்வது?

திரும்பினான்.சோகமும் அவல உணர்வுமாக ஆறு குறுக்க நிலத்தைப்பார்த்தான். நிலச்சமுத்திரம்.

நிலத்தை நம்பி.. விவசாயப்புதுமையை நம்பி.. எதிர்க்கக்கூடாத அய்யாவைத் தலைகுனிய வைத்து- செய்யக்கூடாத காரியமெல்லாம் செய்து, ஆகாதகாரியம் செய்து.. வெவசாயம் பண்ணி.. எதை வெளையவைச்சிருக்கேன்?

கந்துவட்டிக்காரனின் கையில் கட்டியமனைவியை ஒப்படைக்கிற மகாக்கேவலத்தை வெளைய வைச்சிருக்கேன்.

நிலத்தைக் கெடுத்து, மண்ணோட உயிரைக் கெடுத்து, விவசாயத்தைக் கெடுத்து, நஷ்டப்பட்டு, கடன்பட்டு, பொண்டாட்டியையே அடகு வைக்கிற அவலத்தை வெளைய வைச்சிருக்கேன்.

சந்திரமதியை வித்த அரிச்சந்திரனுக்கு சத்தியவான் என்கிற நியாயம் இருந்துச்சு. பொண்டாட்டியை விக்குற எனக்கு, என்ன ஞாயம் இருக்கு?

நிலப்பரப்பைப் பார்க்கிற முருகேசன். ஊரையும் பார்க்கிறான். தூரத்தில் தெரிகிற ஊருக்கு எப்படிப் போறது? என்ன நியாயத்தில் போறது? யார் முகத்தில் முழிக்க முடியும். யாரை நிமிர்ந்து பார்க்க முடியும்?

நினைக்க நினைக்க அவனுக்குள் இருட்டிக் கொண்டு வந்தது. குடலைப்புரட்டுகிறது. வரப்போகும் அவமானத்தை எண்ணி எண்ணி மருகுகிறான். மனத்திணறல், உயிரைப்பற்றி உலுக்குகிற கேள்வி எப்படி ஊருக்குள்ளே போறது?

இனி என்ன செய்ய?.

61

"வீட்டுக்குப் போய் ஈஸ்வரி கையால் சாப்பிடலாம்" என்று யோசனையோடு பொழிக்கு வந்த முருகேசன், செருப்புக்குள் காலை மாட்ட முனைகிற போது தான், தூரத்தில் கார் வருவது தெரிந்தது.

கார் என்றாலே அடிவயிற்றில் கலக்கம் வரும். "நாளில்லாத நாளில் என்னத்துக்கு பழநி மலை வரப்போகிறார்" என்ற திகைப்பும் திகிலும் அவனை வதைத்தது.

பழநிமலை வந்தது. நின்றது. பேசியது..எல்லாமே ஒரு கனா போலிருக்கிறது. நடந்தது நிஜந்தானா என்ற சந்தேகம் தட்டுகிறது. ஒரு மாயம் போல எல்லாம் நிகழ்ந்துவிட்டது. ஒரு மின்னல் தாக்கிவிட்டது.

அவனுக்குள் உயிரின் ஆணிவேரறுந்த மாதிரியொரு உடற்சூன்யம். உடம்புக்குள்ளிருந்து அத்தனை நரம்புகளும் உருவிச்சரிந்து வெறும் எலும்புக்கூடாகிவிட்டது போலிருக்கிறது.

அப்பவும் இப்படியா ஒரு குண்டைப் போடுவது? மலையே உருண்டு உருண்டு வந்து அழுக்கி நசுக்கியது போலிருக்கிறது.

"அசலை முடிக்கிற வரைக்கும் ஒம் பொண்டாட்டி எங்க கஸ்டடியிலே இருக்கட்டும்"

மனிதச் சதையை பல்லால் கவ்வி இழுத்து, மனித ரத்தத்தை குடிக்கிற மனிதனைப் போலக் கொடூரமான வார்த்தை. நம்பவே முடியாத அதிபயங்கரக் குரூர வரிகள்.

கடன் வசூல் என்பது காலம் காலமாக நடப்பதுதான்.கப்பம் கடன் வசூல் பண்ணுவதற்காக நாட்டுக்கு நாடு போர்களும், ரத்தக்களறிகளும் நிகழ்ந்திருக்கின்றன. அரசாங்கமே ஜப்தி செய்து வசூல் செய்ய முனையும். வீட்டுக்கதவைப் பிடுங்குவார்கள். வீட்டுப்பத்திரத்தைக் கைப்பற்றுவார்கள். புஞ்சையை அத்துமீறி வந்து உழுவார்கள். கொடுத்த கடனுக்காக மாட்டின் மூக்கணாங்கயிற்றைப் பற்றுவார்கள். வன்மத்துடன் கழுத்தில் துண்டைப்போட்டு முறுக்கி நடுத்தெருவில் நிறுத்தி, நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகிற மாதிரி "நாலு" கேள்விகேட்பார்கள். நடுவீதி மின் கம்பத்தில் கட்டி வைப்பது கூட உண்டு.

உண்டு தான். கொடுத்த கடனை வசூல் பண்ணுவதற்காக பல்லாயிர வகையான உபாயங்களைக் கடைப்பிடிப்பதுவும் உண்டு தான். ஆயினும்,

உயிருள்ள மானமுள்ள மனுசியை அடகுப்பொருளாகத் தூக்கிச் செல்வேன் என்கிற அடாவடியை எங்கும் பார்த்ததில்லை. "ஓம் பெண்டாட்டியை ஏங்கூட அனுப்பிவை" என்ற தடித்த சொல். இதுவரை காதில் கேட்டதில்லை. இப்படியும் சொல்கிறாரே ராட்சஸன்.

அவனை அப்படியே கொன்றிருக்க வேண்டும். குனிந்து கல்லையெடுத்து மூஞ்சியில் ஓங்கி அப்பியிருக்க வேண்டும்.

ரோஷம் உள்ள ஆம்பளையாயிருந்தா, அப்படித்தான் செய்திருக்கனும். அதுலே அவனிடம் குத்துப்பட்டு செத்திருந்தால் கூட மானமுள்ள வீரச்சாவாக அது இருந்திருக்கும். இது என்ன? சூடுசுரணையில்லாமல் மருகித் தவிக்கிறது. சுரணையற்றுப் போய்... அவன் முன்னால் கெஞ்சிக் கொண்டிருந்திருக்கிறேன்.

"உயிருள்ள தங்கம்யா... பொம்பளை. அவளை வைச்சு லட்சம் லட்சமா சம்பாதிக்கலாம்" என்றானே. அப்பக் கூட எனக்குள் வீரம் பீறிடலை. மூர்க்கம் பெறலை.

அம்மா கஷ்டத்தைப் பார்த்துக்கொண்டே "கடல்புறா" வாசித்ததால் வந்த ஈனப்புத்தி. வியர்க்காத முகத்தில் ரெண்டு முறை

சோப்பு போட்டு அலசித் துடைத்து, பவுடர் பூசி பளபளப்பேற்றிய நாகூக்கு, தந்த கோழைப்புத்தி.

ஓம் பொண்டாட்டியை ஒழுங்கு மரியாதையாக ஏங்கிட்டே ஒப்படைச்சிடு. எங்க கஸ்டடியிலே இருக்கட்டும் என்று சுட்டு விரலால் நீட்டிப் பேசுகிற போது? அதிகாரத்துவம் காட்டியபோது கூட... "அண்ணாச்சி, ணொாண்ணாச்சி" என்று கெஞ்சிக் கொண்டு தானே நின்றான்.

பொழுதுக் காலைப் பார்த்தான். உச்சிமதிமயத்துக்கு வந்துவிட்டது. வந்த பசி மந்தித்துவிட்டது.

உயிரை உலுக்குகிற கேள்வி அவன் முன்னால் நிற்கிறது. எப்படி ஊருக்குப் போறது?" "ஈஸ்வரி முகத்தை எந்த முகரையை வைத்துப் பார்ப்பது?" "இந்த நிமிசத்தின் தொடர்ச்சியாக எப்படி வாழ்க்கை வாழ்றது?" " வாழ்றதுக்கு இன்னும் என்னமும் மிச்சம் இருக்குதா?"

முருகேசன் வெறிபிடித்தவனைப்போல நடந்தான். தன்னிலை இழந்தவனைப் போன்ற நடைவேகம். நோக்கமற்ற நடை. எதைநோக்கி என்ற இலக்கற்ற நடை

தெற்காமல் போகிற கப்பிரோட்டில் கண்மூக்கு தெரியாமல் நடந்தான். ஆள் அரவமற்ற கரிசல் காட்டு வெட்ட வெளி. வெள்ளாமை இருந்து முடிந்தநிலம்.

எங்கெங்கும் சூன்யத்தையே சுமந்திருக்கிற கரிசல் நிலவெட்டவெளி. கருவேலமரத்தில் நிற்கிற மைனாக்கள். ஏதேனும் திசைநோக்கிப் பறக்கிற ஒற்றைக்கொக்கு.

ஊர்க்காடுகளைத் தாண்டிவந்து விட்டான். சாமிநாதபுரத்துக்காடு வந்துவிட்டது. ஒன்றிரண்டு ஆட்டுக்காரர்கள் தலை தென்பட்டது.

இவனது நடையின் வெறி வேகத்தில், ஏதோ விசாரிக்க வாயெடுத்த ஆட்டுக்காரச் சிறுவன் வாயடைத்துப் போனான்.

சாமிநாதபுரத்தை நெருங்கிவிட்டான். பெரிய பெரிய வேப்ப மரங்கள் நிற்கின்றன. வெள்ளாமையில்லாத வெறுமையில் கரிசல் தரிசுகள்.

அங்கும் இங்கும் திரும்பிப் பார்க்காமல், பார்த்த பார்வையிலும் எதையும் கவனிக்காமல் கவனிக்கிற நிதானமில்லாமல் வெறிவேக நடை நடந்து கொண்டிருக்கிற முருகேசனுக்கு கப்பிரோடுக்கல் ஒன்று கால் கட்டைவிரலைப் பதம் பார்க்கிறது.

ஏற்கனவே கெந்திக் கெந்தி நடக்கிறவன், கட்டைவிரலில் ரத்தம் கசிய எற்றி விட்டான்.

குனிந்து பார்த்தான். நகத்தைச்சுற்றிலும் ரத்தக் கசிவு. தரையில் சொட்டடிக்கிற ரத்தத் துளிகள். உச்சி மண்டைவரை சுர்ர்ரென்று ஏறுகிற வலியின் அதிர்வு.

நின்றான். நிதானித்தான்.

"எங்க போறோம் ?"

"தெரியலே ?"

"என்னத்துக்குப் போறோம் ?"

"தெரியலே ?"

"ஈஸ்வரியைக் காப்பாத்தப் போறோமா ?

"தெரியலே ?"

"காப்பாத்திரமுடியுமா ?"

"தெரியலே ?"

"கந்து வட்டிக்காரங்கிட்டே கட்டுன பொண்டாட்டியை பறிகுடுத்துறப் போறோமா ?"

"தெரியலே ?"

"அடுத்த வாரம் ஒரு லட்சம் புரட்டிரமுடியுமா ?"

"தெரியலே ?"

"மூணுலட்சம் கடனையும்கட்டி,"மீண்டு " வந்துர முடியுமா ?"

"தெரியலே ?"

"ராவணன் கிட்டேயிருந்து ஈஸ்வரியை மீட்டெடுக்க போராடப் போறீயா ?"

"தெரியலே ?"

"போராடுறதுன்னா. எப்படி ? ஒரு லட்சம் ரூபாய் தான் முதல் பாணம். மூணுலட்சம் தான் ராமபாணம். ஒங்கிட்டே இருக்கா ?"

"தெரியலே ?"

அவனுக்குள் மண்டை எரிகிற மாதிரியிருக்கிறது. மூளையின் அத்தனை ஜவ்வுகளையும் யாரோ கவ்வி இழுத்துப் பிடிக்கிற மாதிரி, தலைக்குள் ஒரு காந்தலான வலி.

நெஞ்சுக்கூடு நெரிபடுகிற மாதிரியானதோர் மூச்சுத் திணறல். நெஞ்சே கனத்த பாரமாக அழுத்துகிறது.

ஆறுகுறுக்கம் புஞ்சை. ஆறுவருஷ வெள்ளாமை. பசுமைப் புரட்சித்திட்டப்படி சாகுபடி ஆறே வருஷத்தில் நாலரை லட்சம் ரூபாய் கடன். ராவணன் வீட்டு வாசலில் வந்து நிற்கிறான். "ஈஸ்வரியைத் தா, இல்லேன்னா நா சிறையெடுப்பேன்."

அரசாங்க லோன் வாங்கி ஈஸ்வரிக்கு நகைவாங்கிப் போட்டேனா ? நல்லது பொல்லது செய்தேனா ? கல்யாணம் காட்சி முடிச்சு ஆடம்பரமா செலவழிச்சேனா ? எதுவுமில்லியே... முழுக்க யூரியா, டி.ஏ.பி பொட்டாஷ் என்று உரஉப்புமூடைகளைத் தானே தூக்கிக் கொட்டினேன். டெஸிஸ்,மோனாக்ராப்ட்ஸ்,ரோகோர், எக்கலாக்ஸ் என்று ரசாயன மருந்துகளைத் தானே... வாங்கி வாங்கி ஊற்றினேன் ?

வருஷத்து வருஷம் விளைச்சலின் அளவு குறைகிறது. பயிர்நோய்கள் எண்ணிக்கை உயர்கிறது.

அரசு சார்ந்த வங்கிகள் பயிர்க் கடன்களை நிறுத்திவிட்டன. கந்துவட்டிக் காரனிடம் விவசாயிகளை ஒப்படைத்துவிட்ட அரசாங்கம்.

பசுமைப்புரட்சி உரக்கம்பெனி, பூச்சி மருந்துக் கம்பெனிகளிடம் விவசாயிகளை ஒப்படைத்தது. அவர் சப்பித்தின்று முடித்த கழிவு, கந்துவட்டிக்காரர்கள் காலடிக்கு வந்துவிட்டது.

கந்துவட்டிக்காரனுக்கு ஈவு இரக்கம் இல்லை. மானமரியாதை இல்லை. பணமே தெய்வம் என்கிறான். ராவணனாக வந்து வாசலில் நிற்கிறான். கெக்கொலிகொட்டிச் சிரிக்கிறான். "ஈஸ்வரியை அனுப்பு, இல்லைன்னா சிறையெடுப்பேன்"

திரும்பினான். உயிரகன்ற உடம்பின் பிரேதநடை. எலும்புகளெல்லாம் உருவிக்கொண்ட மாதிரியானதோர் சோர்வும், தளர்ச்சியும்.

" ஊருக்குள் எப்படிப்போக ? ஈஸ்வரியை எந்த முகத்தை வைத்துப் பார்க்க,"

அவனுக்குள் நினைத்தாலே குலை பதறுகிறது. அடிவயிற்றுக்குள் ஐஸ்கத்தியை சொருகிய மாதிரியோர் "பகீர்" உணர்வு.

இனி என்ன செய்ய..? என்ன செய்ய ? என்ன செய்ய ?

கேள்விகளின் முற்றுகையில் மூச்சுத் திணறுகிற அவன். சுற்றிலும் இருட்டு. காற்றே இல்லாத இருட்டு.

திசைகளற்றுப் போய்விட்ட சூன்யம். எங்கும் போக பாதையில்லியே... எல்லாத் திசைகளும் அடைத்துக் கொண்டதே...

ஈஸ்வரி அய்யா சன்முகம் இறந்துவிட்டார். அந்த வகையில் சொத்துப் பத்து மிஞ்சியதை விடவும், கடன் உடன்மட்டுமே எஞ்சியது.

அய்யா காலில் போய் விழுந்துவிடலாமா ? "நீங்களே கதி" என்று சரணாகதி அடைந்துவிடலாமா ? காப்பாற்றாமல் விட்டுவிடுவாரா ?

அவரிடம் பண்ணிய வீம்பு. வீராப்பு. சண்டை சத்தம். ஊர்முன்னால் அவர் தலையைக் குனிய வைத்து ஏழு ஊர்கேவலத்தை அவர் தலையில் ஏற்றிய மாபாதகம்.

"இளைய பய" என்று ஆசை ஆசையாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்தவரை, வெறுப்பும் வன்மமுமாய் "வெளங்காத பய" என்று சொல்ல வைத்த கொடுமை. பாசப் பெருங்கடலான தகப்பனை

வெறுப்பின் வாய்க்காலாக ஆக்கிய மாபாவம். உழைப்பையே எப்போதும் போற்றிக் கொண்டாடுகிற அந்தக் கம்பீரமாமனிதர் வயிற்றில் பிறந்தவன் தானா... நான் ? உழைப்பதே அனாவசியம் என்று நினைக்கிற விரல் நகம் அழுக்குப்படாத ஜென்மமாய்_ நான்.

அவரை மீறி_ அவரை எதிர்த்து_ அவரை அவமானப்படுத்தி_ நிலைகுலையவைத்து... அதற்குப் பின்பும் வன்மம் கொள்ளாமல் வீம்பு, வீராப்பு பார்க்காமல், நிலத்தை ஒப்படைத்த அவரது மனவிசாலம் மனக்கம்பீரமான அந்த மாமனிதரிடம் காலில் விழுவது அந்த மாமனிதருக்கே செய்கிற அவமானம்.

நானாக உருள முடியுமா ? புரளமுடியுமா ? உருட்ட முடியுமா ? புரட்ட முடியுமா ? உருண்டு வந்து நசுக்கிற மலையைப் புரட்டித் தூரத்தள்ள முடியுமா ?

முடியாது.... முடியவே முடியாது... பழநிமலை வந்து இங்கு மிரட்டிவிட்டுப் போன பயங்கரத்தை -அசிங்கத்தை-யாரிடம் சொல்ல ? எப்படிச் சொல்ல ? எந்த வாயால் சொல்ல ? என்னவென்று சொல்ல ?

நல்லவுக சொல்லையெல்லாம் மீறி நாசமாய்ப் போனதைச் சொல்லவா ? மன்னித்து, பெருந்தன்மை ஆகாய மனசுடன் அய்யா தந்த நிலத்தில், விவசாயம் செய்து கடன்பட்ட கதையைச் சொல்லவா ? ஆரம்பநட்டத்திலேயே கண்டு முழிக்காமல், கண்மூடிப் பயணப்பட்ட கதையைச் சொல்லவா ? நாலரை லட்ச கடனாளியான கதையைச் சொல்லவா ? கந்துவட்டி பழநிமலையிடம் மாட்டிக்கொண்ட கதையைச் சொல்லவா ?

ஈஸ்வரியை எங்க கஸ்டடியிலே ஒப்படை. நா அவளை "வைச்சு" சம்பாதிக்கிறேன். இவ்வளவு கொடிய ஈனக்கேள்வியை எந்தச் சம்சாரியாவது கேட்டிருப்பானா ? கேட்டுட்டானே... ஏங்கிட்டே கேட்டதை ஊரையெல்லாம் திரட்டிச் சொல்லணுமா ? ஊரே தெரண்டு என்னைக் காறித் துப்பணுமா ?

இதுக்கப்புறமும்.. நா உசுரோட இருக்கணுமா ? சூடுசுரணையுள்ளவன் இருப்பானா ? மானரோஷமுள்ளவன் இருப்பானா ?

ஈரமேயில்லாத ஈனப்புத்தியோட கேள்வி கேட்ட பழநிமலையை கொன்னுசாய்ச்சிருக்கணும். இல்லேன்னா.. நா என்னை கொன்னு சாய்ச்சிருக்கணும்.

சாவதா? தற்கொலை செய்வதா? காய்ப்புழுக்களைக் கொல்லாமல் விட்ட பூச்சி மருந்தைக் குடித்து நா சாவதா?

விவசாயிகள் தற்கொலைகள் நடக்கிற மத்திய பிரதேசத்தில் போன்ற இந்திய மாநிலங்களில் இப்படித்தான் நடக்குமா? நாலா திசைகளிலும் கடன்களும்,கைமாற்றுகளும் பெருகி... நச்சரிப்புகளாகி கந்துவட்டிக்காரர்களின் கைதியாகி... இளவயசுப் பிள்ளைகளையோ, இளவயசு மனைவியையோ அபகரித்துக் கொண்டோட .. அதனால் வருகிற மானச் சூறாவளியில் தான் தற்கொலைகள் நிகழ்கின்றனவா!

புஞ்சைக்குள் இறங்கினான். பாலையாநாயக்கர் பம்ப் ஷெட்டுக்குப் போனான்.

தான் செத்துவிட்டால்... ஈஸ்வரிகதி? நிர்க்கதி தானா? ஆமாம்... உயிரோடு இருக்கும்போதே, ஈஸ்வரிக்கு என்ன கதிநேர்ந்திருக்கிறது? இப்படிப்பட்ட மோசமான கேவலமான-கதி, நான் செத்தபிறகு நிச்சயமாக வராது.

அய்யா... சத்தியவான். வியர்வையைக் கடவுளாக நினைப்பவர். யாருக்கும் எந்தக்கெடுதலும் செய்து பார்ப்பதில்லை. மனசால் கூட யாருக்கும் தீங்கு நினைத்திருக்கமாட்டார். அவர் கொதித்த மனசின் உச்சரிப்புகளாக "வெளங்காத பய" என்றார். நான் விளங்காமல் போனதை நானே பார்த்துவிட்டேன்.

அய்யாவுக்குக் கொள்ளிவைக்க அண்ணன் இருக்கான். அய்யா என்க்குக் கொள்ளி வைக்கட்டும். அந்தப் புண்ணியமாவது என்னிடம் சேரட்டும்.

எக்காலக்ஸ் டப்பாவில் பாதிக்கு மேல் மருந்து இருந்தது. துருநிற மருந்து. திரவத்தை கையில் எடுத்தான்.

மூடியகண்ணுக்குள் பெயிலான காட்சி. மம்மட்டி பிடித்து

தண்ணீர் பாய்ச்சியது. அய்யாவுக்கு அதிர்ச்சி தரட்டுமென்று... நூத்து நாற்பது ரூபாய் செலவில் டக்கரில் லோடேற்றி, மிளகாய்ப் பழச்சாக்குகளை கொண்டு வந்து களத்தில் அடுக்கியது.

வீடெல்லாம் கம்பஞ்சோற்றை சாப்பிட, இவன் மட்டும் நெல்லுச் சோறு சாப்பிட்டது. செம்பக சந்திப்பு.. ஈஸ்வரி கல்யாணம் அய்யா வந்து ஆசீர்வாதம் செய்யாத அந்த நாள்... எல்லாம் வந்து வந்து அலைமோதுகிற நினைவுகள்.

பட்டயத்தை தூக்கியவன் பட்டயத்தாலேயே மடிவான் என்பதைப் போல.. விவசாயத்தில் அமிலக் கலவை உரம், அமில மருந்து பயன்படுத்த வேண்டும் என்று அதைத் தூக்கியவன், அதே அமிலத்தால் மடிய இருக்கிறான்.

எக்காலக்ஸ் டப்பாவைப் பார்த்தான். துருநிறத்திரவம். தலைக்கு மேல் தூக்கினான். அண்ணாந்து வாய் திறந்தான். அவனுக்குள் திக் திக் திக்... பயப்படபடப்பு. வியர்த்துக் கொட்டுகிறது. மரணத்தின் முகம் பார்க்கிற பயங்கரம். அந்த பம்ப்ஷெட்ரூம் முழுக்க அலைவுறுகிற மரணம்.

துருநிறத்திரவம் நாவில் விழுகிறது. ஒரு மடக்கு விழுங்குகிறான்.

62

பரமசிவம் கண்டுகொள்ளாமலிருந்தார். "முருகேசனைக் காணலே" என்ற தகவல், அவரால் பொருட்படுத்தப்படவில்லை. "எங்குட்டும் போயிருப்பான். வந்துசேர்ந்துருவான்" என்றே சொல்லிக் கொண்டிருந்தார். மாடுகளைப் பராமரித்துக்கொண்டிருந்தார். கூளம் அள்ளிக்கொண்டுவந்து போட்டார். மாட்டின் முதுகைத் தட்டி வருடினார்.

காலைச் சாப்பாடு சாப்பிட வரவில்லை. மதியச் சாப்பாடும் சாப்பிட வரவில்லை. சாயங்காலம் ஆகிவிட்டது.

இலேசாக அவருக்குள் பதற்றமுகம்.

காமாட்சி தலைவிரிகோலமாக அழுகையும் கண்ணீருமாகப் புலம்புகிறாள். தெருவெல்லாம் கண்முக்கு பாராமல் அலைந்து புரள்கிறாள். ஈஸ்வரி, வாசல் தலைமாட்டில் உட்கார்ந்திருக்கிறாள். தலைவுருகோலம். சோகத்தில் நனைந்து உறைந்திருக்கிறாள்.

முருகேசனைத் தேடி நாலாப்பக்கம் ஊராட்கள் சுற்றுகின்றனர். சைக்கிள்களை எடுத்துக்கொண்டு பக்கத்து ஊர்களுக்கும் சுற்றியலைகிற இளவட்டங்கள்.

ஊரே கிடந்து அல்லோல கல்லோலப்படுகிறது. பாலையாநாயக்கர் புஞ்சைக்கும் மூன்றுபேர் வந்து போய்விட்டனர். திறந்துகிடக்கிற பம்ப்ஷெட்கதவு.

சாயங்காலம் நாலுமணிக்கு மேலிருக்கும். வெயில் காட்டம் குறையத் துவங்கியிருந்தது. அடிச்சரிவில் நிறம் மாறுகிற சூரியமுகம்.

இலேசாகத் தாக்கல் வந்து கசிந்தது, பரமசிவம் செவிகளுக்கு.
"இருக்கா— முடிஞ்சிருச்சா ?"

"முடிஞ்சிருச்சு—"

பரமசிவத்தின் அடிவயிற்றில் ஒரு கைபிசைவது போலிருக்கிறது. அரிவாள் வெட்டாக ஆழ்மனசில் ஒரு நினைவோட்டம்.

அவன் பிறந்த தருணம். தூக்கிவைத்து உள்ளங்கைகளுக்குள் பார்த்துப் பூரித்த கணங்கள். மல்லாக்கப்படுத்த நிலையில் நெஞ்சு ரோமத்திற்குள் அந்த மழலையை உட்கார வைத்த நாள். தவழ்ந்து, தவழ்ந்து முன்னேறி, கழுத்தில் உட்கார்ந்த அந்தச் சிறிய தங்கமிருது. வாயில் ஒன்றுக்கிருந்து, மனசில் பரவச உற்சாகத்தைத் தந்த நாள்—

அவருள் பதற்ற அலைகள். கைகாலில் ஒருவித நடுக்கம். எங்கேயோ சுற்றியலைந்து வாடி வதங்கிப் போய்வந்த அழகேசன்.

"ஏலேய் அழகு..." அவரது தொண்டைக்குரலில் ஒரு மனநெகிழ்ச்சியின் கரகரப்பு.

"என்னய்யா— ?"

"ஒன்னோட நாலைஞ்சு பேரை கூட்டிக்கோ. நார்க்கட்டிலை தூக்கிட்டுப்போ. பாலையா நாயக்கரு புஞ்சையிலே நம்ம எளைபய செத்து வெறைச்சுக்கெடக்கானாம்— நார்க்கட்டில்லே தூக்கிப்போட்டு கொண்டாங்க—"

அவருக்குள் முட்டிக்கொண்டு வருகிற அழுகை. நடுங்கும் அடிஉதட்டைக் கடித்துக் கொள்கிறார்.

அடுத்த கணத்தில்-

ஒட்டுமொத்த கிராமத்து ஜனங்களின் அத்தனை பாதங்களும் பதைப்பும் பதற்றமுமாக ஓடிற்று. "ஐயோ— பாதரவே—! இப்புடியும் ஒரு வங்கொடுமையா ? சாகவேண்டிய வயசா ? நேத்துப் புள்ளாண்டானாச்சே— அதுக்குள்ளேயா— சாவுவந்து விடியணும் ?"

அழுகையும் அங்கலாய்ப்புகளுமாக அலைபாய்ந்து ஓடுகிற வயசாளிப் பெண்கள். இளவட்டங்கள். சின்னஞ்சிறிசுகள்.

எல்லாருக்கும் பின்னால் புறப்பட்டுச்சென்ற பரமசிவம் ஊர் மைதானத்தில் நின்று கொண்டார்.

தன் சாவு இல்லாமல் மாண்டு மடிகிற உடல்களைக் கட்டிலில் போட்டு, சுமந்துகொண்டு வந்து, இங்குதான் இறக்குவார்கள்.

தற்கொலை கேஸ்களுக்கு எவ்வித சடங்கும் சாத்திரமுமில்லை. இப்டியே இங்கிருந்து தூக்கிக் கொண்டு போய்... சுடுகாட்டில் எரித்துவிடுவார்கள். சுட்டுச் சாம்பலாக்கிவிடுவார்கள்.

டக்கரில் விறகுலோடு போயிற்று. தேங்காய், ஆமணக்குமுத்து, எண்ணெய் என்று போயிற்று.

எல்லா ஜாதி ஜனமும் சமுத்திரமாக அலைமோதுகின்றனர். "சின்ன வயசுச் சாவு" என்ற விஷயம், எல்லோரது இதயத்துக்குள்ளும் பரிவையும்,பரிதாபத்தையும் சுரக்க வைக்கிறது.

கட்டிலைக் கொண்டு வந்து மைதானத்தில் இறக்கினார்கள். கட்டிலில் கிடக்கிற முருகேசன். வெயிலில் கருத்துக்கிடக்கிற உடம்பு.திறந்திருக்கிற பல்லில் வந்து ஒட்டுகிற ஈக்கள்.

ஈஸ்வரியும், காமாட்சியும் கட்டில் மேல் விழுந்து கதறிக்கத்துகிறார்கள். எல்லாப்பெண்களும் விசும்புகின்றனர். ஊரே துக்கம் கொண்டாடுகிறது.

"மண்ணை நம்பி மல்லுக்கட்டுன சம்சாரிக கதையெல்லாம் இம்புட்டுத்தான். பூச்சி மருந்தாலே பூச்சிக சாகுதோ இல்லியோ.. சம்சாரி சாகுறான்"

ஆள்ஆளுக்கு ஒரு கருத்தைச்சொல்ல... எல்லாமே விவசாயத்தையே சுற்றிச் சுழல...

"ம்ம்... ஆகுற வேலையைப் பாருங்கப்பா" என்ற சத்தம். கட்டிலைத் தூக்கிக் கொண்டு, முருகேசனை சுடுகாட்டை நோக்கிக் கொண்டு போயினர்.

"மண்ணை நம்புனவன் பொழைப்பெல்லாம் மண்ணுதான்"

"பரமசிவமும் மண்ணை நம்புனாரு. ஜெயிச்சாருல்லே?"

"அப்ப முருகேசன்...?"

"மண்ணை மதிக்காம... பணம் போட்டுப் பணம் எடுக்கிற தொழிலாக மாத்துனான்... ஒழைக்குறதை கேவலம்னு நெனைச்சான்..."

" என்னமோப்பா... செத்தவனைப் பத்தி குத்தமா பேசப்படாது. அவன் தலையெழுத்து... இம்புட்டு சின்ன வயசுலே போய்ட்டான்"

"ஈஸ்வரி தலையெழுத்தையுமில்லே சூறாவளியிலே இழுத்துவுட்டுட்டான்..."

பரமசிவம் பக்கத்தில் வர- சத்தம் "கப், சிப்" பென்றாகிவிட்டது. கனத்த மௌன இறக்கை அந்த ஊர் முழுவதையும் மூடிப் பொத்துகிறது.

உயிர் நிலம்

ISBN: 978-81-234-1933-6

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098.
☎ : 26251968, 26359906, 26258410



Code No. A2303 Rs.270.00